மயிலை சீனி. வேங்கடசாமி

தமிழுக்கு வழங்கிய கொடை

1

ஆராய்ச்சிப் பேரறிஞர்

மயிலை சீனி வேங்கடசாமி

தமிழுக்கு வழங்கிய கொடை

முதன்முறையாக நூல்வடிவம் பெறும்
மயிலையார் கட்டுரைகள்

முதல் தொகுப்பு

பதிப்பாசிரியர்
புலவர் கோ. தேவராசன், எம்.ஏ., பி.எட்.,
செயலாளர், தமிழ்வளர்ச்சிப் பேரவை, சென்னை

வெளியிடுவோர்
எம். வெற்றியரசி
மனை எண் - 9, கதவு எண் - 26,
ஜோசப் காலனி, ஆதம்பாக்கம்,
சென்னை - 600 088.
தொலைபேசி: 2455954.

நூல் விளக்கக் குறிப்பு

நூலின் பெயர்	:	தமிழுக்கு வழங்கிய கொடை - I
ஆசிரியர்	:	மயிலை சீனி. வேங்கடசாமி
பதிப்பாசியர்	:	புலவர் கோ. தேவராசன், எம்.ஏ..பி.எட் செயலாளர், தமிழ் வளர்ச்சிப் பேரவை, சென்னை
முகப்பு அட்டை	:	ஓவிய அரசு சுப்பு
மொழி	:	தமிழ்
பதிப்பு	:	முதல் பதிப்பு
வெளியீட்டு ஆண்டு	:	2001
தாள்	:	வெள்ளைத்தாள்
நூலின் அளவு	:	கிரவுன் 12.5 X 18 செ.மீ.
அச்சு	:	11 புள்ளி
பக்கம்	:	336
படிகள்	:	1200
ஒளியச்சு	:	கேலக்ஸி கம்ப்யூட்டர் சிஸ்டம்
அச்சிட்டோர்	:	சென்னை ஆப்செட், 600 014
பொருள்	:	வரலாறு
விலை	:	ரூ. 75-00

மயிலை சீனிவேங்கடசாமி
1900 - 1980

நன்றி உரை

இருபதாம் நூற்றாண்டில் வாழ்ந்த தமிழ்ப் பேரறிஞர்களில் முதன்மையானவர் மயிலை சீனி. வேங்கடசாமி அவர்கள் என்றால் தினையளவும் மிகையில்லை. இருள் மூடிக்கிடந்த வரலாற்றுக் குகையில் தம் அறிவாலும் ஆற்றலாலும் கடுமையாக உழைத்துத் தளராமல் முயன்று ஒளி ஏற்றிய பெருந்தகை மயிலையார் ஆவார்.

அஞ்சாமல் கருத்து வழங்கியவர் அவர். அவர் ஆய்விலே கண்ட உண்மைகள் தமிழ் மொழியின் ஏற்றத்திற்கும் தமிழர் தம் சிறந்த வாழ்விற்கும் சான்றாக நிற்பன. எத்தனை எத்தனை கருத்துச் செல்வங்களை அவர் தமிழகத்திற்கு வாரி வழங்கியிருக்கிறார் என்பதனை எண்ணுகிறபோது அவை வெறும் எழுத்துப் பணியல்ல. தமிழுக்கும் தமிழருக்கும் வழங்கிய பொற் குவியலினும் மேலான கொடை என்றே கருதத் தோன்றும்.

தமிழகத்தின் மூலை முடுக்குகளுக்கெல்லாம் சென்று சென்று ஆய்ந்து ஆய்ந்து அவர் உரைத்தவைகள் கண் போன்ற கருத்து மணிகள். அவர் பல இதழ்களில் எழுதிய கட்டுரைகளை முதன்முதலாக நூல் வடிவில் தொகுத்து வெளியிடுகிறோம். இது முதல் தொகுப்பு. இக்கட்டுரைகளைத் தங்கக் கட்டிகள் போலக் காப்பாற்றி அளித்த பெரும்புலவர், இந்நூலின் பதிப்பாசிரியர், மாண்புநிறை தேவராசனார் அவர்களுக்கு மிக்க நன்றி.

மயிலையார் நூல்களை நாட்டுடைமை ஆக்கிய தமிழக அரசுக்கு நன்றி. இந்நூலுக்கு மெய்ப்புத்திருத்திய பெருமக்கள் சு. இலம்போதரனார் அவர்களுக்கும் புலவர் சி. தனபால், எம்.ஏ., பி.டி. அவர்களுக்கும் மனமார்ந்த நன்றி.

பதிப்பாளர்

பதிப்புரை

ஆராய்ச்சிப் பேறறிஞர் மயிலை சீனி. வேங்கடசாமி அவர்களுடன் பழகும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. அதனை என் வாழ்வில் எனக்குக் கிடைத்த பெரும் பேறாகக் கருதுகிறேன். 1960 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் முதன் முதலாக அவரைச் சந்தித்து உரையாடினேன்.

மயிலாப்பூர் காரணீஸ்வரர் கோவில் தெருவில் மயிலையாருடைய இல்லம் இருக்கிறது. அதே தெருவில் உள்ள ஓர் இடைநிலைப் பள்ளியில் அவர் ஆசிரியராகப் பணியாற்றி ஓய்வு பெற்றார். அவர் ஓய்வு பெற்றுச் சென்ற பின்னர் அதே பள்ளியில் நான் தமிழாசிரியராகப் பணியாற்றினேன். அதனால் அடிக்கடி அவரைச் சந்தித்து உரையாடும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது.

மயிலையாருடைய இல்லம் ஓர் அருங்காட்சியகம் என்று சொன்னால் அது மிகையாகாது. பழைய ஏட்டுச் சுவடிகளும் செப்பேடுகளும், பழங்காசுகளும், அவர் வீட்டில் நிறைந்து இருக்கும். அவர் இல்லம் நோக்கிப் பல் துறை அறிஞர்கள் வருவார்கள். உரையாடுவார்கள். மகிழ்வுடன் திரும்புவார்கள். அறிவில் அவர் இமயம் போன்றவர். எனினும் அவரிடம் காணப்பட்ட எளிமையும் அடக்கமும் எவரையும் வியப்பில் ஆழ்த்தும்.

அவர் என் மீது பொழிந்த அன்பு பாசமிக்க ஒரு தந்தை தன் மகன் மீது பொழியும் அன்புக்கு நிகரானது. வேகவைத்த நேந்திரம் பழத்தை எனக்கு அறிந்து அறிந்து கொடுப்பார். நூலகங்களுக்கு அழைத்துச் செல்வார். அறிவுரைகள் பல கூறுவார். எனது திருமணத்தைத் தலைமையேற்று நடத்தி வாழ்த்துக் கூறிய பெருந்தகை அவர். அவருடைய தொடர்பு என் வாழ்க்கையில் பல திருப்புமுனைகளை உண்டாக்கியது. நிற்க.

நான் தமிழ் வளர்ச்சிப் பேரவையின் செயலாளன். பேரவையின் சார்பில் மயிலையாருடைய நூற்றாண்டு விழாவினைச் சிறப்பாக நடத்த வேண்டும் என்று கருதினேன். பேரவையில் அங்கம் வகிக்கும் எனது

நண்பர்கள் புலவர் தமிழமுதன், புலவர் சி. தனபால், திரு. இலக்குமி பதி போன்றவர்கள் கடுமையாக உழைத்தனர்.

தமிழகத்திலேயே முதன் முதலாகச் சென்னை தியாகராயர் கல்லூரியில் 29.1.2000 அன்று மயிலையாருடைய நூற்றாண்டு விழா சிறப்பாக நடைபெற்றது.

துணை வேந்தர் திரு. பொற்கோ அவர்கள் விழாவிற்குத் தலைமையேற்றார்கள். முனைவர் சிலம்பொலி செல்லப்பனார், முனைவர் அ.ம. சத்தியமூர்த்தி, மூதறிஞர் ஊ. ஜெயராமன், மூதறிஞர் மா.சு. சம்பந்தன் முதலான தமிழறிஞர்கள் மயிலையாரின் சிறப்புகளை எடுத்துக் கூறிப் புகழாரம் சூட்டினர்.

விழாவினை யொட்டி ஒரு கண்காட்சியும் நடைபெற்றது. அதில் மயிலையாரின் நூல்கள், அவருடைய அரிய புகைப்படங்கள், மயிலையார் எழுதிய நூற்றுக்கு மேற்பட்ட கட்டுரைகள் காட்சிக்கு வைக்கப்பட்டன. இக்கண்காட்சி விழாவிற்கு வந்திருந்த அனைவரையும் ஈர்த்தது.

விழாவில் மயிலையாருடைய நூல்களை நாட்டுடமை யாக்க வேண்டும் என்ற தீர்மானமும் நிறைவேற்றப்பட்டது. இத் தீர்மானத்தை வலியுறுத்தித் தமிழ் வளர்ச்சிப் பேரவையின் சார்பில் நூறு தமிழறிஞர்களிடம் கையொப்பம் பெற்றுத் தமிழக அரசுக்கு அனுப்பி வைத்தோம். தமிழக அரசு கருணை உள்ளத்தோடு பேரவையின் கோரிக்கையை ஏற்று மயிலையாரின் நூல்களை நாட்டுடமை யாக்கியது. மயிலையாரின் குடும்பத்திற்கும் பத்து இலட்சம் ரூபாய் அன்பளிப்பாக வழங்கியது, நிற்க.

மயிலையாருடைய கட்டுரைகளைத் தொகுப்பதற்கு நான் பட்ட அரும்பாடுகள் பற்றிச் சில வார்த்தைகள் சொல்வது தவறாகாது என்று கருதுகிறேன். நூலகம் நூலகமாகத் தேடிச் சென்றேன். சென்னையில் மட்டுமின்றி, தஞ்சை, மதுரை போன்ற இடங்களுக்கும் சென்றேன். தனிப்பட்டவர் இல்லங்களுக்கும் சென்றேன். இதழ்களில் வெளிவந்த கட்டுரைகள் மட்டும் அல்லாது ஆண்டு மலர்கள், வெள்ளி விழா மலர்கள், மணி விழா மலர்கள், நினைவு மலர்கள், தமிழ் அமைப்புகள் சார்ந்த மலர்கள், எனப் பல்வேறு மலர்களையும் பார்த்துத் தொகுத்தேன். அவரது கட்டுரைகள் இடம் பெற்ற நூல்களையும் தேடிக்கண்டு கட்டுரைகளைத் தொகுத்தேன்.

குறிப்பிட்ட மலர்களில் குறிப்பிட்ட இதழ்களில் மயிலையாருடைய கட்டுரைகள் வெளிவந்துள்ளன என்பதை நான் ஓரளவு அறிவேன். அக்கட்டுரைகள் எனக்கு இன்னமும் கிடைக்கவில்லை.

குறிப்பிட்ட நூலகம் ஒன்றிற்குச் சென்றேன். மயிலையார் தமது இளமைக் காலத்தில் எழுதிய ஏறத்தாழ இருபது கட்டுரைகள் அந்நூலகத்தில் உள்ள ஒரு இதழில் வெளி வந்திருப்பதைக் கண்டேன், படித்தேன். ஆனால் படியெடுக்கவோ நகல் எடுக்கவோ என்னை அனுமதிக்கவில்லை. தலைமையிடம் சென்று முறையிட்டேன். குறிப்பிட்ட இதழ்களைப் படிப்பதற்கே நாங்கள் யாரையும் அனுமதிப்பதில்லை என்று கூறியதோடு அமையாது, படிக்கத் தந்த நூலகரையும் கடிந்து கொண்டார். ஏமாற்றத்துடன் திரும்பினேன். மயிலையாருடைய கட்டுரைகளை நான் தொகுப்பதற்குப் பெரிதும் துணையாக இருந்தது **மறைமலையடிகளார் நூலகம்** மட்டுமே. அவர்களுக்கு என் மனம், மொழி, மெய்களால் நன்றி கூறுகிறேன்.

ஒருவர் அரும்பாடு பட்டுச் சேமித்து வைத்த செல்வத்தை யெல்லாம் ஒரே நாளில் வழிப்பறி செய்வோர் உண்டு. வாழ்க்கையில் கண்டிருக்கிறோம். மயிலையாருடைய கட்டுரைகளும் அருஞ் செல்வந்தானே? அவைகளை என்னிடமிருந்து வழிப்பறி செய்ய முயன்றனர் சிலர். என்னுடைய எளிய தோற்றம் அவ்வாறு செய்ய அவர்களைத் தூண்டியது போலும்.

மன உறுதி, அசையா உள்ளம், சகிப்புத் தன்மை, ஓயாத உழைப்பு, பயன் கருதாது பணி செய்தல், தமிழனிடம் நன்றி பாராமை, மனதில் வெறுப்புணர்ச்சி கொள்ளாமை, அறிமடம் போன்ற பண்புகள் மயிலையார் எனக்கு வழங்கிய நன்கொடைகள். அவைகளை வழிப்பறி செய்யலாமே? அன்பர்கள் முன்வருவார்களாக.

பல்லாண்டு முயற்சியின் பயனாக ஏறத்தாழ 131 கட்டுரைகளைத் தொகுத்தேன். இன்னும் தொகுக்கப்பட வேண்டியவை நூறு கட்டுரைகளாவது இருக்கக்கூடும். அவைகளையும் தேடித் தொகுக்கும் முயற்சியுடையேன். தேடித் தொகுத்த கட்டுரைகளில் பல கீழ்க்கண்ட இதழ்களில் வெளிவந்தவை.

செந்தமிழ்ச் செல்வி, கலைக் கதிர், ஆராய்ச்சி, தமிழ்ப் பொழில், நண்பன், இலட்சுமி, குடியரசு, திருக்கோயில், தமிழியல், தமிழ்க் கல்சர், கல்வி, நல்லறம், தமிழரசு, கல்வெட்டு, உண்மை, முக்குடை, முழுமதி போன்ற

இதழ்கள் ஆகும். இதழ்களேயன்றி பல்வேறு மலர்களிலிருந்தும் கட்டுரைகளைத் திரட்டியுள்ளேன்.

''திரட்டி வைத்திருக்கும் மயிலையாருடைய கட்டுரைச் செல்வங்களை உடனடியாக வெளியிட்டு விடுவோம். அதனால் தமிழுக்கும் தமிழர்களுக்கும் பெரும் பயன் விளையும்'' என்று எனது அரிய நண்பர் முத்தமிழ்க் கவிஞர், முனைவர் ஆலந்தூர் கோ. மோகனரங்கன் அவர்கள் கருத்துத் தெரிவித்தார். அவர் கூறியது சரியென்றே எனக்குப்பட்டது. அவர் உண்மையானவர், நம்பிக்கைக்குரியவர் என்று எனது உள்ளுணர்வு எனக்கு உணர்த்தியது. மயிலையாருடைய கட்டுரைகளை வகைப்படுத்தினேன். 12 தலைப்புகளில் 131 கட்டுரைகள் அடங்கின.

இப்பொழுது மயிலையார் கட்டுரைகள் மூன்று தொகுதிகளாக வெளி வருகின்றன. உங்கள் கரங்களில் தவழ்கின்றன. இவைகளில் உள்ள கட்டுரைகள் இது வரை நூல் வடிவம் பெறாதவை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மயிலையார் 1920 முதலே கட்டுரைகள் எழுதத் தொடங்கி விட்டார். ஏறக்குறைய அறுபது ஆண்டுகள் தொடர்ந்து பல்வேறு இதழ்களில் கட்டுரைகள் வரைந்துள்ளார். அவருடைய ஒவ்வொரு கட்டுரையும் விலை மதிக்க முடியாத கொற்கை முத்துக்கள் எனலாம். அவருடைய ஒவ்வொரு கட்டுரைக்கும் ஒரு வரலாறு உண்டு. சான்றாகச் ''சிறுபாணன் சென்ற பெருவழி'' என்ற கட்டுரை. ஆறே பக்கங்கள் கொண்டது. அதனை எழுதுவதற்குச் சில ஆண்டுகள் அவருக்குத் தேவைப்பட்டது. ''பாண்டியர் வரலாற்றில் ஒரு அரிய புதிய செய்தி'' என்ற கட்டுரை. பதினோரு பக்கங்கள் கொண்டது அதனை எழுதுவதற்கு ஏறக்குறைய மூவாயிரம் சங்கப் பாடல்களை அவர் படிக்க நேர்ந்தது. ''சிலப்பதிகாரமும் பங்களரும்'' என்ற கட்டுரை அந்தக் கட்டுரையை எழுதி முடிப்பதற்காகத் தென்னிந்திய சாசனங்கள் முழுவதையும் அவர் கற்றார். ''மறைந்து போன மருங்கூர்ப்பட்டினம்'' என்ற கட்டுரை. அதில் அவர் தந்த குறிப்புகளை வை[illegible]க்கொண்டு தொல்பொருள் இலாகா அகழ்வாராய்ச்சி செய்தது. மறை[illegible]ப்போன மருங்கூர்ப் பட்டினம் இருந்த இடத்தைக் கண்டுபிடித்தது. இப்படி ஒவ்வொரு கட்டுரைக்கும் ஒவ்வொரு வரலாறு உண்டு. விளக்கப் புகுந்தால் அது தனி நூலாக விரியும்.

மயிலை சீனி அவர்கள் ஒரு பேருருவம். மகத்தான மனிதர். அவர் எழுதிய நூல்களை மட்டும் படித்து அவருடைய முழு ஆளுமையை நம் மனத்தில் நிலைப்படுத்திக் கொள்ளமுடியாது அவை உணர்த்துவன அவருடைய ஆளுமையின் செம்பாதி. மற்ற செம்பாதியினை அவருடைய கட்டுரைகளே நிறைவு செய்யும்.

பல்வேறு இதழ்களில் சிதறிக் கிடந்த மயிலையாருடைய கட்டுரைகள் இப்பொழுதுதான் முதன்முறையாக நூல் வடிவம் பெறுகின்றன. முதன் முதலாகப் பிறக்கிற குழந்தையை மார்போடு அணைத்துக்கொள்ள வேண்டும் என்ற துடிப்பு மட்டுமே இப்பொழுது என்னை ஆட் கொண்டிருக்கிறது.

மயிலையாருடைய கட்டுரைகள் இனி தமிழகமெங்கும் உலாவரும். இக்கட்டுரைகள் பலருடைய அறிவினை மெருகேற்றும், சிந்தனைகளில் செழுமையைக் கூட்டும். எண்ண ஓட்டங்களில் திருப்பு முனையை ஏற்படுத்தும், கருத்தரங்குகள், திறனாய்வுகள், பட்டி மன்றங்கள் புதிய வீச்சினைப் பெறும். முனைவர் பட்ட ஆய்வேடுகளில் புதுமைகள் மிளிரும். இஃதோர் சமூகவியல் மாற்றம். இது நடந்தே தீரும். இம் மாற்றத்திற்கு அருமை நண்பர் முத்தமிழ்க் கவிஞர், முனைவர் ஆலந்தூர் கோ. மோகனரங்கன் துணையாக உள்ளார். இக்கட்டுரைகளை வெளியிட முயன்ற தன் வர்யிலாகச் சாதனை நாயகர் பட்டியலில் அவர் இடம் பெறுவார் என்பதில் ஐயமில்லை. அவருடைய தூய தமிழ்ப் பணி வெல்க, வாழ்க என்று வாழ்த்துகிறேன். இந்நூலை வெளியிட்ட அவர்தம் மகளார் வெற்றியரசிக்கு என் வாழ்த்துக்கள்.

அன்பன்,
கோ. தேவராசன்

ஆராய்ச்சிப் பேரறிஞர்

மயிலை. சீனி வேங்கடசாமி அவர்களுக்குப்

பாவேந்தர் பாரதிதாசன் வாழ்த்து

தாங்கெட நேர்ந்த போதும்
தமிழ்கெட லாற்றா அண்ணல்
வேங்கட சாமி என்பேன்!
விரிபெரு தமிழர் மேன்மை
ஓங்கிடச் செய்வ தொன்றே
உயிர்ப்பணியாகக் கொண்டோன்!
வீங்கிட மாட்டான்! கல்வி
விளம்பரம் விழைதல் இல்லான்!

தமிழுக்குத் தொண்டு செய்வோர்
தலைச்சங்க முதலாய் இன்றும்
தமிழுக்குத் தொண்டர் யார்க்கும்
தலைத்தொண்டன்; அடிமை அல்லன்;
குமிழ்பகுத் தறிவியக்கக்
கொள்கையில் அசைக் கொணாத
இமயமும் தோற்கும் அண்ணல்!
ஈடிலாத் திறமை ஆற்றல்!

ஒன்றினும் திரியாதுள்ளம்
ஒண்டமிழ்க் குழைப்ப தொன்றே
நன்றினும் நன்று என்று
துறவினை நயந்த மேலோன்.
நன்றிகெட் டதிகாரத்தை

நாடும் எவ்வரசும் அன்னார்
குன்றினும் மிகுந்த சீர்த்தி
கொண்டுயர் வளித்தார் இல்லை.

தமிழையே வணிக மாக்கித்
தன்வீடும் மக்கள் சுற்றம்
தமிழிலே பிழைப்ப தற்கும்
தலைமுறை தலைமுறைக்குத்
தமிழ்முத லாக்கிக் கொண்ட
பல்கலைத் தலைவன் எல்லாம்
தமிழ்ச்சீனி வேங்கடத்தின்
கால்தூசும் பெறாதார் என்பேன்.!

அஞ்சுதல் அறியா நெஞ்சன்
அகல்வர லாறனைத்தும்
மிஞ்சுதல் இன்றிக் கற்றோன்.
மேம்படும் நூலாராய்ச்சி
கெஞ்சிடும் தனைத்துலக்க
கேண்மையோ டுயர்வு செய்வான்.
எஞ்சுவ துமக்கொன்றுண்டோ
இவனைநீர் மறந்து விட்டால்?

-தமிழ்நிலம் (14-10-52)

ஆராய்ச்சிப் பேரறிஞர்
மயிலை சீனி. வேங்கடசாமி அவர்களின் வாழ்வும் தொண்டும்.

-புலவர் கோ தேவராசன், எம்.ஏ . பி.எட்..

தோற்றுவாய்:-

தனித்தமிழ்த் தந்தை என்றால் மறைமலை அடிகளாரைத்தான் குறிக்கும் தமிழ்த் தென்றல் என்றால் திரு.வி.க அவர்களைத்தான் நினைவூட்டும் மொழி ஞாயிறு என்றால் பாவாணர்தான் அதுபோல் ஆராய்ச்சிப பேரறிஞர் என்றால் மயிலை சீனி. வேங்கடசாமி அவர்களைத்தான் குறிக்கும். அவர்தான் ஆய்வுலகின் முன்னோடி ஆய்வுக்கு இலக்கணம் வகுத்த அறிஞர் ஐம்பது ஆண்டுகளுக்கு மேலாக ஆய்வுப் பணியினைத் தனது உயிர் மூச்சாகக் கொண்டு வாழ்ந்தவர்

குடும்பம்:-

சீனி வேங்கடசாமி அவர்கள் ஒரு நல்ல தமிழ்க் குடும்பத்தில் பிறந்தவர். தந்தையார் சீனிவாச நாயகர். பரம்பரை சித்த வைத்தியர் தமிழ்ப் புலமை மிக்கவர் மயிலாப்பூரில் காரனீசுவரர் கோவில் தெருவில் புகழுடன் வாழ்ந்து வந்தார் அவரது இல்லத்தில் சிறந்த நூலகம் ஒன்று இருந்தது அதில் ஏராளமான ஓலைச் சுவடிகளும், சித்த மருத்துவ நூல்களும் தமிழிலக்கிய நூல்களும் இருந்தன.

சீனிவாச நாயகருக்கு மூன்று ஆண் மக்களும் மூன்று பெண் மக்களும் பிறந்தனர் முதல் மகன் முத்துசாமி என்பவர் இளமையிலேயே இயற்கை எய்தினார். இரண்டாம் மகன் கோவிந்தராசன். பெரும் புலவராய்த் திகழ்ந்தார். மூன்றாம் மகன்தான் ஆய்வுலகம் போற்றும் மயிலை சீனி வேங்கடசாமி. இவர் 16.12.1900 இல் பிறந்தார்.

சீனி கோவிந்தராசனாரும்; தமிழ்க்கடல் கா. நமச்சிவாய முதலியாரும். ஒருசாலை மாணவர்கள். இருவரும் மகாவித்துவான். மயிலை சண்முகம்

பிள்ளையிடம் மரபு வழி தமிழ் கற்றவர்கள். சீனி கோவிந்தராசனார் அக்காலத்தில் பெரும் புலவர் என மதிக்கப்பட்டார். அவர் 1920 இல் திருக்குறள் காமத்துப்பாலை நாடகமாக எழுதிப் புகழ் பெற்றார். திரு மயிலை நான் மணி மாலை எனும் சீரிய சிற்றிலக்கியத்தையும் படைத்தவர்.

மயிலை சீனி. வேங்கடசாமி தமையனாரின் மேற்பார்வையில் உயர் நெறிகளோடு வளர்ந்தார் அவரிடம் முறையாகத் தமிழ்க் கல்வி பயின்றார். பதினாறு அகவை நிரம்பிய அளவிலேயே தமிழ் இலக்கிய இலக்கணங்களில் நல்ல தேர்ச்சி பெற்றிருந்தார். மயிலாப்பூரில் உள்ள புனித சாந்தோம் உயர்நிலைப் பள்ளியில் பயின்று பள்ளி இறுதி வகுப்பில் தேர்ந்தார் பின்னர் ஓவியக் கல்லூரியில் சேர்ந்து ஓராண்டு பயின்றார். ஓவியப் பயிற்சியால் அவர் இல்லம் ஒரு கலைக்கூடமாய்த் திகழ்ந்தது

அகவை இருபத்தி மூன்றில் சீனியின் குடும்பத்தில் புயல் வீசத் தொடங்கியது. தந்தையும், தமையனாரும் அடுத்தடுத்து இயற்கை எய்தினர். குடும்பச் சுமை முழுவதும் அவர் மீது விழுந்தது. தமக்கையாரைக் காப்பாற்றும் பொறுப்பும், தமக்கையாரின் இரு பேத்திகளை வளர்த்துக் காப்பாற்றும் பொறுப்பும் அவருக்கு ஏற்பட்டது.

தொழில்:-

எனவே மோட்டார் உதிரிப்பாகம் விற்கும் கடையொன்றில் எழுத்தராக வேலைக்குச் சென்றார். நிறைய படிக்கவேண்டும் எழுத வேண்டும் என்ற வேட்கை சீனிக்கு இருந்தது. அவர் செய்து வந்த வேலை அதற்கு ஒத்து வரவில்லை. எனவே வேலைய்யை விடுத்தார்.

தமிழகத்தில் நீதிக்கட்சியினர் ஆட்சி புரிந்த காலம் அது. அவர்கள் நடத்தி வந்த திராவிடன் இதழில் 1925இல் ஆசிரியர் குழுவில் ஒருவராய்ச் சேர்ந்து பணியாற்றினார் பத்திரிகைத் துறையில் பல புதிய அனுபவங்களைப் பெற்றார் எந்தக் கருத்தையும் எளிமையாகவும், தெளிவாகவும், சுவையாக வும் வெளியிடும் திறன் அவருக்கு ஏற்பட்டது

நாளடைவில் இதழ்ப் பணியிலும் அவருக்கு மனநிறைவு ஏற்படவில்லை தமிழ் ஆய்வுப் பணியில் முழுமையாக ஈடுபட வேண்டும் என்ற வேட்கையே மிகுதியாயிற்று. அதிக அளவில் ஓய்வு கிடைக்கக் கூடிய ஆசிரியர் பணியை அவர் மனம் நாடியது ஆதலால் ஆசிரியர் பயிற்சிப் பள்ளியில் சேர்ந்து பயின்று ஆசிரியரானார். தமது இல்லம் இருந்த தெருவில்

அமைந்திருந்த நகராண்மைக் கழக இடைநிலைப் பள்ளியொன்றில் ஆசிரியராக அமர்ந்தார். இறுதிவரை இடைநிலை ஆசிரியராகவே பணியாற்றி ஓய்வு பெற்றார்.

தமிழ்த்தேனீ:-

மயிலை சீனி ஒரு தமிழ்த் தேனீ. அறிவின் வாயில்களை நோக்கி அவரது கால்கள் எப்போதும் நடந்த வண்ணம் இருந்தன.

சென்னைப் பல்கலைக் கழக நூலகமும், கன்னிமரா நூலகமும், சென்னைக் கீழ்த்திசைச் சுவடி ஏட்டு நூலகமும் அவரது அறிவை விரிவு செய்தன. அகண்டமாக்கின. அல்லும், பகலும் நூற்கடலுள் மூழ்கி அரிய முத்துக்களைக் கொணர்ந்தார்.

தமிழ்த்தாத்தா உ. வே. சாமிநாதர் ஏட்டுச் சுவடிகளைத் தேடும் பணியில் ஊர் ஊராகக் கால் கடுக்க நடந்து சென்றார். அவர் போன்று மயிலையாரும் ஊர்தோறும் சென்று கல்வெட்டு ஆய்வினைச் செய்தார். கல்வெட்டுகளைத் துல்லியமாகப் படித்துப் பொருள் உணர்ந்தார். பழைய ஏட்டுச் சுவடிகளைத் தெளிவாகப் படித்தறிந்தார். தொன்மையான சாசனங்களை எல்லாம் தேடித் தேடிச் சேகரித்தார். அவைகளில் கூறப்படும் நுட்பமான வரலாற்றுச் செய்திகளை ஐயமின்றி அறிந்தார்.

கோவில்கள், கோபுரங்கள், கல்வெட்டுக்கள், சிற்பங்கள், ஓவியங்கள், சிலைகள் முதலியவற்றைக் கண்டு மகிழ்வதில் பெரு விருப்பங்கொண்டார் மயிலையார். ஒரு கோயிலைப் பார்த்தவுடன் அதைக் கட்டிய மன்னன் யார்? எந்தக் காலத்தில் அது கட்டப்பட்டது? அக்கோயில் எவ்வகையான அமைப்பை உடையது? அக்கோயில் கல்வெட்டுக்கள் கூறும் செய்திகள் எவை? என்பன போன்ற விவரங்களைத் துல்லியமாகக் கூறக்கூடியவர். கோயில் கற்கள் ஒவ்வொன்றும் அவருக்கு ஒவ்வொரு கதையைக் கூறியது. கல்லில் வடிக்கப்பட்ட சிற்பங்கள் அவரிடம் காவியம் பாடியது.

மயிலையார் ஒரு நுண்கலை வாணர். தமிழர் வளர்த்த கட்டடக்கலை, சிற்பக்கலை, ஓவியக்கலை, இசைக்கலை, நாடகக்கலை அனைத்தையும் மிக நுட்பமாக ஆய்வு செய்தவர். நம் மூதாதையர் வளர்த்த அழகுக் கலைகள் அழிந்து கொண்டும், அழிக்கப்பட்டுக் கொண்டும் வருவதை அறிந்து கண்ணீர் வடித்தார்.

தமிழ்நாட்டில் நிலவிய சமயங்களை எல்லாம் வெகு நுட்பமாக ஆய்வு செய்தார் தமிழ் மொழியின் வரலாறும், தமிழ் இலக்கிய வரலாறும் சமய வரலாற்றைச் சார்ந்தே உள்ளதால் விருப்பு வெறுப்பின்றி ஆய்வு செய்தார் அறிவுக் கண்கொண்டு ஆய்வு செய்தார்.

தமிழ் எழுத்தியல் வளர்ச்சியை நன்கு அறிந்தவர் மயிலையார் தமிழுடன் தொடர்புடைய கோலெழுத்து, கிரந்த எழுத்து, பல்லவர் எழுத்து, பிராமி எழுத்து எனப் பல்வகையான எழுத்து முறைகளையும் நன்கு அறிந்தவர். அவர் ஒரு பன்மொழி அறிஞருங்கூட. தமிழ், வடமொழி, ஆங்கிலம், திராவிட மொழிகளில் நன்கு தேர்ச்சி பெற்றவர்.

எந்தப் பேராசிரியரின் துணையும் இல்லாமல் எந்தப் பல்கலைக் கழகத்தின் அரவணைப்பும் இல்லாமல் ஆய்வின் பொருட்டு மயிலையார் சென்ற இடங்கள் பல. ஆய்ந்த கல்வெட்டுகள், செப்பேடுகள் மிகப் பல. கண்ட அருங்காட்சியங்களும் மிகப் பல.

கடுமையான உழைப்பாலும், ஊக்கத்தாலும், வாழ்நாள் முழுவதும் பல்வேறு துறைகளில் தமது அறிவெல்லைகளை விரித்துக் கொண்டே சென்றார். அறிவின் வாயில்களைத் தேடித் தேடிச் செல்லும் தேனீயாக விளங்கியவர் மயிலை சீனி.

பல்கலை வாணர்:-

சுருங்கச் சொன்னால் மயிலையார் ஒரு பல்கலை வாணர். இலக்கியக் கடல், வரலாற்றறிஞர், மொழிநூற் புலவர், சமயநூல் வித்தகர், நுண்கலை வாணர், வரிவடிவ வரலாற்று வல்லுநர், சொல்லாய்வுச் செம்மல், கல்வெட்டு, சாசனம், தொல்லியல் துறைகளில் தனி முத்திரை பதித்தவர். பன்மொழிப் புலவர், மானிடவியல், சமூகவியல் அறிஞர் எனப் பல்வேறு பரிமாணங் களின் பெட்டகமாகத் திகழ்ந்தார்.

பாவேந்தர் பாராட்டு:-

மயிலையார் தமிழ் மொழியில் தொடாத ஆய்வுத்துறை என்று எதுவும் இல்லை. தொட்டுத் துலக்காத பகுதி என்று எதுவும் இல்லை. அவர் இடைநிலைப் பள்ளி ஆசிரியர் என்றாலும், பல்கலைக் கழகப் பேராசிரியர்கள் தொடாத பகுதிகளை, தொடுவதற்கு அஞ்சும் பகுதிகளை எல்லாம் தேடித் தேடி எடுத்துத் துலக்கினார்

"அகல் வரலாறு அனைத்தும்
மிஞ்சுதல் இன்றிக் கற்றோன்
மேம்படும் நூலாராய்ச்சி
கெஞ்சிடும் தனைத் துலக்க
கேண்மையோடு உயர்வு செய்வான்"

என்று புரட்சிக் கவிஞர் பாரதிதாசனார் மயிலையாருக்குப் புகழாரம் சூட்டியுள்ளார்.

தொடர்பு:-

மயிலையார் பரந்துபட்ட கல்வியறிவோடு விரிந்துபட்ட அறிஞர் பெருமக்களின் தொடர்புகளையும் பெற்றிருந்தார்.

மயிலையார் வாழ்க்கையில் மிகப் பெரும் திருப்பு முனையை ஏற்படுத்தியவர் கிறித்துவக் கல்லூரியில் பேராசிரியராக விளங்கிய ச.த. சற்குணர் என்பவர் ஆவர். அவர் தமிழ், ஆங்கிலம், வரலாறு ஆகிய மூன்று துறைகளிலும் பேரறிஞராய் விளங்கியவர். தெ.பொ. மீனாட்சி சுந்தரனார், மொ.சு. துரையரங்கனார், அ.கி. பரந்தாமனார் போன்ற அறிஞர்கள் சற்குணரிடம் தமிழ் பயின்றவர்கள். மயிலையாரும் சற்குணரிடமே ஆங்கிலமும், தமிழும் பயின்றார். கிறித்துவ சமய இலக்கியங்கள் குறித்தும், வாழ்க்கை நெறிமுறைகள் பற்றியும் அறிந்தார். அஞ்சாமை என்னும் அருங்குணத்தையும் அவரிடமிருந்து பெற்றதாக மயிலையாரே ஒரு பேட்டியில் கூறியுள்ளார். சற்குணரிடம் கொண்ட தொடர்பு மயிலையார் வாழ்க்கையில் ஒளிவிளக்கை ஏற்றிவைத்தது.

தொடக்கத்தில் மயிலையார் நீதிக் கட்சியினர் நடத்திய திராவிடன் இதழில் துணையாசிரியராய்ப் பணிபுரிந்தார். பின்னர் தந்தை பெரியாரின் குடியரசு இதழில் கட்டுரைகள் எழுதினார். அதன் விளைவாகப் பெரியாரின் தொடர்பு அவருக்கு ஏற்பட்டது. மனத்திற்குச் சரி என்று பட்டதைத் துணிந்து கூறவேண்டும் என்ற உணர்வு தந்தை பெரியாரிடமிருந்து தாம் பெற்றதாக மயிலையாரே ஒரு பேட்டியில் கூறியுள்ளார். புரட்சிக் கவிஞர் பாரதிதாசனாரிடமும், குத்தூசி குருசாமியிடமும் மயிலையார் நெருங்கிப் பழகினார். அதன் விளைவாகச் சுயமரியாதைச் சுடரொளியாய்த் திகழ்ந்தார்.

மறைமலையடிகளார், திரு.வி.க., நாவலர் பாரதியார், கா.சு. பிள்ளை போன்றவர்களுடன் அடிக்கடி உறவு கொண்டு அவர்களின் வழிகாட்டுதலைப் பெற்றார்.

சுவாமி விபுலானந்தரின் தொடர்பு மயிலையாருக்குக் கிடைத்தது சுவாமிகள் மயிலாப்பூர் இராமகிருட்டிணா மடத்திற்கு வரும்பொழுதெல் லாம், இருவரும் சந்தித்து உரையாடி மகிழ்வர். சிலப்பதிகாரம், தமிழிசை, நடனம், நாடகம் குறித்துப் பல செய்திகளை மயிலையார் சுவாமிகள் வாயிலாக அறிந்து பயன் பெற்றார். தமிழறிஞர் தெ.பொ.மீ அவர்களிடமும் மயிலையார் தமிழிலக்கியங்களைக் கற்றார். தெ.பொ.மீ அவர்கள் சிந்தாதிரிப்பேட்டையில் நடத்தி வந்த வேதாந்த சங்கத்தில் அவ்வப்போது கருத்தரங்குகள் நடைபெறுவது வழக்கம். ஓர் அமயம் "சமயமும் தமிழும்" என்ற பொருளில் ஆறு பொழிவுகள் நடைபெற்றன. மயிலையார் அவை களைக் கேட்டுப் பயன்பெற்றார். அதன் விளைவாகக் கிறித்தவமும் தமிழும், பௌத்தமும் தமிழும், சமணமும் தமிழும் என மூன்று அரிய நூல்களை எழுதினார்.

1937இல் நடந்த இந்தி எதிர்ப்பின்போது முத்தமிழ்க் காவலர் கி.ஆ.பெ. விசுவநாதம் அவர்களுடன் ஒத்துழைத்துத் தமிழ் காத்தவர் மயிலை சீனி.

வரலாறு, கல்வெட்டு, சாசனத் துறைகளில் மயிலையாருடைய உற்ற நண்பர்களாகத் திரு. சதாசிவப் பண்டாரத்தார், கே. கே. பிள்ளை, மா. இராசமாணிக்கனார் போன்றோர் விளங்கினார்.

சமணப் பேரறிஞர்கள் ஜீவபந்து ஸ்ரீபால், அ. சக்கரவர்த்தி நயனார் போன்றோருடன் தொடர்பு கொண்டு சமண சமய நுட்பங்களை எல்லாம் அறிந்தார். அவர்களுடன் பலமுறை சைன சின்னங்கள் உள்ள ஊர்களுக்குச் சென்று கள ஆய்வு செய்தார்.

சென்னை மகாபோதி சங்கத்தின் தலைவர் நந்தீஸ்வர தேரோ, இலங்கை பௌத்த மதத் துறவி தருமரத்தின தேரோ போன்றோர்களுடன் நெருங்கிய நட்பு கொண்டு பௌத்த மதத் தத்துவங்களை எல்லாம் நன்கு அறிந்தார்.

சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகத் தலைவர் கா. சுப்பையா பிள்ளை, கா. அப்பாத்துரையார், அ. சிதம்பரநாதன், மீ.ப. சோமு, அழ. வள்ளியப்பா, பொருளியல் அறிஞர் பா. நடராசன் போன்றோர் மயிலையாரின் அருமை

பெருமைகளை எல்லாம் உணர்ந்து போற்றினர். அவருக்கு உற்ற தோழராக விளங்கினர்.

செக்கோஸ்லாவிய தமிழறிஞர் கபிலசுவலபில் மயிலையாரைத் தமது குருவாகவே மதித்துப் போற்றினார்

குணக்குன்று:-

பரந்துபட்ட கல்வியறிவினால் மயிலையார் நுண்மாண் நுழைபுலம் மிக்க மாமேதையாகத் திகழ்ந்தார். விரிந்துபட்ட அறிஞர்கள் தொடர்பால் ஆய்வுலகில் பொலிவு பெற்றார். தமிழ் கூறும் நல்லுலகம் போற்றும் தமிழ்ச் சான்றோனாய் விளங்கினார். குணக்குன்றாய், நிறை குடமாய், எளிமை, இனிமை, அடக்கம் ஆகிய உயர் பண்புகளுக்கு உறைவிடமாய்த் திகழ்ந்தார். பெரும் புலமையும், பொறுமையும், விடா முயற்சியும், சலியாத உழைப்புமே அவர் அணிந்த அணிகலன்கள். கடல் போன்ற ஆழமான கல்வி, நிலவுலகம் போல் பரந்து விரிந்த அறிவு, வானம் போல் உயர்ந்த பண்புகள் இம்மூன்றின் சங்கமம்தான் மயிலை சீனி. வேங்கடசாமி அவர்கள்.

தோற்றம்:-

மயிலை சீனி எங்ஙனம் தோற்றமளிப்பார் என்பது குறித்து அறிஞர் நாரண துரைக்கண்ணன் கீழ்வருமாறு படம் பிடித்துக் காட்டுகிறார்.

"ஐந்தடிக்கு உட்பட்ட குறள் வடிவம். பளபளக்கும் வழுக்கைத் தலை. வெண்மை படர்ந்த புருவங்களை எடுத்துக் காட்டும் அகன்ற நெற்றி. கனவு காணும் கண்ணிமைகளைக் கொண்ட வட்டமுகம். எடுப்பான மூக்கு. படபடவெனப் பேசத் துடிக்கும் மெல்லுதடுகள். கணுக்கால் தெரியக் கட்டி இருக்கும் நான்கு முழு வெள்ளை வேட்டி. காலர் இல்லாத முழுக்கை சட்டை. சட்டைப் பையில் மூக்குக் கண்ணாடி. பவுண்டன் பேனா. கழுத்தைச் சுற்றி மார்பின் இருபுறமும் தொங்கும் மேல் உத்தரீயம். இடது கையில் தொங்கிக் கொண்டிருக்கும் புத்தகப்பை. இப்படியான தோற்றத்துடன் கன்னிமரா நூலகத்தை விட்டு வேகமாக நடந்து வெளியே வருகிறாரே! அவர்தான் மயிலை சீனி. வேங்கடசாமி அவர்கள்"

மூன்று செய்திகள்:-

மயிலையார் குறித்து ஆய்வு செய்யும்போது மூன்று செய்திகளை நினைவில் கொள்ளுதல் வேண்டும்.

ஒன்று மயிலையார் பத்தாம் வகுப்புக்கு மேல் படிக்காதவர். இடைநிலைப் பள்ளி ஆசிரியர். என்றாலும் பல்கலைக் கழகங்கள் போற்றும் வண்ணம் உயர்ந்த ஆராய்ச்சிப் பணிகளை மேற்கொண்டார் ஏன்? பல்கலைக்கழகங்கள் செய்யாத ஆய்வுகளையும் தன்னந்தனி மனிதராய்ப் பிறர் உதவியின்றிச் செய்து முடித்தார். அவர் படைத்த பல நூல்கள் பல்கலைக் கழகங்களில் பாட நூல்களாகத் திகழ்கின்றன.

இரண்டு, அவர் திருமணம் செய்து கொள்ளாமல், வாழ்நாள் முழுவதும் ஆறுமுக நாவலர் போன்று தமிழுக்குத் தொண்டு செய்தார். தமது இன்பங்களை அறவே துறந்து சமண பௌத்த துறவிகளைப் போல் வாழ்ந்தார். புகழ் நாடாது, பொருள் விரும்பாது தன்னை வருத்திக் கொண்டு தமிழுக்காகவே தவம் செய்தார்.

மூன்று, மயிலையார் தனித் தன்மை வாய்ந்த ஆராய்ச்சியாளர் ஆராய்ச்சி செய்வதே வாழ்வாகவும், வாழ்க்கை முழுவதுமே ஆராய்ச்சிப் பணிக்கெனவும் அமைத்துக் கொண்டு வாழ்ந்தவர். அவரது ஆய்வுப் பணியில் சில சிறப்புக் கூறுகள் உள்ளன.

1. ஆராய்ச்சி உலகில் எவரையும் பின்பற்றாது தனக்கெனத் தனி மரபை வகுத்துக் கொண்டார்.

2. அவரது ஆராய்ச்சியானது செய்திகளின் தொகுப்பன்று. சுரங்கத்திலிருந்து தங்கத்தை வெட்டியெடுப்பது போன்ற கடினமான பணி அவருடையது. ஆழ் கடலில் இருந்து மூச்சினை அடக்கி முத்தெடுப்பது போன்றது. தமிழ்க் கடலுள் மூழ்கிப் புதிய புதிய உண்மைகளை வெளிக் கொணர்ந்தார். எவருக்கும் அஞ்சாது தன் முடிவுகளைத் துணிவோடு எடுத்துரைத்தார்.

3 காய்தல், உவத்தல் இன்றி நடுநிலைமையோடு ஆராய்ச்சி செய்தார் எதனையும் தகுந்த சான்று காட்டி நிறுவினார்

4. மானிடவியல், சமூகவியல் அறிவுடன் தமிழர் பண்பாட்டு வரலாற்றை முதன் முறையாக ஆய்வு செய்தவர் மயிலையாரே

5 தமிழருடைய கலை, பண்பாடு, சமயம் ஆகிய துறைகளில் கருத்து வடிவங்களுக்கு விளக்கம் தேவைப்படுகிறது அத்துறையில் முதன் முதலாக ஆராய்ச்சி செய்தவர் மயிலையாரே

மூன்று தமிழ் மரபுகள்:-

இருபதாம் நூற்றாண்டின் முற்பகுதியில் தமிழகத்தில் மூவகை தமிழ் மரபுகள் நிலவி வந்தன. அம் மரபுகள் இலக்கிய உலகிலும், வரலாற்று உலகிலும் தோற்றுவித்த ஆய்வுக் களங்கள், இலக்கியப் போர்கள் மிகப் பலவாகும்.

ஆரியஞ் சார்ந்த தமிழ் மரபு:-

இம்மரபுகளில் ஒன்று ஆரியஞ் சார்ந்த தமிழ் மரபாகும். இம்மரபினர் தமிழின் தனித் தன்மையை ஏற்க மறுத்தனர். சமஸ்கிருத மொழியின் மீது இவர்களுக்குத் தணியாத தாகம் உண்டு. மூட பக்தியும் உண்டு. தமிழ் இலக்கியம், கலை, நாகரிகம், பண்பாடு அனைத்துமே தமிழ் மக்களுக்குச் சமஸ்கிருதம் அளித்த நன்கொடை என்பது இவர்கள் கருத்து. தமிழின் தொன்மைக்கும், தனித் தன்மைக்கும் எதிரான கருத்துக்களை வெளியிடுவதே இவர்களது முழுநேர இலக்கியப் பணியாக இருந்தது. வடமொழி நூல்களுக்கு முதன்மை தருவதற்காகத் தமிழ் இலக்கியக் காலத்தைப் பின்னுக்குத் தள்ளினர்.

இந்திய தேசியம் சார்ந்த தமிழ் மரபு:-

மற்றொரு மரபு இந்திய தேசியஞ் சார்ந்த தமிழ் மரபாகும். இம்மரபினர் இந்திய தேசியத்தை முன்னிறுத்தினர். தமிழ்த் தேசியத்தைப் பின்னுக்குத் தள்ளினர். தமிழரின் தனித்தன்மையை இந்திய தேசிய நீரோட்டத்தில் கரைத்து விட்டனர். தமிழின் தனித்தன்மையை வலியுறுத்துவது இந்திய தேசியத்திற்கு எதிரானது என்ற கருத்தோட்டம் இவர்களுக்கு உண்டு. இந்திய தேசியத்தால் தமிழ்த் தேசியம் நலிவுற்றபோது எதிர்ப்புக்குரல் எழுப்பாது மௌனம் காத்தனர்.

தமிழ்த் தேசியம் சார்ந்த தமிழ் மரபு:-

மூன்றாவது மரபு தமிழ்த் தேசியம் சார்ந்த தமிழ் மரபாகும். இம்மரபின் அடித்தளம் தமிழின் தனித்தன்மையைக் காப்பதும் வளர்ப்பதும் ஆகும். மொழி, வரலாறு, கலை, பண்பாட்டுத் துறையில் தமிழின் தொன்மையைப் பேணிக்காப்பதும், மீட்டுருவாக்கம் செய்வதும் ஆகும். இந்த மரபின் முன்னணி வீரர்களாகத் திகழ்ந்த தமிழறிஞர்கள் பலர். அவருள் குறிப்பிடத் தகுந்தவர் மயிலை சீனி. வேங்கடசாமி அவர்கள் ஆவார். மயிலையார்

இந்திய தேசியத்திற்கு எதிரானவர் அல்லர். ஆயினும் தமிழின் தொன்மையை மீட்டுருவாக்கம் செய்வதை முதன்மைப் பணியாக மேற்கொண்டார்.

மயிலையாருடைய நூல்களும், கட்டுரைகளும், மீட்டுரு வாக்கத்தின் வாயில்கள். அவர் கடந்த கால வளங்களை நினைவூட்டினார். நாம் தாழ்ந்து போனதற்கான காரணங்களைத் தேடினார். நம் பெருமைகளை விரிவாக விளக்கினார். நம் மீட்சிக்கான வழி வகைகளை ஆய்வு செய்தார். அவருடைய நூல்கள் ஆரியஞ்சார்ந்த தமிழ் மரபினருக்கு எதிரான படைக்கலன்கள். இந்தப் படைக்கலன்களை ஆரவாரம் இல்லாமல், மேடை முழக்கம் இல்லாமல், ஆராய்ச்சி பூர்வமாக அசைக்க முடியாத ஆதாரங்களோடு வடித்துக் கொடுத்தார். பண்டைத் தமிழ் மரபை நாம் எளிதில் உணரும் வண்ணம் மீட்டுருவாக்கம் செய்தார்.

மயிலையாரின் இதழ் படைப்புகள்:-

மயிலையார் தமிழுக்கு அளித்த நன்கொடைகள் மிகப் பலவாகும். பல்வேறு தமிழ் இதழ்களில் 200 க்கு மேற்பட்ட ஆய்வுக்கட்டுரைகளை வழங்கியுள்ளார். அவற்றுள் 150க்கு மேற்பட்டவை நூல்வடிவம் பெறாதவை. மயிலையார் ஆராய்ச்சிக் கட்டுரைகள் எழுதிய இதழ்களில் சில பின்வருமாறு:

குடியரசு, திராவிடன், செந்தமிழ்ச் செல்வி, செந்தமிழ், தமிழ்ப் பொழில், ஆராய்ச்சி, திருக்கோயில், நண்பன், கல்வி, இலட்சுமி, ஆனந்த போதினி, தமிழ்நாடு, சௌபாக்கியம், ஈழகேசரி முதலியனவாகும்.

இவருடைய ஆய்வுகள் பல திறத்தன. சங்க கால ஆய்வுகள், சிலப்பதிகார ஆய்வுகள், திருக்குறள் ஆய்வுகள், இலக்கிய ஆய்வுகள், சமணம் பௌத்தம் பற்றிய ஆய்வுகள், வரலாறு, சமயம் பற்றிய ஆய்வுகள், கல்வெட்டு சாசனம், நாணயம் பற்றிய ஆய்வுகள், சிற்பங்கள் பற்றிய ஆய்வுகள், சொல்லாய்வுகள், இலக்கண ஆய்வுகள் எனப்பல துறைகளில் ஆய்வு செய்து கட்டுரைகள் வழங்கியிருக்கிறார். இவருடைய கட்டுரைகள் திட்பமும், நுட்பமும் கொண்டு விளங்கும் அரிய ஆராய்ச்சிக் கருவூலங்கள் ஆகும்.

நூல்கள்:-

மயிலையார் தமிழன்னைக்கு அணிகலன்களாக முப்பது நூல்களைப் படைத்துள்ளார். அவர் படைத்துள்ள நூல்களின் பெயர்களைப் பார்த்தாலே அவரது பரந்து விரிந்த கல்விப் பரப்பும், கடுமையான உழைப்பும் புலனாகும்.

மயிலை சீனி அவர்களின் பெரும் பங்களிப்பு வரலாற்றுத் துறைக்கு அவர் ஆற்றியுள்ள பெரும் பணியேயாகும். வரலாற்று ஆய்வுக்கென்று ஒன்பது அரிய நூல்களை வழங்கியிருக்கிறார். அவர் தமிழ்நாட்டு வரலாற்றுக் குழு உறுப்பினராகவும் பணி புரிந்திருக்கிறார். தமிழக அரசு வெளியிட்ட ''சங்க கால அரசியல்'' என்ற நூலில் சேரர், சோழர், பாண்டியர் என்னும் மூவரசர்களைப் பற்றியும் விரிவாக எழுதியுள்ளார். வரலாற்றுக்குத் துணைபுரியும் கல்வெட்டுகளை ஆய்வு செய்துள்ளார். இலங்கைத் தமிழர் குறித்து வரலாற்று நோக்குடன் விரிவாக ஆராய்ந்திருக்கிறார். ஏறத்தாழ 350 பக்கங்களில் ஐந்து கட்டுரைகளை எழுதியுள்ளார். இவைகளேயன்றிப் பல்வேறு இதழ்களில் வரலாற்றுத் தொடர்பாக நாற்பதுக்கு மேற்பட்ட கட்டுரைகளை வரைந்துள்ளார். வரலாற்றுத் துறைக்கு மயிலையார் ஆற்றிய பணி மகத்தானது என்பதில் ஐயமில்லை.

மயிலையார் இலக்கிய ஆய்வு நூல்கள் என்ற வகையில் ஆறு நூல்களை எழுதியுள்ளார். ''19-ஆம் நூற்றாண்டுத் தமிழிலக்கியம்'', ''மறைந்து போன தமிழ் நூல்கள்'' எனும் இரு நூல்களும் காலத்தால் அழியாமல் என்றும் நிலைத்து நிற்கக் கூடியன. ''தொல்காப்பியத்தில் ஆய்வுரைகள்'' என்ற சொற்பொழிவு நூல் குறிப்பிடத்தக்க நூலாகும். ''அஞ்சிறைத்தும்பி''- அருமையான சொல்லாராய்ச்சிக் கட்டுரைகள் கொண்டது.

மயிலையார் சமய ஆய்வு நூல்கள் என்ற வகையில் நான்கு நூல்களை எழுதியுள்ளார். சமணர்களும், பௌத்தர்களும், கிறித்தவர்களும், இசுலாமியர்களும் தமிழுக்கு ஆற்றிய பெருந்தொண்டுகளை நினைவுகூர்ந்து போற்றுகிறார். சமயக் காழ்ப்பின்றி, விருப்பு வெறுப்பு இன்றி ஆய்வு செய்திருக்கிறார். தமிழிலக்கிய வரலாற்றில் சமயங்களின் தாக்கத்தைத் துல்லியமாகப் படம் பிடித்துக் காட்டுகிறார்.

மயிலையார் கலையியல் ஆய்வு நூல்கள் என்ற வகையில் ஐந்து நூல்களைப் படைத்துள்ளார். தமிழர் வளர்த்த அழகுக் கலைகளான கட்டடம், சிற்பம், ஓவியம், இசை, கூத்து, காவியம், நாடகம் போன்ற கலைகளை ஆய்வு செய்திருக்கிறார். இத்துறை நூல்கள் மிகவும் அரியன புதியன.

இதுபோன்றே கல்வெட்டு, சாசனம் என்ற வகையில் இரு நூல்களும், பொது நூல்கள் என்ற வகையில் நான்கு நூல்களும் ஆக முப்பது நூல்கள் தமிழன்னைக்குக் காணிக்கையாக வழங்கியிருக்கிறார்.

மயிலையார் எழுதி அச்சில் வராமல் கையெழுத்துப் பிரதியாக நின்றுவிட்ட நூல்கள் சிலவும் உள்ளன. அவை: 1. இந்து மதமும் தமிழும் 2. இஸ்லாமும் தமிழும் 3. சமணமும் தமிழும் பாகம் 2 4. 18-ஆம் நூற்றாண்டுத் தமிழிலக்கியம் 5. யானைக் கோயில் வரலாறு 6. தமிழ்நாட்டுச் சிற்பக் கலை என்பவை ஆகும்.

மயிலையாருடைய ஆய்வு நூல்களுக்கு என்று சில தனிச் சிறப்புகள் உள்ளன.

1. அவரது ஆய்வு நூல்களில் பெரும்பாலானவை தமிழுலகிற்கு அவரால் முதன் முதலாக வழங்கப்பட்டவையாகும்.

2. அவருடைய ஆய்வு நூல்கள் அனைத்தும் அறிஞர்களுக்கும் பொது மக்களுக்கும் ஒரு சேர விருந்தளிப்பவையாகும். எளிமை, இனிமை, வெளியீட்டு நுட்பம் காரணமாக இரு திறத்தாரையும் ஈர்க்கக்கூடியது.

3. அவரது ஆய்வு நூல்களில் வேண்டாத நூல் என்று எதனையும் ஒதுக்கமுடியாது. அன்றியும் ஒரு நூலில் எந்த ஒரு சிறு பகுதியையும் வேண்டாதவை என்று ஒதுக்க முடியாது.

4. அவரது ஆய்வு நூல்கள் பல்வேறு ஆய்வு நூல்கள் தோன்றுவதற்கு வழி வகுத்துள்ளன.

5. மயிலையார் தமது நூல்களுக்குத் தாமே படம் போட்டு விளக்குவார். சங்ககால மதுரையையும், காவிரிப்பூம் பட்டினத்தையும், வஞ்சி மாநகரத்தையும், காஞ்சி மாநகரத்தையும் படம் வரைந்து விளக்கியுள்ளார். ஏராளமான வரைபடங்களையும் ஒளிப்படங்களையும் அவரது நூல்களில் காணலாம். மயிலையாருடைய 30 நூல்களைப் பற்றியும் சிறு குறிப்புகளேனும் தரவேண்டும். ஆயினும் 3 நூல்களுக்கு மட்டுமே இங்கே சில குறிப்புகள் தரப்படுகின்றன.

19-ஆம் நூற்றாண்டுத் தமிழிலக்கியம்:-

மயிலையாருடைய 19ஆம் நூற்றாண்டுத் தமிழிலக்கியம் ஓர் அரிய கலைக் களஞ்சியம். தகவல் களஞ்சியம் எனலாம். ''இந்நூல் எழுதுவதற்குப் பல நூற்றுக்கணக்கான புத்தகங்கள் எனக்குத் துணையாக இருந்தன'' என்று மயிலையார் தமது நூலின் முன்னுரையில் கூறியுள்ளார். இம்மாதிரியான நூல்களை மயிலை சீனி அவர்கள்தான் இயற்ற முடியும் என்று

செக்கோஸ்லாவியா அறிஞர் கபிலசுவலபில் புகழாரம் சூட்டியுள்ளார். இந்நூலில் 19ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த 226 தமிழ்ப் புலவர்களைப் பற்றிய அரிய குறிப்புகள் உள்ளன. 19ஆம் நூற்றாண்டில் அச்சான இலக்கிய நூல்கள், உரைநடை நூல்கள், நாடக நூல்கள் என 625 நூல்களைப் பற்றிய பதிவுகள் உள்ளன 113 இதழ்கள் பற்றிய பட்டியல் தரப்பட்டுள்ளது. அச்சகங்களின் வரலாறு, எகர, ஒகர எழுத்துக்களின் வரிவடிவ வரலாறு, தமிழ் எண்கள் மாற்றம் பெற்ற வரலாறு, கீழ்க்கணக்கு நூலாராய்ச்சி, ஆசிரியர் மாணவர் பரம்பரையெனப் பல செய்திகள், நுட்பமாகத் தொகுக்கப்பட்டுள்ளன. கிறித்தவர்கள், இசுலாமியர்கள், ஆங்கிலேயர்கள் வருகையால் தமிழிலக்கியம் செழித்த வரலாறு சிறப்பாக எடுத்துக் காட்டப்பட்டுள்ளது. ஒவ்வொரு நூற்றாண்டைப் பற்றியும் இதுபோன்ற ஆராய்ச்சி நூல்கள் வெளிவர வேண்டுமென்று டாக்டர் அ. சிதம்பரநாதன் அணிந்துரையில் குறிப்பிடுகிறார்.

மறைந்து போன தமிழ் நூல்கள்:

இந்நூல் மற்றுமொரு அரிய படைப்பாகும். மயிலையாருடைய குடும்பத்தில் இளம் வயதில் இரண்டு குழந்தைகள் இறந்துவிட்டனர். அந்தத் துயரம் அவரால் தாங்க முடியவில்லை. அந்நிகழ்ச்சியின் விளைவால் தமிழ் இலக்கியக் குடும்பத்தில் எத்தனை குழந்தைகள் இறந்து போயின என்று கணக்கெடுத்தார். அதன் விளைவாகத் தோன்றியதுதான் 'மறைந்து போன தமிழ் நூல்கள்' உரை யாசிரியர்களின் உரைகளையெல்லாம் ஊன்றிப் படித்து மறைந்து போன தமிழ் நூல்கள் பற்றிய குறிப்புகளையெல்லாம் ஒன்று விடாமல் தேடித்தொகுத்துத் தந்தப் பெருமை மயிலையாருக்கு உரியதாகும். இந்நூலில் மறைந்து போன 195 தமிழ் நூல்களைப் பற்றிய அரிய குறிப்புகளையும், இறந்தன போக எஞ்சி நின்ற செய்யுட் பகுதிகளையும், ஒரு சேரத் தொகுத்துத் தந்துள்ளார். இது அரிதினும் அரிய மீட்டுருவாக்கப் பணியாகும். நாம் இழந்துவிட்ட நூல்களைத் தேடிய முதல் அறிஞர் இவரே. மறைந்த மாநகரங்களை அகழ்ந்து எடுப்பது போலத் தமிழ்ப் பெருங்கடலுள் புதையுண்டுபோன புதையல்களைத் தேடிஎடுத்தார். மிக நுண்ணிய தடயங்களைக் கொண்டே நூல்களை அடையாளங்கொண்டு, சிதைந்து போன உருவத்தைச் செப்பம் செய்து உயிரூட்டி உலவவிட்டவர் மயிலையார். தமது முன்னுரையில் மயிலையார் எழுதுகிறார், ''மறைந்துபோன நூல்களின் முழுத் தொகுப்பு அல்ல இந்நூல். விடுபட்ட நூல்களும் உள்ளன. அவற்றைப்

பிறகு எழுதித் தொகுக்கும் எண்ணம் உடையேன்'' என்று. இந்நூல் 1959ல் வெளிவந்தது. இதனைத் தொடர்ந்து இத்துறையில் இன்னொரு நூல் வெளிவரவில்லை. தமிழ் நூல் கடலுள் இன்னும் எத்தனை எத்தனை நூல்கள் புதையுண்டு கிடக்கின்றனவோ? அவைகளில் என்னென்ன செய்திகள் மறைந்து கிடக்கின்றனவோ? அவைகளை வெளிப்படுத்த இன்னொரு மயிலையார் எப்பொழுது தோன்றுவாரோ? யார் அறிவார்?

கருவி நூல்கள் இல்லாத காலத்தில், தகவல்களைத் திரட்டும் வாய்ப்புகள் குறைவான காலத்தில் பல்கலைக் கழகங்கள்கூட செய்ய முடியாத பணியினைத் தன்னந்தனி மனிதராய் இருந்து செய்திருக்கிறார் என்று எண்ணும் போது வியப்பு மேலிடுகிறது.

தமிழர் வளர்த்த அழகுக் கலைகள்:-

நுண்கலைகள் பற்றிய சிறந்த ஆய்வு நூல் இது. கலைகள் குறித்து முழுமையான செய்திக் களஞ்சியம் எனலாம். தமிழகமே கலைகளின் தாயகம் என்பதனை மயிலையார் வலியுறுத்துகிறார். சங்கக் காலந்தொட்டு கட்டடக்கலை, சிற்பக்கலை, இசைக்கலை, ஓவியக்கலை, நாடகக்கலை யாவும் தமிழகத்தில் செழித்து வளர்ந்து வந்துள்ள பரிணாம வளர்ச்சியை இந்நூலில் படம் பிடித்துக் காட்டுகிறார். இடைக்காலத்தில் இக்கலைகள் அழிந்து போயின. இக்கலைகள் யாவும் மீண்டும் மீட்டுருவாக்கம் செய்யப்படவேண்டும் என்ற நோக்கில் எழுதப்பட்ட அற்புதமான நூல் இது. இத்துறையில் தமிழில் வெளிவந்த முதல் நூல். தமிழக அரசின் முதற் பரிசு பெற்ற நூல். தமிழகம் முழுவதும் உள்ள கோவில்களுக்குச் சென்று கலை ஆய்வு செய்து எழுதப்பட்ட கலைப்பெட்டகம் இந்நூல். நமது முன்னோர் போற்றி வளர்த்த கலைகள் யாவும் அழிந்து கொண்டும், அழிக்கப்பட்டுக் கொண்டும் வருகிறதே என்று மயிலையார் கண் கலங்கினார். பொறுப்பற்ற தமிழ் மக்களை எண்ணி எண்ணிப் பெருமூச்சு விட்டார் இந்நூலில் ''கலைகளைப் போற்றுக'' எனும் பகுதி உள்ளது. இப்பகுதியை மயிலையார் மையினால் அன்று, கண்ணீரால் தான் எழுதியிருக்கக்கூடும்.

ஆய்வு வகைகள்:-

மயிலையாருடைய ஆய்வு நெறிகளை நான்கு வகையாகப் பகுக்கலாம். அவை:

1. புதிய செய்திகளைத் தருவது 2. புதிய விளக்கங்களைத் தருவது 3. இருண்ட பகுதிகளுக்கு ஒளியூட்டுவது 4. தவறான கருத்துகளை மறுத்து உண்மையை நிலை நாட்டுவது என்பதாகும்.

1. புதிய செய்திகளைத் தருதல்:-

''பாண்டியர் வரலாற்றில் ஓர் அரிய புதிய செய்தி'' என்றொரு கட்டுரையை மயிலையார் வரைந்துள்ளார். சங்க காலத்தில் மூவேந்தர் கொடியில் பொறிக்கப்பட்டிருந்த சின்னங்கள் பற்றிய ஓர் ஆய்வு இது.

சோழன் கொடியில் புலிச்சின்னம், சேரன் கொடியில் வில் சின்னம், பாண்டியன் கொடியில் மீன் சின்னம் பொறிக்கப் பட்டிருப்பது வழி வழி மரபாகும். ஆனால் சங்க காலத்தில் பசும்பூண் பாண்டியன் கொடியில் மட்டும் யானைச் சின்னம் பொறிக்கப் பட்டிருந்தது. இவ்வரிய செய்தியைச் சங்கப் பாடல் ஒன்றின் வழியாக விளக்குகிறார். ஏறத்தாழ மூவாயிரம் பாடல்கள் கொண்ட சங்கச் செய்யுட்களில் ஒரே ஒரு பாட்டில் ஒரே ஒரு வரியில் இக்குறிப்பு வருகிறது. அகநானூற்றில் 162 ஆம் செய்யுளில் பரணர் இக்குறிப்பைத் தருகிறார். இதை விளக்குவதுதான் இக்கட்டுரை. இதுபோல எண்ணற்ற புதிய செய்திகளைத் தந்தவர் மயிலையார்.

2. புதிய விளக்கம் தருதல்:-

''மாமல்லபுரத்துச் சைன சிற்பங்கள்'' என்றொரு நூல் மயிலையார் எழுதியது. மாமல்லபுரத்துச் சிற்பங்கள் அருச்சுனன் தவசு அல்லது பகீரதன் தவசு என்பதைக் குறிப்பன என்று பலரும் எழுதி வந்தனர். ஆனால் மயிலையார் இதனை மறுத்து மாமல்லபுரத்துச் சிற்பங்கள் சமணர்களின் அஜீத நாதர் புராணத்தில் கூறப்படுகிற சகரசாகரர்களின் கதையென ஆராய்ந்து விளக்கினார். மகாபலிபுரம் என்று தவறாக வழங்கப்பட்ட பெயரை மாமல்லபுரம் என்று அறிமுகப்படுத்திய பெருமையும் மயிலையாரையே சேரும். இதுபோன்று எத்தனையோ புதிய விளக்கங்களைத் தந்தவர் மயிலையார்.

3. இருண்ட பகுதிகளுக்கு ஒளியூட்டுதல்:-

மயிலையார் வரலாற்றின் இருண்ட பகுதிகளுக்கு ஒளியூட்டினார். துண்டு துண்டாகச் சிதறிக் கிடந்த வரலாற்றுத் துணுக்குகளை எல்லாம் தமது மதி நுட்பத்தால் இணைத்து ஒழுங்குபடுத்தி, முறைப்படுத்தி முழுமையான

வரலாற்றை உருவாக்கியவர். ''களப்பிரர் ஆட்சியில் தமிழகம்'' என்ற நூலே இதற்குப் போதுமான சான்றாகும்.

கி.பி. மூன்றாம் நூற்றாண்டு முதல் ஆறாம் நூற்றாண்டு வரையுள்ள காலத்தை வரலாற்றாசிரியர்கள் இருண்ட காலம் என்று ஒரே வரியில் எழுதி முடித்துவிட்டார்கள். அந்த இருண்ட காலத்திற்கு 69 நூல்களைச் சான்று காட்டி 175 பக்கங்கள் எழுதி ஒளியூட்டியவர் மயிலையார்.

4. தவறான கருத்துக்களை மறுத்து உண்மையை நிலை நாட்டுதல்:-

திரு. வையாபுரிப்பிள்ளை, கே.ஏ. நீலகண்ட சாத்திரியார், இராமசந்திர தீட்சிதர், மு. இராகவையங்கார், பி.எஸ். சுப்பிரமணிய சாத்திரியார் போன்ற பேராசிரியர்கள் எழுதிய தவறான பல கருத்துக்களைச் சான்று காட்டி மறுத்தவர் மயிலையார். மறுத்து அவர் எழுதிய நூல்கள் சில. கட்டுரைகள் மிகப் பல. நூல்களுள் ''தொல்காப்பிய ஆய்வுரை'' சிறப்புடையது. அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் ஆற்றிய சொற்பொழிவு அந்நூல். அந்நூலில் கூறப்பட்ட சில மறுப்புரைகள் பின் வருமாறு:-

1. வச்சிரநந்தி என்னும் சமணன் சமண சமய வளர்ச்சிக்காகக் கி.பி. 5 ஆம் நூற்றாண்டில் ஒரு சங்கத்தை ஏற்படுத்தினான். அதனை ''பாண்டியர்கள் தோற்றுவித்த தமிழ்ச்சங்கம்'' என்று வையாபுரியார் தவறாக உணர்ந்தார். அதன் அடிப்படையில் தமிழிலக்கியக் காலத்தைப் பின்னுக்குத் தள்ளினார்.

வையாபுரியாரும் மேற்கண்ட பேராசிரியர்களும் தொல்காப்பியமும், திருக்குறளும் கி.பி. 5ஆம் நூற்றாண்டிற்குப் பின்னர் தோன்றின என்றனர். சிலப்பதிகாரம் கி.பி. 8ஆம் நூற்றாண்டில் தோன்றியது என்றனர். மயிலையார் அதனை மறுத்தார். தொல்காப்பியம் கி.மு. எட்டாம் நூற்றாண்டிலும், திருக்குறள் கி.மு. முதல் நூற்றாண்டிலும், சிலப்பதிகாரம் கி.பி. 2ஆம் நூற்றாண்டிலும் தோன்றியது எனச் சான்று காட்டி நிறுவினார்.

2. வடமொழியில் எழுதப்பட்ட மனுநீதி, அர்த்த சாத்திரம், காம சூத்திரம், பரத நாட்டிய சாத்திரம் போன்ற நூல்களிலிருந்து கருத்துக்களைப் பெற்றே தொல்காப்பியமும், திருக்குறளும் எழுதப்பட்டன என்ற அவர்களின் கருத்தையும் மறுத்தார். அவர்களின் சமஸ்கிருத மூட பக்தியையும் கண்டித்தார். இவை போன்று பலர் கூறிய தவறான கருத்துக்களை எல்லாம் மறுத்தார்.

மயிலையாரின் ஆராய்ச்சி வண்மையை உணர்ந்த புரட்சிக் கவிஞர் பாரதிதாசன்,

''பல்கலைத் தலைவன் எல்லாம்
தமிழ்ச்சீனி வேங்கடத்தின்
கால்தூசும் பெறாதார் என்பேன்'' என்று புகழாரம் சூட்டினார்.

மயிலையாரும் வாழ்க்கைப் போராட்டங்களும்:-

மயிலையார் தமது வாழ்நாள் முழுவதும் பல்வேறு இன்னல்களுக்கு இடையே வாழ்ந்தவர். இதனைத் தாம் எழுதிய முன்னுரைகளில் இலைமறை காயாக வெளிப்படுத்தியுள்ளார்.

1940-இல் வெளிவந்த ''பௌத்தமும் தமிழும்'' என்ற நூலின் முன்னுரையில் மயிலையார் பின்வருமாறு கூறுகிறார்,

''பல இன்னல்களுக்கு இடையே இதனை எழுத வேண்டியிருந்தது''.

1954 இல் வெளிவந்த ''சமணமும் தமிழும்'' என்ற நூலின் முன்னுரையில் பின்வருமாறு கூறுகிறார்,

''வாழ்க்கைப் போருக்கு இடையே பல இன்னல்களுக்கு இடையே சிறுசிறு ஓய்வுக் காலத்தைப் பயன்படுத்தி இந்நூல் எழுதி முடிக்கப்பட்டது.''

1974இல் வெளிவந்த ''களப்பிரர் ஆட்சியில் தமிழகம்'' என்ற நூலின் முன்னுரையில் பின்வருமாறு கூறுகிறார்,

''வாழ்க்கையில் ஏற்பட்ட மனக்கவலையும் துன்பமும் நோயும் தொடர்ந்து வருத்துகிற காலத்தில் இந்நூலை எழுதினேன்.''

இங்ஙனம் 1940இல் தொடங்கிய இன்னல் 1976 வரைகூட விடுபடாமல் வாழ்ந்திருக்கிறார் என்பதை அறியும்போது நெஞ்சு நெகிழ்கிறது.

''சமணமும் தமிழும்'' என்ற நூலில் மனம் வெதும்பிக் கூறுகிறார்,

''ஒன்றை மட்டும் கூற விரும்புகிறேன், உண்மையாக உழைத்து ஆராய்ச்சி நூல் எழுதும் உழைப்பாளர்களுக்குத் தமிழ்நாட்டில் இடமில்லை'' என்று.

பொதுவாக மயிலையார் தமது இன்னல்களை வெளிபபடையாகக் கூறமாட்டார். தமது உழைப்புக்கு ஏற்ற பொருளும், புகழும், அங்கீகாரமும் கிடைக்கவில்லை என்பதை அவர் உணர்ந்திருந்தார். அந்த உணர்ச்சி அவரது அடிமனத்தின் ஒரு மூலையில் இருக்கத்தான் செய்தது. இருந்தாலும் வெளிப்படையாகக் கூறிச் சலித்துக் கொண்டதில்லை. ஒரோர் அமயம் ஓரிரண்டு வார்த்தைகளில் மட்டுமே தம் மனத் துயரத்தை வெளிப்படுத்தி யிருக்கிறார். வாழ்நாள் முழுவதும் மனத்துயரங்களை உள்ளடக்கிப் பொது நன்மைக் கருதி அயராது உழைத்த பெருந்தகையவர்.

மயிலையார் தாம் வாழ்ந்த காலத்தில் போற்றப்பட வேண்டிய அளவிற்குப் போற்றப்படவில்லை என்பதை உணர்ந்து புரட்சிக் கவிஞர் பாரதிதாசனார் மனம் வருந்தியிருக்கிறார். அவரது உள்ளத்தில் இந்த ஏக்கம் மிகுதியாக இருந்திருக்கிறது. இதனைக் கீழ்வருமாறு வெளிப்படுத்தினார்:-

''நன்றி கெட்டு அதிகாரத்தை
நாடும் எவ்வரசும் அன்னார்
குன்றினும் மிகுந்த சீர்த்தி
கொண்டுயர் வளித்தார் இல்லை''

சில சிறப்புகள்:-

பாலைவனத்தில் பசுஞ்சோலை போன்று மயிலையார் ஓரிரு சிறப்புக்களையேனும் பெற்றிருக்கிறார்.

1961இல் மயிலையாருக்கு மணிவிழா நடைபெற்றது. சென்னை கோகலே மண்டபத்தில் நடைபெற்ற அவ்விழாவில் நீதியரசர் கணபதியா பிள்ளை, மயிலையாருக்கு ''**ஆராய்ச்சிப் பேரறிஞர்**'' என்ற பட்டத்தை நல்கிச் சிறப்பித்தார்.

1961ஆம் ஆண்டில் தமிழ் எழுத்தாளர் சங்கம் மயிலையாருக்குக் கேடயம் வழங்கிச் சிறப்பித்தது.

1963-1964ஆம் ஆண்டுகளில் மயிலையார் தமிழக எழுத்தாளர் சங்கத் தலைவராக வீற்றிருந்து சிறப்பித்தார்.

1970ஆம் ஆண்டு தமிழக அரசு தமிழ்நாட்டு வரலாற்றுக் குழு உறுப்பினராக மயிலையாரை நியமனம் செய்தது.

1980ஆம் ஆண்டு மார்ச் திங்கள் மதுரைப் பல்கலைக் கழகம் மயிலையாருக்குத் ''தமிழ்ப் பேரவைச் செம்மல்'' என்ற பட்டத்தினை அளித்துச் சிறப்பித்தது.

பல்லாண்டு காலம் தமிழகப்புலவர் குழுவில் அங்கம் வகித்தார். மயிலையார் மறைந்து இருபது ஆண்டுகளுக்குப் பிறகு அவர் தொண்டுக்கு உரிய சிறப்புக் கிடைத்தது. ஆம். கி.பி. 2001இல் தமிழக அரசு அவரது நூல்களை நாட்டுடமையாக்கியது. அவரது குடும்பத்தினருக்குப் பத்து இலட்சம் ரூபாய் நன்கொடையாக அளித்தது. இது மயிலையார் தொண்டுக்குக் கிடைத்த மாபெரும் நன்றிக் காணிக்கையாகும்.

மறைவு:-

மயிலையார் தமது இறுதிக் காலத்தில் கடைசி பத்து நாட்கள், மூளை நரம்புகள் பாதிக்கப்பட்ட நிலையில் செயல்பாடு அற்று இருந்தார். இராயப்பேட்டை மருத்துவ மனையில் 8.5 1980ஆம் நாள் இரவு 8.30 மணி அளவில் மறைந்தார். மறைந்தார் என்பதை விடத் தமது மாபெரும் ஆராய்சசிப் பணியை நிறுத்திக் கொண்டு ஓய்வெடுத்துக்கொண்டார் என்பது சாலப் பொருந்தும். உண்மையில் அவர் மறையவில்லை. அவருடைய நூல்களே நிலை பெற்ற சின்னங்களாய் விளங்கி அம்மேதையை நமக்கு நினைவூட்டிக் கொண்டேயிருக்கும். ஆய்வுலகில் என்றென்றும் புகழுடம்பு தாங்கிய வண்ணம் உலா வருபவர் அவர். மயிலை சீனி வேங்கடசாமியின் மாண்புகழ் நீடு வாழ்க.

ஆராய்ச்சிப் பேரறிஞர் மயிலை சீனி. வேங்கடசாமி அவர்கள் எழுதிய நூல்கள்

முதற்பதிப்பு

வரலாற்று ஆய்வு நூல்கள் (9)

1. சங்ககாலத் தமிழக வரலாற்றில் சில செய்திகள் 1970
2. பழங்காலத் தமிழர் வாணிகம் 1974
3. களப்பிரர் ஆட்சியில் தமிழகம் 1976
4. சேரன் செங்குட்டுவன் 1966
5. மகேந்திரவர்மன் 1955
6. நரசிம்மவர்மன் 1957
7. மூன்றாம் நந்திவர்மன் 1958
8. கொங்கு நாட்டு வரலாறு 1974
9. துளுநாட்டு வரலாறு 1966

இலக்கிய ஆய்வு நூல்கள் (6)

1. தொல்காப்பியத்தில் சில ஆய்வுரைகள் 1970
2. இறையனார் களவியல் ஆராய்ச்சி 1943
3. 19ஆம் நூற்றாண்டுத் தமிழ் இலக்கியம் 1962
4. மறைந்து போன தமிழ் நூல்கள் 1959
5. மனோன்மணீயம் - பதிப்பும் குறிப்புரையும் 1961
6. அஞ்சிறைத்தும்பி 1958

சமயமும் தமிழும் ஆய்வு நூல்கள் (4)

1.	பௌத்தமும் தமிழும்	1940
2.	கிறித்துவமும் தமிழும்	1936
3.	சமணமும் தமிழும்	1954
4.	சமயங்கள் வளர்த்த தமிழ்	1966

கலையியல் ஆய்வு நூல்கள் (5)

1.	தமிழர் வளர்த்த அழகுக் கலைகள்	1956
2.	நுண்கலைகள்	1967
3.	இறைவன் ஆடிய எழுவகைத் தாண்டவம்	1948
4.	மாமல்லபுரத்துச் சைன சிற்பங்கள்	1950
5.	இசைவாணர் கதைகள்	1970

கல்வெட்டு, சாசனம் ஆய்வுநூல்கள் (2)

1.	சங்க காலத்துப் பிராமிக் கல்வெட்டுகள்	1981
2.	சாசனச் செய்யுள் மஞ்சரி	1959

பொது நூல்கள் (4)

1.	உணவு நூல்	1965
2.	புத்தர் ஜாதகக் கதைகள்	1960
3.	பௌத்தக் கதைகள்	1952
4.	கௌதம புத்தர்	1956

மேலும் 200க்கு மேற்பட்ட அரிய ஆய்வுக் கட்டுரைகளை வழங்கியுள்ளார்.

பொருளடக்கம்

சங்ககால ஆய்வு

1.	பாண்டியர் வரலாற்றில் ஓர் அரிய புதிய செய்தி	35
2.	பாண்டியர் நிறுவிய தமிழ்ச்சங்கம்	43
3.	சங்க காலத்து வாணிகம்	50
4.	சங்க காலத்துக் கைத்தொழிலும் வாணிகமும்	72
5.	சங்க காலத்து நடு கற்கள்	83
6.	வஞ்சிக்கருவூர் சங்க காலச் சேரநாட்டின் தலைநகரம்	91
7.	சங்ககாலத்து மதுரை	110
8.	சங்ககாலத்துக் காவிரிப்பூம் பட்டினம்	124
9.	சங்ககாலத்துத் துறைமுகம் - மறைந்துபோன மருங்கூர்ப் பட்டினம்	136
10.	சேரநாட்டு முத்து	143
11.	சிறுபாணன் சென்ற பெருவழி	148
12.	மதுரைக் காஞ்சியின் காலம்	156
13.	முதுகுடுமிப் பெருவழுதி	168
14.	ஆரியப்படை கடந்த. அரசுகட்டிலில் துஞ்சிய பாண்டியன் நெடுஞ்செழியன்	172
15.	மதுரை ஆசிரியர் நல்லந்துவனார்	179
16.	சேரலாதன் அளித்த பெருஞ்சோறு - 1	182
17.	சேரலாதன் அளித்த பெருஞ்சோறு - 2	189
18.	சேரலாதன் அளித்த பெருஞ்சோறு - 3	197
19.	ஆரியப்படையும் யௌத்தெய கணமும்	201

20. கழுதை ஏர் எழவர் 209

சிலப்பதிகார ஆய்வு

21 சிலப்பதிகார ஆய்வுரை 214
22. சிலப்பதிகாரமும் பங்களரும் 223
23. இளங்கோ அடிகளின் கவிதை நயம் 229
24. பத்தினிச் செய்யுளும் கண்ணகியும் - 1 235
25. பத்தினிச் செய்யுளும் கண்ணகியும் - 2 245
26 கண்ணகியார் தெய்வமான இடம் எது? 248
27. திருமாவுண்ணி கண்ணகியா? 264
28. மாநாய்கனும் மாசாத்துவானும 277
29. தேவந்தி 283
30. மாதவி, காவிரிப்பூம்பட்டினத்தின் கள லச்செல்வி 285
31. உண்மைப் பொருள் 295
32. நகில் குறைத்தல் 303

திருக்குறள் ஆய்வு

33 மலர்மிசை ஏகினான் 314
34. அறவாழி அந்தணன் 319
35 யாரால் மழைபெய்கிறது? 323
36 ஒரு குறளுக்கு பௌத்த விரிவுரை 327
37 ஜைன மதமும் திருக்குறளும் 330
38 தேவாரத்தில் திருக்குறள் 334

NEW LIGHT ON A PANDYA KING OF THE SANGAM AGE

1. பாண்டியர் வரலாற்றில் ஒரு அரிய புதிய செய்தி

(பசும்பூண்பாண்டியன் - ஒரு புது பாண்டிய மன்னன்.)

AD 125-150

சங்க இலக்கியங்கள் வெளிவந்து பல ஆண்டுகள் ஆகின்றன. சங்க இலக்கியங்களை ஆராய்ந்து அக்காலத்து அரசர் சிற்றரசர் முதலியவர்களின் சரித்திரங்களும் எழுதப்பட்டிருக்கின்றன. சங்க காலத்துப் பாண்டியரைப் பற்றிய சரித்திரங்கள் தமிழிலும் ஆங்கிலத் திலும் எழுதப்பட்டுள்ளன.

சங்க காலத்துப் பாண்டியர்களில் இதுவரையில் அறியப்படாத புதிய பாண்டியன் ஒருவன் இப்போது கிடைத்திருக்கிறான். சரித்திரக் காரர்களும், ஆராய்ச்சிக்காரர்களும், புலவர்களும் இதுவரையில் அறியாத ஒரு பாண்டியனைப் பற்றிய அரிய புதிய செய்திகள் இப்போது எனது ஆராய்ச்சியில் கிடைத்துள்ளன.

இந்தப் புதிய பாண்டியன் பெயர் **பசும்பூண் பாண்டியன்** என்பது. இவனுடைய சேனாபதியின் பெயர், தகடூர் அதிகமான்களில் ஒருவனான **நெடுமிடல்** என்பது. இந்தப் புதிய பாண்டியனைப் பற்றிய மிகவும் அரிய செய்தி என்னவென்றால், இவன் **யானைக் கொடியைக்** கொண்டிருந்தான் என்பது. இப்பாண்டியன் இருந்த காலம் ஏறத்தாழ கி.பி125 முதல் 150 வரையில் ஆகும். இவனைப் பற்றிய வரலாற்றை விளக்கமாகக் கூறுவோம்.

பசும்பூண் பாண்டியன்

இவன் 'பசும்பூண் வழுதி' என்றுங் கூறப்படுகிறான். (நற்றிணை.358-10. வழுதி-பாண்டியன்) பசும்பூண் பாண்டியன். பசும்பூண் வழுதி என்னும் பெயர்கள் ஒரே அரசனைக் குறிக்கின்றன.

இந்தப்புதிய பசும்பூண் பாண்டியன் செங்கோல் மன்னன் என்றும் நீதிநெறியோடு அரசாண்டான் என்றும் மதுரைக்கணக்கா யனார் கூறுகின்றார்.

'மறங்கெழு தானை யரச ருள்ளும்
அறங்கடைப் பிடித்த செங்கோல் உடனமர்
மறஞ் சாய்த் தெழுந்த வலனுயர் திணிதோள்
பலர்புகழ் திருவிற் பசும்பூண் பாண்டியன்'

(அகம்.338 : 2-5)

மதுரையை யரசாண்ட பசும்பூண் பாண்டியன் பல போர்களை வென்று புகழ்படைத்தவன் என்று ஈழத்துப்பூதன் தேவனார் கூறுகிறார்.

"பொருவர்
செல்சமங் கடந்து செல்லா நல்லிசை
விசும்பிவர் வெண்குடைப் பசும்பூண் பாண்டியன்
பாடுபெறு சிறப்பிற் கூடல்."

(அகம்.231 : 10-13)

பசும்பூண் பாண்டியன் கொங்கு தேசத்தில் போர் செய்து கொங்குப் பகுதிகள் சிலவற்றைக் கைப்பற்றினான் என்றும் அவனுடைய கொங்கு வெற்றியை மதுரை மக்கள் சிறப்பாகக் கொண்டாடினார்கள் என்றும் நக்கீரனார் கூறுகிறார்.

'வாடாப் பூவிற் கொங்கர் ஒட்டி
நாடுபல தந்த பசும்பூண் பாண்டியன்
பொன்மலி கூடல் நெடுநகர் ஆடிய
இன்னிசை யார்ப்பு.'

(அகம். 253 : 4...7)

இப்பாண்டியன் காலத்தில் பாண்டி நாட்டில் மருங்கூர்ப் பட்டினம் பேர்போன துறைமுகப்பட்டினமாக இருந்தது என்பதை 'பசும்பூண்வழுதி மருங்கை' (நற். 358 : 10) என்று நக்கீரர் கூறுகிறார்.

சேனைத்தலைவன் :

கொங்கு நாட்டில் தகடூரை யரசாண்ட சிற்றரசர் அதிகமான் என்னும் குடிப்பெயரையுடையவர்கள். அதிகமான்களில் ஒருவன் பசும்பூண் பாண்டியனுடைய சேனைத் தலைவனாக இருந்தான் என்று பரணர் கூறுகிறார்.

'பசும்பூண் பாண்டியன் வினைவல் அதிகன்' (குறும். 397 : 4). (வினை-போர். வினைவல் அதிகன்-போரில் வல்ல வனான அதிகமான்.) இந்த அதிகமான். தன்னுடைய தகடூர் மலைக்கோட்டையில் பசும்பூண் பாண்டியனுடைய கொடியை ஏற்றியிருந்தான்.

'கழல் தொடி அதிகன்
கோளற அறியாப் பயங்கெழு பலவின்
வேங்கை சேர்ந்த வெற்பகம் பொலிய
வில்கெழு தானைப் பசும்பூண் பாண்டியன்
களிறணி வெல் கொடி'

(அகம்.162 : 18-22)

சேனைத் தலைவர்கள் தங்களுடைய அரசரின் கொடிகளையும் அடையாளங்களையும் தங்களுடைய ஊர்களில் ஏற்றியும் பொறித்தும் வைப்பது வழக்கம். முள்ளூரை யாண்ட சிற்றரசர்களில் ஒருவனான திருக்கண்ணன், சோழனுடைய சேனைத் தலைவனாக இருந்தான். அதனால், அவன் 'சோழிய ஏனாதி திருக்கண்ணன்' என்று பெயர் பெற்றிருந்தான். (ஏனாதி-சேனைத் தலைவன்.) அவன், தன் கோட்டை வாயிலில் சோழனுடைய அடையாளமாகிய புலியின் உருவத்தைப் பொறித்திருந்தான். (புறம்.174 : 17-18). அது போலவே, பசும்பூண் பாண்டியனுடைய சேனைத் தலைவனாகிய அதிகமான் தன்னுடைய மலைக்கோட்டையில் பாண்டியனுடைய கொடியை ஏற்றியிருந்தான் என்று கூறப்படுகிறான்.

பசும்பூண் பாண்டியனுடைய சேனைத்தலைவனாகிய அதிகமானின் சொந்தப் பெயர் நெடுமிடல் என்று தெரிகிறது. பசும்பூண் பாண்டியனுடைய பகைவர் சிலர் ஒன்றுசேர்ந்து இவனுடைய சேனைத்தலைவனாகிய அதிகமான் நெடுமிடலை ஒரு போரில் தோல்வியுறச் செய்தார்கள் என்று பரணர் கூறுகிறார்.

'யாழிசை மறுகின் நீடூர் கிழவோன்
வாய்வாள் எவ்வி ஏவல் மேவார்
நெடுமிடல் சாய்த்த பசும்பூண் பொருந்தலர்
அரிமண வாயில் உறத்தூர் ஆங்கண்
கள்ளுடைப் பெருஞ்சோற்று எல்லிமிழ் அன்ன
கவ்வை'

(அகம். 266 : 10-15)

பதிற்றுப்பத்து 4ஆம் பத்தில், களங்காய்க் கண்ணி நார்முடிச் சேரல் என்னும் சேர அரசன் நெடுமிடல் என்பவனை வென்றான் என்று கூறப்படுகிறான்

'நெடுமிடல்சாயக் கொடுமிடல் துமியப்
பெருமலை யானையொடு புலங்கெட இறுத்து.'

(4 ஆம் பத்து. 2:10-11)

இதன் பழைய உரை 'நெடுமிடல்' என்பதற்கு விளக்கங் கூறு கிறது: 'நெடுமிடல்-அஞ்சியின் இயற் பெயர்' என்று அவ்விளக்கங் கூறுகிறது. அஞ்சி என்பது தகடூர் மன்னர்களாகிய அதிகமான்களுக்கு வழங்கிய பெயர். எனவே, பதிற்றுப்பத்து கூறுகிற அதிகமான் நெடுமிடலும், மேலே அகம்.. 266 அம் பாட்டில் கூறப்பட்ட பசும்பூண் பாண்டியனுடைய சேனாபதியாகிய அதிகமான் நெடுமிடலும் ஒருவனே என்பது தெளிவாகிறது.

அதிகமான் நெடுமிடல் துளுநாட்டுப் போரில் இறந்து போனான். வட கொங்கு நாட்டின் மேற்கில் துளுநாடு இருந்தது. (இப்போதைய தென் கன்னட மாவட்டமே பழைய துளு நாடு.) அக்காலத்தில் துளுநாட்டை யரசாண்டவன் நன்னன் என்பவன். நன்னனுடைய துளு நாட்டின்மேல், பசும்பூண் பாண்டியன் போர் தொடுத்தான். இவன் தன் சேனைத் தலைவனாகிய அதிகமான் நெடுமிடலைத் துளு நாட்டுக்குப் போர் செய்ய அனுப்பினான். போர் செய்யச் சேனையுடன் சென்ற அதிகமானை, நன்னனுடைய சேனைத் தலைவனான மிஞிலி என்பவன் பாழி என்னும் ஊரில் வாகைப் பெருந்தலை என்னும் இடத்தில் எதிர்த்துப் போர் செய்தான். அந்தப் பெரும் போரில் அதிகமான் நெடுமிடல் இறந்து போனான். இச்செய்திகளைக் கீழ்க்கண்ட செய்யுள்களினால் அறிகிறோம்.

'கூகைக் கோழி வாகைப் பறந்தலைப்
பசும்பூண் பாண்டியன் வினைவல் அதிகன்
களிறொடு பட்ட ஞான்றை
ஒளிறுவாள் கொங்கர் ஆர்ப்பு'

(குறுந். 393 : 3-6)

''கறையடி யானை நன்னன் பாழி
ஊட்டரு மரபின் அஞ்சுவரு பேஎய்க்
கூட்டெதிர் கொண்ட வாய்மொழி மிஞிலி

புள்ளிற் கேம மாகி பெரும்பெயர்
வெள்ளத் தானை யதிகன் கொன்று உவந்து
ஒள்வாள் அமலை ஆடிய ஞாட்பு.''

(அகம்.142 : 9-14)

அதிகமான் நெடுமிடல் போரில் இறந்த பிறகு பசும்பூண் பாண்டியனுடைய செய்தி ஒன்றும் தெரியவில்லை.

காலம் :

பசும்பூண் பாண்டியன் காலத்தை அறியச் சில சான்றுகள் உள்ளன. களங்காய்க்கண்ணி நார்முடிச்சேரல், பசும்பூண் பாண்டிய னுடைய சேனைத்தலைவனாகிய அதிகமான் நெடுமிடலை வென்றான் என்று (பதிற்றுப்பத்து 4-ஆம் பத்து 2:10-11) கூறப்படு வதால், நார்முடிச்சேரலும், அதிகமான் நெடுமிடலும், பசும்பூண் பாண்டியனும் சமகாலத்தவர் என்று தெரிகின்றனர். களங்காய்க் கண்ணி நார்முடிச்சேரல் சேரன் செங்குட்டு வனுடைய தமயன் என்பது தெரிந்ததே. சேரன் செங்குட்டுவனும் இலங்கை யரசனான கஜபாகு வும் சமகாலத்தவர் என்பது சிலப்பதிகாரத்தினால் அறிகிறோம். கஜபாகுவும் செங்குட்டுவனும் கி.பி 2-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் இருந்தவர். எனவே செங்குட்டுவன் தமையனான களங்காய்க்கண்ணி நார்முடிச்சேரலும் பசும்பூண் பாண்டியனும் அதிகமான் நெடுமிடலும் கி.பி.2-ஆம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் இருந்தவராவர். அதாவது பசும்பூண் பாண்டியன் உத்தேசம் ஏறத்தாழ கி.பி.125 முதல் 150 வரையில் அரசாண்டான் என்று கருதலாம்.

பசும்பூண் பாண்டியனின் யானைக்கொடி :

பசும்பூண்பாண்டியனைப்பற்றி ஒரு அரிய செய்தி, (இது வரையில் ஆராய்ச்சிக்காரர் ஒருவரும் காணாத ஒரு புதிய செய்தி) கிடைத்திருக்கிறது என்று கூறினேன். அதுபற்றி இங்கு விளக்கமாகக் கூறுகிறேன்.

பாண்டியரின் அடையாளம் கயல்மீன் என்பதும் பாண்டியரின் கொடியில் கயல்மீன்களின் உருவம் எழுதப்பட்டிருந்தது என்பதும் எல்லோரும் அறிவர். பாண்டியன் ஒருவன் இமயமலையில் மீன் உருவத்தைப் பொறித்து வைத்தான் என்றும் கூறப்படுகிறான். பாண்டிய மன்னர் வழங்கிய நாணயங்களில் கயல்மீன் உருவம் பொறிக்கப்பட்டிருந்தன என்பதையும் அறிவோம்.

ஆனால், பாண்டியர் யானையின் உருவத்தைத் தங்கள் அடையாள மாகக் கொண்டிருந்தார்கள் என்பதைப் பலர் அறிந்திருக்க மாட்டார்கள். பழங்காசுகளை ஆராய்கிறவர்களும், பழங்காசுகளைச் சேகரிக்கிறவர்களும் பாண்டியரின் பழங்காசுகளில் யானையின் உருவம் பொறிக்கப்பட்டிருந்ததை அறிவார்கள். ஆனால், சங்க இலக் கியத்திலே, பாண்டியர் யானையின் அடையாளத்தைக் கொண்டிருந் தார்கள் என்பதையோ, தங்கள் கொடியில் யானையின் உருவத்தை எழுதி இருந்தார்கள் என்பதையோ இது வரையில் ஒருவரும் கண்டறியவில்லை. சங்க இலக்கியங்களில் ஒரே ஒரு இடத்தில் இச்செய்தி கூறப்படுகிறது. பசும்பூண் பாண்டியனுடைய கொடியிலே யானையின் உருவம் எழுதப்பட்டிருந்த செய்தி அச்செய்யுளில் கூறப்படு கிறது. இதைப் படித்தபோது யான் வியப்பும் மகிழ்ச்சியும் அடைந்தேன். பாண்டியருடைய பழைய செப்புக் காசுகளில் யானையின் உருவம் பொறிக்கப்பட்டிருப்பதைக் கண்டிருக்கிறேன். ஆனால், பாண்டியரின் கொடியில் யானையின் உருவம் எழுதப் பட்டிருந்ததைக் கூறுகிற செய்தியைத் தமிழ் இலக்கியங்களில் இதற்கு முன்பு ஒருவரும் கண்டதே யில்லை. ஆகவே இப்புதிய அரிய செய்தி எனக்கு வியப்பாக இருந்தது.

இந்த அரிய செய்தியைப் பரணர் என்னும் புலவர் கூறுகிறார்: காதலன் ஒருவன் தன் காதலியைப்பற்றி நினைக்கிறான். அக்காதலி, மலைமேல் வாழ்கிற தெய்வ மகள்போல அவனுடைய கருத்தில் காணப்படுகிறாள். இதைக் கூறுகிற பரணர், பசும்பூண் பாண்டிய னுடைய யானை எழுதப்பட்ட கொடி அவனுடைய சேனைத்தலை வனான அதிகமானுடைய தகடூர் மலைமேல் பறப்பதுபோல, வெண்மையான அருவிகள் பாய்கிற மலையின்மேலே வாழ்கிற தெய்வமகள் போன்ற காதலி என்று கூறுகிறார். அச்செய்யுட் பகுதி இது:

'நல்லிசை தருஉம் இரவலர்க் குள்ளிய
நசைபிழைப் பறியாக் கழல்தொடி அதிகன்
கோளற வறியாப் பயங்கெழு பலவின்
வேங்கை சேர்ந்த வெற்பகம் பொலிய
வில்கெழு தானைப் பசும்பூண் பாண்டியன்
களிறணி வெல்கொடி கடுப்பக் காண்வர
ஒளிறுவன இழிதரும் உயர்ந்துதோன் றருவி
நேர்கொள் நெடுவரை கவாஅன்
சூரர மகளிரிற் பெறற்கரி யோளே.'

(அகம்.162 : 17-25)

இதில் பசும்பூண் பாண்டியனுடைய கொடியில் யானையின் உருவம் எழுதப்பட்டிருந்தது கூறப்படுவது காண்க, 'பசும்பூண் பாண்டியன் களிறணி வெல் கொடி' என்று கூறுவது காண்க. (களிறு - ஆண் யானை. அணி-அணியப்பட்ட, எழுதப்பட்ட. வெல் கொடி-வெற்றிக்கொடி. அதாவது யானையின் உருவம் எழுதப்பட்ட கொடி). இது, இதுவரையில் எந்த ஆராய்ச்சிக்காரரும் கண்டறியாத புதிய செய்தி!

ஏறத்தாழ 3000 செய்யுட்களுடைய சங்கச் செய்யுட்களிலே, இந்த ஒரே ஒரு செய்யுளில் மட்டுந்தான் இவ்வரிய செய்தி காணப்படுகிறது!

யானைக் காசு

பாண்டிய அரசருடைய பழைய செப்புக் காசுகளில் யானையின் உருவம் பொறித்த காசுகள் உண்டு. அக்காசுகள் சதுர வடிவமாக அமைந்துள்ளன. பாண்டியரின் யானைக்காசுகள் கி.பி.300-க்கு முன்பு வழங்கப்பட்டவை என்று பழங்காசுகளை ஆராயும் ஆராய்ச்சிக்காரர்கள் கூறுகின்றனர். அக்காசுகள் இரண்டின் படத்தை இங்கு காட்டியுள்ளேன். விளிம்புகள் சிதைந்துபோன இந்தச் செப்புக்காசுகள் சதுரவடிவமானவை. (படம் ஒன்று) இதில் யானையின் உருவமும், யானைக்கு மேலேயும் எதிரிலும் கடம்ப மரம் சக்கரம் பூரண கும்பம் திரிசூலம் மழு முதலிய உருவங்களும் பொறிக்கப்பட்டுள்ளன. இதன் கீழே இருப்பது இக்காசின் பின்புறத் தோற்றம். இதில் காணப்படும் கோடுகள் மீன் உருவத்தைக் குறிக்கின்றதாகக் கருதப்படுகிறது.

(படம் இரண்டு) இதுவும் பாண்டியனுடைய செப்புக்காசு. சதுர வடிவமுள்ள இது உருச்சிதைந்து காணப்படுகிறது. இக்காசிலும் யானையின் உருவம் பொறிக்கப்பட்டிருப்பது காண்க. வேறு சில அடையாளங்களும் (அஷ்டமங்கலம்?) இதிலும் காணப்படுகின்றன. இதன் அடியில் காணப் படுவது இக்காசின் பின்புறத் தோற்றமாகும். இதில் காணப்படுகிற கோடுகள் பாண்டியனுடைய மீனைக் குறிப்பிடுவதாகக் கருதப்படுகிறது.

பாண்டியருடைய பழைய காசுகளில் யானையின் உருவம் பொறிக்கப் பட்டிருப்பது பாண்டியர் பழங்காலத்தில் யானையின் உருவத்தையும் தங்கள் அடையாளமாகக் கொண்டிருந்தார்கள் என்பதைத் தெரிவிக்கின்றது. இதற்குச்சான்று கூறுவதுபோல, மேலே காட்டப்பட்ட பரணரின் அகப் பாட்டும் (162-ஆம் பாட்டு) பசும் பூண்பாண்டியன் தன்கொடியில் யானையின் உருவத்தை எழுதி யிருந்தான் என்பதைத் தெரிவிக்கின்றது. இது பாண்டியர் சரித்திர ஆராய்ச்சியில் ஒரு புதிய செய்தியல்லவா?

முடிவுரை

கோவலனைத் தவறாகக் கொன்ற பாண்டியன் நெடுஞ் செழியன். (அரசுகட்டிலிற்றுஞ்சிய பாண்டியன் நெடுஞ்செழியன்.) சேரன் செங்குட்டுவன் காலத்திலிருந்தவன். இப்போது புதிதாக அறியப்பட்ட இந்தப் பசும்பூண் பாண்டியன், சேரன் செங்குட்டு வனுடைய தமயனான களங்காய்க் கண்ணி நார்முடிச் சேரலின் காலத்திலிருந்தவன் என்பதை மேலே சான்று காட்டி விளக்கி யுள்ளேன். எனவே பசும்பூண் பாண்டியன், ஏறத்தாழ கி.பி.150 இல் இருந்தவன் என்று தெரிகிறான் இவன் தன் கொடியில் யானையின் உருவத்தை எழுதியிருந்தான் என்னும் புதிய செய்தியையும் அறிகிறோம்.

குறிப்பு : பதிப்பாசிரியர் அவர்கள், திரு.நடனகாசி நாதன் அவர் களிடமிருந்து நேரடியாகப் பெற்ற கட்டுரை.

2. பாண்டியர் நிறுவிய தமிழ்ச் சங்கம்

சங்க காலத்திலே, மதுரைமாநகரத்திலே பாண்டிய மன்னர் மூன்று தமிழ்ச் சங்கங்களை நிறுவித் தமிழை ஆராய்ந்தார்கள் என்று இறையனார் அகப்பொருள் உரை முதலிய நூல்கள் கூறுகின்றன. அச் சங்கங்களில் இயல், இசை, நாடகம், என்னும் முத்தமிழ்கள் ஆராயப்பட்டன. பத்துப் பாட்டு, எட்டுத் தொகை முதலிய செய்யுள்கள் கடைச் சங்கப் புலவர்களால் பாடப்பட்டன. கடைச் சங்கம் கி.பி.300-க்கு முன்பு இருந்தது என்று சரித்திரம் கூறுகிறது.

ஆனால், இக்காலத்தில் சிலர், தமிழ் வரலாற்றினையும், நாட்டு வரலாற்றினையும் நேர்மையாகவும், சரியாகவும் ஆராய்ந்து பாராமல், தமிழ்ச் சங்கம் கி.பி.5-ஆம் நூற்றாண்டில் ஏற்பட்டது என்றும், அந்தத் தமிழ்ச் சங்கத்தில் தொல்காப்பியம் தோன்றியது என்றும் கூறுகின்றனர், எழுது கின்றனர். இவ்வாறு பிழைபட்ட ஆராய்ச்சியைக் கூறுகிறவர்களில் முதன்மையானவர் அண்மையில் காலஞ்சென்ற திரு.எஸ்.வையாபுரிப் பிள்ளை அவர்கள். வையாபுரிப் பிள்ளையவர்கள் சென்னைப் பல்கலைக் கழகத்தில் தமிழாராய்ச்சித் துறைத் தலைவராக இருந்த படியால், அவர் கூறுவன எல்லாம் உண்மை என்று பாமர மக்கள் நினைக்கிறார்கள். பாமர மக்கள்மட்டும் அல்லாமல் படித்தவர்கள்கூட, ஆராய்ந்து பார்த்து உண்மை காணத் தெரியாமல், பிள்ளையவர்களின் தவறான முடிபுகளை உண்மை யானவை எனக்கொண்டு மயங்குகிறார்கள். பிள்ளையவர்கள் பதிப்பித்த நூல்கள் போற்றற் குரியவை; பழைய நூல்களைப் பதிப்பிப்பதில் அவர் வெற்றி பெற்றிருக்கிறார். ஆனால், சொந்தமாக அவர் எழுதிய நூல்களில் மெய்போலத் தோன்றுகிற பல தவறான செய்திகள் கூறப்படுகின்றன. பொறுப்பு வாய்ந்த உயர்ந்த பதவியிலிருந்துகொண்டு, அதிலும் சென்னைப் பல்கலைக் கழகம் போன்ற நிலையத்தில் தமிழ்ப் பகுதியின் தலைமைப் பீடத்தில் அமர்ந்துகொண்டு பிள்ளையவர்கள் வெளியிட்ட தவறான ஆராய்ச்சி முடிபுகளை, அசைக்க முடியாத உண்மைகள் என்று இன்றும் பலர் கருதிக்கொண்டிருப்பதில் வியப்பில்லை. அவருடைய முடிபுகள் தவறானவை என்பதை இதுவரையில் யாரும் விளக்காமல் இருப்பதுதான் வியப்பைத் தருகிறது.

வையாபுரிப்பிள்ளை அவர்கள் காலஞ்சென்றவுடனே வெளிவந்த அவருடைய 'தமிழ் மொழி, தமிழ் இலக்கிய வரலாறு' என்னும் ஆங்கில நூலிலே (**History of Tamil Language and Literature (1956) New century Book House, Madras 2.**) பல பிழைபட்ட தவறான கருத்துக்கள் கூறப்படுகின்றன. இது ஆங்கில நூலாக இருப்பதனாலே, இதனைப் படிக்கிற தமிழ் அறியாத மற்றவர்கள், இவருடைய பிழையான கருத்துக்களை உண்மையானவையென்று நம்புகிறார்கள். இவருடைய தவறான கருத்துக்கள் மேலைநாடுகளிலும் பரவி, தமிழ்மொழியைப்பற்றியும் தமிழ் இலக்கியங் களைப்பற்றியும் பிழைபடக் கருதும்படி செய்கின்றன. ஏன்? நமது நாட்டிலும் இவருடைய தவறான முடிபுகளை நம்புகிறவர்களும் பலர் உள்ளனர்.

இங்கு, பாண்டியர் நிறுவிய தமிழ்ச் சங்கத்தைப் பற்றிப் பிள்ளைய வர்கள் கூறும் கருத்தை ஆராய்வோம். இவர் ஆங்கிலத்தில் எழுதிய 'தமிழ் மொழி, தமிழ் இலக்கிய வரலாறு' என்னும் நூலிலே இவ்வாறு எழுதுகிறார்:

- வச்சிரநந்தியின் பேர்போன சங்கம் கி.பி.470-இல் நிறுவப்பட்டது. தொல்காப்பியம் இச்சங்கத்தின் முதல் வெளியீடாக வெளிப்பட்டிருக்கக் கூடும் (பக்கம் 14). கி.பி.470-இல் தமிழ் மொழியிலும் தமிழ் இலக்கியத் திலும் ஒரு முதன்மையான நிகழ்ச்சி ஏற்பட்டது. அந்நிகழ்ச்சி என்ன வென்றால், மதுரையிலே வச்சிர நந்தியின் மேற்பார்வையில் நிறுவப்பட்ட தமிழ்ச் சங்கமாகும். (பக்கம்-58) பழைய பாண்டியருக்குரிய சாசனங்களில், சின்னமனூர்ச் சிறிய செப்பேட்டுச் சாசனம் (கி.பி.10-ஆம் நூற்றாண்டு) மதுரையில் இருந்த சங்கத்தைக் கூறுகிறது தலையாலங்கானத்துப் போர் வென்ற நெடுஞ்செழியனுக்குப் பிறகு இருந்த ஒரு பாண்டியனால் மதுரைத் தமிழ்ச் சங்கம் நிறுவப்பட்டதாக இச்சாசனம் கூறுகிறது. இச்சாசனம் கூறுகிற சங்கம் வச்சிரநந்தி ஏற்படுத்திய சங்கம் ஆகும். வச்சிரநந்தி ஏற்படுத்தி சங்கம் 25 ஆண்டுகள் நிலைபெற்றிருக்கக்கூடும். (பக்கம் 59) மதுரையில் இருந்த சங்கம் என்னும் பெயரால் அழைக்கப்பட்ட மூன்று கழகங்களும் சமணர் களால் உண்டாக்கப்பட்டவை. இவை சமண சமயத்தைச் சேர்ந்த ஆசிரியர் களின் முயற்சியால் உண்டாக்கப்பட்டவை என்பதைச் சங்கம் என்னும் பெயர் ஆதரிக்கிறது. (பக்கம் 60) வச்சிர நந்தியின் சங்கத்தைப் பற்றிய தகவல்கள் கிடைக்கவில்லை. ஆனால் அச்சங்கம் ஏற்பட்ட பிறகு குறிப்பிடத்தக்க அளவு இலக்கண நூல்களும் அற நூல்களும் வெளிவந்திருப்பது அதனுடைய பெரிய வெற்றிக்குச் சான்றாக இருக்கிறது. (பக்கம் 161)-

பிள்ளையவர்கள் இவ்வாறு தமது 'தமிழ் மொழி, இலக்கிய வரலாறு' என்னும் ஆங்கில நூலிலே எழுதியிருக்கிறார். இதன் தெளிவான பொருள் என்னவென்றால் - வச்சிரநந்தி என்னும் சமணர் கி.பி.470 இல் மதுரையில் தமிழ்ச் சங்கத்தை நிறுவினார், சமணர்கள்தாம் தமிழ்ச் சங்கத்தை ஏற்படுத்தினார்கள், வச்சிரநந்தி ஏற்படுத்திய தமிழ்ச் சங்கத்தில்தான் தொல்காப்பியம் இயற்றப்பட்டது. தொல்காப்பியமும் தமிழ்ச் சங்கமும் கி.பி.5-ஆம் நூற்றாண்டில் தோன்றியவை என்பனவாம்.

இவற்றை நாம் ஆராய்வோம். சின்னமனூர்ச் செப்பேட்டை இவர் ஆதாரம் காட்டுகிறார். அச் செப்பேட்டின் செய்தி இது.

"தடம் பூதம் பணிகொண்டு
தடாகங்கள் பலதிருத்தியும்
அரும்பசிநோய் நாடகற்றி
அம்பொற்சித்ர முயரியும்
தலையாலங் கானத்திற்
றன்னொக்க விருவேந்தரைக்
கொலைவாளிற் றலைதுமித்துக்
குறைத்தலையின் கூத்தொழித்தும்
மஹாபாரதந் தமிழ்ப் படுத்தும்
மதுராபுரிச் சங்கம் வைத்தும்
மஹாராஜரும் ஸார்வ பௌமரும்
தம்மகிமண்டலங் காத்திகந்தபின்"*

வையாபுரிப் பிள்ளையவர்கள் மேற்கோள் காட்டாத இன்னொரு பண்டியனுடைய செப்பேட்டுச் சாசனமும் பாண்டிய மன்னர் மதுரையில் தமிழ்ச் சங்கம் நிறுவிய செய்தியைக் கூறுகிறது. பாண்டியன் பராந்தகன் வீரநாராயணன் எழுதிய அச்செப்பேட்டுச் சாசனத்தின் பகுதி இது:

"மண்ணதிரா வகைவென்று
தென்மதுரா புரஞ்செய்தும்
அங்கதனில் லருந்தமிழ்நற்
சங்கம் இரீஇத் தமிழ்வளர்த்தும்
ஆலங்கானத் தமர்வென்று
ஞாலங்காவல் நன்கெய்தியும்

* *S.I.I., vol. III. p. 454*

கடிநாறு கவினலங்கற்
களப்பாழர் குலங்களைந்தும்
முடிசூடி முரண்மன்னர்
எனைப்பலரு முனிகந்தபின்''*

இந்த இரண்டு செப்பேட்டுச் சாசனங்களும் பாண்டிய அரசர்களின் காலத்தில் எழுதப்பட்டவை. இச் சாசனங்கள் இரண்டும் பாண்டிய அரசர் மதுரை மாநகரத்தில் தமிழ்ச்சங்கம் வைத்து நடத்தியதைக் கூறுகின்றன. பட்டம் பகல் வெட்ட வெளிச்சம்போல் தெரிகிற இந்தச் செய்தியைப் பிள்ளையவர்கள் உள்ளங்கை நெல்லிக்கனிபோல் அறிந்திருக்க வேண்டும். ஆனால், தெரிந்தோ, தெரியாமலோ மதுரைத் தமிழ்ச் சங்கத்தை நிறுவியவர் சமணர் என்று கூறுகிறார். இந்தச் சாசனங்களிலே, வச்சிர நந்தியோ வேறு சமணர்களோ தமிழ்ச் சங்கம் வைத்ததாகக் கூறவில்லை; பாண்டிய மன்னர் தமிழ்ச்சங்கம் வைத்து நடத்தியதாகத்தான் கூறுகின்றன. பிள்ளையவர்கள், பாண்டியரின் தமிழ்ச் சங்கத்தோடு, வச்சிரநந்தியின் திராவிட சங்கத்தை இணைத்துப்பிணைத்து முடிபோடுகிறார். சாசனங்களிலும் பழைய நூல்களிலும் கூறப்படுகிறபடி பாண்டியர்கள் சங்கம் வைத்துத் தமிழாராய்ந் தார்கள் என்னும் செய்தியை அடியோடு மறைத்துவிடுகிறார். வச்சிர நந்தியின் திராவிட சங்கம் வேறு, பாண்டியரின் தமிழ்ச்சங்கம் வேறு என்பதை அறியாமல் இரண்டும் ஒரே சங்கம் என்று காரணம் கூறாமல், சான்று காட்டாமல் எழுதுகிறார். இது பிள்ளையவர்கள் செய்த முதல் தவறு. இனி, மேலே செல்வோம்.

வச்சிரநந்தி என்பவர் விக்கிரம ஆண்டு 526-இல் (கி.பி.470) மதுரையில் திரமிள சங்கத்தை ஏற்படுத்தினார் என்று தேவசேனர் என்னும் சமண ஆசிரியர் தமது தர்சனசாரம் என்னும் நூலில் எழுதியிருக்கிறார். இந்தச் சான்றைக் காட்டி வையாபுரிப் பிள்ளையவர்கள் வச்சிரநந்தியின் திரமிள சங்கந்தான் பாண்டியரின் தமிழ்ச் சங்கம் என்று கூறுகிறார். இந்தச் செய்தியில் பாண்டியரின் தமிழ்ச் சங்கமும் வச்சிரநந்தியின் திரமிள சங்கமும் ஒன்று என்று கூறப்படவில்லை. பிள்ளையவர்கள் தாமாகவே இட்டுக்கட்டிக் கூறுகிறார். இனி, வச்சிரநந்தியின் திரமிள சங்கம் யாது என்பதை ஆராய்வோம்.

* சாசனச் செய்யுள் மஞ்சரி, பக். 149

வச்சிரநந்தி சமண சமயத்தைச் சேர்ந்த முனிவர். இவர் மதுரையிலே திரமிள சங்கத்தை ஏற்படுத்தினார். திரமிளம் என்றாலும் திராவிடம் என்றாலும் ஒன்றே. இவற்றின் பொருள் தமிழ் என்பது. திரமிள சங்கம் என்றால் தமிழ்ச் சங்கம் என்பது பொருள். ஆனால், வச்சிரநந்தி ஏற்படுத்திய தமிழ்ச் சங்கம் தமிழ் மொழியை ஆராயும் சங்கம் அன்று; தமிழ்ச் சங்கம் அன்று; தமிழச் சங்கம், சமண சமய சம்பந்தமான சங்கம். அதாவது, சமண சமயத்தைப் பரப்புவதற்காக ஏற்படுத்தப்பட்ட சங்கம்.

சமணத் துறவிகள் அந்தக் காலத்தில் பெருங் கூட்டமாக இருந்தனர். சமண முனிவர்களின் கூட்டத்திற்குச் சங்கம் என்பது பெயர். பௌத்த பிட்சுக்களின் கூட்டத்திற்கும் சங்கம் என்பது பெயர். சமண முனிவரின் சங்கங்கள் (கூட்டங்கள்) நான்கு பெரும் பிரிவுகளாகவும், பல உட்பிரிவு களாகவும் அக்காலத்தில் பிரிக்கப்பட்டிருந்தன. நான்கு பெரும் பிரிவுகள் நந்தி கணம், சேன கணம், சிம்ம கணம், தேவ கணம் என்பன. (கணம்=சங்கம்). இந்நான்கு கணங்களில் நந்தி கணம் பேர்போனது. திரமிள சங்கத்தை ஏற்படுத்திய வச்சிரநந்தியும் நந்தி கணத்தைச் சேர்ந்தவரே. நந்தி கணத்தில் சமண முனிவர் கூட்டம் அதிகமாகப் பெருகிவிட்டபடியினாலே, வச்சிரநந்தி ஆசாரியர், அந்தக் கணத்தை இரண்டாகப் பிரித்து ஒரு பிரிவுக்குப் பழைய நந்திச் சங்கம் என்றும், மற்றொரு பிரிவுக்குத் திரமிள சங்கம் என்றும் பெயர் கொடுத்தார் என்பது சமண சமய வரலாறு. தமிழ் முனிவர்கள் அதிகமாக இருந்த படியினாலே திரமிள சங்கம் என்று பெயர் சூட்டினார்.

நந்தி சங்கத்தின் பிரிவுதான் திரமிள சங்கம் என்பதற்குக் கன்னட தேசத்தில் உள்ள ஒரு சாசனச் செய்யுள் சான்றாக இருக்கிறது. அச் செய்யுள் இது:-

> **"ஸ்ரீமத் திரமிள ஸங்கேஸ்மிம் நந்தி**
> **ஸங்கேஸ்தி அருங்களா!**
> **அன்வயோ பாதி நிஸ்ஸேஷ ஸாஸ்த்ர**
> **வராஹி பாரஹைஹி!!"**

இந்தச் சுலோகத்திலே நந்தி சங்கத்தோடு கூடிய திரமிள சங்கத்து அருங்கலான்வயம் என்னும் பிரிவு கூறப்படுதல் காண்க.

எனவே, சமண முனிவராகிய வச்சிர நந்தி மதுரையில் திரமிள சங்கத்தை நிறுவினார் என்றால், சமண முனிவரின் திராவிட சங்கத்தை நிறுவினார் என்பது பொருளாகும் அதாவது மத சம்பந்தமாக சமண

முனிவரின் தமிழ்ச் சங்கத்தை ஏற்படுத்தினார் என்பது பொருள். வச்சிர நந்தி ஏற்படுத்திய தமிழச் சங்கம் தமிழ் மொழியை ஆராய்வதற்காக ஏற்பட்ட சங்கம் அன்று. சமண சமயத்தைப் பரப்புவதற்காக ஏற்படுத்தப்பட்ட சங்கம் ஆகும்.

இதை அறியாமல் வையாபுரிப் பிள்ளையவர்கள், வச்சிரநந்தியின் தமிழ்ச் சங்கமும் பாண்டியரின் தமிழ்ச் சங்கமும் ஒன்றே என்று கூறுகிறார். முதற் கோணல் முற்றுங் கோணல் என்பது பழமொழி. வச்சிரநந்தியின் சமண முனிவர் சங்கமும், பாண்டியரின் தமிழ் ஆராய்ச்சிச் சங்கமும் ஒன்றே என்று தவறான முடிவு கொண்ட பிள்ளையவர்கள், கி.பி.470-இல்தான் தமிழ்ச் சங்கம் ஏற்பட்டது என்றும் இந்தச் சங்கத்தில்தான் தொல்காப்பியம் தோன்றியது என்றும் கூறி மற்றும் பல தவறான முடிவுகளைக் கூறுகிறார்.

கடுந் துறவிகளாகிய சமண முனிவர்கள்-சிற்றின்பத்தையும், கொலை களையும் கடுமையாக வெறுக்கிற சமண முனிவர்கள்-தமிழ்ச் சங்கம் வைத்துக்கொண்டு காதற் செய்திகளையும், போர்ச் செய்திகளையும் கூறுகிற அகநானூறு, நற்றிணை நானூறு, புறநானூறு, முதலிய செய்யுள்களை ஆராய்ந்தனர், இயற்றினர் என்று கூறுவது எவ்வளவு அசம்பாவிதம்! முற்றத் துறந்த சமண முனிவர்கள் இசையையும் நாடகத்தையும் ஆராய்ந்தனர் என்று கூறுவது எவ்வளவு முரண்பட்ட செய்தி! சங்கம் என்னும் சொல்லை வைத்துக் கொண்டு அவற்றின் உண்மைப் பொருளை ஆராயாமல் வெவ்வேறு காலத்திலிருந்த வெவ்வேறு நோக்கமுடைய சங்கங்களை ஒன்றாக இணைத்து முடிபோடுவது என்ன ஆராய்ச்சியோ!

வச்சிரநந்தி மதுரையில் ஏற்படுத்திய திரமிள சங்கம் (சமண முனிவர் சங்கம்) மதுரையைச் சூழ்ந்துள்ள எட்டுக் குன்றங்களில் நிலைத்து, ''எண்பெருங் குன்றத்து எண்ணாயிரம் சமணர்க''ளாகப் பெருகியது. அந்தச் சமண சங்கம் பாண்டிய நாட்டில் சமண சமயத்தைச் செழிக்கச் செய்தது. அதனால் பிற்காலத்திலே சைவ நாயன்மார்களும், வைணவ ஆழ்வார்களும் தோன்றி, சமண சமயத்துடன் சமயப் போர் நிகழ்த்தினர். இச்செய்தியைப் பெரிய புராணம் முதலிய நூல்களில் காண்கிறோம். எனவே, வையாபுரிப் பிள்ளை கூறுகிறபடி, வச்சிரநந்தி உண்டாக்கிய திரமிள சங்கமும் பாண்டியர் நிறுவிய தமிழ்ச் சங்கமும் ஒன்றல்ல, வெவ்வேறு சங்கங்கள் ஆகும். அவை வெவ்வேறு காலங்களில் வெவ்வேறு நோக்கத்துடன் வெவ்வேறு ஆட்களால்

உண்டாக்கப்பட்டவை. இரண்டையும் ஒன்றாகப் பொருத்திக் கூறுவது தவறாகும்.

பாண்டியர் ஏற்படுத்திய தமிழ்ச் சங்கம் கி.பி 300-க்குப் பிறகு இருந்திருக்க முடியாது. கி.பி.300-க்கு முன்புதான் பாண்டியரின் தமிழ்ச் சங்கங்கள் இருந்திருக்கவேண்டும். இதனைத் தமிழ் நாட்டு அரசியல் வரலாற்றைக்கொண்டு அறியலாம். ஏறக்குறைய கி.பி.300-இல் களபரர் என்னும் அரசர் தமிழ் நாட்டிற்கு வந்து, சேர, சோழ, பாண்டியம் ஆகிய தமிழ் நாடு முழுவதையும் கைப்பற்றிக் கொண்டார்கள் இந்தக் களபரர் தமிழகத்திற்கு அப்பாலிருந்து வந்தவர்கள். களபரர் தமிழகத்தைக் கைப் பற்றிய பிறகு சேர, சோழ, பாண்டிய மன்னர் களபரருக்குக் கீழ் அடங்கி யிருந்தார்கள். களபரரின் ஆட்சி ஏறக்குறைய 300 ஆண்டுகள் தமிழகத்தில் இருந்தது. பிறகு ஏறக்குறைய கி.பி.600-இல், கடுங்கோன் என்னும் பாண்டியன் களபரரை வென்று பாண்டிய நாட்டை மீட்டுக்கொண்டான். ஏறக்குறைய அதே காலத்தில், தொண்டை நாட்டிலிருந்த சிம்ம விஷ்ணு என்னும் பல்லவ அரசன் களபரரை வென்று சோழநாட்டைக் கைப்பற்றிக் கொண்டான். அப்போது, களபரருக்குக் கீழ் அடங்கியிருந்த சோழர், பல்லவர்களுக்குக்கீழ் அடங்கவேண்டியதாயிற்று. ஏறக்குறைய அதே காலத்தில் சேர நாடும் களபரர் ஆட்சியிலிருந்து சுயேச்சையடைந்தது. களபரர் ஆட்சிக் காலத்தில் தான் வச்சிரநந்தி கி.பி.470-இல் திராவிட சங்கத்தை ஏற்படுத்தினார். களபரர்கள் சமண, பௌத்தச் சமயங்களை ஆதரித்தவர்கள். அவர்கள் தமிழ் மொழியை ஆதரித்ததாகத் தெரியவில்லை. கி.பி.470-இல் அரசாண்ட களபர அரசன் அச்சுத விக்கந்தன் என்பவன். எனவே, பாண்டியரின் தமிழ்ச் சங்கம் கி.பி.300-க்கும் 600-க்கும் இடைப்பட்ட காலத்தில் ஏற்பட்டிருக்க முடியாது. கி.பி.300-க்கு முற்பட்ட காலத்திலேதான் ஏற்பட்டிருக்க முடியும். கி.பி.600-க்குப் பிறகு பாண்டியர் தமிழ்ச் சங்கத்தை ஏற்படுத்தியிருக்க முடியாது. ஏனென்றால் கி.பி 630-இல் வாழ்ந்திருந்த திருநாவுக்கரசு சுவாமிகள் தமது தேவாரப் பதிகத்திலே தமிழ்ச் சங்கம் நீண்ட காலத்துக்கு முன்பு இருந்ததாகக் கூறுகிறார். எனவே, கி.பி.470-இல் களபரர் ஆட்சிக் காலத்தில் வச்சிரநந்தி ஏற்படுத்திய சங்கம் தமிழ் ஆராய்ச்சிச் சங்கம் அன்று. அது சமண சமயம் பற்றிய சமண முனிவர்களின் சங்கமாகும். இந்த விதத்திலும் வையாபுரிப் பிள்ளையின் கருத்துத் தவறாகிறது.

இதுகாறும் ஆராய்ந்ததிலிருந்து தெரிகிறது என்னவென்றால், வையா புரிப் பிள்ளையவர்கள், பொருளைத் தவறாகக் கருதிக்கொண்டு பொருந்தாத

காரணங்களைப் பொருத்திக் காட்டியிருக்கிறார் என்பதும், அவருடைய முடிபுகள் தவறானவை என்பதும் ஆகும். வச்சிரநந்தியின் திராவிட சங்கம் வேறு, பாண்டியரின் தமிழ்ச் சங்கம் வேறு என்பது இங்கு நன்கு விளக்கப் பட்டது. பாண்டியரின் சங்கம் கி.பி.300-க்கு முன்பு இருந்திருக்க வேண்டும் என்பதும் விளக்கப்பட்டுள்ளது.

வையாபுரிப் பிள்ளை பாண்டியரின் தமிழ்ச் சங்கத்தைப்பற்றிக் கூறுகிற இன்னொரு செய்தியையும் ஆராய்வோம். தலையாலங்கானத்துச் செரு வென்ற பாண்டியன் நெடுஞ்செழியனுடைய காலத்துக்குப் பிறகுதான் மதுரையில் தமிழ்ச் சங்கம் ஒரு பாண்டியனால் நிறுவப்பட்டது என்று சின்னமனூர்ச் செப்பேட்டுச் சாசனம் கூறுகிறது என்பதைப் பிள்ளை அவர்கள் எடுத்துக்காட்டுகிறார்கள் (பக்.59). உண்மைதான். மேலே நாம் காட்டியுள்ள சின்னமனூர்ச்ச சாசனப் பகுதி, பிள்ளையவர்கள் சுட்டிக் காட்டியதுபோல, பாண்டியன் நெடுஞ்செழியனுக்குப் பிறகுதான் தமிழ்ச் சங்கம் நிறுவப் பட்டதாகக் கூறுகிறது. அச்சாசனப் பகுதிக்குக் கீழே நாம் காட்டியுள்ள பாண்டியனுடைய மற்றொரு செப்பேட்டுச் சாசனப் பகுதி அதற்கு மாறாகக் கூறுகிறது. தமிழ்ச் சங்கம் ஏற்பட்ட காலத்திற்குப் பிறகு பாண்டியன் நெடுஞ்செழியன் இருந்ததாக இச்சாசனம் கூறுகிறது. ஆகவே, பிள்ளைய வர்கள் கூறுவதுபோல நெடுஞ்செழியனுக்குப் பிறகுதான் பாண்டியரின் தமிழ்ச் சங்கம் ஏற்பட்டதென்பது தவறாகிறது. இதுபற்றி விளக்கமாக எழுதினால் இக்கட்டுரை பெருகிவிரியும். ஆகையினாலே, இதுபற்றித் தனியாக எழுதுவோம். ஒன்றைமட்டும் கூறுவோம். பாண்டியன் நெடுஞ் செழியன், கடைச் சங்க காலத்திலே, தமிழ்ச் சங்கம் நடைபெற்றுக் கொண்டிருந்த காலத்திலே இருந்தவன் என்பது உறுதி. நெடுஞ்செழியன் காலத்துக்குப் பிறகுதான் தமிழ்ச் சங்கம் ஏற்பட்டது என்று கூறுவது தவறு என்பதைக் கூறிக்கொண்டு இதனை முடிக்கிறேன். பிள்ளையவர்களின் ஏனைய ஆராய்ச்சிகளைப் பற்றிப் பின்னர் எழுதுவோம்.

கலைக்கதிர் - சூன் 1959

3. சங்ககாலத்து வாணிகம்

(இக்கட்டுரை தமிழ் நாட்டின் பண்டைக்கால வாணிப வரலாற்றை ஆராய்கிறது. பண்டைத்தமிழர் கி.பி.முதல் நூற்றாண்டிலேயே கீழ் நாடுகளோடும் மேல் நாடுகளோடும் வாணிபம் செய்துள்ளனர். இதற்கு உள்நாட்டு இலக்கிய, அகழ்வாராய்ச்சிச் சான்றுகள் உள்ளன. அவ்வாறே

அயல்நாட்டுச்சான்றுகளும் உள்ளன. இக்கட்டுரையில் இலக்கியச் சான்று களை முதன்மையாகக் கொண்டு தமிழர்வாணிப வரலாற்றைக் கட்டுரை ஆசிரியர் ஆராய்கிறார்.

அக்காலத்தில் வாணிப நிறுவனமுறை, காசு வினியோகம், செய்பொருள் உற்பத்தி முதலியன எவ்வாறிருந்தன என்பது இனி ஆராயப்பட வேண்டிய பிரச்சினைகள் - 'ஆராய்ச்சி' இதழ் ஆசிரியர்)

சங்க காலத்துத் தமிழகம் கிழக்கு மேற்கு தெற்கு ஆகிய மூன்று பக்கங்களிலும் நீண்ட கடறகரையைக் கொண்டிருந்தது. கிழக்கே குணகடலும் (வங்காளக் குடாக்கடல்) மேற்கே குடகடலும் (அரபிக்கடலும்) தெற்கே குமரிக்கடலும் (இந்துமகாசமுத்திரம்) தமிழகத்தைச் சூழ்ந்திருந்தன. மேற்குக் கடற்கரை பக்கமாக இருந்த சேரநாடு மிகபிற்காலத்தில், 500 ஆண்டுகளுக்கு முன்பு மலையாளம் பேசப்படுகிற நாடாகப் பிரிந்து இப்போது கேரளம் என்று பெயர் பெற்றிருக்கிறது. கேரளம் மலையாளம் பேசப்படுகிற நாடாக மாறுவதற்கு முன்பு நெடுங்காலமாகச் சேரநாடு என்று பெயர்பெற்று தமிழ் நாடாக இருந்தது.

சங்ககாலத் தமிழகம் என்பது கி.பி.250-க்கு முற்பட்டது. மூன்று பக்கங்களிலும் கடல் சூழ்ந்திருந்தபடியால் தமிழர் மரக்கலம் ஏறிக்கடலில் பிரயாணம் செய்வதற்கு வாய்ப்பாக இருந்தது. கடற்கரையோரத்து நிலங்களுக்கு அக்காலத்தில் நெய்தல் நிலம் என்று பெயர் வழங்கிற்று. நெய்தல் நிலங்களில் வாழ்ந்துவந்த மக்களுக்குப் பரதவர் அல்லது பட்டினவர் என்பது பெயர். பரதவர் என்னும் பெயர் பிற்காலத்தில் சிதைந்து பரவர் என்று வழங்கப்படுகிறது. நெய்தல் நிலம் மணல் பரந்துள்ளபடியால் அதைத் தொல்காப்பியம் 'பெருமணல் உலகம்' என்று கூறுகிறது. பெருமணல் உலகமாகிய நெய்தல் நிலத்தில் நெல் முதலிய தானியங்கள் விளைவதில்லை. ஆகவே அங்கிருந்தவர்கள் கடலில் சென்று மீன் பிடித்துவந்து உயிர் வாழ்ந்தார்கள். கட்டுமரங்களிலும் அம்பி (தோணி)களிலும் கடலில் சென்று வலைவீசி மீன் பிடித்து வந்தார்கள். அவர்களுடைய சந்ததியார் இப்போதும் கட்டுமரங்களிலும் படகுகளிலும் கடலில் சென்று மீன்பிடித்து வருகிறார்கள்.

பரதவரும் பட்டினவரும் அல்லாத வேறு தமிழர், நாவாய்கள் வைத்து அயல் நாடுகளுடன் கடல்வழியாக வாணிபம் செய்தார்கள். அவர்கள் பெரிய பாய்க்கப்பல்களிலே சாக்குகளை ஏற்றிக்கொண்டு அயல்நாடுகளுக்குச் சென்று வாணிபஞ் செய்தனர். தமிழரின் கடல் வாணிபம் மிகத்தொன்மை

யானது. தொல்காப்பிய நூலினால் கப்பல் வாணிகக்குறிப்பு காணப்படுகிறது. கடலில் செல்லுகிறவர்கள் தங்களோடு மகளிரை அழைத்து கொண்டுபோகிற வழக்கம் தமிழருக்கு இல்லை என்று அந்நூல் கூறுகிறது.

'முந்நீர் வழக்கம் மகடூஉவோடு இல்லை'

என்பது தொல்காப்பிய சூத்திரம். (பொருளதிகாரம், அகத்திணையியல் -37.) (முந்நீர்-கடல். மகடூஉ-மகளிர் பெண்கள்.)

இதனால், தமிழ்நாட்டுக் கடல் வாணிகம் தொல்காப்பியர் காலத்துக்கு முன்பிருந்து நடந்துவருகிறது என்பது தெரிகின்றது. தமிழரின் கடல் வாணிகத்தைக் கிழக்குக்கடல் வாணிகம் என்றும் மேற்குக்கடல் வாணிகம் என்றும் இரண்டு பிரிவாகப் பிரிக்கலாம். தெற்கே குமரிக்கடலுக்கு (இந்து மகாசமுத்திரத்துக்கு) அப்பால் நிலம் இல்லாதபடியால் தெற்குக்கடலில் வாணிகம் நடக்கவில்லை. கிழக்குக் கடல்வாணிகம் என்பது, குணக்குக் கடலாகிய வங்காளக்குடாக்கடலில் உள்ள இலங்கை ஆந்திரம் கலிங்கம் வங்காளம் காழகம் (பர்மா) சாவகம் (கிழக்கிந்திய தீவுகள் எனப்படும் இந்தோனேசியா) முதலிய நாடுகளுடன் செய்யப்பட்ட வாணிகம். மேற்குக் கடல் வாணிகம் என்பது குடகுக்கடலாகிய அரபிக்கடலில் செய்யப்பட்ட வாணிகம். அங்கு முக்கியமாக கிரேக்க, ரோம, எகிப்து தேசத்து யவனர்களுடனும் அரபிநாட்டு அராபியருடனும் வாணிகம் நடந்தது. இந்தவாணிகங்களைப்பற்றி விளக்கிக் கூறுவோம்.

கிழக்குக் கடல் வாணிகம்:-

முதலில் கிழக்குக்கடல் வாணிகத்தைப் பற்றிக் கூறுவோம். தமிழர்களின் வாணிகக் கப்பல்கள் மரப்பலகைகளில் இரும்பு ஆணி அடித்து இணைக்கப்படாமல் பனைநார் தென்னைநாரினால் இணைத்துக் கட்டப் பட்டிருந்தன. அராபியரின் தோணிகளும் அக்காலத்தில் ஆணி இல்லாமல் நாரினால் கட்டப்பட்டிருந்தன. இந்தக்கப்பல்களில் பாய்மரங்களில் துணிப்பாய்கள் கட்டப்பட்டிருந்தபடியால் காற்றினால் தள்ளப்பட்டு நினைத்த இடங்களுக்குச் சென்றன. இந்தப் பாய்க் கப்பல்களில் தமிழ்வாணிகர் சரக்குகளை ஏற்றிக்கொண்டு அயல்நாடுகளுக்குக் கொண்டுபோய் விற்று, அங்குள்ள சரக்குகளை ஏற்றிக்கொண்டு தமிழகத்துக்குக் கொண்டு வந்தார்கள். ஆதிகாலத்தில் கப்பல் வாணிகர்களில் நெடுந்தூரஞ் செல்லாமல் கரையோரமாகவே சென்று வாணிகம் செய்தார்கள். தமிழகத்துக்கு கிழக்கே

கடலுக்கப்பால் பெருந்தூரத்திலிருந்த காழகம் (பர்மா) மலயம் (மலயா) சாவகம் (கிழக்கிந்தியத் தீவுகள்) முதலிய தூரதேசங்களுக்குக் கரையோர மாகச் சுற்றிக்கொண்டு போவதற்குக் காலதாமதமும் பொருட்செலவும் கஷ்டமுமாக இருந்தது பல ஆயிர மைல் தூரம் சுற்றிக்கொண்டு போக வேண்டியதாக இருந்தது. தமிழகத்துக்கு நேர்கிழக்கே அக்கரை நாடாக உள்ள கடாரம் சாவகம் முதலிய நாடுகளுக்கு நடுக்கடலின் ஊடே நேர்கிழக்காகச் சென்றால் பிரயாணத்தூரமும் காலமும் சுருங்கும். இதனையறிந்த அக்காலத்துத் தமிழர் தமிழகத்திலிருந்து நேர்கிழக்கே நடுக்கடலில் பிரயாணஞ்செய்ய முயன்றார்கள்.

முதல்முதலாகக் கடலைக் குறுக்காகக் கடந்து சென்றவன் ஒரு சோழமன்னன் என்று தெரிகிறது. அந்தச் சோழனுடைய பெயர் தெரிய வில்லை. அவன் கரிகாற்சோழனுடைய முன்னோன் என்று கூறப்படுகிறான் அந்த முன்னோனாகிய சோழன் கரிகாலனின் காலத்துக்கு முன்னே எத்தனை தலைமுறைக்கு முன்பு இருந்தான் என்பதும் தெரியவில்லை.

கரிகால்சோழன் வெண்ணி என்னும் ஊரில் சேர அரசனுடன் போர்செய்து வெற்றி பெற்றான். அப்போது அந்த வெண்ணியூரில் இருந்த வெண்ணிக்குயத்தியார் என்னும் புலவர் கரிகாலனுடைய வெற்றியைப் புகழ்ந்து அவனை நேரில் பாடினார். அந்தச் செய்யுளில், கரிகாலனுடைய மூதாதையான சோழன் ஒருவன் கடலில் நாவாய் ஓட்டியதைக் கூறுகிறார்.

''நளியிரு முந்நீர் நாவாய் ஓட்டி
வளி தொழில் ஆண்ட உரவோன் மருக!''

என்பது அவன் வாசம் (புறம்-66:1-2)

(முந்நீர்-கடல். நாவாய்-பாய்க்கப்பல், அல்லது கப்பற்படை. வளி-காற்று. மருகன்-பரம்பரையில் வந்தவன்.)

தமிழகத்துக்கு அருகில் தென்கிழக்கேயுள்ள சிங்களத்(இலங்கை) தீவுக்குச் சோழன் நாவாய் ஓட்டிச் சென்றான் என்று கருதுவது தவறு. ஏனென்றால், மிக அருகில் உள்ள சிங்களத்துக்குத் தமிழ்வாணிகர் வெகு காலத்துக்கு முன்னமே சென்று வாணிகம் செய்து வந்தனர். ஆகவே அந்தச் சோழன் சிங்கள நாட்டுக்கு நாவாய் ஓட்டிச்சென்றான் என்று கருதுவது கூடாது. மிக அருகிலுள்ள சிங்கள நாட்டுக்கு நாவாய் ஓட்டியிருந்தால் அதை இப்புலவர் சிறப்பாகக் கூறியிருக்கமாட்டார். அதுவும் வளிதொழில் ஆண்ட

உரவோன் என்று கூறப்படுகிறபடியால், காற்றின் உதவியை புதிதாக அறிந்து தூரதேசத்துக்கு நாவாய் ஓட்டிச்சென்றான் என்பதே சரியான பொருளாகும். வாணிகர் யாரும் இதற்கு முன்பு கப்பலோட்டிப் போகாத வழியாக இவன் போனபடியால் அதைச் சிறப்பாக இப்புலவர் பாடியுள்ளார். இந்தச் சோழன் காற்றின் உதவியால் நடுக்கடலின் ஊடே செல்லும் வழியைக்கண்ட இந்தச்சோழன் கி.மு.முதல் நூற்றாண்டில் இருந்திருக்க வேண்டும். 'வளிதொழில் ஆண்ட' இந்தச் சோழனைப்பற்றிய வரலாறு மறைந்து போனது இரங்கத்தக்கது.

காழகம் கடாரம் சாவகம் ஆகிய கிழக்குக்கோடி நாடுகளுடன் சங்ககாலத்துத் தமிழர் வாணிகஞ் செய்துவந்ததைச் சங்கநூல்களில் அறிகிறோம். முக்கியமாகச் சாவகத்தீவுகளுடன் தமிழகம் வணிகத்தொடர்பு மட்டுமல்லாமல் மத சம்பந்தமாகவும் அரசியல் சம்பந்தமாகவும் அக்காலத்திலேயே தொடர்பு கொண்டிருந்தது.

சங்ககாலத்தில் காவிரிப்பூம்பட்டினத் துறைமுக நகரத்தில் வாழ்ந் திருந்த கப்பல் வாணிகர்களில் முதன்மையானவன் மாநாய்கன் என்பவன். மாநாய்கன் பரம்பரையார் தலைமுறை தலைமுறையாகக் கடல்கடந்து கப்பல்வாணிபம் செய்துவந்தனர். சிலப்பதிகாரக்காவியத்தின் தலைவி யாகிய கண்ணகி மாநாய்கன் குடும்பத்தில் பிறந்தவள் என்று சிலப்பதிகாரம் கூறுகிறது.

"போகநீள் புகழ்மன்னும் புகார்நகர் அதுதன்னில்
மாகவான் நிகர்வண்கை மாநாய்கன் குலக் கொம்பர்"

என்று மங்கல வாழ்த்துப்பாடல் பாடுகிறது.

மாநாய்கன் என்பது அந்த வாணிகனுடைய இயற்பெயர் அன்று. அதுகுடிப்பெயர். மாநாய்கன் என்பது மாநாவிகன் என்பதன் திரிபு. நாவிகன் - கப்பல்வாணிகன். மாநாய்கன் (மாநாவிகன்) என்றால் கப்பல் வாணிகரின் தலைவன் என்பது பொருள் சோழ நாட்டுக்கப்பல் வாணிகரின் தலைவனாக இருந்தவன் மாநாய்கன்.

கோவலனுடைய முன்னோர்களும் கடலில் சென்று கப்பல்வாணிகம் செய்துவந்தனர். கோவலனுக்கு ஒன்பது தலைமுறைக்கு முன்பு இருந்த அவனுடைய பாட்டன் கிழக்குக் கடலில் சென்று கொண்டிருந்தபோது புயல்காற்றடித்துக் கப்பல் கவிழ்ந்தது. கோவலனுடைய பாட்டனான நாவிகன்

உயிர்தப்பிக் கரை சேர்வதற்காகக் கடலில் நீந்திக்கொண்டிருந்தான். கடைசியில் அவன் தெய்வச் செயலால் ஒரு தீவின் கரையையடைந்து உயிர் பிழைத்தான். மணிமேகலை என்னுந்தெய்வம் கடல்காவல் தெய்வமாக இருந்தது என்று அக்காலத்துக்கப்பல்வாணிகர் (முக்கியமாகப் பௌத்தர்கள்) அக்காலத்தில் நம்பினார்கள். மணிமேகலை தெய்வந்தான் தன்னைக் கடலில் சாகாமல் காப்பாற்றிற்று என்று கோவலனுடைய பாட்டன் நம்பினான். பிறகு, அவனுடைய பரம்பரையில் வந்த கோவலனுக்கு மாதவியிடத்தில் பெண்குழந்தை பிறந்தபோது அந்தக்குழந்தைக்குத் தன்பாட்டனைக் காப்பாற்றின மணிமேகலை தெய்வத்தின் பெயரைச் சூட்டினான் என்று சிலப்பதிகாரங் கூறுகிறது. (அடைக்கலக் காதை-அடி 21-30)

தமிழ்நாட்டுக் கிழக்குக்கரைத் துறைமுகப்பட்டினங்களிலிருந்து புறப்பட்டு 1500-மைலுக்கப்பாலுள்ள கிழக்குக்கோடி நாடுகளுக்குச் சென்ற வாணிகக்கப்பல்கள் முதலில் இலங்கைத்தீவின் வடக்கில் ஒருசிறுதீவில் இருந்த மணிபல்லவம் என்னும் துறைமுகப்பட்டினத்தில் தங்குவதுவழக்கம். தமிழர்மணிபல்லவம் என்று பெயர் கூறிய துறைமுகத்தை அக்காலத்துச் சிங்களவர் ஜம்புகொலபட்டினம் என்று பெயர்கூறினார்கள் என்பதைச் சிங்களநாட்டுப் பழைய நூல்களாகிய தீபவம்சம் மகாவம்சம் என்னும் நூல்களிருந்து அறிகிறோம். மணிபல்லவமாகிய ஜம்புகொலபட்டினம் ஏற்றுமதி இறக்குமதி நடந்தவாணிகத்துறைமுகம் அன்று. கிழக்குக்கடலில் பிரயாணஞ்செய்த வாணிகக் கப்பல்கள் அந்தத் துறைமுகத்தில் தங்கி கப்பல்பயணத்துக்குவேண்டிய குடிநீரை எடுத்துக்கொண்டு சென்றன. பிறகு, மணிபல்லவத்தைவிட்டு நேரேகிழக்கு நோக்கி நெடுந்தூரம் பிரயாணஞ் செய்து மலயநாடு, கிழக்கிந்தியத் தீவுகள் முதலியநாடுகளுக்குச் சென்றன. போகிறவழியில் நடுக்கடலில் நாகர்மலைத்தீவுகள் இருந்தன. அந்தத் தீவுகளில் வசித்தவர்கள் அநாகரிகரான காட்டுமிராண்டிகள் அவர்கள் உடையுடுத்தாமல் அம்மணமாகத் திரிந்தார்கள். அவர்களில் ஒரு இனத்தார் மனிதரைக்கொன்று நரமாமிசம் தின்றனர். அவர்களை நக்கசாரணர் என்று மணிமேகலைக் காவியங்கூறுகிறது.

நாகர்மலைத் தீவுகளில் வாணிகம் நடைபெறாதபடியால் தமிழகக் கப்பல் வாணிகரும் ஏனையகப்பல் வாணிகரும் அந்தத் தீவுகளில் தங்குவது இல்லை. சங்ககாலத்தில் நாகர்மலைத் தீவுகள் என்று பெயர்பெற்றிருந்த இந்தத் தீவுகள் பிற்காலத்தில் மாநக்கவரம் என்று பெயர் பெற்றிருந்தது. பிற்காலத்துச் சோழ அரசர்கள் மாநக்கவரத்தீவை வென்று அரசாண்டனர்

என்று சோழனுடைய செப்பேட்டுச்சாசனம் கூறுகின்றது. இப்போது அந்தத்தீவுகள் நிக்கோபார்தீவுகள் என்று பெயர் கூறப்படுகின்றன. நக்கவாரி தென்னை மரங்கள் அத்தீவுகளிலிருந்து கொண்டுவரப்பட்டவை.

சங்ககாலத்தில் காவிரிப்பூம்பட்டினத்தில் இருந்தசாதுவன் என்னும் வாணிகன் நாகர்மலைத்தீவில் தற்செயலாகச்சென்று சிலகாலங் கழிந்து தன்னுடைய நகரத்துக்குத் திரும்பிவந்ததை மணிமேகலை காவியங் கூறுகிறது. கப்பல்வாணிகனாக இருந்தசாதுவன் தன்னுடைய பெருஞ் செல்வத்தைச் சூதாடல் முதலிய தீய ஒழுக்கங்களினால் இழந்து வறுமை யடைந்தான். பிறகு அவன்தான் இழந்த செல்வங்களை மீண்டுஞ் சம்பாதிக்க எண்ணிச் சாவகநாட்டுக்குச் செல்லக் காவிரிப்பூம்பட்டினத்திலிருந்து கப்பலில் புறப்பட்டுச் சென்றான். இடைவழியில் நாகர்மலைத்தீவுகளுக்கு அருகில் சென்றுகொண்டிருந்தபோது புயல் அடித்துக் கப்பல் கவிழ்ந்தது. சாதுவன் கடலில் நீந்தி நாகர்மலைத் தீவு ஒன்றில் கரையேறினான். அவன் கடற்கரையில் களைப்பினாலும் சோர்வினாலும் உறங்கிக்கொண்டிருந்த போது நக்கசாரணர் சிலர் அவனைக் கண்டு அவனைக் கொல்ல முயன் றார்கள். சாதுவன் அவர்களுடைய பாஷையை முன்னமே அறிந்திருந்தபடி யால் அவர்களிடம் நயமாகப் பேசினான். தங்களுடைய பாஷையில் அவன் பேசுவதைக்கண்டு வியப்படைந்த அவர்கள் அவனை அழைத்துக்கொண்டு போய்த் தங்களுடைய தலைவனிடம் சேர்த்தார்கள். சாதுவன் சிலகாலம் அவர்களுடன் தங்கியிருந்தான். சிலகாலஞ் சென்றபிறகு, சாவகத் தீவு களுக்குச் சென்று வாணிகஞ்செய்து விட்டுத் திரும்பி வந்துகொண்டிருந்த சந்திரதத்தன் என்னும் வாணிகனுடைய கப்பல் அவ்வழியாக வந்தது. சாதுவன் அந்தக் கப்பலில் ஏறித் தன்னுடைய காவிரிப்பூம்பட்டினத்துக்குத் திரும்பி வந்தான். இந்தச் செய்திகளை மணிமேகலைக் காவியம் கூறுகிறது. (பிச்சையிட்ட காதை-அடி 3-16., 53-73., 125-127)

சோழநாட்டவரைப் போலவே பாண்டிநாட்டாரும் கிழக்கே வெகுதூரத்திலுள்ள சாவகத்தீவுகளுக்குச்சென்று வாணிகஞ்செய்தார்கள் என்பதை மணிமேகலை காவியத்தினால் அறிகிறோம். சாவகத் தீவுகளுக்குச் சென்று வாணிகஞ்செய்து திரும்பிவந்த சில கப்பல் வாணிகர் மதுரை நகரத்துக்கு வந்தபோது, அங்கு ஆபுத்திரன் என்பவனைக் கண்டு சாவகத்தில் மழைபெய்யாமல் பஞ்சம் ஏற்பட்டு மக்கள் உண்ண உணவு இல்லாமல் அல்லற்படுகின்றனர் என்று கூறினார்கள்.

"மாநீர் வங்கம் வந்தோர் வணங்கிச்
சாவக நாட்டுத் தண்பெயல் மறுத்தலின்
ஊனுயிர் மடிந்தது, உரவோய்"

(மணிமேகலை, பாத்திரமரபு கூறிய காதை)

இதிலிருந்து பாண்டிய நாட்டாரும் சாவக நாட்டிற்கு (கிழக்கிந்தியத் தீவுகளுக்கு) சென்று வாணிபம் செய்தனர் என்பதை அறிகிறோம்.

சாவகநாட்டு அரசனுக்கும் சோழநாட்டு அரசனுக்கும் அரசியல் தொடர்பு ஏற்பட்டிருந்தது. அந்தக் காலத்தில் சாவகநாட்டை யரசாண்ட புண்ணியராசன் சோழ அரசனான கிள்ளிவளவனுடன்-இவன் கரிகாற் சோழனுடைய மகன்-நட்புக்கொள்ள விரும்பித் தூது அனுப்பினான். அந்தத் தூதன் நாவாய் ஏறிக் காவிரிப்பூம்பட்டினத்துக்கு வந்து கிள்ளிவளவனைக் கண்டு சென்றான் என்று மணிமேகலை காவியம் கூறுகிறது.

"கிள்ளிவளவனொடு கெழுதகை வேண்டிக்
கள்ளவிழ் தாரோய்! கலத்தொடும் போகிக்
காவிரிப்படப்பை நன்னகர் புக்கேன்"

என்று அந்தத் தூதன் புண்ணியராசனிடம் கூறினான். (மணிமேகலை 25-ஆம் காதை 14-16) சாவக நாட்டுக்கும் சோழ நாட்டுக்கும் வாணிகத் தொடர்பு இருந்தபடியினால் இந்த அரசியல் தொடர்பு ஏற்பட்டது போலத் தோன்றுகிறது.

மதச்சார்பாகவும் சாவக நாட்டுக்கும் தமிழகத்திற்கும் சங்ககாலத்தில் தொடர்பு இருந்ததை மணிமேகலை காவியத்தினால் அறிகிறோம். அந்தக் காவியத்தில் சாவக நாட்டிலும் தமிழ்நாட்டிலும் பௌத்த மதம் சிறப்பாக இருந்தது. கோவலனுடைய மகளாகிய மணிமேகலை பௌத்தமதத்தைச் சேர்ந்த பிறகு ஒரு பௌத்த தெய்வத்தின் அருள் பெற்று ஆகாயவழியாகப் பறந்துபோய் சாவகநாட்டில் தங்கினாள் என்றும் அங்குச் சாவகநாட்டு மன்னன் ஒரு பௌத்தத் துறவியுடன் கண்டு பேசியதாகவும் அம்மன்னனை இலங்கையிலுள்ள மணிபல்லவத்தீவுக்கு வரச்சொல்லித்தான் ஆகாய வழியாக மணிபல்லவத்துக்குச் சென்றதாகவும் மணிமேகலை காவியங் கூறுகிறது. சாவகநாட்டு மன்னன்-நாவாய் ஏறிச் சாவகத்திலிருந்து மணிபல்ல வத்துக்கு வந்தான் என்றும் அக்காவியங்கூறுகிறது. (மணி. 24-ஆம் காதை 163-167; 25-ஆம் காதை)

மணிமேகலை ஆகாயவழியாகப் பறந்து சென்றாள் என்பது காவியப் புலவனின் கற்பனையே. அவள் மரக்கலம் ஏறிக் கடல் வழியாகச் சாவக நாட்டுக்கும் மணிபல்லவத்துக்கும் சென்றிருக்கவேண்டும் என்பதில் ஐய மில்லை. மணிமேகலை ஆகாயவழியாகப் பறந்துசென்றாள் என்று கற்பனையாக மணிமேகலை காவியங்கூறுவதற்கு இரண்டு காரணங்கள் உள்ளன. மகளிர் நாவாய் ஏறிக் கடல் பிரயாணஞ் செய்யக்கூடாது என்பது அந்தக்காலத்துச் சம்பிரதாயம். ஆகையால் அந்த வழக்கத்தை மீறி மணிமேகலை கடலில் கப்பல் ஏறிச்சென்றாள் என்று கூறுவது காவியப் புலவனுக்குப் பொருந்தாது. ஆகவே, ஆகாயமார்க்கமாகக் கடல்கடந்து சென்றாள் என்று கற்பனையாகக் கூறியதாக இருக்கலாம். இன்னொரு காரணமுங் கூறலாம். பௌத்தமதத்துத் துறவிகள் சித்திபெற்று ஆகாயமார்க்க மாகச் சஞ்சரித்தார்கள் என்பது அக்காலத்துப் பௌத்தர்களின் சமய நம்பிக்கை.

கி.மு.மூன்றாம் நூற்றாண்டில் அசோகசக்கரவர்த்தி காலத்தில் மகிந்தன் (மகேந்திரன்) என்னும் பௌத்த பிக்ஷு இலங்கைக்கு வந்து பௌத்தமதப் பிரசாரம் செய்தார் என்றும் அவரும் அவரைச் சார்ந்த பிக்ஷுக்களும் வடஇந்தியாவிலிருந்து ஆகாய வழியாகப் பறந்து வந்து இலங்கையில் இறங்கினார்கள் என்றும் மகாவம்சம், தீபவம்சம் என்னும் பௌத்தசமய நூல்கள் கூறுகின்றன. இவ்வாறு ஆகாயவழியாகப் பறந்தனர் என்று கூறுவது அக்காலத்து அந்தச் சமயத்து நம்பிக்கை. மகேந்திரனும் அவரைச்சார்ந்த பிக்ஷுக்களும் கப்பல் ஏறிக் கடல்கடந்து இலங்கைக்கு வந்தார்கள் என்றே சரித்திரக்காரர்கள் கருதுகின்றனர். ஆகாயவழியாகப் பறந்து வந்து இறங்கினார்கள் என்று கூறுவதனாலேயே அதுபொய்க்கதை என்று சரித்திரக் காரர் கருதுவதில்லை. அதுபோலவே, மணிமேகலை ஆகாயவழியாகப் பறந்துசென்றாள் என்று மணிமேகலைநூல் கூறுவதை அப்படியே முழு உண்மை என்று ஏற்றுக்கொள்ளக் கூடாது. மணிமேகலை கப்பல்ஏறி சாவக நாட்டுக்கும் மணிபல்லவத்துக்கும் சென்றாள் என்பதே உண்மையாகும்.

பௌத்த துறவிகளைப்போலவே ஜைன சமயத்துறவிகளும் ஆகாய வழியாகப் பறந்து சென்றனர் என்று ஜைனசமயத்துப் பழைய நூல்களும் கூறுகின்றன. இது மதநம்பிக்கையே தவிர உண்மை என்று கருதுவது கூடாது.

பிற்காலச் சோழ சாம்ராச்சிய காலத்தில் இராசராச சோழன் ஆட்சிக்காலத்தில் (கி.பி.985-1014), சுமத்திரா தீவையரசாண்ட ஸ்ரீமாற விசயோததுங்கவர்மன், நாகப்பட்டினத்தில் சூடாமணி விகாரை யென்னும்

பௌத்தப் பள்ளியைக் கட்டினான் என்று சோழனுடைய சாசனம் ஒன்று கூறுகிறது. *(Leiden Grant Epigraphica Indica Vol XXII)* இது கி.பி.10-ஆம் நூற்றாண்டிலும் சாவக நாட்டுக்கும் தமிழ் நாட்டுக்கும் இருந்த தொடர்பைத் தெரிவிக்கிறது.

தமிழ்நூல்கள், சாவா, சுமத்திரா, போர்னியோ, செலிபிஸ் முதலிய கிழக்கிந்திய தீவுகளைச் சாவகம் என்று கூறுகின்றனர். சங்ககாலத் தமிழர் சாவகத் தீவுகளுக்குச் சென்று வாணிகஞ் செய்து வந்ததுபோலவே, சாவக நாட்டு வாணிகரும் தமிழகத்துக்கு வந்து வாணிகஞ் செய்திருக்கக் கூடும். அக்காலத்தில் உலகப் புகழ்பெற்ற காவிரிபூம்பட்டினத்துத் துறைமுகத்தில் வெவ்வேறு பாஷைகளைப் பேசின வெவ்வேறு நாட்டுக் கப்பல்வாணிகர் வந்து தங்கினார்கள் என்று சங்கச் செய்யுள்கள் கூறுகின்றன

**''மொழிபல பெருகிய பழிதீர் தே எத்துப்
புலம்பெயர் மாக்கள் கலந்தினி துறையும்
முட்டாச் சிறப்பிற் பட்டினம்''**

(பட்டினப்பாலை -216-218) என்றும்,

**''கயவாய் மருங்கில் காண்போர்த் தடுக்கும்
பயன்அறவறியா யவனர் இருக்கையும்
கலந்தரு திருவிற புலம்பெயர் மக்கள்
கலந்தினிதுறையும் இலங்குநீர் வரைப்பும்''**

(சிலம்பு, இந்திரவிழா. 9-12)

என்றும்,

**''கலந்தரு திருவில் புலம்பெயர் மாக்கள்
வேலை வாலுகத்து விரிதிரைப் பரப்பில்
கூல மறுகிற் கொடியெடுத்து நுவலும்
மாலைச்சேரி'' (சிலம்பு, கடலாடு-130-131)**

என்று கூறுவதைக் காண்க.

சாவகத் தீவிலிருந்து கப்பல் வாணிகர் தமிழ்நாட்டைக் கடந்து, இந்துமகா சமுத்திரத்தில் ஆப்பிரிக்கா கண்டத்திற்கு கிழக்கில் உள்ள மடகாஸ்கர் தீவில்சென்று வாணிகஞ் செய்தார்கள். கி.மு.முதல் நூற்றாண்டிலேயே அவர்கள் தங்களுடைய நீண்ட குறுகலான படகுகளில்

சரக்குகளை ஏற்றிக்கொண்டு பசிபிக் மகா சமுத்திரத்தையும் இந்துமகா சமுத்திரத்தையும் கடந்து மடகாஸ்கர் தீவில் தங்கி கிழக்கு ஆப்ரிக்கா நாடுகளுடன் வாணிகஞ் செய்தார்கள். சாவக நாட்டுமக்கள் அக்காலத்திலேயே மடகாஸ்கர் தீவில் குடியேறி வாழ்ந்தார்கள். பிற் காலத்தில், ஆப்பிரிக்கா கண்டத்தின் கிழக்குக்கரை நாடுகளிலிருந்தும் ஆப்பிரிக்க மக்கள் வந்து மடகாஸ்கர் தீவில் குடியேறி அந்நாட்டவருடன் கலந்துபோனார்கள். அவர்கள் எல்லோரும் அந்நாட்டவரின் பாஷையையே பேசினார்கள். இப்போது மடகாஸ்கர் தீவு மலகாசி குடியாட்சி நாடு என்று புதுப்பெயர் பெற்றிருக்கிறது. இப்போதும் அங்குப்பேசப்படுகிற பாஷை மலகாசி பாஷையே. கி.பி.முதல் நூற்றாண்டிலேயே சாவக நாட்டு மக்கள் மடகாஸ்கர் தீவுக்கு வந்து அங்குத் தங்கள் பாஷையைப் பரப்பினார்கள் என்று மனித வரலாற்று ஆசிரியர்கள் கூறுகிறார்கள். கிழக்குக் கோடியிலுள்ள சாவகத்தீவின் வாணிகர்கள் பசிபிக்மகா சமுத்திரத்தைக்கடந்து அப்பால் இந்துமகா சமுத்திரத்தையும் கடந்து மடகாஸ்கர் தீவுக்குச்சென்றவர்கள் இடைவழியில் உள்ள தமிழ் நாட்டுக்கும்வந்து வாணிபஞ் செய்திருப்பார்கள் அன்றோ? சாவகநாட்டரசன் புண்ணியராஜன் சோழநாட்டுக்கிள்ளி வளவனிடம் தூது அனுப்பியதையும் அவ்வரசன் மணிப்பல்லவத்துக்கு போனதையும் முன்னமே அறிந்தோம். எனவே, சாவகநாட்டு வாணிகரும் தமிழ்நாட்டுத்துறைமுகங்களுக்கு வாணிகத்தின் பொருட்டு வந்திருக்கக் கூடும்.

தமிழ்நாட்டுவாணிகர் சாவகத் தீவுகளிலிருந்து கொண்டு வந்து இறக்குமதி செய்த பொருள்களைச் சிலப்பதிகார காவியம் கூறுகிறது. பாண்டி நாட்டுக் கிழக்குக் கரையில் அக்காலத்தில் இருந்த துறைமுகப்பட்டினங்களில் தொண்டிப்பட்டினமும் ஒன்று. அந்தத் தொண்டித் துறைமுகப்பட்டினம் இந்தக் காலத்தில் குக்கிராமமாக இருக்கிறது. (சங்ககாலத்தில் மேற்குக் கடற்கரையில் சேரநாட்டிலும் ஒரு தொண்டித் துறைமுகப்பட்டினம் இருந்தது. அங்குக் கிரேக்க (யவன) வாணிகர்கள் வந்து வாணிகஞ் செய்தார்கள். இங்குக் கூறப்படுகிற பாண்டி நாட்டுத்தொண்டி வேறு, அந்தத் தொண்டி வேறு) கிழக்குக்கடலில் சென்று திரும்பி வந்த நாவாய்கள் கொண்டல் காற்றின் (கொண்டல்-கிழக்குக் கடல்காற்று) உதவியினால் தொண்டித் துறை முகத்துக்கு வந்துசேர்ந்தன என்று சிலப்பதிகாரம் கூறுகிறது. மேலும் அங்கிருந்து வந்த சரக்குகளைப் பற்றியும் கூறுகிறது.

"ஓங்கிரும் பரப்பின்
வங்கஈட்டத்துத் தொண்டியோர்இட்ட
அகிலும் துகிலும் ஆரமும் வாசமும்
தொகு கருப்பூரமும் சுமந்துடன் வந்த
கொண்டலொடு புகுந்து"

(ஊர்காண்காதை, 106-110)

இதில் கூறப்பட்ட பொருள்கள் எல்லாம் சாவகத் தீவுகளுக்குரிய பொருள்கள். இந்தப் பொருள்கள் அந்தக்காலத்தில் வேறு எங்கும் கிடைக்காதவை என்பதை அறியவேண்டும்.

அகில் என்பது அகிற்கட்டை. தமிழ் நாட்டு அகிலைவிடச் சாவகநாட்டு அகில் தரத்திலும் மணத்திலும் பேர்போனது. அக்காலத்து தமிழ் மகளிர் முழுகிக்குளித்துத் தங்கள் கூந்தலை அகிற்புகையினால் உலர்த்தினார்கள். (அகிலுண விரித்த அம்மென் கூந்தல்). மேலும் தெய்வங்களுக்கும் மண முள்ள அகிலைப் புகைத்து வழிபட்டார்கள்.

துகில் என்றால் துணி என்பது பொருள். இங்கு துகில் என்பது பட்டுத்துணியைக் குறிக்கின்றது. 'துகில்-பட்டுவர்க்கம்' என்று அரும் பதவுரையாசிரியரும் அடியார்க்கு நல்லாரும் உரை எழுதியுள்ளது காண்க. அடியார்க்கு நல்லார் பட்டுத்துணிகளில் பலவகைகளைக் குறிக்கிறார். பட்டுத்துணியைச் சங்க நூல்கள் 'நூலாக்கலிங்கம்' என்று கூறுகின்றனர். அந்தக்காலத்தில் பட்டுத்துணிகள் சீனாநாடு ஒன்றிலேதான் உற்பத்தியாயின. வேறுநாடுகளில் பட்டுத்துணிகள் அக்காலத்தில் கிடையாது. சீனாதேசத்துப் பட்டுத்துணிகள் மத்திய ஆசியாவின் ஊடே தரைவழியாகப் பாரதம், எகிப்துதேசம், உரோமாபுரி முதலிய நாடுகளுக்குக் கொண்டுபோகப்பட்டன. தமிழ்நாட்டுக்கு வந்தபட்டுகள் சாவகத்தீவுகளின் வழியாகவந்தன. சீனநாட்டு வாணிகர் பட்டுத்துணிகளைக் கப்பல்களில் ஏற்றிக் கொண்டு சாவகத் தீவுகளுக்கு வந்துவிற்றார்கள். அந்தத் துணிகளைத் தமிழ்நாட்டுக் கப்பல் வணிகர் சாவகத் தீவுகளிலிருந்து வாங்கி வந்து தமிழகத்தில் விற்றார்கள்.

ஆரம் என்பது சந்தனக்கட்டை. தமிழ் நாட்டிலேயே ஆரமும் அகிலும் உண்டாயின. 'குடமலைப்பிறந்த ஆரமும் அகிலும்' என்று பட்டினப்பாலை (188) கூறுகிறது. ஆனால், சாவகநாட்டுச் சந்தனம் மண்வளமுடைய தாகையால் மணத்திலும் தரத்திலும் உயர்ந்திருந்தது. ஆகவே, சாவகநாட்டுச் சந்தனமும் இறக்குமதியாயின.

வாசம் என்பது மணமுள்ள வாசனைப் பொருள்கள். ஆங்கிலத்தில் ஸ்பைஸ் (*Spice*) என்று கூறப்படும். அவை தக்கோலம், சாதிக்காய், இலவங்கம் (கிராம்பு), குங்குமப்பூ, கஸ்தூரி, புழுகு (புனுகு) முதலியவை இந்த வாசப்பொருள்கள் எல்லாம் அந்தகாலத்தில் சாவகத் தீவில் மட்டுமே கிடைத்தன. வேறு நாடுகளில் கிடைக்கவில்லை.

கறுப்பூரமும் சாவகநாட்டுச் செலுபீஸ் தீவில் உண்டாயிற்று. அது அக்காலத்தில் மிகப் புகழ் பெற்றது.

இந்தப்பொருள்கள் எல்லாம் தமிழகத்தில் இறக்குமதி செய்யப்பட்டன என்று கூறுகிறபடியினாலே கிழக்கிந்தியத் தீவுகளுடன் சங்ககாலத்துத் தமிழர் வாணிகத் தொடர்பு கொண்டிருந்தார்கள் என்பது திண்ணமாகத் தெரிகின்றது.

பவழமும் கிழக்குக்கடல் தீவுகளிலிருந்து தமிழகத்துக்கு வந்தது. 'குணகடல் துகிரும்' என்று பட்டினப்பாலை (189) கூறுவது காண்க. பவழ மணிகள் கிழக்குக் கடல்தீவுகளிலிருந்து கிடைத்ததுபோலவே, மத்தியதரைக் கடலில் இருந்தும் கிடைத்தன. அவற்றை யவன வாணிகர் கொண்டு வந்தனர்.

சாவகத் தீவுகளுக்கு அருகில் வடக்கேயுள்ள காழகம், கடாரம் மலயம் முதலிய நாடுகளுடனும் தமிழர்வாணிகம் செய்தனர். 'காழகத்து ஆக்கம்' என்று பட்டினப்பாலை கூறுகிறபடியால் (191) காழகத்துப் பொருள்களும் தமிழகத்துக்கு கொண்டுவரப்பட்டன என்பது தெரிகின்றது.

தமிழகத்துக்கு வடக்கேயுள்ள கிழக்குக் கடல் துறைமுகப் பட்டினங் களிலும் தமிழர் வாணிகஞ்செய்தார்கள். வடக்கே வங்காளத்தில் கங்கை யாற்றுத் துறைமுகத்துடனும் அவர்கள் வாணிகம் செய்தார்கள். 'வடமலைப் பிறந்த பொன்னும் மணியும்' 'கங்கை வாரியும்' என்று பட்டினப்பாலைக் கூறுகிறது. கலிங்கம், ஆந்திரம் என்னும் நாடுகளின் துறைமுகங்களிலும் தமிழர் கப்பல் வாணிகஞ்செய்தார்கள். சந்தனம் உரைக்கிற சந்தனக்கல் (வடவர் தந்த வான்கேழ்வட்டம்) இந்நாடுகளிலிருந்து தமிழகத்துக்கு வந்தன.

இவ்வாறு கிழக்குக்கடலில் சென்று கப்பல் வாணிகஞ் செய்த சங்ககாலத்துத் தமிழர் தங்கள் நாட்டுக்கு அருகில் உள்ள சிங்கள (இலங்கை) நாட்டிலும் வாணிகம் செய்தனர் என்று சொல்லாமலே விளங்கும். அந்த காலத்தில் ஈழநாடு உணவுப்பெருக்கமுள்ள நாடாக இருந்தது. ''ஈழத்து உணவு'' இறக்குமதியானதை பட்டினப்பாலை கூறுகிறது. ஈழநாட்டின் பழைய தலைநகரமான அநுராதபுரத்தில் தமிழ வாணிக சாத்து நிலையாக இருந்து வாணிகஞ் செய்தது. 2200 ஆண்டுகளுக்கு முன்னரே, கிறிஸ்து

சகாப்தத்துக்கு இருநூறு ஆண்டுகளுக்கு முன்பு, அநுராதபுரத்தில் தமிழ்வாணிகர் மாளிகையொன்று இருந்ததை அங்குள்ள பிராஃமி எழுத்துச் சாசனம் கூறுகிறது. கற்பாறையோடு சார்ந்திருந்த அந்த வாணிகச் சாத்து மாளிகை பல ஆண்டுகளுக்கு முன்பே அழிந்து போய் மண்மூடிக் கிடந்தது. மழை நீரினால் சிறிது சிறிதாக மண்கரைந்து கடைசியில் பாறைக் கல்லும் அதில் பொறிக்கப்பட்டுள்ள பிராஃமி எழுத்துகளும் அண்மை காலத்தில் கண்டுபிடிக்கப்பட்டன. அங்குத் தமிழ் நாவிகத் தலைவன் அமர்ந்திருந்த இடமும் மற்றும் வாணிகத் தலைவர்கள் அமர்ந்திருந்த இடங்களும் அவர்கள் பெயர்களுடன் பாறையில் பொறிக்கப்பட்டுள்ளன. *(Tamil House-holders' Terrace. Anuradhapura. by. S.Paranavatana. P.P.13-14. Annual Bibliography of Indian Archaeology Vol.XIII. (19*****).*

தமிழ்நாட்டு வாணிகர் இலங்கையின் தலைநகரமான அநுராதபுரத்தில் வாணிக நிலையம் அமைத்து வாணிகஞ்செய்ததைப் பற்றிச் சங்க இலக்கியங்களில் அதிகமாக ஒன்றுங் காணப்படவில்லை. ஆனால், தமிழ் வாணிகர்கள் கி.மு.இரண்டாம் நூற்றாண்டில் இலங்கை ஆட்சியைக் கைப்பற்றியரசாண்ட வரலாற்றைச் சிங்களநாட்டு நூல்கள் கூறுகின்றன. சேனன், குட்டகன் என்னும் இரண்டு சகோதரர்கள் இலங்கையில் குதிரை வாணிகஞ் செய்துகொண்டிருந்த ஒரு தமிழ் வாணிகருடைய பிள்ளைகள் என்றும், அவர்கள் சூரதிஸ்ஸன் என்னும் சிங்கள அரசனை வென்று இராச்சியத்தைக் கைப்பற்றி அநுராதபுரத்திலிருந்து இருபத்திரண்டு ஆண்டுகள் நீதியாக அரசாண்டார்கள் என்றும் அவர்கள் புத்தசகாப்தம் 306 முதல் 328 வரையில் (கி.மு.177 முதல் 155) அரசாண்டார்கள் என்றும் கோவம்சம் என்னும் நூல் கூறுகிறது. (கோவம்சம் XXI : 10- 11) இதே செய்தியைத் தீபவம்சம் என்னும் நூலுங் கூறுகிறது (தீபவம்சம் 18.47)

பிறகு ஏலாரன் (ஏலேலசிங்கன்) என்னும் தமிழ வாணிகன் இலங்கையை நாற்பத்து நான்கு ஆண்டு அரசாண்டான். இவனைத் திருவள்ளுவரின் மாணவன் (சீடன்) என்றுங் கூறுவர். ஏலாரன் புத்தசகாப்தம் 338 முதல் 382 வரையில் (கி.மு.145 முதல் 101 வரையில்) இலங்கையை, பகைவர் நண்பர் என்னும் வேறுபாடு இல்லாமல், நீதியோடு அரசாண்டான் என்று மகாவம்சம் என்னும் நூல் கூறுகிறது. *(Mahavamsa XXI:13-14)* இந்தச் செய்தியையே தீபவம்சம் என்னும் நூலுங் கூறுகிறது. (18:49) இந்தச் செய்திகள் எல்லாம் பழைய இலங்கைச் சரித்திர நூல்களிலிருந்தும் சாசன ஆராய்ச்சியிலிருந்தும் தெரிகின்றன.

தமிழ்நாட்டின் கிழக்குக்கரையில் சேரபட்டினம் (எயிற்பட்டினம்), காவிரிப்பூம்பட்டினம் (புகார்), நாகப்பட்டினம், தொண்டி, மருங்கூர்ப் பட்டினம், தொற்கை என்னும் துறைமுகப்பட்டினங்கள் இருந்தன. பாண்டி நாட்டின் தெற்கே குமரித்துறையைப் பற்றித் தமிழ்நூல்கள் கூறுகின்றன. ஆனால் அது துறைமுகப்பட்டினமாக இருந்ததைத் தமிழ்நூல்கள் கூறவில்லை. கிரேக்க (யவன) வாணிகர்கள் எழுதியுள்ள நூலிலிருந்து குமரியும் துறைமுகப்பட்டினமாக இருந்தது என்பது தெரிகின்றது.

புதுச்சேரிக்குத் தெற்கே அரிக்கமேடு என்னும் இடத்தில் கடற்கரையை யடுத்து ஒரு வாணிகப் பண்டகசாலை இருந்ததைச் சமீப காலத்தில் கண்டுபிடித்துள்ளனர். அதைப் 'பொதுகெ' என்று யவன வணிகர் எழுதி யுள்ளனர். இந்தத் துறையைப்பற்றியும் சங்க நூல்களில் ஒன்றும் கூறப்படவில்லை. இது, கி.மு.முதல் நூற்றாண்டுக்கும், கி.பி. இரண்டாம் நூற்றாண்டிற்கும் இடைப்பட்ட காலத்தில் இருந்த துறைமுகம் என்று அகழ்வாராய்ச்சியாளர் கருதுகின்றனர். இங்குக் கிடைத்த உரோமாபுரி நாணயங்கள், உரோமாபுரிப் பீங்கான்கள் வேறு பொருள்கள் முதலியவை களைப் பற்றியறிய விரும்புவோர் ''ஏன்ஷியன்ட் இந்தியா'' என்னும் வெளியீட்டில் காண்க. *x(x Ancient India Number 2. July 1946- Arikamedu: An Indo-Roman Trading station on the East Coast of India. by R.E.M.Wheeler, A.Ghosh and Krishna Dave. PP.17-124)*

மேற்குக் கடல் வாணிகம்

இனித் தமிழகத்தின் மேற்குக் கடற்கரையில் சங்ககாலத்தில் நடந்த கடல் வாணிகத்தைப்பற்றிக் கூறுவோம். அராபியரும், பாரசீகரும், எகிப்தியரும், யவனரும் (கிரேக்கரும் உரோமரும்) மேற்குக்கரையில் தமிழர்களோடு வாணிகஞ்செய்தார்கள். மேற்சொன்ன அந்த நாடுகளுக்குத் தமிழ் வாணிகர் அதிகமாகச் செல்லவில்லை. ஏனென்றால், மேற்சொன்ன நாட்டவர் தங்களுடைய தோணிகளிலும் நாவாய்களிலும் நேரே தமிழகத்துக்கு வந்து சரக்குகளை வாங்கிக் கொண்டு போனார்கள். அந்தக்காலத்தில் சேரநாட்டில் முக்கியமான ஏற்றுமதிப்பொருளாக இருந்தது மிளகு. அந்தக்காலத்தில் உலகத்திலேயே சேரநாட்டில்தான் மிளகு விளைந்தது. மேல்நாட்டார் மிளகைப் பெரிதும் விரும்பினார்கள்.

மேற்குக்கடற்கரைத் துறைமுகங்களில் ஆதிகாலத்தில் வாணிகஞ் செய்யத் தொடங்கியவர்கள் அராபியர். அராபியர் முசிறித்துறைமுகத்துக்கு அருகில் தங்கி வாணிகஞ் செய்தார்கள். முசிறித் துறைமுகத்துக்கு அருகில்

கொடுமணம், பந்தர் என்னும் ஊர்கள் இருந்தன. பந்தர் என்னும் இடத்தில் அராபிய வணிகர் தங்கி வாணிகஞ் செய்தார்கள். பந்தர் என்ற சொல்லே அரபிமொழிச்சொல். அரபிமொழியில் பந்தர் என்றால் அங்காடி அல்லது வாணிகஞ்செய்யும் இடம் என்பது பொருள். (இக்காலத்திலும் சென்னையில் 'பந்தர்தெரு' என்று ஒரு தெரு இருக்கிறது. அங்குப் பெரும்பாலும் முஸ்லிம்கள் வணிகஞ் செய்கிறார்கள்.)

பதிற்றுப்பத்தில் பந்தர் என்னும் இடம் குறிக்கப்படுகிறது.

"கொடுமணம் பட்ட நெடுமொழியொக்கலொடு
பந்தர்ப் பெயரிய பேரிசை மூதூர்க்
கடனறி மரபிற் கைவல் பாண!
தெண்கடல் முத்தமொடு நன்கலம் பெறுகுவை."

(பதிற்று:7-ஆம் பத்து, 7:1-4)

"கொடுமணம் பட்ட வினைமாண் அருங்கலம்
பந்தர்ப் பயந்த பலர்புகழ் முத்தம்."

(பதிற்று:8-ஆம்பத்து. 4:5-6)

"இன்னிசைப் புணரி யிரங்கும் பௌவத்து
நன்கல வெறுக்கை துஞ்சும் பந்தர்க்
கமழும் தாழைக் கானலம் பெருந்துறை"

(பதிற்று:ஆறாம்பத்து.6:3-5)

பந்தரில் பொன் நகைகளும் முத்துக்களும் விற்கப்பட்டன என்று அறிகிறோம். யவனர்கள் (கிரேக்கர் ரோமர்) வருவதற்கு முன்பே அராபியர் சேரநாட்டில் வந்து வாணிகம் செய்தனர். அவர்கள் முக்கியமாகத் தமிழ் நாட்டிலிருந்து மிளகை ஏற்றிக் கொண்டுபோய் எகிப்து நாட்டு அலக்ஸாந் திரியா துறைமுகப் பட்டினத்தில் விற்றார்கள். அங்கிருந்து மிளகு உரோமாபுரி சாம்ராச்சியத்துக்குச் சென்றது. யவனர்கள் மிளகைப் பெரிதும் விரும்பினார்கள். அவர்களுடைய உணவில் மிளகு முக்கிய இடம் பெற்றது. மிளகை அவர்கள் மேலும் மேலும் வாங்கினார்கள். அதனால், அராபிய வாணிக்ருக்குப் பெரிய ஊதியங்கிடைத்தது. நூறு மடங்கு லாபம் பெற்றனர் என்று சொல்லப்படுகிறது. யவனர்களின்(கிரேக்கர் உரோமர்) உணவில் மிளகு இன்றியமையாத முக்கிய இடம் பெற்றபடியால் அவர்கள் மிளகை

விரும்பி வாங்கினார்கள். அதனால் மிளகுக்கு "யவனப் பிரியா" என்னும் பெயரும் ஏற்பட்டது. தமிழகத்து மேற்குத் தொடர்ச்சி மலைகளில் மட்டும் மிளகு கிடைத்தபடியால் இங்கிருந்தே அவர்கள் மிளகைப் பெற்றார்கள். தமிழகத்து மிளகு யவனநாட்டு மக்களுக்குமிடையே அராபியர் இருந்து கொள்ளை லாபம் பெற்றார்கள். ஆகவே அராபியர் ஆதிக்கத்தை அடக்கி யவனர்கள் நேரடியாகத் தமிழகத்துக்கு வரத் தொடங்கினார்கள்.

யவன வாணிகர் தொடக்கத்தில் செங்கடலில் மட்டும் வந்து வாணிகம் செய்தார்கள். அவர்கள் செங்கடலை எரித்ரைக் கடல் (Maris Erythrei) என்று கூறினார்கள். எரித்ரைக் கடல் என்றால் அவர்கள் மொழியில் செங்கடல் என்பது பொருள். பிறகு, யவனர்கள் செங்கடலைத் தாண்டிவந்து அரபி நாட்டின் தென்கரையிலும் பாரசீகக் குடாக் கடலிலும் வாணிகம் செய்தார்கள். இந்தக் கடல்களுக்கும் அவர்கள் எரித்ரைக் கடல் என்றே பெயரிட்டார்கள். பிறகு மேலும் தெற்கே வந்து இந்தியாவின் மேற்குக்கரையோரத்துத் துறைமுகங்களில் வாணிகம் செய்தார்கள். தமிழகத்துச் சேர நாட்டுக்கடற்கரை பட்டினங்களிலும் வந்து வாணிகஞ் செய்தார்கள். அப்போது அரபிக் கடலுக்கும் அவர்கள் எரித்ரைக் கடல் (செங்கடல்) என்ற பெயரையே வழங்கினார்கள். பிறகு குமரிக்கடல் வங்காளக் குடாக்கடலுக்கும் வந்து வாணிகம் செய்தார்கள். இந்தக் கடல்களுக்கும் யவனர் எரித்ரைக்கடல் என்றே பெயர் கூறினார்கள். யவன வாணிபர்கள் செங்கடல் அரபிக்கடல் வங்காள குடாக்கடல்களில் வந்து வாணிகஞ் செய்ததையும் அவர்கள் வந்து வாணிகஞ்செய்த துறைமுகங்களின் பெயரையும் அவர்கள் ஏற்றுமதி இறக்குமதி செய்த பொருட்களையும் பற்றி கி.பி.முதல் நூற்றாண்டில் யவன வாணிகர் ஒருவர் கிரேக்க பாஷையில் ஒரு நூல் எழுதியுள்ளார். அந்த நூலுக்கு The Periplus Maris Erythrei என்று பெயர்.

உரோம நாட்டுச் சாம்ராச்சியத்தை அந்தக் காலத்தில் அரசாண்ட சக்கரவர்த்தி அகஸ்தஸ் என்பவர். அவர் கி.மு.31 முதல் கி.பி.14 வரையில் 45-ஆண்டு அரசாண்டார். அந்த அரசர் காலத்தில் யவனக் கப்பல்கள் நேரடியாகத் தமிழகத்துக்கு வரத்தொடங்கின. அந்தக் கப்பல்கள், அராபியரின் கப்பல்களைவிடப் பெரியவைகளாகவும் அழகாகவும் இருந்தன. அந்த யவனக் கப்பல்கள் கடற்கரையோரமாகவே பிரயாணஞ் செய்து வந்தன. நடுக்கடலின் ஊடே பிரயாணஞ் செய்யவில்லை. கரையோர மாகச் சுற்றிக்கொண்டு வந்தபடியால் கால தாமதமும் பொருட்செலவும் ஏற்பட்டன. பிறகு ஹிப்பாலஸ் என்னும் யவன மாலுமி, இந்திய

மாலுமிகளின் உதவியினால் தென்மேற்குப் பருவக் காற்றையறிந்தான். அந்தப் பருவக்காற்றின் உதவியால் அராபிக் கடலின் ஊடே கப்பலைச் செலுத்தி முசிறி, தொண்டி, நறவு முதலிய சேரநாட்டுத் துறைமுகங்களுக்கு விரைவில் வந்துபோக முடிந்தது. அதன்பிறகு யவனக் கப்பல்கள், பருவக் காற்றின் உதவிகொண்டு விரைவாகவும் காலதாமதம் இல்லாமலும் வந்து மிளகு முதலிய பொருள்களை ஏற்றுமதி செய்துகொண்டு போயின.

அகஸ்தஸ் அரசன் காலத்தில் உரோமாபுரித் தங்கசாலைகளில் தங்க நாணயங்களும் வெள்ளி நாணயங்களும் ஏராளமாக வெளிப்பட்டன. உரோம சாம்ராச்சியத்தைச் சேர்ந்த ஸ்பெயின் நாட்டில் தங்கச்சுரங்கம் இருந்தபடியால் அந்தத் தங்கத்தைக் கொண்டு பொன் நாணயங்கள் வெளியிடப்பட்டன. யவனக் கப்பல்கள் உரோம நாட்டிலிருந்து பொன் நாணயங்களைக் கொண்டு வந்து மிளகுகளை ஏராளமாக வாங்கிக் கொண்டு போயின. மிளகுக்கு அடுத்தபடியாகத் தமிழகத்திலிருந்து யவனர் வாங்கிக் கொண்டு போனவை பேர்போன நீல நிறக் கல்லும் முத்துமே. கொங்கு நாட்டின் வடக்கிலிருந்த புன்னாட்டில் நீலக்கல் சுரங்கம் இருந்தது. அந்தக் காலத்தில் இந்த மணி வேறுஎங்கும் கிடைக்கவில்லை. முத்து, பாண்டியரின் கொற்கைத் துறைமுகத்தில் கிடைத்தது. இவற்றை எல்லாம் யவனர் பணம்கொடுத்து வாங்கிக்கொண்டு போனார்கள். அதனால் உரோமாபுரியின் பொன்னும் வெள்ளியும் தமிழகத்துக்கு ஏராளமாகக் கிடைத்தன. ரோம நாட்டுச் செல்வம் வெளிநாடுகளுக்குச் செல்வதை அக்காலத்து உரோம நாட்டு அறிஞர்கள் கண்டித்திருக்கிறார்கள்.

யவன வாணிகர் பொற் காசுகளைக் கொண்டுவந்து கொடுத்து அதற்கு ஈடாகக் கறியை (கறி - மிளகு) ஏற்றிக்கொண்டு போனதைத் தாயங் கண்ணனார் தம்முடைய ஒரு செய்யுளில் கூறுகிறார்.

> **"சேரலர்**
> **சுள்ளியம் பேரியாற்று வெண்ணுரை கலங்க**
> **யவனர் தந்த வினைமாண் நன்கலம்**
> **பொன்னொடு வந்து கறியோடு பெயரும்**
> **வளங்கெழு முசிறி" (அகம் 149:7-11)**

இதை அவர் நிகழ்காலத்தில் கூறியிருக்கிறபடியால், அவருடைய காலத்தில் தாம் நேரில் கண்டதையே கூறியுள்ளார் என்பது தெரிகின்றது

சுள்ளி என்று பெயர்பெற்றிருந்த பெரியாறு கடலில் கலக்கிற இடத்தில் முசிறித் துறைமுகம் இருந்தது. சுள்ளியாற்றின் வெள்ளத்தில் அடித்துக் கொண்டுபோன மண், துறைமுகத்தில் படிந்து தூர்ந்துவிட்டபடியால், முசிறித்துறைமுகத்தில் யவனரின் பெரிய நாவாய்க்கப்பல்கள் வந்து தங்குவதற்கு ஏற்ற ஆழம் இல்லாமலிருந்தது. ஆகவே, யவனக்கப்பல்கள் துறைமுகத்துக்கு அப்பால் கடலில் நின்றன. சிறிய படகுகளில் மிளகை ஏற்றிக்கொண்டுபோய் யவனக்கப்பல்களில் இறக்கி அதற்கு ஈடாகப் பொன் நாணயங்களை அந்தக்கப்பல்கள் கொண்டு வந்தன என்று அக்காலத்தில் பேர்பெற்றிருந்த பாணர் என்னும் புலவர் கூறுகிறார்.

"மனைக் குவைஇய கறிமூடையாற்
கலிச்சும்மைய கரைகலக்குறுந்து
கலந்தந்த பொற்பரிசம்
கழித்தோணியாற் கரைசேர்க்குந்து"

முழங்குகடல் முழவின் முசிறி:(புறம்:343:3-10)

இந்தப்புலவரும் இந்த வாணிபத்தை நிகழ்காலத்தில் கூறுவது காண்க.

வாணிகத்தினால் அந்தந்தநாட்டு அரசர்களுக்குச் செல்வம் கிடைத்தது. ஆகவே, முக்கியத் துறைமுகப்பட்டினங்களைக் கைப்பற்றுவதற்கு அரசர்கள் முயன்றார்கள். தமிழகத்துக்கு வடக்கே மேற்குக்கடற்கரையில் இருந்த பெரிய துறைமுகப்பட்டினங்கள் சங்க காலத்தில் சாதவாகன அரசர்களிடம் இருந்தன. சாதவாகனருக்கு சதகர்ணி என்றும் நூற்றுவர்கன்னர் என்றும் பெயர் உண்டு. மேற்கு இந்தியத் துறைமுகங்கள் அவர்களுடைய ஆளுகையிலிருந்த படியால் அவர்களுக்கு வாணிகத்தின் மூலமாக பெருத்த பொருள் வருவாய் இருந்தது. அந்தப் பொருள் வருவாயைத் தாங்கள் பெற்றுக் கொள்ள விரும்பி சாகர் என்னும் அரசர்கள் சாதவாகனருடன் போர்செய்து அவர்களுடைய மேற்குப்பக்கத்து நகரங்களையும் நாடுகளையும் கைப்பற்றினார்கள். சாதவாகனர், தாங்கள் இழந்த நாடுகளை மீண்டும் கைப்பற்றுவதற்குச் சாகர்களுடன் போர் செய்தார்கள். இவ்வாறு சாதவாகனர்களுக்கும் சாகர் களுக்கும் அடிக்கடி போர் நிகழ்ந்தன. ஏறத்தாழ இருநூறு ஆண்டுகள் அப்போர்கள் நடந்தன அந்தப் போர்களில் சாதவாகன அரசருக்கு உதவியாகத் தமிழ்நாட்டு அரசர் இருந்தார்கள். சோழ அரசரும் சேர அரசரும் சாதவாகனருக்குப் போரில் உதவிசெய்திருக்கிறார்கள்

சேரநாட்டுக் கடல்வாணிகத்துக்கு எதிராகக் கடற்கொள்ளைக்காரர்கள் அக்காலத்தில் இருந்தார்கள். அவர்கள் யவனக் கப்பல்களை வழிமறித்துக் கொள்ளையடித்தபடியால் யவன வாணிகர் சேரநாட்டுத் துறைமுகங்களுக்கு வர அஞ்சினார்கள். சேரநாட்டுககு வடமேற்கே அரபிக்கடலில் இருந்த ஒரு சிறு தீவிலே கடற்கொள்ளைக்காரர்கள் தங்கியிருந்தார்கள். அவர்கள் அந்தத்தீவில் கடம்ப மரத்தைக் காவல்மரமாக நட்டுவளர்த்தார்கள். அதனால் அவர்கள் கடம்பர் என்று கூறப்பட்டனர். (அந்தக் கடம்பர் வேறு; பிற்காலத்தில் சரித்திரப் புகழ்பெற்று விளங்கிய கடம்பர்கள் வேறு. கடற்கொள்ளைக்காரராகிய கடம்பரையும் சில நூற்றாண்டுகளுக்குப் பிறகு சரித்திரப் புகழ்பெற்று விளங்கிய கடம்ப அரசரையும் ஒன்றாகக் கருதுவது தவறு.)

கடற்கொள்ளைக்காரக் கடம்பரின் கடற்கொள்ளை காரணமாகச் சேர நாட்டுத் துறைமுகப்பட்டினங்களுக்கு யவனக்கப்பல்கள் வருவது தடைப்பட்டது. அப்போது சேர அரசர் கடம்பரை அழித்து ஒடுக்கவேண்டியதாயிற்று. இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன் என்னும் சேர அரசன் தன்னுடைய மகனான சேரன் செங்குட்டுவன் தலைமையில் ஒரு கடற் படையையனுப்பி கடல் தீவிலிருந்த கடம்பரை வென்று அடக்கினான். அத் தீவில் அவர்கள் வளர்த்திருந்த கடம்பமரத்தையும் அடியோடு வெட்டி வீழ்த்தினான் என்று பதிற்றுப் பத்து கூறுகிறது. (பதிற்றுப்பத்து, 2-ஆம் பத்து, 5-ஆம் பத்து) தமிழகத்தின் மேற்குக் கடல் வாணிகமும் சங்ககாலத்தின் இறுதி வரையில் (ஏறத்தாழ கி.பி.250 வரையில்) சிறப்பாக நடந்தது.

அயல்நாட்டுத் தரை வாணிகம்

இதுவரையில் சங்ககாலத்துக் கடல் வாணிகத்தைப்பற்றி சுருக்கமாகக் கூறினோம். இனி, சங்ககாலத்துத் தமிழர் அயல்நாடுகளில் செய்த தரை வாணிகத்தைப்பற்றிக் கூறுவோம்.

காதலன் தன் காதலியை (மனைவியை) விட்டுத் தனியே பிரிந்து பொருள் ஈட்டச் சென்றதைப் பாலைத்திணைச் செய்யுட்கள் கூறுவதைச் சங்க இலக்கியங்களில் படிக்கிறோம். அவர்கள், தமிழ்நாட்டுக்கு அப்பால் உள்ள மொழி பெயர் தேயங்களுக்கு (வேறு பாஷை பேசப்பட்ட தேசங்களுக்கு)ச் சென்றார்கள் என்று சங்கச்செய்யுள்கள் கூறுகின்றன. வாணிகர் வண்டிகளில் சரக்குகளை ஏற்றிக் கொண்டு கூட்டமாக அயல்நாடுகளுக்குச் செல்வார்கள். அந்த வணிகக்கூட்டத்துக்குச் சாத்து என்பது பெயர். அக்காலத்தில் எல்லைப் புறங்களில் பாதுகாப்பு இல்லாதபடியால் கொள்ளைக்காரர் வணிகச்சாத்தை

இடைமறித்துப் பொருட்களைக் கொள்ளையடிப்பதும் உண்டு. அதைத் தடுப்பதற்காகச் சாத்துகள் தங்களுடன் வில் வீரர்களையும் அழைத்துக் கொண்டு போனார்கள். பாரத நாட்டில் மட்டுமல்ல, வெளி தேசங்களிலும் வணிகச்சாத்துகள் அக்காலத்தில் இருந்தன. வாணிச்சாத்துக்கு ஆங்கிலத்தில் *Caravan* என்பது பெயர்.

கோவலனுடைய தந்தை வாணிகர்சாத்தின் தலைவனாக இருந்தான் என்று சிலப்பதிகாரக் காவியங் கூறுகிறது சாத்தின் தலைவனாக இருந்த படியால் அவன் மாசாத்துவான் என்று பெயர்பெற்றான். (மா-பெரிய. சாத்து வான் - வாணிகச்சாத்தின் தலைவன்) காவிரிப்பூம்பட்டினத்தில் இறக்குமதி யான பொருள்களையும் சுற்றுப்புறத்து நாடுகளில் உற்பத்தியான பொருள் களையும் சாத்து மூலமாக அவன் அயல்நாடுகளுக்கு அனுப்பி வாணிகஞ் செய்தான். இப்பெரு வாணிகத்தினால் மாசாத்துவான் பெரும்பொருள் சேர்த்துச் சோழ அரசனுக்கு அடுத்தபடியாகப் பெருங் குடிமகனாக விளங்கினான்.

"பெருநிலம் முழுநாளும் பெருமகன் தலைவைத்த
ஒருதனிக் குடிகளோடு உயர்ந்தோங்கு செல்வத்தான்
வருநிதி பிறர்க்கார்த்து மாசாத்துவன் என்பான்
இருநிதிக் கிழவன்மகன் ஈரெட்டாண் டகவையான்.

என்று கோவலனையும் அவனுடைய தந்தையான மாசாத்துவானையும் சிலப்பதிகாரம் கூறுகிறது. (மங்கல வாழ்த்துப்பாடல்)

சங்க காலத்துத் தமிழர் தரைவழியாக வடஇந்தியாவுக்குச் சென்று வாணிகஞ்செய்து பொருள் ஈட்டினார்கள். அந்தத் தரைவாணிகத்தைப் பற்றிச் சங்கச் செய்யுள்கள் அதிகமாகக் கூறவில்லை. தமிழகத்திலிருந்து மேற்குப் பக்கமாகவும் கிழக்குப்பக்கமாகவும் வட இந்தியாவுக்குப் பெருஞ் சாலைகள் சென்றன. அந்தச் சாலைகள் வடநாடுகளின் ஊடே (கன்னடநாடு ஆந்திர நாடுகளின் வழியாக) சென்றபடியால் அவை வடுகவழி மேற்கு, வடுகவழி கிழக்கு என்று பெயர்பெற்றிருந்ததைப் பிற்காலத்தில் சாசனங் களினால் அறிகிறோம். உஞ்சை (உஜ்ஜையினி) வாரணாசி (காசி) நாடு களுக்குத் தமிழர்சென்றதையும் அங்கிருந்தவர் தமிழ்நாட்டுக் குமரி முனைக்குவந்து நீராடிச் சென்றதையும் மணிமேகலையினால் அறிகிறோம். (அக்காலத்தில் இராமேசுவரம் புண்ணிய இடமாகக் கருதப்படவில்லை, குமரித் துறையே புண்ணியஇடமாகக் கருதப்பட்டது.)

இப்போது ஒரிசாதேசம் என்று கூறப்படுகிற பழைய கலிங்கநாட்டில் சங்ககாலத்துத் தமிழர் சென்று நெடுங்காலமாக அங்குத் தங்கிவாணிகஞ் செய்ததை அந்நாட்டுக்கல்வெட்டு வட்டெழுத்துச் சாசனங்கள் கூறுகின்றன. கிறிஸ்து சகாப்தத்துக்கு முன்பு இரண்டாம் நூற்றாண்டில் கலிங்கதேசத்தை யரசாண்டவன் காரவேலன் என்னும் அரசன். அவன் அக்காலத்தில் வடக்கே பேரரசனாக விளங்கினான் காரவேலன் சதகர்ணி யரசனையும் வென்று புகழ்படைத்தவன். அவன் கி.மு.165-ஆம் ஆண்டில் (அவனுடைய பதினாறாம் ஆட்சியாண்டில்), கலிங்கநாட்டில் பல ஆண்டுகளாக செல் வாக்குப் பெற்றிருந்த தமிழ் வாணிகச் சாத்தை அழித்தான் என்று அந்த சாசனங் கூறுகிறது. அந்த ஆண்டுக்கு முன்பு 113 ஆண்டுகளாகத் தமிழச்சாத்து கலிங்க நாட்டில்தங்கி வாணிகஞ் செய்துகொண்டு அந்நாட்டில் பெரிய செல்வாக்கு பெற்றிருந்தது. அந்தச்சாத்தின் ஆதிக்கம் நாளுக்கு நாள் பெருகியபடியாலும் ஆட்சிக்கே ஆபத்து நேரிடக்கூடும் என்று தெரிந்த படியாலும் காரவேல அரசன் அந்தவாணிகச் சாத்தை அழித்து ஒடுக்கினான் என்று அவனுடைய ஹத்திகும்பா குறைச்சாசனம் கூறுகிறது. எனவே கி.மு.278-இல் இருந்தே (கி.மு.165+113=278) சங்ககாலத்துத் தமிழ் வாணிகச் சாத்து கலிங்கநாட்டில் சென்று வாணிகஞ் செய்யத் தொடங்கியதை இச்சாசனத்திலிருந்து அறிகிறோம்.

கலிங்க நாட்டில் வாணிகஞ்செய்த தமிழச் சாத்தினர் என்னென்ன பொருள்களைக் கொண்டுபோய் வாணிகஞ் செய்தார்கள் என்பது தெரிய வில்லை. ஆனால் கலிங்க நாட்டிலிருந்து சேலைகளைக் கொண்டுவந்து தமிழ கத்தில் வாணிகஞ் செய்தார்கள் என்பதைச் சங்கச் செய்யுள்களிலிருந்து அறி கிறோம். அந்தச்சேலைகளுக்கு கலிங்கச்சேலை என்பது பெயர். தொடக்கக் காலத்தில் கலிங்க நாட்டுப் புடவைகளுக்கு மட்டும் பெயராக வழங்கிய அந்தச் சொல், காலஞ்செல்லச் செல்ல எல்லாப் புடவைகளுக்கும் பொதுப் பெயராக கலிங்கம் என்று வழங்கியதைச் சங்கச் செய்யுளில் காண்கிறோம்.

சந்தனக் கட்டையை இழைக்கிற சந்தனக் கல்லும் வடக்கிலிருந்து தமிழகத்துக்கு வந்தது. அந்தச் சந்தனக் கல்லும் கலிங்கநாட்டிலிருந்து அல்லது ஆந்திரநாட்டிலிருந்து வந்திருக்கவேண்டும். ஏனென்றால், அதை 'வடவர் தந்த வான் கேழ் வட்டம்' என்று நெடுநல்வாடை (வரி 51) கூறுகிறது.

ஆந்திர நாட்டில் அந்தகாலத்தில் பேர் பெற்றிருந்த அமராவதி நகரத்திலும் அக்காலத்தில் தமிழர் சென்றுவாணிகம் செய்தனர் என்பது இன்னொரு சாசனத்தால் தெரிகிறது. அமராவதி நகரத்தில் இருந்த பேர் போன

பௌத்த சயித்தியக்கோவில் கி.மு.200 முதல் கி.பி.200 வரையில் கட்டப்பட்டது. அந்த சேதியத்தைக் கட்டுவதற்கு அந்நகரத்திலிருந்து செல்வர்களும் வாணிகரும் பொருளுதவி செய்தார்கள். அச்சேதியத்தைக் கட்டுவதற்கு பொருளுதவி செய்தவர்களில் தமிழ்க் குடும்பமும் ஒன்று. இப்போது லண்டன் பொருட்காட்சிச் சாலையில் உ ள்ள பிராஃமி எழுத்துச் சாசனக்கல் இந்தச் செய்தியைக் கூறுகிறது. தமிழ் கண்ணனும் இவனுடைய தம்பி சுல்ல(இளங்)கண்ணனும் இவர்களுடைய தங்கை(நாகம்மாள்)யும் சேர்ந்து உதம்பதக்கல்லைத் தானம் செய்தனர் என்று அந்த சாசனம் கூறுகிறது. **(Page.20. No 80. NOtes on the Amaravathi stupa.by.J.Burgess.1882.)** இந்தத் தமிழக்குடும்பத்தினர் தமிழ்நாட்டிலிருந்து ஆந்திரநாடு சென்று வாணிகஞ்செய்தவர் என்று தோன்றுகின்றனர்.

இதுவரையில் சங்ககாலத்துத் தமிழர் வாணிகத்தைப்பற்றிச் சுருக்கமாக கூறினோம். அதற்குப் பிற்காலத்திலும் இந்தவாணிகங்கள் தொடர்ந்து நடந்தன.

ஆராய்ச்சி - 1970

4. சங்ககாலத்துக் கைத்தொழிலும் வாணிகமும்

(இக்கட்டுரையில் ஆய்வாளர் கடற்கரைப் பொருள்களான உப்பையும் சங்கையும் பண்டையத் தமிழர் வாணிகப் பொருள்களாகக் கொண்டு விற்றதையும், நஞ்செய் விளைபொருளான கரும்பை வெல்லமாக்கி விற்றதையும் இலக்கியச் சான்றுகளிலிருந்து எடுத்துக் காட்டுகிறார். சங்கு எடுப்பதற்கு கடலில் மூழ்குவதற்கும், சங்கின் வளர்ச்சி நிலையையும் பற்றிய அறிவு வேண்டும். ஆனால் மனிதன் நேரில் மூழ்கினானே அன்றி, மூழ்குவதற்குரிய கருவிகளைச் செய்யக் கூடிய அளவு விஞ்ஞான அறிவு பெறவில்லை. ஆனால் படகு செய்யவும் செலுத்தவும் அறிந்திருந்தான். வெல்ல உற்பத்திக்கு, கரும்பு பயிரிடக்கூடிய விவசாய அறிவும், வெல்லத்தைக் கரும்புச் சாற்றிலிருந்து பெற அதைப் பதமாக உஷ்ணமாக்கும் தொழில் திறமையையும் கற்றிருந்தான். சங்கை அப்படியே விற்காமல் அதை வளையாகச் செய்யும் திறமையும் பெற்றிருந்தான். உப்பு தமிழ்நாட்டில், உணவுப் பொருளை அழுகாமல் பாதுகாப்பதற்குப் பயன்படுத்துவதற்காக மலைப்பகுதிகளுக்கு அனுப்பப்பட்டது. வாணிபம் இக்காலகட்டத்தில்

அதிகமாகப் பெருகவில்லையென்பது பண்டமாற்றே முக்கியமான வாணிப முறையாக இருந்ததென்பதிலிருந்து தெரிகிறது. காசுகள் என்ற பொதுப் பண்டத்திற்கு, எல்லாப் பண்டங்களையும் மாற்றிக் கொள்வது பெரு வழக்காகத் தோன்றிவிடவில்லை. இது வாணிபத்திற்காகவே பொருள்களைச் சேகரித்து அவற்றை விற்பனை செய்த ஆரம்ப நிலையையே இச்சான்றுகள் குறிக்கின்றன. விற்பனைசெய்யச் சமுதாயத்தின் பயன்பாட்டிற்குப்போக எஞ்சிய பொருளின் அளவு குறைவு என்பதையும், இது தமிழ்நாட்டின் தொழில் வணிப வளர்ச்சி வரலாற்றின் துவக்கநிலை யென்பதையும் இக்கட்டுரை சுட்டிக்காட்டுகிறது. - ஆசிரியர் - நா வானமாமாலை)

சங்க காலத்தில் (கி.பி.250க்கு முற்பட்ட காலத்தில்) உழவுத் தொழில், கைத்தொழில், வாணிகத் தொழில் ஆகிய தொழில்கள் நடந்தன அந்தத் தொழில்களில் முக்கியமான மூன்று தொழில்களைப் பற்றி இங்கு ஆராய்ந்து பார்ப்போம். அவை உப்பு, சங்குவளை, வெல்லம் என்னும் மூன்று. இந்தத் தொழில்களைப் பற்றிச் சங்க இலக்கியங்களிலிருந்து அறிகிறோம். இந்தப் பொருள்கள் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படவில்லை. இந்த மூன்றும் உள்நாட்டு உற்பத்திப் பொருளாகவும் கைத்தொழிலாகவும் வாணிகப் பொருளாகவும் இருந்தன.

உப்பு

எந்தக் காலத்திலும் உப்பு முக்கியமானது. உப்பிடாத உணவு உண்டா? உப்பில்லாப் பண்டம் குப்பையிலே என்பது பழமொழி. சங்க காலத்திலும் உப்பு செய்பொருளாகவும் வாணிகப் பொருளாகவும் உணவுப் பொருளாக வும் இருந்தது. மக்கள் வாழ்க்கையில் தினசரி உபயோகமான உப்பைப் பற்றிச் சங்க இலக்கியங்களில் ஆங்காங்கே கூறப்படுகின்றது. நெய்தல் நிலம் எனப்படுகிற கடற்கரையைச் சார்ந்த நிலங்களில் சில இடங்களில் உப்பளங்கள் இருந்தன. உப்பளங்களில் பாத்திகளை அமைத்து உப்பங்கழி களிலிருந்து உப்பு நீரைப் பாய்ச்சி உப்புக் காய்ச்சினார்கள். வெயிலில் பாத்திகளிலுள்ள நீர் கொதித்து ஆவியாகப் போய் பாத்திகளில் உப்பு பூக்கும். இதுவே "கடுவெயில் கொதித்த கல் விளை உப்பு." (நற்.354:8) நெய்தல் நிலத்து மக்கள் உப்பளங்களில் உப்பை விளைவித்தார்கள். இவர்கள் "உவர் விளை உப்பின் உழா உழவர்" என்று கூறப்பட்டனர். (நற்.331:1) இந்த 'வெண்கல் அமிழ்தம்' எல்லோருக்கும் இன்றியமையாத பொருளாக இருந்தது. மழை பெய்யாத வேனிற்காலங்களில் உப்பங்கழிகள் நீர் வறண்டு அங்கு இயற்கையாக உப்பு உண்டாவதும் உண்டு.

"வறப்பின், மாநீர்முண்டகந் தா அய்ச் சேறுபுலர்ந்து
இருங்கழிச் செறுவின் வெள்ளுப்பு விளையும்"

என்று உலோச்சனார் கூறுகிறார். (நற்-311:3-4) இந்த உப்பு சுத்தமாக இராதபடியால் உணவுக்கு உபயோகப்படுத்துவது இல்லை. உப்புப் பாத்திகளில் விளைந்த உப்பைக் குவியல் குவியலாகக் குவித்து வைத்து உப்பு வாணிகர் வரவை எதிர்பார்த்திருப்பார்கள்.

"உவர்விளை உப்பின் உழாஅ உழவர்
ஒகை உமணர் வருபதம் நோக்கி
கானல் இட்ட காவற்குப்பை" (நற்-331:1-3)

(உவர்-உவர்நிலம். உழா உழவர்-ஏர் உழாமல் உப்பைப் பயிரிடுபவர். உமணர்-உப்பு வாணிகர். கானல்-கடற்கரை. குப்பை-குவியல்.)

நெய்தல் நிலத்தில் வாழ்ந்த மீனவச் சிறுவர்கள் கடல் அலைகளில் குளித்து விளையாடிய பிறகு பொழுது சாய்ந்தபோது, உப்பளங்களில் குவித்து வைத்துள்ள உப்புக் குவியல்களின் மேல் ஏறிநின்று, கடலில் மீன் பிடிக்கச் சென்ற தங்களுடைய தந்தையர் கூட்டம் திரும்பி வருகிற மீன்படகு களை எண்ணினார்கள்.

"திரை வழிந்து அசைஇ திரைவளை ஆயமொடு
உப்பின் குப்பை ஏறி, ஏற்பட
வருதிமில் என்னுந் துறை,"

(அகம்-190:1-3)

உப்பை வாங்கிக் கொண்டு போய் ஊர் ஊராக விற்பதற்கு உப்பு வாணிகர் வருவர். உப்பு வாணிகருக்கு உமணர் என்று பெயர் வழங்கிற்று. உமணர் வண்டிகளில் நெல்லை ஏற்றிக் கொண்டு வந்து, நெல்லைக் கொடுத்து உப்பை வாங்கி வண்டிகளில் ஏற்றிக் கொண்டு போனார்கள். சங்க காலத்தில் பெரும்பாலும் பண்டமாற்று வாணிகம் இருந்தது. காசு கொடுத்துப் பொருளை வாங்கும் வழக்கம் அக்காலத்தில் பெரும்பாலும் இல்லை. காசுகள் மிகச் சுருக்கமாக வழங்கின.

உமணர் பெரும்பாலும் மருத நிலங்களில் (நெல் விளையும் ஊர்களில்) இருந்து வண்டிகளில் நெல்லை ஏற்றிக்கொண்டு வந்தார்கள் அவர்கள் மனைவி மக்களொடு வந்து, உப்பை வாங்கிக் கொண்டு குடும்பத்தோடு ஊர் ஊராகச் சென்று உப்பு விற்றார்கள்.

**"தந்நாட்டு விளைந்த வெண்ணெல் தந்து
பிறநாட்டு உப்பின் கொள்ளை சாற்றி
நெடுநெறி ஒழுகை நிலவு மணல் நீந்தி
அவண் உறை முனிந்த ஒக்கலோடு புலம்பெயர்
உமணர் போகலும்." (அகம்-183:1-5)**

(தம்நாடு-உமண வாணிகருடைய மருத நிலம். பிறநாடு-அயல் நாடாகிய நெய்தல் நிலம். கொள்ளை சாற்றி - விலைகூறி. ஒழுகை-வணிகர். அவன் உறை-தம் ஊரில் தனியே இருப்பதை. முனிந்த-வெறுத்த. ஒக்கல்-சுற்றம்.)

கடற்கரையில் வாழ்ந்த மீனவர் மீனை விற்று அதனால் வந்த நெல்லையும், 'உமணர் தந்த உப்பு நொடை நெல்லையும்' உணவாக உண்டார்கள்.

**"ஆயும், உப்பை மாறி வெண்ணெய் தரீஇய
உப்புவிளை கழனிச் சென்றவள்."**

(குறும்-269: 4-6)

என்று ஒரு மீனவச் சிறுமி கூறுகிறாள்.

உப்பை வாங்கி வண்டிகளில் ஏற்றிக்கொண்டு உமணர் கூட்டங் கூட்டமாக வழியே செல்கிறார்கள்.

**"உவர்விளை உப்பின் கொள்ளை சாற்றி
அவர்படு பூழிய சேண்புலம் படரும்
ததர்கோல் உமணர் போகும் நெடுநெறிக்
கணநிரை வாழ்க்கை." (அகம்-390:1-4)**

உமணர், கடற்கரைக்கு அப்பாலுள்ள உள்நாட்டு ஊர்களுக்கும் மலைநாடுகளுக்கும் உப்பு வண்டிகளை ஏற்றிக்கொண்டு போனார்கள்.

**"கழியுப்பு முகந்து கன்னாடு மடுக்கும்
ஆசைச் சாகாட்டு ஆழ்ச்சி போக்கும்
உரனுடை நோன்தாள் பகடு."**

(புறம்-60:7-9)

(கல்நாடு-மலைநாடு. ஆழ்ச்சிபோக்கும்-பள்ளத்திலிருந்து மேட்டின் மேல் செல்லும்)

"உவர்விளை உப்பின் குன்றுபோல் குப்பை
மலை உய்த்துப் பகரும் நிலையா வாழ்க்கைக்
கணங்கொள் உமணர்." (நற்-138:1-3)

பாரமுள்ள வண்டியை இழுத்துக் கொண்டு எருதுகள் மேட்டில் ஏறியும் பள்ளத்தில் இறங்கியும் செல்லும்போது வண்டியின் அச்சு முறிந்துவிடுவதும் உண்டு. அதன் பொருட்டு உமணர் சேர்ந்து கொண்டு போனார்கள். (புறம்-102:1-5) அவர்கள் பாதிரிப் பூவையும் அலரிப் பூவையும் இணைத்து கட்டின மாலையைத் தலையில் அணிந்து, காலில் செருப்புத் தொடுத்துக் கையில் தடி ஏந்தியிருந்தார்கள்.

"அந்தப் பாதிரித் துய்த்தலைப் பூதுவி
எரியிதழ் அலரியொடு இடைபட விரைஇ
வண்தோட்டுத் தொடுத்த வண்டுபடு கண்ணத்
தோல் புதைச் சிற்றடிக் கோலுடையுமணர்.

(அகம்-191:1-4)

அக்காலத்தில் ஊர்களுக்குச் செல்லும் வழிகள் செம்மையாக இல்லை. உமணர் வழியில் தங்கி உணவு சமைத்து உண்டு பிறகு மீண்டும் பிரயாணம் செய்தார்கள். (அகம்-159:1-4) சில இடங்களில் சமைக்கவும் உண்ணவும் நீர் கிடைக்காது. அவ்விடங்களில் மண்ணை அகழ்ந்து குழி உண்டாக்கிச் சுரந்த நீரை உண்டனர். (அகம்-295:9-14) தீக்குச்சிகள் இல்லாத காலமாகையால், அவர்கள், தீக்கடைக் கோலினால் தீயுண்டாக்கிச் சோறு சமைத்து உண்டனர். (அகம்-169:5-8)

போகிற வழியில் ஊர்தோறும் தங்கி ஊரில் சென்று உப்பை விற்றார்கள். ஊர்களில் உமணர் (ஆடவர்) சென்று உப்பு விற்பது இல்லை. உமணப் பெண்கள் உப்பைக் கொண்டுபோய் விற்றனர். உப்பைக் கொடுத்து அதற்கு ஈடாக நெல்லைப் பெற்றனர்.

"நெல்லும் உப்பும் நேரே, ஊரீர்
கொள்ளீரோ வெனச் சேரி தோறும் நுவலும்."

(அகம்-390:8-9)

(சேரி-தெரு, நுவலும்-சொல்லும்.)

"கதழ்கோல் உமணர் காதல் மடமகன்
சில்கோல் எல்வளை தெவிர்ப்ப வீசி
நெல்லின் நேரே வெண்கல் உப்பெனச்
சேரி விலைமாறு கூறலின்."

(அகம்-140:5-8)

ஆறுகளும் கால்வாய்களும் இருக்கிற ஊர்களுக்குச் சிறு படகுகளில் உப்பை ஏற்றிக் கொண்டு போய் விற்றார்கள். சோழ நாட்டில் காவிரியாற்றின் வழியாகப் படகுகளில் உப்பு கொண்டுபோய் விற்றார்கள் அந்தப் படகுகளை, குதிரைகளைக் கட்டுவதுபோல, ஆற்றங்கரையோரமாக (வெள்ளத்தில் அடித்துக்கொண்டு போகாதபடி) கட்டி வைத்தார்கள். இதை,

"கொழும் பல்குடிச் செழும் பாக்கத்துக்
குறும்பல்லூர் நெடுஞ்சோணாட்டு
வெள்ளையுப்பின் கொள்ளை சாற்றி
நெல்லொடு வந்த வல்வாய்ப்பஃறி
பனைநிலைப் புரவியின் அணைமுதற் பிணிக்கும்
கழிசூழ் படப்பை." (பட்டினப்பாலை-27-32)

என்று கடியலூர் உருத்திரங் கண்ணனார் கூறுகிறார்.

வண்டிகள் போக முடியாத மலைநாட்டு ஊர்களுக்குக் கழுதைகளின் மேல் உப்பு மூட்டைகளை ஏற்றிக்கொண்டு போய் விற்றார்கள். அவர்கள் கூட்டமாகச் சேர்ந்து உப்புப் பொதிகளை ஏற்றிக் கொண்டு நல்லநிமித்தம் பார்த்து வீரர்களையும் அழைத்துக்கொண்டு மலைநாடுகளுக்குச் சென்றார்கள். ஏனென்றால், வழிப்பறிக் கொள்ளைக்காரர், யாருமில்லாத இடை வழியில் மறித்து அவர்களைக் கொள்ளையிடுவதும் உண்டு.

"அணங்குடை முந்நீர் பரந்த செருவின்
உணங்குதிறம் பெயர்ந்த வெண்கல் அமிழ்தம்
குடபுல மருங்கின் உய்ம்மார் புள்ளோர்த்துப்
படையமைத் தெழுந்த பெருஞ்செய் யாடவர்
நிரைப்பரப் பொறைய நரைப் புறக் கழுதைக்
குறைக் குளம்பு தைத்த கற்பிறழ் இயவு."

(அகம்-207:1-6)

(புள்ளோர்த்து-நன்னிமித்தம் பார்த்து, வழிப்பறி ஏற்படாமலிருக்க நிமித்தம் பார்த்து. படை அமைத்து - பாதுகாப்புக்காக வீரர்களை அமைத்துக் கொண்டு)

"பொறைமலி கழுதை நெடுநிரை தழீஇய
திருந்துவாள் வயவர்." (அகம்-89:12-13)

உப்பு மூட்டைகளை மட்டுமல்லாமல் மிளகு முதலிய வேறு பண்டங் களையும் சுமந்துகொண்டு போகக் கழுதைகளை அக்காலத்தில் பயன் படுத்தினார்கள்.

"இல்போல் பீழல் செல்வயல் ஒழிமார்
நெடுஞ்செவிக் கழுதைச் சிறுகாய் ஏற்றைப்
புறநிறைப் பண்டத்துப் பொறையசாஅக் களைந்த."

(அகம்-343:10-13)

உப்பு, மக்கள் எல்லோருக்கும் பயன்பட்ட இன்றியமையாப் பொருளாக இருந்தபடியால் உப்பு உற்பத்தித் தொழிலும் உப்பு வாணிகமும் சிறப்பாக நடந்தன.

வளை (சங்கு)

வளை என்றால் சங்கு என்பது பொருள். கடலில் வளைகள் கிடைத்தன. கிழக்கு மேற்கு தெற்கு ஆகிய மூன்று பக்கங்களிலும் கடல் சூழ்ந்திருந்தபடியால் சங்குகள் அதிகமாகக் கிடைத்தன. முக்கியமாக ஆறுகள் கடலில் கலக்கிற முகத்துவாரங்களில் சங்குகள் கிடைத்தன. கடலில் முழுகிச் சங்குகளை எடுத்தனர். சங்கு முழுகி எடுக்குந் தொழில் பல இடங்களில் நடந்தது. முக்கியமாகப் பாண்டி நாட்டின் கொற்கைக் குடாக்கடலில் சங்குக் குளிப்பும் முத்துக் குளிப்பும் நடைபெற்றன. அக்காலத்தில் தாமிரபரணி ஆறு கொற்கைக் குடாக் கடலில் சென்று விழுந்தது. அங்கு முத்தும் சங்கும் கிடைத்தன. அன்றியும் கொற்கைக் குடாக் கடல் பேர் போன துறைமுக மாகவும் இருந்தது. ரோமாபுரியிலிருந்து வந்த யவன வாணிகர் கடல் வழியாகக் கொற்கைப் பட்டினத்துக்கும் வந்தார்கள். தாலமி என்னும் யவனர் தமது நூலில் கொற்கைத் துறைமுகத்தை KolKhoi என்று கூறுகிறார். பிற்காலத்தில் கொற்கைக் குடாக் கடல் மணல் தூர்ந்து கிழக்கே ஐந்து மைல் தூரம் அகன்றுவிட்டது. இப்போது கொற்கைக் கடல் இருந்த இடம் மணல் தரையாக இருக்கிறது.

நெய்தல் நிலத்து மக்களான பரதவர் கொற்கைக் கடலில் முழுகி முத்துச் சிப்பிகளையும் சங்குகளையும் (வலம்புரிச் சங்கு, இடம்புரிச் சங்குகள்) எடுத்தனர். அவ்வமயம் முத்துக்குளிக்கிற செய்தியைச் சங்கு ஊதி முழக்கி ஊராருக்குத் தெரிவித்தார்கள்.

''இறங்கிரும் பரப்பின் எறிசுறா நீக்கி
வலம்புரி மூழ்கிய வான்திமில் பரதவர்
ஒலிதலைப் பணிலம் ஆர்ப்பக் கல்லெனக்
கலிகெழு கொற்கை.'' (அகம்-350:11-13)

(பணிலம் ஆர்ப்ப-சங்கு முழங்க)

வளைகளை (சங்குகளை) வாளினால் அறுத்து அரத்தினால் அராவி வளையல்களைச் செய்தார்கள். ''அரம்போழ் அல்வளை'' (ஐங்குறு நூறு நெய்தல் 106) ''கடற்கோடு அறுத்த அரம்போழ் அல்வளை'' (ஐங்குறு 194) ''கோடீர் எல்வளை'' (ஐங்குறு 196) ''கோடீர் இலங்குவளை'' (குறும்.31:5) (கோடுசங்கு) சங்கை அறுத்து வளையல் செய்த தொழில் அந்தக் காலத்தில் சிறப்பாக இருந்தது. சங்கு அறுக்குந் தொழிலைச் செய்தவர் 'வேளாப் பார்ப்பார்' என்று கூறப்பட்டனர்.

''வேளாப் பார்ப்பான் வாள் அரம் நுமித்து
வளைகளைந் தொழிந்த கொழுந்து''

(அகம்-24:1-2)

வேளாப் பார்ப்பார் என்பதற்கு வெள்ளி செய்யாத பார்ப்பான் என்றும் விசுவப் பிராமணர் என்னும் கம்மாளர் என்றும் இரண்டு வகையாகப் பொருள் கூறுகின்றனர். இது ஆராய்ச்சிக்குரியது நக்கீரர் சங்கு அறுத்து வளையல் செய்த குலத்தில் பிறந்தவர் என்பது ''சங்கறுப்ப தெங்கள் குலம் சங்கரனார்க்கேதுகுலம்'' என்னும் வெண்பாவினால் அறிகிறோம்.

சங்குவளை அணிவதை அக்காலத்துப் பெண்கள் நாகரிகமாகக் கருதினார்கள். அது மங்கலமாகவும் கருதப்பட்டது. மணமகன், தான் மணக்க இருக்கும் மணமகளுக்கு சங்குவளை கொடுப்பதும் அக்காலத்து வழக்கம். குடில்களில் வாழ்ந்த ஏழைப் பெண்கள் முதலாக அரண்மனைகளில் வாழ்ந்த அரசிகள் வரையில் எல்லாப் பெண்களும் சங்கு வளைகளை அணிந்தார்கள். செல்வச் சீமாட்டிகளும் அரசிகளும் பொன் வளைகளையும் அணிந்ததோடு அல்லாமல் கட்டாயமாகச் சங்கு வளைகளையும் அணிந்திருந்தார்கள். செல்வந்தர் அல்லாத சாதாரண மகளிர் இடம்புரிச் சங்கு வளைகளையும் செல்வந்தர்களான சீமாட்டிகளும் அரசியரும் வலம்புரிச்சங்கு வளைகளையும் அணிந்தார்கள். வலம்புரிச் சங்கு வளை விலையதிகமானது. தலையாலங் கானத்துச் செருவென்ற பாண்டியன் நெடுஞ்செழியனுடைய அரசியாகிய

பாண்டியமாதேவி கைகளில் தங்க வளைகளை அணிந்திருந்ததோடு வலம்புரிச் சங்கு வளைகளையும் அணிந்திருந்தாள்.

"பொலந்தொடி தின்ற மயிர்வார் முன்கை
வலம்புரி வளையொடு கடிகைநூல்
யாத்து" (நெடுநல்வாடை 141-142)

பெண்களைத் தவிர மற்ற மங்கையர் எல்லோரும் சங்கு வளைகளை அணிந்தபடியால் சங்குவளை அறுக்குந் தொழில் அக்காலத்தில் நாடெங்கும் முக்கியமாக இருந்தது. முக்கியமான நகரங்களில் சங்கு அறுக்கும் தொழிற்சாலைகள் இருந்தன. காவிரிப்பூம்பட்டினத்தில் 'அணிவளை போழுநர் அகன் பெருவீதியும்' (சிலம்பு-5:47) இருந்தது. சேர நாட்டு வஞ்சிமாநகரத்தில்,

"இலங்கரம் பொருஉம் வெள்வளை போழ்நரோடு
இலங்குமணி விளைஞர் இரீஇய மறுகும்."

(மணி.28:44-45)

இருந்தது சங்குவளை சுமங்கலிப் பெண்களுக்கு மங்கல அணியாக இருந்தது. கணவனை இழந்து கைம்பெண் ஆன மகளிர் தங்கள் கைகளில் அணிந்திருந்த சங்கு வளைகளை உடைத்தெறிந்தனர்.

"கூந்தல் கொய்து குறுந்தொடி நீக்கி
அல்லி உணவின் மனைவி."

(புறம் 250:4-5)

கோவலனுடைய மனைவி கண்ணகி தான் அணிந்திருந்த பொன் நகைகளையெல்லாம் (தங்கக்காப்பு உட்பட) விற்ற பிறகும் சங்கு வளையலை மட்டும் அணிந்திருந்தார் அவர் மதுரையில் கோவலனை இழந்து கைம்பெண் ஆன பிறகு கொற்றவை கோயிலின் பின்பு தன்னுடைய சங்கு வளைகளை உடைத்துப் போட்டார்.

"கொற்றவை வாயிலில் பொற்றொடி
தகர்த்து" (சிலம்பு-கட்டுரைகாதை-181)

('பொற்றொடி - பொலிவினையுடைய சங்குவளை. துர்க்கை கோயில் வாயிலிலே தன் கைவளையைத் தகர்த்து' என்பது அரும்பதவுரை விளக்கம்).

கைம்பெண்களைத் தவிர ஏனைய மகளிர் எல்லோரும் அக்காலத்தில் சங்கு வளைகளை அணிந்திருந்தார்கள். இதைச் சங்க இலக்கியங்களில் நெடுகக் காணலாம். சங்குவளை அணியும் வழக்கம் சமீப காலத்தில் மறைந்து விட்டது. பதினெட்டாம் நூற்றாண்டு முதல் கண்ணாடி வளையல் அணியும் வழக்கம் ஏற்பட்டுவிட்டது. முஸ்லீம் (முகமதியர்) தொடர்பு ஏற்பட்ட பிறகு இந்த மாறுதல் ஏற்பட்டது. தொன்றுதொட்டுப் பல நூற்றாண்டுகளாகத் தமிழகத்திலும் பாரத நாட்டிலும் மகளிர் சங்கு வளைகளையணிந்து வந்த வழக்கம் பிற்காலத்தில் மறைந்து போயிற்று. அந்தக் காலத்தில் சங்கு எடுக்கும் தொழிலும் சங்கு அறுக்கும் தொழிலும் சிறப்பாக நடந்து வந்து, பிற்காலத்தில் மறைந்து போயிற்று.

சங்கு முழங்குவது மங்கலமாகக் கருதப்பட்டது. அக்காலத்து அரசர் களின் அரண்மனைகளில் காலை வேளையில் வலம்புரிச் சங்கும் முரசும் முழங்கப்பட்டன. ''இரங்கு குரல் முரசமொடு வலம்புரி ஆர்ப்ப'' (புறம்:397-5) இக்காலத்திலும் திருமண வீடுகளிலும் சங்கு முழங்கப் படுகிறது. கோயில்களில் திருவிழாக் காலத்தில் சங்கு முழங்கப்படுகிறது. ஆனால், தொன்று தொட்டு மகளிர் சங்கு வளையல் அணிந்து வந்த வழக்கம் அடியோடு மறைந்துவிட்டது.

கரும்பும் வெல்லமும்.

சங்க காலத்தில் கரும்பும் வெல்லமும் முக்கியமான விவசாயப் பொருளும் உற்பத்திப் பொருளுமாக இருந்தது. கொங்கு நாட்டிலே தகடூர் நாட்டை யரசாண்ட அதிகமான் அரசர்களின் முன்னோன் ஒருவன், தேவ லோகத்திலிருந்து கரும்பைக் கொண்டு வந்து தமிழ் நாட்டில் பயிர் செய்தான் என்று கூறப்படுகிறான்.

''அமரர்ப் பேணியும் ஆவுதி அருத்தியும்
அரும்பெறல் மரபில் கரும்பு இவண் தந்தும்
நீரக இருக்கை ஆழி சூட்டிய
தொன்னிலை மரபின் முன்னோர் போல''

(புறம்-99:1-4)

என்று ஔவையார் கூறுகிறார். அவரே இன்னொரு செய்யுளிலும் இதைக் கூறுகிறார்.

''அரும்பெறல் அமிழ்தம் அன்ன
கரும்பு இவண் தந்தோன் பெரும்பிறங் கடையே.''

(புறம்-392:20-21)

இதனால், கொங்கு நாட்டு அதிகமான் அரசன் ஒருவன் ஏதோ தூரதேசத்திலிருந்து கரும்பைக் கொண்டு வந்து தமிழகத்தில் முதல் முதலாகப் பயிர் செய்தான் என்பது தெரிகிறது.

கரும்பைப் பழனவெதிர் என்றுங் கூறினர். (ஐங்குறு நூறு-91) (பழனம்-கழனி, வெதிர்-மூங்கில்.) மூங்கில் மலைகளில் செழித்து வளரும். கரும்பு கழனிகளில் செழித்து வளர்கிறது. ஆகவே கரும்பு 'பழனவெதிர்' என்று கூறப்பட்டது. கரும்புப் பாத்திகளைப் பற்றிச் சங்கச் செய்யுள்கள் கூறுகின்றன. பாண்டிநாட்டுச் சிறுமலையில் கரும்பு பயிர் செய்யப்பட்டது.

தமிழகத்தில் எல்லா ஊர்களிலும் கரும்பு பயிர் செய்யப்பட்டது. கரும்பைச் சாறு பிழிந்து காய்ச்சி வெல்லஞ் செய்யும் எந்திரங்களும் ஆலைகளும் ஊர்தோறும் இருந்தன. பாண்டி நாட்டுத் தேனூரில் கரும்புச் சாற்றைப் பிழிந்து வெல்லங் காய்ச்சிய ஆலை இருந்தது. அந்த யந்திரம் இயங்கும்போது யானை பிளிறுவது போல ஓசையுண்டாயிற்று.

''கரும்பின் எந்திரம் களிற்றெதிர் பிளிற்றும்
தேர்வண் கோமான் தேநூர்.''

(ஐங்குறு நூறு-55)

தொண்டை நாட்டு ஊர்களிலும் வெல்லங் காய்ச்சும் ஆலைகள் இருந்தன.

''எந்திரஞ் சிலைக்கும் துஞ்சாக் கம்பலை
விசயம் அடூஉம் புகைசூழ் ஆலைதொறும்
கரும்பின் தீஞ்சாறு விரும்பினிர் பெறுமின்''

(பெரும்பாண் 260-261)

(விசயம்-வெல்லம்) 'ஆலைக்கலமரும் தீங்கழைக் கரும்பே.' (மலைபடு கடாம் 119).

''மழைகண்டன்ன ஆலைதொறும் ஞெரேரெனக்
கழைகண் உடைக்கும் கரும்பின் ஏத்தமும்''

(மலைபடுகடாம்-340-341)

வெல்லத்தை மக்கள் அதிகமாகப் பயன்படுத்தினபடியால் வெல்லங் காய்ச்சுந்தொழிலும் கரும்பு பயிரிடும் தொழிலும் சிறப்பாக நடந்தன. வெல்லம் உரோம் (**Rome**) நாடு முதலிய அயல்நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டதா என்பது தெரியவில்லை. அக்காலத்தில் ஐரோப்பா

கண்டத்தவருக்குக் கரும்பும் வெல்லமும் தெரியாது. உரோமர் இனிப்புக்குத் தேனை மட்டும் பயன்படுத்தினார்கள். ஆனால், தேன் எல்லோருக்கும் கிடைத்திருக்குமா என்பது ஐயமாக இருக்கிறது

ஐரோப்பியருக்குக் கரும்பும் வெல்லமும் 15ஆம் நூற்றாண்டில்தான் அறிமுகம் ஆயிற்று. அதற்கு முன்பு அவர்களுக்கு சர்க்கரை வெல்லம் முதலிய கரும்புப் பொருள்கள் தெரியா. 16ஆம் நூற்றாண்டில் ஐரோப்பியர் கரும்பைக்கொண்டு போய் மேற்கிந்தியத் தீவுகளிலும் அமெரிக்காவிலும் பயிர் செய்தார்கள். அவர்கள் அங்கிருந்து வெல்லச் சர்க்கரை காய்ச்சி ஐரோப்பாவுக்கு ஏற்றுமதி செய்தார்கள். பீட்ருட் கிழங்கிலிருந்து சர்க்கரை காய்ச்சும் முறையை ஐரோப்பியர் கண்டறிந்ததும் 18ஆம் நூற்றாண்டில்தான். எனவே, ஐரோப்பியருக்கு வெல்லச் சர்க்கரை நெடுங்காலமாகத் தெரியாமலிருந்தது. ஆனால், பாரத நாட்டிலும் தமிழகத்திலும் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே வெல்லம் செய்யப்பட்டது. சங்ககாலத்திலே கரும்புப் பயிரும் வெல்லங்காய்ச்சுந் தொழிலும் சிறப்பாக நடந்தன. வெல்லங் காய்ச்சுவது முக்கியமான தொழில்களில் ஒன்றாக இருந்தது

சங்க காலத்தில் உப்பு உற்பத்தி செய்வதும் வெல்லங் காய்ச்சுவதும், சங்குவளையல் அறுப்பதும் ஆகிய தொழில்களும் வாணிகங்களும் சிறப்பாக நடந்தன. இவற்றைப்பற்றிய செய்திகளைச் சங்க இலக்கியங்களில் ஆங்காங்கே படிக்கிறோம். இந்த மூன்று வாணிகப் பொருள்களில் சங்கு வளையல் வாணிகம் இக்காலத்தில் முழுவதும் மறைந்து போய்விட்டது. ஆனால் உப்பு வாணிகமும் வெல்லம் சர்க்கரை வாணிபமும் பெருகி யிருக்கிறது.

சங்க காலத்தில் நடந்த வேறு கைத்தொழில் வாணிகம் முதலிய வற்றைப் பற்றிப் பின்னர் ஆராய்வோம்.

ஆராய்ச்சி மலர் - 3 - 1971

5. சங்க காலத்து நடுகற்கள்

பழங்காலத்துத் தமிழர் வீரத்தைப் போற்றினார்கள் போர்க்களத்தில் புறங்காட்டி ஓடாமல் திறலோடு போர் செய்த வீரர்களைத் தமிழர் புகழ்ந்து போற்றிப் பாராட்டினார்கள். திறலோடு போர்செய்து களத்தில் விழுந்து உயிர்விட்ட வீரர்களுக்கு நடுகல் நட்டு நினைவுச்சின்னம் அமைத்தார்கள்.

விறல் வீரர்களின் நினைவுக்காக நடப்பட்ட நடுகற்களைப் பற்றிச் சங்க நூல்களில் காணலாம்.

வெட்சிப் போர், கரந்தைப் போர், வஞ்சிப் போர், உழிஞைப்போர், நொச்சிப் போர், தும்பைப் போர், வாகைப்போர் என்று போரைத் தமிழர் ஏழு வகையாகப் பிரித்திருந்தார்கள். சங்க காலத்தில், அரசர்கள் போர் செய்வதைத் தங்கள் கடமைகளில் முக்கியமானதாகக் கருதினார்கள் ஏழு வகையான போர்களிலே எந்தப் போரானாலும் ஒரு வீரன் திறலாகப்போர் செய்து உயிர் விட்டால் அந்த வீரனுக்கு நடுகல் நட்டு அவன் வீரத்தைப் பாராட்டினார்கள். வீரர்களின் நினைவுக்காகக் கல்நடுவதைத் திருக்குறளும் கூறுகிறது.

'என் ஐமுன் நில்லன்மின் தெவ்விர், பலர் என் ஐ
முன்நின்று கல்நின் றவர்'

(படைச்செருக்கு)

வீரத்தைப் பாராட்டி நடப்படுவதனால் நடுகல்லுக்கு வீரக்கல் என்றும் பெயர் உண்டு வீரக்கல் நடுவதற்கு ஐந்து துறைகளைக் கூறுகிறார் தொல்காப்பியர் அவை காட்சி, கல்கோள், நீர்ப்படை, நடுதல், வாழ்த்து என்று ஐந்து துறைகளாம் காட்சி என்பது நட வேண்டிய கல்லை மலையில் கண்டு தேர்ந்தெடுப்பது கல்கோள் என்பது தேர்ந்தெடுத்த கல்லைக் கொண்டு வருவது நீர்ப்படை என்பது கொண்டு வந்த கல்லில் இறந்த வீரனுடைய பெயரையும் அவனுடைய சிறப்பையும் பொறித்து நீராட்டுவது. நடுதல் என்பது அந்த வீரக்கல்லை நட வேண்டிய இடத்தில் நட்டு அதற்கு மயிற் பீலிகளையும் மாலைகளையுஞ் சூட்டிச் சிறப்புச் செய்வது. வாழ்த்து என்பது யாருக்காகக் கல் நடப்பட்டதோ அந்த வீரனுடைய திறலையும் புகழையும் வாழ்த்திப் பாடுவது. கல்நாட்டு விழாவுக்கு ஊரார் மட்டும் அல்லாமல் சிறப்பாக வீரர்களும் வந்து சிறப்புச் செய்வார்கள்

போரில் இறந்த வீரர்களுக்கு நடுகல் நடுகிற வழக்கம் பழந்தமிழகத்தில் மட்டுமல்லாமல் வேறு நாடுகளிலும் பழங்காலத்தில் இருந்து வந்தது ஐரோப்பாக் கண்டத்திலும் சில நாடுகளில் நடுகல் நடுகிற வழக்கம் பழங்காலத்தில் இருந்தது. அந்த நடுகற்களுக்கு அவர்கள் மென்ஹிர் என்று பெயர் கூறினார்கள். மென்ஹிர் என்றால் நெடுங்கல் அல்லது உயரமான கல் என்பது பொருள் மென்ஹிர் (*Menhir*) என்பது பிரெடன் (*Breton*) மொழிச்சொல் (*"Men' = Stone. "Hir'= High.*) இந்தோனேசியத் தீவுகள்

எனப்படும் ஜாவா சுமத்திரா போன்ற கிழக்கிந்தியத் தீவுகளிலும் நடுகல் நடுகிற வழக்கம் பழங்காலத்தில் இருந்தது. இதனால், பழந்தமிழரைப் போலவே வேறுநாட்டாரும் நடுகல் நடுகிற வழக்கத்தைக் கொண்டிருந் தார்கள் என்பது தெரிகின்றது.

வீரர்களுக்கு நடுகல் நட்டதைச் சங்கச் செய்யுள்களில் காண்கிறோம். கரந்தைப் போரில் இறந்துபோன ஒரு வீரனுக்கு நடுகல் நட்டதை ஆவூர் மூலங்கிழார் தம்முடைய செய்யுளில் கூறுகிறார். (புறம்.261:13-15) இன்னொரு கரந்தைப் போரில் வீரமரணம் அடைந்த ஒரு வீரனுக்கு வீரக்கல் நட்டபோது அவன் மீது கையறுநிலை பாடினார் புலவர் உறையூர் இளம் பொன் வாணிகனார். அந்த நடுகல்லின் மேல் அவனுடைய பெயரைப் பொறித்து மாலைகளாலும் மயிற் பீலிகளாலும் அழகு படுத்தியிருந்ததை அச்செய்யுளில் அவர் கூறுகிறார். (புறம்.264)

சேலம் மாவட்டத்திலிருந்த தகடூர் கோட்டையின் தலைவன் அதிகமான் நெடுமான் அஞ்சி. பெருஞ்சேரல் இரும்பொறை என்னும் சேர அரசன் தகடூரின் மேல் படையெடுத்து வந்து அக்கோட்டையை முற்றுகை யிட்டான். அதன் காரணமாகப் பல நாட்கள் போர் நிகழ்ந்தது. அப்போரில் அதிகமான் நெடுமான் அஞ்சி புண்பட்டு இறந்து போனான். அவனுக்கு வீரக்கல் நட்டு அவன் வீரத்தைப் போற்றினார்கள். அப்போது அவனுடைய புலவராக இருந்த ஔவையார் கையறு நிலைபாடினார். (புறம்.232)

கோவலர் (ஆயர்) வளர்த்து வந்த பசுமந்தைகளைப் பகையரசனுடைய வீரர்கள் வந்து ஓட்டிக்கொண்டு போய் விட்டார்கள். இதனையறிந்த அவ்வூர் வீரன் அவர்களைத் தொடர்ந்து சென்று வில்லை வளைத்து அம்புமாரி பொழிந்து பகைவரை ஓட்டித் தன்னூர்ப் பசுக்களை மீட்டுக்கொண்டான். ஆனால், வெற்றி பெற்ற அவன் பகை வீரர்கள் எய்த அம்புகளினால் புண்பட்டு மாண்டு போனான். திறலுடன் போர் செய்து மாண்டுபோன அவ்வீரனுக்கு அவ்வூர்க் கோவலர்கள் நடுகல் நட்டார்கள். அந்த நடுகல்லுக்கு வேங்கை மரத்துப் பூக்களினாலும் பனங்குருத்துகளாலும் மாலைகள் கட்டிச்சூட்டிச் சிறப்புச் செய்தார்கள் இந்தச் செய்தியைச் சோணாட்டு முகையலூர் சிறுகருத்தும்பியார் தம்முடைய செய்யுளில் கூறியுள்ளார். (புறம்-265)

இன்னொரு ஊரில் பகைவர்கள் வந்து அவ்வூர்ப்பசுமந்தைகளைக் கவர்ந்து கொண்டு போனார்கள். அப்போது அவ்வூர் வீரன் அவர்களைத்

தொடர்ந்து சென்று போராடி மந்தைகளை மீட்டுக் கொண்டான். ஆனால், பகைவர் எய்த அம்புகள் உடம்பில் பாய்ந்தபடியால் அவன் இறந்து போனான். அவனுக்காக நட்ட வீரக்கல்லில் அவனுடைய பெயரைப் பொறித்து மயிற் பீலிகளினால் அக்கல்லை அழகு செய்து போற்றினார்கள் என்று மருதனிளநாகனார் என்னும் புலவர் பாடுகிறார். (அகம் 131:6-11)

தன் ஊர்ப் பசுக்களைப் பகைவர் கவர்ந்து கொண்டு போனபோது அவ்வூர் வீரன் அப்பகைவரிடமிருந்து பசுக்களை மீட்டான். ஆனால், பகைவரின் அம்புகளினால் புண்பட்ட அவன் இறந்து போனான். அவ்வூரார் அவ்வீரனின் நினைவுக்காக வீரக்கல் நட்டுப் போற்றினார்கள். அந்தக் கல்லின் மேல் அவ்வீரனுடைய பெயரை எழுதினார்கள். மாலைகளையும் பீலிகளையுஞ் சூட்டினார்கள். நடுகல்லின் மேலே சித்திரப் படத்தினால் (சித்திரம் எழுதப்பட்ட துணி), பந்தல் அமைத்துச் சிறப்புச் செய்தார்கள். இந்நிகழ்ச்சியை வட மோதங்கிழார் கூறியுள்ளார். (புறம் 260)

ஒரு ஊரிலிருந்த பசு மந்தைகளைச் சில வீரர்கள் வந்து பிடித்துக் கொண்டு போய்விட்டார்கள். அதையறிந்த அவ்வூர் வீரர் சிலர் அவர்களைத் தொடர்ந்து சென்று பசுக்களை மீட்பதற்காகப் போர் செய்தார்கள். பகைவரும் எதிர் நின்று அம்பு எய்தனர். பகைவரின் அம்புக்கு அஞ்சிச் சில வீரர்கள் ஓடிப் போனார்கள். ஒரு வீரன் மட்டும் புறங்கொடாமல் நின்று போர் செய்தான். பகைவீரர்களின் அம்புகள் அவனுடைய உடம்பில் தைத்து அவன் அக்களத்திலே இறந்துபோனான். அவ்விறல்வீரனுக்கு நடுகல் நட்டுப் போற்றினார்கள் அவ்வூரார். (புறம் 263)

ஆண்டுதோறும் வீரக்கல்லுக்கு அவ்வீரனுடைய உறவினர் பூசை செய்தார்கள். அந்நாளில் அந்நடுகல்லை நீராட்டி எண்ணெய் பூசி மலர் மாலைகளைச் சூட்டி நறுமணப் புகையைப் புகைத்தார்கள். அந்தப் புகையின் மணம் ஊரெங்கும் கமழ்ந்தது. வீட்டில் சமைத்த மதுவை இறந்த வீரனுக்குப் பலியாகக் கொடுத்தனர். இந்தச் செய்தியை மதுரை அறுவை வாணிகன் இளவேட்டனார் தம்முடைய செய்யுளில் கூறுகிறார். (புறம் 329)

சங்க காலத்துத் தமிழகத்திலே அடிக்கடி போர்கள் நிகழ்ந்தன. போரில் இறந்த வீரர்களுக்கு நடுகற்கள் நடப்பட்டன. ஆகையினால் நாடெங்கும் நடுகற்கள் காணப்பட்டன.

''நல்லமர் கடந்த நலனுடை மறவர்
பெயரும் பீடும் எழுதி யதர்தொறும்
பீலி சூட்டிய பிறங்குநிலை நடுகல்''

என்று (அகம் 67:8-10) புலவர் நோய் பாடியார் கூறியது போன்று ஊர் களிலும் வழிகளிலும் நடுகற்கள் இருந்தன.

நடுகற்கள், பலகை போன்று அமைந்த கருங்கற்களினால் ஆனவை. அவை நீண்டதாக இருந்தன. 'நெடுநிலை நடுகல்' என்று ஒரு புலவர் கூறுகிறார். பன்னிரண்டடி உயரமுள்ள நடுகற்களும் இருந்தன. பழமையான நடுகற்களின் மேலே செடி கொடிகளும் படர்ந்திருந்தன. நடுகல்லில் இறந்த வீரனுடைய பெயரும் பீடும் எழுதப்பட்டிருந்தபடியால் 'எழுத்துடை நடுகல்' என்று கூறப்பட்டது. வழிப்போக்கர் வழியில் உள்ள நடுகற்களண்டை நின்று அக்கற்களில் எழுதப்பட்ட எழுத்துக்களைப் படிப்பது வழக்கம். சில சமயங் களிலே அக்கற்களில் எழுதப்பட்ட எழுத்துகளில் சில எழுத்து மழுங்கி மறைந்து போய் சில எழுத்துகளே எஞ்சியிருக்கும். அவ்வெழுத்துகளைப் படிப்போருக்கு அதன் பொருள் விளங்காமலிருக்கும்.

சில வீரர்கள் தங்களுடைய அம்புகளை நடுகற்களின் மேல் தேய்த்துக் கூராக்குவர். எஃகினால் ஆன அம்பு முனையைத் தேய்க்கும்போது நடுகல்லில் எழுதப்பட்டுள்ள எழுத்துகள் சில மாய்ந்து போகும். எஞ்சியுள்ள எழுத்துகளைப் படிப்போருக்கு அவ்வெழுத்தின்பொருள் விளங்காமற் போயிற்று. இச்செய்தியை மருதன் இளநாகனார் கூறுகிறார்.

''இருங்கவின் இல்லாப் பெரும்புல் தாடிக்
கடுங்கண் மறவர் பகழி மாய்த்தென
மருங்குல் நுணுகிய பேஎமுதிர் நடுகல்
பெயர்பயம் படரத் தோன்று குயிலெழுத்து
இயைபுடன் நோக்கல் செல்லாது அசைவுடன்
ஆறு செல் வம்பலர் விட்டனர் கழியும்
சூர்முதல் இருந்த ஓமையம் புறவு.''

(அகம் 297-5:11)

உப்பு வாணிகராகிய உமணர் உப்பு மூட்டைகளை வண்டிகளில் ஏற்றிக்கொண்டு ஊர் ஊராகச் சென்று விற்பார்கள். செல்லும்போது வழியில் உள்ள நடுகற்களின் மேல் வண்டிச் சக்கரம் உராய்ந்து நடுகல்லில் எழுதப்பட்டுள்ள எழுத்துகளில் ஒன்றிரண்டு எழுத்துகளைத் தேய்த்து

விடுவதும் உண்டு. அவ்வாறு மறைந்துபோன எழுத்து இல்லாமல் மற்ற எழுத்துக்களைப் படிக்கிறவர்களுக்கு அதன் வாசகம் வேறுபொருளைத் தந்தது என்று மருதன் இளநாகனாரே மீண்டுங் கூறுகிறார்.

"மரங்கோள் உமண்மகன் பேரும் பருதிப்
புன்றலை சிதைத்த வன்றலை நடுகல்
கண்ணி வாடிய மண்ணா மருங்குல்
கூருளி குயின்ற கோடுமாய் எழுத்தால்
ஆறுசெல் வம்பலர் வேறுபயம் படுக்குங்
கண்பொரி கவலைய கானகம்"

(அகம்.343:4-9)

நடுகற்கள் பலவித உயரங்களில் அமைக்கப்பட்டன. மூன்று அடி உயரமுள்ள நடு கற்களும் பன்னிரண்டடி உயரமுள்ள நடுகற்களும் உண்டு.

இதுவரையில் கடைச்சங்க காலத்து (கி.மு.300 முதல் கி.பி.250 வரையில்) நடுகற்களைப் பற்றி ஆராய்ந்தோம். அக்காலத்து நடுகற்கள் இதுவரையில் கண்டுபிடிக்கப்படவில்லை. சங்க காலத்துக்குப் பிறகு கி.பி.14ஆம் நூற்றாண்டு வரையிலும் தமிழ்நாட்டிலும் கன்னட நாட்டிலும் வீரர்களுக்கு நடுகல் நடுகிற வழக்கம் இருந்து வந்தது. பிற்காலத்து வீரக்கற்களில் பல நமக்குக் கிடைத்திருக்கின்றன. இந்தப் பிற்காலத்து நடுகற்களில் பிற்காலத்து வட்டெழுத்துகள் பொறிக்கப்பட்டிருக்கின்றன. ஆனால் சங்க காலத்து வீரக்கற்கள் ஒன்றேனும் இதுகாறும் கிடைக்கவில்லை.

சங்க காலத்தில் வழங்கி வந்த தமிழ் எழுத்து எது?

வட்டெழுத்து என்னும் ஒருவகையான எழுத்து முற்காலங்களில் தமிழ்நாட்டில் வழங்கி வந்தது. வட்டெழுத்து வழங்குவதற்கு முன்பு பிராஃமி எழுத்து சங்க காலத்தில் வழங்கிவந்தது என்பதை இப்போது அறிகிறோம். மலைக்குகைகளிலே பாறைக் கற்களில் செதுக்கி வைக்கப்பட்டுள்ள பிராஃமி எழுத்துகளிலிருந்து வட்டெழுத்துக்கு முன்பு பிராஃமி எழுத்து தமிழ்நாட்டில் வழங்கிவந்தது என்பதை அறிகிறோம்.

கி.மு.மூன்றாம் நூற்றாண்டில் பாரத தேசத்தை அரசாண்ட அசோக சக்கரவர்த்தி காலத்தில் பிராஃமி எழுத்து தமிழ்நாட்டில் வழங்கப்பட்டது என்று பொதுவாகக் கருதப்படுகிறது. அதாவது கடைச்சங்க காலத்திலே பிராஃமி எழுத்து தமிழகத்தில் வழங்கப்பட்டது என்பது தெரிகின்றது

இப்போது தமிழ்நாட்டில் கிடைக்கிற பிராஃமி எழுத்துகள் தமிழ்நாட்டுப் பௌத்த ஜைன மதத்தார்களால் எழுதப்பட்டவை. பௌத்த ஜைனர் காலத்துக்கு முன்பு, அதாவது பிராஃமி எழுத்து வருவதற்கு முன்பு தமிழ்நாட்டில் என்ன எழுத்து வழங்கி வந்தது?

தமிழர்களுக்கு வேறு எழுத்து இல்லை என்றும் பிராஃமி எழுத்தைத் தான் தமிழர்களும் கைக்கொண்டார்கள் என்றும், தொல்காப்பியம், புறநானூறு அகநானூறு முதலிய சங்க நூல்கள் எல்லாம் பிராஃமி எழுத்தினால் எழுதப்பட்டவை என்றும் ஒரு சாரார் கூறுகின்றனர். இவ்வாறு கூறுகிறவர்கள், (பிராஃமி எழுத்து கண்டுபிடிக்கப்படுவதற்கு முன்பு), தொல்காப்பியம் முதலிய சங்க காலத்து நூல்கள் வட்டெழுத்தினால் எழுதப்பட்டன என்று கூறிவந்தார்கள். இப்போது, பிராஃமி எழுத்து சங்க காலத்தில் வழங்கி வந்தது என்பது தெரிந்தபிறகு, தொல்காப்பியம் முதலிய சங்க நூல்கள் பிராஃமி எழுத்தினால் எழுதப்பட்டவை என்று கூறுகிறார்கள்.

இன்னொரு சாரார், பிராஃமி எழுத்துக்கு முன்பு ஏதோ ஒரு வகையான எழுத்து சங்க காலத்தில் வழங்கி வந்தது என்றும், பிராஃமி எழுத்து வந்த பிறகு அந்தப் பழைய எழுத்து மறைந்துவிட்டதென்றும் கூறுகிறார்கள். அந்தப் பழைய எழுத்து இன்ன உருவமுடையது என்பது தெரியவில்லை.

பிராஃமி எழுத்துக்கு முன்பு தமிழ்நாட்டில் வேறு வகையான பழைய எழுத்து இருந்ததா? இருந்தது என்று சொல்வதற்குச் சான்று இல்லை. இருக்கவில்லை என்று சொல்வதற்கும் சான்று இல்லை.

பிராஃமி எழுத்துத்தான் முதன் முதல் தமிழர் அறிந்த எழுத்து, அதற்கு முன்பு எந்த எழுத்தும் தமிழில் இல்லை என்று கூறுகிறவர், வேறு பழைய எழுத்து இருந்ததில்லை என்று கூறுவதற்குச் சான்று காட்டவில்லை.

பிராஃமி எழுத்துக்கு முன்பு தமிழில்வேறு எழுத்து இருந்ததா இல்லையா என்னும் கேள்விக்குச் சரியான விடைகூறத்தகுந்தவை சங்க காலத்து நடுகற்களே. சங்க காலத்து நடுகற்களில் எழுத்துகள் பொறிக்கப் பட்டிருந்தன என்பதை மேலே சான்று காட்டிக் கூறினோம். அந்த வீரக்கற்கள் கிடைக்குமானால், அக்கற்களில் எழுதப்பட்டுள்ள எழுத்துகளைக் கொண்டு

அந்தக் காலத்தில் வழங்கி வந்த எழுத்தின் வரிவடிவத்தையறியலாம். ஆனால், இதுவரையில் சங்க காலத்து நடுகல் ஒன்றேனுங் கண்டுபிடிக்கப் படவில்லை

பௌத்தர் ஜைனர் மட்டும் ஆதிகாலத்தில் தமிழ்நாட்டில் பிராஃமி எழுத்தை எழுதினார்கள் என்றால், அக்காலத்தில் பௌத்தர் ஜைனரல்லாத தமிழர் வேறு ஒரு வகையான எழுத்தை எழுதியிருக்க வேண்டும். அந்த எழுத்துகள் நிச்சயமாக அக்காலத்து நடுகற்களில் எழுதப்பட்டிருக்க வேண்டும். ஆகவே, கடைச்சங்க காலத்தில் பிராஃமி எழுத்து வழங்கி வந்ததா அல்லது வேறு வகையான எழுத்து வழங்கி வந்ததா என்பதை அறிவதற்கு அக்காலத்து நடுகற்களைக் கண்டுபிடிக்க வேண்டும். அகழ்வாராய்ச்சி செய்யும் புதை பொருள் ஆய்வாளர் (ஆர்க்கியாலஜி இலாகா) இதுபற்றி இது வரையில் சிந்திக்கவே இல்லை. இனியாயினும் இதுபற்றிச் சிந்திப்பார்களாக.

தமிழக அரசு தன் சொந்தச் செலவில் ஆர்க்கியாலஜி இலாகா ஒன்றை நிறுவி செயல்பட்டு வருகிறது. அந்த இலாகா, சங்ககாலத்து நடுகற்களைக் கண்டுபிடித்து உதவுமானால் இந்தப் பிரச்சினைக்கு முடிவு காணக்கூடும். இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு நடப்பட்ட வீரக்கற்கள் நிலத்திலே ஆழ்ந்து புதைந்து கொண்டிருக்கும் பதினைந்து அடி அல்லது இருபது அடி ஆழத்திலும் புதைந்து கிடக்கலாம். தமிழ்நாட்டுப் பல்கலைக் கழகங்களும் தமிழகத்து ஆர்க்கியாலஜி இலாகாவும், மத்திய அரசாங்கத்து ஆர்க்கியாலஜி இலாகாவும் இணைந்து ஒன்று சேர்ந்து இதில் முயல்வார்களானால் பயன் காணக்கூடும்.

தமிழ்நாட்டு ஆர்க்கியாலாஜி இலாகாவும் மத்திய அரசாங்கத்து ஆர்க்கியாலஜி இலாகாவும் (எபிகிராபி இலாகாவும் உட்பட) கோயில் களிலுள்ள கல்வெட்டெழுத்துக்களையும் தரைக்குமேலே காணப்படுகிற கல்வெட்டெழுத்துகளையும் மட்டும் கண்டுபிடித்துக் கொண்டிருப்பது போதாது. கரைக்குள் புதைந்து கிடக்கிற வீரக்கல் போன்றவற்றையும் அகழ்ந் தெடுத்து வெளிப்படுத்த வேண்டும். பெயரளவில் மட்டும் செயலாற்றாமல் சுறுசுறுப்பாக முயற்சியோடு செயலாற்ற வேண்டும். "உழைப்பின் வாரா உறுதிகள் உளவோ?"

ஆராய்ச்சி மலர்-1-1969

6. வஞ்சிக்கருவூர் சங்ககாலச் சேரநாட்டின் தலைநகரம்

சங்க காலத்துச் சேரநாடு தமிழகத்தின் ஒரு பகுதியாக இருந்தது. அந்தச் சேர நாட்டின் தலைநகரம் வஞ்சிமாநகர் என்று பெயர் பெற்றிருந்தது. வஞ்சி நகரத்துக்குக் கருவூர் என்று இன்னொரு பெயரும் வழங்கியது. வஞ்சிக் கருவூர் சேர நாட்டிலே மேற்குக் கடற்கரை ஓரத்தில் சுள்ளியாற்றின் கரைமேல் இருந்தது. அந்தக் காலத்திலேயே கொங்கு நாட்டின் தலைநகரமும் வஞ்சி என்றும் கருவூர் என்றும் பெயர் பெற்றிருந்தது. பிளைனி என்னும் கிரேக்க வரலாற்றாசியர் ஒரு கருவூரைக் குறிப்பிடுகிறார். அந்தக் கருவூரை அவர் கரவ்ரா என்று கூறுகிறார். அந்தக் கருவூர் கடற்கரைக்கு அப்பால் உள் நாட்டிலே இருந்தது என்று அவர் கூறியுள்ளார். அவர் கூறுகிற கருவூர், கொங்கு நாட்டுக் கருவூராகும். கொங்கு நாட்டுக் கருவூர் இப்போது திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் கரூர் என்று பெயர் பெற்றிருக்கிறது. பிளைனி கூறுகிற கருவூர் ஒருவேளை சேர நாட்டுக் கருவூராகவும் இருக்கக் கூடும். எப்படியென்றால், சேரநாட்டுக் கருவூர் முசிறித் துறைமுகத்துக்குக் கிழக்கே சிறிது தூரத்தில் உள்நாட்டில் இருந்தது. ஆகையால், பிளைனி கூறுகிற கரவ்ரா என்னும் கருவூர் சேரநாட்டுக் கருவூரா அல்லது கொங்கு நாட்டுக் கருவூரா என்பதை அறுதியிட்டுக் கூறமுடியவில்லை. கருவூர் என்னும் பெயரோடு இரண்டு ஊர்கள், சேர நாட்டில் ஒன்றும், கொங்கு நாட்டில் ஒன்றும் இருந்தன. இரண்டு கருவூர்கள் இருந்தன என்பதை யறியாமல், சில ஆண்டுகளுக்கு முன்பு சில அறிஞர்கள் இதுபற்றி ஆராய்ந்தார்கள். அவர்களில் சிலர், கொங்கு நாட்டில் உள்ள கரூரே, சேர நாட்டின் தலைநகரம் என்று கூறினார்கள். வேறு சிலர், சேரநாட்டுத் தலைநகரமான கருவூர் சேர நாட்டிலே மேற்குக் கடற்கரையையடுத்து இருந்தது என்று கூறினார்கள்.

'ஆயிரத்து எண்ணூறு ஆண்டுகளுக்கு முற்பட்ட தமிழர்' என்னும் நூலை ஆங்கிலத்தில் எழுதின திரு.கனகசபைப்பிள்ளை, வஞ்சிக் கருவூர் சேரநாட்டில் இருந்தது என்று அந்நூலில் எழுதினார். வேறு சில அறிஞர்களும் அவ்வாறே கருதினார்கள். கொங்கு நாட்டுக் கருவூரே சேரர்களின் தலைநகரம் என்பதை நிலைநாட்டுவதற்காகத் திரு.ரா.இராகவையங்கார் 'வஞ்சிமாநகர்' என்னும் நூலை எழுதினார். இந்த நூல் தெளிவு

இல்லாமல் படிப்பவருக்குக் குழப்பத்தையும் ஐயத்தையும் மேன்மேலும் கிளப்பிவிட்டது. இவரை ஆதரித்துத் திரு.மு இராகவையங்கார் தாம் எழுதிய 'சேரன் செங்குட்டுவன்' என்னும் நூலில் கொங்குநாட்டு வஞ்சிக் கருவூரே, சேரர்களின் தலைநகரம் என்று எழுதினார். வேறு சில அறிஞர்களும் இதுபற்றி ஆராய்ந்து கட்டுரைகளை எழுதினார்கள்.[1]

சேரநாட்டை அரசாண்ட சேர மன்னர்களின் தலைநகரம், சேர நாட்டிலே முசிறி துறைமுகத்துக்குக் கிழக்கே இருந்தது. அதற்கு வஞ்சிநகரம் என்றும் கருவூர் என்றும் பெயர்கள் வழங்கின. சேர மன்னர், தங்களுடைய சேரநாட்டுக்குக் கிழக்கேயுள்ள கொங்கு நாட்டைக் கைப்பற்றி அந்நாட்டை யும் அரசாண்டார்கள். அப்போது அவர்கள் கொங்கு நாட்டின் தலை நகரத்துக்குத் தங்களுடைய தலைநகரமான வஞ்சிக் கருவூரின் பெயரையே சூட்டினார்கள். ஆகவே, சங்க காலத்திலேயே சேரநாட்டிலும் கொங்கு நாட்டிலும் வஞ்சி (கருவூர்) என்னும் பெயருள்ள இரண்டு ஊர்கள் இருந்தன. இந்த வரலாற்று உண்மையை அறியாதபடியால், சில ஆண்டுகளுக்கு முன்பு சில அறிஞர்கள், கருவூர் (வஞ்சி) பற்றி இருவேறு கருத்துக்களைக் கூறி விவாதம் செய்தார்கள்.

இரண்டு வஞ்சிமா நகரங்களையும் (கருவூர்களையும்) சங்க நூல்கள் கூறுகின்றன. இடைக்காலத்தில் சேரநாட்டு வஞ்சிக் கருவூர் என்னும் பெயர் மறைந்து, அஞ்சைக்களம் என்றும் கொடுங்கோளூர் என்றும் பெயர் பெற்றது. பிற்காலத்தில், அஞ்சைக்களமும் (கொடுங்கோளூரும்) மறைந்து போயிற்று.

---

1. Vancimanagar, or the Great city called Vanci. C.S.Cheluva Aiyar. PP.113-134. Journal of Oriental Research, Madras. Vol.III. The Karora of Ptolemy. K.V.Krishna Ayyar. PP.119-120. Indian Historical quarterly. Vol.V; Vanchi or Karuvur-the ancient Chera Capital K.G.Sesha Ayyar PP. 249-259. Kerala society Papers, Trivandrum Series. 9-10. Vanci Mutur K.G.Sesha Ayyar. Rama Varma Research Institute Bulletin No.3 PP.1-9., Ganganur-A study K.R.Pisharoti. PP. 33-36. Rama Varma Research Institute Bulletin Vol.I., Ganganur-A Reply. Raja K.Rama Varma. Rama Varma Research Institute Bulletin. No.2PP.64-71., Karuvur Or Vanjimanagar. C.M.Ramachandran Chettiar. Quarterly Journal of the Mythic Society, Vol XXVI PP.144-46.

2.கொங்கு நாட்டு வரலாறு. மயிலை.சீனி.வேங்கடசாமி, 1974 பக்கம்.18.

சங்க காலத்தில் சேரநாட்டின் தலைநகரமாக இருந்த வஞ்சிக்கருவூரின் அமைப்பு, எப்படி இருந்தது என்பதை இங்கு ஆராய்வோம். இந்த ஆய்வுக்குப் பேருதவியாக இருப்பவை சங்க நூல்களே. வஞ்சிமா நகரத்தின் அமைப்பைக் கூறுவதற்கு முன்பு சேர நாட்டின் அமைப்பைப் பற்றித் தெரிந்து கொள்ளவேண்டும். அக்காலத்தில் குடகடல் என்று குறிப்பிடப்பட்ட இப்போதைய அரபிக்கடல், சேரநாட்டின் மேற்கு எல்லையாக இருந்தது. சேரநாட்டின் கிழக்கு எல்லை சையமலைத் தொடர்களாகும். சையமலைத் தொடர் இக்காலத்தில் மேற்குத் தொடர்ச்சி மலைகள் என்னும் பெயர் பெற்றுள்ளன. அரபிக் கடலுக்கும் சையமலைக்கும் இடையேயுள்ள சேரநாடு, அகலம் குறைந்தும் வடக்குத்தெற்காக நீண்டும் உள்ளது. கடலுக்கும் மலைக்கும் இடையேயுள்ள அகலம், ஐம்பது மைலுக்குள்ளாகவே உள்ளது.

அயிரிமலையும் பெரியாறும்

சேரநாட்டின் கிழக்கு எல்லையாக இருந்தது சையமலைத் தொடர் என்று கூறினோம். சையமலைத் தொடரில் உள்ள ஒருமலைக்கு அயிரிமலை என்பது பெயர். அயிரிமலை மேல் பேரியாறு (பெரியாறு) தோன்றிப் பாய்ந்தது. அந்த இடத்தில், அந்த ஆற்றுக்கு அயிரியாறு என்பது பெயர். அயிரிமலைமேல் அயிரியாறு தோன்றிய இடத்துக்கு அருகில் கொற்றவை கோயில் இருந்தது. அந்தக் கொற்றவைக்கு அயிரிக் கொற்றவை என்பது பெயர். அயிரிக்கொற்றவை சேர அரசர்களின் குல தெய்வம்.[3] சங்க இலக்கியத்தில் இரண்டு அயிரி ஆறுகள் கூறப்படுகின்றன. அகநானூறு 177-ம் பாடலிலும் (அகம்.177.11), 253-ம் பாடலிலும் (அகம்.253.20) கூறப்படுகிற அயிரை ஆறு வேறு. அந்த அயிரையாறு எருமை நாட்டில் (மைசூர் நாட்டில்) இருந்தது. பதிற்றுப்பத்தில் கூறப்படுகிற அயிரை ஆறு, சேரநாட்டு அயிரிமலைமேல் தோன்றி சேரநாட்டில் பாய்ந்த பெரியாற்றின் வேறு பெயர்.

அயிரிமலைமேல் தோன்றி, அம்மலைமேல் அயிரியாறு என்று பெயர் பெற்ற ஆறு, தரையில் இழிந்து மேற்கு நோக்கிப் பாய்ந்து அரபிக் கடலில் விழுந்தது. தரையில் பாய்ந்தபோது அந்த ஆற்றுக்குப் பேரியாறு என்று

---

3. பதிற்றுப்பத்து, மூன்றாம் பத்து 1.29. பதிகம். 'அயிரை மரைஇ' இதன் பழைய உரை காண்க. ஏழாம்பத்து 10.26. 'உருகெழுமரபின் அயிரைபரைஇ' 9-ம் பத்து 8.12. இதன் பழைய உரை காண்க 10.19.

பெயர். இதைப் பெரியாறு என்றும் வழங்குவர். பெரியாற்றுக்குச் சுள்ளி ஆறு என்னும் பெயர் உண்டு.[4] பெரியாறு வரலாற்றுச் சிறப்புடையது. பெரியாறு மலைமேலிருந்து தரையில் இழிந்து சம நிலத்தில் பாய்கிற இடத்தில், சேரன் செங்குட்டுவன் ஆண்டுதோறும் வேனிற்காலத்தில் பாசறை அமைத்து, சுற்றத்தோடு, அங்குத் தங்கியிருந்து வேனிற் காலத்தைக் கழித்தான். இந்தச் செய்தியைச் செங்குட்டுவனைப் பாடிய பரணர் கூறுகிறார்:

பல்பொறிமார்ப! நின்பெயர் வாழியரோ
நின்மலைப் பிறந்து நின்கடல் மண்டும்
மலிபுனல் நிகழ்தரும் தீநீர் விழவில்
பொழில்வதி வேனில் பேரெழில் வாழ்க்கை
மேவரு சுற்றமோடு உண்டினிது நுகரும்
தீம்புனல் ஆயம் ஆடும்
காஞ்சியம் பெருந்துறை மணலினும் பலவே [5]

வேனிற்காலத்தில் பெரியாற்றங்கரையில் செங்குட்டுவன் தங்கியிருந்த காலத்தில், அவனுடைய இளவலான இளங்கோவடிகளும் சீத்தலைச் சாத்தனாரும் அந்த இடத்துக்குச் சென்று செங்குட்டுவனைக் கண்டு வருவது வழக்கம். ஓராண்டு செங்குட்டுவன் மலையடிவாரத்துக்குச் சென்று தங்கியிருந்தபோது குன்றக் குறவரும் சீத்தலைச் சாத்தனாரும் செங்குட்டுவனுக்குக் கண்ணகியின் செய்தியைக் கூறினார்கள்.[6] இந்தச் செய்தியையறிந்த செங்குட்டுவன் கண்ணகிக்குப் பத்தினிக் கோட்டம் அமைக்க எண்ணினான்.

பெரியாறு சேரநாட்டில் மேற்கு நோக்கிப் பாய்ந்து, அரபிக் கடலில் விழுந்தது. பெரியாறு கடலில் கலந்த இடத்தில் முத்துச்சிப்பிகள் உண்டாயின. முத்துச் சிப்பியிலிருந்து முத்துக்கள் கிடைத்தன. இங்கு உண்டான முத்துக்களைக் கௌர்ணேயம் என்று கௌடல்லியரின் அர்த்த சாத்திரம் கூறுகிறது.[8]

---

4. 'சுள்ளியம் பேரியாறு' என்று அகம் 149 கூறுகிறது

5. பதிற்றுப்பத்து. ஐந்தாம்பத்து. 8. 12-18.

6. சிலப்பதிகாரம், காட்சிக்காதை அடி 21-92.

7. ஷை அடி 107-115.

8. கௌடல்லியர். அர்த்த சாத்திரம். 3-ம் பகுதி. 11-ஆம் அதிகாரம். மயிலை சீனி.வேங்கடசாமி எழுதிய 'சேரநாட்டு முத்து' என்னும் கட்டுரை காண்க. தெ பொ.மீ மணிவிழா மலர் பக்கம். 493-498

வடமொழி அர்த்த சாத்திரத்துக்குப் பழைய தமிழ் மலையாள உரை ஒன்று உண்டு. அந்த உரை இந்த முத்தைப்பற்றி இவ்வாறு கூறுகிறது. அதன் வாசகம் இது. ''கௌர்ணேய மாவிது மல (மலை) நாட்டில் முரசி ஆகின்ற பட்டினத்தினரிகே சூர்ண்ணியாற்றிலுளவாமவு.'' இதில் முரசி என்பது முசிறிப்பட்டினம். சூர்ண்ணி ஆறு என்பது பெரியாற்றின் வடமொழிப் பெயர். தமிழ் நாட்டில் முத்துக்குப் பேர்போன இடம் பாண்டிநாட்டுக் கொற்கை. இதைத் தமிழ் நூல்கள் கூறுகின்றன. ஆனால், சேரநாட்டு முத்தைப் பற்றிச் சங்க நூல்களில் காணப்படவில்லை. கௌடல்லியரின் அர்த்த சாத்திரம் இதைக் கூறுகிறது. பெரியாற்றுக்குச் சுள்ளியாறு என்று தமிழில் வேறு பெயர் இருந்ததையறிவோம். சூர்ண்ணி ஆறு என்னும் வடமொழிப் பெயர், சுள்ளி என்னும் சொல்லிலிருந்து உண்டானது போலும்.

சுள்ளி என்னும் பேரியாறு கடலில் கலந்த புகர் முகத்தில் ஆற்றின் வடகரைமேல் கடற்கரைப் பக்கத்தில் முசிறி என்னும் பேர்போன துறைமுகப் பட்டினம் இருந்தது. கிரேக்க யவனர் இந்தத் துறைமுகப்பட்டினத்தை முசிரிஸ் என்றும், வடமொழிக்காரர் மரீசிபட்டணம் என்றும் கூறினார்கள்.

வஞ்சிமாநகரம்

இப்போது நமது ஆராய்ச்சிக்குரிய வஞ்சி நகரத்துக்கு வருவோம். வஞ்சி மாநகரம் கரூவூர் என்றும் பெயர் பெற்றிருந்ததை முன்னமே அறிந்தோம். சேர மன்னர்களின் தலைநகரமாக இருந்த இந்த வஞ்சிமாநகரம் முசிறித் துறைமுகத்துக்குக் கிழக்கே பேரியாற்றின் வடகரைமேல் இருந்தது. வஞ்சி நகரத்தின் அமைப்பைப் பெரிதும் மணிமேகலை காவியத்திலிருந்தும் சிலப்பதிகாரக் காவியத்திலிருந்தும் அறிகிறோம். சுள்ளியாற்றின் வடகரை மேல் கிழக்கு மேற்காக, நீண்ட சதுரமாக அமைந்திருந்த வஞ்சிமாநகரம் பெரிய நகரமாகப் பரந்திருந்தது. இந்த நகரத்திலே வழக்குரை மன்றம், பொதியில் சதுக்கம், செய்குன்று, பூங்கா, அறச்சாலை, நீர் நிலைகள், சிவபெருமான் கோயில், திருமால் கோயில், பௌத்த சமணப்பள்ளிகள் முதலானவை இருந்தன.[9]

தெருக்கள் கிழக்கு மேற்காகவும் வடக்குத் தெற்காகவும் அமைந் திருந்தன. நகரத்தின் மையத்தில் அகலமும் நீளமும் உள்ள பெரிய நெடுஞ்

9 மணிமேகலை 28-ஆம் காதை. அடி 59-66

சாலை கிழக்கு மேற்காக அமைந்திருந்தது. அந்த நெடுஞ்சாலை இந்த நகரத்திலிருந்து முசிறித் துறைமுகப் பட்டினத்திற்குச் சென்றது. நகரத்துத் தெருக்களில் பலவகையான தொழிலாளர்களும் வசித்திருந்தனர். பலவகைப் பொருள்கள் விற்கப்பட்ட கடைத்தெருக்கள் இருந்தன. நகரத்தைச் சூழ்ந்து கோட்டை மதில்கள் இருந்தன. மதிலைச் சார்ந்திருந்த தெருக்களில் மீன், உப்பு, கள், இறைச்சி, அப்பம், பிட்டு முதலான பொருள்களை விற்கும் வாணிகர் இருந்தார்கள்.[10] இந்தத் தெருக்களை அடுத்து, மட்பாண்டம் செய்வோர், செம்பு பித்தனை வெண்கலப் பாத்திரம் செய்வோர், இரும்புக் கருவிகளைச் செய்வோர், பொன் வெள்ளி நகை செய்வோர், மரத் தொழில் செய்வோர், கட்டட வேலை செய்வோர், தோல் கருவிகள் செய்வோர், துணி தைப்போர் முதலான தொழிலாளிகள் குடியிருந்த தெருக்கள் இருந்தன.[11] மாலை கட்டுவோர் இசைவாணர் சங்குவளை அறுப்போர் நடன மகளிர் வாழ்ந்த தெருக்களும் இருந்தன.[12] அரிசி பருப்பு முதலான நவதானியம் விற்போர், அறுவைவாணிகர், நவமணி விற்போர், பொன்வாணிகர் முதலானோர் இருந்த வீதிகளும் இருந்தன.[13] அமைச்சர், அரச ஊழியர், அரண்மனை ஊழியர் முதலானோர் வீதிகளும் குதிரைப்பந்தி, யானைப்பந்தி முதலான இடங்களும் இருந்தன.[14] வீடுகளில் இருந்து வெளிப்படும் கழிவுநீர் சாக்கடைகள் வழியாகச் சுருங்கைகளில் ஓடி நகரத்துக்கு அப்பால் நகரத்தைச் சூழ்ந்திருந்த அகழிகளில் விழுந்தன.[15]

அரண்மனைகள்

சேரமன்னர்களின் அரண்மனைகள் வஞ்சிமா நகரத்தின் நடுவிலே அமைந்திருந்தன. ஒன்று, 'பொன் மாளிகை' என்று பெயர் பெற்றிருந்தது. 'கொடிமதில் மூதூர்நடுநின்றோங்கிய தமனிய மாளிகை'[16] (தமனிய மாளிகை - பொன்மாளிகை) இந்தப் பொன் மாளிகையின் நிலா முற்றத்தில் இருந்து, பறையூர்க் கூத்தச் சாக்கையன் ஆடிய கொட்டிச் சேதம் என்னும் கூத்தைச் செங்குட்டுவனும் அவனுடைய அரசியும் கண்டு மகிழ்ந்தார்கள்.[17] இந்தப்

---

10. ஷை 31-34. 11. ஷை 34-43.

12. ஷை 43-47. 13. ஷை 49-54.

14. ஷை 56-58. 15. ஷை 5-22.

16. சிலப்பதிகாரம், 28-ம் காதை. 49-50.

17. ஷை 50-77.

பொன்மாளிகையிலேதான், சேர அரசர் அரசியல் நடத்திய 'வேத்தியல் மண்டபம்' இருந்தது.[18] அரண்மனைக்கு அருகிலேயே சிவபெருமான் கோயிலும் அறிதுயில் அமர்ந்தோன் (திருமால்) கோயிலும் இருந்தன.[19]

பொன்மாளிகைக்குத் தெற்கே பேரியாற்றின் கரைமேல் இன்னொரு மாளிகை இருந்தது. அதற்கு 'வெள்ளிமாடம்' என்பது பெயர்.[20] இந்த வெள்ளிமாளிகை இலவந்திகைச் சோலையில் அமைந்திருந்தது.[21] 'விளங்கு இலவந்தி வெள்ளிமாடம்'. இலவந்திகைச் சோலைக்கு நீராவிச் சோலை என்றும் பெயருண்டு. இலவந்திகை அல்லது நீராவிச் சோலை அரச குடும்பத்துக்குரிய சோலை. அதில், அவர்களைத் தவிர ஊர்ப் பொதுமக்கள் நுழையக் கூடாது. வெள்ளிமாடத்தில் சேர அரசரின் குடும்பம் வாழ்ந்து வந்தது. செங்குட்டுவன், இளவேனிற் காலத்தில், மலையிலிருந்து பெரியாறு இழிந்த இடத்திற்குச் சென்றபோது, வெள்ளி மாடத்திலிருந்து புறப்பட்டுப் போனான்.[22]

இதுகாறும் நகரத்தின் அமைப்பைப் பற்றிக் கூறினோம். இனி நகரத்தைச் சூழ்ந்திருந்த கோட்டை மதில்களைப் பற்றிப் பார்ப்போம்.

கோட்டை மதில்கள்

வஞ்சிமா நகரத்தைச் சூழ்ந்து கோட்டை மதில்களும் அகழியும் காவற்காடும் இருந்தன. கோட்டை மதில் காவல் உடையதாக இருந்தபடியால் 'கடிமதில்' என்று கூறப்பட்டது.[23] மதிலைச் சூழ்ந்து, மதிலுக்கு வெளியே அகழி இருந்தது. அகழியில் மீன்களும் முதலைகளும் இருந்தன; தாமரை அல்லி முதலான நீர்ப்பூக்களும் இருந்தன.[24] நகரத்தில் இருந்து தூம்புகளின் வழியாகவும் கருங்கைகளின் வழியாகவும் வந்த கழிவுநீர் அகழியில் வந்து விழுந்தது.[25] (சங்க காலத்து மதுரை நகரத்தில், கழிவுநீர் நகரக் கோட்டையின் வெளியே சூழ்ந்திருந்த அகழியில் சென்று விழுந்தது. இங்கு நினைவு கொள்ளற்பாலது). இவ்வாறு நகரம் சுகாதார அமைப்போடு இருந்ததை அறிகிறோம். வஞ்சிமா நகரத்தின் தெற்கே சுள்ளியாறு (பேரியாறு)

18. ஷை 78-79. 19. ஷை 26-ம் காதை. 54-57, 62-63

20. ஷை 25-ம் காதை. 4. 21. ஷை

22. ஷை 3-9, 21-23. 23. மணிமேகலை, 28-ம் காதை. அடி 24

24. ஷை 18-22. 25. ஷை 5-17.

பாய்ந்தபடியால் அந்த ஆறே அகழியாக அமைந்திருந்தது மற்றக் கிழக்கு மேற்கு வடக்குப் பக்கங்களில் கோட்டைச் சுவரைச் சூழ்ந்து அகழிகள் அமைக்கப்பட்டிருந்தன. (தரைப்படம் காண்க). அகழிக்கு உள்பக்கத்தில் நகரத்தைச் சூழ்ந்து மதிற் சுவர்கள் இருந்தன இந்தச் சுவர்கள் புற மதில் களாகும். இந்தப் புறமதில்களின் மேலே போர்க் கருவிகளும் இயந்திரப் பொறிகளும் வைக்கப்பட்டு காவலுடையதாக இருந்தன.[26] அகழி சூழ்ந்த கோட்டைமதிலின்மேல் போருக்குரிய எந்திரக் க்ருவிகள் வைக்கப் பட்டிருந்ததைப் பதிற்றுப்பத்து ஆறாம் பத்தும் கூறுகிறது.

எந்திரத் தகைப்பின் அம்புடை வாயில்
கோள்வன் முதலைய குண்டுகண் அகழி
வானுறவோங்கிய வளைந்துசெய் புரிசை[27]

இந்தக் கோட்டைச் சுவரின் வாயிலின் மேல் சிலம்பும் தழையும் தொங்கவிடப்பட்டிருந்தன. 'செம்பொறிச் சிலம்பொடு அணி தழை தூங்கும்.'[28] இதற்குப் பழைய உரையாசிரியர் இவ்வாறு விளக்கங் கூறுகிறார் 'சிலம்பும் தழையும் புரிசைக் கண்தங்கினவென்றது ஈண்டுப் பொரு வீருளரேல் நும்காலிற் கழலினையும் அரையிற் போர்க்குரிய உடை யினையும் ஒழித்து இச்சிலம்பினையும் தழையினையும் அணிமின் என அவரைப் பெண்பாலாக இகழ்ந்தவாறென்க இனி அவற்றை அம்மதிலில் வாழும் வெற்றி மடந்தைக்கு அணியென்பாருமுளர் சங்க காலத்து மதுரைக் கோட்டை வாயிலின் மேலே பந்தும் பாவையும் கட்டித் தொங்கவிடப் பட்டிருந்தன[29] என்பது இங்கு நினைவுகூரத் தக்கது

வஞ்சிமாநகரத்தின் புறமதிலுக்கு உள்ளே மிளைக்காடு (காவற்காடு) இருந்தது. புறமதில்களைச் சூழ்ந்திருந்த மிளைக்காட்டுக்கு அப்பால் உள் மதில்கள் இருந்தன. உள்மதில்கள் வெண்சுதை பூசப்பெற்று வெள்ளிக்குன்று போலக் காணப்பட்டன.[30] இதனால் வஞ்சிமாநகரத்தின் கோட்டைச் சுவர்கள் அகமதில் என்றும் புறமதில் என்றும் இரண்டு மதிற்சுவர்களைக் கொண்டி

26. மணிமேகலை 28-ம் காதை. அடி. 23-24

27. பதிற்றுப்பத்து. ஆறாம்பத்து. 3:7-9

28 ஷை 3 6

29 திருமுருகாற்றுப்படை. 67-71.

30. மணிமேகலை 28-ஆம் காதை. அடி 24-28

ருந்ததையறிகிறோம். கோட்டைச் சுவர்களின் மேலே வாயிலுக்குமேல் கொடிகள் பறந்தன. நகரத்துக்குள்ளே போவதற்கு வாயில்கள் இருந்தன

குணவாயிலும் குடவாயிலும்

நகரத்துக்கு மத்தியில் அகலமான நெடுஞ்சாலையொன்று கிழக்கிலிருந்து மேற்குப் பக்கமாகச் சென்றது அந்த நெடுஞ்சாலை கோட்டையின் கிழக்கு வாயிலிலிருந்து மேற்கே நகரத்தின் மத்தியில் அரண்மனைப் பக்கமாகச் சென்று குடவாயிலைக் கடந்து மேற்கே கடற்கரைப் பக்கத்தில் இருந்த முசிறித் துறைமுகப் பட்டினத்துக்குச் சென்றது. வஞ்சி நகரத்துக் கோட்டையின் கிழக்கு வாயிலுக்குக் குணவாயில் என்பது பெயர். கோட்டையின் மேற்கு வாயிலுக்குக் குடவாயில் என்று பெயர். நகரத்தின் நடுமையத்தில் அரண்மனைக்கு எதிராக ஓர் அகன்றசாலை வடக்குப் பக்கமாகச் சென்று வடக்கு வாயிலைக் கடந்து சென்றது.

கோட்டையின் குணவாயிலுக்கு அருகில், கோட்டைச் சுவருக்கு வெளியே ஒரு சோலை இருந்தது. அங்குப் பலசமயத்துத் துறவிகள் தங்கியிருந்தனர். சைவ வைணவக் கோயில்களும் பௌத்த சமணப் பள்ளிகளும் 'நற்றவ முனிவரும் கற்றடங்கினவரும்' மதிலுக்கு வெளியேயிருந்த சோலையில் இருந்தனர்.[31] இந்த இடத்துக்குக் குணவாயிற் கோட்டம் என்பது பெயர். இந்தக் குணவாயிற் கோட்டத்தில் செங்குட்டுவனின் தம்பியாகிய இளங்கோ அடிகள். துறவு பூண்டுத் தங்கியிருந்தார்.[32] குணவாயில் கோட்டத்தைப் 'பகல் செல்வாயில்' என்று சிலப்பதிகாரம் கூறுகிறது.[33] (பகல் செல் வாயில்-சூரியன் போகிற வழி; கிழக்குத்திசை. குணவாயில்-கிழக்கு வாயில்-குணக்கு-கிழக்கு) சங்க காலத்துக்குப் பிறகு, முசிறித் துறைமுகப் பட்டினமும் வஞ்சிமாநகரமும் மறைந்துபோன பின்னரும் குணவாயிலும், குணவாயிற்கோட்டமும் அழியாமல் இருந்தன பிற்காலத்தில் மலையாளிகள் குணவாயிற் கோட்டத்தை 'த்ருக்கணா மதிலகம்' என்று கூறினார்கள். இது, திருக்குண மதிலகம் என்பதன் சிதைவு. 'த்ரு' என்பது திரு என்னும் சொல்லின் சிதைவு 'கணா' என்பது குண என்பதன் சிதைவு. மதிலகம் என்பது கோட்டை மதில் உள்ள இடம் என்னும் பொருளுள்ளது வஞ்சி நகரம் அழிந்துபோன பிறகு. அதன் பகுதியாக எஞ்சியிருந்த

31. நாண்டு ஷை 26-ம் காதை அடி. 72-76

32. சிலப்பதிகாரம், பதிகம் அடி. 1-2.

33. ஷை 30-ம் காதை அடி 179

குணவாயிலும் அதன் அருகில் இருந்த கோட்டமும் 'த்ருக்கணா மதிலகம்' என்று மலையாளிகளால் கூறப்பட்டன. இந்த இடத்தைப் பற்றி இக்காலத்தில் சில அறிஞர்கள் ஆராய்ந்து கட்டுரை எழுதியுள்ளனர்.[34]

குணவாயில் கோட்டத்தில் பலசமயக் கோயில்களும் பல சமயத்துத் துறவிகளும் சமயத் தத்துவங்களைக் கற்ற சமயச் சான்றோர்களும் இருந்தனர். இங்கிருந்த சமயவாதிகளிடத்தில் மணிமேகலை சமயக் கணக்குகளை (சமயத் தத்துவங்களைக்) கேட்டறிந்தாள் என்பதை மணிமேகலை காவியத்திலிருந்து அறிகிறோம். மணிமேகலை 27-ஆம் காதையின் தலைப்புக்கு விளக்கம் கூறுகிற கொளு, 'வஞ்சிமா நகர்ப்புறத்துச் சமயக் கணக்கர் தந்திறங் கேட்ட பாட்டு' என்று கூறுகிறது. இதனாலே, குணவாயிற் கோட்டத்தில் இருந்த பல சமயவாதிகளிடத்தில், அவள் பல்வேறு சமயக் கொள்கைகளைத் தெரிந்து கொண்டாள் என்பது விளங்குகிறது.

குணவாயிற் கோட்டத்துக்கு அருகிலேயே, சேரன் செங்குட்டுவன் கண்ணகிக்குப் பத்தினிக்கோட்டம் அமைத்தான் என்பதை மணிமேகலையிலிருந்து குறிப்பாக அறிகிறோம். காவிரிப்பூம்பட்டினம் வெள்ளத்தில் முழுகிப் போனதை மணிபல்லவதீவில் கேள்விப்பட்ட மணிமேகலை, காவிரிப்பூம்பட்டினத்துக்குப் போகாமல் நேரே வஞ்சிமா நகரத்துக்கு வந்தாள்; வந்தபோது அவளுக்கு ஓர் ஆர்வம் தோன்றியது. வஞ்சிமா நகரத்தில் சேரன் செங்குட்டுவன் எடுத்திருந்த பத்தினிக் கோட்டஞ் சென்று வணங்க வேண்டும் என்பது அவளுக்குத் தோன்றிய ஆர்வமாகும். அவள் நேரே பத்தினிக் கோட்டஞ் சென்று கண்ணகியின் படிவத்தை வணங்கினாள் என்று மணிமேகலை காவியங் கூறுகிறது. கண்ணகியின் படிவத்தை வணங்கின பிறகு, மணிமேகலை நகரத்துக்குள் சென்றாள் என்றும், சென்றவள் தற்செயலாக நகரத்தின் குடவாயிலண்டைத் தன்னுடைய பாட்டனான மாசாத்துவானைக் கண்டனள் என்றும் மணிமேகலை காவியம் கூறுகிறது. இவளுடைய பாட்டனான மாசாத்துவான், கோவலனும் கண்ணகியும் இறந்தபிறகு வாழ்க்கையை வெறுத்துத் துறவுபூண்டு

---

34. A Note on Gunavayn Kottam. A Govinda Wariar. P.232 ff. Quarterly Journal of Mythic Society, Bangalore. Vol. XIX., Kunavayirkkottam and Vanci Rao Sahib Sahityabushana S.Paramesvera Aiyar, PP.241-254. Professor K.V. Rengaswami Aiyengar Commemmoration Volume 1940.
விஞ்ஞான தீபிகா மூன்றாம் தொகுதி பக்கம். 21. தொகுதி 4. (மலையாள மொழி)

வஞ்சிமாநகரத்தில் இருந்த பௌத்த விகாரையில் தங்கியிருந்தான். இந்த பௌத்தவிகாரை வஞ்சி நகரத்தின் மேற்கு வாயிலருகில் இருந்தது. மணிமேகலை, குணவாயிலில் (கிழக்கு வாயிலில்) நுழைந்து நகரத்துக்குள் சென்று, மேற்கு வாயிலண்டை தன்னுடைய பாட்டனைக் கண்டாள் என்று தெரிகிறது. மணிமேகலை காவியம் 26-வது காதையின் தலைப்புக்கு விளக்கங் கூறுகிற அதன் கொளு, 'மணிமேகலை கண்ணகி கோட்டமடைந்து வஞ்சிமாநகர் புக்கபாட்டு' என்று கூறுகிறது. இதிலிருந்து, கண்ணகி கோட்டம் நகரத்துக்கு வெளியே (கோட்டை மதிலுக்கு வெளியே) இருந்ததென்பது திட்டமாகத் தெரிகிறது.

குணவாயிற் கோட்டத்துக்கு அருகிலே, அமைக்கப்பட்டிருந்த பத்தினிக் கோட்டத்துக்குப் பக்கத்தில் வைதிக மதத்தவரின் வேள்விச்சாலை இருந்தது. பத்தினித் தெய்வம் மன்னர்களுக்கு வரங்கொடுத்த பிறகு, செங்குட்டுவன் மன்னர்களுடனும் மாடலமறையவனுடனும் வேள்விச் சாலைக்குச் சென்றனன் என்று சிலப்பதிகாரம் கூறுகிறது.[35] செங்குட்டுவன் பத்தினிக் கோட்டத்தைவிட்டு வேள்விச் சாலைக்குப் போனபிறகு, குணவாயிற் கோட்டத்திலிருந்த இளங்கோ அடிகள் பத்தினிக் கோட்டஞ் சென்றார்.[36] இவற்றிலிருந்து குணவாயில் கோட்டத்துக்கு அருகிலேயே பத்தினிக் கோட்டமும் வேள்விச் சாலையும் இருந்தன என்பது தெரிகின்றன.

குணவாயில் கோட்டத்துக்கு அருகில், கோட்டை வாயிலுக்கு வெளியே, அரசாங்க மாளிகையொன்று இருந்தது. அது வேள் ஆவிக்கோ மாளிகை என்று பெயர் பெற்று இருந்தது. வேளாவிக்கோ மாளிகை, நீர் சூழ்ந்த ஒரு பொழிலின் நடுவிலே அமைந்திருந்தது.

பேரிசைவஞ்சி மூதூர்ப் புறத்துத்
தாழ்நீர் வேலித் தண்மலர்ப் பூம்பொழில்
வேளாவிக் கோ மாளிகை

என்று இதைச் சிலப்பதிகாரம் கூறுகிறது.[37]

வேளாவிக்கோ மாளிகை, அரசாங்கத்து விருந்தினர் வந்தால் அவர்கள் தங்குவதற்காக அமைக்கப்பட்டது போலும்.

---

35. சிலப்பதிகாரம் 30-ம் காதை அடி 168-170.

36. சிலப்பதிகாரம் 30-ம் காதை. அடி. 170-171

37. சிலப்பதிகாரம் 28-ம் காதை. அடி 196-198.

வஞ்சி நகரத்துக் கிழக்கு வாயிலுக்கு வெளியே இருந்த பத்தினிக் கோட்டத்தை வணங்கின பிறகு, அங்கே குணவாயிற் கோட்டத்திலிருந்த சமயவாதிகளின் சமயக் கணக்குகளைக் கேட்ட மணிமேகலை, கிழக்கு வாயிலின்வழியே நகரத்துக்குள் சென்று மேற்கு வாயிலருகிற் சென்றபோது தன்னுடைய பாட்டனைக் கண்டாள். அவனுடைய முன்னோர்களில் ஒருவன் அந்த இடத்தில் பௌத்தச் சயித்தியம் ஒன்றைக் கட்டியிருந்தான். அந்தச் சயித்தியம் வானளாவி உயர்ந்து வெண்சுதை பூசப்பெற்றிருந்தது. அந்தப் புத்த சயித்தியத்தைக் கட்டினவன், கோவலனுக்கு முன்பு (ஒன்பது தலை முறைக்கு முன்னர்) இருந்தவன். அவனும் கோவலன் என்று பெயர் பெற்றிருந்தான். கோவலனுடைய தந்தையான மாசாத்துவான் பௌத்த பிக்குவாகத் துறவுபூண்டு இந்தச் சயித்தியத்துக்கு வந்திருந்தான். இவனை மணிமேகலை கண்டு வணங்கினபோது இச்செய்திகளையெல்லாம் அவன் அவளுக்குக் கூறினான்.[38] பிறகு, மணிமேகலை வஞ்சிமாநகரத்தின் மேற்கு வாயில் பக்கத்திலிருந்து ஆகாயவழியே பறந்து காஞ்சிபுரத்துக்குச் சென்றாள் என்று மணிமேகலை காவியம் கூறுகிறது. இது ஏற்கத்தக்கது அன்று. காவியப் புலவர் ஏன் இப்படிக் கற்பனை செய்தார் என்பதை இக்கட்டுரையாளர் எழுதிய 'மணிமேகலையின் விண்வழிச் செலவு' என்னும் கட்டுரையில் காண்க.[39]

வஞ்சிமா நகரத்தின் மத்தியில் அமைந்திருந்த அரண்மனை வாயிலில் இருந்து, வடக்கே ஒரு பெருஞ்சாலை இருந்தது. அது கோட்டையின் வடக்கு வாயிலைக் கடந்து சென்றது. கோட்டையின் வடக்கு வாயிலுக்கு வெளியே புறநிலைக் கோட்டம் என்னும் கோயில் இருந்தது. செங்குட்டுவன் இமய யாத்திரைக்குப் புறப்பட்டபோது நல்ல முழுத்தத்தில் கொற்றவளையும் கொற்றக்குடையையும் வடக்கே எடுத்துச் செல்லும்படி கட்டளையிட்டான். அவ்வாறே நல்ல முழுத்தத்தில், கொற்றவாளையும் கொற்றக்குடையையும் கொற்றயானையின்மேல் ஏற்றிக் கொண்டுபோய் இந்தப் புறநிலைக் கோட்டத்தில் வைத்தார்கள்.[40]

---

38. மணிமேகலை 28-ம் காதை. அடி. 123-132.

39. 'மணிமேகலையின் விண்வழிச் செலவு' மயிலை.சீனி.வேங்கடசாமி. பக்கம் 176-182 கரந்தைத் தமிழ்ச் சங்கம் மணிவிழா மலர். 1973.

40. சிலப்பதிகாரம், 26-ம் காதை. அடி 43-45.

கோட்டை மதிலுக்கு வெளியேயும் மக்கள் வாழ்ந்தனர். அவர்கள் நகரத்துக்குப் புறத்திலே (வெளியிலே) குடியிருந்தபடியால் புறக்குடி மக்கள் என்று கூறப்பட்டனர். அவர்கள் கோட்டை மதில்களுக்கு வெளியே குடியிருந்தபடியால், கோட்டையைச் சூழ்ந்து கொண்டு முற்றுகையிடுபவர் போலக் காணப்பட்டார்கள்.

வாங்குவில் தானை வானவன் வஞ்சியின்
வேற்று மன்னரும் உழிஞைவெம் படையும்
போல் புறஞ்சுற்றிய புறக்குடி [41]

இதுகாறும் சேரநாட்டுத் தலைநகரமான வஞ்சிமா நகரத்தின் அமைப்பைப் பற்றிக் கூறினோம். இனி, அதனோடு தொடர்புடைய முசிறித் துறை முகப்பட்டினத்தைப் பற்றிக் காண்போம்.

முசிறித்துறைமுகப் பட்டினம்

வஞ்சிமாநகரத்துக்கு மேற்கே சுள்ளிப்பேரியாறு கடலில் கலந்த இடத்தில், அதன் வடகரைமேல் கடற்கரையையொட்டி முசிறித் துறைமுகமும் முசிறிப்பட்டினமும் இருந்தன. அக்காலத்தில் அது பெரிய நகரமாகவும் இருந்தது. அக்காலத்தில், முசிறி உலகப் புகழ் பெற்ற பேர்போன நகரமாக இருந்தது. கிரேக்க யவனர் இந்தப் பட்டினத்தை முசிறிஸ் என்று கூறினார்கள். வட இந்தியர் இந்தப் பட்டினத்தை மிரிசிபதனம் என்று குறிப்பிட்டனர். முசிறி என்பதைத்தான், அவர்கள் மிரிசி என்று திரித்துக் கூறினார்கள். அந்தக் காலத்தில் சேர நாட்டிலிருந்து மிளகு பெருவாரியாக வெளிநாடுகளுக்கு ஏற்றுமதியாயிற்று. ஆகவே, சமஸ்கிருதமொழியில் மிளகுக்கு, மிரிசி என்று பெயர் கூறப்பட்டது. முசிறிப் பட்டினமாகிய மிரிசி பட்டினத்திலிருந்து வந்தமையால் வடமொழியாளர் அந்த நகரத்தின் பெயரையே, மிளகுக்கு மிரிசி என்று கூறினார்கள்.

சுள்ளிப்பேரியாறு கடலில் கலந்த புகர்முகத்தில் முத்துச் சிப்பிகள் விளைந்தன. அந்தச் சிப்பிகளிலிருந்து முத்துக்கள் எடுக்கப்பட்டன. இந்தச் சேரநாட்டு முத்தினைக் கௌர்ணெயம் என்று கௌடல்லியரின் அர்த்தசாத்திரம் கூறுவதை முன்னமே குறிப்பிட்டோம். முசிறியை மிரிசி என்று கூறியதுபோலவே வடமொழியாளர் சுள்ளி(பேரியாறு)யாற்றைச் சூர்ணி என்று

41. மணிமேகலை, 28-ம் காதை. அடி. 2-4.

கூறினார்கள். சூர்ணி ஆற்றில் உண்டான முத்து சௌர்ணெயம் என்று பெயர் பெற்று, பிறகு அந்தச் சொல் கௌர்ணெயம் என்றாயிற்று.

முசிறிப் பட்டினத்தை சங்கப்புலவர் நக்கீரர் 'முன்னுறை முதுநீர் முசிறி' என்று கூறுகிறார்.[42] இன்னொரு சங்கப்புலவரான நக்கீரர் 'முழங்கு கடல் முழவின் முசிறி' என்று கூறுகிறார்.[43] அராபியரும் கிரேக்க யவனரும் மேற்குக் கரைத் துறைமுகங்களுக்கு வந்து வாணிகஞ் செய்தார்கள். அவர்களின் முக்கியமான குறிக்கோள் முசிறித் துறைமுகமாக இருந்தது. யவன வாணிகர் தங்களுடைய அழகான பெரிய நாவாய்களை எகிப்து நாட்டு அலக்சாந்திரிய துறைமுகப்பட்டினத்திலிருந்து செங்கடல் வழியாகச் செலுத்திக் கொண்டு, அரபிக் கடலுக்கு வந்து முசிறி, தொண்டி முதலான துறைமுகப் பட்டினங்களுக்குச் சென்று கடல் வாணிகஞ் செய்தார்கள். கி.பி.முதல் நூற்றாண்டின் தொடக்க காலத்தில் ரோமப் பேரரசை ஆட்சிசெய்த பேர்போன அகுஸ்தஸ் சக்கரவர்த்தி இந்தக் கப்பல் வாணிகத்தை நிலை நிறுவினார். அவர் செங்கடல்பகுதியில் இருந்த அராபியரை அடக்கி, யவனக் கப்பல்கள், செங்கடல் பட்டினங்களிலும் அரபிக் கடல் பட்டினங்களிலும் சென்று வாணிகஞ் செய்ய வழி செய்தார். அக்காலத்தில், கப்பல்கள் நடுக்கடலில் செல்லாமல் கரையோரமாகவே சென்று வந்தன. அதனால், மாதக்கணக்கில், ஆண்டுக்கணக்கில் காலதாமதம் ஏற்பட்டது. பருவக் காற்றின் துணைகொண்டு செங்கடலிலிருந்து நடுக்கடலில் கப்பல் ஓட்டி, முசிறித் துறைமுகத்துக்கு விரைவில் வந்து போகும் முறையைத் தமிழ் வாணிகரும் அராபிய வாணிகரும் அறிந்திருந்தார்கள். இவர்கள் அறிந்திருந்ததை கிரேக்க மாலுமியாகிய ஹிப்பலஸ் என்பவன் எப்படியோ அறிந்துகொண்டு, யவனக் கப்பல்களை நடுக்கடல் வழியே செலுத்திக் கொண்டு முசிறித் துறைமுகத்துக்கு வந்தான். அதுமுதல் யவனக் கப்பல்கள் விரைவாக நடுக்கடல் வழியே முசிறித் துறைமுகத்துக்கு வந்து போகத் தொடங்கின. பருவக் காற்றுக்கு ஹிப்பலஸ் என்பவன் பெயரையே யவனர் சூட்டினார்கள். ஹிப்பலஸ் கி.பி.40-ல் இந்தப் பருவக் காற்றைப் பயன்படுத்தினான் என்பர்.

கி.பி.முதல் நூற்றாண்டிலும் இரண்டாம் நூற்றாண்டிலும் சேர நாட்டுத் துறைமுகங்களோடு யவனர் செய்த கப்பல் வாணிகம் உச்ச நிலையில்

---

42. அகநானூறு, 57:15.

43. புறநானூறு 343:10

இருந்தது. இந்த யவன-தமிழ் வாணிகத்தைச் செம்மையாக வளர்த்த அகுஸ்தஸ் சக்கரவர்த்திக்கு கிரேக்க வாணிகர் முசிறிப் பட்டினத்தில் ஒரு கோயிலைக் கட்டிப் பாராட்டினார்கள்.[44] சங்க காலத்தில் காவிரிப்பூம் பட்டினத்திலும் அரிக்கமேடு துறைமுகத்திலும் யவன மாலுமிகள் தங்கி யிருந்தது போலவே, முசிறி பட்டினத்திலும் யவன மாலுமிகள் தங்கியிருந் தார்கள். சங்ககாலத்திலே அரபு வாணிகர்கள் முசிறித் துறைமுகப் பட்டினத்தில் ஒரு பகுதியில் தங்கி வாணிகஞ் செய்தனர். அவர்கள் தங்கியிருந்து வாணிகஞ் செய்த இடம் 'பந்தர்' என்று பெயர் பெற்றிருந்தது. பந்தர் என்னும் அரபுச் சொல்லின் பொருள், அங்காடி அல்லது கடைத்தெரு என்பது. முசிறி நகரத்து பந்தரில் அரபு வாணிகர் முக்கியமாக முத்துக்களை விற்றார்கள். பந்தருக்கு அருகில் இருந்த கொடுமணம் என்னும் ஊர், பொன் நகைகளுக்குப் பேர் பெற்றிருந்தது. முசிறிப் பட்டினத்துப் பந்தர் கொடுமணம் என்னும் ஊர்களில் நகை வாணிகம் சிறப்பாக இருந்தது.

கொடுமணம் பட்ட நெடுமொழி யொக்கலொடு
பந்தர்ப் பெயரிய பேரிசை மூதூர்க்
கடனறி மரபிற் கைவல் பாண
தெண்கடல் முத்தமொடு நன்கலம் பெறுகுவை [45]

கொடுமணம் பட்ட வினைமாண் நன்கலம்
பந்தர்ப் பயந்த பலர்புகழ் மூத்தம் [46]

முசிறித் துறைமுகத்திலிருந்து கிரேக்க யவனர் பல பொருள்களை ஏற்றுமதி செய்து கொண்டு போனார்கள். அப்பொருள்களில் முக்கியமான ஏற்றுமதிப் பொருள் மிளகு. அதிக அளவாக மிளகை ஏற்றுக் கொண்டு போவதற்காக யவனக் கப்பல்கள் பெரிதாக இருந்தன. மத்தியதரைக் கடல் நாடுகளில் மிளகு அக்காலத்தில் அதிகமாகச் செலவாயிற்று. யவனர் மிளகை அதிகமாக வாங்கிக் கொண்டு போன படியால் மிளகுக்கு 'யவனப் பிரியா' என்று வடமொழியாளர் பெயரிட்டனர்.

யவனக் கப்பல் வாணிகர் முசிறித் துறைமுகத்துக்கு வந்து மிளகை வாங்கிச் சென்றதைச் சங்கப்புலவர் தங்கள் செய்யுட்களில் கூறியுள்ளனர்.

---

44. Sir Mortimer Wheeler, Rome Beyond the Imperial Frontiers. P. 209.

45. பதிற்றுப்பத்து ஏழாம்பத்து, 7.1-4.

46. ஷ 8:4.5-6 'நன்கல வெறுக்கை துஞ்சும்பந்தர்' 5:5.4.

யவனர் மரக்கலங்களில் முசிறித்துறைமுகத்துக்கு வந்து பொன்னைக் கொடுத்து கறியை (கறி-மிளகு) ஏற்றிக் கொண்டு போனதைப் புலவர் தாயங்கண்ணனார் கூறுகிறார்.

சேரலர்
சுள்ளியம் பேரியாற்று வெண்ணுரை கலங்க
யவனர் தந்த வினைமாண் நன்கலம்
பொன்னொடு வந்து கறியொடு பெயரும்
வளங்கெழு முசிறி [47]

முசிறித் துறைமுகத்தில் நடந்த மிளகு வாணிகத்தைப் புலவர் பரணரும் கூறுகிறார். உள்நாடுகளில் விளைந்த மிளகைப் பறித்துச் சேர்த்து மூட்டை களாகக் கட்டி முசிறித் துறைமுகத்துக்கு அனுப்பினார்கள். யவனக் கப்பல்கள் வந்தபோது மிளகு மூட்டைகளைப் படகுகளில் ஏற்றிக்கொண்டு போய்ப் பெரிய யவன நாவாய்களில் ஏற்றினார்கள். ஏற்றின மிளகுக்கு ஈடாக யவனர் தந்த பொற்காசுகளை வாங்கிக் கொண்டு வந்தார்கள் என்று பரணர் கூறுகிறார்.

மனைக் குவைஇய கறிமூடையால்
கலிச்சும்மைய கரை கலக்குறுத்து
கலந் தந்த பொற்பரிசம்
கழித் தோணியாற் கரைசேர்க்குந்து [48]

(மனைக்குவை இய-வீடுகளில் குவித்துவைத்த, கறிமூடை-மிளகு மூட்டை, கலம்தந்த-யவனரின் மரக்கலம் கொண்டுவந்த, பொற்பரிசும் - பொன்விலை) இச்செய்யுளில் 'கழித்தோணி' கூறப்படுகிறது. கழிகள் (உப்பங்கழிகள்) முசிறித் துறைமுகப்பட்டினத்தில் இருந்தன என்பது இதனால் தெரிகிறது. உப்பங்கழிகள் இக்காலத்தில் 'காயல்' என்று கூறப்படுகின்றன.

முசிறித் துறைமுகம், முசிறிப் பட்டினத்தில் சுள்ளியாறு கடலில் கலக்கிற இடத்தில் ஆற்றின் வடக்குக் கரையில் இருந்தது. அந்தத் துறை முகத்தில் அரபுநாடு முதலான நாடுகளிலிருந்து வந்த படகுகள் வந்து தங்கின. ஆனால், யவனரின் பெரிய கப்பல்கள் துறைமுகத்தில் வந்து நிற்கவில்லை. ஏனென்றால், பெரியாறு அடித்துக் கொண்டு வந்த மணல் நெடுங்காலமாக

---

47. அகநானூறு. 149.7-11.

48. புறநானூறு. 343.3-6.

துறைமுகத்தில் தூர்ந்து கொண்டு, அந்த இடத்தை ஆழம் இல்லாமல் செய்துவிட்டது. யவனக் கப்பல்கள் பெரிதாகவும் உயரமாகவும் இருந்த படியால் அவை துறைமுகத்தில் வந்து நிற்காமல், தூரத்தில் கடலிலேயே நின்றன. ஆகையால் சரக்குகளைத் தோணிகளில் ஏற்றிக் கொண்டுபோய் யவனக் கப்பல்களில் இறக்கினார்கள். இந்தச் செய்தியை யவனர்கள் எழுதிய குறிப்பிலிருந்து அறிகிறோம்.

துறைமுகத்தைச் சார்ந்து முசிறிப்பட்டினம் பெரிதாக இருந்தது. வடக்குத் தெற்காகவும் கிழக்கு மேற்காகவும் வீதிகள் அமைந்திருந்தன. அங்குக் கரையோரங்களில் நெய்தல் நிலமக்களின் குப்பங்கள் இருந்தன. அவர்கள் கடலில் சென்று மீன்பிடித்து, விற்று வாழ்ந்தனர். அயல் நாடுகளிலிருந்து வாணிகத்துக்காக வந்த அராபியர், யவனர் முதலானவர் தங்கியிருந்த இடங்களும் இருந்தன. தொழிலாளிகளும் பல பொருள்களை ஏற்றுமதி இறக்குமதி செய்த வாணிகர்களும் அந்த நகரத்தில் வாழ்ந்தனர். வஞ்சிமா நகரத்தில் கிழக்கு மேற்காக அமைந்திருந்த நெடுஞ்சாலை தொடர்ந்து கடற்கரை வரையில் சென்றது. கடற்கரைப் பக்கமாக, உரோம நாட்டு சக்கரவர்த்தி அகுஸ்தஸ் ஸீசரின் கோயில் கடற்கரையோரத்தில் இருந்ததை முன்னமே கூறினோம்.

முசிறிப் பட்டினத்தின் நடுவில் ஒரு கோயில் இருந்தது. அந்தக் கோயில் எந்தத் தெய்வத்துக்குரியது என்பது தெரியவில்லை. அந்தக் கோயிலில் இருந்த படிமத்தை (தெய்வ உருவத்தை)ப் பாண்டியன் ஒருவன் கவர்ந்துகொண்டு போனான். பாண்டியன் முசிறிப் பட்டினத்தை முற்றுகையிட்டு நகரத்தை வென்று அங்கிருந்த படிமத்தை கொண்டு போனான் என்று தாயங்கண்ணனார் கூறுகிறார்.

வளங்கெழு முசிறி யார்ப்பெழவளைஇ
அருஞ்சமங்கடந்து படிமம் வவ்விய
நெடுநல் யானை யடுபோர்ச் செழியன்[49]

முசிறிப் பட்டினத்தை முற்றுகையிட்டுப் போர் செய்த செழியன் (பாண்டியன்) அந்தப் போரை வென்று, சேரனுடைய யானைப்படையில் இருந்த யானைகளைக் கவர்ந்தான் என்று நக்கீரர் கூறுகிறார்.

---

49. அகநானூறு, 149.11-13

கொய் சுவற்புரவிக் கொடித்தேர்ச் செழியன்
முதுநீர் முன்றுறை முசிறி முற்றிக்
களிறுபட பெருக்கிய கல்லென் ஞாட்பு [50]

முசிறிப் பட்டினத்தில் போர்செய்த பாண்டியன், தலையாலங்கானத்துச் செருவென்ற பாண்டியனாகத் தோன்றுகிறான். இவனுடன் போர் செய்து தோற்ற சேரன், குட்டுவன்சேரல் என்று தோன்றுகிறது. குட்டுவன் சேரலுக்குக் கோக்கோதை மார்பன் என்னும் பெயரும் வழங்கியது. குட்டுவன் சேரலாகிய கோக்கோதை மார்பன், சேரன் செங்குட்டுவனுடைய மகன். தலையாலங் கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியனும் கோக்கோதை மார்பனும் சமகாலத்தவர்.

நகரங்களின் அழிவு

சங்க காலத் தமிழகம் கிழக்கு மேற்கு தெற்கு ஆகிய மூன்று பக்கங்களில் மிக நீண்ட கடற்கரையைக் கொண்டிருந்தது. கடற்கரையோரங் களிலிருந்த பல ஊர்களைக் கடல் அழித்துவிட்டது. கடற்கோள்களினால் பல ஊர்கள் அழிந்து போனதைத், தமிழ் இலக்கியங்களும் செவிவழிச் செய்திகளும் கூறுகின்றன. முன் ஒரு காலத்தில் தமிழகத்தே இணைந்திருந்த நிலம், கடற்கோள்களினால் உடைந்து பிரிந்து இலங்கைத் தீவாக மாறி விட்டது என்பதை நில நூல் வல்லவர் கூறுகின்றனர். பழைய இலங்கையிலும் இரண்டு கடல் கோள்கள் நிகழ்ந்ததை மகாவம்சம் கூறுகிறது. பழங்காலத்தில் பாண்டி நாட்டுக்குள்ளே (ஐந்து மைல் உள்ளே) வந்திருந்த கொற்கைக் குடாக்கடல், தாமிரபரணியாற்றினாலும் கடல் அலைகளினாலும் மணல் தூர்ந்து பையப் பையப் பிற்காலத்தில் மறைந்து, அந்தக்கடல் பகுதி நிலமாக மாறி விட்டதையறிகிறோம். தொண்டை நாட்டில் கடற்கரையோரத்தில் இருந்த பவத்திரிக்கோட்டம் பிற்காலத்தில் கடலில் முழுகி மறைந்து போய், இப்போது பழவேற்காடு ஏரி என்று பெயர் பெற்றிருக்கிறது. இவ்வாறு ஒரு பெரிய கோட்டம் ஒன்று முழுகிப் போயிற்று. இராமநாதபுரத்தோடு இணைந்து கடலுக்குள் இருந்த நிலப் பகுதி, பிற்காலத்தில் உடையுண்டு, இப்போது இராமேசுவரத் தீவாக மாறிப் போயிற்று. இவ்வாறு தமிழகத்தின் கரையோரங்களில் பல அழிவுகள் ஏற்பட்டுள்ளன. மேற்குக் கரையிலிருந்த பழைய சேரநாட்டிலும் பல கடற்கோள்களினால் கடற்கரைப் பட்டினங்களும்

50. அ 57.14-16.

ஊர்களும் மறைந்து போயின. சேரநாட்டின் கடற்கரையோரத்தில் இருந்த பேர்போன மூலவாசம் என்னும் ஊர், புத்தக் கோவிலுக்குப் பெயர் பெற்றிருந்தது. அந்த ஊர் ஸ்ரீ மூலவாசம் என்று உலகப்புகழ் படைத்திருந்தது. பிற்காலத்தில் (கி.பி.11-ம் நூற்றாண்டில்) அந்த ஊர் கடலினால் அழிக்கப் பட்டு மறைந்து போயிற்று.

இவற்றைப் போலவே, சேரநாட்டில் உலகப் புகழ் பெற்றிருந்த வஞ்சிமாநகரமும் முசிறிப் பட்டினமும் பிற்காலத்தில் கடலில் முழுகி, மறைந்து போயின. முதலில் கடற்கரைக்கு அருகில் இருந்த முசிறித் துறைமுகமும் பட்டினமும் அழிந்து போயின. பிறகு, பிற்காலத்தில் வஞ்சிமா நகரத்தின் பெரும்பகுதி ஊர்கள் மறைந்து போயின. இந்த நகரங்களின் அழிவுக்கு காரணமாக இருந்தது சுள்ளி ஆறாகிய பேரியாறுதான். மேற்குத் தொடர்ச்சிமலையில் அயிரிமலைமேல் தோன்றி, தரையில் இழிந்து நாட்டில் பாய்ந்து, கடலில் புகுந்த பேரியாறு, பல நூற்றாண்டுகளாக மணலை அடித்துக் கொண்டுபோய் கடலுக்கு அருகில் இருந்த துறைமுகத்தைத் தூர்த்துக் கொண்டு வந்தது. துறைமுகத்தைத் தூர்த்துக் கொண்டிருந்தது மட்டு மல்லாமல், இந்த ஆறே தூர்ந்து கொண்டு ஆழமில்லாமற் போயிற்று. முசிறித் துறைமுகம் மணல் தூர்ந்து ஆழமில்லாமற் போனபடியால், யவனரின் பெரிய கப்பல்கள் துறைமுகத்துக்குள் வரமுடியாமற் போனதை முன்னமே கண்டோம்.

பெரியாற்றில் எப்போதும் வெள்ளம் இருந்தது என்பதைச் சங்கச் செய்யுட்களிலிருந்து அறிகிறோம்.

கோடை நீடக் குன்றம் புல்லென
அருவியற்ற பெருவறற் காலையும்
நிவந்து கரையிழிதரு நனந்தலைப் பேரியாறு

என்று பாலைக் கவுதமனார் பாடினார்.[51] 'புனல் பேரியாறு' என்று பெருங் குன்றூர் கிழார் பாடினார்.[52] வறண்ட காலத்திலும் பேரியாற்றில் வெள்ளம் பாய்ந்தோடியது என்றும் அந்த வெள்ளம் கரைகளை உடைத்துப் பக்கங்களில் பரவிற்று என்றும் பரணர் பாடினார்.

---

51. பதிற்றுப்பத்து, 3:8.8-10.

52. ஷ 9:8.25.

குன்று வறங்கூரச் சுடர்சினந்திகழ
அருவியற்ற பெருவறற் காலையும்
அருஞ்செயற் பேராறு இருங்கரையுடைத்து[53]

ஆற்று வெள்ளம் இரு கரைகளிலும் வழிந்து பாய்ந்தது என்று கூறுகிறபடியால், ஆறே காலப்போக்கில் மணல் தூர்ந்து ஆழமில்லாமற் போயிற்று என்று தெரிகிறது. இவ்வாறு மணல் தூர்ந்து ஆழமில்லாமற்போன பெரியாறு, கி.பி 14-ஆம் நூற்றாண்டில் ஓராண்டில் பெரும் மழைபெய்து வெள்ளப் பெருக்கெடுத்தது. அப்போது கடலும் கொந்தளித்து அலை பொங்கியது. அதனால், முசிறிப் பட்டினமும் அதனைச் சார்ந்த கடற்கரை ஊர்களும் கடலில் மூழ்கி, மறைந்து போயின.

சேரநாட்டு வஞ்சிநகரமும் முசிறிப் பட்டினமும் பிற்காலத்தில் மறைந்து போயின. மறைந்துபோன அந்த நகரங்களைப் பற்றின செய்திகளைச் சங்க காலத்து நூல்களும் சங்கச் செய்யுட்களும் நமக்கு நினைவூட்டிக் கொண்டிருக்கின்றன. இந்நூல்களின் உதவியினால் மறைந்துபோன அந்த நகரங்களின் அமைப்புகளை ஒருவாறு படம் எழுதிப் பார்க்கிறோம்.

தமிழியல் -9 - 1976

7. சங்ககாலத்து மதுரை

சங்ககாலத்திலே, நாகரிகமும் சிறப்பும் செல்வமும் பெற்று விளங்கிய நகரங்களிலே மதுரைமாநகரமும் ஒன்று. பாண்டிய நாட்டின் தலைநகரமான இந்த மதுரை, தென்மதுரை என்றும், தக்கிணமதுரை என்றும், கூடல் என்றும், நான்மாடக்கூடல் என்றும் பெயர்பெற்றிருந்தது. சங்ககாலத்து மதுரை மாநகரம், இப்போதைய மதுரை நகரம் இருக்கிற இடத்தில் இருக்கவில்லை. அது வைகையாற்றின் தென்கரையிலே, திருப்பரங்குன்றத்திற்குக் கிழக்கே இருந்தது.

இதனை,

"மாடமலி மறுகிற் கூடற் குடவயின்....குன்று"

என்று திருமுருகாற்றுப்படை கூறுவதிலிருந்தும்,

---

53 ஷை 5:3 13-15



"கொடிநுடங்கு மறுகிற் கூடற் குடாஅது
பல்பொறி மஞ்ஞை வெல்கொடி யுயரிய
ஓடியா விழவின் நெடியோன் குன்றம்"

என்று தாயங்கண்ணனார் (புறம்-149) கூறுவதிலிருந்தும் அறியலாம். திருப்பரங்குன்றத்திற்குக் கிழக்கே, வைகையாற்றின் தென்கரையிலே இருந்த சங்ககாலத்து மதுரைமாநகரம் எவ்வாறு அமைந்திருந்தது என்பதை ஈண்டு ஆராய்வோம். நமது ஆராய்ச்சிக்குப் பழைய சங்க நூல்கள் உதவி செய்கின்றன. இந்நூல்களின் துணைகொண்டு ஆராய்வோம்

அமைப்பு:

மதுரைமாநகரம் தரையமைப்பில் (*Plan*) வட்ட வடிவமாகவும், தாமரைப்பூ போன்ற உருவத்துடனும் அமைந்திருந்தது என்று பழைய பரிபாடல் செய்யுள் கூறுகிறது.

> **"மாயோன் கொப்பூழ் மலர்ந்த தாமரைப்**
> **பூவொடு புரையும் சீரூர்; பூவின்**
> **இதழகத் தனைய தெருவம்; இதழகத்து**
> **அரும்பொகுட் டனைத்தே அண்ணல் கோயில்;**
> **தாதின் அனையர் தண்டமிழ்க் குடிகள்;**
> **தாதுண் பறவை யனையர் பரிசில்வாழ்நர்."**

பழைய மதுரைமாநகரம், தாமரைப் பூப்போன்று வட்ட வடிவமாக இருந்தது. வட்டவடிவமான நகரத்தின் நடுமத்தியில். (தாமரைப்பூவின் நடுவில் உள்ள பொகுட்டு போன்று) பாண்டியனுடைய கோயில் (அரண்மனை) அமைந்திருந்தது. தாமரைப் பொகுட்டைச் சூழ்ந்து இதழ்கள் பொருந்தியிருப்பதுபோல, அரண்மனையைச் சுற்றிலும் தெருக்கள் தாமரை இதழ்களைப் போன்று அமைந்திருந்தன என்று இச்செய்யுள், மதுரையின் அமைப்பைப் படம் வரைந்து காட்டுகிறது.

தாமரைப்பூ, நந்தியாவட்டப்பூ, வில், சுவத்திகம் முதலிய உருவங்களைப்போன்று நகரங்களை அமைப்பது பண்டைக்காலத்து வழக்கம். அவ்வழக்கத்தையொட்டி பண்டைக்காலத்து மதுரை நகரமும் தாமரைப் பூப்போன்று அமைந்திருந்தது மதுரைமா நகரத்தைப்போன்றே, மகத நாட்டின் தலைநகரமாயிருந்த இராசகிரியம் என்னும் நகரமும் 'தாமரைப்பூவின் உருவமாக அமைந்திருந்தது', என்று பெருங்கதை என்னும் நூல் கூறுகிறது. அதாவது:

பெரும்படைச்சேரி திருந்தணி எய்திக் கைபுனை வனப்பினோர் பொய்கையாகவும், போகச்சேரி புறவிதழாகவும், பெருங்கடியாளர் அருங்கடிச்சேரி புறவிதழ் மருங்கிற் புல்லிதழாகவும் பல்விலை வாணிகர் நல்விலைச்சேரி புல்லிதழ் பொருந்திய நல்லிதழாகவும். அந்தணர்சேரி அகவிதழாகவும். அருமதி அமைச்சர் திருமதிற்சேரி ஆசின் பன்மலர் அல்லியாகவும், அரசனுடைய கோயில் கொட்டையாகவும் அமைந்து.

இராசகிரியநகரம் தாமரைப் பூப்போன்று இருந்தது என்று பெருங்கதை கூறுகிறது. (மகத காண்டம், இராசகிரியம் புக்கது: 1-123)

இதனால், பண்டைக்காலத்திலே தாமரைப் பூப்போன்று நகரங்களை அமைப்பது இந்தியநாட்டில் வழக்கம் உண்டென்றும், சங்ககாலத்து மதுரைமாநகரமும் அவ்வாறே தாமரைப்பூப்போன்று அமைந்திருந்த தென்றும் பழைய செய்யுள்களினாலே அறிகிறோம். ஆனால், அந்த அமைப்பின் உருவப்படம் நமக்குக் கிடைக்கவில்லை. தாமரைப்பூப்போன்ற நகர உருவத்தை அறிஞர் சிலர் படம் எழுதிக் காட்டியுள்ளார்கள். அப் படங்கள் பொருத்தமானவை என்று எமது கருத்துக்குத் தோன்றவில்லை. ஆகவே, எமது கருத்துக்குப் பொருத்தமெனத் தோன்றியபடி, மதுரை மாநகரத்தின் தரையமைப்பை (*Plan*) இங்கே வரைந்து காட்டியுள்ளோம். (படம் காண்க.) பண்டைக் குறிப்புகளுடன் இப்பட அமைப்பை ஒப்பிட்டுப் பார்த்து அறிஞர் உண்மை காண்பாராக.

மதுரைமாநகரத்தைப்பற்றிய செய்திகளைச் சங்கநூல்களிலிருந்து ஆராய்ந்து காண்போம்.

மதுரைமாநகரம், வைகையாற்றின் தென்கரையில் இருந்தது என்பது, கோவலனும் கண்ணகியும் கௌந்தியடிகளுடன் மதுரைக்குச் சென்றபோது வைகையாற்றை ஓடத்தினால் கடந்து தென்கரை சென்று மதுரையடைந்தனர் என்று சிலப்பதிகாரம் கூறுவதிலிருந்து அறியலாம். இதனை,

> **''மாதவத் தாட்டியொடு மரப்புணை போகித**
> **தேமலர் நறும்பொழில் தென்கரை எய்தி''**

என்று சிலப்பதிகாரம் கூறுவதிலிருந்து அறியலாம்.

வைகையாற்றைக் கடந்து தென்கரையடைந்தவுடனே வடக்கு வாயில் வழியாக நகரத்திற்குள் செல்லமுடியாது. வடக்கு வாயில் எப்போதும் அடைபட்டிருந்தது. (படம் காண்க.) ஏனென்றால், வடக்குப்புறத்தில் வைகையாறு கோட்டை மதில் சுவரையொட்டிச் சென்றது. இதனை,

> **''வந்து மதுரை மதில்பொரூஉம் வான்மலர்த்தாஅய்**
> **அந்தண் புனல்வையை யாறு.........''**

என்னும் பரிபாடல் (12. வையை) அடிகளாலும்,

"............வையைதன்
நீர்முற்றி மதில்பொரூஉம் பகையல்லால் நேராதார்
போர்முற்றொன் றறியாத புரிசைசூழ் புனலூரன்"

என்னும் கலித்தொகை (67-ஆம் கலி) அடிகளாலும் அறியலாம்

வடக்குப்புற வாயில் தவிர, ஏனைய கிழக்கு மேற்கு தெற்கு வாயில்கள் வழியாக நகரினுட்செல்லச் சாலைகள் இருந்தன. கோவலன் கண்ணகியாருடன் கிழக்கு வாயில் வழியாக மதுரைக்குச் சென்றான் என்றும், கண்ணகியார் மதுரையை எரித்த பின்னர் திருச்செங்கோட்டிற்குச் சென்ற போது, மேற்கு வாயிலைக் கடந்து சென்றார் என்றும் சிலப்பதிகாரம் கூறுகிறது.

அரண்:

அக்காலத்தில் நகரங்கள் கோட்டைக்குள் அமைந்திருந்தன. நகரத்திற்குப் பாதுகாப்பாக அகழி, காடு முதலியவை அமைந்திருந்தன.

"மணிநீரும் மண்ணும் மலையும் அணிநிழல்
காடும் உடையது அரண்" (திருக்குறள்,)

என்று திருவள்ளுவர் கூறுகிறார். "மணிநீரும் என்றது பளிங்கு போலத் தெளிந்து ஆழம் உடைமையும் வற்றாமையும்; மண்ணும் என்றது நாற்பெருஞ் சேனையும் அகத்து இடுதற்கு அரிய இடமும்; மலையும் என்றது, மற்று அதன் புறத்து முற்றி ஓங்கித் தலைமயக்குறுத்து ஆங்கு அதன் புறம் சூழ்ந்து ஓங்கிப்பரந்த தூங்கு இருள் காடும் வகை அறப்பெற்ற இவை நான்கினையும் உடையதே அரண் ஆவது," என்று காளிங்கர் உரை எழுதுகிறார். "தெளிந்தநீர் ஆயினும், நிழலும் நீரும் இல்லாத வெறுநிலம் ஆயினும், மலை ஆயினும், அழகிய நிழலையுடைய காடு ஆயினும் உடைய இடம் அரணம்." என்று பரிப்பெருமாள் உரை கூறுகிறார்.

இந்த இலக்கணப்படி, மதுரைமாநகரம் காடு, அகழி என்னும் இரண்டு அரண்களைக் கொண்டிருந்தது. கோட்டையைச் சூழ்ந்து முள் காடுகள் இருந்தன. இதற்கு மிளைக்காடு என்று பெயர். இந்த முள் காட்டைக் கடந்து செல்வது கடினமானது. கிழக்கு மேற்கு தெற்கு வாயில்களுக்குச் செல்ல வேண்டுமானால், இந்த முள் காட்டினுள் ஊடுருவிச்சென்ற சாலைகள்

வழியாகத்தான் செல்லவேண்டும். காட்டைக் கடந்ததும் நீர்நிறைந்த ஆழமான அகழி காணப்பட்டது. இந்த ஆழமான அகழி வடக்கே வைகை ஆற்றுடன் இணைந்து இருந்தது. ஆகவே, இதில் எப்போதும் நீர் வற்றாமல் இருந்தது. காவற்காட்டினையும் அகழியையும் சிலப்பதிகாரம் இவ்வாறு கூறுகிறது:

> ***''அருமிளை யுடுத்த அகழிசூழ் போகி''***
>
> ***(புறஞ்சேரி இறுத்தகாதை, 184)***

''அழித்தற் கரியமிளை சூழ்ந்த கிடங்கின் புறத்தைச் சூழ்போந்தென்க. மிளை-காவற்காடு'' என்பது அடியார்க்கு நல்லார் உரை.

> ***''இளைசூழ் மிளையொடு வளைவுடன் கிடந்த***
> ***இலங்குநீர்ப் பரப்பின் வலம்புணர் அகழி''***
>
> ***(ஊர்காண் காதை, 62-63)***

''கட்டுவேலி சூழ்ந்த காவற்காட்டோடு தானும் நகரைச் சூழ்தலை உடன்பட்டுக்கிடந்த வலத்திலே பொருந்திச் சுழலும் இலங்குநீர்ப் பரப்பை யுடைய அகழி'' என்பது அடியார்க்கு நல்லார் உரை. இந்த அகழியை, ''குண்டுநீர் வரைப்பிற் கூடல்'' என்று புறநானூறு (347) கூறுகிறது

கோட்டை மதில்:

காவற்காட்டுக்கும் அகழிக்கும் உள்ளே வட்டவடிவமான இரண்டு மதிற்சுவர்கள் ஒன்றுக்குள் ஒன்றாக நகரத்தைச் சூழ்ந்திருந்தன. உயரமும் அகலமும் திண்மையும் பொருந்திய இச்சுவர்களின் அடிப்புறம் கருங்கற் களினாலும், மேற்புறம் செங்கற்களினாலும் அமைக்கப்பட்டிருந்தன. வெளிமதில் புறமதில் என்றும், உள்மதில் அகமதில் என்றும் பெயர் பெற்றிருந்தன. புறமதிலுக்கும் அகமதிலுக்கும் இடையிலிருந்த இடம் புறஞ்சேரி என்று பெயர்பெற்றிருந்தது.

ஆழமான கிடங்கினையும் (அகழி), உயர்ந்த மதிலையும், திண்ணிய வாயிலையும், எண்ணெய் பூசிக் கருநிறமாகக் காணப்பட்ட கோட்டைக் கதவுகளையும், கோட்டை வாயிலின்மேல் அமைந்திருந்த கோபுரத்தையும், கோட்டை வாயில் வழியாக மக்கள் போவதும் வருவதுமான காட்சி

வைகையாற்றில் வெள்ளம் ஓடுவதுபோலிருந்ததையும் மாங்குடி மருதனார் என்னும் புலவர் மதுரைக் காஞ்சியில் இவ்வாறு கூறுகிறார்:

''மண்உற ஆழ்ந்த மணிநீர்க் கிடங்கில்
விண்உற ஓங்கிய பல்படைப் புரிசை
தொல்வலி நிலைஇய அணங்குடை நெடுநிலை
நெய்படக் கரிந்த திண்போர்க் கதவின்
மழையாடு மலையின் நிவந்த மாடமொடு
வையை யன்ன வழக்குடை வாயில்'' *(351-6)*

இதற்கு நச்சினார்க்கினியர் எழுதுகிற உரை வருமாறு:-

''மண்ணுள்ளளவும் ஆழ்ந்த நீலமணிபோலும் நீரையுடைய கிடங்கினையும், தேவருலகத்திலே செல்லும்படி யுயர்ந்த பல கற்படைகளை யுடைய மதிலினையும், பழையதாகிய வலிநிலை பெற்ற தெய்வத்தையுடைத் தாகிய நெடிய வாயில் நிலையினையும், நெய் பலகாலுமிடுதலால் கருகின திண்ணிய செறிவினையுடைய கதவினையும், மேகம் உலாவும் மலைபோலே ஓங்கின மாடத்தோடே வையையாறு இடைவிடாது ஓடுமாறுபோன்ற மாந்தரும் மாவும் இடையறாமல் வழங்குதலையுடைய வாயில்.''

கோட்டைச் சுவரில், நான்கு வாயில்களின் மேற்புறத்தில் நான்கு மாடங்கள் (கோபுரங்கள்) இருந்தன. இதனால், மதுரைக்கு மாடக்கூடல் என்றும், நான் மாடக்கூடல் என்றும் பெயர்கள் வழங்கின.

கோட்டை வாயில்களின்மேலே, பாண்டியனுடைய கொடிகள் பறந்தன. அன்றியும், அக்கொடிகளுடன் பந்தும், பாவையும் தொங்கவிடப் பட்டிருந்தன.

''செருப்புகன் றெடுத்த சேணுயர் நெடுங்கொடி
வரிப்புனை பந்தொடு பாவை தூங்கப்
பொருநர்த் தேய்த்த போரரு வாயில்'' *(67-69)*

என்று திருமுருகாற்றுப்படை கூறுகிறது.

''போரை வென்று விரும்பிக் கட்டின சேய்நிலத்தே சென்றுயர்ந்த நெடிய கொடிக்கருகே, நூலால் வரிந்து புனையப்பட்ட பந்தும் பாவையும் அறுப்பாரின்மையிற் றூங்கியே விடும்படி, பொருவாரை

இல்லையாக்குகையினாலே எக்காலமும் போர்த்தொழிலரிதாகிய வாயில்'' என்பது நச்சினார்க்கினியர் உரை.

வரிந்து புனையப்பட்ட பந்தும் பாவையும் என்பதற்கு, நச்சினார்க்கினியர் இவ்வாறு விளக்கம் கூறுகிறார்: ''பகைவரை மகளிராக்கி அவர் கொண்டு விளையாடுதற்குத் தூக்கின பந்தும் பாவையும்'' என்று கூறுகிறார்.

பாண்டியனுடைய கோட்டை வாயிலில் பந்தும் பாவையும் தொங்க விடப்பட்டிருந்ததுபோலவே, சேர அரசனுடைய கோட்டைவாயிலில் சிலம்பும் தழையும் கட்டித் தொங்கவிடப்பட்டிருந்தன என்று பதிற்றுப்பத்து கூறுகிறது:

''செம்பொறிச் சிலம்பொடு அணிதழை தூங்கும்
எந்திரத் தகைப்பின் அம்புடை வாயில்''

(ஆறாம் பத்து, குண்டு கண்ணகழி)

இதற்குப் பழைய உரைகாரர் கூறும் விளக்கம் வருமாறு: ''சிலம்பும் தழையும் புரிசைக்கண் தங்கினவென்றது, 'ஈண்டுப் பொருவீருளரேல், நும் காலிற் கழலினையும், அரையிற் போர்க்குரிய உடையினையும் ஒழித்து, இச்சிலம்பினையும் தழையினையும் அணிமி' னென அவரைப் பெண்பாலாக இக்ழ்ந்தவாறென்க. இனி, அவற்றை அம்மதிலில் வாழும் வெற்றி மடந்தைக்கு அணியென்பாரும் உளர்.''

மதுரைமாநகரத்துக் கோட்டை வாயில்களில் யவனவீரர் (யவனர் = கிரேக்கர், அல்லது ரோம் தேசத்தவர்.) காவல் புரிந்தனர். இவர்கள், காண்பவர் அச்சங்கொள்ளுமாறு வாள் பிடித்துக் காவல் நின்றனர். மதுரை நகரத்தைப் பார்த்து வருவதற்காகக் கோட்டை வாயிலுட்புகுந்த கோவலன், 'காவல் நின்ற யவன வீரர்களுக்கு அஞ்சாமல் உள்ளே சென்றான்,' என்று சிலப்பதிகாரம் கூறுகிறது.

''கடிமதில் வாயில் காவலில் சிறந்த
அடல்வாள் யவனர்க்கு அயிராது புக்கு''

(ஊர்காண் காதை, 66-67)

உரையாசிரியராகிய அடியார்க்குநல்லார், யவனர் என்பதற்குத் துருக்கர் என்று உரை எழுதுகிறார். இது தவறு, இந்திய நாட்டிற்குத் துருக்கர்

வந்தது, சங்ககாலத்திற்கு மிகமிகப் பிற்பட்ட காலம் ஆகும். ஆகவே, யவனர் என்பதற்குத் துருக்கர் என்று உரை கூறுவது, வரலாற்றாராய்ச்சிக்குப் பொருந்துவது அன்று. சங்ககாலத்திலே தமிழருடன் வாணிகத்தின் பொருட்டுத் தொடர்புகொண்டிருந்த அயல்நாட்டினர், கிரேக்க தேசத்தவரும் ரோம் நாட்டினரும் ஆவர். இவர்களுக்கு யவனர் என்று பெயர். கி.பி.2-ஆம் நூற்றாண்டுக்கு முற்பட்ட ரோம் நாட்டு நாணயங்களும் வேறு பொருள்களும், தமிழ்நாட்டிலே பற்பல இடங்களில் நிலத்திலிருந்து அகழ்ந்து எடுக்கப்பட்டுள்ளன. இச்சான்றுகளையும் சரித்திரச் சான்றுகளையும் கொண்டு நோக்கினால், யவனர் என்பது ரோம் நாட்டவரை (பழைய இத்தாலி தேசத்தவரை)க் குறிக்குமேயன்றித் துருக்கரைக் குறிக்காது.

மதில் அரண்:

கோட்டை மதில் எ ப்வாறு அரண் அமைந்து இருக்க வேண்டும் என்பதைத் திருவள்ளுவர் கூறியிருக்கிறார்:

> **"உயர்வு அகலம் திண்மை அருமைஇந் நான்கின்**
> **அமைவுஅரண் என்றுரைக்கும் நூல்."** (743)

என்று கூறுகிறார். "உயர்ச்சியும் அகலமும் திண்மையும் கிட்டுதற்கு அருமையும் என்னும் நான்கின் அமைதியை உடையது மதில் என்று சொல்லும் இலக்கணம்.

அருமையாவது முதலையும் கிடங்கும் அடியொட்டியும் முதலாயின வற்றால் கிட்டுதற்கு அருமை. அமைவு என்றது இதனின்மேல் செய்யப் படாது என்னும் அளவு உடைத்து ஆதல். திண்மை என்றது கல்லும் இட்டிகையும் இட்டுச் செய்தல். இஃது அரண் செய்யும் ஆறு கூறிற்று." என்பது பரிப்பெருமாள் உரை.

> **"முனைமுகத்து மாற்றலர் சாய வினைமுகத்து**
> **வீறெய்தி மாண்ட தரண்"** (திருக்குறள், 749)

இதற்குக் காளிங்கர் உரை வருமாறு: "புறத்து அரசன் கடைப்புறத்துப் போர் தொடங்கிய அளவிலே தலைசாய்ந்து ஓடுமாறு அகத்தோர் இயந்திரம் முதலிய கல்பொறியும் பாம்பும் கனலும் கடிகுரங்கும் வில்பொறியும் வேலும் வெந்தீவட்டும் காய்ச்சிய மணலும் கவவு. இருப்பு உலக்கையும் வீச்சுறு

தூண்டிலும் விசைத்தெறி கவணும் ஆகிய வினைத்தொழில் உடைய மாட்சிமைப்பட்டது யாது? மற்று அதுவே அரண் ஆவது.''

இதற்குப் பரிப்பெருமாள் உரை வருமாறு: ''முந்து உற்ற முகத்தினை யுடைய பகைவர் கெடும்படியாக வினைசெய்யும் இடத்து வெற்றி எய்தி மாட்சிமைப்பட்டது அரண் ஆவது.

அஃது ஆவது அட்டாலகமும் மதில் பொறியும் முதலாயின மதில் தலையில் அமைத்தல். இது மதில் தலையில் கருவிகள் அமைக்கவேண்டும் என்றது.''

இதனால், கோட்டை மதிலின்மேல் போர்க்கருவிகள் அமைக்கப்பட வேண்டும் என்பது தெரிகிறது. மதுரைமாநகரத்துக் கோட்டைச் சுவரின் மேலே பலவிதமான போர்க்கருவிகளும், போர் இயந்திரங்களும் (பொறிகள்) வைக்கப்பட்டிருந்தன. நாட்டையும் அகழியையும் கடந்து பகைவர் கோட்டையை முற்றுகையிட நேர்ந்தால், அவர்களைப் பொருது ஓட்டுவதற்காக இப்போர்க்கருவிகளும் பொறிகளும் கோட்டை மதிலின்மீது அமைக்கப்பட்டிருந்தன. இந்தப் போர்க்கருவிகளின் பெயரையும் பொறிகளின் பெயரையும் சிலப்பதிகாரம் கீழ்க்கண்டவாறு கூறுகிறது.

''....... வளைவிற் பொறியும்
கருவிர லூகமும், கல்லுமிழ் கவணும்
பரிவுறு வெந்நெயும், பாகடு குழிசியும்
காய்பொன் உலையும், கல்லிடு கூடையும்
தூண்டிலும், தொடக்கும், ஆண்டலை யடுப்பும்
கவையும், கழுவும், புதையும், புழையும்
ஐயவித் துலாமும், கைபெயர் ஊசியும்
சென்றெறி சிரலும், பன்றியும், பணையும்
எழுவும், சீப்பும், முழுவிரற் கணையமும்
கோலும், குந்தமும், வேலும் பிறவும்
ஞாயிலும் சிறந்து நாட்கொடி நுடங்கும்
வாயில்................''

(அடைக்கலக்காதை, உ0எ-உகஎ)

இதில் கூறிய போர்க்கருவிகளைப்பற்றியும், பொறிகளைப்பற்றியும் விளக்கம் அறியவேண்டுவோர், அடியார்க்குநல்லார் எழுதியுள்ள உரையில் கண்டுகொள்க.

நகர வீதிகள்:

தாமரைப்பூவின் நடுவிலே கொட்டை அமைந்திருப்பது போன்று வட்டவடிவமாக அமைந்திருந்த மதுரைமாநகரத்தின் நடுவிலே பாண்டியனுடைய அரண்மனை இருந்தது. பெருவீதிகளும் குறுந்தெருக்களும் பூவின் இதழ்களைப்போன்று அமைந்திருந்தன. (படம் காண்க.) இத்தெருக்களில் சில கடைவீதிகளாக இருந்தன. பெரிய கடைத்தெரு அங்காடி வீதி என்று வழங்கப்பட்டது. இது நாளங்காடி என்றும், அல்லங்காடி என்றும் இருகூறாக இருந்தது என்னை?

''ஓவுக்கண் டன்ன இருபெரு நியமத்து'' (வரி.365)

என வரும் மதுரைக் காஞ்சி அடியையும், இதற்கு நச்சினார்க்கினியர், ''மதுரைக்கண் சித்திரத்தைக் கண்டாற்போன்ற கட்கினிமையையுடைய இரண்டாகிய அங்காடித் தெருவில்,'' என்று பொருள் கூறியதோடு, ''நாளங்காடி அல்லங்காடியாகிய இரண்டு கூற்றை யுடைத்தென்றார்,'' என்று விளக்கங்கூறியுள்ளதையும் காண்க. மேலும்,

''வாடா வேம்பின் வழுதி கூடல்
நாளங் காடி......'' (அகம்-93)

என்று நக்கீரர் கூறுவதும்,

''மாடம் பிறங்கிய மலிபுகழ்க்கூடல்
நாளங் காடி நனந்தலைக் கம்பலை''
(மதுரைக்காஞ்சி, 429-430)

என்று மாங்குடி மருதனார் கூறுவதும் நினைவுறத்தக்கன. ஆடைகள் விற்கும் அறுவை வீதிகளும், நவதானியங்கள் விற்கும் கூலவீதிகளும், முத்து, பவழம் முதலிய நவமணிகள் விற்கும் இரத்தினக் கடைத்தெருவும், பொன், வெள்ளி முதலியவை விற்கும் பொன் வாணிகர் வீதியும் இருந்தன. பதியிலாராகிய கணிகையர் தெருக்கள் ஒருபுறம் இருந்தன. ஒரு தெருவில் அரசனுடைய ஏவலாளர் குடியிருந்தனர். ஏனைய தெருக்களில் நகர மக்கள் வசித்து வந்தார்கள். தெருக்களின் இருபுறத்திலும் மாளிகைகளும் வீடுகளும் இருந்தன. ''மாடம்மலி மறுகிற் கூடல்'' (அகம்-346) என்றும், ''மாடம்மலி மறுகிற் கூடல்'' என்று திருமுருகாற்றுப்படையும், ''மாடம் பிறங்கிய மலிபுகழ்க் கூடல்'' என்று மதுரைக்காஞ்சியும் கூறுகின்றன.

சுருங்கைத் தூம்பு:

நகரத்தின் கழிவுநீர் கால்வாய்கள் வழியாகச்சென்று நகரத்திற்கு வெளியே அகழியில் விழுந்தது. கழிவுநீர் செல்லும் சலதாரை சுருங்கைத் தூம்பு என்று கூறப்பட்டது. தூம்பு என்பது சலதாரை. சுருங்கை என்பது, சலதாரை தெரியாதபடி மேலே கற்களால் மூடப்படுவது. இவ்வாறு சுருங்கை வழியாகச் சென்ற கழிவுநீர் நகரத்திற்கு அப்பால் அகழியில் விழுந்தது. நீர் அகழியில் விழுந்த இடம், யானையின் தும்பிக்கையைப் போன்று அமைக்கப் பட்டிருந்தது. ஆகவே, இதன் வழியாகக் கழிவுநீர் விழும் காட்சி, யானை தும்பிக்கையினால் நீரைச் சொரிவதுபோன்றிருந்தது. இதனைப்பரிபாடல் நன்கு விளக்குகிறது.

> ***"நெடுமால் சுருங்கை நடுவழிப் போந்து***
> ***கடுமா களிறு அணத்துக் கைவிடு நீர்போலும்***
> ***நெடுநீர் மலிபுனல் நீண்மாடக் கூடல்***
> ***கடிமதில் பெய்யும் பொழுது" (20-ஆம் பாடல் 104-107)***

"நெடிய பெரிய சுருங்கை நடுவாகிய வழியைப் போந்து பெருந்தன்மை மிக்க புனலைக் கடிமதில் சொரியும்பொழுது அப்புனல் கடுமாவாகிய களிறுகள் கையை எடுத்துவிடும் நீர் போலும்" என்பது பரிமேலழகர் உரை.

பொது நிலையங்கள்:

இனி, மதுரை நகரத்திலிருந்த கோயில்கள், சோலைகள் முதலிய பொது நிலயங்களைக் காண்போம்.

வெள்ளியம்பலம்: இது சிவபெருமான் கோயில். "கொன்றையஞ் சடைமுடி மன்றப் பொதியிலில், வெள்ளியம்பலம்" என்று சிலப்பதிகாரப் பதிகத்தில் கூறப்படுகிறது.

செழுங்கலை நியமம்: இது சிந்தாதேவி கோயில் என்றும் கூறப்படும். கலைச்செல்வியாகிய நாமகள் கோயில்.

> ***"மிக்க செல்வத்து விளங்கியோர் வாழும்***
> ***தக்கிண மதுரை தான்சென் றெய்திச்***
> ***சிந்தா விளக்கின் செழுங்கலை நியமத்***

தந்தின் முன்றில் அம்பலப் பீடிகை
தங்கினன் வதிந்து'' (13-ம் காதை. 104-8)

எனவரும் மணிமேகலை அடிகளால் இதனை அறியலாம்.

ஐயை கோயில்: காளி கோயில். இது மதுரையின் மேற்குப் பகுதியில் இருந்ததாகத் தெரிகிறது. இக்கோயிலின் வாயிலில் சென்று கண்ணகியார் தன் கைவளையைத் தகர்த்துடைத்தார் என்பதை, ''கொற்றவை வாயிற் பொற்றொடி தகர்த்து'' என்று சிலப்பதிகாரம் (கட்டுரை காதை) கூறுகிறது.

சேவற்கொடியோன் ஆகிய முருகன் கோட்டமும், உவணக்கொடி யோன் ஆகிய திருமால் கோயிலும், மேழிவலவனாகிய பலராமன் கோயிலும் இந்நகரத்தில் இருந்தன என்று சிலப்பதிகாரம் கூறுகிறது. அன்றியும் பௌத்தப் பள்ளியும், சமணப் பள்ளியும் இந்நகரத்தில் இருந்தன என்று மதுரைக்காஞ்சி கூறுகிறது.

நீதிமன்றம்: வழக்குரை மன்றம் ஆகிய நீதிமன்றமும் இந்நகரில் இருந்தது. இந்த அவையை;

''செற்றமும் உவகையும் செய்யாது காத்து
ஞெமன்கோல் அன்ன செம்மைத் தாகிச்
சிறந்த கொள்கை யறங்கூ றவையம்'' (490-2)

என்று மதுரைக்காஞ்சி கூறுகிறது.

மூதூர்ப்பொழில்: இது பூஞ்சோலை. இதனை இலவந்திகைச் சோலை என்பர்.

நீராவிச்சோலை: இதனை உய்யானம் என்பர். இது ''அரசர் விளை யாடும் காவற்சோலை'' என்று அடியார்க்கு நல்லார் கூறுவர்.

இவ்வாறு, சங்ககாலத்து மதுரைமாநகரம் தாமரைப் பூவின் வடிவமாகவும் அகழி, மதில், காவற்காடு முதலிய அரண்களையுடை யதாகவும் சிறந்து விளங்கியிருந்ததைச் சங்க நூல்களினால் அறிகிறோம். இதிலிருந்து, பண்டைத்தமிழர் எவ்வாறு நகரங்களை அமைத்துக்கொண்டு நாகரிகமாக வாழ்ந்தனர் என்பது விளங்குகிறது.



படவிளக்கம்

I. நெய்தலங்கானல்: 1. சூரியகுண்டம். 2. சோமகுண்டம். 3. காமவேள்கோட்டம்.
II. மருவூர்ப்பாக்கம்: 1. துறைமுகமும் பண்டசாலையும்.
III. நாளங்காடித்தோட்டம்: 1. பூதபீடிகை. 2. உவவனம்.
IV. பட்டினப்பாக்கம்: 1. அரண்மனை. 2. தருமிலைக்கோட்டம். 3. வச்சிரக்கோட்டம். 4. நீராவிச்சோலை.
5. அரண்மனைச் சேவகர் வசிக்கும் இடம்.
V. சக்கரவாளக்கோட்டம் (சுடுகாட்டுக்கோட்டம்): 1. சம்பாபதிகோயில் (உலகவறவி).

8. சங்ககாலத்துக் காவிரிப்பூம்பட்டினம்

கடைச்சங்க காலத்திலே, அஃதாவது கி.பி.300-க்கு முன்னே, சோழநாட்டின் துறைமுகப் பட்டினமாகவும் தலைநகரமாகவும் இருந்தது காவிரிப்பூம்பட்டினம். குடிவளம் செழித்துப் பொருள்வளம் பெருகி நாகரிகத்தில் சிறந்து உலகமெங்கும் புகழ்பெற்று விளங்கிய காவிரிப்பூம்பட்டினம், புகார்ப்பட்டினம் என்றும் புகார் என்றும் பூம்புகார் என்றும் பெயர் பெற்றிருந்தது. காவிரியாறு கடலில் கூடுகிற இடமாகலின் இந்நகரம் புகார் என்றும் பூம்புகார் என்றும் பெயர் பெற்றது.

"தேறுநீர்ப் புணரியொடு யாறுதலை மணக்கும்
மலியோதத்து ஒலிகூடல்"

என்று, இந்த இடத்தைப் பட்டினப்பாலை (97-98) கூறுகிறது. இதற்கு உரை கூறுகிற நச்சினார்க்கினியர், "தெளிந்த கடலில் திரையோடே காவிரி தலைகரக்கும் ஓதத்தினால் ஒலி மலிந்த புகார்முகம்," என்று விளக்குகிறார். எனவே காவிரியாறு கடலில் புகுகிற இடமாகலின் இதற்குப் புகார் என்று பெயர் வந்தது என்பது தெளிவாகிறது.

காவிரிப்பூம்பட்டினத்தை டாலமி என்னும் யவன ஆசிரியர் சபரிஸ் (*Chabaris*) என்று கூறுகிறார். பெரிப்ள்ஸ் என்னும் கிரேக்க நூலாசிரியர் இந்நகரத்தை கமர (*Kamara*) என்கிறார். இந்த ஆசிரியர்கள் கி.பி.2-ஆம் நூற்றாண்டுக்கு முன்பு இருந்தவர்கள். கி.பி.ஏழாம் நூற்றாண்டில் காஞ்சிபுரத்துக்கு வந்த சீன நாட்டுப் பௌத்தராகிய யுவாங்-சுவாங் என்பார் இந்நகரத்தை சரித்ரபுரம் என்று கூறுகிறார். பாலி மொழியில் எழுதப்பட்ட பழைய பௌத்த நூல்களிலே காவிரிப்பூம்பட்டினம் கவீரபட்டினம் என்று கூறப்பட்டுள்ளது.

கி.பி.2-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியிலே இந்த நகரம், கடல் கொந்தளிப்பினாலும் வெள்ளப் பெருக்கினாலும் பெருஞ்சேதத்திற்குள்ளாயிற்று. இவ்வெள்ளச் சேதத்திற்குப் பிறகு, மீண்டும் இந்நகரம் பெருமையுடனும் செல்வச் சிறப்புடனும் விளங்கிற்று. முற்காலத்திலே உலகம் போற்றும் பெருமை வாய்ந்திருந்த இப்பட்டினம் கி.பி.15-ஆம் நூற்றாண்டுக்குப் பிறகு பெருமை இழந்து நாளடைவில் வளம் குன்றி

இப்போது சிறு குக்கிராமமாக இருக்கிறது. சங்ககாலத்திலும் அதற்குப் பிற்பட்ட காலத்திலும், மாடமாளிகைகளும் கூடகோபுரங்களும் உடையதாய், குடிவளம் பெருகிப் பொருள்வளம் செழித்து நாகரிகத்துக்கு உறைவிடமாக விளங்கிய காவிரிப்பூம்பட்டினம், இப்போது இருக்கும் இடம் தெரியாமல், குக்கிராமமாகி ஒதுக்குண்டிருக்கிறது. பண்டைக் காலத்திலே, இந்தப் பட்டினத்தில் சோழ மன்னர்களும், பெருங்குடி மக்களும் பெருமையுடன் வாழ்ந்திருந்தார்கள். கடைச்சங்க காலத்திலே, கி.பி.இரண்டாம் நூற்றாண்டிலே இருந்த சிலப்பதிகாரக் காவியத் தலைவராகிய கோவலனும் கண்ணகியாரும் இந்தப் பட்டினத்திலே வாழ்ந்திருந்தார்கள். ஆடல் பாடல்களில் பேர்போன மாதவி என்னும் கலைச்செல்வி வாழ்ந்திருந்த இடமும் இப்பட்டினமே. மாதவியின் மகளும், மணிமேகலைக் காவியத்தின் தலைவியுமாகிய மணிமேகலையார் பிறந்து வாழ்ந்த இடமும் இந்நகரமே. சிலப்பதிகாரம், மணிமேகலை என்னும் இருபெருங் காவியங்களின் தலைவர்கள் பிறந்து வாழ்ந்த காவிரிப்பூம்பட்டினம் சிறந்த நகரமாகத்தானே இருக்கவேண்டும்? ஆகவே, காவிரிப்பூம்பட்டினத்தின் பண்டைய சிறப்பை ஆராய்வோம். அஃதாவது, கி.பி.300 ஆண்டுக்கு முன்பு இருந்த பட்டினம் எவ்வாறு அமைந்திருந்தது, தரையமைப்பு (Plan) எவ்வாறிருந்தது, தெருக்களும் முக்கிய கட்டிடங்களும் கோயில்களும் பூந்தோட்டங்களும் துறைமுகமும் எவ்வாறு அமைந்திருந்தன என்பதை ஆராய்ந்து பார்ப்போம். இந்த ஆராய்ச்சிக்குப் பேருதவியாய் இருப்பவை சிலப்பதிகாரம், மணிமேகலை, பட்டினப்பாலை, புறநானூறு, அகநானூறு, நற்றிணை ஆகிய இந்நூல்களேயாம். இந்நூல்களின் துணைகொண்டு புகார்ப்பட்டினம் எவ்வாறு அமைந்திருந்தது என்பதைக் காண்போம்.

இடம்:-காவிரியாறு கடலுடன் கலக்கிற புகார்முகத்தின் வடகரையிலே காவிரிப்பூம்பட்டினம் அமைந்திருந்தது. எனவே இப்பட்டினத்தின் தெற்கெல்லை காவிரி ஆறும், கிழக்கெல்லை வங்காளக்குடாக்கடலும் ஆக இருந்தன. தூய காற்று வீசுகிற கடற்கரையோரத்திலே இரண்டு நீர்நிலைகளை எல்லையாகப் பெற்றிருந்த காவிரிப்பூம்பட்டினம், கிழக்கு மேற்காக நீண்ட சதுர அமைப்புடையதாக இருந்தது. மணல்பரந்த கடற்கரைப் பக்கம் நெய்தலங்கானல் என்று பெயர் பெற்றிருந்தது. நெய்தலங்கானலுக்கு மேற்கே மருவூர்ப்பாக்கமும், அதற்கு மேற்கே நாளங்காடியாகிய மரச்சோலையுள்ள இடைநிலமும், அதற்கு மேற்கே பட்டினப்பாக்கமும் இருந்தன. துறைமுகமும் பண்டசாலையும் மருவூர்ப்பாக்கத்திற்குத் தெற்கே காவிரியாற்றின்

வடகரையிலே இருந்தன. (படம் காண்க) இப்பகுதிகளைத் தனித்தனியே ஆராயலாம்.

நெய்தலங்கானல்:- இது கடற்கரையைச் சார்ந்த மணல் பரந்த இடம். (படம் காண்க.) இங்குச் சோமகுண்டம், சூரிய குண்டம் என்னும் இரண்டு குளங்களும் காமவேள் கோட்டமும் இருந்தன. இக்குளங்களில் மூழ்கிக் குளித்துக் காமவேளை வழிபடும் மகளிர், இம்மையில் கணவரைப்பெற்று இன்புற்றுப் பின்னர் மறுமையிலும் போகபூமியிற் சென்று பிறப்பார்கள் என்று அக்காலத்து மக்கள் நம்பியிருந்தனர்.

> **"கடலொடு காவிரி சென்றலைக்கு முன்றில்**
> **மடலவிழ் நெய்தலங் கானல் தடமுள**
> **சோமகுண்டம் சூரிய குண்டம் துறைமூழ்கிக்**
> **காமவேள் கோட்டம் தொழுதார் கணவரொடு**
> **தாமின் புறுவர் உலகத்துத் தையலார்**
> **போகம்செய் பூமியிலும் போய்ப்பி றப்பர்."**
>
> **-சிலம்பு:9,57-62**

இவ்விரண்டு குளங்களை இருகாமத்து இணைஏரி என்று பட்டினப்பாலை கூறுகிறது. இதற்கு உரை எழுதிய நச்சினார்க்கினியர், "இம்மையிலும் மறுமையிலும் உண்டாகிய காம இன்பத்தினைக் கொடுத்தற்குரிய இணைந்த ஏரிகள்" என்று உரை எழுதுகிறார். மேலும், வளகாமரேரி வணிகாமரேரி என்றும் சங்கிராம காமம் வணிக்கிராம காமம் என்றும் பெயர்கள் இவ்வேரிகளுக்கு இருந்தன என்றம் கூறுகிறார். காவிரிப்பூம்பட்டினத்திலே ஆண்டுதோறும் நடைபெறும் இந்திரவிழாவின் இறுதிநாளிலே நகரமக்கள் இங்கு வந்து கடலில் நீராடி இன்பமாகக் காலங் கழிப்பர். கோவலனும் மாதவியும் கடலாட்டுக் காண்பதற்காக இவ்விடம் வந்து, புன்னைமர நிழலிலே கூடாரம் அமைத்து, அதில் அமர்ந்து கானல்வரி பாடினார்கள் என்றும், அப்போது கோவலன் மாதவியை ஐயுற்று அவளைப் பிரிந்து சென்றான் என்றும் சிலப்பதிகாரம் கூறுகிறது.

(சோழன் நெய்தலங்கானல் இளஞ்சேட்சென்னி என்னும் பெயருள்ள ஒரு சோழ அரசன் பெயர் சங்க நூல்களில் காணப்படுகிறது. இந்த அரசன் பெயர் சங்க நூல்களில் காணப்படுகிறது. இந்த அரசனுக்கு நெய்தலங்கானல் என்னும் அடைமொழி ஏன் வந்தது என்று விளங்கவில்லை.)

மருவூர்ப்பாக்கம்:-நெய்தலங்கானலுக்கு மேற்கே மருவூர்ப்பாக்கம் இருந்தது. இங்குத் துணிநெய்வோர், நவதானியம் விற்போர், அப்பம் விற்போர், ஆட்சி வணிகர், கன்னார், வண்ணார், குயவர், தட்டார், தோல் வேலை செய்வோர், மீன் பிடிப்போர், நால்வகைச் சேனையைச் சேர்ந்த போர் வீரர்கள், வெளிநாடுகளில் இருந்து கப்பல் ஓட்டிவந்த யவனர் முதலிய கடலோடிகள் முதலியோர் வசித்திருந்தனர் என்று சிலப்பதிகாரம் கூறுகிறது. (சிலம்பு 5-9-39, 6-130-150.)

> **"மொழிபல பெருகிய பழிதீர் தேஎத்துப்**
> **புலம்பெயர் மாக்கள் கலந்தினி துறையும்**
> **முட்டாச் சிறப்பிற் பட்டினம்"**

என்று பட்டினப்பாலை கூறுவது இந்த மருவூர்ப்பாக்கத்தைத்தான். மருவூர்ப்பாக்கத்திற்கு மருங்கூர்ப்பட்டினம் என்றும் பெயர் வழங்கியது போலும்.

> **"திருவுடை வியனகர் வருவிருந் தயர்மார்**
> **பொற்றொடி மகளிர் புறங்கடை யுகுத்த**
> **கொக்குகிர் நிமிரல் மாந்தி, எற்பட**
> **அகலங் காடி யசைநிழல் குவித்த**
> **பச்சிறாக் கவர்ந்த பசுங்கண் காக்கை**
> **தூங்கல் வங்கத்துக் கூம்பிற் சேக்கும்**
> **மருங்கூர்ப் பட்டினம்"**

என்று நக்கீரர் நற்றிணையில் (258) கூறுவது இந்த மருவூர்ப் பாக்கமேயாம். மேலும், நக்கீரர் அகம் 227-ஆவது செய்யுளில்,

> **"விழுநிதி துஞ்சும் வீறுபெறு திருநகர்**
> **இருங்கழிப் படப்பை மருங்கூர்ப் பட்டினத்து**
> **எல்லுமிழ் ஆவணம்"**

என்றும் கூறுகிறார். எனவே, காவிரிப்பூம்பட்டினத்தின் கீழ்ப்பகுதி யாகிய மருவூர்ப்பாக்கமும் நக்கீரர் கூறுகிற மருங்கூர்ப்பட்டினமும் ஒன்றே என்பது விளங்குகிறது. (படம் காண்க) மருவூர்ப்பாக்கத்தின் தெற்கில் காவிரிக்கரை ஓரத்தில் துறை முகமும் பண்டசாலையும் இருந்தன. இவற்றைப்பற்றிப் பின்னர் விளக்குவோம்.

நாளங்காடி:- மருவூர்ப்பாக்கத்துக்கு மேற்கே மரங்கள் அடர்ந்த இடைநிலம் இருந்தது மருவூர்ப்பாக்கத்தில் செல்வச் சீமான்களும் பெருங்குடி மக்களும் வாழவில்லை. தொழிலாளர்களும் நடுத்தரச் செல்வம் உள்ள வர்களும் மற்றவர்களும் வாழ்ந்தனர். இந்த மரச்சோலையில் நாள் அங்காடி இருந்தது. இந்த நாளங்காடிச் சோலை மருவூர்ப்பாக்கத்துக்கும் பட்டினப்பாக்கத்துக்கும் இடைநடுவில் இருந்தது. (படம் காண்க) இந்த அங்காடியில், மருவூர்ப்பாகத்தில் வாழ்ந்தவர்களும் பட்டினப்பாக்கத்தில் வாழ்ந்தவர்களும் தமக்கு வேண்டிய பொருள்களை வாங்கினார்கள்.

''இருபெரு வேந்தர் முனையிடம் போல
இருபாற் பகுதியின் இடைநில மாகிய
கடைகால் யாத்த மிடைமரச் சோலைக்
கொடுப்போர் ஓதையும் கொள்வோர் ஓதையும்
நடுக்கின்றி நிலைஇய நாளங் காடி''

என்று சிலம்பு (5:59-63) கூறுகிறது.

''பெரிய வேந்தர் இருவர் போர்குறித்து வந்துவிட்ட பாசறை யிருப்புக்கு நடுப்பட்ட நிலம் போர்க்களம் ஆனாற்போல, முற்கூறிய மருவூர்ப்பாக்கமும் பட்டினப்பாக்கமும் என இரண்டு கூறுபட்ட ஊர்க்கு நடுப்பட்ட பொதுநிலமாகிய நாளங்காடி; அஃது எத்தன்மையதாகிய நாளங்காடி எனின், நிரைபடச் செறிந்த சோலையின் மரங்களிற் கால்களே தூணாகக் கட்டப்பட்ட கடைகளையுடைய கொடுப்போர் கொள்வோர் ஓதை இடையறாது நிலைபெற்ற நாளங்காடி என்க,'' என்பது அடியார்க்கு நல்லார் உரை. (இந்நாளங்காடியின் நடு இடத்திலே காவல் பூதத்திற்குப் பலிபீடம் அமைந்திருந்தது. இதைப் பற்றிப் பின்னர்க் கூறலாம்.)

பட்டினப்பாக்கம்:-நாளங்காடிக்கு மேற்கே பட்டினப்பாக்கம் இருந்தது. இதுதான் காவிரிப்பூம்பட்டினத்தின் முக்கிய பகுதி. ஏனென்றால், இங்கு தான் சோழமன்னர் அரண்மனையும் பெருங்குடி மக்களின் மாளிகைகளும் முக்கியமான கோயில்களும் மண்டபங்களும் நாடகசாலைகளும், ஆடலரங்கங்களும் இருந்தன.

''மகர நெற்றி வான்தோய் புரிசைச்
சிகரந் தோன்றாச் சேணுயர் நல்லில்
புகாஅர் நன் னாடு''

என்று பரணர் (அகம்:181), புகார்நகரம் உயர்ந்தமதில் சுவர்களையுடைய கோட்டைக்குள் இருந்ததாகக் கூறுகிறார். இவர் கூறுகிற புகார்நகரம் பட்டினப்பாக்கமாகும். மணிமேகலைக் காவியத்தில் காணப்படுகிற சில குறிப்புகளைக்கொண்டு நுட்பமாக ஆராய்ந்தால் இது விளங்கும். சீத்தலைச் சாத்தனாரு, தாம் இயற்றிய மணிமேகலையில் புகார்நகரத்திற்குக் கோட்டை மதிலும் அகழியும் இருந்ததாகக் கூறுகிறார். இந்தப் பட்டினப்பாக்கம், கோட்டைமதிலையும் அகழியையும் உடையதாய் உயரமாக அமைந்த அரண்மனையையும் அதற்கு அருகில் தருநிலைக்கோட்டம், வச்சிரக் கோட்டம் என்னும் இரண்டு கோயில்களையுமுடையதாய் ஓர் அழகிய மங்கைபோல விளங்கிற்று என்று கூறுகிறார்.

''புலவரை யிறந்த புகார்எனும் பூங்கொடி
பன்மலர் சிறந்த நன்னீர் அகழிப்
புள்ளொலி சிறந்த தெள்ளரிச் சிலம்படி
ஞாயில் இஞ்சி நகைமணி மேகலை
வாயின்மருங் கியன்ற வான்பணைத் தோளி
தருநிலை வச்சிரம் எனவிரு கோட்டம்
எதிரெதிர் ஓங்கிய கதிரிள வனமுலை
ஆர்புனை வேந்தர்க்குப் பேரள வியற்றி
யூழி எண்ணி நீ:்டுநின் றோங்கிய
ஒருபெருங் கோயில் திருமுக வாட்டி.'' -மணி.5,109-118.

(பட்டினப்பாக்கத்தின் அமைப்பைப் படத்தில் காண்க.) அரண்மனைக்கு அருகில் இருந்த வீதிகளிலே அரண்மனை அலுவலாளர்களும், அரண்மனை ஊழியரும், குதிரைப்படைத்தலைவர், யானைப்படைத்தலைவர், தேர்ப் படைத்தலைவர், காலாட்படைத்தலைவர் முதலியவர்களும் வசித்திருந்தனர். இங்கே கோவியன் வீதியும், கொடித்தேர்வீதியும், பீடிகைத்தெருவும், ஏனைய தெருக்களும் இருந்தன. பெருங்குடி வணிகர், பெருநிலக்கிழவர், முத்து விற்போர், சங்குவளை விற்போர் முதலியோர் இப்பட்டினத்தில் வசித்திருந் தனர். கோவலன் கண்ணகியும் இவர்களின் பெற்றோரான மாசாத்துவான், மாநாய்கன் முதலியோரும் இங்கே வசித்துவந்தனர். மணிமேகலையும் மாதவியும் வசித்த இடமும் இதுவே. பட்டினப்பாக்கத்தின் சிறப்பைச் சிலம்பு 5-ஆம் காதை 40-58 அடிகளாலும் இவ்வடிகளுக்கு அடியார்க்கு நல்லார் எழுதிய உரையினாலும் அறியலாம்.

சுடுகாடு:-காவிரிப்பூம்பட்டினத்தையடுத்து சுடுகாடு இருந்தது. இதற்குச் சுடுகாட்டுக்கோட்டம் என்றும், சக்கர வாளக்கோட்டம் என்றும் பெயர் இது நாளங்காடிச் சோலைக்கு வடக்கேயிருந்தது. (படம் காண்க) இங்கே துர்க்கை கோயிலும், வாகை மன்றம், வெள்ளில் மன்றம், இரத்தி மன்றம், வன்னி மன்றம், வெள்ளிடை மன்றம் ஆகிய மன்றங்களும் இருந்தன என்று மணிமேகலை கூறுகிறது. (மணி.6-ஆம் காதை 37-97.)

துறைமுகம்:-காவிரி ஆறு கடலுடன் கலக்கிற புகார் முகத்தில் இருந்தபடியினாலே வெளிநாட்டு நாவாய்களும் மரக்கலங்களும் இத்துறை முகத்தில் வந்து தங்கின. புகார்த்துறைமுகம் ஆழமும் அகலமும் உடையதாய் இருந்தது ஆகையினாலே, பெரிய நாவாய்கள் பாய்களைக் களையாமலே துறைமுகத்தில் வந்து நங்கூரம் பாய்ச்சி நின்றன.

> **''................கூம்பொடு**
> **மிசைப்பாய் களையாது மிசைப்பரந் தோண்டாது**
> **புகாஅர் புகுந்த பெருங்கலம்''**

என்று புறப்பாட்டு (30) கூறுகிறது.

''கூம்புடனே மேற் பூரிக்கப்பட்ட பாயை மாற்றாமல் அதன்மேற் பாரத்தையும் பறியாமல் ஆற்று முகத்துப் புகுந்த பெரிய மரக்கலம்,'' என்பது இதன் பழைய உரை மேலும், ''பாய் களையாது பரந்தோண்டாது என்ற தனால், துறை நன்மை கூறியவாறாம்,'' என்று விளக்கம் கூறுகிறது இப்பழைய உரை.

> **''வெளில்இளக்கும் களிறு போலத்**
> **தீம்புகார்த் திரைமுன்றுறைத்**
> **தூங்கு நாவாய் துவன்றிருக்கை**
> **மிசைக்கூம்பின் அசைக்கொடியும்''**

என்று பட்டினப்பாலை (172-175) கூறுகிறது.

''அசையாத கம்பத்தினை யசைக்கும் யானைபோல, கட்கினிதாகிய புகாரிடத்துத் திரையினையுடைய துறையின் முன்னே நிறைந்த இருப்பினை யுடைய அசைகின்ற நாவாயின்மேல் நட்ட பாய்மரத்தின் மேலெடுத்த விரும்புதலையுடைய கொடிகள்'' என்று நச்சினார்க்கினியர் இதற்கு எழுதுகிறார்.

துறைமுகத்தில் நடைபெறுகிற ஏற்றுமதி இறக்குமதிப் பொருள்களை வைக்கும் பண்டசாலை துறைமுகத்திற்கு அருகிலே மருவூர்ப்பாக்கத்தில் இருந்தது. (படம் காண்க.) சுங்கத்தீர்வையாளர், சுங்கம்(வரி)பெற்ற பொருள் களுக்குச் சோழ அரசனுடைய அடையாளமாகிய புலியைப் பொறித்தனர் என்று பட்டினப்பாலை கூறுகிறது. அயல்நாடுகளிலிருந்து நாவாய் ஓட்டி வந்த மாலுமிகள் துறைமுகத்திற்கு அருகிலேயிருந்த மருவூர்ப்பாக்கத்தில் தங்கியிருந்தனர்.

இனி இந்நகரத்தில் இருந்த கோயில்கள் கோட்டங்கள் பூஞ்சோலைகள் முதலிய பொது இடங்களை ஆராய்வோம்.

கோயில்கள்:-சோழ அரசரும், செல்வப் பிரபுக்களும், பெருங்குடி மக்களும் வசித்த பட்டினப்பாக்கத்தில் வச்சிரக்கோட்டம், ஐராவதக்கோட்டம், தருநிலைக்கோட்டம், பிறவா யாக்கைப் பெரியோன் (சிவன்)கோயில், முருகவேள் கோட்டம், பலதேவன் கோயில், கண்ணன் கோயில், உச்சிக் கிழான் (சூரியன்) கோட்டம், நிலாக்கோட்டம், அருகன் கோயில், பௌத்தக் கோயில் முதலிய கோயில்கள் இருந்தன. இவைகளைப் பற்றிச் சிலப்பதி காரத்தில் காணலாம். (சிலம்பு. 5:141-172, 9-9-15, 10-9-25.)

இக்கோயில்களைத் தவிர சிறுதெய்வங்களுக்கு ஐந்து மன்றங்கள் இருந்தன. இதனை,

> **"அமரா பதிகாத்து அமரனிற் பெற்றுத்**
> **தமரிற் றந்து தகைசால் சிறப்பிற்**
> **பொய்வகை யின்றிப் பூமியிற்புணர்த்த**
> **ஐவகை மன்றத்து அமைதியும் காண்குதும்."**

என்னும் சிலம்பு, கடலாடு காதையடிகளால் அறியலாம். இந்த ஐந்து மன்றங்களாவன.

வெள்ளிடைமன்றம்:-இம்மன்றத்தில் இருந்த தெய்வத்தின் சிறப்பு என்னவென்றால், இது கள்வரைத் தண்டித்து வந்தது பிறர்பொருளைக் களவாடினவர்களின் தலையில், களவாடிய பொருளைவைத்து அழுத்திக் கழுத்துக் கடுக்க ஊர்முழுவதும் சுற்றிவரச் செய்யுமாம்.

இலஞ்சிமன்றம்:-இம்மன்றத்தின் அருகில் ஒரு மடு(ஓடை) இருந்தது. இதில் மூழ்கி இம்மன்றத்துத் தெய்வத்தை வழிபட்டவருக்குக் குட்டம், ஊமை, செவிடு, கூன் முதலியவை நீங்கிவிடுமாம்.

நெடுங்கல் மன்றம்:-இம்மன்றத்தில் வழிபட்டவருடைய பைத்தியம், பாம்புக்கடி விஷம், பேய்பிடித்த துன்பம், நஞ்சு உண்ட தீங்கு முதலியவை நீங்கிவிடுமாம்.

பூத சதுக்கம்:-இது நாற்சந்தியில் இருந்தது போலும். இங்கிருந்த பூதம், கூடாவொழுக்கம் உள்ள துறவிகள், பிறர்மனை விரும்பும் துச்சாரிகள், கற்பு நெறிதவறிய பெண்டிர், அரசனை வஞ்சிக்கும் அமைச்சர், நீதிமன்றத்தில் பொய்ச்சான்று கூறும் நெறியற்றோர் ஆகியவர்களைக் கயிற்றினால் கட்டி நிலத்தில் ஓங்கி அறைந்து கொல்லுமாம்.

பாவைமன்றம்:-இம்மன்றத்தில் இருந்த தெய்வம், அரசன் நீதிதவறி நடந்தாலும், நீதிமன்றத்தில் நீதிபதிகள் நீதி தவறித் தீர்ப்புக் கூறினாலும் கண்ணீர் உகுத்து அழுது இந்த அநீதிகளை உலகத்தாருக்கு வெளிப்படுத்துமாம்.

இந்த ஐந்து மன்றங்களைப் பற்றிச் சிலம்பு 5-ஆம் காதை 111-140 அடிகளாலும், இவ்வடிகளுக்கு அடியார்க்கு நல்லார் இயற்றிய உரையினாலும் அறியலாம். இவையன்றியும் வேறு சில கோயில்களும் இருந்தன அவையாவன,

பூதபீடிகை:-இது நாளங்காடித் தோட்டத்தின் நடுவில் இருந்தது. (படம் காண்க) இந்தப் பீடிகை இங்கு அமைக்கப்பட்ட காரணத்தைச் சிலம்பு 6-ஆவது காதை 8-13 வரிகளில் காண்க; இந்திரவிழா தொடங்குவதற்கு முன்பு மறக்குடி மகளிரும் போர்வீரர்களும் இப்பீடிகைக்குச் சிறப்புச் செய்தனர். சிலம்பு 5-ஆம் காதை 65-88 அடிகளில் காண்க.

சம்பாபதி கோயில்:-இது சுடுகாட்டுக் கோட்டத்துக்கு அருகில் இருந்தது (படம் காண்க.) இதற்கு அருகில் உவவனம் என்னும் பூந்தோட்டம் இருந்தது. சம்பாபதி கோயிலுக்குக் குச்சரக்குடிகை என்றும் முதியாள் கோட்டம் என்றும் பெயர். இக்கோயிலின் ஒருபுறத்தில் உலகவறவி என்னும் இடம் இருந்தது. உலகவறவியில் குருடர், முடவர், நோயாளிகள், பிச்சைக்காரர்கள் முதலிய ஏழை எளியவர்கள் இருந்தனர். சம்பாபதிக் கோயிலில் சம்பாபதியம்மன் உருவம் வழிபடப்பட்டது. இது பௌத்தத் தெய்வம். இக்கோயிலிலேயே கந்திற்பாவை என்னும் தெய்வமும் வழிபடப்பட்டது. மணிமேகலை இக்கோயிலில் தங்கி இங்கிருந்த ஏழை எளியவருக்கு உணவு

கொடுத்து உதவினாள். மணிமேகலையைக் காதலித்த உதயகுமாரன் கந்தர் வனால் கொலையுண்டதும் இவ்விடந்தான். (இப்போதுள்ள காவிரிப்பூம் பட்டினம் என்னும் கிராமத்திற்கு அருகில் மருவதூர் என்னும் இடத்தில் சம்பாபதி கோயில் இப்போதும் இருக்கிறது என்று தொல்பொருட்கலை (ஆர்க்கியாலஜி) அறிக்கை கூறுகிறது. இப்போதைய மருவதூர், பண்டைய மருவூர்ப்பாக்கமாக இருக்குமோ? இப்போதைய சம்பாபதிகோயில் பண்டைய சம்பாபதி போயில் தானோ?)

சக்கரவாளக் கோட்டம் என்னும் சுடுகாட்டுக்கோட்டத்தில் துர்க்கை அம்மன் கோயிலும் வேறு சில மன்றங்களும் இருந்தன என்பதை முன்னரே கூறினோம்.

சிறைக்கோட்டம்:-இது அரசாங்கத்துக் குற்றவாளிகளை அடைத்துச் சிறைவைத்திருந்த சிறைச்சாலை. இது பட்டினப்பாக்கத்தில் இருந்ததா, மருவூர்ப்பாகத்தில் இருந்ததா என்று திட்டமாகத் தெரியவில்லை. மணிமேகலையார் வேண்டுகோளின்படி இச்சிறைச்சாலையைப் பௌத்த மடமாகச் சோழமன்னன் செய்து கொடுத்தான் என்று மணிமேகலை நூலினால் அறியப்படுகிறது. மணி 19-ஆம் காதை. 130-162 அடிகள் காண்க.

பட்டிமண்டபம்:-இது பட்டினப்பாக்கத்தில் சோழ மன்னன் அரண்மனையில் இருந்த கட்டிடம். இந்த மண்டபத்தில் மதவாதிகள் கூடித் தத்தம் மதத்தத்துவங்களைக் குறித்துச் சொற்பொழிவு நிகழ்த்தினார்கள்.

"ஒட்டிய சமயத் துறுபொருள் வாதிகள்
பட்டி மண்டபத்துப் பாங்கறிந் தேறுமின்
பற்றா மாக்கள் தம்முடன் ஆயினும்
செற்றமும் கலாமும் செய்யா தகலுமின்."

என்று இந்திரவிழாத் தொடக்கத்தில் அரசன் முரசறைவித்தான் என்று மணி. 2-ஆம் காதை கூறுகிறது. மகதநாட்டு மன்னன், சோழனுக்கு இந்த மண்டபத்தைக் கையுறையாகக் கொடுத்தான் என்று சிலம்பு 5-ஆம் காதை கூறுகிறது.

"மகதநன் னாட்டு வாள்வாய் வேந்தன்
பகைப் புறத்துக் கொடுத்த பட்டி மண்டபம்,"

என்று கூறுவது காண்க. பட்டிமண்டபம் என்பதற்கு ஓலக்க மண்டபம் என்று அரும்பத உரையாசிரியர் கூறுகிறார். "பட்டி மண்டபம்-வித்தியா மண்டபம்; ஓலக்க மண்டபமு மென்க" என்று அடியார்க்கு நல்லார் உரை கூறுகிறார்.

இனி இங்கிருந்த பூங்காவனங்களை ஆராயலாம்.

இலவந்திகை:-இதற்கு நீராவிச்சோலை என்றும் பெயர் உண்டு. இஃது அரண்மனையைச் சேர்ந்த பூங்காவனம். அரச குடும்பத்தினர் மட்டும் இங்குச் செல்ல உரிமையுடையவர். இது, பட்டினப்பாக்கத்தில் காவிரி ஆற்றங்கரை ஓரமாக அரண்மனைக்கு அருகில் இருந்தது. (படம் காண்க.)

"கலையி லாளன் காமர் வேனிலொடு
மலைய மாருதம் மன்னவற் கிறுக்கும்
பன்மலர் அடுக்கிய நன்மரப் பந்தர்
இலவந் திகையின் எயிற்புறம் போகி."

என்று சிலம்பு கூறுகிறது. இச்சோலையின் காட்சிகளைச் சீத்தலைச் சாத்தனார் மணிமேகலையில் (19-ஆம் காதை) விரிவாகக் கூறுகிறார்.

உவவனம்:-இது நாளங்காடித் தோட்டத்தின் மேற்கில் பட்டினப் பாக்கத்துக் கோட்டை மதில் ஓரத்தில் இருந்தது. (படம் காண்க.) இதற்கு வடக்கே குச்சரக்குடிகை என்னும் சம்பாபதி கோயில் இருந்தது. இந்தப் பூங்கா வனம் பௌத்தர்களுக்குரியது. இங்குப் புத்தபகவானுடைய பாத பீடிகை அமைந்த பளிங்கு அறை மண்டபம் இருந்தது. இந்தப் பூஞ்சோலையில் பூக் கொய்வதற்காக மணிமேகலையார் சுதமதியுடன் சென்றார். உதயகுமாரன் மணிமேகலையைப் பின் தொடர்ந்து சென்று சுதமதியுடன் உரையாடிய இடமும் இதுவே. இப்பூஞ்சோலையின் சிறப்பைச் சீத்தலைச்சாத்தனார் மணிமேகலை நூலிலே நன்கு விளக்குகிறார். (3-ஆம் காதை 160-170, 4-ஆம் காதை 1-26)

உய்யானம்:-இது பட்டினப்பாக்கத்தில் இருந்த பூத சதுக்கத்தின் அருகில் இருந்ததுபோலும். இதனை,

"கைபெய் பாசத்துப் பூதங்காக்கு மென்று
உய்யா னத்திடை யுணர்ந்தோர் செல்லார்."

என்று மணிமேகலை நூல் கூறுவதனாலே அறியலாம்.

சம்பாதிவனம், கவேரவனம்:-இவ்விரண்டு பூங்காவனங்களும் காவிரிப்பூம்பட்டினத்தில் இருந்தன என்பது மணிமேகலையினால் அறியப் படுகின்றன. ஆனால், பட்டினப்பாக்கத்தில் இருந்தனவா மருவூர்ப் பாக்கத்தில் இருந்தனவா என்பது தெரியவில்லை.

> ***''வெங்கதிர் வெம்மையின் விரிசிறை யிழந்த***
> ***சம்பாதி யிருந்த சம்பாதி வனமும்***
> ***தவாநீர்க் காவிரிப் பாவைதன் தாதை***
> ***கவேரனாங் கிருந்த கவேர வனமும்***
> ***மூப்புடை முதுமைய தாக்கணங் குடைய***
> ***யாப்புடைத்தாக அறிந்தோர் எய்தார்.''***

என்று இவைகளைப் பற்றி மணிமேகலை கூறுகிறது

பரப்பு:-காவிரிப்பூம்பட்டினத்தின் அகல நீளம் எவ்வளவு பரப்புடையது என்பது அறியக்கூடவில்லை. ஆனால்,

> ***''காதம் நான்கும் கடுங்குரல் எடுப்பிப்***
> ***பூதம் புடைத்துணும் பூத சதுக்கமும்.''***

என்று சிலம்பு 5-ஆம் காதை அடிகளுக்கு உரை கூறுகிற அரும்பத உரையாசிரியர், ''காத நான்கும்-ஊர்சூழ்ந்த நாற்காதவட்டகை.'' என்று உரை கூறுகிறது. அடியார்க்கு நல்லார், ''காத நான்குமென முற்றும்மை கொடுத்தலானே ஊர் நாற்காத வட்டகை என்பதுணர்க'' என்று எழுதுகிறார். காதம் என்பது மூன்று மைல் எனவே நாற்காதவட்டகை என்பது பன்னிரண்டு சதுர மைல் ஆகும். அஃதாவது சங்ககாலத்துக் காவிரிப் பூம்பட்டினம் பன்னிரண்டு சதுரமைல் இருந்ததென்பது பெறப்படும்.

புலவர்கள்:-கீழ்க்கண்ட புலவர்கள் பெயர் சங்க நூல்களில் காணப் படுகின்றன. காவிரிப்பூம்பட்டினத்துக் கந்தரத்தனார்; காவிரிப்பூம் பட்டினத்துக் காரிக்கண்ணனார்; காவிரிப்பூம்பட்டினத்துச் செங்கண்ணனார்; காவிரிப்பூம்பட்டினத்துச் சேந்தன் கண்ணனார்; காவிரிப்பூம்பட்டினத்துப் பொன் வாணிகன் மகனார் நப்பூதத்தனார். இவர்கள் பட்டினப்பாக்கத்தில் இருந்தவர் என்று யூகிக்கப்படுகின்றனர்.

மருவூர்ப்பாக்கத்தில் இருந்த புலவர்கள்:-மருங்கூர்ப்பட்டினத்துச் சேந்தன் குமரனார்; மருங்கூர் கிழார் பெருங்கண்ணனார்; மருங்கூர்ப்பாகை சாத்தன் பூதனார்.

இதுகாறும் ஆராய்ந்த இச்சிற்றாராய்ச்சியினாலே, சங்க காலத்திலிருந்த காவிரிப்பூம்பட்டினத்தின் அமைப்பை ஒருவாறு தெரிந்துகொண்டோம்.

செந்தமிழ்ச்செல்வி-சிலம்பு.25

9. மறைந்துபோன மருங்கூர்ப்பட்டினம்

(சங்ககாலத்துத் துறைமுகம்)

மருங்கூர்ப் பட்டினம் என்னும் பெயருள்ள ஒரு துறைமுகப்பட்டினம் பாண்டி நாட்டின் கிழக்குக் கடற்கரையோரத்தில் இருந்தது என்பதை இதுவரையில் ஒருவரும் அறியவில்லை. பேர்போன கொற்கைத் துறைமுகம் பாண்டி நாட்டில் இருந்ததும் பிற்காலத்தில் அது மறைந்துபோய் புன்னைக் காயல் துறைமுகம் ஏற்பட்டதும் பின்னர் அதுவும் மறைந்துபோய் இப்போது தூத்துக்குடி துறைமுகம் ஏற்பட்டிருப்பதும் தெரிந்ததேயாகும். கொற்கைத் துறைமுகத்தைத்தவிர மருங்கூர்ப் பட்டினம் என்னும் இன்னொரு துறை முகப்பட்டினம் கி.பி.இரண்டாம் நூற்றாண்டில் இருந்ததைச் சங்க இலக்கியத்திலிருந்து அறிகிறோம்.

பெரிப்ளஸ் என்னும் கிரேக்க நூலும் தாலமி என்பவர் எழுதிய கிரேக்க நூலும் அக்காலத்திலிருந்த தமிழ் நாட்டின் துறைமுகப் பட்டினங்களின் பெயர் களைக் கூறுகின்றன. ஆனால், மருங்கூர்த் துறைமுகப்பட்டினத்தின் பெயர் அந்நூல்களிற் காணப்படவில்லை. பரணர், நக்கீரர், மருதன் இளநாகனார் என்னும் மூன்று சங்ககாலப் புலவர்களின் செய்யுள்களிலிருந்து இந்தத் துறைமுகப்பட்டினத்தைப் பற்றி அறிகிறோம். இந்தச் செய்யுள்களிலும் இந்தப் பட்டினத்தின் முழு வரலாறு கூறப்படவில்லை. மருங்கூர்ப் பட்டினம் ஒரு துறைமுகப்பட்டினம் என்பது மட்டும் இச்செய்யுள்களிலிருந்து தெரிகின்றது. சங்கச் செய்யுள்களைப் படித்து ஆராய்ந்த ஆராய்ச்சிக்காரர் களுக்கு இந்தத் துறைமுகப்பட்டினம் தெரியாமற்போனது ஆச்சரியமாக இருக்கிறது. கிடைத்துள்ள சான்றுகளை ஆதாரமாகக்கொண்டு இந்தப் பழைய துறைமுகப்பட்டினத்தைப் பற்றி விளக்கிக் கூறுவோம்.

சோழ நாட்டிலிருந்த பேர்போன காவிரிப்பூம்பட்டினம் அக்காலத்தில் மருவூர்ப்பாக்கம், பட்டினப்பாக்கம் என்று இரண்டு பகுதியாகப் பிரிந்

* ஆய்வாளர், சென்னை.

திருந்தது போலவே இந்தத் துறைமுகப்பட்டினமும் மருங்கூர்ப் பட்டினம் என்றும் ஊணூர் என்றும் இரண்டு பகுதிகளைக் கொண்டிருந்தது. காவிரிப் பூம்பட்டினத்துப் பட்டினப்பாக்கத்தைச் சூழ்ந்து மதில் அரணாக இருந்தது போலவே, மருங்கூர்ப்பட்டினத்தைச் சேர்ந்த ஊணூரைச் சூழ்ந்து மதில்அரண் இருந்தது. இந்தத் துறைமுகப்பட்டினத்தைப் பற்றிச் சங்கச் செய்யுள்கள் கூறுவதைப் பார்ப்போம்.

மருங்கூர்ப் பட்டினம் செல்வம் கொழித்த நகரம் என்றும் அது கடற்கரையில் இருந்ததென்றும் அங்குக் காயல்களும் (உப்பங்கழிகள்) தோட்டங்களும் இருந்தன என்றும் அவ்வூர்க் கடைத்தெரு சிறந்திருந்தது என்றும் நக்கீரர் கூறுகிறார்.

"விழுநிதி துஞ்சும் வீறுபெறு திருநகர்
இருங்கழிப் படப்பை மருங்கூர்ப் பட்டினத்து
எல்லுமிழ் ஆவணம்." (அகம்: 227:19-21).

காக்கைகள் வீட்டில் வந்து கரைந்தால் அவ்வீட்டுக்கு விருந்தினர் வருவார்கள் என்பது அக்காலத்து நம்பிக்கை. மருங்கூர்ப் பட்டினத்து மகளிரும் தங்கள் வீட்டுக்கு விருந்தினர் வரவேண்டுமென்று விரும்பிக் காக்கைகளுக்குச் சோறு (பலி) இட்டனர். சோற்றுப் பலியை உண்ட காக்கைகள், அவ்வூர்க் கடைத்தெருவில் ஓரிடத்தில் குவித்து வைத்திருந்த இறால் மீன்களைக் கவர்ந்து கொண்டுபோய்த் துறைமுகத்தில் தங்கியிருந்த வங்கங்களின் (கப்பல்களில்) பாய்மரத்தின் மேல் அமர்ந்து இறால்களைத் தின்றன என்று நக்கீரர் கூறுகிறார்.

"கதிர்கால் வெம்பக் கல்காய் ஞாயிற்றுத்
திருவுடை வியனகர் வருவிருந் தயர்மார்
பொற்றொடி மகளிர் புறங்கடை உகுத்த
கொக்குகிர் நிமிரல் மாந்தி எற்பட
அகலங் காடி யசைநிழற் குவித்த
பச்சிறாக் கவர்ந்த பசுங்கண் காக்கை
தூங்கல் வங்கத்துக் கூம்பில் சேக்கும்
மருங்கூர்ப் பட்டினம்." (நற்றிணை. 258:3-10)

மருங்கூர்ப் பட்டினம் சுருக்கமாக மருங்கை என்றும் கூறப்பட்டது. மருங்கை, பசும்பூண் வழுதி என்னும் பாண்டியனுக்கு உரியது என்று நக்கீரர்

கூறுகிறார். இதனால் இத்துறைமுகப்பட்டினம் பாண்டி நாட்டில் இருந்தது என்பது தெரிகின்றது.

"பெருஞ்சே யிறவின் துய்த்தலை முடங்கல்
சிறுவெண் காக்கை நாளிரை பெறூஉம்
பசும்பூண் வழுதி மருங்கை." (நற்றிணை. 358:8-10)

மருங்கூர்ப் பட்டினத்தை அடுத்து (மேற்கே) ஊணூர் என்னும் ஊர் இருந்தது. இவை இரண்டும் ஒன்றையொன்று அடுத்து ஒரே நகரம் போல் இருந்தன. ஊணூரின் தலைவன் பெயர் தழும்பன் என்பது. ஊணூரைச் சூழ்ந்து மதிற்சுவர் அரணாக அமைந்திருந்தது. ஊணூர்த் தலைவனாகிய தழும்பனைத் தூங்கல் என்னும் புலவர் பாடினார். இச்செய்திகளை நக்கீரர் கூறுகிறார்.

"..........வாய்வாள்
தமிழகப் படுத்த இமிழிசை முரசின்
வருநர் வரையாப் பெருநாள் இருக்கைத்
தூங்கல் பாடிய ஓங்குபெரு நல்லிசைப்
பிடிமதி வழுதுணைப் பெரும்பெயர்த் தழும்பன்
கடிமதில் வரைப்பின் ஊணூர் உம்பர்
விழுநிதி துஞ்சும் வீறுபெறு திருநகர்
இருங்கழிப் படப்பை மருங்கூர்ப் பட்டினம்..."

(அகம்.227:13-20)

இச்செய்யுளில், ஊணூர்த் தழும்பனைத் தூங்கல் என்னும் புலவர் பாடினார் என்று நக்கீரர் கூறுகிறார். தூங்கல் என்பது தூங்கல் ஓரியார் என்னும் புலவனைச் சுட்டுகிறது. தூங்கல் ஓரியார் பாடிய செய்யுட்கள் குறுந்தொகையில் இரண்டும் (151, 295), நற்றிணையில் ஒன்றும் (60) ஆக மூன்று செய்யுட்கள் கிடைத்திருக்கின்றன. ஆனால் அவர் ஊணூர்த் தழும்பனைப் பாடிய பாடல்கள் கிடைக்கவில்லை. அப்பாடல் அல்லது பாடல்கள் தொகை நூல்களில் தொகுக்கப்படாமல் விடுபட்டன போலும்.

ஊணூர், கடற்கரைக்கு அருகில் மருங்கூர்ப் பட்டினத்தைச் சார்ந்து இருந்தது. ஊணூரைச் சூழ்ந்து நெல்வயல்கள் இருந்தன என்று மருதன் இளநாகனார் கூறுகிறார்.

"முழங்குகடல் ஓதம் காலைக் கொட்கும்
பழம்பல் நெல்லின் ஊணூர் ஆங்கண்."

(அகம்.220:12-13)

ஊணூர்க் கழனிகளில் உழவர் நெற்கதிரை அரியும்போது தண்ணுமை (மத்தளம்) வாசிக்கப்பட்டது. (அக்காலத்தில் உழவர்கள் பாட்டுப் பாடிக் கொண்டும் தண்ணுமை ஒலியைக் கேட்டுக்கொண்டும் பயிர்த்தொழில் செய்வது வழக்கம்). தண்ணுமையின் ஓசையைக் கேட்டுத் தேனீக்கள் சிதறிப் பறந்தன. ஊணூரிலிருந்த பாணர்கள் மதுக் காய்ச்சினார்கள், மீனைச் சமைத்து உண்டனர் என்று பரணர் கூறுகிறார்.

> **"வெண்ணெல் அரிஞர் தண்ணுமை வெரீஇக்**
> **கண்மடல் கொண்ட தீந்தேன் இரியக்**
> **கள்ளரிக்கும் குயம் சிறுசில்**
> **மீன்சீவும் பாண சேரி**
> **வாய்மொழித் தழும்பன் ஊணூர்."** (புறம்.348:1-5)

இசைப்பாடல்களிலும் யாழ் முதலிய இசைக் கருவிகளை வாசிப் பதிலும் நாடகக்கலையிலும் வல்லவர்களான பாணர்களுக்குத் தலைவன் ஊணூர்த் தழும்பன். தழும்பனுடைய உடம்பில் புண் தழும்புகள் இருந்தன. அந்தத் தழும்புகள் போர்க்களத்தில் ஏற்பட்டன போலும். ஊணூரில் யானையை அழைத்துக்கொண்டு யானைப்பாகன் வீடுதோறும் சென்று பிச்சை வாங்கினான் என்று பரணர் கூறுகிறார்.

> **"நெய்வார்ந் தன்ன துய்யடங்கு நரம்பின்**
> **இரும்பாண் ஒக்கல் தலைவன் பெரும்புண்**
> **ஏஎர் தழும்பன் ஊணூர் ஆங்கண்**
> **பிச்சை சூழ் பெருங்களிறு போல."**
>
> **(நற்றிணை.300:8-11)**

ஊணூர்த் தழும்பன் பாண்டியனுக்குக் கீழடங்கியிருந்தவன். இவ்வாறு ஊணூரும் அதனைச் சார்ந்த மருங்கூர்ப் பட்டினமும் சங்கச் செய்யுள்களில் கூறப்படுகின்றன. இனி, மேலே கூறப்பட்ட விளக்கத்திலிருந்து இவ்வூர் களின் அமைப்பு எவ்வாறு அமைந்திருக்கக்கூடும் என்பதை ஊகித்துப் படம் வரைந்து காட்டுவேன்.

இந்த ஊணூர்-மருங்கூர்ப் பட்டினம் பாண்டி நாட்டிலே எங்கிருந்தது என்பது தெரியவில்லை. இதை அறிவதற்கு வேண்டிய சான்றுகளோ குறிப்புகளோ இப்போது கிடைக்கவில்லை. இது பாண்டி நாட்டுக் கிழக்குக்



கரை ஓரத்தில் இருந்திருக்கவேண்டும். சங்கச் செய்யுள்களும் யவன நூல்களும் குறிப்பிடுகிற பேர்போன கொற்கைத் துறைமுகப் பட்டினத்துக்கு வடக்கே இது இருந்திருக்க வேண்டும்.

மருங்கூர்ப்பட்டினமும் சாலியூரும் ஒன்றா?

தலையாலங்கானத்துச் செருவென்ற பாண்டியன் நெடுஞ்செழியன் மேல் பாடப்பட்ட மதுரைக் காஞ்சியிலே (வரி. 75-88) ஒரு துறைமுகப் பட்டினம் கூறப்படுகிறது. மாங்குடி மருதனார் அந்தப் பட்டினத்தின் பெயரை நேராகக் கூறாமல் குறிப்பாகச் சுட்டிக் காட்டுகிறார். ''நெல்லின் ஊர்'' என்று அதைக் குறிப்பிடுகிறார். இதற்கு உரை எழுதிய மிகப் பிற்காலத்தவரான நச்சினார்க்கினியர், ''நெல்லின் பெயரைக் கொண்ட சாலியூர்'' என்று எழுதுகிறார். மேலும் ''இன்னை அசையாக்கி நெல்லூர் என்பாரும் உளர்'' என்றும் கூறுகிறார். எனவே சாலியூர் அல்லது நெல்லூர் என்னும் துறைமுகப் பட்டினம் பாண்டி நாட்டில் இருந்தது என்பது தெரிகிறது. செல்வம் கொழித்த அந்தத் துறைமுகப்பட்டினத்திலே பெருநாவாய்கள் (பெரிய பாய்க்கப்

பல்கள்) வந்து இறக்குமதி ஏற்றுமதி செய்தன என்று மதுரைக்காஞ்சி கூறுகிறது. அதன் வாசகம் இது:

''வான் இயைந்த இருமுந்நீர்ப்
பேஎ நிலைஇய பெரும்பெளவத்துக்
கொடும் புணரி விலங்குபோழக்
கடுங் காலொடு கரைசேர
நெடுங் கொடிமிசை இதை எடுத்து
இன்னிசைய முரச முழுங்கப்
பொன்மலிந்த விழுப் பண்டம்
நாடார நன்கிழி தரும்
ஆடியற் பெருநாவாய்
மழைமுற்றிய மலை புரையத்
துறை முற்றிய துளங்கிருக்கைத்
தெண்கடற் குண்டகழிச்
சீர்சான்ற உயர் நெல்லின்
ஊர்கொண்ட உயர் கொற்றவ.''

(மதுரைக்காஞ்சி.அடி 75-88.)

இதன் கருத்து: ''தொடுவானம் பொருந்திய பெரிய கடலாகிய அச்சந் தருகின்ற பெளவத்திலே (அக்கரை நாடுகளிலிருந்து) அலைகளைக் கிழித்துக்கொண்டு காற்றின் உதவியினால் இக்கரையையடைவதற்குப் பாய்களை விரித்துக்கொண்டு வந்த பெரிய நாவாய்க் கப்பல்கள் இத்துறை முகத்திலே கூட்டமாக வந்து தங்கின. நாவாய்களில் விலையுயர்ந்த பண்டங் களை இறக்குமதி செய்யும்போது அச்செய்தி முரசு அடித்து ஒலியுண்டாக்கி அறிவிக்கப்பட்டது. துறைமுகத்தில் நாவாய்கள் தங்கியிருந்த காட்சியானது, கடலை முற்றுகை செய்யும் மலைகள் போலத் தோன்றிற்று. இப்படிப்பட்ட வாணிக வளமுள்ள, ஆழமான அகழியையுடைய சாலியூரை (நெல்லூரைக்) கைப்பற்றினான் நெடுஞ்செழியன்'' என்பது.

இவ்வாறு சிறப்பிக்கப்பட்ட சாலியூர்த் துறைமுகப்பட்டினமும் மேலே கூறப்பட்ட மருங்கூர்த் துறைமுகப்பட்டினமும் ஒன்று தானோ என்னும் ஐயம் தோன்றுகிறது. சாலியூர், கடல்நீரை அகழியாகக் கொண்டிருந்தது! என்று மதுரைக்காஞ்சி கூறுகிறது. மருங்கூர்ப் பட்டினத்தை யடுத்திருந்த ஊணூர், கோட்டை மதிலைப் பெற்றிருந்தது என்று நக்கீரர் கூறுகிறார். மதிலைச் சூழ்ந்து

கிடங்கு (அகழி) இருப்பது வழக்கந்தானே. இக்குறிப்புகளினால் சாலியூரும் ஊணூரும் ஒன்று என்று கருதத் தோன்றுகிறது. ஆனால், உறுதியாகச் சொல்லத்தக்க சான்றுகள் இல்லை. இது எப்படியானாலும் சரி, இதுவரையில் அறியப்படாத ஒரு பழைய துறைமுகப்பட்டினம் இப்போது சங்கச் செய்யுள் களிலிருந்து வெளிப்பட்டது என்பது இந்த ஆராய்ச்சிக் கட்டுரையினால் நன்கு தெரிகின்றது.

மருங்கூர்ப் பட்டினம் கி.பி.13-ஆம் நூற்றாண்டுச் சாசனங்களிலும் கூறப்படுகிறது. சோழநாட்டிலே நன்னிலம் தாலுகாவில் உள்ள திருச்செங்காட்டங்குடி உத்தராபதீசுவரர் கோவிலின் முன்மண்டபத்து மேற்குப் பக்கத்துச் சுவரின் அடிப்புறத்தில் ஒரு சாசனம் எழுதப் பட்டிருக்கிறது. திரிபுவன சக்கரவர்த்தி இராஜ ராஜ தேவரின் (III) மூன்றாம் ஆட்சியாண்டில் (கி.பி.1218-இல்) இந்தச் சாசனம் எழுதப்பட்டது. மருங்கூர் வாசிகளான இருவர் இந்தக் கோயிலுக்கு நிலம் தானங் கொடுத்ததை இச்சாசனம் கூறுகிறது. மருங்கூருக்கு இராஜநாராயண சதுர்வேதிமங்கலம் என்று பெயர் இருந்ததை இச்சாசனம் தெரிவிக்கிறது.

இதே கோவிலின் இரண்டாவது கோபுர வாயிலின் இடது புறச்சுவரில் உள்ள சாசனம், திரிபுவனச் சக்கரவர்த்தி பராக்கிரம பாண்டிய தேவரின் ஏழாவது ஆட்சியாண்டில் எழுதப்பட்டது. மருங்கூரில் இருந்த இரண்டு வேலி நிலத்தை இக்கோயிலுக்குத் தானம் செய்யப்பட்ட செய்தி இதில் கூறப்படுகிறது.[1]

இந்தச் சாசனங்களிலிருந்த கி.பி 13-ஆம் நூற்றாண்டிலும் மருங்கூர்ப் பட்டினம் இருந்ததென்பது தெரிகின்றது. இப்போது இவ்வூர் இதே பெயருடன் இருக்கிறதா, அல்லது வேறு பெயர் பெற்றிருக்கிறதா, அல்லது கடலில் மறைந்து போய்விட்டதா என்பதை மேற்கொண்டு ஆராய வேண்டியது பழம் பொருள் ஆராய்ச்சி இலாகாவின் கடமையும் ஆராய்ச்சிக் காரர்களின் கடமையும் ஆகும்.

- இரண்டாவது உலகத் தமிழ்க் கருத்தரங்கு நிகழ்ச்சிகள்
மூன்றாம் தொகுதி 1971.

---

1 63 & 76 of 1913, Nos 753 & 766, Tanjore Dt. A Topographical list of the inscriptions of Madras Presidency. Vol.II.

10. "சேரநாட்டு முத்து"

இக்காலத்தில் மலையாள நாடாக மாறிப்போன சேரநாடு, பண்டைக் காலத்திலே தமிழ் நாடாக இருந்தது. தமிழ் நாடாக இருந்த சேர நாட்டைச் சேர மன்னர்கள் அரசாண்டார்கள். சேர நாட்டின் பழைய வரலாற்றுக் குறிப்புகள் பழைய தமிழ் நூல்களிலே காணப்படுகின்றன. பழைய சங்க நூல்களிலே காணப்படுகிற செய்திகளில் சேரநாட்டு முத்தைப் பற்றிய செய்தியும் ஒன்றாகும். இச்செய்தியைக் கேட்பவர் வியப்படைவார்கள். "இது என்ன புதுமை! பாண்டிநாடு தானே முத்துக்குப் பேர்போனது. சேர நாட்டிலும் முத்து உண்டாயிற்றா!" என்று கூறுவர்.

ஆம். பாண்டிய நாட்டுக் கொற்கைக் கடலிலே உண்டான முத்துக்கள் உலகப் புகழ் பெற்றவைதான். தமிழ் நூல்களும் வடமொழி நூல்களும் பாண்டி நாட்டு முத்துக்களைப் புகழ்ந்து பேசுகின்றன. பாரத தேசத்தில் மட்டும் அல்லாமல், எகிப்து தேசத்திலும் உரோமாபுரியிலும் பண்டைக் காலத்தில் பாண்டி நாட்டு முத்துக்கள் புகழ் பெற்றிருந்தன. உரோமாபுரிச் சீமாட்டிகள் தங்கள் நாட்டுப் பொன்னைக் கொடுத்துத் தமிழ் நாட்டு முத்துக்களைப் பெற்றுக்கொண்டார்கள். மேல்நாட்டு யவனக் கப்பல்கள் தமிழ் நாட்டுத் துறைமுகங்களுக்கு வந்து ஏனைய பொருள்களோடு முத்துக்களையும் வாங்கிக்கொண்டு போயின.

பேர்போன பாண்டி நாட்டு முத்துக்கள் உண்டான அதே காலத்தில் மேற்குக் கடற்கரையிலே சேர நாட்டிலேயும் முத்துக்கள் உண்டாயின. பாண்டிய நாட்டு முத்துக்களுக்கு அடுத்தபடியாகச் சேர நாட்டு முத்துக்கள் உள் நாட்டிலும் வெளி நாட்டிலும் சிறப்பும் மதிப்பும் பெற்றிருந்தன. இதற்கும் தமிழ் நூலில் மட்டுமல்லாமல் வடமொழி நூலிலும் சான்று கிடைக்கின்றது.

சேர அரசர்களைப் பற்றிக் கூறுகிற பதிற்றுப்பத்து என்னும் சங்கத் தமிழ் நூலிலே சேர நாட்டில் முத்து உண்டான செய்தி கூறப்படுகிறது. பதிற்றுப் பத்தின் ஏழாம் பத்தில், கபிலர் என்னும் புலவர் செல்வக்கடுங்கோ வாழி யாதன் என்னும் சேர மன்னனைப் புகழ்ந்து பாடுகிறார். அதில், சேர நாட்டுப் பந்தர் என்னும் ஊர் முத்துக்களுக்கும் கொடுமணம் என்னும் ஊர் பொன் நகைகளுக்கும் பேர்பெற்றிருந்தது என்று கூறுகிறார்.

"கொடுமணம் பட்ட நெடுமொழி ஒக்கலொடு
பந்தர்ப் பெயரிய பேரிசை மூதூர்க்

கடனறி மரபில் கைவல் பாண!
தெண்கடல் முத்தமொடு நன்கலம் பெறுகுவை''

என்று (7-ஆம் பத்து 7-ஆம் செய்யுள்) பாடுகிறார்.

இதற்கு உரை எழுதிய பழைய உரையாசிரியர் இவ்வாறு விளக்கம் கூறுகிறார். "கொடுமணம் என்பது ஒரூர். பந்தர்ப் பெயரிய - பந்தர் என்று பெயர்பெற்ற. கைவல் பாண! நெடுமொழி யொக்கலொடு நீ சான்றோர் பெருமகன் நேரிப் பொருநனாகிய செல்வக் கோமானைப் பாடிச் செல்லின், பந்தர்ப் பெயரிய மூதூர் தெண்கடல் முத்தமொடு கொடுமணம் பட்ட நன்கலம் பெறுகுவை என மாறிக் கூட்டி வினைமுடிவு செய்க''.

இவ்வாறு கூறுகிறபடியினாலே, சங்க காலத்திலே பந்தர் என்னும் ஊர் சேர நாட்டுக் கடற்கரையில் இருந்ததென்பதும் அவ்வூர்க் கடலில் முத்து குளிக்கப்பட்டதென்பதும் தெரிகின்றன.

இதே செய்தியை அரிசில்கிழார் என்னும் புலவரும் கூறுகிறார். பதிற்றுப்பத்து எட்டாம் பத்தில், பெருஞ்சேரலிரும்பொறை என்னும் சேர மன்னனை அரிசில்கிழார் பாடுகிறார். அதில் கொடுமணம், பந்தர் என்னும் ஊர்களைக் கூறுகிறார்.

"கொடுமணம் பட்ட வினைமாண் அருங்கலம்
பந்தர்ப் பயந்த பலர்புகழ் முத்தம்''

என்று (8-ஆம் பத்து, 4-ஆம் செய்யுள்) கூறுகிறார். இதில், கொடுமணம் என்னும் ஊர் பொன் நகைகளுக்குப் பேர்பெற்றிருந்ததும், பந்தர் என்னும் ஊர் முத்துக்களுக்குப் புகழ் பெற்றிருந்ததும் கூறப்படுகின்றன.

வடமொழியில் அர்த்தசாஸ்திரம் என்னும் பொருளியல் நூலை எழுதிய கவுடல்லியர், அந்நூலில் சேர நாட்டு முத்துக்களைப் பற்றியும் கூறகிறார். புகழ் பெற்ற அர்த்த சாஸ்திரத்தை எழுதிய கவுடல்லியர் கி.மு.மூன்றாம் நூற்றாண்டிலே மகத நாட்டை அரசாண்ட சந்திரகுப்த மௌரியனின் (அசோக சக்கரவர்த்தியின் பாட்டன்) அமைச்சராக இருந்தார் என்பது யாவரும் அறிந்ததொன்றே. அர்த்தசாஸ்திரத்தின் மூன்றாம் பகுதியில் பதினோராம் அதிகாரத்தில் பல தேசத்து முத்துக்களைப் பற்றிக் கூறுகிறார். முதலில் தாம்ரபர்ணிகம், பாண்டிய கவாடகம் என்னும் முத்துக்களைக் கூறுகிறார். இப்பெயர்களிலிருந்தே இவை பாண்டிய நாட்டில்

உண்டான முத்துக்கள் என்பதை அறிகிறோம். பிறகு பாஸிக்யம் என்னும் முத்தைக் கூறுகிறார். பாஸிக்யம் என்பது மகத நாட்டில் பாடலிபுரத்துக்கு அருகில் உண்டான முத்து. பின்னர் கௌலேயம் என்னும் முத்தைக் கூறுகிறார். கௌலேயம் என்பது இலங்கையில் ஈழ நாட்டில் உண்டான முத்து. அதன் பிறகு கௌர்ணேயம் என்னும் முத்தைக் கூறுகிறார். கௌர்ணேயம் என்பது சேரநாட்டிலே மேற்குக் கடலிலே உண்டான முத்து.

கவுடலிய அர்த்தசாஸ்திரத்துக்குத் தமிழ் - மலையாளத்தில் உரை எழுதிய ஒருவர் இதைப்பற்றி நன்றாக விளக்கி எழுதியுள்ளார். (பெயர் அறியப்படாத இந்த உரையாசிரியர், தமிழிலிருந்து மலையாளமொழி தோன்றிக்கொண்டிருந்த காலத்தில் இருந்தவர். ஆகவே, இவருடைய உரையில் தமிழ்-மலையாளச் சொற்கள் அதிகமாகக் கலந்துள்ளன.) இந்த உரையாசிரியர் கௌர்ணேயம் என்னும் சொல்லை இவ்வாறு விளக்குகிறார். ''கௌர்ணேயமாவிது மல நாட்டில் முரசி ஆகின்ற பட்டினத்தினரிகே சூர்ண்ணி யாற்றிலுளவாமவு'' என்று விளக்கம் கூறியுள்ளார். இதைத் தமிழில் சொல்லவேண்டுமானால், ''கௌர்ணேயம் ஆவது மலை நாட்டில் முரசி ஆகிய பட்டினத்தின் அருகே சூர்ணி ஆற்றில் உண்டாவது'' என்று கூற வேண்டும்.

இந்த உரையில் முரசி பட்டினமும் சூர்ணியாறும் கூறப்படுகின்றன. இவற்றை விளக்கவேண்டும். முரசி என்பது முசிறி. புறநானூறு முதலிய சங்க நூல்களிலே கூறப்படுகிற முசிறிப்பட்டினம் இதுவே. யவன வாணிகர் மரக்கலங்களில் வந்து தங்கிய துறைமுகங்களில் இதுவும் ஒன்று. யவனராகிய கிரேக்கர் முசிறியை (*Muziris*) என்று கூறினர். முசிறியை வட மொழியாளர் முரசி என்றும் மரிசி என்றும் வழங்கினார்கள் பிற்காலத்தில் மலையாளிகள் முசிறியை முயிரி என்று வழங்கினார்கள். முயிரி, முயிரிக்கோடு என்றும் கூறப்பட்டது. (முசிறிக்கு அருகிலே சேர மன்னனின் தலைநகரமான வஞ்சிமா நகர் இருந்தது. வஞ்சி, வஞ்சிக்களம் என்றும் பெயர் பெற்றிருந்தது. பிற்காலத்தில் திருவஞ்சிக்களம், திருவஞ்சிக்குளம் என்று மருவிற்று) முசிறி பிற்காலத்தில் கொடுங்கோளூர் என்றும், பின்னர் கொடுங்கல்லூர் என்றும் பெயர் பெற்றது.

சூர்ணியாறு என்பது பெரியாற்றின் வடமொழிப் பெயர். மருதவிருத ஆறு என்றும் இதற்குப் பெயர் உண்டு. பெரியாற்றைப் பேரியாறு என்று சங்க

நூல்கள் கூறுகின்றன. இந்தப் பேரியாற்றின் கரையிலே சேரன் செங்குட்டுவன் தன்சுற்றத்துடன் தங்கி இயற்கைக் காட்சியைக் கண்ட செய்தியைச் சிலப்பதிகாரம் கூறுகிறது.

> "நெடியோன் மார்பில் ஆரம் போன்று
> பெருமலை விலங்கிய பேரியாற் றடைகரை
> இடுமணல் எக்கர் இயைந்தொருங் கிருப்ப"

என்பது சிலப்பதிகாரம். (காட்சிக்காதை.21-23)

எனவே, இவ்வுரையாசிரியர் கூறுகிற முரசி, முசிறித் துறைமுகம் என்பதும் சூர்ணியாறு பெரியாறு என்பதும் ஐயமற விளங்குகின்றன. பெரியாறு கடலில் கலக்கிற இடத்துக்கு அருகிலே சேரனுடைய தலை நகரமான வஞ்சியும் அதற்கு அருகில் முசிறியும் இருந்தன. வஞ்சிமா நகரத்துக்கு அருகில் இருந்தவை கொடுமணம், பந்தர் என்னும் ஊர்கள். பந்தர் என்னும் ஊரிலேதான் முத்துக் குளிக்கும் சலாபம் இருந்தது.

பந்தர் என்னும் பெயர் அரபிச் சொல். பந்தர் என்னும் அரபிச் சொல்லுக்கு அங்காடி அல்லது கடைத்தெரு என்பது பொருள். கி.மு. இரண்டாம் நூற்றாண்டிலே யவனராகிய கிரேக்கர் தமிழ் நாட்டுடன் வாணிகம் செய்ய வந்தார்கள். யவனர் வருவதற்குப் பல நூற்றாண்டுகளுக்கு முன்னரே அராபியர் தமிழகத்துடன் வாணிகத் தொடர்பு கொண்டிருந்தனர். அவர்கள் இந்த இடத்துக்குப் பந்தர் என்று பெயர் சூட்டியிருக்கலாம்.

சேர நாட்டில் உண்டான முத்துக்குக் கௌர்ணேயம் என்று ஏன் பெயர் வந்தது? இது பற்றி ஒருவரும் ஆராய்ச்சி செய்யவில்லை. கௌர்ணேயம் என்பது சௌர்ணேயம் என்னும் சொல்லின் திரிபு என்று தெரிகிறது. சௌர்ணேயம் என்றால், சூர்ணியாற்றில் தோன்றியது என்பது பொருள். சூர்ணியாறு கடலில் கலக்கிற இடத்தில் உண்டானபடியினால் அந்த முத்துக் களுக்குச் சூர்ணேயம் என்று பெயர் ஏற்பட்டிருக்கலாம். வடமொழி இலக்கணப்படி சூர்ணேயம் சௌர்ணேயம் ஆயிற்று. பிறகு சகரம் ககரமாக மாறிற்று. சேரம் கேரம் (சேரலன்-கேரளன்) ஆனதுபோல. தாமிரபரணி ஆறு கடலில் கலக்கிற புகர் முகத்தில் கடலில் உண்டாகிற முத்துக்குத் தாம்ரபர்ணிகம் என்று பெயர் ஏற்பட்டதுபோல, சூர்ணி ஆறு கடலிற் கலக்கிற

புகார்முகத்தில் உண்டான முத்துக்குச் சௌர்ணேயம் என்று பெயர் உண்டாயிற்று என்று கருதலாம்.

கி.மு.மூன்றாம் நூற்றாண்டில் இருந்தவராகக் கருதப்படுகிற கவுடல்லியர் தமது அர்த்தசாஸ்திரத்திலே, சேர நாட்டில் முத்து உண்டானதைக் கூறியுள்ளார். கி.பி.முதல் நூற்றாண்டில் இருந்தவராகக் கருதப்படுகிற கபிலரும், அரிசில் கிழாரும் சேர நாட்டில் பந்தர் என்னும் பட்டினத்தில் முத்துக்குளிக்கும் இடம் இருந்ததைப் பதிற்றுப்பத்தில் கூறியுள்ளனர். இவற்றிலிருந்து இற்றைக்கு இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே சேர நாட்டில் முத்துச் சலாபம் இருந்த செய்தி தெரிகிறது.

சேர நாட்டின் தலைநகரமாயிருந்த வஞ்சிமா நகரமும் (இதற்குக் கருவூர் என்றும் கரூர்ப்பட்டணம் என்றும் வேறு பெயர் உண்டு. திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் இப்போது இருக்கின்ற கருவூர் (கரூர்) அன்று கருவூர்ப்பட்டினமாகிய வஞ்சிமாநகரம்) சேர நாட்டின் துறைமுகப் பட்டினமாக இருந்த முசிறியும் கொடுமணம், பந்தர் என்னும் ஊர்களும் அடுத்தடுத்துக் கடற்கரை ஓரமாக இருந்தன. கொடுமணம் பந்தர் என்னும் ஊர்கள் வஞ்சிமா நகரத்துடன் இணைந்திருந்த ஊர்கள் என்று தெரிகின்றன. இந்தப் பட்டினங்களும் ஊர்களும் பிற்காலத்தில் மறைந்துவிட்டன. ஐந்நூறு ஆண்டுகளுக்கு முன்னே, கி.பி 1341-ல் பெய்த பெரு மழையினாலே, பெரியாறு வெள்ளம் தாங்கமாட்டாமல் கரைவழிந்தோடிப் பல இடங்களை அழித்துவிட்டது. அதனால், பழைய நில அமைப்புகள் மாறியும் அழிந்தும் போகப் புதிய காயல்களும் கழிகளும் தோன்றிவிட்டன.

சேர நாட்டின் தலைநகரமான பழைய வஞ்சி மூதூர் (கருவூர்), இப்போது கொடுங்ஙலூர் (ஆங்கிலத்தில் Cranganur) என்னும் பெயருடன் ஒரு சிறு கிராமமாகக் காட்சியளிக்கிறது. பழைய துறைமுகமாகிய முசிறி மறைந்துபோயிற்று. பிற்காலத்தில் கடற்கரை ஓரமாகப் புதிதாக அமைந்த நீர்நிலைப் பகுதியில் இப்போது கொச்சி துறைமுகம் காட்சி யளிக்கிறது. பழையன கழிந்து புதியன புகுந்தன. ஆனால், பழைய இலக் கியங்கள் பழைய சிறப்புக்களை நினைவுறுத்திக்கொண்டிருக்கின்றன.

-தெ.பொ.மீ.மணிவிழாமலர் 1961.

11. சிறுபாணன் சென்ற பெருவழி

சிறுபாணாற்றுப் படை என்பது பத்துப்பாட்டில் ஒரு பாட்டு. நல்லூர் நத்தத்தனார் என்னும் புலவர், நல்லியக்கோடன் என்னும் வள்ளலைப் பாடியது சிறுபாணாற்றுப் படை. இதில் நல்லியக்கோடனிடம் சென்று பரிசு பெறும்படி நத்தத்தனார் ஒரு பாணனை ஆற்றுப்படுத்துகிறார். (ஆறு=வழி. ஆற்றுப்படுத்தல்=வழிகூறுதல்.)

சிறுபாணாற்றுப்படையின் பாட்டுடைத் தலைவனாகிய நல்லியக் கோடன், ஓய்மா நாட்டின் அரசன், எயிற்பட்டினம், மாவிலங்கை, கிடங்கில் முதலிய ஊர்கள், இவனுக்கு உரியன. ஆகவே, எயிற்பட்டின நாடன், மாவிலங்கை மன்னன், கிடங்கிற்கோமான் என்று போற்றப்படுகிறான். ஓவியர் குலத்தில் பிறந்தவனாகலின் ஓவியர் பெருமகன் என்றும் கூறப்படுகிறான்.

"தொன்மா விலங்கைக் கருவொடு பெயரிய
நன்மா விலங்கை மன்னருள்ளும்
மறுவின்றி விளங்கிய வடுவில் வாய்வாள்
உறுபுலித் துப்பின் ஓவியர் பெருமகன்"

என்றும் (சிறுபாண்-120-122)

"இழுமென ஒலிக்கும் புனலம் புதவிற்
பெருமா விலங்கைத் தலைவன் சீறியாழ்
இல்லோர் சொன்மலை நல்லியக் கோடன்"

என்றும் (புறம்.176) புகழப்படுகிறான்.

நல்லூர் நத்தத்தனார், நல்லியக்கோடனுடைய தலைநகரமான கிடங்கில் என்னும் ஊருக்குச் சிறுபாணனை ஆற்றுப் படுத்திய வழியை ஆராய்ந்து படம் வரைந்து காட்டுவதே இக்கட்டுரையின் நோக்கம். சிறுபாணன், கிடங்கிலை நோக்கிச் சென்ற பெருவழியின் இடையிலே எயிற்பட்டினம், வேலூர், ஆமூர் என்னும் ஊர்கள் இருந்தன.

எயிற்பட்டினம் என்பது கிழக்குக் கடற்கரை ஓரமாக இருந்த ஓர் துறைமுகப்பட்டினம். எயிற்பட்டினத்தைச் சூழ்ந்து மதிற்சுவர் கோட்டையாக அமைந்திருந்தது. ஆகவே, இது எயில் பட்டினம் என்றும் சோ பட்டினம் என்றும் பெயர் பெற்றிருந்தது (எயில் என்றாலும் சோ என்றாலும் மதில் என்பது பொருள்.)

"பாடல் சான்ற நெய்தல் நெடுவழி
மணிநீர் வைப்பு மதிலொடு பெயரிய
பனிநீர் படுவிற் பட்டினம்"

என்று இப்பட்டினம் (சிறுபாண்.151-153) கூறப்படுகிறது.

கடல் ஓரமாக நெய்தல் நிலத்திலே இருந்த எயிற் பட்டினத்துக்கு மேற்கே குறிஞ்சி நிலத்திலே, நல்லியக்கோடனுடைய தலைநகரமான கிடங்கில் என்னும் ஊர் இருந்தது. இதனை,

"குறிஞ்சிக் கோமான் கொய்தளிர்க் கண்ணிச்
செல்லிசை நிலைஇய பண்பின்
நல்லியக் கோடன்"

என்று (சிறுபாண்.267-269) ஆற்றுப்படை கூறுகிறது.

நெய்தல் நிலத்து எயிற் பட்டினத்துக்கும் குறிஞ்சி நிலத்துக் கிடங்கிலுக்கும் இடையிலே வேலூர், ஆமூர் என்னும் ஊர்கள் இருந்தன. இவ்வூர்கள் எல்லாம் ஓய்மா நாட்டில் அடங்கியிருந்தன. ஓய்மா நாடு என்பது இப்போதைய தென் ஆர்க்க. டு மாவட்டத்தில் திண்டிவனம் தாலுகாவில் இருந்தது.

சிறுபாணன் சென்ற பெரு வழியைப் பார்ப்பதற்கு முன்னர் நத்தத்தனார் இருந்த ஊரை அறிய வேண்டும். இவர் நல்லூர் நத்தத்தனார் என்று கூறப்படுகிறார். தமிழ் நாட்டிலே நல்லூர் என்னும் பெயருள்ள ஊர்கள் பல உள்ளன. நத்தத்தனார் இருந்த நல்லூர் எது என்று இடர்ப்படாதபடி, இடைகழி நாட்டு நல்லூர் நத்தத்தனார் என்று கூறப்படுகிறார்.

இடைகழி நாடு என்பது எது? இடைகழி நாடு இப்போது எடக்கு நாடு என்று வழங்கப்படுகிறது. எடக்குநாடு என்பது இடைகழி நாடு என்பதன் திரிபு. இடைகழிநாடாகிய எடக்குநாடு, செங்கற்பட்டு மாவட்டத்தில் மதுராந்தகம் தாலுகாவில் இருக்கிறது. இந்த எடக்கு (இடைகழி) நாட்டிலே இப்போதும் ஒரு நல்லூர் என்னும் சிற்றூர் இருக்கிறது. இந்த இடைகழி நாட்டு நல்லூரிலே நத்தத்தனார் என்னும் புலவர் வாழ்ந்தவராதல் வேண்டும். இடைகழி நாட்டுக்கு அண்மையிலே, தெற்குப் பக்கத்திலே நல்லியக் கோடனுடைய ஓய்மா நாடு இருந்தது.

இனி, நத்தத்தனார் சிறுபாணனை ஆற்றுப்படுத்திய பெருவழியைக் காண்போம். இடைகழி நாட்டு நல்லூரிலிருந்து தெற்கே சென்றால், ஓய்மா நாட்டின் கிழக்குப்பகுதியாகிய பட்டின நாட்டை அடையலாம். பட்டின நாடு கடற்கரையைச் சார்ந்த நாடு. பட்டின நாட்டிலே கடற்கரை ஓரமாக எயில் (சோ) பட்டினமும் துறைமுகமும் இருந்தன. ஓய்மா நாட்டின் கடற்கரைப் பகுதியாகிய பட்டின நாடு, பெரும்பான்மையும் நீரும் நிலமுமாக அமைந் திருந்தபடியினாலே, அது மாவிலங்கை என்று பெயர் பெற்றது.

கடற்கரை ஓரமாக நீரும் நிலமும் ஆக அமைந்த இடம் இலங்கை என்று பெயர் பெறும். ஆறுகள் கடலில் கலக்கிற இடத்தில் கிளைகளாகப் பிரிந்து இடையிடையே நீரும் திடலுமாக அமைவது உண்டு. அன்றியும் காயல் என்னும் பெயருள்ள நீர்த்தேக்கமும் கடற்கரை ஓரமாக அமைவதும் உண்டு. இவ்வாறு நீரும் திடலுமாக அமைந்த இடத்தை லங்கா (இலங்கை) என்று ஆந்திர நாட்டவர் இன்றும் வழங்குவார். நீரும், திடலுமாக அமைந்திருந்த பட்டின நாடு மாவிலங்கை என்றும் பெயர் பெற்றிருந்தது. (லங்கா அல்லது இலங்கை என்பது பழைய திராவிட மொழிச்சொல் எனத் தோன்றுகிறது.) இப்போதும் ஓய்மா நாட்டு மாவிலங்கைப் பகுதியில் ஏரிகளும் ஓடைகளும் உப்பளங்களும் காணப்படுகின்றன.

ஓய்மா நாட்டின் கடற்கரைப் பகுதியாகிய பட்டின நாட்டிலே, (மாவிலங்கையிலே), கடற்கரை ஓரத்தில் எயில் (சோ) பட்டினம் இருந்த தென்று கூறினோம். பண்டைக் காலத்தில் இருந்த எயிற் பட்டினம் இப்போது மறைந்து விட்டது. அந்த இடத்தில் இப்போது மரக்காணம் என்னும் ஊர் இருக்கிறது. இவ்வூரில் பிற்காலச் சோழர்களின் சாசன எழுத்துக்கள் காணப்படுகின்றன. இந்தச் சாசனங்களிலே, 'ஓய்மா நாட்டுப் பட்டின நாட்டு மரக்காணம்' என்றும் 'ஓய்மா நாட்டுப் பட்டின நாட்டுப் பட்டினம்' என்றும் 'பட்டின நாட்டு எயிற் பட்டினம்' என்றும் இவ்வூர் கூறப்படுகிறது. எனவே, பழைய எயிற்பட்டினந்தான் பிற்காலத்தில் மரக்காணம் என்று பெயர் பெற்றது என்று கருதலாம். இலக்கண விளக்கப் பரம்பரை சோ்மசுந்தர தேசிகர் அவர்கள் இப்போதைய கூடலூர்தான் பழைய எயிற்பட்டினம் என்று கருதுகிறார். *(Identification of Sopatama by S.S.Desikar.pp.129-140. Quarterly Journal of the Mythic Society, Vol.XXI.)* அது தவறு. கூடலூர் துறைமுகம் பிற்காலத்திலே, ஐரோப்பிய வர்த்தகர்களால் அமைக்கப்பட்ட துறைமுகமாகும். ஆகவே, கூடலூரைப் பழைய எயிற்பட்டினம் என்று கூறுவது தவறாகும்.

இடைகழி நாட்டு நல்லூரிலிருந்து புறப்பட்டுச் சென்ற சிறுபாணன், ஒய்மா நாட்டுத் துறைமுகப் பட்டினமாகிய எயிற் பட்டினத்துக்குச் சென்றான். சென்றவன் அங்குத் தங்கினான். பிறகு அங்கிருந்து புறப்பட்டுத் தென் மேற்கே நெடு வழியே நடந்தான். நெடுந்தூரம் நடந்து வேலூர் என்னும் ஊரையடைந்தான். இது முல்லை நிலத்தில் இருந்த ஊர்.

"திறல்வேல் நுதியில் பூத்த கேணி
விறல்வேல் வென்றி வேலூர் எய்தின்
உறுவெயிற் குலைஇய வுருப்பவிர் குரம்பை
எயிற்றியர் அட்ட இன்புளி வெஞ்சோறு
தேமா மேனிச் சில்வளை ஆயமொடு
ஆமான் சூட்டின் அமைவரப் பெறுகுவீர்."

என்று (சிறுபாண்.172-179) நத்தத்தனார் இந்த வேலூரைப் பாணனுக்கு அறிமுகப்படுத்துகிறார்.

இந்த வேலூரை, வட ஆர்க்காடு மாவட்டத்தில், காட்பாடி ரயில் நிலையத்துக்கு அருகில் உள்ள வேலூர் என்று இலக்கண விளக்கப் பரம்பரை சோமசுந்தர தேசிகர் அவர்கள் கருதுகிறார். (*Indentification of Sopatama by S.S.Desikar.pp.129-140. Quarterly Journal of the Mythic Society, Vol.XXI.*) இது தவறு. நத்தத்தனார் கூறுகிற வேலூர், தென் ஆர்க்காடு மாவட்டத்தில் ஒய்மா நாட்டில் இருக்கிறது. தேசிகர் கூறும் வேலூர், வட ஆர்க்காடு மாவட்டத்தில் வேறோர் இடத்தில் இருக்கிறது. இரண்டு ஊர்களும் வெவ்வேறிடங்களில் உள்ள வெவ்வேறு ஊர்கள். நத்தத்தனார் கூறும் வேலூர் அக்காலத்தில் சிறப்புற்றிருந்து, இப்போது குக்கிராமமாக இருக்கிறது. இப்போது வடஆர்க்காடு மாவட்டத்தில் புகழ் பெற்று விளங்கும் வேலூர் அக்காலத்தில் இருந்ததா என்பது ஐயத்துக்கிடமாக இருக்கிறது. சிறுபாணன் சென்ற வேலூர், தென் ஆர்க்காடு மாவட்டத்தில் திண்டிவனம் தாலுகாவில், கிடங்கிலுக்கும் எயிற்பட்டினத்திற்கும் இடைவழியில் இப்போது குக்கிராமமாக இருக்கிற வேலூரே என்பதில் சிறிதும் ஐயம் இல்லை. இந்த வேலூர் ஒய்மா நாட்டு வேலூர் என்று பெயர் பெற்றிருந்தது. இந்த வேலூரின் தலைவன் 'ஒய்மா நாட்டு வேலூருடையான்' என்று ஒரு சாசனத்தில் கூறப்படுகிறான். (*No.25.S.I.I.Vol.XIII.*)

வேலூரில் தங்கிய சிறுபாணன், அவ்வூரிலிருந்து புறப்பட்டு வட மேற்காகச் செல்லும் பெருவழியே சென்றான். சென்று மருதநிலத்தில் உள்ள ஆமூர் என்னும் ஊரையடைந்தான்.

"மருதஞ் சான்ற மருதத் தண்பணை
அந்தணர் அருகா அருங்கடி வியநகர்
அந்தண் கிடங்கின் அவனாமூ ரெய்தின்
வலம்பட நடக்கும் வலிபுணர் எருத்தின்
உரன்கெழு நோன்பகட் டுழவர் தங்கை
பிடிக்கை யன்ன பின்னுவீழ் சிறுபுறத்துத்
தொடிக்கை மகடூஉ மகமுறை தடுப்ப
விழுங்கா லுலக்கை யிருப்புமுகந் தேய்த்த
வவைப்பு மாணரிசி யமலைவெண் சோறு
கவைத்தாள் அலவன் கலவையோடு பெருகுவிர்."

என்று (186-195) சிறுபாணனுக்கு ஆமூரில் கிடைக்கக்கூடிய உணவைக் கூறுகிறார் நத்தத்தனார்.

இந்த ஆமூர் எது என்பது தெரியவில்லை. நல்லாமூர் என்று பெயருள்ள ஊர் ஒன்று இருக்கிறது. இந்த நல்லாமூர் சிறுபாணாற்றுப்படை கூறுகிற ஆமூராக இருக்கக்கூடும். பழைய ஆமூரும் இப்போதைய நல்லா மூரும் ஒரே ஊராக இருக்கக்கூடும். ஏனென்றால் இந்த நல்லாமூர் கிடங்கிலுக்கு அருகில் இருக்கிறது.

ஆமூரிலிருந்து புறப்பட்டு மேற்கே நெடுவழியே சென்றால், கடைசி யில் நல்லியக்கோடனுடைய கிடங்கில் என்னும் ஊரையடையலாம் என்று சிறுபாணாற்றுப்படை கூறுகிறது.

எனவே, கிடங்கிலுக்குச் சிறுபாணன் சென்ற பெருவழி, அல்லது நத்தத்தனார் சென்ற பெருவழி இது: இடைகழிநாட்டு நல்லூரிலிருந்து புறப்பட்டு, இப்போதைய மரக்காணமாகிய எயிற்பட்டினத்துக்குப் போய் அங்கிருந்து வேலூருக்குச் சென்று, அங்கிருந்து புறப்பட்டு ஆமூரை அடைந்து, ஆமூரிலிருந்து கிடங்கிலையடைந்தார் என்பது தெரிகிறது. (படம் காண்க)

கிரேக்க ஆசிரியரின் குறிப்புகள்: யவனராகிய கிரேக்கர் கி.மு.முதல் நூற்றாண்டிலிருந்து கி.பி.2-ஆம் நூற்றாண்டு வரையில் தமிழகத்துடன் வாணிபம் செய்தனர். கிரேக்க நூலாசிரியர்கள், தமிழ் நாட்டிலிருந்த அக்காலத்துத் துறைமுகப் பட்டினங்களைப் பற்றியும் எழுதி இருக்கிறார்கள். அவற்றுள் சோ பட்டினமாகிய எயிற்பட்டினமும் குறிக்கப்பட்டிருக்கிறது.

பெரிப்ளஸ் என்னும் நூலாசிரியர், தமிழகத்தின் கிழக்குக் கடற்கரையில் கமரா, பொடுகா, சோபட்மா (*Camara, Poduca, Sopatma*) என்னும் துறைமுகப் பட்டினங்களைக் குறிப்பிடுகிறார்.

டாலமி என்னும் கிரேக்க நூலாசிரியரும் காமரா, போடுகே, மேலங்கே (*Kamara, Poduke, Melenge*) என்னும் துறைமுகப் பட்டினங்களைக் கூறுகிறார்.

பெரிப்ளசும், டாலமியும் கூறுகிற கமரா என்னும் பட்டினம் சோழநாட்டில் பேர்பெற்றிருந்த காவிரிப்பூம்பட்டினம் (பூம்புகார்ப்பட்டினம்) ஆகும்.

பொடுகா என்றும் பொடுகே என்றும் அவர்கள் குறிப்பிடுகிற துறைமுகத்தைச் சிலர், இப்போதுள்ள புதுச்சேரி என்று கருதுகிறார்கள். இது தவறு எனத் தோன்றுகிறது. புதுச்சேரி பழைய துறைமுகப்பட்டினம் அல்ல. கி.பி.17-ஆம் நூற்றாண்டில் பிரெஞ்சுக்காரரால் புதுச்சேரி துறைமுகப்பட்டின மாக்கப்பட்டது. எனவே, புதுச்சேரி பழைய துறைமுகம் அல்ல. பொடுகா அல்லது பொடுகே என்று கிரேக்க நூலாசிரியர் குறிப்பிட்ட இடம், புதுச்சேரிக்கு அருகிலே, தெற்குப்பக்கத்தில் கடற்கரை ஓரமாக உள்ள அரிக்கமேடு என்னும் இடமாக இருக்க வேண்டும். அரிக்கமேட்டை அண்மைக்காலத்தில் அகழ்ந்து பார்த்தபோது, அது கி.பி.முதல் நூற்றாண்டில் இருந்த துறைமுகப்பட்டினம் என்பது தெரிந்தது. அங்கிருந்து கண்டெடுக்கப்பட்ட பொருள்கள், அங்கு யவன வாணிகர் தங்கியிருந்ததையும் அது துறைமுகப் பட்டினமாக இருந்தது என்பதையும் தெளிவாகக் காட்டுகின்றன. இது பற்றி 'பண்டைய இந்தியா' என்னும் ஆங்கில வெளியீட்டில் விபரமாக அறியலாம். *(Arikamedu: An Indo-Roman Trading Station on the East Coast of India. By R.E.M.Wheeler, A.Ghosh, and Krishna Deva. Pp.17-124. "Ancient India". No.2.1946)*



சிறுபாணன் சென்ற பெருவழி

இதற்கு வடக்கே இருந்தது சோபட்மா என்னும் துறைமுகப்பட்டினம் என்று பெரிப்ளஸ் நூலாசிரியர் குறிப்பிடுகிறார். சோபட்மா என்பது சோபட்னா என்பதன் திரிபு. சோபட்னா என்பது சோபட்டினம் ஆகும். அதாவது எயிற்பட்டினம். சோ என்றாலும் எயில் என்றாலும் மதில் என்பது பொருள். மதில் சூழ்ந்த கோட்டைக்குள் அமைந்திருந்தபடியால் எயில் பட்டினம் என்றும் சோபட்டினம் என்றும் பெயர் பெற்றிருந்தது.

எயிற் பட்டினமாகிய சோபட்டினத்தை டாலமி என்பவர் மேலங்கே என்று கூறுகிறார். மேலங்கே என்பது சிறுபாணாற்றுப்படை கூறுகிற மாவிலங்கை ஆகும். ஓய்மா நாட்டின் கடற்கரைப் பகுதிக்குப் பட்டினநாடு என்பது பெயர். பட்டின நாட்டில் நீரும் திடலும் அதிகமாகக் காணப்பட்ட படியால் அப்பகுதி மாவிலங்கை என்று பெயர் பெற்றிருந்தது என்று மேலே கூறினோம். டாலமி ஆசிரியர் மேலங்கே என்று கூறுகின்ற மாவிலங்கை, மாவிலங்கையில் இருந்த எயில் (சோ) பட்டினந்தான் என்பதில் சிறிதும் ஐயமில்லை.

கி.பி.7-ஆம் நூற்றாண்டில் தமிழ் நாட்டுக்கு வந்த யுவாங்-சுவாங் என்னும் சீன நாட்டு யாத்திரிகர், பல்லவ அரசர்களின் துறைமுகப் பட்டினமாகிய மாமல்லபுரத்தைக் கூறும்போது, அது காஞ்சிபுரத்தைச் சேர்ந்திருந்தபடியால், காஞ்சிபுரத் துறைமுகம் என்று கூறியிருப்பது இங்கு கருதத்தக்கது. அதுபோலவே மாவிலங்கையிலிருந்த எயிற்பட்டினம் என்னும் துறைமுகத்தை டாலமி, மேலங்கே என்று குறிப்பிட்டுள்ளார்.

பெரிப்ளஸ் கூறுகிற சோபட்மா என்பதும், டாலமி கூறுகிற மேலங்கே என்பதும் ஐயமில்லாமல் சோபட்டினமாகிய எயில்பட்டினம் என்பது தெளிவாகிறது. எயில் பட்டினம் இப்போது மரக்காணம் என்று பெயர் பெற்றிருக்கிறது என்பதை மேலே கூறியுள்ளேன்.

குறிப்பு: கிடங்கில் என்னும் ஊரிலிருந்து மரக்காணத்திற்கு (எயில் பட்டினத்துக்கு)ச் செல்லும் நேர்வழி ஒன்று இப்போது இருக்கிறது. இப்பெரு வழியைப் புள்ளிக் கோட்டினால் படத்தில் காட்டியுள்ளோம். இந்தப் பெருவழி சிறுபாணாற்றுப்படை காலத்தில் இருந்ததாகத் தெரியவில்லை. இது பிற்காலத்தில் அமைந்த வழியாக இருக்கலாம். பழைய சாலைகள் மறைந்து போவதும் புதிய சாலைகள் புதிதாகத் தோன்றுவதும் இயற்கையே. உதாரணமாக மாமல்லபுரத்திலிருந்து நேரே காஞ்சிபுரத்திற்குச் சென்ற

பழைய பல்லவர் காலத்துப் பெருவழி, இக்காலத்தில் முழுவதும் மறைந்துபோய், புதிய சாலைகள் தோன்றியிருப்பதைக் காண்கிறோம்.

சிறுபாணாற்றுப்படையில் கூறப்படுகிற ஊர்களைக் கொண்டும் நாட்டுப் படத்தில் காணப்படுகிற அவ்வூர்களின் அமைப்பைக் கொண்டும், இந்தப்படமும் கட்டுரையும் எழுதப்பட்டன. இதனை ஆராய்ந்து பார்த்து இது சரியா தவறா என்பதை முடிவு செய்வது வாசகர் கடமையாகும்.

TAMIL CULTURE - VOL: IX.JAN.1961.

12. மதுரைக் காஞ்சியின் காலம்

பத்துப்பாட்டு என்னும் தொகைநூலின் ஆறாம் பாட்டாக அமைந்தது மதுரைக் காஞ்சி. அது பாண்டியன் நெடுஞ்செழியனுடைய சிறப்பைக் கூறுகிறது. இப்பாட்டினைப் பாடியவர் மாங்குடி மருதனார், மதுரைக் காஞ்சியின் தலைவனாகிய பாண்டியன் நெடுஞ்செழியன், தலையாலங் கானத்துப் போரிலே சேரன் சோழன் என்னும் முடியுடை மன்னர் இரு வரையும் குறுநில மன்னர் ஐவரையும் வென்று புகழ் கொண்டவன். ஆகையால் இப்பாண்டியன், தலையாலங்கானத்துச் செருவென்ற பாண்டி யன் நெடுஞ்செழியன் என்று பெயர் பெற்றான். இவன் கடைச்சங்க காலத்தில் இருந்தவன். கடைச்சங்க காலம் என்பது ஏறக்குறைய கி.பி.300-க்கு முற்பட்ட காலம் என்பது பல அறிஞர்களின் கருத்து. எனவே, மதுரைக் காஞ்சியின் காலமும், அப்பாட்டுடைத் தலைவனாகிய நெடுஞ்செழியன் காலமும் கி.பி.300-க்கு முற்பட்ட காலமாகும்.

ஆயின், இக்காலத்துச் சிலர், சரியாக ஆராயாமல் கடைச் சங்க காலம் கி.பி.5-ஆம் நூற்றாண்டு, ஆறாம் நூற்றாண்டு, ஏழாம் நூற்றாண்டு என்று மனம்போனபடி கூற முற்பட்டுள்ளனர். இதனால், கடைச் சங்க காலம் எது என்பதை உறுதியாக அறிய முடியாமல் மாணவர்களும் மற்றவர்களும் இடர்ப்படுகின்றனர். கடைச்சங்க நூலாகிய மதுரைக் காஞ்சியின் காலத்தை ஆராய்வதன் மூலம் கடைச்சங்க காலம் எது என்பதை அறியலாம். ஆகவே இதனை ஆராய்வோம்.

அரசாங்க சாசன ஆராய்ச்சி இலாகாவில் இருந்த கே.வி.சுப்பிரமணிய அய்யர், கடைச்சங்க காலத்தைக் கி.பி 7-ஆம் நூற்றாண்டு என்று கூறியுள்ளார். இவர் "மதுரைக் காஞ்சியின் காலமும் அப்பாட்டுடைத் தலைவன் காலமும்" என்னும் தலைப்புள்ள கட்டுரையை 1911-ஆம் ஆண்டில், "இந்தியப் பழம்பொருள் ஆராய்ச்சி" என்னும் ஆங்கில வெளியீட்டில் எழுதியிருக்கிறார்.[1] இந்தக் கட்டுரையிலே இவர், சிறப்பாக வேள்விக்குடிச் செப்பேட்டுச் சாசனத்தை ஆதாரமாகக் கொண்டு, பாண்டியன் நெடுஞ்செழியன் காலத்தை ஆராய்கிறார். பாண்டியன் நெடுஞ்செழியன் தன்னுடன் போர் செய்ய வந்த சேரன் சோழன் என்னும் இரண்டு பேரரசர்களையும் இவர்களுக்குத் துணையாக வந்த ஐந்து குறுநில மன்னர்களையும் தலையாலங்கானம் என்னும் இடத்தில் போர் செய்து வென்றான் என்றும், அந்தப் பாண்டியன்மீது மதுரைக் காஞ்சியை மாங்குடி மருதனார் என்னும் புலவர் பாடினார் என்றும் கூறிய பிறகு, சுப்பிரமணிய ஐயர் அப்பாண்டியன் காலத்தை ஆராய்கிறார். முடிவில், மதுரைக் காஞ்சித் தலைவனான பாண்டியன் நெடுஞ்செழியனும் வேள்விக்குடி சாசனம் கூறுகிற செழியனும் ஒருவரே என்றும், இந்தப் பாண்டியன் (நெடுஞ்செழியன்-செழியன்) கி.பி.620 முதல் 650 வரையில் அரசாண்டான் என்றும், ஆகவே, மதுரைக் காஞ்சி இயற்றப்பட்ட காலம் கி.பி.7-ஆம் நூற்றாண்டு என்றும் முடிவு காண்கிறார்; அதவாது, கடைச்சங்க காலம் கி.பி.7-ஆம் நூற்றாண்டு என்று கூறுகிறார்.

இவ்வாறு கூறுகிற சுப்பிரமணிய ஐயரைப் போலவே, திருவனந்தபுரத்தில் சாசன இலாகாவில் இருந்த து.அ.கோபிநாதராவ் அவர்களும், கடைச்சங்க காலம் கி.பி.7-ஆம் நூற்றாண்டு என்று செந்தமிழ் ஆறாந் தொகுதியில், "பாண்டியர்களும் தமிழ்ப் புலவர்களும்" என்னும் கட்டுரையில் கூறியுள்ளார்.

மதுரைக் காஞ்சியின் காலமும் அப்பாட்டுடைத் தலைவனான நெடுஞ்செழியன் காலமும் கி.பி.7-ஆம் நூற்றாண்டு என்று கே.வி.சுப்பிரமணிய ஐயர் தமது கட்டுரையில் கூறியுள்ளது சரியா என்பதைப் பார்ப்போம். ஐயர் அவர்கள் காட்டும் சான்றுகள் சரியானவையாக இருந்தால் அவர் கண்ட முடிவும் சரியானவையாக இருக்கும். சான்றுகள் பிழையுடையனவாக

1. The Date of Maduraik-Kanchi and its hero-The Indian Antiquary, Vol.40. 1911, P.P.224-229.

இருந்தால் அதன் முடிவும் பிழையானதாக இருக்கும். ஆகவே, அவர் காட்டும் சான்றுகள் சரியானவையா அல்லது பிழையுடையனவா என்பதை ஆராய்வோம். சுப்பிரமணிய ஐயர் தமது கட்டுரையில் காட்டும் சான்றுகளை மூன்று பிரிவாகப் பிரிக்கலாம். அவை:

I. வேள்விக்குடிச் செப்பேட்டுச் சாசனம் பல்யாகசாலை முதுகுடுமியைக் கூறுகிறது. இந்த முதுகுடுமிப் பெருவழுதி பாண்டிய அரசர் பரம்பரையில் கடைசி அரசன். முதுகுடுமிப் பெருவழுதியை அயல்நாட்டி லிருந்து வந்த களப்பிரர் வென்று பாண்டிய நாட்டை அரசாண்டனர். பாண்டி நாடு களப்பிர அரசர் வசம் சிலகாலம் இருந்தது.

II. சில காலஞ் சென்ற பிறகு பாண்டியன் மரபில்வந்த கடுங்கோன் என்பவன் களப்பிரரை வென்று பாண்டி நாட்டை மீட்டுக்கொண்டு அரசாண்டான். இந்தப் பாண்டியன் கடுங்கோன் இறையனார் களவியல் உரையில் கூறப்படுகிற முதற்சங்ககாலத்தின் இறுதியில் இருந்த கடுங்கோன் ஆவன்.

III. பல்யாகசாலை முதுகுடுமிப் பெருவழுதிக்குப் பிறகு பாண்டியன் நெடுஞ்செழியன் இருந்தான் என்று மதுரைக் காஞ்சி கூறுகிறது. வேள்விக்குடி சாசனமும், பல்யாகசாலை முதுகுடுமிப் பெருவழுதியைக் கூறியபிறகு, கடுங்கோனின் பேரனாகிய செழியன் என்பவனைக் கூறுகிறது. ஆகவே, வேள்விக்குடி சாசனம் கூறுகிற செழியனும் மதுரைக் காஞ்சியின் தலைவனான நெடுஞ்செழியனும் ஒருவரே. இந்த நெடுஞ்செழியன் செழியன் கி.பி.620 முதல் 650 வரையில் அரசாண்டான். ஆகவே, அவன் காலமும் அவனைப் பாடிய மதுரைக் காஞ்சியன் காலமும் கி.பி 7-ஆம் நூற்றாண்டாகும். மதுரைக் காஞ்சி கடைச்சங்க காலத்து நூல் என்று கூறப்படு கிறபடியால், கடைச்சங்க காலம் மதுரைக் காஞ்சியின் காலமாகிய கி.பி.7-ஆம் நூற்றாண்டு ஆகும்.

இவைதாம் சுப்பிரமணிய ஐயருடைய சான்றுகளும் முடிவுகளும். இவை சரியானவையா பிழையுள்ளவையா என்பதை இனி ஆராய்ந்து பார்ப்போம். ஆராய்வதற்கு முன்பு, வேள்விக்குடி சாசனத்தில் காணப்படுகிற பாண்டிய அரசர் பரம்பரையை அறிந்துகொள்வது நலம். ஆகவே, பாண்டிய அரசர் பரம்பரையை வேள்விக்குடி சாசனத்தின்படி கீழே தருகிறோம்

வேள்விக்குடி சாசனத்தின்படி பாண்டிய மன்னர் பரம்பரை
பல்யாகசாலை முதுகுடுமிப் பெருவழுதி
(வேள்விக்குடியைத் தானம் கொடுத்தவன்)

களப்பிரர் ஆட்சி

1. கடுங்கோன்
(களப்பிரரிடமிருந்து பாண்டி நாட்டை மீட்டுக்கொண்ட பாண்டியன்)
2. அவனி சூளாமணி மாறவர்மன்.
3. செழியன் வானவன் சேந்தன்.
4. அரிகேசரி அசமசமன் மாறவர்மன்
5. செழியன் ரணதீரன்
6. தேர்மாறன் இராஜ சிம்மன் I
7. ஜடிலன் பராந்தகன் நெடுஞ்சடையன்
(வேள்விக்குடி செப்பேட்டுச் சாசனம் வழங்கியவன்)

இனி, சுப்பிரமணிய ஐயரின் ஆராய்ச்சியைச் சீர்தூக்கிப் பார்ப்போம். முதலாவதாக:-பல்யாகசாலை முதுகுடுமிப் பெருவழுதியைக் களப்பிர அரசர் வென்று பாண்டி நாட்டினைக் கைப்பற்றினர் என்று வேள்விக்குடி சாசனம் கூறுவதாகச் சுப்பிரமணிய ஐயர் கூறுகிறார். இவர் கூறுவது தவறு. சாசனம் இவ்வாறு கூறவில்லை. முதுகுடுமிப் பெருவழுதி, வேள்விக்குடி என்னும் ஊரைக் கொற்கை கிழான் கொற்றன் என்பவனுக்குத் தானமாகக் கொடுத்தான் என்று சாசனம் கூறுகிறதே தவிர, அவனைக் களப்பிரர் வென்றதாகக் கூறவில்லை. சாசனத்தின் வாசகம் இது:-

"கொல்யானை பல ஓட்டிக் கூடா மன்னர் குழாந்தவிர்த்த பல்யானை முதுகுடுமிப் பெருவழுதி என்னும் பாண்டியாதி ராஜனாக மாமலர்ச் சோலை நளிர்சினைமிசை வண்டலம்பும் பாகனூர்க் கூற்றமென்னும் பழனக்கிடக்கை நீர் நாட்டுச் சொற்கணாளர் சொலப்பட்ட ஸ்மிருதி மார்க்கம் பிழையாத கொற்கைகிழா னற்கொற்றன் கொண்ட வேள்வி முற்றுவிக்க கேள்வி அந்தணாளர் முன்பு கேட்க என்றெடுத்துரைத்து வேள்விசாலை முன்பு நின்று

வேள்விகுடி என்றப் படியைச் சீரோடு திருவளரச் செய்தார் வேந்தனப் பொழுதேய் நீரோடட்டிக் கொடுத்தமையான்." [2] இவ்வாறு வேள்விக்குடி சாசனம் கூறுவதால், பாண்டியன் முதுகுடுமிப் பெருவழுதி வேள்விக்குடி என்னும் ஊரைத் தானங் கொடுத்தான் என்பது தெரிகிறது. களப்பிரர் அவனை வென்றதாகச் சாசனம் கூறவில்லை. அவனுக்குப் பிற்காலத்தில், அவன் பரம்பரையில் வந்த வேறு ஒரு பாண்டியனைக் களப்பிரர் வென்றதாகப் பொருள்படும்படி வேள்விக்குடி சாசனம் கூறுகின்றது. சாசனம் மேலும் தொடர்ந்து கூறுவதைப் பாருங்கள்:

> **"வேந்த னப்பொழுதேய் நீரோடட்டிக் குடுத்தமையா னிடு**
> **புக்தி துய்த்தபின் னளவரிய ஆதிராசரை அகல**
> **நீக்கி அகலிடத்தைக் களபர னென்னுங் கலியரசன்கைக்**
> **கொண்டதனை இறக்கிய பின்."**

இவ்வாறு சாசனம் கூறுவதிலிருந்து வேள்விக்குடியைத் தானமாகப் பெற்றவர், பரம்பரை பரம்பரையாக நெடுங்காலம் அந்தத் தானத்தை அநுபவித்து வந்தார்கள் என்பது தெரிகிறது. நீடுபுக்தி துய்த்தபின் என்று சாசனம் கூறுவதை நோக்குக. இதனால், வேள்விக்குடியைத் தானமாகப் பெற்றவர் பல தலைமுறை அதனைப் பரம்பரை பரம்பரையாக அநுபவித்து வந்தார்கள் என்பது தெளிவாகத் தெரிகிறது. தானம் பெற்ற குடும்பத்தினர் பல தலைமுறையாக அதனை அநுபவித்து வந்தார்கள் என்றால், தானம் கொடுத்த அரசர் பரம்பரையிலும் பல அரசர்கள் அரசாண்டார்கள் என்பது சொல்லாமலே விளங்குகிறது.

ஆகவே, முதுகுடுமிப் பெருவழுதியைக் களப்பிரர் வென்று பாண்டி நாட்டைப் பிடித்துக்கொண்டார்கள் என்று சுப்பிரமணிய ஐயர் கூறுவது தவறாகிறது. "நீடு புக்தி துய்த்தபின் அளவரிய ஆதிராசரை அகல நீக்கி அகலிடத்தைக் களபரனென்னுங் கலியரசன் கைக் கொண்டதனை இறக்கிய பின்" என்று வேள்விக்குடி சாசனம் தெளிவாகக் கூறுகிறபடியினாலே, முதுகுடுமிப் பெருவழுதிக்குப் பிறகும் பல பாண்டிய அரசர்கள் பாண்டி நாட்டை அராசாண்டார்கள் என்பதும், அதன் பின்னரே களப்பிரர் பாண்டி நாட்டைக் கைப்பற்றிக்கொண்டதோடு தானங் கொடுக்கப்பட்ட வேள்விக்குடியையும் பறித்துக்கொண்டார்கள் என்பதும் ஐயமற விளங்குகின்றன.

---

2. *Epigraphia Indica; Vol.XVII pp. 291-309.*

எனவே, முதுகுடுமிப் பெருவழுதியைக் களப்பிரர் வென்று பாண்டி நாட்டினைக் கைப்பற்றினார்கள் என்று சுப்பிரமணிய ஐயர் கூறுவது சாசனச் சான்றுக்கு மாறுபட்டதாகும். ஆகவே, அவருடைய முடிவு முற்றிலும் தவறாகிறது.

இரண்டாவதாக:-

பாண்டியன் மரபில் வந்த கடுங்கோன் என்னும் அரசன், களப்பிரரை வென்று பாண்டி நாட்டை மீட்டுக்கொண்டான் என்றும், கடுங்கோன் காலத்தில் முதற் சங்கம் அழிந்தது என்றும் சுப்பிரமணிய ஐயர் தமது கட்டுரையில் கூறுகிறார். இதில் முற்பகுதி சரியானது; பிற்பகுதி தவறானது. கடுங்கோன் என்னும் பாண்டியன் களப்பிரரை வென்று பாண்டி நாட்டை மீட்டுக்கொண்டான் என்பது வேள்விக்குடி சாசனத்தின்படி உண்மையே. ஆனால், இந்தக் கடுங்கோன் காலத்தில்தான், இறையனார் களவியல் உரையின்படி, தலைச் சங்கம் அழிந்தது என்று கூறுவது தவறானது.

பாண்டியன் கடுங்கோன் களப்பிரரை வென்று பாண்டி நாட்டை மீட்டுக்கொண்டான் என்பதை வேள்விக்குடி சாசனம் இவ்வாறு கூறுகிறது:

> **''களபரனென்னுங் கலியரசன் கைக்கொண்டதனை இறக்கியபின்**
> **படுகடன் முளைத்த பருதிபோல பாண்டியாதிராசன் வெளிப்பட்டு**
> **விடுகதிரவிரொளி விலக வீற்றிருந்து வேலை சூழ்ந்த வியலிடத்துக்**
> **கோவுங் குறும்பும் பாவுடன் முருக்கிச் செங்கோலோச்சி வெண்குடை**
> **நீழற் றங்கொளி நிறைந்த தரணிமங்கையைப் பிறர்பாலுரிமை**
> **திறவிதினீக்கித் தன்பாலுரிமை நன்கன மமைத்த மானம் போ்த்த**
> **தானை வேந்தன் னொடுங்கா மன்ன ரொளி நகரளித்த கடுங்கோனென்**
> **னுங் கதிர்வேற் றென்னன்.''**

இவ்வாறு வேள்விக்குடி சாசனம் கூறுவதனாலே, கடுங்கோன் களப்பிரரிடமிருந்து பாண்டி நாட்டை மீட்டுக்கொண்டான் என்பது

தெரிகிறது. ஆனால், இந்தக் கடுங்கோன் காலத்தில் முதற் சங்கம் அழிந்தது என்று சுப்பிரமணிய ஐயர் கருதுவது தவறு. இது பற்றி வேள்விக்குடி சாசனம் ஒன்றுமே கூறவில்லை. இந்தச் சாசனம் கூறுகிற கடுங்கோன், அதாவது, களப்பிரரிடமிருந்து பாண்டி நாட்டை மீட்டுக்கொண்ட பாண்டியன் கடுங்கோன், முதற்சங்க காலத்தில் இருந்த கடுங்கோன் அல்லன். அவன் வேறு, இவன் வேறு. கடுங்கோன் என்னும் பெயர் ஒற்றுமையைக் கொண்டு, வெவ்வேறு காலத்திலிருந்த இருவரையும் ஒருவர் என்று தவறாகக் கருதுகிறார் சுப்பிரமணிய ஐயர்.

முதற்சங்க காலத்தின் இறுதியில் இருந்த பாண்டியன் கடுங்கோன், கடல் கொண்ட மதுரையில் இருந்தான் என்று இறையனார் அகப்பொருள் உரையினால் அறிகிறோம்.

"அவர்களைச் (தலைச் சங்கத்தாரை) சங்கம் இரீஇனார் காய்சின வழுதி முதலாகக் கடுங்கோ னீறாக எண்பத் தொன்பதின்மர் என்க......அவர் சங்கமிருந்து தமிழாராய்ந்தது கடல் கொள்ளப்பட்ட மதுரை யென்க."

என்று இறையனார் அகப்பொருளுரைப் பாயிரம் கூறுகிறது.

களப்பிரரிடமிருந்து பாண்டி நாட்டை மீட்டுக்கொண்ட கடுங்கோன், முதற்சங்க காலத்தில் இருந்த மதுரையைக் கடல்கொண்ட பிறகு, இடைச்சங்க காலத்திலிருந்த கபாடபுரத்தையுங் கடல்கொண்ட பிறகு, இப்போதுள்ள மதுரையில் கடைச் சங்கம் இருந்து மறைந்த பிறகு அரசாண்டவன். பல நூற்றாண்டுகளுக்கு முன்பிருந்த கடுங்கோனையும் பல நூற்றாண்டுகளுக்குப் பின்பிருந்த கடுங்கோனையும் ஒன்றாகப் பிணைத்து அவ்விருவரும் ஒருவரே என்று சுப்பிரமணிய ஐயர் கூறுவது பெருந்தவறு. ஆகவே அவருடைய முடிவும் தவறாகிறது.

மேலும், கடுங்கோன் அல்லது கடுங்கோ என்னும் பெயர் அக்காலத்தில் ஓர் அரசனுக்கு மட்டும் வழங்கிய பெயர் அன்று. பல அரசர் அப் பெயரைக் கொண்டிருந்தனர். செல்வக் கடுங்கோ, செல்வக் கடுங்கோவாழி யாதன், சேரமான் பாலைபாடிய பெருங்கடுங்கோ, மாந்தரன் பொறையன் கடுங்கோ என்று பெயர் பெற்றிருந்த சேர அரசர்களின் பெயர்களைக் காண்க. இதுபோன்று பாண்டிய அரசரிலும் கடுங்கோ அல்லது கடுங்கோன் என்னும் பெயருள்ள அரசர் சிலர் இருந்திருக்கிறார்கள் என்பது தெரிகிறது. எனவே, இறையனார் அகப்பொருளுரைப் பாயிரம் கூறுகிற கடுங்கோன் வேறு, வேள்விக்குடி சாசனம் கூறுகிற கடுங்கோன் வேறு என்பது ஐயமற விளங்குகிறது.

மூன்றாவதாக:-

பல்யாகசாலை முதுகுடுமிப் பெருவழுதிக்குப் பிறகு பாண்டியன் நெடுஞ்செழியன் இருந்தான் என்று மதுரைக்காஞ்சி கூறுகிறது. பாண்டியன் நெடுஞ்செழியன் காலத்துக்குப் பல தலைமுறைக்கு முன்பு முதுகுடுமிப் பெருவழுது இருந்தான் என்று மதுரைக்காஞ்சியிலிருந்து தெரிகிறது. சுப்பிரமணிய ஐயரும் இதை ஒப்புக்கொள்கிறார். இது மட்டும் சரியே. ஆனால், மதுரைக்காஞ்சியின் தலைவனாகிய தலையாலங்கானத்துச் செரு வென்ற பாண்டியன் நெடுஞ்செழியனும், வேள்விக்குடி சாசனம் கூறுகிற கடுங்கோனின் பேரனாகிய செழியனும் ஒருவரே என்று சுப்பிரமணிய ஐயர் கூறுவது தவறு. நெடுஞ்செழியன்-செழியன் என்னும் பெயர்கள் ஒரே அரசனைக் குறிக்கின்றன என்று இவர் யூகிப்பது ஏற்றுக் கொள்ளத்தக்கதன்று. மேலும், இவர் கூறுவதுபோல, வேள்விக்குடி சாசனம், கடுங்கோனின் பேரனைச் செழியன் என்று கூறவில்லை; சேந்தன் என்று கூறுகிறது.[3] சாசனத்தின் வாசகம் இது:

> **"மற்றவற்கு மருவினிய மகனாகி மண்மகளை மறுக்கடிந்து**
> **விக்ரமத்தின் வெளிப்பட்டு விலங்கல்வேல் பொறிவேந்தர்**
> **வேந்தன் சிலைத்தடக்கை கொலைக்களிற்றுச் செழியன்**
> **வானவன்**
> **செங்கோற் சேந்தன்."**

இச்சாசனத்தில், பட்டியலில் 3-ஆம் எண்ணுள்ள பாண்டியனுக்குச் செழியன், வானவன், சேந்தன் என்னும் பெயர்கள் கூறப்படுகின்றன. செழியன் என்பது பாண்டிய அரசர்களின் பொதுப்பெயர் வானவன் என்பது சேர அரசர்களின் பொதுப்பெயர். சேரநாட்டை வென்று ஆண்டபடியால் இவன், சேர அரசரின் பொதுப் பெயராகிய 'வானவன்' என்னும் பெயரைச் சூடிக்கொண்டான். சேந்தன் என்பது இவனுடைய இயற்பெயர். சுப்பிரமணிய ஐயர் இவனுடைய இயற்பெயரைச் செழியன் என்று தவறாகக் கருதுகிறார். சேந்தன் என்பதே இவனுடைய இயற்பெயர். இதனை மேலே காட்டிய சாசனத்தின் வாசகத்தினால் அறிகிறோம்

எனவே, ''மதுரைக்காஞ்சி''த் தலைவனான நெடுஞ்செழியன் வேறு. வேள்விக்குடி சாசனத்தில் கூறப்படுகிற கடுங்கோனின் பேரனாகிய சேந்தன் வேறு.

---

3. பரம்பரைப் பட்டியல் காண்க.

சேந்தனைச் செழியன் என்று கருதிக்கொண்டு அவனை நெடுஞ் செழியனுடன் பிணைத்துவிடுகிறார் சுப்பிரமணிய ஐயர். இது தவறான ஆராய்ச்சி அல்லவா? இவ்வாறு தவறான முடிபைக்கொண்டு மதுரைக் காஞ்சியின் காலமும், அதன் தலைவனான நெடுஞ்செழியன் காலமும கி.பி 7-ஆம் நூற்றாண்டு என்றும், ஆகவே கடைச்சங்க காலம் கி.பி.7-ஆம் நூற்றாண்டு என்றும் சுப்பிரமணிய ஐயர் கூறுவது பெருந்தவறு.

வேள்விக்குடி சாசனத்தில் கூறப்படும் கடுங்கோனின் பேரனாகிய சேந்தன் (செழியன் என்பது தவறு) ஐயரின் ஆராய்ச்சிப்படி கி.பி.620 முதல் 650 வரை அரசாண்டவனாக இருக்கலாம். அதுபற்றி இங்கு ஆராய்ச்சி இல்லை. இங்கு நாம் கூறுவது நெடுஞ்செழியன் வேறு, செழியன் (சேந்தன்) வேறு என்பதே.

வேள்விக்குடி சாசனம் கூறுகிற, ''செழியன் வானவன் செங்கோற் சேந்தன்'', சுப்பிரமணிய ஐயர் கருதுவதுபோல மதுரைக்காஞ்சியின் தலைவனான தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியனாக இருந்தால், அவனுடைய பெரும் புகழாகிய இரு பெருவேந்தரையும் ஐம்பெருவேளிரையும் ஒரே போர்க்களத்தில் தன்னந்தனியனாய் வென்ற வெற்றியைச் சாசனம் தவறாமல் கூறியிருக்கும் அல்லவா? அரசர்கள் தங்கள் புகழையும் தமது முன்னோருடைய புகழையும் (சிறப்பாகப் போரில் வெற்றி பெற்ற செய்தியை) தம் சாசனங்களில் எழுதுவது வழக்கம். இதனாலும் நெடுஞ்செழியன் வேறு, சேந்தன் வேறு என்பது வெள்ளிடைமலைபோல் விளங்குகிறது.

சுப்பிரமணிய ஐயரின் ஆராய்ச்சிக் கட்டுரையில் இத்துணைத் தவறு களும் பிழைகளும் காணப்படுகின்றன. தவறுகளையும் பிழைகளையும் ஆதாரமாகக்கொண்டு ஆராய்ந்த முடிவுகளும் தவறாகவே முடிந்தன. எனவே, மதுரைக்காஞ்சியின் காலமும் அதன் தலைவனாகிய தலையாலங் கானத்துச் செருவென்ற பாண்டியன் நெடுஞ்செழியன் காலமும் கி.பி.7-ஆம் நூற்றாண்டு என்று ஐயர் கண்ட முடிபு தவறாகிறது. அன்றியும், கடைச்சங்க காலம் கி.பி.7-ஆம் நூற்றாண்டு என்று அவர் கண்ட முடிபும் தவறாகிறது.

அப்படியாயின், மதுரைக்காஞ்சியின் காலமும், அதன் தலைவனான பாண்டியன் நெடுஞ்செழியன் காலமும் எது என்னும் கேள்வி எழுகிறது. இதற்கு விடை. ஆராய்வோம்.

பல்யாகசாலை முதுகுடுமிப் பெருவழுதிக்குப் பிறகு பாண்டியன் நெடுஞ்செழியன் இருந்தான் என்று மதுரைக்காஞ்சி கூறுகிறது.

"பல்சாலை முதுகுடுமியின்
நல்வேள்வித் துறைபோய
தொல்லாணை நல்லாசிரியர்
புணர்கூட் டுண்ட புகழ்சால் சிறப்பின்
நிலந்தரு திருவின் நெடியோன் போல"

மகிழ்ந்து இனிது உறைவாயாக என்று நெடுஞ்செழியனை மதுரைக் காஞ்சி வாழ்த்துகிறது. எனவே, முதுகுடுமிப் பெருவழுதிக்குப் பிற்காலத்தில் பாண்டியன் நெடுஞ்செழியன் வாழ்ந்திருந்தான் என்பது தெரிகிறது. இது இவன் காலத்துக்கு மேல் வரம்பு. கீழ் வரம்பு, களப்பிரர் பாண்டி நாட்டைக் கைப்பற்றியதற்கு முந்திய காலம். அதாவது, முதுகுடுமிப் பெருவழுதிக்குப் பின்பும், களப்பிரர் பாண்டிய நாட்டைக் கைப்பற்றுவதற்கு முன்பும் உள்ள காலத்தில் நெடுஞ்செழியன் வாழ்ந்தான். இதனைச் சிறிது விளக்குவோம்.

களப்பிரர் பாண்டிநாட்டை மட்டும் கைப்பற்றவில்லை; சேரம், சோழம், பாண்டியம் என்னும் மூன்று நாடுகளையும் ஒரே சமயத்தில் கைப்பற்றினார்கள். களப்பிர அரசன் சேர, சோழ, பாண்டியர்களை வென்று அவர்களுக்குக் காலில் தளையிட்டபோது அம்மூவரும் பாடிய வெண்பாக்கள் தனிப் பாடற்றிரட்டில் காணப்படுவது இதற்குச் சான்றாகும். களப்பிரர் தமிழகத்தைக் கைப்பற்றிய காலம் உறுதியாகத் தெரியவில்லை. ஏறக்குறையக் கி.பி.300-இல் கைப்பற்றியிருக்கலாம். கி.பி.450-இல் களப்பிரப் பரம்பரையைச் சேர்ந்த அச்சுதவிக்கந்தன் (அச்சுத களப்பாளன்) என்னும் அரசன் அரசாண்டான் என்பது உறுதியாகத் தெரிகிறது. முதல் முதலில் களப்பிரர் தமிழகத்தைக் கைப்பற்றியது ஏறக்குறையக் கி.பி.300 என்று கொள்வது தவறாகாது. ஆகவே, பாண்டியன் நெடுஞ்செழியன் கி.பி.300-க்கு முற்பட்ட காலத்தில் இருந்தவன் என்பது தெரிகிறது. கி.பி.முதல் நூற்றாண்டின் இறுதியில் அல்லது கி.பி.இரண்டாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் நெடுஞ்செழியன் இருந்தான் என்பதற்குச் சான்றுகள் உள்ளன.[4]

பாண்டியன் நெடுஞ்செழியன் கி.பி.7-ஆம் நூற்றாண்டில் இருந்திருக்க முடியாது; கி.பி.300-க்கு முந்திய (களப்பிரர் வருவதற்கு முந்திய) காலத்தில் இருந்திருக்க வேண்டும் என்பதற்குச் சரித்திரச் சான்று உண்டு. அதனைச் சுருக்கமாகக் கூறுவோம்.

---

4. இடம் பெருகும் என்பது பற்றி அச்சான்றுகளை இங்கு ஆராயமுற்படவில்லை.

களப்பிரர் சேர சோழ பாண்டிய நாடுகளைக் கைப்பற்றி ஆண்ட போது அம்மூவேந்தரும் களப்பிரருக்குக் கீழடங்கி இருந்தார்கள். அக்காலத்தில் தொண்டை நாட்டைப் பல்லவ அரசர்கள் அரசாண்டனர். களப்பிரர் ஏறக் குறைய 250 ஆண்டு அரசாண்டனர். பிறகு ஏறக்குறையக் கி.பி.550-இல் பல்லவ அரசனான சிம்மவிஷ்ணு, சோழநாட்டின் மேல் படையெடுத்துச் சென்று அங்கு அரசாண்டிருந்த களப்பிரனை வென்று சோழநாட்டைக் கைப்பற்றிக்கொண்டான் என்று பல்லவ சாசனங்கள் கூறுகின்றன. இதனை வரலாற்று ஆசிரியர்கள் எல்லோரும் ஒப்புக்கொண்டுள்ளனர். சிம்மவிஷ்ணு களப்பிரரிடமிருந்து சோழநாட்டைக் கைப்பற்றிய அதே காலத்தில் பாண்டியன் கடுங்கோன் களப்பிரனுடன் போர் செய்து தனது பாண்டிநாட்டை மீட்டுக்கொண்டான். வேள்விக்குடி சாசனத்தை ஆராய்ந்து அதில் கூறப்படுகிற பாண்டிய அரசர்களின் காலத்தை ஆராய்ந்து பார்த்தால் இது நன்கு விளங்கும்.[5] அதே சமயத்தில்தான் சேரனும் களப்பிரனிடமிருந்து தனது நாட்டை மீட்டுக்கொண்டான். அதாவது, பாண்டியன் கடுங்கோனும் பல்லவன் சிம்மவிஷ்ணுவும் சேரனும் ஒரே சமயத்தில் களப்பிர அரசர்களை எதிர்த்துப் போராடி முறையே பாண்டிநாட்டையும் சோழநாட்டையும் சேரநாட்டையும் மீட்டுக்கொண்டனர். இது நிகழ்ந்தது பல்லவ சாசனத்தின்படி ஏறக்குறையக் கி.பி.550-இல் ஆகும். சோழநாட்டைப் பல்லவன் கைப்பற்றியபடியால் அது வரையில் களப்பிரருக்குக் கீழடங்கியிருந்த சோழர் பிறகு பல்லவ அரசர்களுக்குக் கீழடங்கியிருந்தனர். அதாவது, ஏறக்குறையக் கி.பி. 300 முதல் 900 வரையில் சோழ மன்னர் முதலில் களப்பிரருக்கும் பின்னர்ப் பல்லவ மன்னருக்கும் அடங்கியிருந்தனர். இது வரலாற்று ஆசிரியர்கள் எல்லோரும் அறிந்த வரலாற்று உண்மை.

இந்த வரலாற்று உண்மையை ஆதாரமாக வைத்துக்கொண்டு ஆராய்ந்து பார்த்தால், பாண்டியன் நெடுஞ்செழியன் களப்பிரர் காலத்துக்கு முன்பு (கி.பி.300-க்கு முன்பு) வாழ்ந்திருந்தான் என்பது தெளிவாகத் தெரிகிறது. எப்படி என்பதைக் கூறுவோம்.

தலையாலங்கானத்துப் போர்க்களத்திலே, பாண்டியன் நெடுஞ் செழியன், சேரன், சோழன் என்னும் இரு பெருவேந்தரையும் குறுநில மன்ன ராகிய ஐந்து வேளிரையும் வென்றான் என்று மதுரைக்காஞ்சி கூறுகிறது.

5. இடம் பெருகும் என்பது பற்றி அதனை இங்கு ஆராயாமல் விடுகிறோம்.

"இதுபெரு வேந்தரொடு வேளிர் சாயப்
பொருதவரைச் செருவென்று,"

என்று மதுரைக்காஞ்சி கூறுகிறது.[6] "சேரன் சோழனாகிய இரு பெருவேந் தருடனே குறுநில மன்னரும் இளைக்கும்படிப் பொருது அவரைப் போரில் வென்று" என்று நச்சினார்க்கினியர் இதற்கு உரை எழுதுகிறார்.

நெடுஞ்செழியன் போரில் வென்ற அரசர்களில் சோழனும் ஒருவன். அச்சோழன் பெருவேந்தனாக முடிபுனைந்து முரசுடை வேந்தனாக இருந் தான் என்று மதுரைக்காஞ்சியினால் அறிகிறோம். அந்தச் சோழன் கி.பி.300-க்கு முன்பு இருந்தவனாதல் வேண்டும். ஏனென்றால், கி.பி.300 முதல் 900 வரையில் சோழ மன்னர்கள் களப்பிரருக்கும் பல்லவ மன்ன ருக்கும் கீழடங்கியிருந்தார்கள். ஆகவே, இந்தக் காலத்தில் சோழர் பரம் பரையில் முடிபுனைந்து சுதந்தரராக அரசாண்ட பெருவேந்தர் இருந்திருக்க முடியாது. எனவே, பாண்டியன் நெடுஞ்செழியனுடன் போர் செய்த சோழப் பெருவேந்தன் கி.பி.300-க்கு முன்புதான் இருந்திருக்க முடியும்.

இதனால், தலையாலங்கானத்துப் போர் வென்ற பாண்டியன் நெடுஞ் செழியன் கி.பி.300-க்கு முன்னர் இருந்தவனாதல் வேண்டும் என்பது தெரி கிறது. எனவே மதுரைக்காஞ்சி இயற்றப்பட்ட காலமும், அதனை இயற்றிய மாங்குடி மருதனார் காலமும் கி.பி.300-க்கு முற்பட்ட காலம் என்பது தெரி கிறது. அதாவது, கடைச்சங்க காலம் கி.பி.300-க்கு முற்பட்ட காலம் என்பது உறுதியாகிறது.

அப்படியானால், கி.பி.300-க்கு முன்னே மதுரைக்காஞ்சி எந்த நூற்றாண்டில் இயற்றப்பட்டது என்று கேட்கலாம். கி.பி.முதல் நூற்றாண்டின் இறுதியாலாவது, கி.பி.இரண்டாம் நூற்றாண்டின் தொடக்கத்திலாவது மதுரைக்காஞ்சி இயற்றப்பட்டதாதல் வேண்டும் என்று சில சான்றுகளினால் தெரிகிறது. இங்கு இடம் இல்லாதபடியால், அதற்குரிய சான்றுகளைக் காட்டி இங்கு ஆராய முற்படவில்லை.

இதுகாறும் ஆராய்ந்ததன் தொகுப்பு இது: பல்யாகசாலை முதுகுடுமிப் பெருவழுதி வேள்விக்குடி என்னும் ஊரைக் கொற்கைகிழான் கொற்றனுக்குத் தானமாகக் கொடுத்தான். முதுகுடுமிப் பெருவழுதிக்குப் பிறகு சில தலைமுறை கழிந்தபின் பாண்டியன் நெடுஞ்செழியன் இருந்தான். இவன்மீது

---

6. வரி 55-56

மாங்குடி மருதனார் மதுரைக்காஞ்சியைப் பாடினார். நெடுஞ்செழியனுக்குச் சில தலைமுறைக்குப் பின்னர்க் களப்பிரர் என்னும் அரசர் சேர சோழ பாண்டியர்களை வென்று தமிழகம் முழுவதையும் அரசாண்டனர். களப்பிரர் ஏறக்குறைய 250 ஆண்டு அரசாண்டனர். அக்காலத்தில் தொண்டை நாட்டைப் பல்லவ அரசர் ஆட்சி செய்தனர். கி.பி.550-இல் பல்லவ அரசன் சிம்மவிஷ்ணுவும் பாண்டியன் கடுங்கோனும் சேர மன்னனும் களப்பிரரைத் தாக்கிப் போர் செய்து அவர்களிடமிருந்து முறையே சோழ நாட்டையும் பாண்டிய நாட்டையும் சேர நாட்டையும் மீட்டுக்கொண்டனர். ஆகவே, களப்பிர அரசர் வீழ்ச்சியடைந்து சிற்றரசராயினர். சோழர் பரம்பரையினர் மட்டும் சுதந்திரம் பெறாமல் பல்லவ அரசருக்குக் கீழடங்கினார்கள். அதாவது, கி.பி.300-க்கும் 900-க்கும் இடைப்பட்ட காலம்வரையில் சோழர் களப்பிரருக்கும் பல்லவருக்கும் கீழடங்கிச் சிற்றரசராக இருந்தனர். இந்தக் காலத்தில் சோழர் பரம்பரையில் சுதந்தரராக அரசாண்ட முடிமன்னர் ஒருவரும் இலர். எனவே கி.பி.300-க்கு முன்னர் சுதந்தரராக இருந்த சோழப் பெருவேந்தனுடன் பாண்டியன் நெடுஞ் செழியன் போர் செய்து வென்றான். அந்தக் காலம் கி.பி.300-க்கு மேற்பட்ட காலம். எனவே சங்க காலம் என்பது கி.பி.300-க்கு முற்பட்ட காலமாகும்.

-ரா.பி.சேதுப்பிள்ளை வெள்ளிவிழாமலர் 1961.

13. முதுகுடுமிப் பெருவழுதி

பாண்டிய நாட்டை அரசாண்ட பழைய அரசர்களில் இவன் ஒருவன். 'குடுமிக் கோமான்' என்றும் (புறம்.64:6) இவனுக்குப் பெயர் உண்டு. சேர சோழ அரசர்களை வென்று அவர்களுடைய நாடுகளில் சிலவற்றைக் கைக்கொண்டான். 'ஆர் எயில் பல' கொண்டான் என்றும் (புறம். 6:14) 'பிறர் மண் கொண்டான்' என்றும் (புறம்.12:4) இவன் கூறப்படுகின்றான். தான் வென்ற வெற்றியைப் பல களவேள்விகள் செய்தும் யாகங்கள் செய்தும் கொண்டாடினான். ஆகவே, இவன் 'பல்யாக சாலை முதுகுடுமிப் பெருவழுதி' என்று கூறப்பட்டான். இவன் வென்ற வெற்றிகளுக்கும் இவன் செய்த யாகங்களக்கும் கணக்கில்லை. இவனைப் பாடிய நெட்டிமையார் என்னும் புலவர் இவன் வென்ற அரசர்களின் எண்ணிக்கை அதிகமா அல்லது இவன் செய்த யாகங்களில் நாட்டிய யூபத்தூண்களின் எண்ணிக்கை அதிகமா என்று வியப்படைகிறார் (புறம்.15).

'நற்பனுவல் நால்வேதத்து
அருஞ்சீர்த்திப் பெருங் கண்ணுறை
நெய்ம்மலி யாவுதி பொங்கப் பன்மாண்
வீயாச் சிறப்பின் வேள்வி முற்றி
யூபம் நட்ட வியன்களம் பலகொல்'.

(புறம்.15:17-21)

மதுரைக் காஞ்சி என்னும் நூலிலும் முதுகுடுமிப் பெருவழுதி கூறப்படுகிறான். முதுகுடுமிக்குப் பின்னால் சில தலைமுறைக்குப் பின் இருந்தவன் தலையாலங்கானத்துச் செருவென்ற பாண்டியன் நெடுஞ் செழியன். நெடுஞ்செழியன்மேல் மாங்குடி மருதனார் பாடியது மதுரைக் காஞ்சி. நெடுஞ்செழியனை மதுரைக் காஞ்சியில் வாழ்த்துகிற மாங்குடி மருதனார், பாண்டியன் முதுகுடுமிப் பெருவழுதி வாழ்ந்தது போல நீயும் வாழ்வாயாக என்று வாழ்த்துகிறார்.

'பல்சாலை முது குடுமியின்
நல்வேள்வித் துறை போகிய
தொல் லானை நல்லாசிரியர்
புணர் கூட்டுண்ட புகழ்சால் சிறப்பில்
நிலந்தரு திருவின் நெடியோன் போல'

பல சிறப்புகளைப் பெற்று வாழ்வாயாக என்று அவர் வாழ்த்துகிறார். (மதுரைக் காஞ்சி அடி 759-763)

பகைவருடைய கோட்டையை வென்ற அரசர், அக்கோட்டையை இடித்து அழித்து அந்த இடத்தைக் கழுதையினால் உழுது கொள்ளும் வரகும் விதைப்பது அக்காலத்து வழக்கம். அந்த வழக்கப்படி முதுகுடுமிப் பெரு வழுதியும் தான் வென்ற கோட்டையைக் கழுதை பூட்டிய ஏரினால் உழுதான்.

'கடுந்தேர் குழித்த ஞெள்ளல் ஆங்கண்
வெள்வாய்க் கழுதைப் புல்லினம் பூட்டிப்
பாழ் செய்தனை யவர் நனந்தலை நல்லெயில்'.

(புறம்.15:1-3)

அக்காலத்தில் இவ்வாறு செய்வது தமிழ் நாட்டு வழக்கம் மட்டும் அன்று, ஆந்திர நாட்டிலும் இவ்வழக்கம் இருந்தது. கி.மு.2ஆம் நூற்றாண்டில்

இருந்த கலிங்க தேசத்தையரசாண்ட காரவேலன் என்னும் அரசனும் தான்வென்ற நகரம் ஒன்றை இவ்வாறு கழுதையினால் ஏர் உழுதான் என்று அவனுடைய ஹத்திகும்ப குகைச் சாசனம் கூறுகிறது. (*Epigraphia Indica Vol.XX.*)

வேள்விக்குடி தானம்

பகைவரை வென்று பல நாடுகளைக் கைப்பற்றிப் பல யாகங்களைச் செய்து பேரரசனாக விளங்கிய பாண்டியன் முதுகுடுமிப்பெருவழுதி, தன்னுடைய யாகங்களைச் செய்து வைத்த தன் புரோகிதனாகிய கொற்கைக் கிழான் கொற்றன் என்னும் பிராமணனுக்கு வேள்விக்குடி என்னும் ஊரைத் தானங் கொடுத்தான். இச்செய்தியை வேள்விக்குடி செப்பேட்டுச் சாசனத்தில் அறிகிறோம். அந்தச் சாசனத்தில் இந்தச் செய்தியைக் கூறுகிற வாசகம் இது:

'கொல் யானை பல ஓட்டிக் கூடா மன்னர் குழாத் தவிர்த்த பல் யானை முதுகுடுமிப் பெருவழுதி என்னும் பாண்டிய திராசனாக மா மலர்ச் சோலை நளிர் சினைமிசை வண்டலம்பும் பாகனூர்க் கூற்ற மென்னும் பழனக் கிடக்கை நீர் நாட்டுச் சொற்கணாளர் சொலப்பட்ட ஸ்மிருதி மார்க்கம் பிழையாத கொற்கைகிழா னற் கொற்றன் கொண்ட வேள்வி முற்றுவிக்க கேள்வி அந்தணர் முன்பு கேட்க என்றெடுத் துரைத்து வேள்வி சாலை முன்பு நின்று வேள்விகுடி என்றப் படியைச் சீரோடு திருவளரச் செய்தார். வேந்தனப் பொழுதேய் நீ ரோடட்டிக் கொடுத்தமையாணீடு புக்தி துய்த்தபின்'

(*Epigraphia Indica Vol.XVII PP.291-309*)

பல்யாக சாலை முதுகுடுமிப் பெருவழுதி, கொற்கைக்கிழான் நற்கொற்றனுக்குத் தானஞ் செய்த வேள்விக் குடியை அந்தப் புரோகி தனுடைய சந்ததியார் நெடுங்காலம் அனுபவித்து வந்தார்கள். பிறகு கி.பி.3ஆம் நூற்றாண்டில் களபரர் என்னும் அரசர் தமிழகத்துக்கு வெளியிலிருந்து வந்து சேர சோழ பாண்டிய நாடுகளைக் கைப்பற்றி யரசாண்டார்கள். களபரர் ஆட்சிக்காலத்தில் வேள்விக்குடியை அவ்வரசர் கைப்பற்றிக் கொண்டார்கள். பின்னர், கி.பி.6-ஆம் நூற்றாண்டின் முற் பகுதியில், கடுங்கோன் என்னும் பாண்டியன் களபரரை வென்று பாண்டிய இராச்சியத்தை மீட்டுக்கொண்டான். இந்தக் கடுங்கோனுக்கு ஏழாவது தலைமுறையில் வந்தவன் ஐடிலன் பராந்தகன் நெடுஞ்சடையன் என்பவன் இந்த நெடுஞ்சடையன் வேள்விக்குடியை மறுபடியும் புரோகிதச்

சந்ததியாருக்குத் தானஞ் செய்து இச்செப்பேட்டை எழுதிக் கொடுத்தான். இதுதான் வேள்விக்குடி சாசனம் என்பது.

முதுகுடுமிப் பெருவழுதியைப் பற்றிவேறு செய்திகள் தெரியவில்லை.

காலம்

பல்யாக சாலை முதுகுடுமி இருந்த காலத்தைத் திட்டமாகக் கூற இயலவில்லை. நெட்டிமையார் என்னும் புலவர் இவ்வரசனை நேரில் வாழ்த்தியிருக்கிறார். வாழ்த்தியவர் 'பஃறுளி ஆற்று மணலை விட அதிக நாட்கள் வாழ்வாயாக' என்று வாழ்த்தியிருக்கிறார்.

'எங்கோக் குடுமி! தங்கோச்
செந்நீர்ப் பசும்பொன் வயிரியர்க் கீத்த
முந்நீர் விழவின் நெடியோன்
நன்னீர்ப் பஃறுளி மணலிலும் பலவே.'

(புறம்.9:8-11)

என்று அவர் வாழ்த்தியிருக்கிறார்.

பஃறுளியாறு பாண்டிய நாட்டின் தெற்கே கன்னியாகுமாரிக்குத் தெற்கே இருந்த ஒரு ஆறு. அது கி.பி.2-ஆம் நூற்றாண்டுக்கு முன்னரே சிலப்பதிகாரக் காலத்துக்கு அந்த ஆறும் அந்த நிலப்பகுதியும் கடலில் முழுகிப் போயிற்று. இதைச் சிலப்பதிகாரத்திலிருந்து அறிகிறோம்.

'பஃறுளி யாற்றுடன் பன்மலை யடுக்கத்துக்
குமரிக் கோடுங் கொடுங்கடல் கொள்ள'

என்று சிலப்பதிகாரம் (மதுரை காண்டம், காடுகாண் காதை அடி 19-20) கூறுகிறது.

குமரிக்குத் தெற்கே இருந்த பஃறுளியாறும் அதனைச் சேர்ந்த நாடுகளும் பிற்காலத்தில் நிகழ்ந்த கடற்கோளினால் கடலில் முழுகிப் போயின என்று மேலே காட்டியபடி சிலப்பதிகாரம் கூறுகிறது. நெட்டிமை யார் முதுகுடுமிப் பெருவழுதியைப் பஃறுளியாற்று மணலின் எண்ணிக் கையைவிட நெடுங்காலம் வாழ்க என்று வாழ்த்தியபடியால், அவ் யாறு இருந்த காலத்தில் இவ்வரசனும் இப்புலவரும் இருந்தனர் என்பது நன்கு தெரிகிறது. பஃறுளியாறு கி.மு.மூன்றாம் நூற்றாண்டுக்கும் கி.பி.முதல்

நூற்றாண்டுக்கும் இடைப்பட்ட காலத்தில் மறைந்திருக்க வேண்டும். எனவே, இக்கால எல்லைக்குள் இப்பாண்டியன் இருந்திருக்கவேண்டும்.

பல்யாசாலை முதுகுடுமிப் பெருவழுதியை மூன்று புலவர்கள் பாடியிருக்கிறார்கள். அவர்கள் காரிகிழார் (புறம்.6) நெட்டிமையார் (புறம்.9,12,15) நெடும்பல்லியத்தனார் (புறம்.64) இவர்கள் எல்லோரும் சம காலத்தவர்.

கல்வி-பிப்ரவரி1967

14. ஆரியப்படை கடந்த, அரசு கட்டிலில் துஞ்சிய பாண்டியன் நெடுஞ்செழியன்

கடைச் சங்க காலத்தில் ஆட்சிசெய்த பாண்டியரில் சிலர் நெடுஞ் செழியன் என்று பெயர் பெற்றிருந்தார்கள். அவர்களின் பெயர் சங்க இலக் கியங்களில் காணப்படுகின்றன. அவர்களை, இன்னின்ன நெடுஞ்செழியர் என்று பிரித்தறிவதற்கு அவர் பெயர்களுடன் சில அடைமொழியிட்டு வழங்கினார்கள். நம்பிநெடுஞ்செழியன், ஆரியப்படை கடந்த நெடுஞ் செழியன், தலையாலங்கானத்து செருவென்ற நெடுஞ்செழியன் என்னும் பெயர்களைக் காண்க. இங்கு ஆரியப்படை கடந்த நெடுஞ்செழியனுடைய வாழ்க்கை வரலாற்றை ஆராய்வோம்.

மதுரையிலிருந்து பாண்டி நாட்டை யரசாண்ட இந்த நெடுஞ்செழியன் கல்விகற்ற அறிஞன்; செய்யுள் இயற்றவல்ல கவிஞன். கவிஞனாக விளங்கிய இவன் இயற்றிய செய்யுட்கள் முழுவதும் நமக்குக் கிடைக்கவில்லை. நற்காலமாக இவன் இயற்றிய ஒரே ஒரு செய்யுள் புறநானூற்றில் 183ஆம் செய்யுளாகத் தொகுக்கப்பட்டிருக்கிறது. அந்தச் செய்யுள் இது:

''உற்றுழி யுதவியும் உறுபொருள் கொடுத்தும்
பிற்றைநிலை முனியாது கற்றல் நன்றே;
பிறப்போ ரன்ன உடன்வயிற் றுள்ளுஞ்
சிறப்பின் பாலால் தாயுமனந் திரியும்.
ஒருகுடிப் பிறந்த பல்லோ ருள்ளும்
மூத்தோன் வருக வென்னாது அவருள்
அறிவுடை யோனாறு அரசுஞ் செல்லும்.

வேற்றுமை தெரிந்த நாற்பா லுள்ளுங்
கீழ்ப்பா லொருவன் கற்பின்,
மேற்பா லொருவனும் அவன்கட் படுமே.''

(திணை - பொதுவியல்; துறை - பொருள்மொழிக்காஞ்சி. பாண்டியன் ஆரியப் படை கடந்த நெடுஞ்செழியன் பாடியது.)

விழுமிய பொருள் பொதிந்த இந்தச் செய்யுள் புறநானூற்றில் தொகுக்கப்படும் சிறப்புப்பெற்றுள்ளது. இச்செய்யுளை இயற்றிய இந்தப் பாண்டியன் யாரிடங் கல்வி பயின்றான் என்பது தெரியவில்லை.

கோவலனும் கண்ணகியும் மதுரைக்குச் சென்றபோது பாண்டி நாட்டை ஆட்சி செய்து கொண்டிருந்தவன் இந்த நெடுஞ்செழியனே. மதுரையில் வாணிகஞ் செய்து பொருளீட்ட எண்ணிய கோவலன், வாணிக முதலீட்டுக் காகக் கண்ணகியின் பொற்சிலம்பை விற்கச் சென்று வஞ்சகன் ஒருவனால் 'கள்வன்' என்று குற்றஞ் சாட்டப்பட்டபோது, அக்குற்றத்தைத் தீர விசாரிக்காமல் அவனைக் கொல்வித்தவனும் இந்த நெடுஞ்செழியனே. கோவலன் மேல் சுமத்தப்பட்ட பொய்ப்பழியை நீக்குவதற்காகக் கண்ணகி வழக்குத் தொடுத்து வாதாடியபோது, தான் கோவலனுக்குக் கொலைத் தண்டனை விதித்தது அரசநீதி என்று எடுத்துக்காட்டியவனும் இந்த நெடுஞ்செழியனே. பிறகு கண்ணகி, குற்றஞ்செய்யாதவன்மேல் பொய்க் குற்றஞ் சாட்டிக்கொலை செய்வது அநீதி என்று சான்று காட்டி நிறுவியபோது, தான் செய்தது தவறுதான் என்று கண்டு, தன் தவற்றையுணர்ந்து அஞ்சி நடுங்கி அரசுகட்டிலில் (சிம்மாசனத்தில்) இருந்தபடியே உயிர் விட்டவனும் இந்த நெடுஞ்செழியனே. இவனுடைய ஆட்சிக்காலத்தில் வடநாட்டிலிருந்து மதுரையின்மேல் படையெடுத்து வந்து போர் செய்து ஆரியப்படையை வென்று ஓட்டித் துரத்தியவனும் இந்த நெடுஞ்செழியனே. இவற்றை யெல்லாம் சிலப்பதிகாரம், மதுரைக்காண்டத்தின் இறுதிச் செய்யுளினால் அறிகிறோம்.

''வடவாரியர் படை கடந்து
தென்றமிழ் நாடு ஒருங்கு காணப்
புரைதீர் கற்பிற் றேவி தன்னுடன்
அரைசு கட்டிலிற் றுஞ்சிய பாண்டியன்
நெடுஞ்செழியன்''

என்பது அதன் வாசகம்.

கல்வி கற்றுப் புலவனாக விளங்கிய இந்தப் பாண்டியன் போர்க் களத்தில் பகைவரை வென்று புகழ் பெற்று விளங்கினான். அந்த வெற்றியின் காரணமாக இவன் ''ஆரியப்படை கடந்த நெடுஞ்செழியன்'' என்று சிறப்புப்பெயர் பெற்றான். அரசுச் செல்வமும், கல்விச் செல்வமும் கைவரப் பெற்ற இந்தப் பாண்டியன் ஆய்ந்தோய்ந்து பாராமல் அவசரப்பட்டுக் கோவலனைக் கொன்ற தவற்றின் காரணமாகக் கண்ணகி இவன்மீது தொடுத்த வழக்கில் தோற்றுத் தான் செய்தது தவறு என்று கண்டபோது மனம் பதறித்தான் நடத்தியது கொடுங்கோல் என்பதை அறிந்து நெஞ்சம் பதறிச் சிம்மாசனத்திலேயே உயிரை விட்டான். இவன் அரசு கட்டிலில் (சிம்மா சனத்தில்) இருந்து உயிர்விட்டபடியால் ''அரசு கட்டிலில் துஞ்சிய நெடுஞ் செழியன்'' என்றும் பெயர் பெற்றான். இஃது இவன் இறந்த பிறகு பெற்ற பெயர்.

நெடுஞ்செழியன் ஆரியப்படையை வென்றான் என்று கூறப்படு கிறான். ஆரியப்படை இவன்மேல் படையெடுத்து வந்ததா? இவன் ஆரியப் படையின்மேல் போருக்குச் சென்றானா? ஆரியப்படை என்றால் என்ன? இவை பற்றி ஆராயவேண்டியது சரித்திரம் அறிவதற்கு முதன்மையானது.

சங்க காலத்துத் தமிழர் பாரதநாட்டை மூன்று பெரும் பிரிவுகளாகப் பிரித்திருந்தார்கள். அவை தமிழகம் (தமிழ்நாடு), வடுக நாடு, ஆரிய நாடு என்பவை. தமிழ் நாட்டுக்கு வடக்கே இருந்தது வடுக நாடு. அது தமிழ்நாட்டின் வட எல்லையிலிருந்து வடக்கே விந்தியமலை வரையில் பரவியிருந்தது. வடுக நாடு மேற்கே அரபிக் கடல் முதல் கிழக்கே வங்காளக் குடாக்கடல் வரையில் நீண்டிருந்தது. வடுக நாட்டின் மேற்குப் பகுதியைக் கன்னடரும் கிழக்குப் பகுதியைக் கலிங்கரும் (ஆந்திரரும்) ஆட்சி செய்தனர் கன்னட நாடும் ஆந்திர நாடும் சேர்ந்ததே வடுக நாடு. கன்னடரும், ஆந்திரரும் வடவர் அல்லது வடுகர் என்று பெயர் பெற்றனர்.

வடுக நாட்டுக்கு அப்பால் (விந்திய மலைக்கு வடக்கே) இருந்தது ஆரிய நாடு. அது வடஇந்தியா முழுவதும் அடங்கியிருந்தது. ஆரிய நாட்டிலே இருந்தவர் ஆரியர். ஆரிய நாட்டிலிருந்த படை ஆரியப்படை.

கடைச்சங்க காலத்திலும் அதற்கு முந்திய காலத்திலும் வடமேற்கு இந்தியாவில் சில கூட்டத்தார் வாழ்ந்து வந்தார்கள். அந்தக் கூட்டத்தாரில் யௌத்தேயர், அர்ச்சுனீயர் என்னும் பிரிவினர் முக்கியமானவர். இவர் களுடைய தொழில் போர் செய்வது. யுத்தம் (போர்) செய்வதை வாழ்க்கை யாகக் கொண்டவர் யௌத்தேயர். அர்ச்சுனீயர் என்பவர் அர்ச்சுனன் வழியில்

வந்த போர் வீரர். இவர்களுக்கு அரசன் இல்லை. இவர்கள் கூட்டங்கூட்டமாக வசித்து வந்தனர். தங்களுக்குள் ஒரு தலைவனைத் தேர்ந்தெடுத்துக் கொண்டனர். யாரேனும் அரசன் இவர்களைத் துணைக்கு அழைத்தால் அவனைச் சார்ந்து அவனுடைய பகைவனுடன் போர் செய்வது இவர் களுடைய தொழில். சில சமயங்களில் இவர்கள் கூட்டமாக வேறு நாட்டுடன் போர் செய்வதும் உண்டு. யௌத்தேய கணம் (கணம்-கூட்டம்) தமிழ் நாட்டின் மேல் அடிக்கடி போருக்கு வந்தது. யௌத்தேய கணத்தைச் சங்ககாலத் தமிழர் ஆரியப்படை என்று பெயரிட்டழைத்தனர். வடுக நாட்டுக்கு அப்பால் ஆரிய நாட்டிலிருந்து வந்தவர் ஆகையால் அவர்கள் ஆரியப்படை என்று பெயர் பெற்றனர். ஆரியப்படை (யௌத்தேய கணம்) யின் வரலாற்றை நான் எழுதிய கட்டுரையில் காண்க. (ஆரியப்படையும் யௌத்தேய கணமும். பக்கம் 128-134. கல்வெட்டுக் கருத்தரங்கு. 1966.)

அகநானூறு 386ஆம் செய்யுளில் கூறப்படுகிற ஆரியப் பொருநன், ஆரியப் படையைச் சேர்ந்தவன் என்று தோன்றுகிறான். சோழ நாட்டு வல்லத்துக் கோட்டை மேல் ஆரியப்படை வந்து முற்றுகையிட்டபோது அக்கோட்டையிலிருந்த சோழன் அவ்வாரியப்படையை வென்று துரத் தினான். ஆரியப்படை உடைந்து ஓடிற்று. இதனை அகநானூறு 336ஆம் செய்யுளினால் அறிகிறோம். பாண்டியன் நெடுஞ்செழியன் காலத்தில் ஓர் ஆரியப்படை போர் செய்ய மதுரைக்கு வந்ததையும் அப்படையை அவன் வென்று துரத்தியதையும் சிலப்பதிகார மதுரைக்காண்டம் கட்டுரைச் செய்யுளினாலும், புறநானூறு 183ஆம் செய்யுளின் அடிக்குறிப்பினாலும் அறிகிறோம்.

இவ்வளவு சிறந்த வீரனும் அறிஞனும் புலவனுமாக இருந்த இந்தப் பாண்டியன், மகளிர்மாட்டு வேட்கையுடையனாய்ச் சிற்றின்பப் பிரியனாக இருந்தான் என்பதை இவனுடைய சமகாலத்தில் வாழ்ந்தவரான இளங் கோவடிகள் (சேரன் செங்குட்டுவனுடைய தம்பியார்) கூறுகிறார். சிலப்பதி காரம் கொலைக்களக் காதையில் இதனை இவர் கூறுகிறார்:

''கூடல் மகளிர் ஆடல் தோற்றமும்
பாடற் பகுதியும் பண்ணின் பயங்களும்
காவலன் உள்ளம் கவர்ந்த வென்றுதன்
ஊடல் உள்ளம் உள்கரந் தொளித்துத்
தலைநோய் வருத்தம் தன்மேல் இட்டுக்
குலமுதற் றேவி கூடா தேக

மந்திரச் சுற்றம் நீங்கி மன்னவன்
சிந்தரி நெடுங்கண் சிலதியர் தம்மொடு
கோப்பெருந் தேவி கோயில் நோக்கிக்
காப்புடை வாயிற் கடைக்கா ணகவயின்." (வரி,131-140)

இச்செய்தியையே இளங்கோவடிகள் கட்டுரை காதையில் மதுராபதி தெய்வத்தின் வாயிலாக மீண்டும் கூறுகிறார்.

பாண்டியன் கல்வி கற்றுப் புலமை வாய்ந்தவனாக இருந்தும், மனத்தை அடக்காமல் சிற்றின்பத்தில் நாட்டஞ் செலுத்தினான் என்றும், ஆனாலும் இவ்வொழுக்கம் அரசகுடியில் பிறந்த இவனுக்கு இழுக்காகாது என்றும் மதுராபதி கூறியதாக இளங்கோவடிகள் கூறுகிறார்:

"நன்னுதல் மடந்தையர்
மடங்கெழு நோக்கின் மதமுகந் திறப்புண்டு
இடங்கழி நெஞ்சத் திளமை யானை
கல்விப் பாகன் கையகப் படாஅது
ஒல்கா வுள்ளத் தோடும் ஆயினும்
ஒழுக்கொடு புணர்ந்த இவ்விழுக்குடிப் பிறந்தோர்க்கு
இழுக்கந் தாராது." (கட்டுரைகாதை, 35-41.)

இந்த நெடுஞ்செழியனிடத்தில் இன்னொரு குறைபாடும் இருந்தது. அஃது அரசர்மாட்டிருக்கக் கூடாத குறைபாடு. நீதி விசாரணைகளை இவன் பொறுப்பேற்று நடத்தாமல் தன் கீழ்ப்பட்ட அதிகாரிகளிடம் விட்டு விட்டான். அதனால், அவர்கள் தம்முடைய விருப்பம்போல் வழக்குகளை விசாரித்துத் தீர்ப்புக் கூறினார்கள். அவர்கள் செய்த பிழைபட்ட தவறான தீர்ப்பு இவ்வரசனுக்குக் கெட்ட பெயரையுண்டாக்கிற்று. இச்செய்தியையும் இளங்கோவடிகளே கூறுகிறார். இதனை விளக்கிக் கூறுவோம்.

பாண்டியன் நெடுஞ்செழியன் காலத்தில் சேர நாட்டில் இருந்தவன் பல்யானைச் செல்கெழுகுட்டுவன். இந்தக் குட்டுவனைப் பதிற்றுப்பத்து மூன்றாம்பத்தில் பாடியவர் பாலைக் கௌதமனார். அவருக்குக் குட்டுவன் பெருஞ் செல்வங் கொடுத்ததையறிந்த சோழ நாட்டுப் பார்ப்பான் பராசரன் என்பவன், அவனிடஞ் சென்று வேத பாராயணஞ் செய்து பொன்னையும் மணியையும் பரிசாகப் பெற்றுக்கொண்டு திரும்பிவரும் வழியில் பாண்டி நாட்டுத் தண்கால் (திருத்தண்கால்) என்னும் ஊரில் வந்து அரச மரத்தடியில் இளைப்பாறினான். அப்போது அவ்வூர்ப்பார்ப்னச்சிறுவர் அவனிடஞ்

சென்றனர். பராசரன் அவ்விளைஞர்களை அழைத்துத் தன்னுடன் வேதம் ஓதும்படி கூறினான். அவ்விளைஞர்களில் தக்கிணன் என்னும் சிறுவன் பிழையில்லாமல் வேதம் ஓதியபடியால், பராசரன் தக்கிணனுக்கு முத்துப் பூணூலையும் பொன் கடகத்தையும் பரிசாகக் கொடுத்தான். பிறகு அவன் தன் சோழ நாட்டுக்குப் போய் விட்டான்.

முத்துப் பூணூலையும் பொற் கடகத்தையும் பரிசாகப் பெற்ற தக்கிணன் என்னும் சிறுவன் அவற்றை அணிந்து கொண்டான். அதனைக் கண்டு பொறாமை கொண்ட அவ்வூர்ப்பார்ப்பனர், தக்கிணனுடைய தந்தையான வார்த்திகன் என்னும் பிராமணன் இந்த நகைகளை எங்கிருந்தோ திருடிக்கொண்டு வந்தான் என்று ஊர் அதிகாரிகளிடம் கூறினார்கள். பாண்டியன் நெடுஞ்செழியனுடைய அந்த ஊழியர்கள், தீரவிசாரியாமல் நகைகளைப் பிடுங்கிக்கொண்டு வார்த்திகனைச் சிறையில் அடைத்தார்கள். வார்த்திகன் அந்நகைகளைக் களவாடியிருக்க வேண்டும், அல்லது அவனுக்குப் புதையல் கிடைத்திருக்க வேண்டும். களவு செய்தது குற்றம். புதையல் கிடைத்திருந்தால், அதை அரசாங்கத்தில் சேர்க்காமல் போனது குற்றம் என்று அவர்கள் தீர்ப்புக் கூறினார்கள்.

வார்த்திகன் மனைவி கார்த்திகை என்பவள் வருந்தி அழுதாள். அப்போது அவ்வூர் ஐயை (கொற்றவை) கோவிலின் கதவு திறவாமல் மூடிக்கொண்டது. இச்செய்தி அரசன் செவிக்கு எட்டியது. பாண்டியன், தண்காலில் இருந்த அரச ஊழியர்களையழைத்து விசாரித்தான் அப்போது முத்துப் பூணூலின் வரலாறு தெரிந்தது. அரசன் வார்த்திகனை விடுதலை செய்து தன் ஊழியர் அநீதி செய்ததற்குத் தண்டமாக அவனுக்கு வயலூரில் நிலத்தைத் தானஞ் செய்தான். பிறகு கொற்றவைக் கோயில் கதவு திறந்து கொண்டது. இச்செய்திகளைக் கட்டுரைகாதை (வரி, 61-131)யில் காண்க. இதனால், இவன் நீதி விசாரணையில் கண்டிப்பாக இராமல் தன் கீழ்ப்பட்ட ஊழியரிடத்தில் அதிகாரத்தை விட்டிருந்தான் என்பது தெரிகின்றது. இந்த நிகழ்ச்சிக்குப் பிறகு பொது மக்களுக்கு இவன்மீது நம்பிக்கை போய் விட்டது. ஒரு சோதிட வார்த்தையும் உலவ ஆரம்பித்தது. அது.

> **''ஆடித் திங்கள் பேரிருள் பக்கத்து**
> **அழல்சேர் குட்டத்து அட்டமி ஞான்று**
> **வெள்ளி வாரத்து ஒள்ளெரி யுண்ண**
> **உரைசால் மதுரையோ டரைசு கேடுறும்''**

என்பது, (கட்டுரை.133-136)

வழக்கு விசாரணைகளைச் சரிவரச் செய்யாமல் போனது இவனுடைய உயிருக்கே ஆபத்தாக முடிந்து விட்டது. பாண்டிமாதேவியின் பொற் சிலம்பைத் திருடின கள்ளன் தன்னிடம் இருக்கிறான் என்று பொற்கொல்லன் பாண்டியனிடம் கூறியபோது, பாண்டியன் அதனை நன்றாக விசாரணை செய்யவில்லை. அல்லது, தக்க பொறுப்புள்ள அதிகாரியிடத்தில் ஒப்படைத்து விசாரிக்கச் செய்யவும் இல்லை. அவன் தன் கடமையைச் செய்யாமல் தவறினான். இஃது அவனுடைய இயற்கை. பொற்கொல்ல னுடைய வார்த்தையை அவன் முழுவதும் நம்பினான். விசாரணை செய்யாமலே, ஊர் காப்பாளரை அழைப்பித்து,

> **"தாழ்பூங் கோதை தன்காற் சிலம்பு**
> **கன்றிய கள்வன் கைய தாகில்**
> **கொன்றச் சிலம்பு கொணர்க ஈங்கு"**

என்று கட்டளையிட்டான். இந்தச் சோர்வு இவன் உயிருக்கே ஆபத்தாக முடிந்தது இவன்மீது கண்ணகி வழக்குத் தொடுத்து வழக்காடிய போது, இவ்வரசன் தான் செய்தது பிழை என்பதை அறிந்தான் அறிந்து அரசு கட்டிலிலேயே உயிர் விட்டான்.

ஆரியப்படை கடந்த, அரசு கட்டிலில் துஞ்சிய பாண்டியன் நெடுஞ்செழியனின் இந்த வரலாறுகளையெல்லாம் சிலப்பதிகாரத்திலிருந்து அறிகிறோம். இவனுடைய சமகாலத்திலிருந்த சேர அரசர்கள், இமயவரம்பன் நெடுஞ் சேரலாதனும் அவன் தம்பியான பல்யானைச் செல்கெழுகுட்டு வனும், சேரன் செங்குட்டுவனும் ஆவர். கொங்கு நாட்டில் சேரரின் இளைய வழியைச் சேர்ந்த மாந்தரஞ்சேரல் (செல்வக் கடுங்கோவாழியாதன்) அரசாண்டிருந்தான். சோழ நாட்டில் இருந்தவன் வடிவேற்கிள்ளி. தொண்டை நாட்டைக் காஞ்சியிலிருந்து அரசாண்டவன் வடிவேற்கிள்ளியின் தம்பியான இளங்கிள்ளி இவர்கள் எல்லோரும் கி.பி இரண்டாம் நூற்றாண்டின் முற்பகுதியில் வாழ்ந்தவர்கள்.

இந்தப் பாண்டியன் நெடுஞ்செழியனைப்பற்றி திரு.ச.வையாபுரிப் பிள்ளை அவர்கள் ஓரிடத்தில் சரியாகவும் வேறோரிடத்தில் தவறாகவும் எழுதியிருக்கிறதைச் சுட்டிக்காட்ட வேண்டியிருக்கிறது 1940 ஆம் ஆண்டில் சைவசித்தாந்த சமாசம் வெளியிட்ட சங்க இலக்கியம் (எட்டுத் தொகையும் பத்துப்பாட்டும்) என்னும் நூலின் பதிப்பாசிரியராக இருந்தவர் திரு.வையாபுரிப்பிள்ளை அவர்கள். அந்த நூலில், ஆரியப்படை கடந்த

நெடுஞ்செழியன் என்னும் தலைப்பில், இவன் பாடிய புறம் 183ஆம் செய்யுளைப் பிள்ளையவர்கள் பதிப்பித்திருக்கிறார்கள். ஆனால், பிள்ளையவர்கள் ஆங்கிலத்தில் எழுதிய 'தமிழ்மொழி தமிழ் இலக்கிய வரலாறு' என்னும் நூலில் 145ஆம் பக்கத்தில் இந்தப் பாண்டியனைச் சந்தேகிக்கிறார். (இந்த ஆங்கில நூல் 1956ஆம் ஆண்டில் இவர் காலஞ் சென்ற பிறகு அச்சிட்டது). இந்த அரசன் உண்மையில் உயிர் வாழ்ந்திருந்தானா என்று இவர் ஐயப்படுகிறார். சங்க இலக்கியத்தை அச்சிட்டபோது இவருக்கு இல்லாத ஐயம் பிற்காலத்தில் இவருக்கு எப்படி ஏற்பட்டது! இந்தப் பாண்டியன் கற்பனைப் புருஷன் என்றால், இவன் பாடிய செய்யுள் எப்படிப் புறநானூற்றில் தொகுக்கப்பட்டிருக்கும்?

ஆனால், வையாபுரிப் பிள்ளையின் நண்பரும் தமிழ் நூல்களும் தமிழ் நாட்டுச் சரித்திரங்களும் பிற்காலத்தவை என்று கூறுகிறவருமான திரு.கே.ஏ.நீலகண்ட சாஸ்திரி இந்தப் பாண்டியனைப்பற்றி ஐயப்படவில்லை. இந்தப் பாண்டியன் உண்மையில் வாழ்ந்திருந்தவன் என்றும் புறநானூற்று 183ஆம் செய்யுளைப் பாடியவன் என்றும் சேரன் செங்குட்டுவனின் சமகாலத்திலிருந்தவன் என்றும் கோவலனைத் தவறாகக் கொன்று அந்தத் தவற்றைப் பிறகு அறிந்து சிம்மாசனத்திலிருந்தபடியே உயிர் விட்டவன் என்றும் சாஸ்திரியார் எழுதுகிறார். *(P.524, 544. A Comprehensive History of India.Vol.2.1957).*

ஆரியப்படை கடந்த, அரசு கட்டிலில் துஞ்சிய பாண்டியன் நெடுஞ் செழியனுக்குப் பிறகு அவனுடைய தம்பியான வெற்றி வேற் செழியன், கொற்கையில் இளவரசனாக இருந்தவன், மதுரைக்கு வந்து அரசாண்டான். அவனுக்குப் பிறகு பாண்டி நாட்டையரசாண்டவன் தலையாலங் கானத்துச் செருவென்ற பாண்டியன் நெடுஞ்செழியன்.

-செந்தமிழ்ச்செல்வி-சிலம்பு-46

15. மதுரை ஆசிரியர் நல்லந்துவனார்

நல்லந்துவனார் சங்க காலத்திலிருந்த புலவர். இவருடைய பெயர் அந்துவன் என்றும் நல்லந்துவன் என்றும் மதுரையாசிரியர் நல்லந்துவன் என்றும் ஏடுகளில் எழுதப்பட்டுள்ளன. இப்பெயர்கள் ஒருவரையே குறிக்கின்றன. ந என்பது சங்க காலத்தில் தமிழ்ப் புலவருக்கு இட்டு வழங்கப்பட்ட சிறப்புச்சொல். அந்துவன் என்பது இவருடைய பெயர்.

நல்லந்துவனார் இயற்றிய இரண்டு செய்யுள்கள் அகநானூற்றில் 43-ஆம் செய்யுளாகவும், நற்றிணையில் 88ஆம் செய்யுளாகவும் தொகுக்கப் பட்டுள்ளன. கலிப்பாக்களினால் ஆகிய கலித்தொகை என்னும் நூலை இவர் தொகுத்தார். அந்தக் கலித்தொகையில், நெய்தற்கலியைப் பற்றி இவர் பாடிய 33 செய்யுள்களையும் தொகுத்திருக்கிறார். இவர் தொகுத்த கலித் தொகைக்குக் கடவுள் வாழ்த்தையும் இவரே பாடியுள்ளார். கலித்தொகையில் பெருங்கடுங்கோன் பாடிய பாலைக் கலிச் செய்யுட்களையும், கபிலர் இயற்றிய குறிஞ்சிக்கலிச் செய்யுட்களையும், மருதன் இளநாகனார் இயற்றிய மருதக்கலிச் செய்யுட்களையும், சோழன் நலலுருத்தினார் இயற்றிய முல்லைக்கலிச் செய்யுட்களையும் இவர் தொகுத்துள்ளார். இதனை,

> **''பெருங்கடுங்கோ பாலை, கபிலன் குறிஞ்சி,**
> **மருதனிள நாகன் மருதம்-அருஞ்சோழன்**
> **நல்லுருத் திரன்முல்லை, நல்லந் துவனெய்தல்**
> **கல்விவல்லார் கண்ட கலி''**

என்னும் செய்யுளினால் அறியலாம்.

கலித்தொகையின் இறுதியில் ''தொகுத்தார்-நல்லந்துவனார்'' என்று எழுதப்பட்டிருப்பது, இதனைத் தொகுத்தவர் இவரே என்பதை உறுதிப் படுத்துகின்றது.

மதுரையில் இருந்த இவர், மதுரைக்கு அருகில் உள்ள திருப்பரங் குன்றத்தில் எழுந்தருளியிருந்த முருகப் பெருமான் மீது 8-ஆம் பரிபாட்லைப் பாடினார். அதில் திருப்பரங்குன்றத்தை மிகப் பாராட்டியுள்ளார். ''பரங்குன்று இமயக் குன்றம் தகர்க்கும்'' என்று கூறியுள்ளார். முருகனுக்குத் திருப்பரங் குன்றம் என்றென்னும் நிலைபெறுவதாக என்று வாழ்த்துகிறார்;

> **''மணிமிடற் றண்ணற்கு மாசிலோன் தந்த**
> **நெறிநீர் அருவி யசும்புறு செல்வ!**
> **மண்பரிய வானம் வறப்பினும் மன்னுகமா**
> **தண்பரங் குன்றம் நினக்கு''**

என்று வாழ்த்துகிறார். பரிபாடல் (8:127-30)

வையையாற்றையும் இவர் பரிபாடலில் பாடியுள்ளார். (பரிபாடல் 6, 11, 20) இவர் இசைக்கலையில் வல்லவர் என்பது, இவர் இயற்றியுள்ள பரிபாடல்களினால் அறியலாம். ஏனென்றால் பரிபாடல் இசைப் பாவைச்

சேர்ந்தது. இதனை இவர், "இன்னியல்மாண் தேர்ச்சி இசை பரிபாடல்" என்று 11ஆம் பரிபாடலில் (வரி 137) கூறியிருப்பது காண்க.

நல்லந்துவனார் முருக பக்தர் என்றும் அவர் முருகப் பெருமான் எழுந்தருளியுள்ள பேர்போன திருப்பரங்குன்றத்தைப் பரிபாடலில் பாடி யுள்ளார் என்றும் கூறினோம். இச்செய்தியை இப்புலவர்கள் காலத்தில் இருந்த மருதன் இளநாகனார் என்னும் புலவரும் தாம் பாடிய அகப்பாட்டு ஒன்றில் பாடியுள்ளார்.

> "சூர்மருங் கறுத்த சுடரிலை நெடுவேல்
> சினமிகு முருகன் தண்பரங் குன்றத்து
> அந்துவன் பாடிய சந்துகெழு நெடுவரை"

என்று (அகநானூறு.59) அவர் கூறியுள்ளது காண்க.

நல்லந்துவனாரும் மருதன் இளநாகனாரும் சமகாலத்தில் இருந்தவர் என்பது நன்கு தெரிகின்றது. மருதன் இளநாகனார் இயற்றிய மருதக்கலிச் செய்யுட்களை நல்லந்துவனார் தாம் தொகுத்த கலித்தொகையில் தொகுத்து இருக்கிறார். தனக்குச் சம காலத்தில் இருந்த புலவர் செய்யுட்களை அல்லது தமக்கு முன்பு இருந்த புலவர்களின் செய்யுட்களை மட்டும் தொகுக்க முடியுமேயல்லாமல் தமக்குப் பிற்காலத்தில் இருந்த புலவர்களின் பாடல் களை ஒருவர் தொகுக்க முடியாதல்லவா? எனவே, நல்லந்துவனாரும் மருதன் இளநாகனாரும் சமகாலத்தவர் என்பது தெரிகின்றது. மருதன் இளநாகனார், நல்லந்துவனாருக்கு முன்பு இருந்திருக்கக்கூடாதோ என்றால், மருதன் இளநாகனார், நல்லந்துவனார் பாடிய ,திருப்பரங் குன்றத்தை

> "சினமிகு முருகன் தண்பரங் குன்றத்து
> அந்துவன் பாடிய சந்துகெழு நெடுவரை"

என்னும் பாடல் (அகம் 59) கூறுகிறபடியால் மருதன் இளநாகனார் நல்லந்துவனாருக்கு முன்புவாழ்ந்திருத்தல் முடியாது. எனவே நல்லந்து வனாரும் மருதம் பாடிய இளநாகனாரும் சம காலத்தவர் என்பது ஐயமறத் தெரிகின்றது.

மதுரையாசிரியர் நல்லந்துவனார் திருப்பரங்குன்றத்து மலையிலே இருந்த இயற்கைக் குகையொன்றைச் செப்பனிட்டு அதைத் திருப்பரங் குன்றத்து மலையில் தவம் செய்துகொண்டிருந்த முனிவருக்குத் தானமாக வழங்கினார் என்னும் அரிய செய்தி ஒன்றும் தெரிகின்றது. திருப்பரங்

குன்றத்தையும் அதில் எழுந்தருளியுள்ள முருகப்பெருமானையும் பக்தியுடன் பாடிய ஆசிரியர் நல்லந்துவனார் அந்த மலையில் தவம் செய்து கொண்டிருந்த முனிவருக்குக் குகையைச் செப்பனிட்டுக் கொடுத்தது மிகப் பொருத்தமேயாகும். திருப்பரங்குன்றத்து மலையில் உள்ள இயற்கைக் குகைகள் சிலவற்றில் ஒரு குகையில் கீழ்க்கண்ட எழுத்துக்கள் எழுதப் பட்டிருக்கின்றன. இவ்வெழுத்து அக்காலத்தில் வழங்கி வந்த பிராமி எழுத்தாகும்:



என்பது இதன் வாசகம்.

அந்துவன் என்பதை அந்துவான் என்றும் கொடுப்பித்தவன் என்பதைக் கொடுபிதாவான் என்றும் படிப்பில்லாத கல்தச்சன் இவ்வெழுத்து களைப் பாறையில் செதுக்கியிருக்கிறான். இதன் சரியான வாசகம் 'அந்துவன் கொடுப்பித்தவன்' என்றிருக்க வேண்டும்.

முருகபக்தரும் திருப்பரங்குன்றத்து முருகனைப் பரிபாடலில் பாடினவரும் சங்கப் புலவருமாயிருந்த அந்துவரே இந்தத் தானத்தைச் செய்திருக்கவேண்டும் என்பதில் ஐயமுண்டோ?

-கல்வி, சூலை 1967

16. சேரலாதன் அளித்த பெருஞ்சோறு - I

''மண் திணிந்த நிலனும்'' என்று தொடங்குகிற புறநானூற்று இரண்டாவது செய்யுள். சேரமான் பெருஞ்சோற்று உதியன் சேரலாதனை முரஞ்சியூர் முடிநாகராயர் பாடியது. உதியன் சேரலாதன் சேனைக்குச் சோறு கொடுத்தது பற்றிப் பெருஞ்சோற்று உதியன் என்ற சிறப்புப் பெயர் பெற்றான்.

பாண்டவர் கௌரவர் இருவருக்கும் நடந்த பாரதப் போரிலே இருதரத்துச் சேனைகளுக்கும் போர் முடிகிற வரையில் இந்தச் சேரன் சோறு கொடுத்தான் என்று பழைய உரையாசிரியர் இந்தச் செய்யுளுக்கு உரை எழுதியுள்ளார். ஆகவே, உதியன் சேரலாதன் பாரதப் போர் நடந்த காலத்திலே இருந்தவன் என்று பலரும் நம்புகிறார்கள். எனவே, இந்தச் செய்யுள் மிகப் பழமையானது என்று கருதுகிறார்கள். பாரதப் போர் கி.மு. 1500-ல் இற்றைக்கு 3500 ஆண்டுகளுக்கு முன்னர் நிகழ்ந்தது என்பது வரலாற்றறிஞர்களின் கருத்து. இதனால், பெருஞ்சோற்று உதியன் சேரலாதனும், அவனைப் பாடிய முரஞ்சியூர் முடிநாகராயரும் பாரதப்போர் நடந்த காலத்தில் இருந்தவர் என்று கருதப்படுகின்றனர்.

இதைப் பற்றி இங்கு ஆராய்வோம். இந்தச் சேர அரசனும் புலவர் பெருமானும் பாரதப் போர் நிகழ்ந்த காலத்தில் இருந்தவர்களா? பாரதப் போரிலே இருதரத்துச் சேனைகளுக்கும் சேரன் சோறு அளித்தானா? தலைச்சங்க இடைச்சங்க காலத்து நூல்கள் எல்லாம் மறைந்துபோக, பாரதப் போர்க் காலத்திய (?) இந்தச் செய்யுள் மட்டும் எப்படிக் கிடைத்திருக்கிறது? இந்தச் செய்யுளில் கூறப்படுகின்ற செய்தி, இதன் உரையாசிரியர் கூறுவது போல, பாரதப் போரைப் பற்றிய செய்திதானா? இதில் ஏதேனும் தவறு உண்டா?

இந்தச் செய்யுளையும் உரையையும் படித்த சிலர், இது பாரதப் போர்க்காலத்தில் நிகழ்ந்ததாகப் புனைந்துரைக்கப்பட்ட போலிப்பாடல் என்றும் கருதுகிறார்கள். ஆகவே, இச்செய்யுளைப் பற்றி ஆராய்ந்து உண்மை காணவேண்டுவது அவசியமாகிறது.

''மண்திணிந்த நிலனும்'' என்று தொடங்குகிற இந்தச் செய்யுளிலே, இவ்வரலாற்றினைக் கூறுகிற பகுதி இது:

> **''வான வரம்பனை நீயோ பெரும!**
> **அலங்குளைப் புரவி யைவரொடு சினைஇ**
> **நிலந்தலைக் கொண்ட பொலம்பூந் தும்பை**
> **ஈரைம் பதின்மரும் பொருதுகளத் தொழிய**
> **பெருஞ்சோற்று மிகுபதம் வரையாது கொடுத்தோய்!''**

பழைய உரைகாரர் இதற்கு இவ்வாறு உரை எழுதுகிறார்:

''வானவரம்ப, பெரும, நீ, அசைந்த தலையாட்டமணிந்த குதிரையை யுடைய பாண்டவரைவருடனே சினந்து நிலத்தைத் தம்மிடத்தே கொண்ட

பொற்பூந் தும்பையையுடைய துரியோதனன் முதலாகிய நூற்றுவரும் பொருது போர்க்களத்தின்கட் படுந்துணையும் பெருஞ்சோறாகிய மிக்க உணவை இருபடைக்கும் வரையாது வழங்கினோய்!''

இந்தச் செய்யுளில் வரும் ஐவர், ஈரைம்பதின்மர் என்னும் சொற்கள் உரையாசிரியரை மயக்கிவிட்டன. ஆகையினால் ஐவர் என்பதற்குப் பாண்டவர் என்றும், ஈரைம்பதின்மர் என்பதற்குக் கௌரவராகிய துரியோ தனாதியர் என்றும் பொருள் எழுதிச் சேரலாதனைப் பாரதப் போருடன் பொருத்திவிட்டார். உரையாசிரியரை மயக்கியது போலவே ஏனையோரை யும் மயங்கச் செய்வது இச்செய்யுளில் உள்ள ஐவர், ஈரைம்பதின்மர் என்னும் சொற்கள். இச்சொற்களின் உண்மைப்பொருளை உணர்வோமானால், பெருஞ்சோற்று உதியன் சேரலாதன் பாரதப் போர் நடந்த காலத்தில் இருந்தவன் அல்லன் என்பதும், அவன் கடைச் சங்க காலத்தில் கி.பி. முதலாவது அல்லது இரண்டாவது நூற்றாண்டில் இருந்தவன் என்பதும் உள்ளங்கை நெல்லிக்கனிபோலத் தெரியும். இதனை விளக்கிக் கூறுவோம்.

இச்செய்யுளில் ஐவர் என்றது பாண்டவரை அல்ல, பாண்டியரை ஆகும். பாண்டவர் ஐவர் ஆனது போலவே, பாண்டியரும் ஐவர் ஆவர். பாண்டவருக்குப் பஞ்சபாண்டவர் என்னும் பெயர் வழங்குவதுபோல, பாண்டியருக்குப் பஞ்சபாண்டியர் என்னும் பெயர் வழங்கியது. பாண்டவர் வேறு, பாண்டியர் வேறு. அண்ணன் தம்பியர் ஆகிய பாண்டவர் ஐவர் பாரதப் போர்க்காலத்தில் இருந்தனர். பாண்டிய அரச குலத்தைச் சேர்ந்த பாண்டியர் ஐவர், பரம்பரை பரம்பரையாகப் பாண்டிய நாட்டை நெடுங்காலம் அரசாண்டனர். பாண்டி நாட்டை ஒரே காலத்தில் ஐந்து பாண்டியர்கள் வெவ்வேறு ஊர்களில் இருந்து அரசாண்டனர். இச்செய்தி பிற்காலத்தில் மறக்கப்பட்டு மறைந்து விட்டது. இவ்வைந்து பாண்டியரில் தலைமைப் பாண்டியன் மதுரையில் அரசாண்டான். பாண்டிய இளவரசன் கொற்கையில் இருந்து அரசாண்டான். மற்ற மூன்று பாண்டியரும் அதே சமயத்தில் வெவ்வேறிடங்களிலிருந்து அரசாண்டார்கள். மதுரைப் பாண்டியனையும், கொற்கைப் பாண்டியனையும் நூல்கள் சிறப்பாகக் கூறியது போல மற்ற மூன்று பாண்டியரைச் சிறப்பாகக் கூறவில்லை. ஆனால், பாண்டியர் ஐவர் ஒரே காலத்தில் பாண்டிய நாட்டின் ஐந்து பகுதிகளிலிருந்து அரசாண்டனர் என்பதற்கு இலக்கியச் சான்றுகளும், சாசனச் சான்றுகளும் உள்ளன. அந்தச் சான்றுகளை இப்போது இங்குக் காட்ட இயலவில்லை. இதுபோன்று ஒரு கட்டுரை எழுத நேரிடும் என்று எனக்குத் தெரிந்திருந்தால், நான் கண்ட

அச்சான்றுகளை அவ்வப்போது குறித்து வைத்திருப்பேன். ஆனாலும், ஆராய்ச்சிக் கண்கொண்டு இலக்கியங்களையும் சாசனங்களையும் நுட்பமாக ஆராய்கிறவர், பாண்டியர் ஐவர் என்னும் உண்மையைக் காண்பார்கள். பாண்டியர் ஐவர் ஆனபடியினாலே அவருக்குப் பஞ்சவர் என்ற பெயரும் இருந்தது.

பாண்டியர் ஐவர் என்னும் சரித்திர உண்மை மறைந்து போன பிற்காலத்திலே பஞ்சவர், பாண்டவர் என்பதற்கு வேறுபாடு தெரியாமல் பாண்டியரையும், பாண்டவரையும் ஒருவராகக் கருதி மயங்கினார்கள். மயங்கியதோடு அல்லாமல், பாண்டியருக்கும் பாண்டவருக்கும் உறவு முறையும் கற்பித்துவிட்டார்கள். சேர சோழ பாண்டியராகிய முடிமன்னர் மூவரும் மறைந்து, தமிழ்நாடு வேற்றார்கள் ஆட்சியிலே சில நூற்றாண்டு களாக இருந்த காரணத்தினாலே, தமிழ்நாட்டுச் சரித்திரச் செய்திகள் பல மறைந்துவிட்டது போலவே, பாண்டியர் ஐவர் என்னும் சரித்திர உண்மையும் பிற்காலத்தில் மறைக்கப்பட்டது. (பாரதம் எல்லாக் காலத்திலும் படிக்கப்பட்டு வந்தபடியினாலே, பாண்டவர் ஐவர் என்கிற செய்தி மட்டும் குக்கிராமத்த வருக்கும் தெரிந்திருந்தது) எனவே, புறநானூற்று உரையாசிரியர் இச் செய்யுளில் பயின்றுள்ள ஐவர் என்னும் சொல்லுக்குப் பாண்டவர் என்று உரை எழுதிவிட்டார். ''ஐவரொடு சினைஇ'' என்பதற்குப் பாண்டியர் ஐவருடனும் சினந்து என்று பொருள் கூறவேண்டும். அதாவது உதியன் சேரலாதன் பாண்டியர் ஐவருடனும் சினங்கொண்டான் என்பது கருத்து. துரியோதனன் பாண்டவர் ஐவருடனும் சினங்கொண்டான் என்பது இச்செய்யுளின் பொருள் அல்ல.

பிறகு, இச்செய்யுளில் வருகிற ''ஈரைம்பதின்மர்'' என்பதற்குத் துரியோதனன் முதலிய நூற்றுவர் என்று உரையாசிரியர் பொருள் எழுதி யுள்ளார். ஐவரைப் பாண்டவராக்கிவிட்ட பிறகு, ஈரைம்பதின்மரைத் துரியோதனனாதியர் நூற்றுவர் என்று தானே கூறவேண்டும்? அதற்கேற்ப உரை எழுதிவிட்டார். இங்கு எனக்கு ஒரு ஐயப்பாடு உண்டு. ஈரைம்பதின்மர் என்று இருப்பது ஈரொன்பதின்மர் (பதினெட்டுப்பேர்) என்று பாடம் இருந்திருக்கக் கூடும் என்பது எனது ஐயம். பதினெண்மர் என்னும் பொரு ளுடைய ஈரொன்பதின்மர் என்னும் பாடத்தை உரையாசிரியர் ஈரைம் பதின்மர் என்று திருத்திக்கொண்டாரோ என்று ஐயுறுகிறேன். ஈரைம்பதின்மர் என்றே வைத்துக் கொண்டாலும் அது துரியோதனாதியர்களைத் தான் சுட்டவேண்டும் என்பது இல்லை. நூறுபேர் அதாவது நூறு சேனைத்

தலைவர்கள் என்பது பொருள். ஈரொன்பதின்மர் என்பது பாடமானால், பதினெட்டு சேனைத் தலைவர் என்று பொருள்கொள்ள வேண்டும். இந்தச் சேனைத் தலைவர்கள் பாண்டியர்கள் ஐந்து பேருக்கும் உரியவர்கள். எனவே,

> "அலங்குளைப் புரவி ஐவரொடு சினைஇ
> நிலந்தலைக் கொண்ட பொலம்பூந் தும்பை
> ஈரைம்பதின்மரும் பொருதுகளத் தொழிய"

என்பதற்குப் பொருள் என்னவென்றால்,

'அசைந்த தலையாட்டமணிந்த குதிரையையுடைய ஐந்து பாண்டியர் களுடனே சினங்கொண்டு, நிலத்தைத் தம்மிடத்தே கொண்ட பொற்பூந் தும்பையைச் சூடிய (பாண்டியருடைய) நூறு சேனைத் தலைவரும் (ஈரொன் பதின்மர் என்பது பாடமாயின், பதினெட்டுச் சேனைத் தலைவரும்) போர்க் களத்திலே படும்படி', என்பது பொருளாகும்.

அடுத்த அடியாகிய "பெருஞ்சோறு மிகுபதம் வரையாது கொடுத் தோய்" என்பதற்குப் பொருள் கூறுவேன். பெருஞ்சோறு என்பதற்குச் சிறப்புப் பொருள் உண்டு. அதனைத் தொல்காப்பியம் புறத்திணையியல் வஞ்சித்திணைப் பகுதியில் காணலாம். வஞ்சித்திணை என்பது ஓர் அரசன்மேல் வேற்றுநாட்டரசன் ஒருவன் படையெடுத்து வந்தால் அவன் மேல் போருக்குச் செல்வது. இந்த வஞ்சித்திணையின் துறைகள் பதின் மூன்றில் பெருஞ்சோற்றுநிலை என்பதும் ஒன்று. எதிர்த்து வந்த அரசன்மேல் போருக்குச் செல்லும் அரசன், போருக்குப் புறப்படுவதற்குமுன் சேனை வீரர்களுக்கு விருந்து செய்வான். அந்த விருந்துக்குப் பெருஞ்சோறு, அல்லது பெருஞ்சோற்றுநிலை என்பது பெயர். இந்த விருந்தின்போது அரசனும் உடனிருந்து உண்பான். "பிண்டம்மேய பெருஞ்சோற்றுநிலை" என்பது தொல்காப்பிய சூத்திரம். இதற்கு உரை எழுதுகிற நச்சினார்க்கினியர், "வேந்தன் போர்த்தலைக்கொண்ட பிற்றை ஞான்று தானே போர் குறித்த படையாளருந் தானும் உடன் உண்பான் போல்வதோர் முகமன் செய்தற்குப் பிண்டித்து வைத்த உண்டியைக் கொடுத்தன் மேயின பெருஞ்சோற்று நிலையும்" என்று பொருள் கூறுகிறார். தமிழ் அரசர்கள் போருக்குச்செல்லும் போது தம்முடைய வீரர்களுக்குச் சோறு (பெருஞ்சோறு) அளிப்பது பண்டைக்காலத்து மரபு.

புறப்பொருள் வெண்பா மாலையிலும், வஞ்சிப்படலத்தில் பெருஞ் சோற்றுநிலை கூறப்படுகிறது. எனவே, இப்புறநானூற்றுச் செய்யுளில்

வருகிற, ''பெருஞ்சோறு மிகுபதம் வரையாது கொடுத்தோய்'' என்பதற்குப் பொருள் ''பெருஞ்சோறாகிய மிக்க உணவை உன் படைவீரர்களுக்கு வரையாது அளித்தோய்'' என்பது ஆகும். இவ்வாறு பொருள் கொள்ளாமல் பழைய உரையாசிரியர், தாம் கற்பித்துக்கொண்ட பாண்டவர் கௌரவரின் பாரதப்போருக்கு ஏற்ப, இரு படைக்கும் உதியன் சோறு வழங்கியதாக உரை எழுதினார். இவ்வுரையை ஏற்றுக் கொள்ளமுடியாது; என்னை? போருக்குச் செல்லுமுன் தன் போர்வீரர்களுக்குப் பெருஞ்சோறு கொடுப்பது தமிழ்நாட்டு மரபு. அந்த மரபுப்படி உதியன்சேரலாதன், தனது போர்வீரர்களுக்குப் பெருஞ்சோறு கொடுத்தான் என்பது பொருந்துமே தவிர, பிற அரசர் சேனைக்குப் பெருஞ்சோறு கொடுத்தான் என்பது பொருந்தாது. அது தவறான கூற்றாகும்.

அப்படியானால், இப்புறநானூற்றுச் செய்யுளின் பொருள் என்ன?

இந்தச் செய்யுளிலே வேறு சில குறிப்புகளும் உள்ளன. அந்தக் குறிப்புக்களைக்கொண்டு ஆராய்ந்து இதற்குப் பொருள் காணலாம். உதியன்சேரலாதன் மேற்குக்கடற்கரையைச் சார்ந்த சேரநாட்டுக்கு அரசன். அவன், கிழக்குக்கடல் ஓரத்தில் இருந்த சோழநாட்டைப் பிடித்துக்கொண்டு, சோழநாடு சேரநாடு இரண்டையும் அரசாண்டான். இச்செய்தியை இச்செய்யுளில் வருகிற, ''நின் கடற் பிறந்த ஞாயிறு பெயர்த்து நின், வெண்டலைப்புணரிக் குடகடற குளிக்கும், யாணர் வைப்பின் நன்னாட்டுப் பொருந'' என்னும் அடிகளினால் அறியலாம். சேரலாதன் சோழநாட்டைப் பிடித்துக்கொண்டு பேரரசனாக இருப்பது பாண்டியருக்கு ஆபத்தாக இருந்தது. சோழ நாட்டைக் கைப்பற்றிக்கொண்டது போல, சேரன் பாண்டி நாட்டையும் கைப்பற்றிக்கொள்வான் அல்லவா? அந்த நிலை ஏற்படாதபடி பாண்டிய அரசர், சேரலாதனை எதிர்த்தார்கள். பாண்டியர் ஐவரும் ஒன்று சேர்ந்து தமது படைத்தலைவர்களை ஏவி, உதியன் சேரலாதனுடைய நாடுகளைக் கவர்ந்து கொண்டார்கள். பாண்டியரின் ஏவலினால் தனது நாடுகளில் சிலவற்றைப் பிடித்துக்கொண்ட பாண்டியரின் படைத்தலைவர் மீது உதியன் சேரலாதன் படையெடுத்துச்சென்று அவர்களுடன் போர் செய்யவேண்டிய நிலை ஏற்பட்டது. ஆகவே அவன் போருக்குப் புறப் பட்டான். புறப்படுமுன் தன் வீரர்களுக்குப் ''பெருஞ்சோறு'' அளித்தான். இதுதான் இச்செய்யுளிலிருந்து நாம் தெரிந்துகொள்ளும் சரித்திரச் செய்தி. எனவே,

"அலங்குளைப் புரவி ஐவரொடு சினைஇ
நிலந்தலைக் கொண்ட பொலம்பூந் தும்பை
ஈரைம் பதின்மரும் பொருதுகளத் தொழியப்
பெருஞ்சோறு மிகுபதம் வரையாது கொடுத்தோய்"

என்பதற்கு நேரான பொருள்,

"அசைந்த தலையாட்ட மணிந்த குதிரையையுடைய ஐந்து பாண்டியருடன் சினந்து, நிலத்தை தம்மிடத்தே கொண்ட பொற்பூந் தும்பையையுடைய பாண்டியரின் சேனைத் தலைவர் நூற்றுவரும் (அல்லது பதினெண்மரும்) பொருது போர்க்களத்தின்கட் படுமாறு நினது சேனைக்குப் பெருஞ்சோறாகிய மிக்க உணவை வரையாது வழங்கினாய்" என்பதாகும்.

இவ்வுரையே இச்செய்யுளின் செம்பொருள் எனத்தோன்றுகிறது. இது சங்ககாலத் தமிழரின் போர் முறைக்கும் தமிழ் நாட்டின் வரலாற்றுக்கும் பொருந்துவதாகும். இதனை விட்டுப் பாண்டவர் கௌரவரின், பாரதப் போருடன் இணைப்பது பெருந் தவறாகும். பழைய உரையாசிரியர் செய்த இந்தத் தவறு, பெருஞ்சோற்று உதியன் சேரலாதனும், அவனைப் பாடிய முரஞ்சியூர் முடிநாகராயரும் பாரதப்போர் நிகழ்ந்த காலமாகிய 3500 ஆண்டுகளுக்கு முன்பு இருந்தவர் என்று கருதும்படி செய்துவிட்டது. உண்மை இதுவன்று. முடிநாகராயரும் உதியன் சேரலாதனும் கடைச்சங்க காலத்தில், (கி.மு. 300-க்கும் கி.பி. 200-க்கும் இடைப்பட்ட காலத்தில்) இருந்தவர் என்பதே பொருந்துவதாகும். நிற்க,

பெருஞ்சோற்று உதியன் சேரலாதனைப் பாடிய புலவர் முரஞ்சியூர் முடிநாகராயர் என்று கூறப்படுகிறார். இப்பெயரும் தவறு என்று தோன்றுகின்றது. ராயர் என்னும் பெயர் மிகமிகப் பிற்காலத்தது. இப்பெயர் கடைச்சங்ககாலத்தில் வழங்கப்பெறவில்லை. இப்பெயரில் ஏதோ பாட பேதம் இருக்கவேண்டும். இப்பெயரின் சரியான வாசகம் முரஞ்சியூர் முடிநாகரியார் என்றிருக்கக்கூடும். புறநானூற்றின் 360-ஆம் செய்யுளைப் பாடிய புலவர் பெயர் சங்கவருணர் என்னும் நாகரியர் என்று காணப் படுகிறது. எனவே, முரஞ்சியூர் முடிநாகரியர் என்னும் பெயரை ஏடு எழுது வோர் கைப்பிழையாக முரஞ்சியூர் முடிநாகராயர் என்று எழுதிவிட்டனர் போலும். இறையனார் அகப்பொருள் உரையிலும் இப்பெயர் முடிநாகராயர் என்று காணப்படுகிறது. இதுவும் முடிநாகரியர் என்றிருக்கவேண்டும்.

இப்புறநானூற்றுச் செய்யுளிலே பெருஞ்சோற்று உதியன் சேரலாதன் வானவரம்பன் என்று கூறப்படுகிறான். சேர அரசர் சிலருக்கு வானவரம்பன் என்னும் சிறப்புப்பெயர் வழங்கப்பட்டுள்ளது. வேறு சில சேர அரசர்களுக்கு இமயவரம்பன் என்னும் சிறப்புப் பெயரும் வழங்கப்பட்டுள்ளது. வான வரம்பன், இமயவரம்பன் என்னும் பெயரைக்கொண்டு, வானத்தை எல்லை யாக உடையவன், இமயமலையை எல்லையாக உடையவன் என்று சிலர் பொருள் கூறுகிறார்கள். இதுவும் பொருந்தாது. நில உலகத்துக்கு வானம் எப்படி எல்லையாக அமையும்? இமயமலையை எல்லையாகக் கொண்டு சேரமன்னர் எந்தக்காலத்திலும் அரசாண்டதாகத் தெரியவில்லை. ஆகவே, வானவரம்பன், இமயவரம்பன் என்பதற்கு இவ்வாறு பொருள் கூறுவது பொருந்தாது. ஆனால், இப்பெயர்கள் சேர மன்னர் பலருக்கும் வழங்கி யுள்ளன. இப்பெயர்களுக்கு வேறு ஏதோ பொருள் இருக்கவேண்டும். இவற்றின் உண்மைப்பொருள் தெரியவில்லை. அறிஞர்கள் ஆராய்ந்து கண்டறிய வேண்டும்.

எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்பது அறிவு

தமிழ்ப்பொழில்-துணர் 36, மலர் 4, 1960

17. சேரலாதன் அளித்த பெருஞ்சோறு-II

தமிழ்ப்பொழில் 36-ஆம் துணர், 4-ஆம் மலரில் ''சேரலாதன் அளித்த பெருஞ்சோறு'' என்னும் கட்டுரையை எழுதியிருந்தேன். புறநானூற்று 2-ஆம் செய்யுளில் கூறப்படுகின்ற பெருஞ்சோற்று உதியன் சேரலாதன், பாரதப் போரில் இருதரத்துச் சேனைகளுக்கும் சோறு வழங்கினான் என்பது ஏற்கத்தக்கது அல்ல என்றும், அவன் பாரத காலத்தில் இருந்தவன் அல்லன் என்றும் கடைச்சங்க காலத்தில் இருந்தவன் என்றும் அக்கட்டுரையில் நான் எழுதியிருந்தேன்.

அக்கட்டுரையில் நான் கூறியவற்றை மறுத்து எனது மதிப்புக்குரிய நண்பர் திரு. ஞா. தேவநேயப் பாவாணர் அவர்கள் ''சேரலாதன் பெருஞ் சோறு வழங்கியது பாரதப்படைகட்கே'' என்னும் தலைப்புடைய கட்டுரை யைத் தமிழ்ப் பொழிலில் (துணர் 36-மலர் 7) எழுதியுள்ளார்கள். தமிழின் முது பழந் தொன்மையைக் காட்டி நிற்கும் சான்றுகளில், சேரலாதன் பாரதப் படைக்குப் பெருஞ்சோறு கொடுத்த செய்தியும் ஒன்று என்றும், அதனைக்

கடைச் சங்க காலத்துச் செய்தி என்று எனது கட்டுரையில் கூறியது. நான் தமிழன்னைக்குப் பெரியதோர் குற்றம் செய்துவிட்டதாகவும் பாவாணர் அவர்கள் எழுதியுள்ளார்கள். உதியன் சேரலாதன் பாரதப்போர் நிகழ்ந்த காலத்தில் பாண்டவர்-கௌரவர் ஆகிய இருதரத்துப் படைகளுக்குச் சோறு வழங்கினான் என்பது உண்மையானால், அது தமிழுக்குப் பெருமை யளிக்கும் செய்தி என்பதில் ஐயமில்லை. அதற்காக, தேவநேயரைப் போலவே நாமும் மகிழலாம்; பெருமைப்படலாம். ஆனால், அது உண்மைச் செய்திதானா என்பதை முதலில் அறியவேண்டும்.

ஐயத்துக் கிடமானதும் மயங்கச் செய்கிறதுமான சான்றுகளைக் காட்டித் தமிழன்னையின் புகழைப் பாடுவதைவிட அசைக்க முடியாத உறுதியான உண்மைக் காரணங்களைக் காட்டித் தமிழ்த் தாயின் பெருமையை நிலைநாட்டுவது சிறந்த தொண்டு என்று கருதுகிறவன் நான். காய்தல் உவத்தல் அகற்றி நடுநிலையில் நின்று ஆராயும் பழக்கம் உடைய நான், பிறர் கூறுவதில் உண்மைச் சான்றுகள் இருக்குமானால் அவற்றை ஏற்றுக்கொள்ளத் தயங்கமாட்டேன். தேவநேயர் அவர்கள், தமது கட்டுரையில் கூறியவற்றைப் படித்துப் பார்த்தேன். என்னுடைய கருத்துக்களை மாற்றிக்கொள்ளக்கூடிய செய்திகளோ சான்றுகளோ அவருடைய கட்டுரையில் கூறப்படவில்லை. மாறாகப் புதிய ஐயங்கள் தோன்றுகின்றன

தேவநேயர் அவர்களின் கருத்துக்களுக்கு விடை கூறும்போது, "பொழிலில்" போதிய இடம் இருக்குமா என்கிற ஐயத்தின் காரணமாக, கூடியவரையில் சுருக்கமாகவே எழுதுகிறேன். புறம் 2-ஆம் செய்யுளில் கூறப்படுகிற ஐவர், ஈரைம் பதின்மர் என்னும் சொற்கள் பாண்டவரையும் கௌரவரையும் தான் சுட்டுகின்றன என்றும், அவ்விருவரும் செய்த பாரதப்போரில் உதியன் சேரலாதன் பெருஞ்சோறு கொடுத்தான் என்றும், இதுவே உண்மைச் செய்தி என்றும் பாவாணர் வற்புறுத்துகிறார். இதுவே இக்கட்டுரையின் முதன்மையான கருத்து. இதற்கு விடை கூறுவதற்குமுன், பாவாணர் அவர்கள் கூறியுள்ள வேறுசில கருத்துக்களை ஆராய வேண்டி யிருக்கிறது. அவற்றை ஆராய்ந்த பிறகு, மூலக்கருத்தைப் பற்றி ஆராய்வோம்.

1. "தொல்காப்பியத்தில் வஞ்சித்திணைத் துறையாகக் குறிக்கப் பட்டுள்ள 'பிண்டமேய பெருஞ்சோற்றுநிலை,' வழி வழி வந்த மூவேந் தர்க்கும் பொதுநிலையன்றி அவருள் ஒருவனுக்கு மட்டும் சிறப்பாக உரிய தன்று. ஓர் அரசனைச் சிறப்பித்துப் பாடும் இயன்மொழி வாழ்த்தில்,

அவனுக்குச் சிறப்பாக உரிய இயல்களையும் செயல்களையும் குறிப்பிடு வதன்றி, எல்லார்க்கும் பொதுவானவற்றைக் குறிப்பது மரபன்று'' என்று தேவநேயப் பாவாணர் எழுதுகிறார்.

இது தவறான கருத்து என்பதைக் கீழ்வரும் சான்றுகள் தெளிவாக்கு கின்றன. பெருஞ்சோறு கொடுப்பது மூவேந்தருக்கும் பொதுவான தென்றாலும்; அதுவும் ஓர் அரசனுக்குரிய சிறப்பாகப் புலவர்களால் குறிப் பிடப்பட்டுள்ளன. இதற்குச் சான்றுகள் இவை.

''பெருஞ்சமந் ததைந்த செருப்புகன் மறவர்
உருமுநிலன் அதிர்க்குங் குரலொடு கொளைபுணர்ந்து
பெருஞ்சோறு உகுத்தற் கெறியுங்
கடுஞ்சின வேந்தே நின் தழங்கு குரன் முரசே.''

என்பது பதிற்றுப்பத்து. (3-ஆம் பத்து 30-ஆம் செய்யுள்) பல்யானைச் செல்கெழு குட்டுவனைப் பாலைக் கௌதமனார் பாடியது

''பெருஞ்சோறு பயந்த திருந்து வெற் றடக்கை
திருநிலை பெற்ற பெருநா ளிருக்கை
... ...
வலவைப் பார்ப்பான் பராசர னென்போன்
குலவு வேற் சேரன் கொடைத்திறங் கேட்டு
வண்டமிழ் மறையோற்கு வானுறை கொடுத்த
திண்டிறல் நெடுவேற் சேரலற் காண்கென''

என்பது சிலம்பு. (கட்டுரை காதை 55-64).

மேலும், சேரன் செங்குட்டுவன் பெருஞ்சோறு கொடுத்த செய்தியை யும் சிலப்பதிகாரம் கூறுகிறது.

''பின்றாச் சிறப்பிற் பெருஞ் சோற்று வஞ்சியும்''

என்றும் (சிலம்பு. 25-ஆம் காதை 143-ஆம் அடி.)

''வரும்படைத் தானை அமரர் வேட்டுக் கலித்த
பெரும்படை தலைவர்க்குப் பெருஞ்சோறு வகுத்து''

என்றும், (சிலம்பு. கால்கோட்காதை 48-49 அடி) வருவன காண்க. மேலும்,

''மறப்படைக் குதிரை மாறா மைந்தின்
துறக்கம் எய்திய தொய்யா நல்லிசை

முதியர்ப் பேணிய உதியஞ் சேரல்
பெருஞ்சோறு கொடுத்த ஞான்றை இரும்பல
கூளிச் சுற்றம் குழீஇ இருந்தாங்கு''.

என்பது அகநானூறு 233-ஆம் செய்யுள்; மாமூலனார் பாடியது. எனவே, பெருஞ்சோற்றுநிலை ஓர் அரசனுக்குச் சிறப்பாகக் கூறப்படுவது அன்று என்று கூறுவது தவறாகிறது.

2. ''மேலும், ஒரு வேந்தன் போருக்குச் செல்லும் தன் படைஞர்க்கு அளிக்கும் விருந்து, வணிக முறையில் கைம்மாறு கருதிச் செய்யுங் கடமையே யன்றி, வள்ளன்மை முறையில் வழங்கும் கொடையாகாது. போர்க்களத்தில் தன் வேந்தன் பொருட்டு உயிரைத் துறக்கத் துணியும் மறவனுக்கும், ஓர் உருண்டை சோறு கொடுத்தல்தானா பெரிது!'' என்று எழுதுகிறார் தேவநேயர்.

தன் அரசனுடைய வெற்றிக்காகத் தன் உயிரையுங் கொடுத்துச் செஞ்சோற்றுக் கடனைத் தீர்க்கத் துணிந்த போர் வீரனுடைய தியாகத்தின் பெருமையை உணர்ந்த அரசன், வாழ்க்கையில் மிக உயர்ந்த நிலையில் இருக்கும் தான், வீரனுடைய (சாதாரண வாழ்க்கை) நிலைக்கு இரங்கி வந்து, அவனுடன் சரிசமானமாக ஒருங்கிருந்து தன் கையினால் அவனுக்கு உணவைக் கொடுத்துத் தானும் அமர்ந்துண்ணும் ''பெருஞ்சோற்று நிலை'' இருதரப்பிலும் பெருமிதத்துக்குரியது. பெருஞ்சோறு என்றால் வயிறு நிறைய உண்டு பசிபோக்குவது அல்ல. பெருதற்கரிய, பெருமை தருகிற சோறு. அதனால்தான் இது பெருஞ்சோறு என்று பெயர்பெற்றது. ஓர் உருண்டை சோறா அது! பண்டைத் தமிழரசரும் போர் வீரரும் பெருமைக் குரியதாகக் கருதிப் போற்றியபடியினாலேதான், பழந்தமிழர் மரபைக்கூறிய தொல்காப்பியனார் தமது தொல்காப்பியச் சூத்திரத்தில் பெருஞ்சோற்று நிலையை விதந்தோதினார். வயிற்றுப் பசியைத் தீர்க்கும் ஓர் உருண்டை சோறு என்றால், அதனைத் தொல்காப்பியரும் பண்டைத் தமிழரும் போற்றிப் புகழவேண்டியதில்லையே. சாதாரண சோற்றுருண்டையாக இருந்தால், அதனைப் புலவர்கள் சிறப்பித்துப் பாடியிருக்கமாட்டார்கள். மேலே காட்டப்பட்ட மேற்கோள்களில் அரசர்கள் அளித்த பெருஞ்சோற்றைப் புலவர்கள் புகழ்ந்திருப்பதைக் காண்கிறோம் எனவே பாரதப் போரில் படைஞருக்குக் கொடுத்த சோறு தான் பெருஞ்சோறு என்றும், மற்றப் போர் வீரர்களுக்கு அரசர் கொடுத்த சோறு ஒருருண்டைச் சோறு என்றும் கருதுவது சரியல்ல. நிற்க.

3. ராயர், வானவரம்பன், இமயவரம்பன் என்பனபற்றியும் தேவநேயர் தமது கருத்தைக் கூறியுள்ளார். அவையும் ஏற்கத் தகுந்தனவல்ல. இதுபற்றித் தனியே வேறு கட்டுரை எழுதியிருக்கிறேன். இனி, உதியன் சேரலாதன் பெருஞ்சோறு அளித்தது தன்னுடைய படைஞருக்கா, அல்லது பாரதப் போர் செய்த படைஞருக்கா என்பதை ஆராய்வோம்.

பாரதப் போரில் சேரன் ஒருவன் சோறு கொடுத்ததைக் கூறுவதாகக் கருதப்படுகிற செய்யுள்கள் இரண்டு உள்ளன. அவை புறநானூற்றிலும் சிலப்பதிகாரத்திலும் வந்துள்ளவை. இச்செய்யுள்கள் பாரதப் போரை வெளிப்படையாகச் சொல்லவில்லை. ஐவர், ஈரைம்பதின்மர் செய்த போர் என்று மட்டும் சொல்கின்றன. ஐவர் என்பது பாண்டவரையும், ஈரைம் பதின்மர் என்பது கௌரவர் நூற்றுவரையும் குறிக்கின்றன என்று பொருள் கொண்டு, இது பாரதப்போரைக் குறிக்கின்றது என்று பொதுவாகக் கருதுவர். அச்செய்யுள்கள் இவை.

''வான வரம்பனை நீயோ பெரும!
அலங்குளைப் புரவி ஐவரொடு சினைஇ
நிலந்தலைக் கொண்ட பொலம் பூந் தும்பை
ஈரைம் பதின்மரும் பொருதுகளத் தொழியப்
பெருஞ்சோற்று மிகுபதம் வரையாது கொடுத்தோய்!''

இது புறநானூறு 2-ஆம் செய்யுள்.

''ஓரைவர் ஈரைம் பதின்ம ருடன் றெழுந்த
போரிற் பெருஞ்சோறு போற்றாது தானளித்த
சேரன் பொறையன் மலையன் றிறம்பாடிக்
கார்செய் குழலாட வாடாமோ வூசல்
கடம் பெறிந்த வாபாடி! யாடாமோ வூசல்!!''

இச்செய்யுள் சிலம்பு, வாழ்த்துக் காதை, ஊசல் வரியில் உள்ளது.

பாண்டவருடன் கௌரவர் செய்த பாரதப் போரில் இருதரத்துப் படையினருக்கும் உதியன் சேரலாதன் என்னும் சேரன் பெருஞ்சோறு அளித்தான் என்று இச்செய்யுள்களுக்குப் பொருள் கொள்ளப்படுகிறது. புறநானூற்றுப் பழைய உரையாசிரியர் இவ்வாறு தெளிவாக உரை எழுதி யுள்ளார். பொதுவாகப் படித்தவரும் படியாதவரும் பாண்டவர் ஐவர் கௌரவர் நூற்றுவர் என்று அறிந்திருப்பதனாலே, இச்செய்யுளில் கூறப் படுகிற ஐவர், ஈரைம்பதின்மர் என்பன பாண்டவர் கௌரவர் என்றும்

அவர்கள் செய்த பாரதப் போரில் உதியன் சேரலாதன் போர்வீரர்களுக்குச் சோறு கொடுத்தான் என்றும் கருதுவது இயல்பே. பாண்டவரைத் தவிர வேறு ஐவர் இலரோ என்றும், கௌரவரைத் தவிர வேறு நூற்றுவர் இலரோ என்றும் சிந்திக்கமாட்டார். மறை (வேதம்) என்பது சில இருந்தாலும், ஆரிய மறையையே பலரும் கருதுவதுபோல்வதோர் செய்தியாகும். இது இச் செய்யுளைப் பாடியோர் பாரதப் போர் என்றோ பாண்டவர் கௌரவர் என்றோ ஒரு சொல்லைக் கூறியிருப்பின் ஐயத்திற்கு இடமில்லை. சாதாரண மாக மக்கள் எல்லோரும் இச்செய்யுள்கள் பாரதப் போரைத்தான் குறிக் கின்றன என்று நம்புவார்கள், நம்புகிறார்கள். ஆனால், ஆராய்ச்சியாளர் இக்கருத்தை ஏற்றுக்கொள்வதற்குச் சில தடைகள் உள்ளன.

அகநானூற்றில் 233-ஆம் செய்யுளில் மாமூலனார் என்னும் புலவர் உதியன் சேரல் என்னும் சேரன் பெருஞ்சோறு கொடுத்த செய்தியைக் கூறுகிறார். புறநானூற்று இரண்டாம் செய்யுளில் கூறப்படுகிற உதியன் சேரலும், மாமூலனார் கூறுகிற உதியன் சேரலும் ஒரே பெயருடையவர் என் பதைக் கவனியுங்கள். இருவரும் பெருஞ்சோறு கொடுத்தனர் என்பதையும் கவனியுங்கள். மாமூலனார் கூறுகிற செய்தி இது.

"மறப்படைக் குதிரை மாறா மைந்தின்
துறக்கம் எய்திய தொய்யா நல்லிசை
முதியர்ப் பேணிய உதியஞ் சேரல்
பெருஞ்சோறு கொடுத்த ஞான்றை இரும்பல
கூளிச் சுற்றம் குழீஇஇருந் தாங்கு"

என்பது. மாமூலனார் தமது வேறு செய்யுள்களில் சரித்திரச் செய்திகள் பலவற்றைத் தெளிவாகக் கூறுகிறார். ஆனால் இச்செய்யுளில் பாரதப் போரைப் பற்றி ஒன்றுமே சொல்லவில்லை. ஐவர், ஈரைம்பதின்மர் என்றுகூடச் சொல்லவில்லை. பெருஞ்சோறு கொடுத்த உதியஞ்சேரல், புகழ்பெற்ற பாரதப் போரில் சோறு கொடுத்தான் என்றால் அந்தச் சிறப்பான செய்தியை வெளிப்படையாகக் கூறியிருப்பார் அல்லவா? அப்படிக் கூறாமையினாலே இவன் கொடுத்த பெருஞ்சோறு வேறு படையினருக்கு என்பது தெரிகிறதல்லவா?

சோழ நாட்டிலிருந்த பராசரன் என்னும் பார்ப்பான் சேர நாடு சென்று, சேரனிடம் பரிசு பெற்றுப் பாண்டி நாட்டுத் தங்கால் என்னும் ஊருக்கு வந்தான் என்று சிலப்பதிகாரம் கூறுகிறது. இச்செய்தியைக் கூறுகிற சிலப் பதிகாரம் பெருஞ்சோறு கொடுத்த கோன் ஒருவனைக் கூறுகிறது.

"பெருஞ்சோறு பயந்த திருந்துவேற் றடக்கை
திருநிலை பெற்ற பெருநா ளிருக்கை
... ...
வண்டமிழ் மறையோற்கு வானுறை கொடுத்த
திண்டிறல் நெடுவேல் சேரலற் காண்கெனக்
காடு நாடு மூரும் போகி
நீடுநிலை மலையம் பிறபடச் சென்றாங்கு"

(சிலம்பு. கட்டுரை 55-66)

இதில் ஒரு சேர அரசன் பெருஞ்சோறு கொடுத்தது கூறப்படுகிறது. இதற்கு உரை எழுதிய அரும்பதவுரையாசிரியர், "பெருஞ்சோறு பயந்த - பாண்டவர்கள் படைக்கும் துரியோதனன் படைக்கும் சேரன் சோறிட்டதனை" என்று எழுதியுள்ளார். அப்படியானால் இவன் பாரதப் போரில் சோறு கொடுத்த உதியன் சேரல் ஆகவேண்டும். இவனிடம் சென்று பரிசு பெற்ற பிறகு பராசரனும் பாரத காலத்தில் இருந்தவன் ஆதல் வேண்டும். இவன் பரிசுபெற்ற பிறகு சேரர்களை வாயார வாழ்த்துகிறான். அவ்வாறு வாழ்த்தும் போது கடைச் சங்க காலத்தில் இருந்த சேர அரசர்களை வாழ்த்துகிறான்.

"விளைந்து முதிர் கொற்றத்து விறலோன் வாழி
கடற்கடம் பெறிந்த கரிவலன் வாழி.
விடர்ச் சீலை பொறித்த வேந்தன் வாழி.
பூந்தண் பொருநைப் பொறையன் வாழி.
மாந்தரஞ் சேரல் மன்னவன் வாழ்கென"

(சிலம்பு. கட்டுரை 80-84)

அரும்பத உரையாசிரியர் கூறுவது சரியாயிருக்குமானால், பாரதப் போரில் சோறு கொடுத்த சேரனிடம் பரிசு பெற்ற பராசரன், பாரத காலத்துக்குப் பிறகு (1500 ஆண்டுக்குப் பின்னர்) இருந்த சேர அரசர்களை எப்படி வாழ்த்தமுடியும்? பராசரன் கடைச் சங்க காலத்தில் இருந்தான் என்றால், "பாண்டவர் படைக்கும் துரியோதனன் படைக்கும் சேரன் சோறிட்டதைக் குறிக்கிறதென்று அரும்பதவுரையாசிரியர் கூறியது தவறாகிறது. பெருஞ்சோறு என்றால் பாரதப்போரில் சேரன் கொடுத்த சோறுதான் என்று கருதிக்கொண்டு உரை எழுதினார் அரும்பத உரையாசிரியர். ஆனால் வரலாற்றுடன் பொருத்திப் பார்க்கும்போது முன்னுக்குப் பின் முரண்படுகிறது. அன்றியும் வேறு சில வினாக்கள் எழுகின்றன.

1. இரண்டு அரசர் போர் செய்தால், ஒருவர் பக்கத்தில் சேர்ந்து போர் செய்யவேண்டுவது முறை. அதனை விட்டு இரண்டு தரத்தாருக்கும் சோறு இட்டான் என்பது உலகத்திலே எங்கும் எப்பொழுதும் நிகழாத ஒன்று.

2. ஒரு பக்கத்திலும் சேரமுடியாதபடி நெருங்கிய உறவு முறையுடைய வனாக இருந்தபடியால் இருதரத்திலும் சேராமல், இருவருக்கும் சோறு அளித்தான் என்றால், சேரன் பாண்டவர் கௌரவர்களுக்கு எந்த முறையில் உறவினன்? தாயாதி, பங்காளி உறவா? இதற்குச் சான்று ஏதேனும் உண்டா?

3. பாரதப் போரில் சேரன் சோறு அளித்தது உண்மையானால், இந்தச் சிறப்பான செய்தியைப் பாரதம் ஏன் கூறவில்லை. பாண்டியனுடைய மகள் அல்லி (சித்திராங்கதை)யை அருச்சுனன் மணந்தான் என்னும் கதைகளை யெல்லாம் கூறுகிற பாரதம் இருபடைக்கும் பெருஞ்சோறு கொடுத்த செய்தியை ஏன் கூறவில்லை? இது மிக முக்கியமான செய்தியல்லவா?

4. தங்கள் சேனைக்குச் சோறு கொடுக்கக்கூட இயலாத அவ்வளவு வறியவர்களா பாண்டவரும் கௌரவர்களும்?

5. இருதரத்தார் போர் செய்யும்போது இரண்டு படைக்கும் சோறு அளித்த செய்தி உலகத்தில் யாண்டும் கேட்டதும் இல்லை; கண்டதும் இல்லை.

6. வள்ளன்மைக்காக இருதரத்துப் படையினருக்கும் சோறு வழங் கினான் என்றால், வறியவருக்கு வழங்குவதே வள்ளன்மையாகும். பாண்டவரும் துரியோதனாதியரும் அரசர்கள். வறியவர்கள் அல்லர். ஆகவே, வள்ளன்மைப் பொருட்டு இவர்களுக்குச் சோறு வழங்கினான் என்பது பொருந்தாது.

7. கி.மு. 1500-ல் நிகழ்ந்ததாகக் கருதப்படுகிற பாரதப்போரில் சேரன் சோறு கொடுத்தான் என்னும் செய்தியைக் கூறும் ஒரு செய்யுள் கிடைத் திருக்கிறது என்றால், அக்காலத்தில் இருந்து கடைச்சங்க காலம் வரையில் உள்ள வேறு செய்திகளைப் பற்றிய செய்யுள்கள் எங்கே? இடைப்பட்ட காலத்தில் எத்தனையோ சரித்திர நிகழ்ச்சிகள் நடந்திருக்கக் கூடும் அல்லவா? அவற்றைப் பற்றிய செய்யுள்களும் இருக்கவேண்டும் அல்லவா? அவை யெல்லாம் எங்கே? அவையெல்லாம் கிடைக்காதபோது இந்த ஒரு செய்யுள் மட்டும் 3500 ஆண்டுகளாக அழியாமல் இருக்கிறது என்று எப்படி நம்புவது?

இவற்றுக்கெல்லாம் விடை என்ன? இத்தனை முரண்பாடுகள் உள்ள இச்செய்தியை, பெருமைபடத் தக்கது என்னும் காரணம்பற்றி மற்றவர் ஏற்றுக்கொண்டாலும், வரலாற்று ஆராய்ச்சியாளர் எவ்வாறு ஏற்றுக்கொள்ள முடியும்? எனவேதான், இச்செய்யுள்களில் கூறப்படும் ஐவர், ஈரைம்பதின்மர் என்பதற்கு வேறுபொருள் இருக்கவேண்டும் என்றும், அது பாண்டியர் சேரர் போரைப் பற்றியதாக இருக்கக்கூடும் என்றும் எனது கட்டுரையில் குறிப்பிட்டிருந்தேன். நண்பர் தேவநேயப் பாவாணர் ''சேரலாதன் பெருஞ் சோறு வழங்கியது பாரதப் படைகட்கே'' என்று இன்னும் நம்புவாரானால், அவருடைய நம்பிக்கையைத் தடுக்க எனக்கு உரிமையில்லை, தடுக்கவும் இல்லை. நான் அவருடைய கருத்தை ஏற்கவேண்டுமானால், மேலே காட்டிய முரண்பாடுகள் எல்லாவற்றிற்கும் சான்றுகளுடன் விடையிறுப்பாரானால், அக்கருத்தை ஏற்றுக்கொள்ள ஆயத்தமாயிருக்கிறேன்.

சுருக்கிச் சுருக்கி எழுதியும் இக்கட்டுரை விரிவடைந்து விட்டது. ஆகலின், மேலே கூறியதுபோல, பாவாணர் அவர்கள் தமது கட்டுரையில் கூறியுள்ள ஏனையவற்றிற்குத் தனியே வேறு கட்டுரை எழுதியுள்ளேன்; அதில் அவற்றைக் காண்க.

தமிழ்ப்பொழில்-துணர் 36, மலர் 9, 1960 - 61

18. சேரலாதன் அளித்த பெருஞ்சோறு- *III*

''தமிழ்ப் பொழில்'' 36-ஆம் துணர், 4- ஆம் மலரில், ''சேரலாதன் அளித்த பெருஞ்சோறு'' என்னும் கட்டுரை ஒன்று எழுதியிருந்தேன். அதில், உதியன் சேரலாதன் பெருஞ்சோறு அளித்தது பாரதப்போரில் அல்ல என்றும், பஞ்சவராகிய ஐந்து பாண்டியருடன் போருக்குச் சென்ற அவன், தன் சொந்தப் படையினருக்குப் பெருஞ்சோறு அளித்ததை அச்செய்தி குறிக்கிறது என்றும் எழுதியிருந்தேன். அக்கருத்தை மறுத்துத் திரு. ஞா. தேவநேயர் அவர்கள், ''சேரலாதன் பெருஞ்சோறு வழங்கியது பாரதப் படைக்கே'' என்னும் தலைப்புடன் ஒரு கட்டுரையைத் தமிழ்ப் பொழிலில் (துணர் 36, மலர் 7-இல்) எழுதியிருந்தார்கள். தேவநேயர் கட்டுரைக்கு விடையாக நான் எழுதிய, ''சேரலாதன் அளித்த பெருஞ்சோறு II .'' என்னும் கட்டுரையை வாசகர்கள் தமிழ்ப் பொழிலில் படித்திருப்பார்கள். அக்கட்டுரையில் கூறப்படாத மற்றச் செய்தியை வேறு கட்டுரையில் எழுதுவதாக அதில் குறிப்பிட்டிருந்தேன். அவற்றை இக்கட்டுரையில் எழுதுகிறேன்.

''ராயர்''

புறநானூற்று 2-ஆம் செய்யுளைப் பாடிய புலவர் பெயர் முரஞ்சியூர் முடிநாகராயர் என்றிருப்பது தவறானதென்றும், அப்பெயர் முடிநாகரியார் என்றிருக்கக்கூடும் என்றும், சங்க காலத்தில் ராயர் என்னும் பட்டப்பெயர் அல்லது சாதிப்பெயர் வழங்கவில்லை என்றும் எனது முதல் கட்டுரையில் எழுதியிருந்தேன். அதனை மறுத்து திரு. ஞா. தேவநேயர் இவ்வாறு எழுதியுள்ளார்:-

''ராயர் என்னும் பெயர் கடைச்சங்கத்திற்கும் முந்தி வழங்கியதென்பதற்குத் தொல்காப்பியமே சான்றாகும். தொல்காப்பியர் காலம் கி.மு. 7-ஆம் நூற்றாண்டிற்குப் பிற்பட்டதாகாது. ஓர் ஆள்வினைத்துறைத் தலைவன் அரசனாற் பெறுஞ்சிறப்பு மாராயம் எனப்பட்டது. 'மாராயம் பெற்ற நெடுமொழியானும்' என்பது தொல்காப்பியம். (பொருள் 63). மாராயமாவது மாராயன் என்று அரசனாற் பட்டம் பெறுகை. 'பஞ்சவ மாராயன் .... கொங்காள்வான்' என்று கல்வெட்டில் வருதல் காண்க. அரசனாற் சிறப்பெய்திய வெற்றி மறவரின் பெற்றிமை கூறும் புறத்துறையை மாராய வஞ்சி எனப் புறப்பொருள் வெண்பா மாலை கூறும்.''

இவ்வாறு எழுதி ராயன், ராயர் என்னும் சிறப்புப் பெயர் கடைச் சங்ககாலத்திலும் அதற்கு முற்பட்ட தொல்காப்பியர் காலத்திலும் அரசனால் மற்றவருக்கு வழங்கப்பட்டது என்று கூறுகிறார். அதற்குச் சான்றாகப் 'பஞ்சவ மாராயன்..... கொங்காள்வான்' என்னும் பெயரைச் சாசனத்திலிருந்து மேற்கோள் காட்டுகிறார். இந்தச் சான்று கடைச் சங்க காலத்துக்கு மிகமிகப் பிற்பட்ட காலத்துச்சான்று. மிகப்பிற்காலச் சான்றை மிக முற்காலத்துக்குச் சான்று காட்டுவது தவறு. அது ஏற்கத் தக்கதன்று.

மேலும், தேவநேயர் கூறுவதுபோல, ''மாராயன் என்று அரசனாற் பட்டம் பெறுகை'' சங்ககாலத்தில் இருந்ததில்லை. சங்க காலத்தில் தமிழ் அரசர் தமது அலுவலாளருக்கோ மற்றவர்க்கோ ராயன் என்றோ மாராயன் என்றோ பட்டம் வழங்கியது இல்லை. தொல்காப்பியம் கூறுகிற மாராயம் என்னும் சொல் பட்டப்பெயர் அல்ல. அரசன் பிறருக்கு வழங்குகிற ஏனைய பட்டப்பெயர்களுக்கும் பரிசாக அளிக்கிற நாடுகளுக்கும் ஊர்களுக்கும் பொதுப் பெயராக மாராயம் என்னும் சொல் வழங்கப்பட்டது. இதற்கு நச்சினார்க்கினியர் உரையே சான்று பகர்கிறது. மாராயம் என்பதற்கு நச்சினார்க்கினியர் கூறும் உரைவருமாறு:-

''மாராயம் பெற்ற நெடுமொழியானும்-வேந்தனாற் சிறப்பெய்திய அதனாற்றானேயாயினும் பிறரேயாயினும் கூறும் மீக்கூற்றுச் சொல்லும். சிறப்பாவன ஏனாதி, காவிதி முதலிய பட்டங்களும் நாடும் ஊரும் முதலியனவும் பெறுதலுமாம்''

இவ்வாறு உரையாசிரியர் கூறுகிறபடியினால், மாராயம் என்பது அரசனால் அளிக்கப்படும் சிறப்புப்பெயரோ பட்டப்பெயரோ அல்ல என்பதும், அரசன் அளிக்கும் வேறு பட்டங்களையும் சிறப்புக்களையும் பரிசு களையும் குறிக்கிற ஒரு பொதுப்பெயர் என்பதும் நன்கு விளங்குகின்றன. ''ஏனாதி காவிதி பட்டங்கள்'' என்று உரையாசிரியர் கூறுகிறபடியால், முதலிய என்பதில் மாராயம் என்னும் பட்டமும் அடங்காதோ என்றால் அடங்காது. முதலிய என்பது எட்டி போன்ற பட்டங்களைக் குறிக்குமே யல்லாது, மாராயம் என்பதைக் குறிக்காது. மாராயம் என்பது பட்டப்பெயர் அல்ல. நச்சினார்க்கினியர் கூறுவது போல, அரசனால் அளிக்கப்படும் பட்டப்பெயர் களுக்கும் மானியங்கள் முதலிய சிறப்புக்களுக்கும் வழங்குகிற பொதுப் பெயர். சங்க நூல்களிலே ஏனாதி, காவிதி, எட்டி போன்ற சிறப்புப்பெயர்கள் (பட்டப்பெயர்கள்) காணப்படுகின்றனவேயன்றி, மாராயன் என்னும் பட்டப்பெயரை இதுவரையில் நான் கண்டது இல்லை. சங்கநூல்களில் இப்பட்டப்பெயர் வந்திருப்பதைத் திரு. தேவநேயர் காட்டுவாரானால், நன்றியுள்ளவனாக இருப்பேன். மாராயன் என்னும் பெயர்கள், சங்க காலத்துக்கு மிகமிகப் பிற்பட்ட காலத்தில் வழங்கப்பட்டவை என்பது உண்மை. இந்தப் பிற்காலச் சிறப்புப் பெயரைச் சங்க காலத்துச் சிறப்புப் பெயரென்று கருதி மயங்குவது தவறு.

ஆகவே, தொல்காப்பியம் கூறுகிற மாராயம் என்னும் சொல், அரசன் பிறருக்கு வழங்குகிற பட்டப் பெயர் அல்ல என்பதும், அது அப்பட்டப் பெயர்களுக்கு வழங்கும் பொதுப் பெயர் என்பதும் தெளிவாகிறது. ஆகவே, தேவநேயர் கூறுகிறபடி ராயர் என்னும் சொல் பட்டப்பெயராகவோ சாதிப்பெயராகவோ கடைச் சங்க காலத்திலும் வழங்கவில்லை. அதற்கு முந்திய தொல்காப்பியர் காலத்திலும் வழங்கவில்லை. அதனால் முடிநாக ராயர் என்பதில் ராயர் என்னும் சொல் தவறாக ஏடெழுதுவோரால் எழுதப் பட்டிருக்கக் கூடும் என்றும், முடிநாகரியர் என்றிருக்கக் கூடும் என்பதில் தவறில்லை. இப்பொழுதும் அதனையே வற்புறுத்துகிறேன். நாகரியர் என்பதோ அல்லது வேறு சொல்லோ தவறாக நாகராயர் என்று ஏடெழுது வோரால் எழுதப்பட்டிருக்க வேண்டும் என்று தெரிகிறது. ஆனால், அச்சொல் நிச்சயமாக ராயர் என்று இருக்க முடியாது.

வானவரம்பன், இமயவரம்பன்

வானவரம்பன் இமயவரம்பன் என்பதற்கு வானத்தை எல்லையாக உடையவன் இமயமலையை எல்லையாக உடையவன் என்று பொருள் கூறப்படுகிறது என்றும் இவ்வாறு பொருள் கொள்வது பொருந்தாது என்றும் என்னுடைய முதல் கட்டுரையில் குறிப்பிட்டிருந்தேன். திரு. தேவநேயர் அவர்கள், இவ்வாறு பொருள் கொள்வதே சரியானது என்று கூறி அதற்குத் தமது கருத்தையும் எழுதியுள்ளார்கள். அவர் எழுதுவது:-

''வானவரம்பன் என்பது வானளாவும் மலையரசன் என்றும், இமயவரம்பன் என்பது பனிமலையை (இமயத்தை) எல்லையாகவுடைய நாட்டரசன் என்றும் பொருள் படுவதாகும். இவை சேரர் பெயர்கள். இவற்றுள் முன்னது எல்லார்க்கும் பொது: பின்னது ஒரு சிலர்க்கே சிறப்பு. நூறடி உயரமுள்ள மாடங்களும் இருநூறடி யுயரமுள்ள கோபுரங்களும், வான் றோய்வனவாகவும் வானத்தைத் துளைத்து மீச் சென்றனவாகவும் உயர்வு நவிற்சியாகக் கூறப்படும்போது, பத்தாயிரம் அடி உயர்ந்த குடமலை ஏன் வானவரம் பென்று மீக் கூறப்பட முடியாது?''

இவ்வாறு வானவரம்பன் என்றால் வானளாவும் மலைக்கு அரசன் அதாவது குடமலைக்கு அரசன் என்று தேவநேயர் பொருள் கூறுகிறார். அப்படியானால், மலைகளையுடைய எல்லா அரசரும் வானவரம்பன் என்று பெயர்பெற வேண்டும். சோழனும், பாண்டியனும், வேறு சிற்றரசர்களும், அவர்கள் நாட்டிலும் மலைகள் இருப்பதனாலே, அவர்களும் வானவரம்பன் என்று பெயர்பெறவேண்டும் அல்லவா? ஆனால், எல்லாத் தமிழ் அரசர்களும் வானவரம்பன் என்று பெயர் பெறுவது இல்லை. சேர அரசர்ளுக்கு மட்டுமே வானவரம்பன் என்னும் பெயர் வழங்கப்பட்டது. இது ஏன்? வானளாவும் மலையுடைய அரசர் யாவரேனும், தேவநேயர் கருத்துப் படி, மலையை எல்லையாகவுடையவராயிருந்தால், வானவரம்பர் என்று பெயர் பெறவேண்டும். அப்படியில்லாமல் சேர அரசர்களுக்கு மட்டுமே வானவரம்பன் என்று பெயர் கூறப்படுவது ஏன்? ஆகவே, தேவநேயர் கூறுகிறபடி உயர்வு நவிற்சியாகக் கூறப்படுவது அன்று வானவரம்பன் என்பது, இதற்குத் தகுந்த வேறு காரணம் இருக்கக்கூடும். அதனைப் பின்னர் ஆராய்வோம்.

தமிழ்ப்பொழில்-துணர் 37, மலர் 1, 1961

19. ஆரியப் படையும் யௌத்தெய கணமும்

சங்க நூல்களிலே ஆரியப் படை என்னும் பெயர் கூறப்படுகிறது. வட இந்தியாவிலிருந்து ஆரியர் படை தமிழ் நாட்டுக்கு வந்து போர் செய்ததைச் சங்க நூல்கள் கூறுகின்றன. ஆனால் அந்த ஆரியப் படை எந்த அரசனுடைய சேனை என்பது கூறப்படவில்லை. ஆரியப் படை, எந்த அரசனுடைய ஊழியத்திலும் இல்லாமல், சுயேச்சையாகவும் சுதந்தரமாகவும் இருந்து கொண்டு, போர்த் தொழிலைச் செய்துவந்த சேனைக் கூட்டம் என்று கருத வேண்டியிருக்கிறது. சங்க காலத்திலே வட இந்தியாவிலே யௌத்தெய கணம் என்னும் பெயருள்ள ஒரு சேனைக் கூட்டம் இருந்தது என்பதும் அந்தக் கூட்டத்தாரின் தொழில் யுத்தம் (போர்) செய்வது என்பதும், யுத்தம் செய்வதையே தங்கள் குலத்தொழிலாகக் கொண்டிருந்தபடியால் அவர்களுக்கு யௌத்தெய கணம் என்னும் பெயர் இருந்தது என்பதும் சரித்திர ஆராய்ச்சியினால் அறிகிறோம். அந்த யௌத்தெய கணத்தைத்தான் சங்க நூல்கள் ஆரியப் படை என்று கூறுகின்றன. இதுபற்றி இங்கு ஆராய்வோம்.

யௌத்தெய கணம் என்னும் யுத்தவீரர் கூட்டத்தைத்தான் ஆரியப் படை என்று சங்க நூல்கள் கூறுகின்றன என்பதை விளக்கிக் கூறுவோம். அவ்வாறு விளக்கிக் கூறுவதற்கு முன்பு ஆரியப் படையைப் பற்றிச் சங்க நூல்கள் கூறுவதைப் பார்ப்போம்.

சங்க இலக்கியத்தில் ஆரியப் படை

சோழநாட்டிலிருந்த வல்லம் என்னும் ஊர்க் கோட்டையின்மேல் ஆரியப் படை படையெடுத்துவந்து முற்றுகையிட்டபோது, சோழ அரசன் அந்த ஆரியப் படையுடன் போர்செய்து வென்று அதைத் துரத்தினான் என்று அகநானூறு 336-ஆம் செய்யுள் கூறுகிறது.

> **"வென்வேல்**
> **மாரியம்பின் மழைத்தோல் சோழர்**
> **வில்லீண்டு இறும்பின் வல்லத்துப் புறமிளை**
> **ஆரியர் படையின் உடைக."**

(அகம் 336: 19-22)

முள்ளூர் நாட்டின் தலைநகரமான முள்ளூர்க் கோட்டைமேல் இன்னொரு ஆரியப்படை வந்து முற்றுகையிட்டபோது அந்நாட்டு

மன்னனாகிய மலையமான் அந்தப் படையை வென்று ஓட்டினான் என்று நற்றிணை 170-ஆம் செய்யுள் கூறுகிறது.

> **'ஆரியர் துவன்றிய பேரிசை முள்ளூர்ப்**
> **பலருடன் கழித்த ஒள்வாள் மலையனது**
> **ஒருவேற்கு ஓடி யாங்கு'**

(நற்றிணை 170: 6-8)

செங்குட்டுவனுடைய தந்தையாகிய நெடுஞ்சேரலாதன் ஆரியரை வணங்கினான் என்று பதிற்றுப்பத்து இரண்டாம் பத்துப் பதிகங் கூறுகிறது.

> **"பேரிசை மரபின் ஆரியர் வணக்கி"**

என்பது அதன் வாசகம்.

இச்செய்தியையே அகநானூறு 396-ஆம் செய்யுளுங் கூறுகிறது!

> **"ஆரியர் அலறத் தாக்கிப் பேரிசைத்**
> **தொன்முதிர் வடவரை வணங்கு விற்பொறித்து"**

(அகம் 396: 16-17)

இங்குக் குறிக்கப்பட்ட ஆரியர் என்பது ஆரியப் படையாகும்; வென்ற அரசன் பெயரைக் கூறாமல் ஆரியர் என்று பொதுவாகக் கூறப் படுகிறதாதலின்.

ஆரியப் படையைச் சேர்ந்த ஆரியப் பொருநன் (மல்லன்) ஒருவன், வட ஆர்க்காடு மாவட்டத்தை அக்காலத்தில் அரசாண்டிருந்த பாணன் என்னும் வாண அரசனுடன் மற்போர் (குஸ்தி) செய்தான் என்றும், அந்த மற் போரில் வாணன் ஆரியப் பொருநனுடைய இரண்டு கைகளையுந் தன் னுடைய கைகளில் இறுகப் பிடித்துக் கொண்டான் என்றும், அப்பிடியிலிருந்து விடுவித்துக் கொள்ள ஆரியப் பொருநன் முயன்றபோது அவனுடைய கைகள் முறிந்து போயின என்றும், அதனைக் கண்ட ஆரியப் பொரு நனுடைய நண்பனான கணையன் என்பவன் நாணங் கொண்டு வெட்க மடைந்தான் என்றும் அகநானூறு 386-ஆம் செய்யுள் கூறுகிறது.

> **"பாணண்**
> **மல்ல டுமார்பின் வலியுற வருந்தி**
> **எதிர்தலைக் கொண்ட ஆரியப் பொருநன்**
> **நிறைத் திரள் முழவுத்தோள் கையகத் தொழிந்த**

திறன் வேறு கிடக்கை நோக்கி நற்போர்க்
கணையன் நாணி யாங்கு.''

(அகம் 386: 3-8)

பாண்டி நாட்டின் தலைநகரமான மதுரையின்மேல் ஒரு ஆரியப்படை வந்து போர் செய்தபோது பாண்டியன் நெடுஞ்செழியன் அப்படையுடன் போர் செய்து வென்றான் என்றும் அதனால் அப்பாண்டியன் ஆரியப்படை கடந்த நெடுஞ்செழியன் என்று பெயர் பெற்றான் என்றும் சங்க நூல்களினால் அறிகிறோம். (இப்பாண்டியனுக்கு அரசுகட்டிலில் (சிம்மாசனத்தில்) துஞ்சிய நெடுஞ்செழியன் என்னும் பெயரும் உண்டு.)

''வடவாரியர் படை கடந்து
தென்றமிழ் நாடொருங்கு காணப்
புரைதீர் கற்பிற் றேவி தன்னுடன்
அரைசு கட்டிலில் துஞ்சிய பாண்டியன்
நெடுஞ்செழியன்''

என்று சிலப்பதிகாரம் மதுரைக் காண்டம் கட்டுரை இப்பாண்டியனைக் கூறுகிறது.

புறநானூறு 183 ஆம் செய்யுளின் அடிக்குறிப்பும் இவ்வரசனை, ஆரியப் படைகடந்த நெடுஞ்செழியன் என்று கூறுகின்றது.

இவ்வாறு சங்கச் செய்யுள்கள், ஆரியப்படை தமிழ் நாட்டுக்கு வந்து போர் செய்ததைக் கூறுகின்றன. வட நாட்டிலிருந்து தமிழ் நாட்டின்மேல் யாரேனும் அரசர் படையெடுத்து வந்திருந்தால் அவ்வரசன் பெயரைக் குறிப்பிட்டு இன்ன அரசன் படையெடுத்து வந்தான் என்று கூறுவது வழக்கம். அப்படி அரசன் பெயரைக் கூறாமல் ஆரியப்படை என்று சேனையின் பெயர் மட்டுங் கூறப்படுகிறபடியால், இந்த ஆரியப்படை எந்த அரசனையும் சேராமல் சுதந்திரமாக இருந்த சேனை என்பது தெரிகின்றது.

சங்ககாலத்திலே, வட இந்தியாவிலே எந்த அரசனுக்குங் கட்டுப் படாமல் சுதந்தரமாக ஒரு கூட்டத்தார் இருந்தார்கள் என்றும் அவர்கள் யுத்தம் (போர்) செய்வதையே தங்கள் குலத்தொழிலாகக் கொண்டிருந்தார்கள் என்றும் அவர்களுக்கு யௌத்தெய கணம் (யுத்தம் செய்கிற கூட்டம்) என்பது பெயர் என்றும் அந்த யௌத்தெயகணத்தைச் சங்க செய்யுள்கள் ஆரியப்

படை என்று பெயர் கூறின என்றும் முன்னமே கூறினோம். யௌத்தெய கணத்தைப் பற்றிய வரலாற்றை இனி ஆராய்வோம்.

எந்த அரசனுடைய ஊழியத்திலும் அமராமல் சுதந்தரமாக வாழ்ந்து வந்த போர்வீரர் கூட்டம் அக்காலத்தில் வடஇந்தியாவில் இருந்தது. இதற்கு இலக்கியச் சான்றும் சாசன எழுத்துச் சான்றும் பழங்காசுச்(நியூமிஸ் மேட்டிக்ஸ்)சான்றும் கிடைத்துள்ளன. அந்தப் போர்வீரர் கூட்டத்துக்கு யௌத் தெய கணம் என்னும் பெயர் வழங்கிவந்தது. யௌத்தெய கணத்தாராகிய போர் வீரர்களுக்கு அரசன் கிடையாது. ஆனால், அவர்கள் தங்களுக்கு ஒரு தலைவனை ஏற்படுத்திக் கொண்டிருந்தார்கள். அவர்கள், ஒருவிதக் குடியாட்சியை அமைத்துக்கொண்டு தங்களுக்கென செப்புக் காசுகளையும் வெள்ளிக் காசுகளையும் வெளியிட்டு வழங்கினார்கள். அவர்கள் வழங்கிவந்த காசுகள் சமீபகாலத்தில் பூமியிலிருந்து அகழ்ந்தெடுக்கப் பட்டுள்ளன. அந்தப் பழங்காசுகளிலே பிராமி எழுத்தினால் எழுதப்பட்ட யௌத்தெய கணஸ்ய ஜய என்னும் வாசகம் எழுதப்பட்டிருக்கிறது. யௌத் தெய கணஜய என்றால் யௌத்தெய கணத்துக்கு வெற்றி என்பது பொருள். அந்தக் காசுகளில் பிராமி எழுத்து பொறிக்கப்பட்டிருக்கிறதனாலேயே அவை மிகப் பழங்காலத்துக் காசுகள் என்பது தெரிகின்றது.

(யௌத்தெய கணத்தாரின் பழங்காசுகளிலே எழுதப்பட்டுள்ள பிராமி எழுத்துக்கள். 'யௌதெய கணஸ்ய ஜய' என்பது இதன் வாசகம்)

யௌத்தெய கணத்தாரின் பெயர் பாணினியின் அஷ்டாத்யாயி என்னும் இலக்கண நூலிலும் காணப்படுகிறது.

இப்பெயர் வடமொழி மகாபாரதத்தில் கூறப்படுகிறது. இந்த யௌத் தெயரும் அர்ச்சுனீயர் முதலிய குழுவினரும் ஆயுதஜீவி க்ஷத்திரியர் என்று கூறப்படுகின்றனர். ஆயுதஜீவி க்ஷத்திரியர் என்றால் ஆயுதங்களினால் போர் செய்து வாழ்க்கையை நடத்துகிறவர்கள் என்பது பொருள். இவர்கள் கி.மு. மூன்றாம் நூற்றாண்டிலிருந்து கி.பி. மூன்றாம் நூற்றாண்டு வரையில் சிறப் பாக வாழ்ந்து வந்தனர் என்பது இவர்கள் அந்த நூற்றாண்டுகளில் தங்கள் பெயரினால் வழங்கி வந்த காசுகளிலிருந்து தெரிகின்றது.

ஆயுத ஜீவி க்ஷத்திரியர்களான யௌத்தெய கணத்தார் ஆதி காலத்தில் கிழக்கு பஞ்சாபு நாட்டில் வசித்து வந்தார்கள். பிற்காலத்தில் இவர்கள் தெற்கே உத்திரப்பிரதேசத்திலும் இராஜபுதனத்திலும் மேற்கு இந்தியாவிலும் பரவி

இருந்தார்கள். இவர்கள் மூன்று பிரிவினராகப் பிரிந்து இருந்தனர். இவர்களுடைய சந்ததியார் இக்காலத்திலும் வாழ்ந்து வருகின்றனர். இராஜபுதனத்தில் சத்லஜ் நதிக்கரையில் உள்ள ஜோஹிய பார் என்னும் இடத்திலே இவர்கள் ஜோஹிய ராஜபுத்திரர் என்னும் பெயர்கொண்டு வாழ்ந்து வருகிறார்கள். இவர்களும் மூன்று பிரிவினராகக் காணப்படுகின்றனர்.

பண்டைக் காலத்தில் இந்த ஆயுத ஜீவி க்ஷத்திரியர்களான யௌத்தெய கணத்தார் சில காலங்களில் சிறப்பாகவும் சில காலங்களில் சிறப்புக் குன்றியும் இருந்தார்கள். உயர்வும் தாழ்வும் வாழ்க்கையில் உள்ளதுதானே.

கி.பி. இரண்டாம் நூற்றாண்டில் மேற்கு இந்தியாவையரசாண்ட சாக அரசனாகிய ருத்திரத்தாமன் என்னும் அரசன் யௌத்தெய கணத்தை வென்று அடக்கினான் என்று அவ்வரசன் கி.பி. 150-இல் எழுதி வைத்துள்ள ஜூனாகர் சாசனம் கூறுகிறது. கி.பி. மூன்றாம் நூற்றாண்டில் குப்த அரசர் யௌத்தெய கணத்தை வென்று அடக்கினர் என்று குப்த அரசர் சாசன எழுத்து கூறுகிறது.

இதுகாறும் கூறியவற்றால் யௌத்தெய கணம் என்னும் பெயருள்ள போர்வீரர் கூட்டம் ஒன்று இருந்தது என்றும் அந்தக் கூட்டம் எந்த அரசருக்கும் அடங்காமல் சுதந்தரமாக வாழ்ந்து வந்தது என்றும் இலக்கியச் சான்று கல்வெட்டு எழுத்துச் சான்று பழங்காசுச் சான்றுகளினால் அறிந்தோம்.

ஆரியப்படையும் யௌத்தெயரும்

ஆயுத ஜீவி க்ஷத்திரியர்களாகிய யௌத்தெய கணத்தாரைச் சங்கச் செய்யுட்கள் ஆரியப்படை என்னும் பெயர்கொடுத்துக் கூறுகிறது. யௌத்தெயராகிய ஆரியப்படை அடிக்கடி தமிழகத்தின்மேல் படையெடுத்துவந்து போர் செய்தது என்பது சங்கச்செய்யுள்களினால் அறிகிறோம். வடநாட்டிலிருந்து வந்த அரசன் பெயரைக் கூறாமல் போர்வீரர் கூட்டத்தைமட்டும் கூறுகிறபடியால், சங்கச் செய்யுள்கள் கூறுகிற ஆரியப்படை என்பது ஆயுத ஜீவி க்ஷத்திரியராகிய யௌத்தெயகணம்தான் என்று துணிந்து கூறலாம். ஆரிய அரசன் பிரகத்தன் என்று ஒரு அரசன் சங்க இலக்கியத்தில் கூறப்படுகிறான். அவ்வாறு ஆரிய அரசன் பெயரைக் கூறாமல் ஆரியப்படையின் பெயரைமட்டும் கூறுகிறபடியால் ஆரியப்படை என்பது யௌத்தெய கணத்தைத்தான் என்பது நன்கு தெரிகின்றது.

பிற்காலத்திலே தமிழ்நாட்டின்மேல் படையெடுத்துவந்த களபரர் பல்லவர், சாளுக்கியர், குப்தர் முதலிய அரச பரம்பரையினர் பெயரைச்

சரித்திரத்தில் படிக்கிறோம். சங்க காலத்தில் ஆரிய அரசர்கள் தமிழகத்தின்மேல் படையெடுத்து வந்திருந்தால் அவ்வரசர்களின் பெயரைச் சங்கச் செய்யுள் கூறியிருக்கும். அப்படி அரசர் பெயரைக் கூறாமல் போர்வீரர் கூட்டத்தின் பெயரைக் கூறுகிறபடியால் சங்கச் செய்யுள்கள் கூறுகிற ஆரியப்படை என்பது ஆயுதஜீவி க்ஷத்திரியராகிய யௌத்தெயகணத்தார் என்பது நன்கு விளங்குகிறது. எனவே ஆரியப்படையும் யௌத்தெய கணமும் ஒன்றே என்று துணிந்து கூறலாம்.

ஒரு சரித்திர ஆசிரியர், ஆரியப்படை என்பது பல்லவ அரசருடைய சேனை என்று எழுதியிருக்கிறார். ஆரியப்படையொன்று மலையமானுடைய முள்ளூரின்மேல் படையெடுத்துவந்த செய்தியை நற்றிணை 170 ஆம் செய்யுள் கூறுவதை முன்னமே காட்டினோம். இந்த ஆரியப்படை பல்லவ அரசருடைய சேனையாக இருக்கக்கூடும் என்று திரு. பி.டி. ஸ்ரீநிவாச அய்யங்கார் யூகிக்கிறார். அவர் தாம் எழுதிய தமிழர் சரித்திரம் என்னும் ஆங்கில நூலில் 509 ஆம் பக்கத்தில் இவ்வாறு எழுதுகிறார்: முள்ளூர் மன்னனுக்குத் தோற்றுப்போன ஆரியப்படை பல்லவ அரசனுடைய சேனையாக இருக்கக்கூடும் என்றும் பல்லவ அரசன் கி.பி 6 ஆம் நூற்றாண்டில் களபர அரசனை வென்ற பிறகு தன்னுடைய இராச்சியத்தை விரிவு படுத்த எண்ணித் தன்னுடைய சேனையை முள்ளூரின்மேல் போர் செய்ய அனுப்பியிருக்கக் கூடும் என்றும் அய்யங்கார் எழுதுகிறார்.*

இவர் கூறுவது ஏற்றுக்கொள்ளத்தக்கதன்று. ஏனென்றால், சங்க காலத்தில் (கி.பி. 2 ஆம் நூற்றாண்டில்) பல்லவர் ஆட்சி தமிழ்நாட்டில் ஏற்படவில்லை. சங்கச் செய்யுள்களில் பல்லவரைப்பற்றி ஓரிடத்திலாவது கூறப்படவில்லை. மேலும், பல்லவ அரசன் முள்ளூரின்மேல் படையெடுத்துச் சென்றிருந்தால் அது தெளிவாகப் பல்லவர் சேனை என்று கூறப்பட்டிருக்கும். அப்படிக்கூறாமல் ஆரியப்படை வந்தது என்று கூறியிருப்பதனால் அது பல்லவர் சேனை என்று கூறமுடியாது. பல்லவ அரசர் 'ஆரியப்படை' என்னும் பெயருள்ள படையை வைத்திருந்ததாக எந்தக் கல்வெட்டுச் சாசனத்திலும் காணப்படவில்லை. பல்லவ அரசர் ஆரியப்படை என்னும் பெயருள்ள சேனையை வைத்திருக்கவில்லை. எனவே ஸ்ரீநிவாச அய்யங்கார் யூகிக்கிற யூகம் தவறாகும்.

---

* *The History of the Tamils (p. 509) P. T. Srinivasa Iyengar.*

ஆரியப்படை என்று சங்க இலக்கியங்கள் கூறுவது அக்காலத்தில் வட இந்தியாவில் இருந்த பேர்போன யௌத்தெயகணம் என்னும் கூட்டத்தையே குறிக்கிறது என்பதில் சற்றும் ஐயமில்லை.

முருகனும் கார்த்திகேயனும்

இதுகாறும், ஆரியப்படையும் யௌத்தெயகணமும் ஒன்றே என்பதையும், ஆரியப்படையினராகிய யௌத்தெயகணத்தார் சங்க காலத்தில் அடிக்கடி தமிழ்நாட்டின்மேல் படையெடுத்து வந்தனர் என்பதையும் கூறினோம். வாணிகம், சமயம், அரசியல், போர் முதலிய காரணங்களினால் அடிக்கடி இரு வேறு சமூகத்தாருக்கு தொடர்பு அடிக்கடி ஏற்படுமானால், அவ்விரு சமூகங்களின் நாகரிகம் பண்பாடு கலை முதலியவைகளில் ஏதேனும் சில இருசாராரிடமும் புகுந்துவிடுவது வழக்கம். இதன்படி ஆரியப்படையினரின் பண்பாடு ஏதேனும் தமிழரிடம் புகுந்ததா என்பதை ஆராய்வோம்.

தமிழரிடமிருந்து யௌத்தெய ஆரியப்படையினர் எதைக் கற்றுக் கொண்டார்கள் என்பதை ஆராய்வதற்குச் சான்றுகள் ஒன்றும் இல்லை. ஆனால், யௌத்தெயரிடமிருந்து தமிழர் சமயத்துறையில் கார்த்திகேயன் (சுப்பிரமணியன்) வணக்கத்தைப் பெற்றுக்கொண்டனர் என்பது தெரிகின்றது. இதனை விளக்கிக் கூறுவோம்.

தமிழர் முருகன் என்னும் தெய்வத்தை இக்காலத்திலும் வணங்கி வருவதுபோலவே அக்காலத்திலும் வணங்கி வந்தார்கள். முருகன் வழிபாடு தொன்றுதொட்டுத் தமிழ்நாட்டில் இருந்துவருகிறது. சங்க இலக்கியங்களிலே முருகனைப்பற்றிப் பல இடங்களில் கூறப்படுகிறது. குறிஞ்சிநிலக் கடவுளாகிய முருகன் வேலன் என்றும் சேவற்கொடியோன் என்றும் 'பெரும் பெயர் முருகன்' கூறப்படுகின்றார். முருகன், போர்த்தெய்வமாகவும் இளமையும் அழகும் வாய்ந்தவராகவும் கருதப்பட்டு வருகிறார்.

போர் செய்வதையே தங்கள் குலத்தொழிலாகக் கொண்டிருந்த யௌத்தெயகணத்தாராகிய ஆரியப்படையினரும் தங்களுக்கென்று போர்த் தெய்வம் ஒன்றை வணங்கினார்கள். அவர்கள் அந்தத் தெய்வத்திற்குக் கார்த்திகேயன் என்றும் ப்ரமண்யன் (சுப்பிரமணியன்) என்றும் சண்முகன் என்றும் ஸ்கந்தன் என்றும் பெயர் வழங்கினார்கள். யௌத்தெயகணத்தார் தங்கள் பெயரினால் செம்பு நாணயங்களையும் வெள்ளி நாணயங்களையும்

வழங்கினார்கள் என்றும் அந்நாணயங்களிலே 'யௌத்தெய கணஸ்ய ஜெய' என்று பிராமி எழுத்தினால் பொறித்திருந்தார்கள் என்றும் முன்னமே கூறினோம். அவர்களுடைய சில நாணயங்களிலே சுப்பிரமணியன் உருவத்தைப் பொறித்து வைத்ததோடு அமையாமல் பிராமி எழுத்தினாலே பகவத ஸ்வாமினோ ப்ரஹ் மண்ய தேவஸ்ய யௌத்தெயனாம் என்பது முதலிய வாசகங்கள் பொறிக்கப்பட்டுள்ளன. இதனால் அவர்கள் குமரக்கடவுளைத் தங்கள் குலதெய்வமாகக் கொண்டிருந்தார்கள் என்பது தெரிகின்றது.

(யௌத்தெய கணத்தாரின் காசுகளிலே எழுதப்பட்டுள்ள பிராமி எழுத்துகள். 'பகவத ஸ்வாமிணோ ப்ரஹ்மண்ய குமாரஸ்ய' என்பது இதன் வாசகம்.)

தமிழரின் பழந்தெய்வம் முருகன் என்று கூறினோம். முருகனாகிய வேலனுக்கு அக்காலத்தில் சுப்பிரமணியன், கார்த்திகேயன், சண்முகன், ஸ்கந்தன் முதலிய வேறு பெயர்கள் இல்லை. இப்பெயர்கள் பிற்காலத்திலே முருகன் பெயருடன் இணைக்கப்பட்டன. தமிழருக்கும் யௌத்தெயராகிய ஆரியப் படையினருக்கும் போர் காரணமாக அடிக்கடி தொடர்பு ஏற்பட்டிருந்தபடியினாலே தமிழருடைய முருகனுக்கும் யௌத்தெயருடைய சுப்பிரமணியனுக்கும் தொடர்பு ஏற்பட்டிருக்கக்கூடும்.

இந்தத் தொடர்பு காரணமாக சுப்பிரமணியனும் முருகனும் ஒருவனே எனக்கொண்டார்கள். ஆகவே, கார்த்திகேயன், குமரன், சுப்பிரமணியன், ஸ்கந்தன் முதலிய பெயர்கள் முருகன் பெயராக இணைக்கப்பட்டன. சரவணப் பொய்கையில் ஆறுபேருக்குச் சண்முகன் பிறந்தான் என்பது போன்ற வடநாட்டுப் புராணக் கதைகள் முருகனுக்குக் கற்பிக்கப்பட்டன. ஆரிய-திராவிட கலாசார பண்பாடுகள் ஒன்றாகக் கலந்த காலத்திலே திராவிடச் சிவனுடன் ஆரிய ருத்திரன் இணைக்கப்பட்டது போலவும் திருமாலாகிய மாயோனுடன் விஷ்ணு இணைக்கப்பட்டது போலவும் முருகனுடன் சுப்பிரமணியன் இணைக்கப்பட்டான்.

இந்த முருக-சுப்பிரமணிய இணைப்பு யௌத்தெய கணத்தாரான ஆரியப்படையின் தொடர்பினாலே ஏற்பட்டிருக்க வேண்டும். இந்தத் தொடர்பு கடைச்சங்க காலத்தின் இறுதியிலே அதாவது கி.பி. முதல் நூற்றாண்டு அல்லது இரண்டாம் நூற்றாண்டிலே ஏற்பட்டிருக்கக்கூடும். திருமுருகாற்றுப்படை, பரிபாடல் முதலிய சங்க நூல்களிலே முருக -

சுப்பிரமணியக் கலப்பு காணப்படுகிறபடியினாலே, கடைச்சங்க காலத்து இறுதியில் இந்த உறவு ஏற்பட்டிருக்க வேண்டும் என்று துணிந்து கூறலாம்.

(குறிப்பு: தமிழரின் முருக வழிபாட்டுடன் யௌத்தெயரின் கார்த்திகேய சண்முக வழிபாடு கலந்ததென்று கூறினோம். இந்தக் குமார கார்த்திகேய வழிபாட்டுக் கலப்பு இன்னொரு வழியாகவும் நேர்ந்திருக்கக் கூடும். உஞ்சை என்னும் உஜ்ஜனி நாட்டிலும் குமார - சண்முக - கார்த்திகேய வழிபாடு அக்காலத்தில் சிறப்பாக நடந்துவந்தது இதற்குச் சான்று, அக்காலத்து உஜ்ஜனி நாட்டுக் காசுகளிலே சண்முகன் உருவம் பொறிக்கப் பட்ட நாணயங்கள் வழங்கியிருந்ததேயாகும். ஆறுமுகனுடைய சண் முகனின் உருவங்கள் அக்காலத்து நாணயங்களில் பொறிக்கப்பட்டுள்ளன. அந்த உருவத்தின் காலடியில் சண்முகன் வாகனமாகிய சேவல் உருவமும் பொறிக்கப்பட்டுள்ளது. பேர்பெற்ற காளிதாசன் உஜ்ஜனியிலிருந்தபோது தான் அவன் குமாரசம்பவம் என்னும் நூலை இயற்றினான். குமாரக் கடவுள் வழிபாடு சிறப்பாக இருந்த உஜ்ஜனி நாட்டில் இருந்த காளிதாசன் குமார சம்பவம் என்னும் நூலை இயற்றியது பொருத்தமாகும். எனவே, தமிழ்நாட்டு முருகனுடன் குமார கார்த்திகேய - சண்முக - சுப்பிரமணிய வழிபாடு இணைக்கப்பட்டது யௌத்தெயர் மூலமாகவும் உஜ்ஜனி நாட்டு மக்கள் மூலமாகவும் இருக்கக்கூடும். சேர அரசர்களும் சோழ அரசர்களும் சங்க காலத்தில் உஜ்ஜனியுடன் தொடர்பு கொண்டிருந்ததைச் சரித்திர வாயிலாக அறிகிறோம்.)

கல்வெட்டுக் கருத்தரங்கம் 1966

20. கழுதை ஏர் உழவர்

கழுதை ஏர் உழவர் என்றால், கழுதை பூட்டிய ஏரை உழுகிறவர் என்பது பொருள். இவ்வாறு கழுதையினால் ஏரை உழுகிறவர் நிலத்தைப் பயிர் செய்யும் குடியானவர் அல்லர். நமது நாட்டுக் குடியானவர் எருமைக் கடாக்களையும் எருதுகளையும் ஏரில் பூட்டி நிலத்தை உழுவது மரபு. கழுதை பூட்டிய ஏரை உழுவது, நமது நாட்டில், பண்டைக் காலத்து அரசர் கைக்கொண்டிருந்த வழக்கம். பகை அரசனுடைய கோட்டையைப் போரில் வென்று அதனைக் கைப்பற்றிய அரசன், வெற்றிகொண்ட பின்னரும் தனது சினம் தணியாதவனாயின், தான் கைப்பற்றிய கோட்டையில் உள்ள

அரண்மனைகளை இடித்துச் சிதைத்துத் தரையைக் கழுதை பூட்டிய ஏரினால் உழுது கொள்ளையும் வெள்வரகையும் விதைப்பான். இவ்வாறு செய்வது தோல்வியுற்ற பகையரசரை இகழ்ந்த செயலாகும். பகையரசர் நகரத்திலே கழுதை ஏர் உழுகிற இச்செய்தி, புறப்பொருள் இலக்கணத்திலே உழிஞைப் படலத்தின் ஒரு துறையாகக் கூறப்படுகிறது. பழைய இலக்கண நூலாகிய தொல்காப்பியத்திலே இத்துறை கூறப்படவில்லை. ஆயினும், கடைச்சங்க காலத்திற்குப் பிற்பட்டவராகிய, (கி.பி. 300-க்குப் பிற்பட்டதாகிய) புறப்பொருள் வெண்பாமாலை என்னும் நூலிலே, உழிஞைப் படலத்தின் இருபத்தொன்பது துறைகளில் ஒன்றாக இத்துறை கூறப்பட்டுள்ளது. (புறப்பொருள் வெண்பாமாலை, பன்னிருபடலம் என்னும் நூலுக்குப் பிறகு இயற்றப்பட்டதாகும். பன்னிருபடலம் சுமார் கி.பி. 7-ஆம் நூற்றாண்டில் இயற்றப்பட்டது.) புறப்பொருள் வெண்பா மாலையிலே, உழிஞைப் படலத்திலே இத்துறைச் செய்தி இவ்வாறு கூறப்பட்டுள்ளது:-

உழுதுவித்திடுதல்

எண்ணார் பல்லெயில் கழுதையே ருழுவித்
துண்ணா வரகொடு கொள்வித் தின்று.

உரை: பகைவருடைய பல அரணும் கழுதையாகிய ஏரிட்டுழுது கவடியுடன் குடைவேலை விதைத்தது என்றவாறு.

வரலாறு

எழுதெழின் மாடத் திடனெலா நூறிக்
கழுதையேர் கையொளிர்வேல் கோலா-வுழுததற்பின்
வெள்வரகு கொள்வித் திடினும் விளியாதற்
கள்விரவு தாரான் சதம்.

உரை: "சித்திரமெழுதிய அழகிய மாளிகை முழுதும் இடித்துக் கழுதையே ஏராகவும் கையில் விளங்கும் வேலே கோலாகவும் உழுததற்குப் பின்பு கவடியும் குடைவேலும் வித்தினும் கெடாதால்; தேன் கலந்த மாலையினையுடையவன் கோபம் என்றவாறு."

தொல்காப்பியத்திலே கூறப்படாத இச்செய்தி, பிற்காலத்து நூலாகிய புறப்பொருள் வெண்பா மாலையில் கூறப்படுகிறது என்பதை முன்னரே கூறினோம். ஆனால், வெண்பா மாலையில் கூறப்பட்ட இச்செய்திக்கு

இலக்கியமாகச் சங்க நூல்களிலும் சாசனங்களிலும் சான்றுகள் உள்ளன. இவற்றை ஆராயலாம்.

நெட்டிமையார் என்னும் புலவர், பாண்டியன் பல்யாகசாலை முதுகுடுமிப் பெருவழுதியின் வீரத்தைப் புகழ்கிறார். அவனது வீரச் செய்கைகளில், அப்பாண்டியன் பகைவர் அரண்களை வென்று கைப்பற்றி அவற்றை இடித்துப் பாழ்படுத்திக் கழுதையால் ஏர் உழுத செய்தியைக் கூறுகிறார்:

"கடுந்தேர் குழித்த ஞெள்ள லாங்கண்
வெள்வாய்க் கழுதைப் புல்லினம் பூட்டிப்
பாழ்செய் தனையவர் நனந்தலை நல்லெயில்"

உரை: "விரைந்த தேர் குழித்த தெருவின்கண்ணே வெளிய வாயையுடைய கழுதையாகிய புல்லிய நிரையைப் பூட்டி உழுது பாழ்படுத்தினை, அவருடைய அகலிய இடத்தையுடைய நல்ல அரண்களை."

(புறம் 15.)

அவ்வையார், அதிகமான் மகன் பொருட்டெழினியைப் பாடுங்கால் அதில், அவன் பகைவர் அரண்களைப் போரிலே வென்று கைப்பற்றியதோடு, வீரர்கள் சிந்திய குருதியாகிய நீர் பாய்ந்து ஈரம் புலராதிருந்த அந்நிலத்தைக் கழுதை பூட்டிய ஏரினால் உழுது கொள்ளையும் வரகையும் விதைத்த செய்தியைக் கூறுகிறார்:

"உருகெழு மன்ன ராரெயில் கடந்து
நிணம்படு குருதிப் பெரும்பாட் டீரத்
தணங்குடை மரபி னிருங்களந் தோறும்
வெள்வாய்க் கழுதைப் புல்லினம் பூட்டி
வெள்ளை வரகும் கொள்ளும் வித்தும்
வைக லுழவ! வாழிய பெரிது!"

(புறம். 392)

பல்யானை செல்கெழு குட்டுவன் என்னும் சேரமன்னன், பகைவர் நாட்டை வென்று அந்நாடுகளைக் கழுதை ஏரினால் உழுத செய்தியைப் பாலைக் கௌதமனார் என்னும் புலவர் கூறுகிறார்:

"நின்படைஞர், சேர்ந்த மன்றம் கழுதை போகி"
"நின்படையாளர் சேர்ந்த மன்றம் கழுதையாலுழப்பட"

என்பது இதன் பழைய உரை.

(பதிற்றுப்பத்து: 3-ஆம் பத்து 5-ஆம் பாட்டு.)

சேரன் செங்குட்டுவன் வட நாட்டரசரை வென்று, அவர்களுடைய கோட்டைகளில் கழுதையால் ஏர் உழுது தன் சினம் தீர்ந்தான் என்று சிலப்பதிகாரம் கூறுகிறது:

"வடதிசை மன்னர் மன்னெயில் முருக்கிக்
கவடி வித்திய கழுதையேர் உழவன்"

(நீர்ப்படைக் காதை 225-226.)

இவை இலக்கியங்களில் உள்ள சான்றுகள். கல்வெட்டுச் சாசனங்களிலும் இச்செய்திக்குச் சான்றுகள் காணப்படுகின்றன, அவற்றைக் காட்டுவாம்:

1. இராமநாதபுரம் மாவட்டம் இராமநாதபுரம் தாலுகா, திருப்புல்லாணியில் உள்ள சகந்நாத சுவாமி கோயில் சாசனம்: சிதைந்துள்ள இந்தச் சாசனம், கோமாற பன்மரான திரிபுவனச் சக்கரவர்த்திகள் சோணாடு கொண்டருளிய சுந்தரபாண்டிய தேவர் காலத்தது. இதில், "கழுதை கொண்டுழுது கவடி விச்சி செம்பியனையெ.......கொண்டவன் தேவியரை..... " என்று காணப்படுகிறது. *S.I.I. Vol. VIII. No. 394.*

2. மதுரை மாவட்டம் நிலக்கோட்டைத் தாலுகா சோழ வந்தானுக்கருகிலுள்ள தென்கரை என்னும் ஊரில் உள்ள மூலநாதர் கோயில் சாசனம். இதுவும் சுந்தரபாண்டிய தேவர் காலத்தில் எழுதப்பட்டது. இதில், "கழுதை கொண்டுழுது........செம்பியனைச் சினம் பிரியப்பொருது சுரம்புக ஓட்டியும்" என்று எழுதப்பட்டுள்ளது. *S.I.I. Vol. V. No. 300.*

3. திருவையாறு கோயில் சாசனம். ஸ்ரீ ராஜகேசரி பன்மரான உடையார் இராஜாதிராஜனுடைய 32-ஆவது ஆண்டு இதில், "கழுதை ஏர் செல நடத்தி வாரடிகை விதைத்து" என்று காணப்படுகிறது. *S.I.I. Vol. V. No. 300.*

4. தஞ்சை மாவட்டம். தஞ்சை தாலுகா; திருவேதிக்குடி, வேதபுரீசுவரர் கோயில் சாசனம். இராசகேசரி பன்மரான உடையார் இராசராச தேவரின்

32-ஆவது ஆண்டு. இதில், "கழுதை ஏர் செல நடாத்தி வார்கை விதைத்து" என்று எழுதப்பட்டுள்ளது. *S.I.I. Vol. V. No. 641*

5. புதுக்கோட்டை, திருமய்யம் தாலுகாவில் உள்ள சாசனம். இதில், "பொடிபடுத்தி வழுதியர்தம் குடமண்டபங் கழுதையேரிட உழுது புகழக் கதிரவியக் கவடி விச்சி" என்று காணப்படுகிறது. *Inscriptions of Pudukkottai State No. 163.*

6. புதுக்கோட்டைக் குன்றத்தூர்த் தாலூகா, குடுமியாமலை சிகரநாத சுவாமி கோயில் சாசனம். "கழுதைகொடுழுது புகழ்கதிர் விளையக் கவடிவிச்சி" என்று கூறுகிறது. *Sms. Pudukkottai No. 166.*

7. ஷை கோயில் அகிலாண்டேசுவரி கோயில் சாசனம். சோனாடு வழங்கியருளிய சுந்தரபாண்டிய தேவர் காலத்துச் சாசனம். "கழுதை கொடுழுது கவடிவிச்சி செம்பிய சினம் விரியப் பொருது" என்று கூறுகிறது. *Ins. Pudukkottai No. 280.*

இதுகாறும் தமிழ் இலக்கியங்களிலிருந்தும் தமிழ்நாட்டுச் சாசனங் களிலிருந்தும் சான்றுகள் காட்டினோம். கழுதை ஏர் உழுகிற வழக்கம் வடநாடுகளிலும் இருந்ததாகச் சான்றுகள் கிடைத்துள்ளன. கலிங்க தேசம், ஒட்டர தேசம் முதலிய நாடுகளைக் காரவேலன் என்னும் அரசன் கி.மு. 2-ஆம் நூற்றாண்டில் (இன்றைக்கு 2200 ஆண்டுகளுக்கு முன்பு) அரசாண்டான். ஹாதிகும்பா என்னும் மலையில் அமைக்கப்பட்ட ஒரு குகையில் இவனுடைய சாசனம் ஒன்று உள்ளது. (இந்த ஹாதிகும்பா மலை, ஒரிசா தேசத்து பூரிமாவட்டத்து உதயகிரியில் உள்ள புவனேஸ்வரம் என்னும் இடத்திலிருந்து மூன்று மைலுக்கப்பால் இருக்கிறது.) பிராகிருத மொழியில் எழுதப்பட்டுள்ள இந்த சாசனத்தில், இவ்வரசனுடைய மெய்க்கீர்த்திகள் கூறப்படுகின்றன. அவற்றில் ஒன்று, அவராஜர்களால் அமைக்கப்பட்ட பிதுண்டம் என்னும் நகரத்தை அழித்து அதனைக் கத்தபம் (கழுதை) பூட்டிய ஏரினால் காரவேலன் உழுதான் என்று கூறுகிறது. *(Epigraphia Indica Vol. XX Page 71-89).*

அன்றியும் ஜைன சமய நூல்களாகிய ஆவஸ்யாக விருத்தி வீர சரித்திரம் என்னும் நூல்களிலும் இச்செய்தி கூறப்பட்டிருக்கிறது. கோணிகன் என்னும் பெயருடைய மகத நாட்டு அரசன், வைசாலி நாட்டைவென்று கழுதை பூட்டிய ஏரினால் உழுதான் என்று அந்நூல்களில் கூறப்பட்டுள்ளன

தமிழ்நாட்டிலும் வடநாட்டிலும், இலக்கியச் சான்றும் சாசனச் சான்றும் உடைய கழுதை ஏர் உழுதல் என்னும் செய்தி, பண்டைக் காலத்திலே இந்திய நாடு முழுவதும் இவ்வழக்கம் இருந்ததைத் தெரிவிக்கின்றன. இதில் சிறப்பு என்னவென்றால், வெண்பாமாலை போன்ற இலக்கண நூல்களிலே இச்செய்தி கூறப்படுவதுதான். இதுபோன்ற பல செய்திகள், இந்தியா முழுவதும் பரவியிருந்த பழக்கவழக்கங்கள், பிற்காலத்தில் மறைந்து விட்டன என்றாலும், அப்பழக்க வழக்கங்கள் தமிழ் இலக்கிய இலக்கண நூல்களிலே பாதுகாக்கப்பட்டுள்ளன. இந்த உண்மையை வரலாற்று ஆசிரியர்கள் இன்னும் உணரவில்லை. உணர்வார்களாயின், பழைய தமிழ் நூல்களை ஆராய்ந்து அவைகளில் பொதிந்துள்ள பழைய கருத்துக்கள் இந்திய வரலாற்று நூல் எழுதுவதற்குத் துணையாக இருப்பதைக் காண்பார்கள். வடநாடு தென்னாடு என்னும் இரண்டு பிரிவினைக் கொண்ட இந்தியா தேசம் முழுவதும் பண்டைக் காலத்திலே வழக்காற்றிலிருந்து, இப்போது முழுவதும் மறைந்துபோன பல பழக்கவழக்கங்கள் நம்முடைய சங்க இலக்கியங்களிலே காணப்படுகின்றன. இவை பழைய இந்திய நாகரிகங்களைக் காண்பதற்கு உதவி செய்கின்றன. வரலாற்று ஆராய்ச்சிக் கண்கொண்டு இந்நூல்களைக் காண்போமானால் பல செய்திகளைக் காணலாம்.

செந்தமிழ்ச்செல்வி-சிலம்பு 23

21. சிலப்பதிகார ஆய்வுரை

காவிரி-காவேரி

''சோழநாடு சோறுடைத்து'' என்பது பழமொழி. சொல்லிலிருந்து உண்டாவது சோறு. சொல் என்றால் நெல் என்பது பொருள். சோழநாடு, தமிழ்நாட்டின் நெற்களஞ்சியம். சோழ நாட்டை நெற்களஞ்சியமாக்குவதற்கு அடிப்படைக் காரணமாக இருப்பது அந்நாட்டில் பாய்கிற காவிரி ஆறு. காவிரி ஆறு தமிழ்நாட்டின் புண்ணியநதி என்பதைத் தமிழ் நூல்கள் கூறுகின்றன. சிலப்பதிகாரம் மணிமேகலை ஆகிய இரண்டு காவியங்களும் காவிரி ஆற்றின் சிறப்பைக் கூறுகின்றன. முற்காலத்து நூல்களும் பிற்காலத்து நூல்களும் காவிரி ஆற்றைக் காவிரி ஆறு என்றே கூறுகின்றன. காவேரி என்பது கொச்சை வழக்குச் சொல். இது பேச்சு வழக்கில் மட்டும் வழங்கப் படுகிறது. காவிரி என்பதுதான் நூல் வழக்குச் சொல். பழைய நூல்களிலும் புதிய நூல்களிலும் காவிரி என்னும் சொல்லே வழங்கப்பட்டுள்ளது. ஆனால்,

சிலப்பதிகாரக் காவியத்தில் மட்டும் காவிரி என்றும் காவேரி என்றும் இரண்டு வகையாக இந்தப் பெயர் கூறப்படுகிறது. இளங்கோவடிகள் தம்முடைய சிலப்பதிகாரக் காவியத்திலே கானல்வரியில் மட்டும் காவேரி என்னுஞ் சொல்லை வழங்குகிறார். மற்ற இயற்றமிழ்ப் பகுதிகளில் காவிரி என்னுஞ் சொல்லை வழங்குகிறார். தமிழ் மொழியின் ஆதி காவியத்திலே இளங்கோவடிகள் ஏன் இவ்விரண்டு சொற்களை வழங்கியுள்ளார்? இதன் காரணம் என்ன? இதற்குக் காரணங் கண்டுபிடிப்பதற்கு முன்னம், இந்தச் சொற்கள் சிலப்பதிகாரத்தில் எந்தெந்த இடங்களில் வந்துள்ளன என்பதைத் தெரிந்துகொள்வோம். முதலில் காவிரி என்னும் சொல் வந்துள்ள இடங்களைப் பார்ப்போம்.

"தண்ணருங் காவிரித் தாதுமலி பெருந்துறை."

(இந்திர விழா, 165.)

"கடற்கரை மெலிக்குங் காவிரிப் பேரியாறு."

(கடலாடு, 163.)

"காவிரி வாயில் கடைமுகங் கழிந்து."

(நாடுகாண், 33.)

"காவிரிப் புதுநீர்க் கடுவரல் வாய்த்தலை."

(நாடுகாண், 108.)

"காரணி பூம்பொழில் காவிரிப் பேர் யாறு."

(நாடுகாண், 114.)

"விரிதிரைக் காவிரி வியன்பெருந் துருத்தி."

(காடுகாண், 39.)

"காவிரிப் படப்பைப் பட்டினந் தன்னுள்."

(அடைக்கலம், 151.)

"முதுநீர்க் காவிரி முன்றுறைப் படுத்தல்."

(காட்சி, 123.)

சிலப்பதிகாரத்தில் இயற்றமிழ்ப் பகுதி முழுவதும் இந்த ஆறு 'காவிரி' என்றே கூறப்படுவது காண்க. இயற்றமிழ்ப் பகுதியில் ஓரிடத்திலேனும் 'காவேரி' என்று கூறப்படவே இல்லை.

சிலப்பதிகாரக் காவியத்தில் கானல்வரியில் மட்டும் இளங்கோவடிகள் காவேரி என்னுஞ் சொல்லைப் பயன்படுத்துகிறார். காவிரி ஆறு கடலுடன் கலக்கிற புகார்முகத்தண்டைக் கடற்கரை மணலிலே அமர்ந்து கோவலனும் மாதவியும் கானல்வரி பாடினார்கள். அந்த இசைப்பாடல்களிலே முதலில், தங்களுக்கு அருகில் பாய்ந்தோடுகிற காவிரி ஆற்றைப்பற்றிப் பாடின பிறகு மற்ற இசைப்பாடல்களைப் பாடினார்கள். கோவலன் காவிரி ஆற்றை மூன்று பாடல்களில் பாடினான். அம்மூன்று செய்யுள்களிலும் காவிரி ஆறு காவேரி என்று கூறப்படுகிறது.

> **"திங்கள் மாலை வெண்குடையான் சென்னி செங்கோ லதுவோச்சிக்**
> **கங்கை தன்னைப் புணர்ந்தாலும் புலவாய் வாழி காவேரி!**
> **கங்கை தன்னைப் புணர்ந்தாலும் புலவா தொழிதல் கயற்கண்ணாய்!**
> **மங்கை மாதர் பெருங்கற்பென் றறிந்தேன் வாழி காவேரி!"**

மற்ற இரண்டு பாடல்களிலும் காவேரி என்னுஞ் சொல்லே பயின்றுள்ளது.

> **"கன்னி தன்னைப் புணர்ந்தாலும் புலவாய் வாழி காவேரி!**
> ....
> **மன்னு மாதர் பெருங்கற்பென் றறிந்தேன் வாழி காவேரி!"**

> **"விழவ ரோதை சிறந்தார்ப்ப நடந்தாய் வாழி காவேரி!**
> ....
> **மழவ ரோதை வளவன்றன் வளனே வாழி காவேரி!"**

மாதவியும் காவிரி ஆற்றின்மேல் மூன்று இசைப் பாடல்கள் பாடினாள் அவ்விசைப்பாடல்களிலும் காவிரி என்னும் பெயர் காவேரி என்று காணப்படுகிறது.

> **"மருங்கு வண்டு சிறந்தார்ப்ப மணிப்பூ வாடையதுபோர்த்துக்**

கருங்க யற்கண் விழித்தொல்கி நடந்தாய் வாழி காவேரி!
கருங்க யற்கண் விழித்தொல்கி நடந்தவெல்லாம் நின்கணவன்
திருந்து செங்கோல் வளையாமை யறிந்தேன் வாழி காவேரி!"

"காமர் மாலை யருகசைய நடந்தாய் வாழி காவேரி!
....
நாம வேலின் திறங்கண்டே யறிந்தேன் வாழி காவேரி!"

"ஊழி உய்க்கும் பேருதவி யொழியாய் வாழி காவேரி!
....
ஆழி யாள்வான் பகல்வெய்யோன் அருளே வாழி காவேரி!"

இயற்றமிழ்ப் பகுதிகளில் காவிரி என்னுஞ் சொல்லை வழங்கிய இளங்கோவடிகள் இசைத்தமிழ்ப் பகுதியாகிய கானல்வரியில் மட்டும் ஏன் காவேரி என்னுஞ் சொல்லை வழங்கினார்.

சிலப்பதிகாரத்தில் வருகிற கானல்வரி என்பது இசைத்தமிழ். அஃதாவது இசைப்பாட்டு. கடற்கரையில் பாடப்பட்டதாகையால் அது கானல்வரி என்று பெயர்பெற்றது. கானல் - கடற்கரை. வரி - இசைப்பாட்டு. மேலே காட்டப்பட்ட வரிப்பாட்டுகளின் கடைசிச் சொற்கள் மூவசைச் சீராக முடிகின்றன. அதனால் காவிரி என்னும் ஈரசைச் சொல்லைக் காவேரி என்று மூவசைச் சீராக அமைத்துள்ளார். அவ்விடத்தில் காவிரி என்னுஞ் சொல்லையமைத்தால் ஈரசைச் சீராகித் தளைதட்டுப்பட்டுச் செய்யுளோசை குறையுமாகையால் இவ்வாறு மாற்றியமைத்தார். இவ்வாறு அமைப்பது இசைத்தமிழ் இலக்கணத்துக்குப் பொருந்தும். இசைத்தமிழ் இலக்கணத்தில் குற்றெழுத்து நெட்டெழுத்தாகவும் நெட்டெழுத்து குற்றெழுத்தாகவும் வருவது மரபு. அந்த முறைப்படி, இசைப்பாட்டுப் பகுதியாகையால், இங்கு மட்டும் காவிரி, காவேரி என்று வழங்கப்பட்டிருக்கிறது. இசைத்தமிழிலக்கணத்துக்கு ஏற்பவும் தளைதட்டாமலிருக்கவும் இளங்கோவடிகள் வரிப்பாட்டில் (இசைப்பாட்டில்) மட்டும் காவிரி என்னுஞ் சொல்லைக் காவேரி என்று வழங்கியுள்ளார். ஏனைய இயற்றமிழ்ப் பகுதிகளில் காவிரியைக் காவேரி என்று கூறவே இல்லை.

இந்த நுட்பத்தை அறியாதவர், சிலப்பதிகாரத்தில் காவிரி என்னுஞ் சொல் காவேரி என்று வழங்கப்பட்டிருக்கிறபடியால், அந்நூல் பிற்காலத்தில் இயற்றப்பட்ட நூல் என்று கூறுவர். அவ்வாறு ஒருவர் எழுதியும் உள்ளார். திரு. வையாபுரிப் பிள்ளையவர்கள், காவேரி என்பது பிற்காலத்து வழக்குச் சொல் என்றும், இச்சொல்லை யாளுகிற சிலப்பதிகாரம் பிற்காலத்து நூல் (சங்ககாலத்து நூல் அன்று) என்றும் தாம் ஆங்கிலத்தில் எழுதியுள்ள தமிழ்மொழி-தமிழ் இலக்கிய வரலாறு என்னும் நூலில் 148 ஆம் பக்கத்தில் எழுதியுள்ளார்.* இவ்வாறு கூறுவது, ஆழ்ந்து கூர்ந்து ஆராயாமல் மேற்போக்காக மட்டும் ஆராய்கிறவர்களின் கூற்றாகும். மேலும், பிள்ளை யவர்கள் கூறுவதுபோலக் காவேரி என்னும் சொல் பிற்கால இலக்கியங் களிலும் வழங்கப்படவில்லை. காவேரி என்பது பேச்சு வழக்கில், கொச்சைத் தமிழில் தவிர, இச்சொல் பிற்கால இலக்கியங்களிலும் வழங்கப்படவில்லை. காவிரி என்னும் சொல்தான் முற்காலப் பிற்கால இலக்கியங்களில் வழங்கி வந்துள்ளது. காவேரி என்னுஞ் சொல் பேச்சு வழக்கில் மட்டும் இருந்து வருகிறது. காவேரி என்னும் சொல் ஒரே ஓர் இலக்கியத்தில் மட்டும் வழங்கப் பட்டிருக்கிறது. அந்த இலக்கிய நூல் மேலே காட்டியபடி சிலப்பதிகாரம். சிலப்பதிகாரத்திலும் இசைப்பகுதியாகிய கானல்வரியில் மட்டும் இச்சொல் ஆளப்பட்டிருக்கிறது. ஏனைய இயற்றமிழ்ப் பகுதியில் காவிரி என்றே ஆளப்பட்டிருக்கிறது. இதனை இக்கட்டுரையின் முற்பகுதியில் விளக்கமாகக் காட்டியுள்ளோம். எனவே, வையாபுரியார் கருதுவது போல, சிலப்பதிகாரம் பிற்காலத்து நூல் அன்று. அது கடைச்சங்க காலத்தின் இறுதியில் எழுதப்பட்ட நூலாகும். இதற்கு வேறு சில சான்றுகளும் உண்டு. அச்சான்றுகளைச் சமயம் வாய்க்கும்போது எழுதுவோம்.

கண்ணகியின் கைவளை

(மதுரை மாநகரத்திலே கோவலன் இறந்த பிறகு கைம்பெண்ணான கண்ணகியார் தமது கையிலணிந்திருந்த சங்குவளையை (வளை-சங்கு)க் கொற்றவை கோயிலின் வாயிலில் சென்று தகர்த்து ஒடித்துக் கைம்மைக் கோலங் கொண்டார் என்று சிலப்பதிகாரங் கூறுகிறது. "கொற்றவை வாயில் பொற்றொடி தகர்த்து" என்பது அவ்வாசகம். (சிலம்பு. 23 : 18) பொற்றொடி என்பது பொன்வளை என்று பொருள்படுமானாலும் இங்கு வளை (சங்கு)யினால் செய்யப்பட்ட தொடி என்பதே பொருளாகும். சிலப்பதிகார

---

* *History of Tamil Language and Literature. S. Viayapuri Pillai 1956.*

அரும்பதவுரையாசிரியரும் இவ்வாறே பொருள் கூறுகிறார்: 'பொற்றொடி-பொலிவினையுடைய சங்கவளை' என்று அவர் உரை எழுதியிருப்பது காண்க.)

(சங்ககாலத்தில் வறியவர் முதலாக அரசியர் வரையில் எல்லா மகளிரும் கைகளில் வளை (சங்குவளை) அணிந்திருந்தார்கள். இக்காலத்து மகளிர் கழுத்தில் தாலி அணிவது இன்றியமையாதது போல அக்காலத்து மகளிர் கைகளில் சங்குவளை அணிய வேண்டுவது இன்றியமையாததாக இருந்தது. செல்வர் வீட்டு மகளிர் பொன் தொடிகளை அணிந்திருந்தாலும் அதனுடன், இன்றியமையாத சங்குவளைகளையும் அணிந்திருந்தனர்.)

(இக்காலத்துக் கைம்பெண்கள் தாலிகளைக் களைந்துவிடுவதுபோல, அக்காலத்துக் கைம்பெண்கள் தம்முடைய கைவளைகளை உடைத்தெறிந்து வெறுங்கையினராக இருந்தனர். இந்த வழக்கப்படிதான் கண்ணகியார் தம்முடைய கைவளைகளைக் கொற்றவை கோயிலின் வாயிலில் சென்று தகர்த்து உடைத்தார். கைம்பெண்கள் தங்களுடைய தொடிகளை (வளை களைக் கழித்துவிட்டபடியால் அவர்கள் ''தொடிகழி மகளிர்' என்று கூறப் பட்டனர். ''தொடிகழி மகளிரின் தொல்கவின் வாடி'' என்று சங்கச் செய்யுள் (புறம். 238 : 7) கூறுகிறது. 'கழிகல மகடூஉ' என்பது புறம். 261 : 18.)

(தமிழ்நாட்டைச் சூழ்ந்துள்ள கடல்களில் வளை (சங்கு) கிடைத்தது. பாண்டி நாட்டுக் கொற்கைக் குடாக்கடலில் முத்துச்சிப்பிகளும் இடம்புரிச் சங்கு வலம்புரிச் சங்குகளும் அதிகமாகக் கிடைத்தன. (பிற்காலத்தில் கொற்கைக் குடாக்கடல் மண்தூர்ந்து ஐந்து மைல் அளவுக்குத் தரையாக மாறிவிட்டது.) சங்குகளைத் தொடியாக அறுத்து அரத்தினால் அராவிப் பலவகையான அளவில் தொடிகளைச் செய்தார்கள். அந்தத் தொடிகளிலே பூ உருவங்களும் கொடி உருவங்களும் செதுக்கப்பட்டிருந்தன. சில வளைகளுக்குப் பலவித நிறங்கள் ஊட்டப்பட்டு வண்ண வளைகளாக அமைக்கப்பட்டன. காவிரிப்பூம்பட்டினம் உறையூர் முதலான நகரங்களில் நிலத்தை அகழ்ந்து ஆராய்ந்தபோது அங்குக் கிடைத்த பல பொருள்களில் ஒடிந்துபோன வளைத்துண்டுகளும் கிடைத்துள்ளன. தமிழகத்து மகளிர் சங்கு வளைகளை அணிந்திருந்ததைச் சங்க இலக்கியங்களில் பரக்கக் காணலாம்.) 'கோணேறிலங்கு வளை.' (ஐங்குறு. நெய்தல், பாணற்குரைத்த பத்து, 6), 'இறைகேழ் எல்வளை', (ஷை. ஷை. சிறுவெண் காக்கை. 5), 'கடற்கோடு செறிந்த மயிர்வார் முன்கை', (ஐங்குறு. நெய்தல், வளைப்பத்து 1).

'நிரைவளை முன்கை நேரிழை மகளிர்', (குறுந். 336 : 1), 'அணிவளை முன்கை ஆயிதழ் மடந்தை', (அகம். 361 : 4), 'சின்னிரை வால்வளைக் குறுமகள்', (குறுந். 189 : 6), 'சுடரிலங்கு எல்வளை', (அகம். 68 : 12) முதலியவை காண்க.

(பழங்காலத் தமிழகத்தில் ஒவ்வொரு நகரத்திலும் கடைத் தெருக்களில் வளைகளை அறுத்துத் தொடி செய்யும் தொழிற்சாலைகளும் வளை விற்கும் கடைகளும் இருந்தன. பகன்றைக் கொடியின் மலர், சங்கை அறுத்து எறியப்பட்ட கொழுந்து போன்று (சங்கின் உச்சியைப்போல) இருந்தது என்று ஒரு புலவர் கூறுகிறார்.

"வேளாப் பார்ப்பான் வாளரந் துமிழ்த்த
வளைகழிந் தொழிந்த கொழுந்தின் அன்ன
தளைபிணி யவிழாச் சுரிமுகப் பகன்றை."

(அகம். 24 : 1-3)

வளைசெய்யும் தொழிலாளிகள் சிறு வாளினால் சங்கை அறுத்து அரத்தினால் அராவி வளைகளைச் செய்தார்கள் என்று சங்க நூல்களிலிருந்து தெரிகின்றது. 'கடற்கோடு அறுத்த அரம்போழ் அவ்வளை', (ஐங்குறு. நெய்தல், வளைப்பத்து), 'அரம்போழ் அவ்வளை பொலிந்த முன்கை', (அகம். 6 : 2), 'அரம்போழ் அவ்வளைக் குறுமகள்', (ஐங்குறு, நெய்தல், நெய்தற்பத்து, 5) என்பன காண்க. தமிழ்நாடு மட்டும் அன்று, பாரதநாடு முழுவதிலும் அந்தக்காலத்தில் மகளிர் சங்குவளைகளை அணியும் வழக்கம் இருந்தது. சங்கவளை அணியும் வழக்கம் இருந்தபடியால் சங்குவளை செய்யுந் தொழிலும் வளை வாணிகமும் நாடெங்கும் இருந்தன. அண்மைக் காலம் வரையில் சங்குவளையணியும் வழக்கம் தமிழ்நாட்டில் இருந்தது.) சங்குவளை வாணிகர் சங்குவளைகளை எடுத்துக்கொண்டு நகர வீதிகளில் சென்று விற்றனர். அவர்கள் வயது சென்ற ஆடவர். சொக்கப்பெருமான் வளை வாணிகனாக வந்து மதுரைத் தெருக்களில் வளைகளை விற்றார் என்று திருவிளையாடற் புராணங்கள் கூறுகின்றன. (வளையல் விற்ற படலம், பரஞ்சோதி முனிவர் திருவிளையாடற் புராணம், வளையல் விற்ற திருவிளையாடல், நம்பி திருவிளையாடற் புராணம்.)

(சங்குவளைகளை மகளிர் அணிந்த வழக்கம் அண்மைக் காலத்தில் மறைந்துபோய், கண்ணாடிவளையல் அணியும் வழக்கம் ஏற்பட்டுவிட்டது. இதனால், தமிழ்நாட்டு வாணிகருக்குக் கிடைத்துவந்த ஊதியம் இப்போது

அயல்நாட்டு வாணிகருக்குப் போய்க்கொண்டிருக்கிறது. மேலும் வளை செய்யும் தொழிலும் தமிழ்நாட்டில் மறைந்துபோய் அத்தொழிலாளிகளுக்கு வேலை இல்லாமலும் போய்விட்டது. இந்தியாவில் முஸ்லிம் ஆட்சி ஏற்பட்ட காலத்தில், சங்குவளை மறைந்துபோய்க் கண்ணாடிவளைகள் வழக்கத்தில் வந்து விட்டன. ஏறத்தாழ முன்னூறு ஆண்டுகளுக்கு முன்பு கண்ணாடிவளையல் அணியும் வழக்கம் ஏற்பட்டது. அதற்கு முன்பு சங்ககாலத்திலிருந்து சங்குவளைகளை அணியும் வழக்கம் இருந்து வந்தது.)

(பழங்காலத்தில் தமிழ் மகளிர் எல்லோரும்-ஏழைகள், நடுத்தரக் குடிமக்கள், செல்வர், அரசியர் முதலிய எல்லோரும்-, கட்டாயமாயக் கைவளைகளை அணிந்திருந்தனர் என்று கூறினோம். ஏழைகளும் நடுத்தர மகளிரும் இடம்புரிச் சங்குவளைகளை அணிந்திருந்தனர். இடம்புரிச் சங்குவளைகளின் விலை அதிகம் இல்லை. ஆனால் செல்வந்தரின் மகளிரும் அரசர்களின் மகளிரும் வலம்புரிச் சங்கவளைக்ளை அணிந்திருந்தார்கள். வலம்புரிச் சங்குவளைகள் அதிக விலையுள்ளவை. செல்வர் வீட்டுமகளிர், பொன்னாற் செய்த தொடிகளை அணிந்திருந்ததுடன் அவற்றோடு வலம்புரிச் சங்கு வளைகளையும் அணிந்திருந்தார்கள். தலையாலங்கானத்துச் செரு வென்ற பாண்டியன் நெடுஞ்செழியனுடைய அரசியான பாண்டிமாதேவி யார் கையில் பொன் தொடிகளை அணிந்திருந்ததோடு வலம்புரிச் சங்குவளைகளையும் அணிந்திருந்தார்.

''பொலந்தொடி நின்ற மயிர்வார் முன்கை
வலம்புரி வளையொடு கடிகைநூல் யாத்து.''

என்று இச்செய்தியை நெடுநல்வாடை (அடி, 141-142) கூறுகிறது.)

(பெருஞ்செல்வக்குடியில் பிறந்தவரான கண்ணகியார் அணிந் திருந்ததும் வலம்புரிச் சங்குவளைகளாகத்தான் இருக்க வேண்டும் என்பது சொல்லாமலே அமையும். என்னை? அவர் காலிலே அணிந்திருந்த பொற் சிலம்பினுள்ளே இட்டிருந்த பரல்கள் மாணிக்கக்கற்களாக இருந்தபோது அவர் கையில் அணிந்திருந்த வளைகள் வலம்புரிச் சங்குவளைகளாகத் தானே இருக்கவேண்டும்?) அவர் மாநாய்கனுடைய மகள் அல்லரா? (மாநாய்கன் என்பது மா+ நாவிகன்-பெரிய கப்பல் வாணிகன் என்னும் பொருள் உள்ள சொல்.) மாசாத்துவனின் மருமகள் அல்லரா? (மாசாத்துவன் என்பது மா+சாத்துவன்-பெரிய் வணிகச்சாத்தின் தலைவன் என்பது

பொருள்.) ஆகவே, கண்ணகியார் கையில் அணிந்திருந்த வளை விலை யுயர்ந்த வலம்புரிச் சங்குவளை என்பதில் ஐயமில்லை.

கண்ணகியின் காற்சிலம்பு

(பழங்காலத் தமிழக மகளிர் கால்களில் சிலம்பு என்னும் அணியை அணிந்திருந்தார்கள். திருமணம் ஆவதற்கு முன்பு சிலம்பைக் கழிப்பது அக்காலத்து வழக்கமாக இருந்தது. அது, 'சிலம்பு கழி நோன்பு' என்று சிறப்பாகக் கொண்டாடப் பட்டதாகத் தெரிகிறது. சிலம்பு, மகளிரின் சொந்தச் சொத்தாகக் கருதப்பட்டது. அதனை மகளிர் அருமையாகப் போற்றி வைத்தனர். செல்வந்தர் வீட்டுப் பெண்களும் அரச குடும்பத்து மகளிரும் பொன்னாற்செய்த சிலம்புகளை அணிந்திருந்தனர். சிலம்பினுள் பரல்கற் களை இடுவது வழக்கம். அரசர்களும் செல்வர்களும் சிலம்பினுள்ளே முத்துக் களையும் மாணிக்கங்களையும் பரல்களாக இட்டுவைத்தார்கள்.) அரசு கட்டிலில் துஞ்சிய ஆரியப்படை கடந்த பாண்டியன் நெடுஞ்செழியனுடைய அரசி பாண்டிமாதேவியாரின் பொற்சிலம்பினுள்ளே கொற்கைக் குடாக் கடலில் கிடைத்த முத்துக்களைப் பரல்களாக இட்டிருந்தனர் என்று சிலப் பதிகாரத்திலிருந்து அறிகிறோம். (வழக்குரை காதை) பெருங்கப்பல் வாணிகனான மாநாய்க ∴ (மாநாவிகன். நாவாய்-கப்பல்) மகளான கண்ணகியாரின் பொற்சிலம்பில் மாணிக்கக்கற்கள் பரற் கற்களாக இடப் பட்டிருந்தன. இதை வழக்குரை காதையிலிருந்து அறிகிறோம்.

> **''நற்றிறம் படராக் கொற்கை வேந்தே!**
> **என்காற் பொற்சிலம்பு மணியுடை யரியே,**

எனத்,

> **தேமொழி யுரைத்தது செவ்வை நன்மொழி,**
> **யாமுடைச் சிலம்பு முத்துடை யரியே.''**

(சிலப். 20 : 66-69)

(கைவளையும் காற்சிலம்பும் அக்காலத்து மகளிர்க்கு இன்றியமையாத அணிகலன்களாகக் கருதப்பட்டன. இவ்விரு அணிகலன்களையும் அக்காலத்து மகளிர் அருமையாகப் போற்றிவைத்தனர். இந்தக் காரணத் தினால்தான், கண்ணகியார் தாம் அணிந்திருந்த விலையுயர்ந்த மற்ற நகைகளையெல்லாம் மாதவியின் செலவுக்காகக் கோவலனிடம் கொடுத்து

விட்ட பிறகு இவற்றை மட்டும் கொடுக்காமல் தம்மிடமே வைத்துக் கொண்டார். கடைசியாகக் கண்ணகியாரிடம் எஞ்சி இருந்தவை கைவளை களும் காற்சிலம்புகளுமே என்பதையறிகிறோம். கடைசியாகக் காற் சிலம்பையும் விற்கவேண்டிய நிலை கோவலனுக்கு ஏற்பட்டது.

சிலம்புக்குக் குடைச்சூல் என்னும் பெயரும் உண்டு. சங்க காலத்தில் வழங்கிவந்த இச்சொல் பிற்காலத்தில் வழக்கிழந்து விட்டது.)

"வளங்கெழு குடைச்சூல் அடங்கிய கொள்கை
ஆன்ற அறிவில் தோன்றிய நல்லிசை
ஒண்ணுதல் மகளிர்." (பதிற்று. 6 ஆம் பத்து. 7.)

(குடைச்சூல்-சிலம்பு. பழைய உரை.)

"அவ்வரிக் குடைச்சூல்
அணங்கெழில் அரிவையர்." (பதிற்று. 7 ஆம் பத்து. 8.)

(கண்ணகி, பெருஞ்செல்வனான மாநாய்கனின் மகளாதலின், அவருடைய காற்சிலம்பு (குடைச்சூல்) பொன்னாற் செய்யப்பட்டு அதன் உள்ளில் மாணிக்கக்கற்கள் பரலாக இடப்பட்டிருந்ததுமன்றி அதன் மேற் புறத்தில் இடையிடையே மாணிக்கக்கற்களும் வயிரக்கற்களும் பதிக்கப் பட்டிருந்தன என்று சிலப்பதிகாரங் கூறுகிறது.

"மத்தக மணியொடு வயிரங் கட்டிய
பத்திக் கேவணப் பசும்பொற் குடைச்சூல்
சித்திரச் சிலம்பு." (கொலைக்கள. 117-119.)

(மத்தகமணி - தலையான மாணிக்கம். வயிரம் - வயிரக்கல். பத்திக் கேவணம் - பத்தியாக வகுத்த கேவணம். கேவணம் கல்லழுத்துங்குழி.))

-செந்தமிழ்ச்செல்வி, சிலம்பு-46

22. சிலப்பதிகாரமும் பங்களரும்

சிலப்பதிகாரத்திலே பங்களர் என்னும் நாட்டினர் கூறப்படுகின்றனர். அந்தப் பங்களர் என்பவரைப்பற்றிய ஆராய்ச்சிதான் இக்கட்டுரை. பங்களர் என்னும் பெயரை ஆராய்ந்து சில அறிஞர்கள் ஒருவிதக் கருத்தை வெளியிட்டிருக்கிறார்கள். பங்களர் என்பவர் பங்காள(வங்காள) நாட்டவர்

என்றும், பங்களர் என்னும் பெயர் வழங்கப்பட்டது பிற்காலத்தில் என்றும், ஆகவே இச்சொல்லை வழங்குகிற சிலப்பதிகாரம் பிற்காலத்தில் இயற்றப்பட்ட நூல் என்றும் இந்த ஆராய்ச்சிக்காரர்கள் முடிவு கூறியுள்ளனர்.

இப்படிக் கூறியவர்கள் சென்னை, வங்காளம் ஆகிய இரண்டு பல்கலைக் கழகங்களைச் சேர்ந்த நான்கு பேராசிரியர்கள் ஆவர். இவர்கள் ச. வையாபுரிப்பிள்ளை, *K. A.* நீலகண்ட சாஸ்திரி, *V. R.* இராமச்சந்திர தீட்சிதர், ஹேமசந்திர ராய் சவுத்திரி என்பவர்கள். இவர்களில் முதல் மூவரும், சென்னைப் பல்கலைக் கழகத்துப் பேராசிரியர்கள். ராய் சவுத்திரி, வங்காளப் பல்கலைக் கழகத்துப் பேராசிரியர்.

சிலப்பதிகாரம் காட்சிக் காதையிலே, செங்குட்டுவனுடைய போர்க்கள வெற்றிகளைக் கூறுகிற இடத்திலே, அமைச்சனான வில்லவன் கோதை செங்குட்டுவன் வென்ற நாட்டவர் பெயர்களைக் கூறுகிறான். அப்பெயர் களில் பங்களர் என்னும் பெயரையும் கூறுகிறான். இப்பெயரைக் கூறுகிற சிலப்பதிகாரப் பகுதி இது:

> **''கொங்கணர் கலிங்கர் கொடுங்கரு நாடர்**
> **பங்களர் கங்கர் பல்வேற் கட்டியர்**
> **வடவாரியரொடு வண்டமிழ் மயக்கத்துள்**
> **கடமலை வேட்டமென் கட்புலம் பிரியாது''**

(காட்சிக் காதை 156-159)

இதில் வருகிற பங்களர் என்னும் சொல்லை ஆராய்ந்து, மேற்சொன்ன நான்கு பேராசிரியர்களும், பங்களர் என்னும் சொல் பிற்காலத்தில் வழங்கிய சொல், இந்தச் சொல்லை வழங்குகிற சிலப்பதிகாரமும் பிற்காலத்து நூல் என்று எழுதியுள்ளனர். இவர்கள், இதுபற்றி இவ்வாறு எழுதுகிறார்கள்:

திரு. எஸ். வையாபுரிப் பிள்ளையவர்கள், சிலப்பதிகாரம் பிற்காலத்து நூல் என்பதற்குப் பங்களர் என்னும் சொல்லையும் ஒரு காரணமாகக் கூறு கிறார். ''வங்க தேசத்தினருக்குப் பங்களர் என்பது பிற்காலப் பெயர். இதுவும் இக்காவியத்தில் (சிலப்பதிகாரத்தில்) காணப்படுகிறது'' என்று ''இலக்கிய மணிமாலை'' என்னும் நூலில் (பக்கம் 138) எழுதுகிறார். மேலும் தமது ''தமிழ்மொழி தமிழ் இலக்கிய வரலாறு'' என்னும் ஆங்கில நூலிலும் இவ்வாறு எழுதுகிறார்:

" A few countries like Karnataka and Bengal which were unknown to the Tamils of the Sangam Period are mentioned."

(p. 148. History of Tamil Language and Literature)

ஆகவே, சிலப்பதிகாரம் கி.பி. 500க்குப் பிறகு இயற்றப்பட்டது என்பது பிள்ளையவர்கள் கருத்து.

திரு. K. A. நீலகண்ட சாஸ்திரியும் இதுபற்றி இவ்வாறு எழுதுகிறார்: ''பங்காள தேசத்து மக்களைப் பங்களர் என்னும் சொல்லால் குறிப்பிடுவதும் இந்நூல் பிற்காலத்தில் இயற்றப்பட்டது என்பதற்குச் சான்றாகும்.'' (*" The form Bangalar for the people of Bengal.....are also evidences of late composition" (University of Ceylon Review Vol. VII 1949. p. 21-27.)*)

சென்னைப் பல்கலைக் கழகத்துச் சரித்திர ஆசிரியராக இருந்த திரு. வி. ஆர். இராமச்சந்திர தீட்சிதர் அவர்களும், தாம் ஆங்கிலத்தில் மொழி பெயர்த்துள்ள ''சிலப்பதிகாரம்'' என்னும் ஆங்கில நூலில், 289-ஆம் பக்கத்தில், மூன்றாவது அடிக்குறிப்பில் இதே கருத்தை எழுதுகிறார். ''பங்களர் என்பது பங்காள நாட்டு மக்களைக் குறிப்பிடுகிறது.'' (*"The Bangalar are probably the people of Bengal"* என்று எழுதுகிறார்.)

கல்கத்தாப் பல்கலைக் கழகத்து இந்திய சரித்திர ஆசிரியராகிய ஹேமசந்திர ராய் சவுத்திரி என்பவரும், இவர்கள் கூறும் கருத்தையே கூறு கிறார்: இவர் ஆங்கிலத்தில் கூறியதன் கருத்து இது:

''பங்களர் என்னும் பெயரும் இதில் (சிலப்பதிகாரத்தில்) கூறப்படு கிறது. வங்கம் என்னும் பழைய பெயர் சமஸ்கிருத காவியங்களிலும் தர்ம சூத்திரங்களிலும், நாகார்ச்சுன கொண்ட, மேக ரவுளி சாசனங்களிலும் வழங்கப்பட்டுள்ளது. ஆனால், வங்களர் என்னும் பெயர் நிச்சயமாகப் பிற்காலத்தில் வழங்கப்பட்டது. கி.பி. 11-ஆம் நூற்றாண்டுக்கு முந்திய காலத்தில் இப்பெயர் சாசனங்களில் காணப்படவில்லை. கங்கை கொண்ட சோழனான முதலாம் இராஜேந்திர சோழன் உடைய திருமலை சாசனத்தில் இப்பெயர் வழங்கப்பட்டுள்ளது'' (கோபாலகிருஷ்ணமாசாரியர் மலர்மாலை)

பல்கலைக் கழகத்துப் பேராசிரியர் நால்வரும், பங்களர் என்று சிலப்பதிகாரம் கூறுவது பங்காள (வங்காள) நாட்டினரைத்தான் என்று முடிவு செய்துவிட்டனர். இந்த முடிவின் விளைவாகச் சிலப்பதிகாரம் சங்க காலத்து நூல் அன்று பிற்காலத்து நூல் என்று திட்டவட்டமாகக் கூறிவிட்டார்கள். 'இவர்கள் கூறுவதில் என்ன தவறு இருக்கிறது? இவர்கள் கூறுவது சரியாகத்தானே, பொருத்தமாகத்தானே இருக்கிறது' என்று எல்லோரும் ஒப்புக் கொள்ளும்படியாகத் தான் இருக்கிறது இவர்கள் கூறிய முடிவு.

பங்களர் என்று சிலப்பதிகாரம் கூறியது பங்காளரைத்தானா? வங்காள தேசத்தவரையா பங்களர் என்று சிலப்பதிகாரம் கூறுகிறது? மேல்நோக்காகப் பார்க்கும்போது, பங்களரும் வங்காளரும் ஒருவர்போலக் காணப்பட்டாலும், ஊன்றிப் பார்க்கும்போது பங்களரும் வங்காளரும் வெவ்வேறு நாடடினர் என்பது தெரிகிறது. சிலப்பதிகாரம் கூறுகிற பங்களர் வங்காள நாட்டுப் பங்காளரை அன்று என்பது தெரிகிறது. பங்களர், பங்காளர் என்னும் சொற்கள் ஒரே ஒலியுடையனவாகக் காணப்பட்டாலும் இரண்டு சொற்களும் வெவ்வேறு பொருளைக் குறிக்கின்றன என்று தோன்றுகிறது. இதற்குச் சாசனச் சான்றுகளும் கிடைக்கின்றன

தென் இந்தியச் சாசனங்கள் என்னும் நூலிலே எட்டாவது தொகுதி யிலே கீழ்க்கண்ட செய்திகள் கிடைக்கின்றன:

1. "சயங்கொண்ட சோழமண்டலத்துப் பங்களநாட்டு வடக்கில் வன்முகைநாட்டு உய்யக்கொண்டான் சோழபுரம்"
   S.I.I. Vol. VIII. No. 7

2. "சயங்கொண்ட சோழமண்டலத்துப் பங்களநாட்டு முகைநாட்டுக் காட்டுத்தும்பூர்" *S. I. I. Vol. VIII. No.11*

3. "பங்களநாட்டுக் காட்டுத்தும்பூர் நந்திக்கம்பீஸ்வரம்"
   S.I. I. Vol. VIII. No. 9

4. "பங்களநாட்டு வடக்கில் வன்முகைநாட்டு உய்யக்கொண்டான் சோழபுரம்" *S. I. I. Vol. VIII. No. 8*

மேலே காட்டப்பட்ட சாசனப்பகுதிகளிலிருந்து பங்கள நாடு, சயங்கொண்ட சோழமண்டலத்தில் இருந்தது என்பது தெரிகிறது. சயங்கொண்ட சோழ மண்டலம் என்பது தொண்டை மண்டலம். தொண்டை மண்டலத்துப் பழைய பெயர் அருவா நாடு என்பது. சயங்கொண்ட சோழமண்டலம், தொண்டை மண்டலம், அருவாநாடு என்னும் பெயருடைய நாடு தமிழகத்தின் ஒரு பகுதியாகும். இப்பகுதியின் வடக்குப் பக்கத்தில் (தமிழகத்தின் வடஎல்லையில்) சேர்ந்ததுதான் பங்களநாடு என்பது இந்தச் சாசனங்களிலிருந்து தெளிவாகத் தெரிகிறது. இந்தப் பங்களநாடு சில உட்பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டிருந்தது என்பதும் அப்பிரிவுகளில் இரண்டு வன்முகைநாடு, முகைநாடு என்பன என்பதும் இந்தச் சாசனங்களினாலே தெரிகின்றன.

இந்தச் சான்றுகளைக் கொண்டு, சிலப்பதிகாரத்தில் கூறப்படுகிற பங்களர் என்பவர் தமிழ்நாட்டின் வடக்குப் பகுதியில் தமிழகத்தைச் சேர்ந் திருந்த பங்கள நாட்டினர் என்பது நன்கு விளங்குகிறது. பல்கலைக் கழகத்துப் பேராசிரியர்கள் கருதியதுபோல, பங்களர் என்னும் சொல் பங்காளரை (வங்காளரை)ச் சுட்டவில்லை என்பதும் தெளிவாகத் தெரிகிறது. எனவே, ஒலி ஒப்புமையைக் கொண்டு, பங்களரும் பங்காளரும் ஒருவரே என்றும் அவர்கள் வங்காள தேசத்தவர் என்றும் இவர்கள் கொண்ட முடிவு தவறா கிறது. இந்தத் தவறான முடிவு காரணமாக, சிலப்பதிகாரம் பிற்பட்ட நூல் என்று இவர்கள் கூறியதும் பிழைபட்ட முடிவாகிறது.

திரு. வையாபுரிப்பிள்ளை அவர்கள் தமிழ் இலக்கியங்களைப் பயின்றவர்; சாசனங்களையும் சரித்திரங்களையும் பயின்றவர் அல்லர் என்பது அவருடைய ஆராய்ச்சிக் கட்டுரைகளிலிருந்து தெரிகிறது. இவர், தம் நண்பரான நீலகண்ட சாஸ்திரியார் ஆராயாமல் கூறிய கருத்தை உண்மை யெனக் கருதிக்கொண்டு, தமிழ்நாட்டுப் பங்களரை வடநாட்டுப் பங்காளர் என்று எழுதிவிட்டார். ஹேமச்சந்திர ராய் சவுத்திரி அவர்கள் வங்காள நாட்டவர்; தமிழ்மொழி அறியாதவர். ஆகவே, அவர் மேலே காட்டிய தமிழ்ச் சாசனங்களைப் படித்திருக்கமாட்டார். ஆகவே, அவர் தமிழ்நாட்டில் ஒரு பங்களநாடு இருந்தது என்பதை அறிந்திருக்கமாட்டார். ஆனால், நீலகண்ட சாஸ்திரியும், இராமச்சந்திர தீட்சிதரும் தமிழ்நாட்டவர்; தமிழ்மொழி யறிந்தவர். அன்றியும், சரித்திரத் துறையில் பேராசிரியர்கள். ஆகையினால் நாம் மேலே காட்டிய சாசனப் பகுதிகளைப் படித்திருக்க வேண்டியவர்கள்.

ஆனால், இச்சாசனங்களை இவர்கள் படித்திருப்பதாகத் தோன்றவில்லை. படித்திருப்பார்களானால், பங்களரை வங்காளர் என்று எழுதியிருக்க மாட்டார்கள். சரித்திரத் துறையிலே பயின்று அத்துறையிலே ஆசிரியர்களாக இருந்த இவர்கள் தென் இந்தியச் சாசனங்களைப் பயின்றிருக்கக் கடமைப்பட்டவர்கள். இவர்கள் தமிழ்ச் சாசனத்தில் கூறப்படுகிற பங்களரைப் பற்றி அறியாமலிருப்பது வியப்பாக இருக்கிறது. அறியாமலிருந்தாலும் தவறில்லை. வெறும் சொல் ஒற்றுமையையும் ஒலி ஒற்றுமையையும் மட்டும் வைத்துக்கொண்டு பங்களரும் வங்களரும் ஒருவரே என்றும், வங்க மக்களுக்குப் பங்காளர் என்னும் பெயர் வழங்கியது பிற்காலத்தில் ஆகை யால், பங்களர் என்னும் சொல்லை ஆள்கிற சிலப்பதிகாரம் பிற்காலத்து நூல் என்றும் எழுதியது எவ்வளவு தவறானது! இவர்கள் எழுதியதை வேதவாக் காகக் கருதி வையாபுரிப்பிள்ளை போன்றவர்களும், சிலப்பதிகாரம் பிற்காலத்து நூல் என்று எழுதியது எவ்வளவு பிழையானது!

பங்களர் என்பது பங்காளரை (வங்காளரைக்) குறிப்பதாக இருந்தால் அப்பெயர் பிற்காலத்து வழக்குச் சொல் என்று இவர்கள் கூறியதில் தவறில்லை. ஆனால், பங்களர் என்னும் சொல் வங்காளரைக் குறிக்க வில்லை, தமிழரில் ஒரு பகுதியாரைக் குறிக்கிறது என்பதற்குச் சாசனச் சான்று காட்டி நிறுவப்பட்டது. கொங்கணர், கங்கர், கட்டியர் முதலிய பெயர்களைப் போலவே பங்களர் என்னும் பெயரும் சங்ககாலம் முதல் தொன்று தொட்டு உள்ள பெயராகும். பங்களர் என்னும் பெயர் பிற்காலத்து வழக்குச்சொல் அன்று. எனவே, இவர்கள் தவறாகக் கூறுவதுபோல, சிலப்பதிகாரம் பிற் காலத்து நூலன்று; சங்க காலத்து நூலேயாகும். அதாவது, கி.பி. இரண்டாம் நூற்றாண்டில் இயற்றப்பட்ட நூலாகும்.

பிள்ளையும் சாஸ்திரியும் தீட்சிதரும், சவுத்திரியும் பல்கலைக் கழகத்து அறிஞர்களாக இருந்தாலும், இவ்வாராய்ச்சியில் பிழைபட்டுத் தவறான முடிவைக் கூறியபடியால் இவர்கள் முடிவு கொள்ளத்தக்கதன்று; தள்ளத் தக்கதாகும். பல்கலைக் கழகத்துப் பேராசிரியர்கள் ஆகையால், இவர்கள் கூறிய கருத்துக்கள் சரியாகத் தான் இருக்கும் என்று மாணவர்கள் கருதி மேலும்மேலும் பிழை செய்யக்கூடாது என்பதற்காகவே இக்கட்டுரை எழுத வேண்டியதாயிற்று.

"எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்பது அறிவு"

கலைக்கதிர் - ஆகஸ்டு 1959

23. இளங்கோ அடிகளின் கவிதை நயம்

காவியப் புலவர்க்ளின் கவித்திறன் அவர்களுடைய காவியங்களிலே நன்கு புலனாகின்றன. அவர்களுடைய புலமையினால் அவர்களுடைய காவியங்கள் படிப்பவரின் மனத்தை அள்ளிக் கொள்கின்றன. உவமைகளையும் கற்பனைகளையும் கையாள்வதோடு சந்தர்ப்பத்துக்கேற்றபடி கவிதைகளை இனிமையாகவும் அழகாகவும் அமைக்கும் ஆற்றல் காவியப்புலவர்களுக்கு உண்டு. அதனாலேதான் அவர்களுடைய காவியங்கள் கற்பவர் மனத்தை ஈர்த்துத் தம்வயப்படுத்துகின்றன. காவியப் புலவர்களின் கனிந்த செய்யுட்கள் அவற்றைக் கற்பவருக்குத் தெவிட்டுவதில்லை. எத்தனை தடவை படித்தாலும் அந்தச் செய்யுட்கள் உள்ளத்தைக் கவர்ந்து மனத்தைக் கவர்ந்து மனத்துக்கு மகிழ்ச்சியையும் இன்பத்தையும் அளிக்கின்றன.

தமிழிலே ஆதிகாவியத்தை அளித்த இளங்கோ அடிகள் தலைச்சிறந்த காவியப் புலவர். அவர் இயற்றிய சிலப்பதிகாரம் அமரகாவியம். இதனாலன்றோ தேசியகவி பாரதியார், 'நெஞ்சையள்ளும் சிலப்பதிகாரம்' என்று பெருமிதத்தோடு கூறினார். சிலப்பதிகாரக் காவியத்தைப் படித்த அறிஞர்கள் எல்லோரும் இதனைப் புகழ்ந்து பேசுகிறார்கள். சிலப்பதிகாரம் உலகக் காவியங்களில் ஒன்று என்ப்தில் தடைஇல்லை.

சிலப்பதிகாரக் காவியத்திலிருந்து இளங்கோ அடிகளின் கவிதைகள் ஒரு சிலவற்றை இங்குக் காட்டுவோம்.

மதுரையில் கோவலன் மேல் சுமத்தப்பட்ட வீண்பழியை, அவன் பொற்சிலம்பைக் களவாடினான் என்னும் கறையைப் போக்கி அவன் அப்பழுக்கற்றவன் என்பதை நிலைநாட்ட வேண்டிய பொறுப்பும் கடமையும் கண்ணகிக்கு ஏற்பட்டது. கண்ணகி, வழக்கு மன்றத்திலே சென்று தன் கணவன் குற்றமற்ற செம்மல், அவன்மீது பொய்யாகப் பழி சுமத்தப்பட்டது என்பதைப் பாண்டியனுக்கும் உலகத்தாருக்கும் நிருபித்துக் காட்டினாள். தன் கணவன் மேல் சுமத்தப்பட்ட இழிந்த பழியைப் போக்கி, அவன் தூய்மையான பெருமகன் என்பதை உலகத்துக்குக் காட்டிய பிறகு, கண்ணகி தன் கணவனுக்குச் செய்ய வேண்டியிருந்த கடமையும் பொறுப்பும் முடிந்து

விட்டன. அதற்குப் பிறகு அவள் உயிர் வாழ விரும்பவில்லை. கண்ணுக்குக் கண்ணான கணவன், உயிருக்கு உயிரான காதலன் மறைந்துபோன பிறகு அவளுக்கு உலகத்திலே என்ன இருக்கிறது? உலகத்தில் உயிர் வாழ அவள் விரும்பவில்லை. அவள் தந்தையான மாசாத்துவனுடைய பெருஞ்செல்வம் ஒரே மகளான அவளுக்கேயுரியது. மாமனாரான மாநாய்கனுடைய அளவற்ற செல்வமும் அவளுக்கே உரியது. ஆனால் கோவலன் இல்லாத போது இச்செல்வங்கள் அவளுக்கு ஏன்? அவள் உயிரை விட்டுவிடத் தீர்மானித்தாள். உணவும் உறக்கமும் கொள்ளாமல் எங்கும் தங்காமல் இரவும் பகலும் நெடுக நடந்தாள். எங்குச் செல்ல வேண்டும் என்னும் குறிக் கோளில்லாமல் பலநாள் காட்டிலும் மேட்டிலும் நெடுக நடந்தாள். பதினான்காம் நாள் ஒரு குன்றின்மேலே ஒரு வேங்கை மரத்தின் கீழே வந்து நின்றாள். அங்கு அவளுடைய உயிர் உடலை விட்டுப் பிரிந்தது.

இந்தப் பத்தினிப் பெண்டின் வரலாற்றைக்கேட்ட சேரன் செங்குட்டு வனின் இராணியாகிய சேரமாதேவி இந்தப் பத்தினியைப் போற்ற வேண்டும் என்று கேட்டுக்கொண்டதைச் செங்குட்டுவன் ஏற்றுக்கொண்டு கண்ணகிக்குப் பத்தினிக் கோட்டம் அமைத்துச் சிறப்புச் செய்தான். அந்த விழாவைக் காணப் பத்தினிக்கோட்டத்துக்குச் சென்றவர் பற்பலர். கண்ணகி உயிரோடு இருந்த காலத்தில் அவளுடன் நெருங்கிப் பழகிய பெண்மணிகள் நால்வர் இருந்தனர். அவர்களும் பத்தினிக் கோட்டம் சென்று அந்த விழாவில் கலந்து கொண்டனர். இந்தப் பெண்மணிகள் கோவலன் கண்ணகியரின் உறவினர் அல்லர். கோவலனின் தாயும் கண்ணகியின் தாயும் தங்கள் மகனுக்கும் மகளுக்கும் அயல்நாட்டிலே நேரிட்ட துன்பங்களையும் கடைசியில் அவர்கள் இறந்துபோனதையும் கேட்டு தீராத்துயரடைந்து மனவேதனை யினால் முன்னமே இறந்து போனார்கள். கோவலன் தந்தையாகிய மாநாய்கன் தன் குடும்பத்துக்கு நேர்ந்த துன்பங்களையும் துயரங்களையும் கண்டு மனம் வெறுத்துத் தன்னுடைய பெருஞ் செல்வத்தையெல்லாம் தான தருமம் செய்துவிட்டுப் பௌத்தமதப் பிக்ஷு ஆனான். கண்ணகியின் தந்தையாகிய மாசாத்துவனும் அவ்வாறே மனம் வெறுத்துத் தன்னுடைய செல்வங்களை யெல்லாம் தானம் செய்துவிட்டு ஆசீவகமதத் துறவியாய் விட்டான். ஆகவே கோவலன் கண்ணகியரின் உறவினர் யாரும் பத்தினிக் கோட்டத்துக்கு வரவில்லை. அப்படியானால், பத்தினிக் கோட்டத்துக்கு வந்த இந்த நான்கு பெண்மணிகள் யாவர்?

நான்கு பெண்மணிகள்

இவர்களில் ஒருத்தி காவற்பெண்டு என்பவள். இவள் கண்ணகியின் தந்தையான மாசாத்துவனின் மாளிகையில் நெருக்கமாக ஊழியம் செய்து கொண்டிருந்தவள்; கண்ணகியைக் குழந்தைப் பருவத்திலிருந்து சீராட்டிப் பாராட்டி வளர்த்த செவிலித்தாய். இவளுக்கு வயது ஐம்பதுக்கு மேலிருக்கும். தன்னால் வளர்க்கப்பட்ட கண்ணகியிடத்தில் இவளுக்குப் பற்றும் பாசமும் இருக்கத்தானே செய்யும்?

மற்றொரு பெண்மணி அடித்தோழி என்பவள். இவள் கோவலன் கண்ணகியர் வாழ்ந்திருந்த மாளிகையில் கண்ணகிக்கு ஊழியப் பெண்ணாக இருந்தவள். ஊழியக்காரியாகக் கண்ணகியுடன் நெடுங்காலம் பழகிய இவளுக்குப் பத்தினிக் கோட்டம் செல்ல ஆசையுண்டாயிற்று. இவளுக்கு ஏறத்தாழ முப்பது வயதிருக்கலாம்.

மற்றொரு பெண்மணி தேவந்தி என்பவள். இவள் கண்ணகியின் தோழி. காவிரிப்பூம்பட்டினத்தில் இவள் கண்ணகியுடன் பலகாலம் நெருங்கிப் பழகியவள். தன் தோழியின் பத்தினிக் கோட்டத்துக்குப் போக இவளும் ஆசை கொண்டாள்.

இந்த மூன்று பெண்மகளிரும் காவிரிப்பூம்பட்டினத்திலிருந்து ஒன்று சேர்ந்து புறப்பட்டுப் பத்தினிக் கோட்டத்துக்கு வந்தார்கள். பூம்புகாரிலிருந்து மதுரைக்கு வந்து அங்கிருந்து சேரநாட்டு வஞ்சி நகரத்துக்கு வந்தனர். அக்காலத்தில் வஞ்சிமாநகரத்துக்குப் போகச் செவ்வையான வழி இதுதான். மேலும் கண்ணகியும் கோவலனும் மதுரையில் மாதரி இல்லத்தில் தங்கியிருந்தபோது அங்கு நடந்தவைகளை நேரில் கேட்டறிய வேண்டும் என்னும் எண்ணம் இவர்களுக்கு இருந்தது. பூம்புகாரிலிருந்து புறப்பட்ட இவர்கள் கால்நடையாக நடந்து மதுரைக்குச் செல்ல ஏறத்தாழ ஒரு மாதம் சென்றது.

மதுரைக்கு வந்த இவர்கள் வழிகேட்டுக் கொண்டு மாதரியின் வீட்டை யடைந்தனர். மாதரி வீட்டில் இல்லை. அவள் மகள் ஐயை என்னும் கன்னிப் பெண்மட்டும் அவ்வீட்டில் இருந்தாள். அவளுடைய தாயான மாதரி, கோவலன் கொலையுண்டு இறந்த துக்கந்தாங்க முடியாமலும், பாண்டியன் இறந்துபோன திடுக்கிடும் செய்தியறிந்தபடியாலும் அரண்மனை தீப்பற்றி எறிந்தபோது அவனும் அத்தீயில் விழுந்து மாய்ந்துபோனான். இவர்கள்

இச்செய்தியைக் கேட்டுப் பெரிதும் மனங் கவன்றார்கள். பிறகு ஐயை கோவலன் கண்ணகியர் தங்கள் வீட்டில் தங்கி உணவு சமைத்து உண்டதையும் தான் அவர்களுக்கு வேண்டிய பணிவிடைகளைச் செய்ததையும் கோவலன் கொலையுண்ட செய்தியறிந்து கண்ணகி புலம்பி அழுததையும் நகரமக்கள் திரண்டதையும் கண்ணகி வழக்குரைத்துக் கோவலன் சிலம்பைக் களவாட வில்லை, அந்தச் சிலம்பு தன்னுடையது என்பதை நிலைநாட்டியதையும் பிறகு நகரமக்கள் சீற்றங்கொண்டு அரண்மனைக்குத் தீயிட்டுக் கொளுத்தி யதையும் எல்லாம் இவர்களுக்குக் கூறினாள். இவைகளையெல்லாம் கேட்ட சோழநாட்டுப் பெண்மணிகள் மூவரும் மனம் வருந்திக் கண்ணீர் விட்டார்கள்.

ஐயை, தானும் கண்ணகியின் பத்தினிக்கோட்டத்தைக் காண இவர்களுடன் வருவதாகக் கூறிப் புறப்பட்டாள். கண்ணகியுடன் பழகியிருந்த இந்த நான்கு பெண்மணிகளும் மதுரையிலிருந்து புறப்பட்டு நெடுக வழி நடந்து வஞ்சிமாநகரத்துக்கு வந்து பத்தினிக் கோட்டத்தையடைந்தனர்.

இந்தச் செய்திகளையெல்லாம் காவியப் புலவரான இளங்கோ அடிகள் சிலப்பதிகார வாழ்த்துக் காதையில் சுருக்கமாகக் கூறியுள்ளார். இச்செய்தி களை உரைப்பாட்டாக (வசனச் செய்யுளாக) அமைத்துள்ளார். அவ்வுரைப் பாட்டின் ஒரு பகுதி இது:

''கோவலன்தன் வினையுருத்துக் குறுமகனாற் கொலையுண்ணக் காவலன் தன் இடஞ்சென்ற கண்ணகிதன் கண்ணீர் கண்டு மண்ணரசர் பெருந் தோன்றல் உண்ணீரற்று உயிரிழந்தமை மாமறையோன் வாய்கேட்டு மாசாத்துவான் தான் துறப்பவும் மனைக்கிழத்தி உயிரிழப்பவும் எனப் பெருந்துன்பமெய்திக் காவற்பெண்டும் அடித்தோழியுங் கடவுட் சாத்தன் உடனுறைந்த தேவந்தியும் உடன்கூடிச்சேயிழையைக் காண்டுமென்று மதுரைமாநகர் புகுந்து முதிரா முலைப்பூசல் கேட்டாங் கடைக்கலம் இழந்துயிர் இழந்த இடைக்குல மகள் இடம் எய்திஐயையவள் மகளோடும் வையை யொரு வழிக்கொண்டு மாமலைமிசை ஏறிக் கோமகள் தன் கோயில் புக்கு நங்கைக்குச் சிறப்பயர்ந்த செங்குட்டுவர்க்குத் திறமுரைப்பர்மன்.''

புதிதாக அமைக்கப்பட்ட பத்தினிக் கோட்டத்தின் குடமுழுக்கு விழா சிறப்பாக நடந்தது. அரசன் செய்த விழா அல்லவா? அந்த விழாவில் நம்முடைய நான்கு பெண்மணிகளும் கலந்துகொண்டு சிரத்தையோடு கண்டு

மகிழ்ந்தார்கள். கண்ணகி வழிபாட்டில் இவர்கள் கொண்ட சிரத்தையும் அக்கறையும் அங்கிருந்தவரின் கருத்தைக் கவர்ந்தன. சோழ நாட்டுக்கு அப்பாலிருந்து ஆண் மக்கள் துணையில்லாமல் வந்து சிரத்தையோடு வழிபடுகிற இவர்கள் யார்? ஒருவேளை பத்தினியாகிய கண்ணகியின் உறவினராக இருக்கக் கூடுமோ? இதுபற்றி அங்கிருந்த சிலர் இவர்களை விசாரித்தார்கள். அவர்களுக்கு இவர்கள் தாங்கள் யார் என்பதையும் கண்ணகிக்கும் தங்களுக்கும் உள்ள தொடர்பு இன்னதென்பதையும் கூறினார்கள். இது சாதாரணச் சிறு நிகழ்ச்சி. இதைக் காவியப்புலவரான இளங்கோவடிகள் இனிய சுவையுள்ள கவிதையாகச் சிலப்பதிகாரக் காவியத்தில் அமைத்திருக்கிறார். இச்செய்யுள்களைப் படியுங்கள்:

தேவந்தி சொன்னதாக இளங்கோவடிகள் கவிதையாகக் கூறுகிறார்:

> **''முடிமன்னர் மூவருங் காத்தோம்பும் தெய்வ**
> **வடபே ரிமய மலையிற் பிறந்து**
> **கடுவரல் கங்கைப் புனலாடிப் போந்த**
> **தொடிவளைத் தோளிக்குத் தோழிநான் கண்டீர்**
> **சோணாட்டார் பாவைக்குத் தோழிநான் கண்டீர்.''**

காவற்பெண்டு கூறியதைச் செய்யுளாக அமைக்கிறார்:

> **''மடம்படு சாயலாள் மாதவி தன்னைக்**
> **கடம்படாள் காதற் கணவன் கைப்பற்றிக்**
> **குடம்புகாக் கூவற் கொடுங்கானம் போந்த**
> **தடம்பெருங் கண்ணிக்குத் தாயர்நான் கண்டீர்**
> **தண்புகார்ப் பாவைக்குத் தாயர்நான் கண்டீர்.''**

அடித்தோழி கூறியதைக் கவிதையாக வடிக்கிறார்:

> **''தற்பயந்தாட் கில்லைத் தன்னைப் புறங்காத்த**
> **எற்பயந் தாட்கும் எனக்குமோர் சொல்லில்லைக்**
> **கற்புக் கடம்பூண்டு காதலன் பின்போந்த**
> **பொற்றொடி நங்கைக்குத் தோழிநான் கண்டீர்**
> **பூம்புகார்ப் பாவைக்குத் தோழிநான் கண்டீர்.''**

இளங்கோ அடிகள் கூறிக் காவியத்தைச் சிறப்புறச் செய்து காவியப் புலவரின் வாக்குத் திறமையினால் இக்கவிதைகள் கற்பவர் உள்ளத்தைக் கவர்ந்து கொள்கின்றன அல்லவோ?

வாய்விட்டுப் புலம்பினர்

பத்தினிக் கோட்டத்தில் வழிபாடு நடந்த பின்னர், எல்லோரும் சென்றுவிட்டனர். ஆனால்; நம்முடைய பெண்மணிகள் நால்வரும் அங்கேயே தங்கியிருந்தனர். இவர்கள் தனியே கோயிலில் சென்று பத்தினித் தெய்வ உருவமாகக் காட்சியளிக்கிற கண்ணகியின் சிலையை உயிருள்ள கண்ணகியாகவே கருதிக்கொண்டு தங்கள் மனத்திலிருந்த கருத்தை வாய் விட்டுக் கூறினார்கள். இவர்கள் வாய்விட்டு வருந்திக் கூறியதையும் காவியப் புலவர் இளங்கோ அடிகள் அழகாக இனிய கவிதைகளாக அமைத்துக் கூறுகிறார். இந்தக் கவிதைகளும் எழிலோடும் இனிமையோடும் சுவை பயக்கின்றன. கவிதையைப் படியுங்கள்:

தேவந்தி புலம்பியது:

"செய்தவம் இல்லாதேன், தீக்கனாக் கேட்டநாள்
எய்த வுணரா திருந்தேன். மற் றேன்செய்தேன்!
மொய்குழல் மங்கை! முலைப்பூசல் கேட்டநாள்
அவ்வை உயிர்வீவும் கேட்டாயோ, தோழி!
அம்மாமி தன்வீவும் கேட்டாயோ தோழி!

காவற்பெண்டு புலம்பியது:

"கோவலன் தன்னைக் குறுமகன் கோளிழைப்பக்
காவலன் தன்னுயிர் நீத்ததுதான் கேட்டேங்கிச்
சாவதுதான் வாழ்வென்று தானம் பலசெய்து
மாசாத்து வான்துறவுங் கேட்டாயோ, அன்னை!
மாநாய்கன் தன்துறவுங் கேட்டாயோ, அன்னை!"

அடித்தோழி புலம்பியது:

"காதலன் தன்வீவும் காதலிநீ பட்டதூஉம்
ஏதிலார் தாங்கூறும் ஏச்சுரையுங் கேட்டேங்கிப்
போதியின்கீழ் மாதவர்முன் புண்ணியதானம்புரிந்த
மாதவி தன்துறவுங் கேட்டாயோ, தோழி!
மணிமே கலைதுறவுங் கேட்டாயோ, தோழி!

ஐயையைக் காட்டித் தேவந்தி கூறியது:

"ஐயந்தீர் காட்சி அடைக்கலங் காத்தோம்ப
வல்லாதேன், பெற்றேன் மயலென் றுயிர்நீத்த
அவ்வை மகளிவள்தான் அம்மணம் பட்டிலாள்
வையெயிற்று ஐயையைக் கண்டாயோ தோழி!
மாமி மடமகளைக் கண்டாயோ தோழி!"

இந்த செய்யுள்களின் (அமைப்பும்) வனப்பும் இலக்கிய நயமும் புதுமையாக இருக்கின்றன. படிப்பவரின் கவனத்தைக் கவர்ந்து கொள்கின்றன. எத்தனை முறை படித்தாலும் தெவிட்டாமல் இருக்கின்றன. பல மாதங்கள் சென்று படித்தாலும் ஆண்டுகள் கடந்து படித்தாலும் எப்போதும் புது மணம் வீசிக்கொண்டிருக்கின்றன. இது காவியப் புலவனின் கவித்திறன் அன்றோ?

சிற்பக் கலைஞரும் ஓவியக்கலைஞரும் இசைப்புலவரும் நாட்டிய நாடகக் கலைஞரும் தத்தம் அழகுக் கலைகளை எழிலுடன் அமைக்கிறார்கள். இவர்களின் நுண்கலைகள் கண் வழியாகவும் செவி வழியாகவும் கருத்தைக் கவர்ந்து மனத்துக்கு மகிழ்ச்சியளிக்கின்றன. இக்கலைகள் எல்லாவற்றையும் விட மிகச் சிறந்த உயர்ந்த கலை காவியக்கலையே. கம்பனுடைய இராமாயணமும், திருத்தக்கதேவரின் சிந்தாமணியும், தோலாமொழித் தேவரின் சூளாமணியும், சீத்தலைச் சாத்தனாரின் மணிமேகலையும், இளங்கோ அடிகளின் சிலப்பதிகாரமும் தமிழரின் காவியச் செல்வங்கள். இந்தக் காவியங்களைப் படித்துப் படித்துச் சுவைத்து சுவைத்து இன்புறுவோர் பேரின்பம் அடைகின்றனர். இந்த இன்பத்தை நாமும் அடைவோமாக

தமிழ்வட்டம் ஆண்டுமலர் 1969

24. பத்தினிச் செய்யுளும் கண்ணகியும் - I

யாப்பருங்கலம் என்னும் இலக்கண நூலிலே அதன் விரிவுரைகாரர் ஒரு வெண்பாவை மேற்கோள் காட்டி அதனைப் பத்தினிச் செய்யுள் என்று கூறியுள்ளார். அந்தச் செய்யுள் இது.

"கண்டகம் பற்றிக் கடகமணி துளங்க
ஒண்செங் குருதியின் ஒஒகி!_ந்ததே - கெண்டிக்

கெழுதகைமை யில்லேன் கிடந்தூடப் பன்னாள்
அழுதகண் ணீர்துடைத்த கை.''

இந்த வெண்பாவைப்பற்றிச் சில அறிஞர்கள் ஆராய்ச்சி செய்து விசித்திர மான முடிவு கூறியுள்ளனர். இந்தச் செய்யுளைப் பாடியவர் சிலப்பதிகாரக் காவியத் தலைவியாகிய கண்ணகியார் என்றும், கோவலன் கண்ணகியின் வரலாறு இதில் கூறப்படுகிறது என்றும் இவர்கள் சொல்லுகிறார்கள். இதனோடு நிற்கவில்லை. இது, சிலப்பதிகாரக் காவியம் இயற்றப்படுவதற்கு முன்னே பாடப்பட்ட செய்யுள் என்றும், ஒரு பழைய கதையை இது கூறுகிறது என்றும், அந்தப் பழைய கதையை ஆதாரமாகக் கொண்டு பிற்காலத்திலே சிலப்பதிகாரக் காவியம் இயற்றப்பட்டதென்றும் எழுதியுள்ளார்கள். இவர் கள் கருத்து செம்மையானதுதானா, இவர்கள் ஆராய்ச்சி சரியா என்பதைப் பார்ப்போம். முதலில் இந்த அறிஞர்கள் என்ன கூறுகிறார்கள் என்பதைத் தெரிந்துகொள்வோம்.

இந்தப் பத்தினிச் செய்யுளைப்பற்றி முதன்முதலில் ஆராய்ந்தவர் திரு. மு. இராகவையங்கார் அவர்கள். இவர், தமது ''ஆராய்ச்சித் தொகுதி'' என்னும் நூலில் ''கண்ணகியின் தமிழ்ப் புலமை'' என்னும் தலைப்பில் எழுதிய கட்டுரையில் இவ்வாறு எழுதுகிறார்:-

''இனி, இப்பத்தினிச் செய்யுளை நோக்குமிடத்து, இது, தம் இன்னுயிர்க் கணவன் வெட்டுண்டு வீழ்ந்த நிலைகண்டு புலம்பிப் பாடிய தாதல் தெரியலாம். சங்க காலத்தே பத்தினித் தேவி என்று பரவப்பெற்ற வளும், பாண்டியன் ஏவலால் வெட்டுண்டு வீழ்ந்த கணவனுக்காகப் பரிந்து செயலற்று நின்றவளும் கோவலன் மனைவியே என்பது சொல்லவும் வேண்டுமோ? இவ்வெண்பாவில், 'கெழுதகைமை யில்லேன் ...... பன்னாள் அழுத கண்ணீர் துடைத்த கை' என்று கூறப்படுவதால் கணவனுடன் தனக்கு நெடுங்காலம் கூட்டமின்றிப் பிரிவு நிகழத் தன் நாயகன் பின்பு தலையளி செய்து போந்தமையும் நன்கு விளங்கும். அங்ஙனம் பன்னாளழுத கண்ணீரை மாற்றி அருள்புரிந்தது அவன் கரமேயாதலின், அக்கரம் தன்முன் குருதியளைந்து கிடக்கு நிலைக்கு வருந்தி 'ஒண்செங் குருதியின் ஒஒ கிடந்ததே' என்று புலம்பிப் பாடினள் நம் பத்தினிதேவி என்க.

''கண்பொழி புனல்சோரக் கடுவினை யுடையேன்முன்
புண்பொழி குருதியிராய்ப் பொடியாடிக் கிடப்பதோ''

என்றிவ்வாறு கண்ணகி, வெட்டுண்ட கணவன்முன் புலம்பி நின்ற நிலையை இளங்கோவடிகள் கூறுதலுங் காண்க. ...இத்தகைய அரிய பத்தினிப் பாட்டை இளங்கோவடிகள் எடுத்தாளாமைக்குக் காரணந் தெரிந்திலது ஆயினும் இச்செய்யுள் பத்தினித் தேவியது என்ற வழக்குப் பழமையான தென்பதிற் சிறிதும் ஐயமில்லை'' (பக்கம் 237-238.)

திரு. ச. வையாபுரிப் பிள்ளையவர்கள் இச்செய்யுளைப் பற்றித் தமது ''இலக்கிய மணிமாலை'' (1954) என்னும் நூலில் இவ்வாறு எழுதுகிறார்:-

ஒருத்தி தன் கணவன் கொலையுண்டு கிடந்த நிலைகண்டு பாடியதாக ஒரு வெண்பா இவ்விருத்தியில் (யாப்பெருங்கல விருத்தியில்) காணப்படு கிறது. ......இதனைப் 'பத்தினிச்' செய்யுள் என்று விருத்தியுரைகாரர் கூறினர். பத்தினியொருத்தியின் வரலாறு பற்றியதென்று இது கொள்ளத்தக்கது. ஊர்சூழ் வரியை நோக்குமிடத்து (சிலம்பு XIX 39-50) இப்பத்தினி கண்ணகி யாகலாமென்பது புலப்படும். இவள் வரலாறு ஒருபடியாக உருப்பெற்ற காலத்து, அவலச்சுவை மிகுந்த இப்பகுதியுடன் பிற கதைப்பகுதி களையும் அமைத்து வெண்பாவினால் நூல் ஒன்று ஒரு கவிஞன் செய்திருந்தானென்று கொள்ளலாம்'' (பக்கம் 134)

வையாபுரிப் பிள்ளையவர்கள் தாம் எழுதிய ''காவிய காலம்'' என்னும் புத்தகத்திலும் இவ்வாறு எழுதுகிறார்:-

''ஒருத்தி, தன் கணவன் கொலையுண்டு கிடந்த நிலைகண்டு பாடியதாக ஒரு செய்யுள் யாப்பருங்கல விருத்தியிலும், பேராசிரியர் உரை முதலிய வற்றிலும் காணப்படுகிறது. அதுவருமாறு:-

''கண்டகம் பற்றிக் கடகமணி துளங்க
ஒண்செங் குருதியின் ஓஒ கிடப்பதே-கெண்டிக்
கெழுதகைமை யில்லேன் கிடந்தூடப் பன்னாள்
அழுத கண்ணீர் துடைத்த கை.''

இரண்டாமடி ஐஞ்சீராய் மிக்கு வந்துள்ளது. ஆரிடப்போலி அல்லது ஆரிட வாசகம் என்று இதனைக் கூறுவர். ஆரிடம் அல்லது ஆர்ஷம் என்பதனால் இதுமிக்க பழமை வாய்ந்ததெனல் துணியப்படும். இச்செய்யுள் பத்தினிச் செய்யுளென வழங்கப்படுதலினாலே, பத்தினித் தெய்வமாகிய கண்ணகி வரலாறு பற்றியதென்றே கொள்ளத்தக்கது. . . . இங்ஙனமாகப் பழையதொரு

வரலாறு பற்றியே சிலப்பதிகாரக் கதைப்பொருள் தோன்றியதாகும்." (பக்கம் 105-106.)

வையாபுரிப் பிள்ளையின் ஆராய்ச்சியை அப்படியே பின்பற்றுகிற அவருடைய நண்பரான திரு. K. A. நீலகண்ட சாஸ்திரி, தாம் எழுதிய 'மணி மேகலை சிலப்பதிகாரக் காலம்' என்னும் ஆங்கிலக் கட்டுரையிலே, பிள்ளை யவர்கள் கூறிய கருத்தையே எழுதுகிறார்:-

"ஒரு பெண்மணி குருதியில் கிடக்கிற தன் கணவனின் இறந்த உடம்பைக்கண்டு புலம்பியதாக ஒரு பழைய வெண்பாவை யாப்பருங்கல விருத்தி மேற்கோள் காட்டுகிறது. இந்தச் செய்யுள் பத்தினிச் செய்யுள் என்று கூறப்படுகிறது. இதில், கண்ணகி கதையின் அடிப்படையான கருத்து உள்ளது என்பதில் ஐயமில்லை. இது ஆரிடச் செய்யுள் எனப்படுகிறது. இச் செய்யுளைச் சிலப்பதிகார நூலுக்கு முற்பட்டதாகக் கொள்ளலாம்."

"The Yapparungala Viruthi reproduces an old Venba in which a woman laments over the dead body of her husband lying in a pool of blood-and the Verse is marked Pattini Ceyyul-song of the chaste wife. There can be no doubt that we are here right in the heart of Kannaki story and as this verse is called "Arida' it must be taken to have preceded the cilappadikaram." (University of Ceylon Review Vol. VII. p. p. 21-27.)

இவ்வாறு இந்தப் பத்தினிச் செய்யுளைப்பற்றி இம்மூன்று அறிஞரும் கூறுகிறார்கள். இவர்களில் இராகவையங்கார், இப்பத்தினிச் செய்யுள் கண்ணகியார் பாடியது என்று கூறுகிறார். வையாபுரியாரும் நீலகண்டரும், இச்செய்யுள் கண்ணகியார் பாடியது அல்ல என்று கருதினாலும், இதில் கூறப் படுகிறவர்கள் கண்ணகியாரும் கோவலனும் என்று கருதுகிறார்கள் பிள்ளையவர்கள் இன்னும் ஒருபடி அதிகமாகச்சென்று, கண்ணகி சரிதத்தைப் பற்றிய ஒரு நூலை, ஒரு புலவர் வெண்பாவினால் இயற்றியிருந்தார் என்றும், அந்நூலின் ஒரு செய்யுள்தான் யாப்பருங்கல விருத்தியுரைக்காரர் மேற்கோள் காட்டிய பத்தினிச் செய்யுள் என்றும் கூறுகிறார்.

இம்மூவரும் சென்னைப் பல்கலைக் கழகத்தில் அலுவல் புரிந்தவர்கள் இராகவையங்காரும் வையாபுரிப் பிள்ளையும் பல்கலைக் கழகத்தில் தமிழ்

அகராதி வெளியீட்டில் அலுவல் செய்தவர்கள். அகராதி அலுவல் முடிந்த பிறகு பிள்ளையவர்கள் பல்கலைக்கழகத்துத் தமிழ்த்துறைத் தலைவராக இருந்தார். இதே பல்கலைக் கழகத்தில் சரித்திரத் துறைத் தலைவராக இருந் தவர் நீலகண்ட சாஸ்திரியார். இவர்கள் அடிக்கடி கலந்துபேசிக் கருத்துக் களைப் பரிமாறிக்கொண்டவர்கள். ஆகையால் இவ்வாராய்ச்சியில் ஒரே விதமான கருத்தைக் கூறுகிறார்கள். பத்தினிச் செய்யுளைப்பற்றி இவர்கள் கொண்ட கருத்தை மேலே காட்டினோம். இனி, இவர்களின் ஆராய்ச்சியும் முடிவும் சரிதானா என்பதைப் பார்ப்போம்.

யாப்பருங்கல விருத்தியுரைகாரர் ஷை வெண்பாவை மேற்கோள் காட்டி இதனைப் பத்தினிச் செய்யுள் என்று கூறினர். பத்தினி என்ற பெயரைக் கண்டதும், இம்மூன்றுபேரும், பத்தினி என்பது கண்ணகிதான் என்று முடிவு செய்துவிட்டனர். பத்தினிச் செய்யுளைப் பாடியவர் கண்ணகியார் என்று அய்யங்கார் முடிவுசெய்துவிட்டார். பத்தினிச் செய்யுள், கோவலனையும் கண்ணகியையும் பற்றியது என்று பிள்ளையவர்களும் சாஸ்திரியாரும் முடிவு செய்துவிட்டனர். கண்ணகியார் ஒருவர்மட்டுந்தானா பத்தினி? வேறு பத்தினிப் பெண்கள் தமிழ் நாட்டில் இருந்ததில்லையா? பத்தினிகளில் சிறந்தவர் மாபெரும் பத்தினியாகிய கண்ணகியார் என்பது எல்லோரும் அறிந்ததே. ஆனால், கண்ணகியாருக்கு முன்னும் பின்னும் பத்தினியர் பலர் உள்ளனர். அந்தப் பத்தினிப் பெண்களில், பத்தினிச் செய்யுளைப் பாடியவர் எந்தப் பத்தினியோ? கண்ணகியார் தான் ''பத்தினிச் செய்யுளை''ப் பாடினார் என்பதற்கு என்ன சான்று உள்ளது? பத்தினிச் செய்யுள், கண்ணகியார் பாடி யது என்றும் கண்ணகியாரைப்பற்றியது என்றும் இவர்கள் கருதியது பிழை யான கருத்தாகும். இவர்களின் கருத்துக்கு நேர்மாறாக இச்செய்யுளின் அகச் சான்று இருக்கிறது. இச்செய்யுள் கோவலனையும் கண்ணகியையும் பற்றியது அல்ல. அவர்களைப்பற்றி இந்த வெண்பாவில் ஒன்றும் கூறப்படவில்லை. வேறு யாரைப்பற்றியோ கூறுகிறது. செய்யுளைப்படித்துப் பாருங்கள்.

''கண்டகம் பற்றிக் கடகமணி துளங்க
ஒண்செங் குருதியின் ஓஒகிடந்ததே-கெண்டிக்
கெழுதகைமை யில்லேன் கிடந்தூடப் பன்னாள்
அழுதகண் ணீர்துடைத்த கை.''

செங்குருதியில் (இரத்தத்தில்) தோய்ந்து இறந்துகிடக்கிறான் ஒரு வீரன். அவன் கையிலே உடைவாள் (கண்டகம்) பிடித்திருக்கிறான். அல்லாமலும்

அவன் கையில் கடகம் அணிந்திருக்கிறான். அது மணிகள் பதிக்கப்பட்ட விலையுயர்ந்த கடகம். இச்செய்யுளின் முதல் இரண்டடிகள் இவற்றைக் கூறுகின்றன. யாரோ ஒரு வீரன் போர்க்களத்தில் இறந்துகிடப்பதை இச்செய்யுள் கூறுகிறது.

கோவலன் கொலையுண்டிறந்தபோது அவன் கையில் மணிக்கடகம் இல்லை; கட்டாரியும் இல்லை. இவை இரண்டையும் உடைய ஒருவன் இறந்துகிடப்பதாக இச்செய்யுள் கூறுகிறது. செய்யுளில் அகச்சான்று இவ்வாறு இருக்க, இதில் கூறப்படுகிறவன் கோவலன் என்று இந்த மூன்று அறிஞர்களும் கருதுகிறார்கள்! யாரோ ஒரு போர் வீரன் போர்க்களத்திலே இறந்துகிடக்கிறான் என்பதையும், போர் முடிந்த பிறகு அவ்வீரனுடைய மனைவியாகிய பத்தினிப் பெண் அவன் இறந்துகிடக்கும் நிலையைக்கண்டு புலம்பியதையும் இப்பத்தினிச் செய்யுள் பட்டப் பகல்போல் தெரிவிக்கிறது. அகச்சான்று தெளிவாக இருக்கிறது. அப்படியிருந்தும், இம்மூவரும். இறந்துகிடப்பவன் கோவலன் என்று கூறுகிறார்கள். இவர்கள் கூறுவதைப் பகுத்தறிவுள்ள உலகம் எப்படி ஏற்றுக்கொள்ள முடியும்?

இறந்துகிடப்பவன், கையில் மணிக் கடகம் அணிந்திருப்பதை இச்செய்யுள் கூறுகிறது. கோவலன் மதுரையில் கொலையுண்டிருந்தபோது, மணிக் கடகம் அணிந்திருந்ததாகச் சிலப்பதிகாரம் கூறவில்லை. செல்வங்களை எல்லாம் இழந்துவிட்ட கோவலனிடம் மணிக்கடகம் ஏது? சாதாரண பொன் கடகந்தான் ஏது? கோவலனிடம் கடகம் இருந்திருந்தால், அதை விற்காமல் கண்ணகியின் காற்சிலம்பை விற்க கொண்டுபோவானா? சங்க காலத்தில் மங்கையரின் காற்சிலம்புக்குத் தனிப்பெருமையும் மதிப்பும் இருந்தது. மங்கையர் மணம் செய்து கொள்ளும்போது, அவர்களின் காற்சிலம்பைக் கழிக்கும் சிலம்புகழி நோன்பு சிறப்பாக நடைபெற்றது. அக்காலத்து மகளிர் காற்சிலம்பைச் சிறந்த, தனிமதிப்புள்ள பொருளாகக் கருதியிருந்தனர். ஆகவே கோவலனிடம் மணிக் கடகம் இருந்திருந்தால், அதை விற்காமல் கண்ணகியின் காற்சிலம்பை விற்பதற்கு மணந்துணிய மாட்டான் கோவலன். அவனிடம் வேறு அணிகலன் இல்லாத வறுமை நிலையில், தன் மனைவியின் காற்சிலம்பை விற்பதற்குக் கொண்டுபோனான்.

எனவே, பத்தினிச் செய்யுளில், கையில் மணிக்கடகம் அணிந்து இறந்துகிடப்பதாகக் கூறப்படுகிறவன் கோவலன் அல்லன், வேறு யாரோ

போர் வீரன் என்பது உள்ளங்கை நெல்லிக்கனிபோல் தெரிகிறது. அவ்வீரன் கடகம் அணிந்து இருக்கிறான் என்று கூறப்படுவதால், அவன் செல்வம் படைத்த சேனைத் தலைவனாக இருக்கக்கூடும் என்பதும் தெரிகிறது.

இன்னும் அகச்சான்றும், இவ்வறிஞர்கள் கொண்ட கருத்து தவறானது என்பதைக் காட்டுகிறது. இறந்து கிடக்கிற வீரன், தன் கையில் கண்டகம் (உடைவாள்) ஏந்தியிருக்கிறான் என்று இந்தப் பத்தினிச் செய்யுள் கூறுகிறது. கோவலன் கொலையுண்டபோது அவன் கையில் உடைவாள் இருந்ததாகச் சிலப்பதிகாரம் கூறவில்லை. கோவலன் கையில் வாள் இருந்திருக்குமானால், அவன் வெட்டுண்டு மடிந்திருக்க மாட்டான். சிலப்பதிகார வரலாறு வேறு விதமாக முடிந்திருக்கும். ஏனென்றால், கோவலன் படைக்கலப் பயிற்சி யுள்ளவன் என்று சிலப்பதிகாரம் கூறுகிறது. மதங்கொண்ட யானை பிச்சைக் காரன் ஒருவனைத் தன் கையில் பிடித்துக்கொண்டபோது கோவலன், யானையின் கையிலிருந்து அவனை விடுவித்துத் தானும் தப்பித்துக்கொண் டான் என்று சிலப்பதிகாரம் கூறுகிறது. (சிலம்பு-15-ஆம் காதை 43-53.) இதிலிருந்து ''கடக்களிறு அடக்கிய கருணை மறவ''னாகிய கோவலன் யானைப் போர்ப் பழகியவன் என்பது தெரிகிறது. யானைப் போர் பழகிய வன் சாதாரண வாட்போரிலும் பழகியிருப்பானன்றோ?

மதங்கொண்ட யானையையும் அடக்கவல்ல கோவலன் மதுரையில் கொலையுண்டபோது, அவன் கையில் உடைவாள் இருந்திருக்குமானால், அவன் வெட்டுண்டு மடிந்திருக்கமாட்டான். அப்படி மடிந்திருந்தாலும் தற்காப்புக்காகப் போர் செய்து பிறகு மடிந்திருப்பான். கோவலன் ஆயுதம் இல்லாமல் அயர்ந்திருக்கும் நிலையில் கொலைசெய்யப்பட்டான் என்று சிலப்பதிகாரம் கூறுகிறது. இதற்கு நேர்மாறாகப் பத்தினிச் செய்யுள், கையில் கட்டாரி ஏந்திப்போர்செய்து இறந்து கிடக்கிற வீரனைக் கூறுகிறது. எனவே, இச்செய்யுளில் கூறப்படுகிறவன் கோவலன் அல்லன் என்பதும், அவன் வேறு யாரோ போர் வீரன் என்பதும் ஐயம் இல்லாமல் தெளிவாகத் தெரிகிறது. இவ்வளவு தெளிவான அகச்சான்று இருக்க, இதனைச் சிறிதும் கருதாமல், பல்கலைக் கழகத்து மூன்று அறிஞர்களும், இச்செய்யுளில் கூறப்பட்டவன் கோவலன் என்று கூறுகிறார்கள். இவர்கள் கருத்தை அறிவுடையோர் ஏற்றுக்கொள்வரோ?

"கெண்டிக் கெழுதகைமை யில்லேன் கிடந்தூடப் பன்னாள்
அழுதகண் ணீர்துடைத்த கை"

என்னும் இச்செய்யுளின் பின் இரண்டடிகளும், கண்ணகியைப்பற்றி எதையுங் கூறவில்லை, வேறு யாரோ ஒரு பெண்ணின் செய்தியைத் தான் கூறுகிறது. கற்புள்ள ஒரு பெண்மணியின் ஊடற் செய்தி இதில் கூறப்படு கிறது; அவளுடைய வாழ்க்கையிலே தன் கணவனுடன் பல நாட்கள் ஊடல் கூடல்கள் நிகழ்ந்ததைக் கூறுகிறாள், இச்செய்யுளில். இந்த ஊடல் கூடல்களைக் கண்ணகி கோவலனுடன் இணைத்துக் கூறுவது பொருந்தாது. கண்ணகிக்கும் கோவலனுக்கும் ஊடல் கூடல்கள் நிகழ்ந்ததாகச் சிலப்பதி காரம் கூறவில்லை. அதற்கு மாறாக, மாதவிக்கும் கோவலனுக்கும் பலமுறை ஊடல் கூடல்கள் நிகழ்ந்ததைச் சிலப்பதிகாரம் கூறுகிறது. கண்ணகியுங் கோவலனும் மதுரைக்குச் சென்ற பிறகுங்கூட அவர்களுக்குள் ஊடலும் கூடலும் நிகழவில்லை. அவர்களுக்கு அங்கு ஊடல் கூடல்களுக்கு வாய்ப்பும் ஏற்படவில்லை. எனவே, இச்செய்யுளின் பின் இரண்டடிகளும் கண்ணகியைப் பற்றியதல்ல; வேறு யாரோ ஒரு பத்தினிப்பெண்ணைப் பற்றிய செய்தியாகக் காணப்படுகிறது.

எனவே, இந்தப் பத்தினிச்செய்யுள், கோவலன் கண்ணகியரைப் பற்றியதல்ல, வேறு யாரோ ஒரு வீரனையும் அவன் மனைவியையும் பற்றிய செய்யுள் என்பது ஐயமில்லாமல் விளங்குகிறது. ஆனால், அய்யங்காரும், சாஸ்திரியாரும், பிள்ளையும், இச்செய்யுள் கோவலன் கண்ணகியரைப் பற்றியது என்று கூறினர். இவர்கள் இவ்வாறு கூறியதற்குக் காரணம் என்னவென்றால், யாப்பருங்கல உரையாசிரியர் இதனைப் பத்தினிச் செய்யுள் என்று கூறியதுதான். உரையாசிரியரின்மேல் தவறவில்லை. பத்தினி என்றால் கண்ணகிதான் என்று கருதிக்கொண்டது இவர்கள் தவறு. பத்தினி என்றால் பொருள் என்ன? பத்தினி என்றால் கற்புடைய பெண் என்பது பொருள். எனவே பத்தினிப் பெண்கள்-கற்புடைய பெண்கள்-பலர் இருந் திருக்கிறார்கள். அவர்களில் ஒரு பத்தினிப் பெண்ணைப்பற்றிய செய்யுள் இது. பத்தினி என்றால் கண்ணகி, பத்தினிச் செய்யுள் என்றால் கண்ணகியைப் பற்றிய செய்யுள் என்று ஏன் கருதவேண்டும்? செய்யுளில் கூறப்படுகிறதைப் பார்த்தாலே, இது கண்ணகி கோவலரைப்பற்றிய செய்தியல்ல என்பது நன்கு தெரிகிறதே. விழிப்பாக இருந்து இச்செய்யுளின் பொருளைக் கவனித்து,

அகச்சான்று புறச்சான்றுகளைக்கொண்டு ஆராய்ந்து பார்த்திருந்தால் இவர்கள் இத்தவறான கருத்தைக் கொண்டிருக்க மாட்டார்கள்.

பத்தினி என்பதன் பொருள் என்ன என்பதைச் சிந்திக்காமல் அகச்சான்று புறச்சான்றுகளைக் கருதாமல், பத்தினி என்றால் கண்ணகி ஒருவர்தான் என்று தவறான கருத்தை அடிப்படையாகக் கொண்டு ஆராய்ந்தபடியினாலே, இவர்களின் முடிவு தவறாயிற்று. தவறான ஆராய்ச்சியினால் பெற்ற தவறான முடிவை வைத்துக்கொண்டு அதன்மேலே யூகமான கருத்துக்களை இவர்கள் கற்பித்துக் கொண்டார்கள். பத்தினிச் செய்யுள், கண்ணகியின் வரலாற்றைக் கூறுகிற செய்தி என்றும், அது கண்ணகியார் பாடிய செய்யுள் என்றும் இவர்கள் கூறுவது மருட்சியே யல்லாமல் தெருட்சியல்ல. இது கண்ணகி கோவலரைப்பற்றிய செய்யுளாக இருந்தால், இச்செய்யுளை இளங்கோ அடிகள் தமது சிலப்பதிகாரத்தில் கூறியிருப்பார் அன்றோ? உரையாசிரியர்களாகிய அடியார்க்கு நல்லாரும் அரும்பத உரையாசிரியரும் தமது உரைகளில் மேற்கோள் காட்டியிருப் பார்கள் அல்லவா? வேறு யாரோ ஒரு பத்தினிப் பெண்ணைப்பற்றிய செய்யுள் ஆகையினாலே, இச்செய்யுளை அவர்கள் தமது உரையில் மேற் கோள் காட்டவில்லை. சிலப்பதிகார வரலாற்றுக்கும் இப்பத்தினிச் செய்யுளுக் கும் உண்மையில் யாதொரு தொடர்பும் இல்லை. யாரோ ஒரு பத்தினிப் பெண் போர்க்களத்தில் இறந்துபோன தன் கணவனைப் பற்றிப் பாடிய செய்யுள் இப்பத்தினிச் செய்யுள் என்பது தெளிவாகத் தெரிகிறது.

''இச்செய்யுள் பத்தினிச் செய்யுள் என வழங்குகிறபடியினாலே, பத்தினித் தெய்வமாகிய கண்ணகி வரலாற்றைப் பற்றியதென்றே கொள்ளத் தக்கது'' என்று வையாபுரிப் பிள்ளையும், ''இந்தச் செய்யுள் பத்தினிச் செய்யுள் என்று கூறப்படுகிறது. இதில் கண்ணகி கதையின் அடிப்படையான கருத்து உள்ளது என்பதில் ஐயமில்லை'' என்று நீலகண்ட சாஸ்திரியார் எழுதியது முற்றிலும் தவறு என்பது மேலேகாட்டிய காரணங்களினாலே நன்கு விளங்கும். பத்தினிச் செய்யுள் என்று பெயர் இருப்பதனாலேயே இந்தச் செய்யுள் எப்படி கண்ணகியின் வரலாறு ஆகும்? தமிழ்நாட்டிலே ஒரே ஒரு பத்தினிதான் உண்டா? கண்ணகிக்கு முன்னும் பின்னும் வேறு பத்தினிப் பெண்கள் இல்லையா? என்று மீண்டும் கேட்கிறோம்.

''இவள் வரலாறு ஒருபடியாக உருப்பெற்றகாலத்து, அவலச் சுவை மிகுந்த இப்பகுதியுடன் பிற கதைப் பகுதிகளையும் அமைத்து வெண்பா

வினால் நூல் ஒன்று ஒரு கவிஞன் செய்திருந்தான் என்று கொள்ளலாம்'' என்று வையாபுரிப் பிள்ளை எழுதியதும், ''இதில் கண்ணகி கதையின் அடிப்படையான கருத்து உள்ளது என்பதில் ஐயமில்லை'' என்று நீலகண்ட சாஸ்திரியார் எழுதியதும் பொருளற்ற வீண் கருத்தாகும். என்னை? பத்தினிச் செய்யுள் யாரோ ஒரு பத்தினியின் செய்யுளாயிருக்கும்போது, அச்செய்யுளி லிருந்து கண்ணகி வரலாறு தோன்றிற்று என்று கூறுவது மொட்டைத் தலைக்கும் முழங்காலுக்கும் முடிபோடுவது போலாகும்.

வையாபுரியாரும் நீலகண்டரும் இதனோடு நின்றார்களா? இல்லை. மேலும் மேலும் ஆகாயக்கோட்டையைக் கட்டிக்கொண்டு போகிறார்கள். மணிமேகலையையும் சிலப்பதிகாரத்தையும் பிற்காலத்து நூல்கள் என்று நிலைநாட்டவேண்டும் என்னும் ஆவேசத்தினால் அறிவுக்கு ஒவ்வாத காரணத்தைக் காட்டுகிறார்கள். தொல்காப்பியம், சொல்லதிகாரம் 100-ஆம் சூத்திர உரையில் தெய்வச் சிலையார் என்னும் உரையாசிரியர் ஒரு செய்யுளை மேற்கோள் காட்டியுள்ளார். அச்செய்யுள் இது:

''காதலியைக் கொண்டு கவுந்தியொடு கூடி
மாதரிக்குக் காட்டி மனையி னகன்றுபோய்க்
கோதி யிறைவனது கூடற்கட் கோவலன்சென்
றேத முறுதல் வினை.''

இச்செய்யுளைக்குறித்து, வையாபுரிப் பிள்ளையவர்கள் தமது, ''இலக்கிய மணிமாலை'' என்னும் நூலில் இவ்வாறு எழுதுகிறார்:-

''இவள் (கண்ணகியார்) வரலாறு ஒருபடியாக உருப்பெற்ற காலத்து, அவலச் சுவைமிகுந்த இப்பகுதியுடன் பிற கதைப்பகுதிகளையும் அமைத்து வெண்பாவினால் நூல் ஒன்று ஒரு கவிஞன் செய்திருந்தானென்று கொள்ள லாம். (தொல். சொல். 100.) தெய்வச்சிலையார் கூறும் வெண்பா இந்நூலைச் சேர்ந்ததாகலாம். 'ஆரிடப்போலி அல்லது ஆரிடவர்க்கம்' என்று முதற் செய்யுள் (பத்தினிச் செய்யுள்) குறிப்பிடப்படுவதால், இந்நூல் சிலப்பதிகாரத் திற்கு முற்பட்டதாதல்வேண்டும். எனவே இக்காவியத்துக்கு (சிலப்பதி காரத்துக்கு) முன்பே கண்ணகி வரலாறு தோன்றி வளர்ந்துள்ளதெனக் கருதுதல் தகும்'' (இலக்கிய மணிமாலை பக்கம் 135)

சிலப்பதிகாரத்துக்கு முன்பே கண்ணகி வரலாறு பற்றிய ஒரு வெண்பா நூல் இருந்தது என்று கூறுகிற வையாபுரிப் பிள்ளைக்கே இதுபற்றி உறுதியான

நம்பிக்கை இல்லை. ஏனென்றால், இவரே இன்னொரு இடத்தில் இதற்கு மாறுபட எழுதுகிறார். தமிழ் இலக்கிய சரிதத்தில் காவிய காலம் (1957) என்னும் நூலில் இவர், இக்கருத்துக்கு நேர்மாறாக இவ்வாறு எழுதுகிறார்:-

"சிலம்பு-அதிகாரம் என்னும் பெயர் நயம்பெற அமைந்ததாகும். இதில் கட்டுப்படுத்துதற்குரிய முன்னூல் முதலியன இல்லாமையால், மனோபாவனை யதேச்சையாகக் கவித்வ வானிற் பறந்து சென்று கவிஞனின் பெருமையை நன்கு புலப்படுத்துகிறது." (பக்கம் 94) என்று எழுதுகிறார். இவ்வாறு பிள்ளையவர்கள் தமது நூல்களிலேயே முன்னுக்குப் பின் முரணாக எழுதுகிறார். இலக்கிய மணிமாலையில், சில்பபதிகாரத்து முன்பு ஒரு வெண்பா நூல் கண்ணகி வரலாறுபற்றி இருந்திருக்கக்கூடும் என்று எழுதிய இவர், காவிய காலம் என்னும் நூலில் சிலப்பதிகாரத்துக்கு முன்னூல்கள் இல்லை என்று எழுதுகிறார். இதனால் இவருக்கு உறுதியான கருத்து இல்லை என்று தெரிகிறது. இவர் காட்டும் காரணம் இவருக்கே உடன்பாடு இல்லை என்பது நன்கு விளங்குகிறது.

தமிழ்ப்பொழில் - துணர் 35, மலர் 6,
செப்டம்பர் - அக்டோபர் 1959

25. பத்தினிச் செய்யுளும் கண்ணகியும் - II

இந்த ஆராய்ச்சியில் பிள்ளையவர்களின் அடிச்சுவடுகளைப் பின்பற்றிச் செல்கிற திரு. நீலகண்ட சாஸ்திரி, சிலப்பதிகாரத்துக்கு முன்பு ஒரு வெண்பா நூல் இருந்திருக்கக்கூடும் என்று பிள்ளையவர்கள் கூறியதை யொட்டி தமது ஆங்கிலக் கட்டுரையில் இவ்வாறு எழுதுகிறார்:-

"Another Venba of a narrative character refering to the trouble Kovalan got into at Madurai is cited by Deivaccilaiyar in his commentary on Tolkappiyam Sol. 100. Hence the superb work of Ilango, like the Ramayana of valmiki, must be taken to clothe in the best literary form a moving story of wide appeal which found expression in several other works besides, though not of equal merit." (University of Ceylon Review Vol. VII. 1949)

முதற்கோணல் முற்றும் கோணல் என்பது பழமொழி. வையாபுரி யாரும் நீலகண்டரும் அடிப்படையிலேயே தவறான கருத்தை வைத்துக் கொண்டு அதன்மேல் ஆராய்ச்சிக் கட்டடத்தைக் கட்டுகிறார்கள். அடிப்

படையே அழிந்துவிட்ட பிறகு கட்டடம் எப்படி நிற்க முடியும்? "இவள் (கண்ணகி) வரலாறு ஒருபடியாக உருப்பெற்ற காலத்து அவலச் சுவை மிகுந்த இப்பகுதியுடன் பின்கதைப் பகுதிகளையும் அமைத்து வெண்பா யாப்பியல் நூல் ஒன்று ஒரு கவிஞன் செய்திருந்தானென்பது கொள்ளலாம். தெய்வச் சிலையர் கூறும் வெண்பா இந்நூலைச் சேர்ந்ததாகலாம்" என்று தங்கள் கருத்தை (யூகத்தைத்) தெரிவிக்கிறார்கள் வையாபுரியாரும் நீலகண்டரும். (சிலப்பதிகாரத்துக்கு முன்னூல் முதலியன இல்லை என்று வையாபுரியார் மற்றோர் இடத்தில் எழுதியிருப்பதை மனதில் வைத்துக் கொள்ளுங்கள்.)

இவர்கள் காட்டிய பத்தினிச் செய்யுள், கண்ணகி கோவலரைப் பற்றியது அன்று என்று மேலே அகச்சான்று புறச்சான்றுகள் காட்டி நிறுவப் பட்டது. எனவே, கோவலன் கண்ணகியார் வரலாறு ஒரு பழைய கட்டுக்கதை என்று இவர்கள் நிலைநாட்ட எடுத்துக்கொண்ட முயற்சி வீண் முயற்சியா யிற்று. இவர்களுடைய போலிக் காரணங்கள் சரிந்து விழுந்தபிறகு, அதனோடு மற்ற யூகங்களும் சரிந்து விழுந்து விட்டன.

ஒரு புலவன் வெண்பாவினால் ஒரு நூல் இயற்றியிருக்கக்கூடும் என்றும், யாப்பருங்கல உரையாசிரியர் காட்டும் பத்தினிச் செய்யுளும், தெய்வச் சிலையார் மேற்கோள் காட்டும் "காதலியைக் கொண்டு" என்னும் வெண்பாவும் அந்நூலைச் சேர்ந்தவையாக இருக்கக் கூடும் என்றும், ஆகவே, கோவலன் கண்ணகியார் கதை ஒரு பழைய கதை என்றும், அப்பழைய கதையை ஆதாரமாகக்கொண்டு இளங்கோ அடிகள் சிலப்பதிகாரத்தை இயற்றினார் என்றும் பிள்ளையும் சாஸ்திரியாரும் ஒரு கற்பனையைக் கட்டு கிறார்கள். இவர்கள் இட்டுக் கட்டிக் கூறுவதுபோல ஒரு பழைய வெண்பா நூல் உண்மையில் இருந்திருக்குமானால் அந்நூற் பெயரையும் அந்நூலா சிரியன் பெயரையும் யாப்பருங்கல உரையாசிரியரும், தெய்வச்சிலை யாரும், அடியார்க்கு நல்லாரும், அரும்பத உரையாசிரியரும், இளங்கோ அடிகளும் தமது உரைகளிலும் நூல்களிலும் கூறியிருப்பார்கள் அன்றோ? இச்செய்யுள் ஆரிடச் செய்யுள் என்று கூறப்படுவதால், இச்செய்யுளைக் கொண்ட நூலை இயற்றியவர் பேர்போன இருடியாகத்தானே இருக்க வேண்டும்? அப்படிப்பட்ட இருடியின் பெயரும் அவர் இயற்றிய நூலின் பெயரும் சிறப்பாக எல்லோருக்கும் தெரிந்திருக்கும் அல்லவா? அவர் பெயரையும் நூலின் பெயரையும் ஏன் உரையாசிரியர்களும் மற்றவர்களும் கூறவில்லை? அப்படி ஒரு நூலும் ஆசிரியரும் இல்லாதபடியினாலே

அவர்கள் கூறவில்லை. மேற்கோள் காட்டப்பட்ட இச்செய்யுள்கள் தனிப்பாடல்கள் என்பது விளங்குகின்றது.

பத்தினிச் செய்யுள் என்பது உண்மையில், சங்க காலத்துக்குப் பிற்காலத்திலே இருந்த யாரோ ஒரு பத்தினிப் பெண் பாடிய ஒரு தனிப்பாடல் என்று தோன்றுகிறது. பத்தினிச் செய்யுளைக் கண்ணகியார் பாடிய செய்யுள் என்று தவறாகக் கருதிக்கொண்ட இராகவையங்காரும், இச்செய்யுளைத் தனிச் செய்யுளாகக் கருதினாரே தவிர, ஒரு நூலில் இருந்து எடுத்த செய்யுள் என்று கருதவில்லை. எனவே, கண்ணகி கதையைக் கூறுகிற வெண்பா நூலொன்று சிலப்பதிகாரம் இயற்றுவதற்கு முன்பு இருந்ததென்று சாஸ்திரியாரும் பிள்ளையும் யூகிப்பது ஆதாரம் அற்ற கட்டுக்கதை என விடுக.

ஒரே விருத்தப் பாவினால் இராமாயணக் கதை முழுவதையும் அமைத்து "ஏக விருத்த இராமாயணம்" என்னும் ஒரு விருத்தப்பா தனிப் பாடற்றிரட்டில் உண்டு. அதுபோல, சிலப்பதிகாரக் கதையை ஒரு வெண்பா வினால் அமைத்துப் பிற்காலத்தில் இருந்த யாரோ ஒரு புலவர் பாடியதுதான், தெய்வச் சிலையார் மேற்கோள் காட்டிய வெண்பா. ஏகவிருத்த இராமா யணம் ஒரு பழைய இராமாயண நூல் என்றும், அந்நூலைப் பார்த்துத்தான் கம்பன் இராமாயணத்தைப் பாடினான் என்று யாரேனும் ஒரு அறிஞர் புனைந்துரைப்பாரானால் எப்படியோ, அப்படித்தான் இருக்கிறது. "காதலியைக்கொண்டு" என்னும் வெண்பாவைப் பார்த்து இளங்கோவடிகள் சிலப்பதிகாரம் பாடினார் என்று சாஸ்திரியாரும் பிள்ளையும் கூறுவது. தக்க சான்று காட்டாமல், இப்படியிருக்கலாம், அப்படி இருக்கக்கூடும் என்று யூகங்களையும் யோசனைகளையும் சொல்லுவதுதான் ஆராய்ச்சியோ? பொறுப்புள்ள இடத்தில் இருந்துகொண்டு வாய் புளித்ததா, மாங்காய் புளித்ததா என்பதுபோல், எதையும் கூறிவிட்டால் அறிஞர் உலகம் ஏற்றுக் கொள்ளுமா?

மேலும் இவ்விரு அறிஞர்களும் எழுதுகிறார்கள்:- "ஆரிடப்போலி அல்லது ஆரிடவர்க்கம் என்று பத்தினிச் செய்யுள் குறிப்பிடப்படுவதால், இந்நூல் (இவர்கள் யூகமாகக் கற்பித்துக்கொண்ட நூல்) சிலப்பதிகாரத்துக்கு முற்பட்டதாதல் வேண்டும். எனவே, இக்காவியத்துக்கு (சிலப்பதிகாரத்துக்கு) முன்பே கண்ணகி வரலாறு தோன்றி வளர்ந்துள்ளதெனக் கருதுதல் தகும்" என்று வையாபுரியாரும் நீலகண்டரும் கூறுகிறார்கள். இவர்கள் இவ்வாறு

கூறுவதற்கு ஆதாரம் எங்கே? சான்று எங்கே உள்ளது?

ஆரிடம் என்றால், இருடிகள் வாக்கு என்பது பொருள். ஆரிடச் செய்யுள்கள் எல்லாம், சிலப்பதிகாரக் காலத்துக்கு முன்புதான் இயற்றப்படும், அதற்குப் பிற்காலத்தில் இயற்றப்படமாட்டா என்று இவர்கள் எங்கே கண்டார்கள்? சிலப்பதிகாரக் காலத்துக்குப் பின்பு ஆரிடச் செய்யுள்கள் இயற்றப்படக் கூடாது என்று எங்கேனும் கட்டளையோ நியதியோ உண்டா? இதற்கு ஆதாரம் காட்ட முடியுமா?

சாஸ்திரியாரும் பிள்ளையும் ஒன்று சேர்ந்துகொண்டு எதை எதையோ காரணங்காட்டி எழுதுகிறார்கள். அவலை நினைத்துக் கொண்டு உரலை இடிக்கிறார்கள். அவர்கள் காட்டும் சான்றுகள் போலிச் சான்றுகளாய், அவர்களுக்குத் துணை செய்யவில்லை. மாறாகவே காணப்படுகின்றன.

சிலப்பதிகாரமும் மணிமேகலையும் கட்டுக்கதைகள், சரித்திர சம்பந்தம் இல்லாத புனைகதைகள், மிகப் பிற்காலத்தில் இயற்றப்பட்ட நூல்கள்-என்பதை எப்படியாவது நிலைநாட்டவேண்டும் என்பதுதான் பிள்ளையும் சாஸ்திரியாரும் கொண்ட நோக்கம். இக்கருத்தை அடிப்படையாகக் கொண்டுதான் இவர்கள் தங்கள் ஆராய்ச்சிகளை எழுதியிருக்கிறார்கள். ஆராய்ச்சி என்பது, ஏற்கனவே ஒரு கருத்தை எண்ணிக்கொண்டு, அதற்கு ஏற்பச் சான்றுகளைத் தேடுவது அல்ல. சான்றுகள் காட்டுகிற வழியே சென்று அவை காட்டுகிற முடிவைக் காண்பதுதான் ஆராய்ச்சி. சிலப்பதிகாரமும் மணிமேகலையும் பிற்காலத்து நூல்கள் என்று சான்றுகள் காட்டுமானால், அதை யாவரும் ஏற்றுக்கொள்வர். ஆனால், அச்சான்றுகள் உண்மையான உறுதியான நேர்மையான சான்றுகளாக இருக்கவேண்டும்; ஆதாரம் அற்ற போலிச் சான்றுகளும் உண்மைபோல் தோன்றுகிற பொய்ச் சான்றுகளுமாக இருக்கக் கூடாது.

தமிழ்ப்பொழில் - துணர் 35, மலர் 7,
அக்டோபர் - நவம்பர், 1959

26. கண்ணகியார் தெய்வமான இடம் எது?

தமிழ் வரலாறு, கல்வெட்டு முதலிய துறைகளில் சிறந்து விளங்கும் ஆராய்ச்சிப் பேரறிஞரான இவர் சென்னையிலுள்ள மயிலையில் 16-12-1900இல் தோன்றியவர். தம் தமையனாரான சீனி கோவிந்த

ராசனாரிடமும், பேராசிரியர். ச. த. சற்குணரிடமும் பயின்றவர். இளமை யிலேயே தமிழ் நூல்களைப் பற்றி அறிவதற்கு வாய்ப்புக் கிடைக்கப் பெற்றமையால் அவற்றைப்பற்றிய அரிய நூல்களான கிறித்துவமும் தமிழும், சமணமும் தமிழும், பௌத்தமும் தமிழும் போன்ற அரிய நூல்களை நெடுங் காலத்திற்கு முன்னரே எழுதியுள்ளார். தமிழ் நூல்கள் மேல் உண்டான ஆர்வமே 'மறைந்துபோன தமிழ் நூல்கள்', 'பத்தொன்பதாம் நூற்றாண்டில் தமிழ் இலக்கியம்,' போன்ற அரிய நூல்களை இவர் எழுதுதற்குத் தூண்டு கோலாக இருந்துள்ளது. வயதுமுதிர்ந்த இந்நிலையிலும் அவ்வப்போது வரலாற்றுக் கட்டுரைகளை எழுதுவதிலும் சொற்பொழிவுகளை நிகழ்த்து வதிலும் ஈடுபட்டுள்ளார். சென்னை, அண்ணாமலைப் பல்கலைக் கழகங் களில் இவர் அறக்கட்டளைச் சொற்பொழிவுகள் நிகழ்த்தியுள்ளார். இவர் பல அரசினர் பரிசுகளையும் கேடயத்தையும் பெற்றுள்ளார்.

பாண்டியன் ஆரியப் படைகடந்த நெடுஞ்செழியனோடு கண்ணகியார் வழக்காடிப் பாண்டிமாதேவியின் சிலம்பைக் களவாடியதாகக் கோவலன் மேல் சுமத்தப்பட்ட குற்றச்சாட்டு பொய்யானது, அவன் கள்வன் அல்லன், அவனைப் பாண்டியன் கொன்றது அநீதியானது என்று சான்று காட்டி நிறுவி வழக்கை வென்றபிறகு அவர் மதுரை நகரத்தை விட்டு வெளியேறினார். வெளியேறுவதற்கு முன்பு கொற்றவை கோயில் வாயிலில் தம்முடைய கைகளில் அணிந்திருந்த சங்கு வளையல்களை உடைத்துக் கைம்மைக் கோலம் பூண்டார். அந்த இரவிலே மதுரைக் கோட்டையின் மேற்கு வாயில் வழியாக வெளியேறித் தன்னந் தனியே வைகையாற்றின் கரை வழியே மேற்கு நோக்கி நடந்தார். மரணமடைந்த தம்முடைய கணவனைக் காண் பதற்கு முன்னர் இருப்பதுமில்லை நிற்பதுமில்லை உறங்குவதுமில்லை என்று உறுதி செய்துகொண்டு இரவு பகலாகத் தாம் எங்குச் செல்கிறார் என்ற குறிக்கோளில்லாமல் நடந்தார். அதாவது, தாமும் உயிர்விட்டு, விண்ணுலகஞ் சென்ற தம்முடைய கணவனை அடைவது என்று முடிவு செய்துகொண்டார். ஆனால், தற்கொலை செய்துகொண்டு உயிர்விடுகிற பாவச் செயலைச் செய்ய அவர் விரும்பவில்லை. ஆகையால், ஓயாமல் நடந்துகொண்டே யிருப்பது, எங்கு உயிர் பிரிகிறதோ அங்கு உயிர் விடுவது என்று முடிவு செய்துகொண்டு கண்ணகியார் வைகையாற்றின் கரை வழியாக தம்முடைய இறுதிப்பயணத்தை மேற்கொண்டார்.

''கருத்துறு கணவற் கண்டபின் அல்லது
இருத்தலு மில்லேன் நிற்றலும் இலனெனக்
கொற்றவை வாயில் பொற்றொடி தகர்த்து
கீழ்த்திசை வாயில்கணவனொடு புகுந்தேன்
மேற்றிசை வாயில் வறியேன் பெயர்கென
இரவும் பகலும் மயங்கினள் கையற்று
உரவுநீர் வையை ஒருகரைக் கொண்டாங்கு''

(கட்டுரை காதை, 179-185)

''நிற்காமலும் இருக்காமலும் இரவு பகல் பாராமலும் திக்குத்திசை தெரியாமல் எங்குப் போகிறார் என்றறியாமல் கண்ணகியார் நெடுக நடந்தார். அவர் நடந்த இடங்கள் மேடு பள்ளங்களும் காடுகளும் குன்றுகளுமாக இருந்தன. ஓய்வு உறக்கம் இல்லாமல் பதினான்கு நாள்களாகத் தொடர்ந்து வழி நடந்தார். (மகாபாரதத்தில் பஞ்சபாண்டவர் தம்முடைய இறுதிக் காலத்தில் வடக்கு நோக்கி நீள் யாத்திரை செய்தார்கள் என்று கூறுவதை இங்கே நினைவு கொள்ளலாம்.)

பதினான்கு நாள்களாக ஊணுறக்கமின்றி ஓயாமல் நடந்த கண்ணகி யாரின் உடம்பு இளைத்து வாடி வதங்கிக் கண் பஞ்சடைந்திருக்க வேண்டும். பதினைந்தாம் நாள் அவர் ஒரு குன்றின்மேல் நடந்தபோது மேலும் அடியெடுத்து வைக்க முடியாமல் சோர்ந்து போனார். இளைப்பும் களைப்பும் மேலிட்டன. அருகிலிருந்த வேங்கை மரத்தின் கீழே அமர்ந்தார். அந்தக் குன்றின் சாரலிலே குறிச்சியில் வாழ்ந்த குறச்சிறுமிகள், புதியவள் ஒருத்தி அங்கு வந்திருப்பதைக் கண்டு ஓடிவந்து அவரைச் சூழ்ந்து கொண் டனர். 'அம்மையர்! நீங்கள் யார்? எங்கிருந்து வருகிறீர்? எங்குச் செல்கிறீர்?' என்று குறச்சிறுமியர் வினவினார்கள். கண்ணகியாரால் பேச முடியவில்லை. நாக்குழறத் தட்டுத்தடுமாறிப் பேசினார். தம்முடைய கணவன் மதுரையில் கொல்லப்பட்டதும், தாம் மதுரையை எரித்த பிறகு வழி நடந்து வந்ததும் ஆகிய செய்தியைச் சுருக்கமாகக் கூறினார். அவரால் மேலும் பேச முடிய வில்லை. அப்போது அவருடைய உயிர் பிரிந்தது. கண்ணகியார் தெய்வம் ஆனார், அஃதாவது இறந்து விட்டார்.

''அவல என்னாள் அவலித் திழிதலின்
மிசைய என்னாள் மிசைவைத் தேறலின்
கடல்வயிறு கிழித்து மலைநெஞ்சு பிளந்தாங்கு

அவுணரைக் கடந்த சுடரிலை நெடுவேல்
நெடுவேள் குன்றம் அடிவைத் தேறிப்
பூத்த வேங்கைப் பொங்கர்க் கீழோர்
'தீத்தொழி லாட்டியேன் யானென்'றேங்கி
எழுநாள் இரட்டி எல்லை சென்றபின்''

(கட்டுரை காதை, 186-193)

உயிர்நீத்தார்.

(தீத்தொழிலாட்டியேன் யான்-குறத்தியர் கேட்கத் தீத்தொழிலாட்டி யேன் யான் என்று சொல்லி. ஏங்கி-என்றது சொல்லி என்றவாறு. பழைய அரும்பதவுரை.)

கண்ணகியார் இறந்து போனதைக் காவியப் புலவரான இளங்கோ அடிகள் அழகாகக் கற்பனை செய்துள்ளார். தேவர்கள் கோவலனை விமானத் தில் ஏற்றிக்கொண்டு, உயிர் விட்டுக் கொண்டிருக்கும் கண்ணகியார் இடத்துக்கு வந்து அவனோடு அவரை விமானத்தில் ஏற்றிக்கொண்டு வானு லகம் சென்றார்கள் என்று இளங்கோ அடிகள் கற்பனை செய்கிறார். சிலப்பதி காரம் காவிய நூல் ஆகையால், காவியத்துக்குக் கற்பனை வேண்டி யிருக்கிறது. இந்தக் கற்பனை காவியத்துக்கு வியப்புச் சுவையைத் தருகிறது. மேலும், சிலப்பதிகாரம் நாடக நூல் ஆகையாலும், இந்தக் கற்பனைக் காட்சி, தேவர்கள் கோவலனோடு விமானத்தில் வந்து இறங்கி மனித உருவத்தை விட்டுத் தெய்வ உருவத்தைப் பெற்ற கண்ணகியை அவனோடு ஏற்றிக் கொண்டு தேவருலகத்துக்குச் செல்லுங் காட்சி நாடகத்துக்குச் சிறப்பை யளிக்கிறது. வியப்புச்சுவையளிக்கிற இந்தக் காட்சியை இளங்கோ அடிகள் தம்முடைய காவியத்தில் அழகாகக் கற்பனை செய்திருக்கிறார்.

''தொழுநாள் இதுவெனத் தோன்ற வாழ்த்திப்
பீடுகெழு நங்கை பெரும்பெயர் ஏத்தி
வாடா மாமலர் மாரி பெய்தாங்கு
அமரர்க் கரசன் தமர்வந் தேத்தக்
கோநகர் பிழைத்த கோவலன் தன்னொடு
வான வூர்தி ஏறினள் மாதோ
கானமர் புரிகுழல் கண்ணகி தானென்''

(கட்டுரை காதை, 194-200)

மேலும், இளங்கோ அடிகள் இந்தக் கற்பனையைக் குன்றக் குரவையிலும் உறுதிப்படுத்துகிறார்.

> **"மணமதுரையோ டரசுகேடுற**
> **வல்வினைவந் துருத்தகாலைக்**
> **கணவனையங் கிழந்துபோந்த**
> **கடுவினையேன் யானென்றாள்**
> **என்றலும் இறைஞ்சியஞ்சி**
> **இணைவளைக்கை எதிர்கூப்பி**
> **நின்றவெல்லையுள் வானவரும்**
> **நெடுமாரி மலர்பொழிந்து**
> **குன்றவரும் கண்டுநிற்பக்**
> **கொழுநனொடு கொண்டுபோயினார்"**

(குன்றக்குரவை, உரைப்பாட்டுமடை.)

காவியத்துக்கும் நாடகத்துக்கும் வியப்புச் சுவையூட்டுவதற்கு இளங்கோ அடிகள் கற்பித்த இந்தக் கற்பனையைச் சரித்திரக்காரர் உண்மை நிகழ்ச்சி என்று கொள்ள மாட்டார். கண்ணகியார் குன்றின்மேல் வேங்கை மரத்தின்கீழே உயிர் நீத்தார் என்பதை மட்டும் இயற்கையான உண்மை நிகழ்ச்சி என்று கொள்வார்கள். இது நிற்க.

கண்ணகியார் உயிர்விட்ட இடம் எது என்பதை ஆராய்வதற்கு இந்தக் கட்டுரையைத் தொடங்கினோம். அதனைத் தொடர்வோம்.

மாறுபட்ட கருத்துகள்

கண்ணகியார் 'நெடுவேள் குன்றம் அடிவைத் தேறிப், பூத்த வேங்கைப் பொங்கர்க்கீழ்' உயிர் விட்டார் என்று இளங்கோ அடிகள் கூறுகிறார். அந்த நெடுவேள் குன்றம் எது என்பதை அறிய வேண்டும். நெடுவேள் குன்றம் எது என்பது பற்றிப் பழைய உரையாசிரியர்கள் மாறுபட்டு வெவ்வேறு இடங்களைக் கூறுகிறார்கள். சிலப்பதிகாரத்தின் பழைய உரையாசிரியர் (அரும்பத உரையாசிரியர்) நெடுவேள் குன்றம் என்பது திருச்செங்கோடு மலை என்றும், அவருக்குப் பிற்காலத்தவரான அடியார்க்கு நல்லார் (சேர நாட்டு மேற்குக் கடற்கரை ஓரமாக உள்ள) கொடுங்கோளூர்க்குப் பக்கத்திலுள்ள செங்குன்று மலை என்றும் கூறுகிறார்கள். "நெடுவேள் குன்றம்" (கட்டுரை கதை, 190)

என்பதற்குப் பழைய அரும்பத உரையாசிரியர், 'நெடுவேள் குன்று - திருச் செங்கோடு' என்று உரை எழுதியுள்ளார். அஃதாவது கொங்கு நாட்டில் ஈரோட்டுக்கு அடுத்துள்ள திருச்செங்கோடு மலையைக் கூறுகிறார்.

அவருக்குப் பின்னவரான அடியார்க்கு நல்லார், சிலப்பதிகாரப் பதிகத்தின் மூன்றாவது வரியான, 'குன்றக்குறவர் ஒருங்குடன் கூடி' என்பதற்கு உரை எழுதுகிறவர், 'குன்றம்-கொடுங்கோளூர்க்கு அயலதாகிய செங்குன்றென்னு மலை' என்று எழுதுகிறார். எழுதிய பிறகு, பழைய அரும்பத உரையாசிரியர் கூறியதை மறுக்கவும் செய்கிறார். ''அது திருச்செங் கோடு என்பாரலெனின், அவர் அறியார்'' என்று கூறிக் காரணத்தையும் சொல்லுகிறார். இவர் கூறுகிற காரணமாவது: ''என்னை? அத்திருச்செங் கோடு வஞ்சி நகர்க்கு (கொடுங்கோளூர்க்கு) வடகீழ்த்திசைக் கண்ணதாய் அறுபதின்காத ஆறு உண்டாகலானும் அரசனும் உரிமையும் (செங்குட்டு வனும் அவனுடைய அரசியும்) மலை காண்குவமென்று வந்து, கண்ட அன்றே வஞ்சி புகுதலானும் அது கூடாமையினென்க'' (சிலப்பதிகாரம், அடியார்க்கு நல்லார் உரை.)

கண்ணகியார் உயிர்விட்ட இடம் நெடுவேள் குன்று என்று கூறிய இளங்கோ அடிகள் செங்குன்று எங்கிருக்கிறது என்று கூறவில்லை. நெடு வேள் குன்றம், கொங்கு நாட்டிலுள்ள திருச்செங்கோடு மலை என்பது பழைய அரும்பத உரையாசிரியர் கருத்து. அஃதன்று, அது சேரநாட்டில் கடற்கரைக்கு அருகிலிருந்த, கொடுங்கோளூர்க்குப் பக்கத்திலிருந்த செங்குன்று என்பது அடியார்க்கு நல்லாரின் கருத்து. அஃதாவது, மதுரையிலிருந்து பதினான்கு நாள்கள் வழிநடந்த கண்ணகியார் கொங்கு நாட்டுத் திருச்செங்கோடு மலைக்கு வந்து அங்கு உயிர் நீத்தார் என்று அரும்பதவுரையாசிரியரும், சேர நாட்டுக் கொடுங்கோளூர்க்கு (வஞ்சிக் கருவூருக்கு)ப் பக்கத்தில் செங்குன்று என்னும் குன்றுக்கு வந்து உயிர் நீத்தார் என்று அடியார்க்கு நல்லாரும் மாறுபடக் கூறுகிறார்கள்.

கோவிந்தராசனார் கருத்து

பேராசிரியர் சி. கோவிந்தராசனார் இதுபற்றி ஆராய்ந்து பாண்டி நாட்டில் கம்பம் பள்ளத்தாக்கில் உள்ள சுருளிமலை என்னும் குன்றுதான் நெடுவேள் குன்று என்றும் அங்குதான் கண்ணகியார் உயிர் விட்டார் என்றும் அந்த இடத்தில் சேரன் செங்குட்டுவன் கண்ணகிக்குப் பத்தினிக் கோட்டம்

அமைத்தான் என்றும் கூறுகிறார். நெடுவேள் குன்று என்னும் பெயர் பிற்காலத்தில் சுருளிமலை என்று மாறிவிட்டது என்றும் கூறுகிறார். 'இதுதான் சேரன் செங்குட்டுவன் அமைத்த கண்ணகி சிலை' என்னும் தலைப்பில் ஆனந்த விகடனில் (27-2-1972இல்) இவர் இது பற்றி நீண்டதோர் கட்டுரை எழுதியிருக்கிறார். அந்த நீண்ட கட்டுரையின் கருத்தைச் சுருக்கமாக இங்குத் தொகுத்துக் கூறுவோம்.

''வர்ஷ நாடு என்று குறிப்பிடப்பட்ட கம்பம் பள்ளத்தாக்கின் காட்டுப் பிரதேசம் பரந்துகிடக்கிறது. இப்பள்ளத்தாக்கைச் சூழ்ந்து முப்புறமும் சுவர் வைத்தது போல் சுருளிமலைத் தொடரும் பழனி மலைத் தொடரும் இணைந்து நிற்கின்றன.'' ''சுருளிமலை தான் நெடுவேள் குன்றம்.'' ''நெடு வேள் குன்றம் என்ற பெயர், மலையிலிருந்து சுருண்டு விழும் அருவியின் பெயரால் சுருளிமலை என்று மாறியிருக்கிறது.'' ''வர்ஷ நாடு என்னும் மலையடிவாரப் பகுதிகளை ஆராய்ந்து பார்த்தபோது கீழக் கூடலூருக்குத் தெற்கே உள்ள பழைய கோயிலில் ஒரு குத்துக் கல்லைக் கண்டேன். மங்கல தேவி அம்மன் கோவிலுக்குச் சேர மன்னர் ஒருவர் தர்மமாக அளித்த நிலங்களைப் பற்றிய செய்தி அதில் இருந்தது. கி.பி. 14ஆம் நூற்றாண்டுக் கல்வெட்டாகும் அது.''

''மிகப் பழமையோடு கூடியதும் பலி பீடத்துடன் இருப்பதுமாகிய மூன்றாவது கோயிலை அடைந்தேன். உள்ளே சுமார் இரண்டடி உயர அளவில் ஒரே கல்லில் இரண்டு கைகளுடன் இடக் காலைப் பீடத்தில் மடக்கி, வலக் காலை ஊன்றிய பாங்கில் இருந்த ஒரு பெண்சிலை, இடிபாடுகளுக் கிடையே காணப்பட்டது. அதன் தலையில் கீரிடம் இல்லை. கொண்டையில் விரிந்த கூந்தல்போல இருபுறமும் அழகு செய்யப்பட்டிருந்தது. இடப்புற மார்பு சிறியதாக இருந்தது. இதுவே செங்குட்டுவன் அமைத்த கண்ணகி சிலை.'' ''சிலப்பதிகாரத்தில் குன்றக்குரவை என்னும் காதையுள்....... அருவியினையுடைய நெடுவேள் குன்றத்தின்மீது, வேங்கை மரத்து நல்ல நிழலின்கண்ணே (கண்ணகியை) ஒப்பற்ற தெய்வமாகப் பண்ணிக் கொள்ளுமின் என்று கூறுவதாக ஆசிரியர் குறிப்பிட்டுள்ளார். அப்பகுதி இதுவேயாகும்.''

''பின்னர், பேரியாற்றின் (பெரியாறு) கரையின் மலைவளம் காண வந்திருந்த சேரன் செங்குட்டுவனிடம் மலைவாழ் வேடர்கள் (குறவர்கள்)

கண்ணகி இறந்த இடம் இதுவென்று குறித்துக் காட்டியஇடத்திலேயே அம்மன்னன் பத்தினிக்கோட்டம் அமைத்துள்ளான்... எனவே இளங்கோ அடிகள் சிலப்பதிகாரத்தில் பல இடங்களில் குறிப்பிடும் நெடுவேள் குன்றமும் பத்தினிக் கோட்டமும் இதுதான். சேரன் செங்குட்டு வன் அமைத்த கண்ணகி சிலையும் இதுவே."

பேராசிரியர் சி. கோவிந்தராசனார் எழுதியுள்ள கட்டுரையின் முக்கியமான சாரம் இதுவே. இதில் நான்கு கருத்துக்களைக் கூறுகிறார். அவை: 1. நெடுவேள் குன்று என்று சிலப்பதிகாரம் கூறுவது, பாண்டி நாட்டில் கம்பம் பள்ளத்தாக்கு அடுத்துள்ள சுருளிமலை. 2. நெடுவேள் குன்று என்று பெயர் பெற்றிருந்த சுருளிமலையின் மேல் கண்ணகியார் உயிர் விட்டார். 3. இந்த இடத்தில்தான் சேரன் செங்குட்டுவன் கண்ணகிக்குப் பத்தினிக் கோட்டம் அமைத்தான். 4. இப்போது இங்குக் காணப்படுகிற சிலையுருவம் செங்குட்டுவன் அமைத்த கண்ணகியின் சிலையுருவமாகும்.

நெடுவேள் குன்றம் என்பதற்கு இவ்வாறு வெவ்வேறு மூன்று இடங்கள் கூறப்படுகின்றன. கண்ணகியார் ஏதோ ஓர் இடத்தில் மட்டும் உயிர் விட்டிருக்க வேண்டுமேயல்லாமல் மூன்று இடங்களில் உயிர்விட்டிருக்க முடியாது. ஆகவே, கண்ணகியார், இந்த மூன்று குன்றுகளில் ஏதேனும் ஒரு குன்றின்மேல் உயிர்விட்டிருக்க வேண்டும். அப்படியானால் அந்தக் குன்று எது? திரு. கோவிந்தராசனார் கூறுவதுபோல சுருளிமலைக் குன்றுதானா, அல்லது உரையாசிரியர்கள் கூறுகிற குன்றுகளா? அல்லது இம்மூன்று குன்று களும் அல்லாத வேறு குன்றா? இவற்றை ஆராய்வோம்.

நெடுவேள் குன்றம்

நெடுவேள் ஆகிய முருகன் தமிழரின் தொன்மையான கடவுள். முருகன் சிறப்பாக மலைகளிலே எழுந்தருளியிருக்கிறான் என்பது தமிழர் நம்பிக்கை. குன்றுகள் மலைகள் தோறும் அவன் எழுந்தருளியிருக்கிறான். இந்த முறையிலேதான் இளங்கோவடிகள் நெடுவேள் குன்றம் ஒன்றைக் கூறினார். அந்தக் குன்றம் எங்கிருந்தது என்பதைத் திட்டவட்டமாக அவர் கூறவில்லை. முருகன் இருந்த ஒரு குன்றின்மேலே கண்ணகியார் உயிர் விட்டார். அந்தக் காலத்திலே குன்றுகளிலும் மலைச் சரிவுகளிலும் குறவர் (இக்காலத்து நாடோடிக் குறவர் அல்லர்) வாழ்ந்து வந்தார்கள். கண்ணகியார் உயிர்விட்ட குன்றம் எது? இளங்கோ அடிகள் அந்தக் குன்றம் இருந்த

இடத்தைத் திட்டவட்டமாகச் சுட்டிக் கூறவில்லை. 'நெடுவேள் குன்றம்' என்று கூறுகிறார். முருகனுக்குக் கோயில் உள்ள குன்றுகள் எல்லாம் நெடுவேள் குன்றுதான். ஆகவே கண்ணகியார் உயிர்நீத்த குன்று எது? என்கிற கேள்வி எழுகிறது. இதற்கு விடை என்ன?

அரும்பத உரையாசிரியர், அடியார்க்கு நல்லார், கோவிந்தராசனார் ஆகிய மூவரும் வெவ்வேறு இடத்தில் வெவ்வேறு குன்றுகளைக் காட்டு கிறார்கள். இவர்கள் காட்டுகிற நெடுவேள் குன்றங்கள் தவறான இடங்கள். இவர்கள் காட்டுகிற இடங்களில் கண்ணகியார் உயிர் விட்டிருக்க முடியாது. அது வேறு இடமாக இருக்க வேண்டும் என்று சிலப்பதிகாரத்தில் உள்ள சில குறிப்புகளினால் தெரிகிறது. இளங்கோவடிகள், கண்ணகியார் உயிர்விட்ட நெடுவேள் குன்றத்தைச் சில இடங்களில் நுட்பமாகக் குறிப்பிடுகிறார். அவர் கூறுகிற நுட்பமான குறிப்புகளைக் கொண்டு ஆராய்ந்து பார்த்தால், அவர் சுட்டுகிற நெடுவேள் குன்று இவர்கள் காட்டுகிற நெடுவேள் குன்றுகள் அல்ல என்பது தெரிகிறது.

இளங்கோ அடிகள் கூறுவது

கண்ணகியார் உயிர்விட்ட இடத்தைப் பற்றி இளங்கோவடிகள் தம் முடைய சிலப்பதிகாரக் காவியத்தில் மூன்று குறிப்புகளை நுட்பமாகக் கூறுகிறார். அந்த நுட்பமான குறிப்புகள் எவை என்பதைப் பார்ப்போம். சேர மன்னன் செங்குட்டுவன் தன்னுடைய அரசியை நோக்கி, 'பாண்டிமாதேவி, கண்ணகி என்னும் இரண்டு பெண்மணிகளில் நீ போற்றுகிறவர் யார்?' என்று வினவினபோது அரசியார், 'பாண்டிமாதேவியார் விண்ணுலகத்திலே பெருந் திருவுறுக, நம்முடைய நாட்டுக்கு வந்த பத்தினியை (கண்ணகியை)ச் சிறப் பிக்க வேண்டும்' என்று விடையிறுத்தார். "நம் அகநாடடைந்த இப்பத்தினிக் கடவுளைப் பரசல் வேண்டும்" (சிலம்பு, காட்சிக்காதை, 113-114) இதனால் கண்ணகியார் முடிவாகச் சென்றது சேரர் ஆட்சிக்குட்பட்ட நாடு என்பது தெரிகிறது.

கண்ணகியார் இறுதியாகச் சேர நாட்டுக்குச் சென்றதை இளங் கோவடிகள் இன்னொரு இடத்திலுங் கூறுகிறார். சேரன் செங்குட்டுவன் இமயமலைக்குச் சென்று கல் எடுத்துக் கங்கையில் நீர்ப்படை செய்து கங்கைக் கரைமேல் பாசறையில் தங்கியிருந்தான். அப்போது சோழ நாட்டவனான மாடலன் என்னும் மறையவன் (இவன் மதுரையில் கோவலன் கண்ணகி

கவுந்தி அடிகள் ஆகிய மூவரையும் சந்தித்தவன், மதுரையில் கோவலன் இறந்தபோதும் கண்ணகி வழக்காடினபிறகு மதுரையை எரித்தபோதும் அங்கிருந்து நேரில் கண்டவன்) கங்கையாற்றுக்குத் தீர்த்த யாத்திரை சென்றவன் தற்செயலாகச் செங்குட்டுவனைப் பாசறையில் கண்டான். கண்டு அரசனோடு உரையாடினபோது,

"கொலைக்களப் பட்ட கோவலன் மனைவி,
குடவர் கோவே! நின்னாடு புகுந்து
வடதிசை மன்னர் மணிமுடி ஏறினள்"

(நீர்ப்படைக் காதை, 63-65)

என்று கூறினான். கண்ணகியார் சேர நாட்டுக்குச் சென்றார் என்பதை இக்குறிப்பு மூலமாக இளங்கோ அடிகள் கூறுவது அறிக.

சேரநாட்டுத் தலைநகரான வஞ்சிமாநகரத்தில் செங்குட்டுவன் கண்ணகிக்குக் கோட்டம் அமைத்துச் சிறப்புச் செய்தான். அவ்வமயம் வஞ்சி நகரத்து மகளிர் கண்ணகியின் புகழைப் பாடுவதற்குப் பத்தினிக் கோட்டத் துக்கு வந்தார்கள் வந்தவர்கள் தங்கள் தோழியர்களையும் பத்தினிக் கோட்டத்துக்கு அழைத்தார்கள் அவர்கள்,

"செங்கோல் வளைய
உயிர்வாழார் பாண்டியர்என்று
எங்கோ முறைநா
இயம்ப, இந் நாடடைந்த
பைந்தொடிப் பாவையைப்
பாடுதும் வம்மெல்லாம்
பாண்டியன் தன்மகளைப்
பாடுதும் வம்மெல்லாம்"

(வாழ்த்துக் காதை, வஞ்சிமகளிர் சொல்)

என்று அழைத்ததாக இளங்கோவடிகள் பாடியுள்ளார் 'இந்நாட்டைடந்த பைந்தொடி' என்று சேரநாட்டு மகளிர் பெருமிதத்தோடு கூறியபடியால், கண்ணகியார் இறுதியாகச் சென்றது சேரநாடு என்பதும் அந்நாட்டில் ஏதோ ஒரு குன்றின்மேல் அவர் உயிர்நீத்தார் என்பதும் உள்ளங்கை நெல்லிக்

கனிபோல் தெரிகின்றன. இவ்வாறு, இளங்கோவடிகள் தம்முடைய சிலப் பதிகாரத்திலே மூன்று இடங்களிலே கண்ணகியார் சேரநாட்டுக்குச் சென்று உயிர்விட்ட செய்தியை நுட்பமாகக் கூறியுள்ளார்.

மற்றும், சிலப்பதிகாரப் பதிகத்திலும் இந்... குறிப்பு காணப்படுகிறது.

> "சூழ்வினைச் சிலம்பு காரண மாகச்
> சிலப்பதி காரம் என்னும் பெயரால்
> நாட்டுதும் யாம்ஓர் பாட்டுடைச் செய்யுள்"

என்று இளங்கோவடிகள் சீத்தலைச் சாத்தனாரிடம் கூறியபோது சாத்தனார்,

> "முடிகெழு வேந்தர் மூவர்க்கும் உரியது
> அடிகள் நீரே அருளுக"

என்று கூற அடிகள் காவியம் இயற்றினார் என்று பதிகம் கூறுகிறது. இதில், 'முடிகெழு வேந்தர் மூவர்க்கு முரியது' என்பதற்கு அரும்பத உரையாசிரியரும் அடியார்க்கு நல்லாரும் 'புகாரினும் மதுரையினும் வஞ்சியினும் நிகழ்தலான் மூவர்க்கு முரியது' என்று உரை கூறுகிறார்கள். கோவலனும் கண்ணகியும் பிறந்து மணந்து வாழ்ந்தது சோழருடைய புகார்ப் பட்டினத்தில்; கோவலன் கொலையுண்டதும் கண்ணகி துன்புற்றதும் பாண்டியருடைய மதுரை மாநகரத்தில்; கண்ணகி உயிர்விட்டது சேருடைய நாட்டில். பத்தினிக் கோட்டம் பெற்றுப் பரவப்பெற்றதும் சேருடைய தலைநகரமான வஞ்சிப்பட்டினத்தில். இதிலிருந்தும் கண்ணகியார் உயிர்நீத்தது சேரநாட்டில் என்பது தெரிகிறது.

சேரன் செங்குட்டுவன் ஆட்சிக்காலத்தில் சேரநாட்டு ஆட்சிக்குட்பட்ட ஏதோ ஓரிடத்தில் கண்ணகியார் உயிர்விட்டார் என்பது உறுதியாகத் தெரிகிறது

அரும்பத உரையாசிரியர் கருத்துச் சரியா?

நெடுவேள் குன்று என்பதுபற்றி உரையாசிரியர் கூறியுள்ளதை ஆராய்வோம் பழைய அரும்பதவுரையாசிரியர், நெடுவேள் குன்று என்பது திருச்செங்கோடு மலை என்று கருதியதை முன்னமே கூறினோம் சிலப் பதிகாரத்தில் இன்னோர் இடத்திலும் இவர் இதையே கூறுகிறார் வாழ்த்துக் காதையிலே செங்குட்டுவற்குக் கண்ணகியார் கடவுள் நல்லணி காட்டியது

என்னுஞ் செய்யுளில் அவர் உயிர்விட்ட 'வென்வேலான் குன்று' கூறப் படுகிறது.

> **"வென்வேலான் குன்றில்**
> **விளையாட்டு யானகலேன்**
> **என்னோடும் தோழிமீர்**
> **எல்லீரும் வம்மெல்லாம்"**

இங்குக் கூறப்படுகிற 'வென்வேலான் குன்று' என்பதற்கு அரும் பதவுரையாசிரியர் மீண்டும் செங்கோடு என்று உரை எழுதியுள்ளார். ஏன் இவர் செங்கோடு மலையைக் கூறினார். இவர் காலத்தில் திருச்செங்கோடு மலையில் கண்ணகிக்குக் கோயில் இருந்தது. இந்தக் கோயில், சேரன் செங்குட்டுவன் வஞ்சிமா நகரில் எடுத்த பத்தினிக் கோட்டத்துக்குச் சென்றுவந்த கொங்கு நாட்டு இளங்கோசரால் அமைக்கப்பட்டது. கொங் கிளங்கோசர் கொங்கு நாட்டில் கண்ணகிக்குக் கோயில் அமைத்ததைச் சிலப் பதிகார உரைபெறு கட்டுரை கூறுகிறது. "அது கேட்டுக் கொங்கிளங்கோசர் தங்கள் நாட்டகத்து நங்கைக்கு விழவொடு சாந்தி செய்ய மழைதொழி லென்றும் மாறாதாயிற்று" என்பது அதன் வாசகம். திருச்செங்கோடு மலைமேல் கொங்கிளங்கோசர் கண்ணகிக்குக் கோயில் அமைத்து விழாச் செய்தார்கள் என்பது இதனால் தெரிகிறது. பிற்காலத்திலே திருச்செங்கோடு கண்ணகி கோயில் அர்த்தநாரீசுவரர் கோயில் என்று பெயர்மாற்றப்பட்டுச் சிவன் கோயிலாயிற்று. அரும்பதவுரையாசிரியர் இக்கோயிலைக் கண்ணகி கோயில் என்று அறிந்திருந்தபடியால், இந்த மலையில்தான் கண்ணகியார் உயிர் விட்டிருக்கவேண்டும் என்று கருதினார் போலும். ஆகையினால்தான் அவர் 'நெடுவேள் குன்றம்' 'வென்வேலான் குன்று' என்பதற்குத் திருச்செங் கோடு என்று உரை எழுதினார் என்று தோன்றுகிறது. திருச்செங்கோடு மலையில் இப்போதுள்ள அர்த்தநாரீசுவரர் கோயில் பழைய கண்ணகி கோயில் என்பதற்குச் சான்றுகள் உள்ளன. (அதுபற்றி விளக்கிக் கூற இஃது இடமன்று) சேரன் செங்குட்டுவன் ஆட்சிக் காலத்தில் கொங்குநாடு சேரர் ஆட்சிக்குட்பட்டிருந்தது உண்மைதான். ஆனால், அரும்பதவுரையாசிரியர் கருதுகிறபடி, கண்ணகியார் உயிர்விட்ட இடம் இந்த மலையன்று. திருச் செங்கோடு மலைமேல் முருகனுக்கும் ஒருகோயில் உண்டு. ஆனால், கண்ணகியார் உயிர்விட்ட 'நெடுவேள் குன்றம்' 'வென்வேலான் குன்று' இஃது அன்று.

அடியார்க்கு நல்லார் கருத்துச் சரியா?

கொடுங்கோளூர் என்று பிற்காலத்தில் பெயர்பெற்றதும் வஞ்சி என்று பழைய பெயரையுடையதுமான சேரநாட்டுத் தலைநகர்க்கு அருகில் செங்குன்று என்னும் குன்றின்மேல் கண்ணகியார் உயிர்விட்டதாக அடி யார்க்கு நல்லார் கருதுகிறார். இவர் கூறுகிற செங்குன்று மேற்குக்கடற்கரைக்கு அருகில் இருந்திருக்கவேண்டும். மிகச்சிறியதாகவும் மலைவளம் இல்லாத தாகவும் இருக்கவேண்டும். இக்குன்றில் குறவர் வாழ்ந்ததாகவும் இதிலிருந்து பெரியாறு உண்டானதாகவும் தெரியவில்லை. இந்தக் குன்றின்மேல் கண்ணகியார் உயிர் விட்டிருக்கவேண்டும் என்று அடியார்க்கு நல்லார் ஊகிக்கிறார். இந்த ஊகத்துக்குக் காரணத்தையும் அவர் கூறுகிறார். ''அரசனும் உரிமையும் (செங்குட்டுவனும் அவனுடைய இராணியும்) மலைகாண் குவம் என்று வந்து கண்ட அன்றே வஞ்சி''க்குச் சென்றபடியினாலே, செங்குட்டுவன் காணவந்த மலை கடற்கரையில் இருந்த வஞ்சி நகரத்துக்கு அருகில் இருக்கும் (இப்படி ஒரு குன்று இருக்கிறதா?) குன்றில் தான் கண்ணகியார் உயிர் விட்டிருக்கவேண்டும். அரசன் வந்தபோது இச்செய்தியைக் குறவர் அவனுக்குக் கூறியிருக்கவேண்டும் என்பது இவருடைய ஊகம். இவருடைய ஊகத்துக்கு மாறாகவும் எதிர்ப்பாகவும் சான்றுகள் இருக்கின்றன.

சேரன் செங்குட்டுவன் மலைகாண்பதற்கு வந்து கண்டு அன்றைக்கே நகரத்துக்குத் திரும்பிவிடவில்லை. அவன், வாரக் கணக்காக வேனிற்காலம் முடிகிற வரையிலே மலையடிவாரத்தில் தங்கியிருந்தான் என்றும் அவன் தங்கியிருந்த இடம், மலையிலிருந்து இழிந்துவந்த ஆற்றின்கரை மணல் என்றும் சிலப்பதிகாரமும், அவன்மேல் பாடப்பட்ட ஐந்தாம் பத்தும் தெளி வாகக் கூறுகின்றன. சிலப்பதிகாரக் காட்சிக் காதையில் இளங்கோவடிகள் இந்த இடத்தை தெளிவாகக் கூறுகிறார்.

> **''நெடியோன் மார்பில் ஆரம் போன்று**
> **பெருமலை விலங்கிய பேரியாற் றடைகரை**
> **இடுமணல் எக்கர் இயைந்தொருங் கிருப்ப''**

(அடி. 21-23)

என்று கூறுகிறார். இதில் தவறு இருக்க முடியாது. ஏனென்றால் செங்குட்டு வனுடன் இளங்கோவடிகளும் சென்று அங்குத் தங்கினார் என்று சிலப் பதிகாரத்தினால் அறிகிறோம்.

'பெருமலை விலங்கிய பேரியாறு' என்பதற்கு அரும்பதவுரை யாசிரியர் இவ்வாறு விளக்குகிறார்.

'மலையை விலங்கிய ஆறு, பேர்யாறு; இஃது ஓர் ஆற்றின் பெயர்'. சேரநாட்டில் பாய்கிற பெரியாறு மேற்குத் தொடர்ச்சி மலையில் உண்டாகி அம்மலையிலிருந்து கீழே இழிந்து நெடுந்தூரம் ஓடிக் கடைசியில் அரபிக் கடலில் விழுகிறது எல்லோரும் அறிந்ததே. இந்த ஆறு மலைமேலிருந்து கீழே இறங்குகிற அழகான இயற்கைக் காட்சியுள்ள இடத்தில் செங்குட்டுவன் தங்கினான் என்பது தெரிகிறது. மேலும் செங்குட்டுவன் வந்த மலை, 'துஞ்சா முழவின் அருவி ஒலிக்கும் மஞ்சுசூழ் சோலைமலை' என்று (காட்சிக்காதை, அடி 6-7) கூறுகிறபடியால் உயரமான மேற்குத் தொடர்ச்சி மலைகளில் ஒரு மலை என்பதும் நன்கு தெரிகிறது. குன்றுகளின்மேல் மஞ்சு இருப்பது இல்லை. மேலும் உயரமான மேற்குத் தொடர்ச்சி மலைகளில் குன்றக் குறவர்கள் வாழ்ந்தனர்.

செங்குட்டுவன் வழக்கமாக ஆண்டுதோறும் மலையடிவாரத்துக்கு வந்து தங்கி வேனிற்காலத்தைக் கழித்தான் என்பதை அவன்மேல் (பதிற்றுப் பத்து) ஐந்தாம் பத்துப் பாடிய பரணரும் கூறுகிறார். பரணர் செங்குட்டுவனை இவ்வாறு வாழ்த்துகிறார்.

''நின்மலைப் பிறந்து நின்கடல் மண்டும்
மலிபுனல் நிகழ்தரும் தீநீர் விழவில்
பொழில்வதி வேனில் பேரெழில் வாழ்க்கை
மேவரு சுற்றமோடு உண் டினிது நுகரும்
தீம்புனல் ஆயம் ஆடும்
காஞ்சியம் பெருந்துறை மணலினும் பலவே''

(5ஆம் பத்து, 8)

இதன் பழைய உரைகாரர் இவ்வாறு விளக்கங்கூறுகிறார். 'பொழில் வதி வேனில் பேரெழில் வாழ்க்கை-என்றது வேனிற்காலத்து (அரண்) மனையில் வைகாது பொழில்களிலே வதியும் பெரிய செல்வ அழகை யுடைய இல்வாழ்க்கை என்றவாறு'.

இதனால், அடியார்க்கு நல்லார், செங்குட்டுவன் மலை காணவந்த அன்றே தன்னுடைய நகரத்துக்குத் திரும்பிப் போனான் என்று ஊகிப்பது

தவறு என்று தெரிகிறது. செங்குட்டுவன் மேற்கு தொடர்ச்சி மலையின் அடிவாரத்தில், பெரியாறு மலையிலிருந்து தரையில் இழிகிற நீர்வீழ்ச்சிக்கு அருகில் மணல் பரந்த சோலையில் வேனிற்காலம் முழுவதும் தங்குவது வழக்கம் என்பதும் அவ்வாறு வந்து தங்கிய ஓராண்டின்போது குறவர் கண்ணகியார் வந்து உயிர்விட்ட செய்தியைக் கூறினார்கள் என்பதும் தெரி கின்றன. சேரநாட்டுக் கடற்கரைக்கும் மேற்குத் தொடர்ச்சி மலைகளுக்கும் உள்ள தூரம் ஏறத்தாழ ஐம்பது மைல் தூரந்தான். செங்குட்டுவன் மலைக் குறவர்களிடமிருந்து கண்ணகியின் செய்தியை அறிந்தது மேற்குத் தொடர்ச்சி மலைச்சாரலில் பெரியாறு மலையிலிருந்து விழுகிற இடத்தில் என்பது தெளிவாகத் தெரிகிறது. ஆகவே அடியார்க்கு நல்லார் கருதுவதுபோன்று, கண்ணகியார் மேற்குத் தொடர்ச்சி மலையையுங் கடந்து மேற்கே அரபிக்கடலுக்கு அருகிலே இருந்த ஒரு குன்றின்மேல் உயிர்விட்டிருக்க முடியாது. முன்பின் நெடுந்தூரம் நடந்து பழகாத கண்ணகியார், மதுரை யிலிருந்து சேரநாடு சென்று அந்நாட்டின் மேற்குக் கடற்கரை அருகில் பதினான்கு நாளில் சென்றிருக்க முடியாது. அதிலும் உணவு உறக்கம் இல்லாமல் களைப்படைந்திருந்தவர் அவ்வளவு தூரம் சென்றிருக்க முடி யாது. எனவே, அடியார்க்கு நல்லார், கொடுங்கோளூர்க்கு அருகில் செங் குன்று என்னும் குன்றின்மேல் உயிர்விட்டார் என்று ஊகிப்பது ஏற்கத்தக்கது அன்று. கண்ணகியார் சேரநாட்டில் மேற்குத் தொடர்ச்சி மலையில் ஏதோ ஒரு குன்றின்மேல் உயிர்விட்டிருக்கவேண்டும் என்று தோன்றுகிறது.

கோவிந்தராசனார் கருத்துச் சரியா?

பாண்டி நாட்டைச் சேர்ந்த சுருளிமலையில் கண்ணகியார் உயிர் விட்டார் என்று கோவிந்தராசனார் கூறுவதும் ஏற்கத்தக்கதன்று. ஏனென்றால், மேலே காட்டினபடி, சேரநாட்டில் கண்ணகியார் உயிர் துறந்தார். பாண்டி நாட்டில் அல்ல. மிகமிகப் பிற்காலத்தில், கி.பி. 10ஆம் நூற்றாண்டுக்குப் பிறகு சுருளிமலைப்பகுதி சேர அரசர் ஆட்சிக்கு வந்திருக்கக்கூடும். ஆனால், சிலப்பதிகார நிகழ்ச்சி நடந்த காலத்தில் இப்பகுதி பாண்டியர் ஆட்சியில் இருந்தது. ஆகவே, கண்ணகியார் தெய்வமான இடம் சுருளிமலை வட்டாரமாக இருக்க முடியாது.

செங்குட்டுவன், தன் ஆட்சிக்குரியதல்லாத இடத்தில் பத்தினிக் கோட்டம் அமைக்கவில்லை. தன் தலைநகரமான வஞ்சி மாநகரத்தில்

(கொடுங்கோளூரில்) பத்தினிக் கோட்டம் அமைத்தான். பத்தினிக் கோட்டத்தை மலையின்மேல் அமைக்கவில்லை. கோவலனின் மகளான மணிமேகலை, செங்குட்டுவன் வஞ்சிமாநகரத்தில் அமைத்த பத்தினிக் கோட்டத்துக்கு வந்து கண்ணகியை வணங்கினாள் என்று மணிமேகலை காவியம், வஞ்சிமாநகர்புக்க காதையில் அறிகிறோம். எனவே, செங் குட்டுவன் கண்ணகிக்குப் பத்தினிக் கோட்டம் அமைத்தது சுருளிமலை அன்று.

மேலும், ஐயமிருந்தால், கோவிந்தராசனார் சுருளிமலையில் கண்ட கற்சிலைகளை நிலநூல் அறிந்த பேராசிரியர்களுக்கு அனுப்பி அந்தக்கல் இமயமலைக்கல்லா என்று சோதித்துப் பார்த்து உண்மையை அறியலாம். இதுபற்றி அதிக விளக்கம் தேவை இல்லை.

முடிவு என்ன?

மேற்குத்தொடர்ச்சி மலைகளைச் சேர்ந்த ஒரு குன்றின்மேல் கண்ணகியார் உயிர் விட்டிருக்கவேண்டும் என்று கூறினேன். மேற்குத் தொடர்ச்சி மலைகள் சேரநாட்டுக்கும் கொங்கு நாட்டுக்கும் இடையிலே வடக்குத் தெற்காகச் சென்று பாண்டி நாட்டில் பொதிகை மலையில் முடி கின்றன. மேற்குத் தொடர்ச்சி மலைகள் சேரநாட்டுக்கும் கொங்கு நாட்டுக்கும் எல்லையாக அக்காலத்தில் அமைந்திருந்தன.

வைகையாற்றின் கரை வழியே மேற்கு நோக்கி வழிநடந்த கண்ணகி யார், வைகையாறு குறுகியதாயும் ஆழமில்லாமலும் உள்ள இடத்தில் ஆற்றைக் கடந்து அக்கரையடைந்து வடமேற்காக நடந்திருக்க வேண்டும். கடைசியில் பெரியாறு மேற்குத் தொடர்ச்சி மலைமேல் தோன்றுகிற இடத்தில் (அயிரிமலைக்கு அருகில்) வந்தபோது கண்ணகியார் உயிர் பிரிந்திருக்க வேண்டும். மேற்குத் தொடர்ச்சி மலையைச் சேர்ந்த அயிரிமலைமேல் பெரியாறு தோன்றுகிறது. அங்கு அந்த ஆற்றுக்கு அயிரியாறு என்று பெயர். அந்த இடத்தில் கொற்றவைக்குக் கோயில் இருந்தது. அந்தக் கொற்றவைக்கு அயிரிக்கொற்றவை என்பது பெயர். அயிரிமலையையும் அங்கு உண்டாகிய அயிரி ஆற்றையும் அங்கிருந்த அயிரிக் கொற்றவையையும் பதிற்றுப்பத்துச் செய்யுட்கள் கூறுகின்றன. அயிரி மலைக்கொற்றவை சேர அரசர்களின் குல தெய்வம். அயிரிமலைமேல் தோன்றுகிற அயிரியாறு பிறகு அம்மலையின் மேற்குப் பக்கமாகத் தரையில் இழிந்து பெரியாறு என்று பெயர் பெற்றுச்

சேரநாட்டில் பாய்ந்து வஞ்சிமாநகர்க்கு அருகிலே முசிறித்துறை முகத் தண்டை கடலில் கலந்தது. மலைமேலிருந்து பெரியாறு கீழே இறங்குகிற இடத்தில்தான் செங்குட்டுவன் ஆண்டுதோறும் சென்று சுற்றத்தோடு தங்கி வேனிற்காலத்தைக் கழித்தான்.

கோவலன் கண்ணகியார் வாழ்ந்திருந்த கி.பி. இரண்டாம் நூற்றாண்டில், சேர நாட்டுக்குக் கிழக்கே இருந்த கொங்கு நாடு சேர அரசரின் ஆட்சியின்கீழ் இருந்தது. அந்தக் கொங்கு நாட்டைச் சேர அரசர்களின் இளைய வழியினர் பொறையர் என்று பெயர்பெற்று ஆட்சி செய்தார்கள் என் பதைப் பதிற்றுப்பத்தினால் அறிகிறோம். கொங்கு நாடு சேர இராச்சியத்தோடு சேர்ந்து இரும்பொறை அரசர்களால் ஆட்சி செய்யப்பட்ட காலத்தில் கண்ணகியார் மேற்குத் தொடர்ச்சி மலையைச் சார்ந்த அயிரிமலைக்கு அருகில் ஏதோ ஒரு குன்றின்மேல் உயிர் விட்டிருக்கவேண்டும் என்று தோன்றுகிறது.

சேர அரசர் ஆட்சிக்குட்பட டிருந்த ஓரிடத்தில் கண்ணகியார் சென்று உயிர் விட்டார் என்று சிலப்பதிகாரத்தில் இளங்கோவடிகள் கூறுகிற குறிப்பு களைக் கொண்டு ஆராய்ந்து பார்த்தால் இந்த முடிவுக்குத்தான் வர வேண்டியிருக்கிறது.

> **"எப்பொருள் யார்யார் வாய்க்கேட்பினும் அப்பொருள்**
> **மெய்ப்பொருள் காண்பது அறிவு."**

(குறள். 428)

> **"எப்பொருள் எத்தன்மைத் தாயினும் அப்பொருள்**
> **மெய்ப்பொருள் காண்பது அறிவு"**

(குறள். 355)

வ. சுப்பையா பிள்ளை பவழவிழா மலர் 1973

27. திருமாவுண்ணி கண்ணகியா?

நற்றிணை நானூறு என்னும் நூலிலே, 216-ஆம் செய்யுளிலே, மதுரை மருதன் இளநாகனார் என்னும் புலவர் திருமாவுண்ணி என்னும் பெண்

மணியின் செய்தியைக் கூறுகிறார். வேங்கை மரத்தின் மேலே பரண் அமைத்துக்கொண்டு, தினைப் புனத்தைக் காவல் காத்து வந்த திருமாவுண்ணி, ஏதிலாளன் ஒருத்தன் அவளைக் காதல் மணஞ் செய்து பிறகு கைவிட்டபடியால் கவலையினாலே வருத்தமுற்றுத் தனது ஒரு முலையை அறுத்தாள் என்று கூறப்படுகிறாள். திருமாவுண்ணியின் இச்செய்தியைக் கூறுகிற நற்றிணைச் செய்யுள் இது:

''எரிமருள் வேங்கைக்
கடவுள் காக்கும்
குருகார் கழனியின்
இதணத் தாங்கண்
ஏதி லாளன்
கவலை கவற்ற
ஒருமுலை அறுத்த
திருமா வுண்ணிக்
கேட்டோ ரனையார்
ஆயினும்
வேட்டோ ரல்லது
பிறரின் னாரே''

இதன் பொருள்: 'குருவிகள் ஆரவாரிக்கும் வயலிலே தெய்வத் தன்மை வாய்ந்த தீச்சுடர் போன்ற பூவையுடைய வேங்கை மரத்திலே கட்டிய கட்டுப் பரண் அருகிலே, அயலான் ஒருவன் செய்த கவலையினாலே வருத்த மடைந்து ஒரு கொங்கையை அறுத்த திருமாவுண்ணி பற்றிக் கேட்டவர், அவள் துன்பத்தை அறிந்தவராயினும், அவளிடம் அன்பு உள்ளவர் மாத்திரம் வருந்துவார்களேயல்லாமல் எல்லோரும் வருத்தமடையமாட்டார்கள்' என்பது.

இதில், திருமாவுண்ணி என்னும் பெண்மணி வேங்கை மரத்தின்மேல் பரண் கட்டிக்கொண்டு அதில் இருந்தாள் என்பதும், அங்கு ஒருவனால் ஏற்பட்ட கவலையினால் ஒரு முலையை அறுத்துக்கொண்டாள் என்பதும் கூறப்படுகின்றன.

சிலப்பதிகாரம் கூறுகிற கண்ணகி மதுரை நகரத்தை எரித்தபிறகு சேர நாட்டுக்குப் போகிற வழியிலே ஒரு வேங்கை மரத்தின் நிழலிலே தங்கினார்

என்றும், மதுரையை எரிக்குமுன் தமது ஒரு கொங்கையை அறுத்து எறிந்தார் என்றும் கூறப்படுகிறார்.

வேங்கை மரத்தண்டை நின்றது, ஒரு கொங்கையை அறுத்தது என்னும் ஒப்புமையைக்கொண்டு சிலப்பதிகாரக் கண்ணகியாரும் நற்றிணைச் செய்யுள் கூறுகிற திருமாவுண்ணியும் ஒருவரே என்றும், இவ்விரண்டும் ஒரே செய்தியைத்தான் கூறுகின்றன என்றும் சிலர் கருதுகிறார்கள்.

திருமாவுண்ணியும் கண்ணகியும் ஒருவரே என்னும் கருத்தை முதன்முதலில் கூறியவர், நற்றிணையை முதன்முதலில் அச்சிட்ட பின்னத்தூர் நாராயணசாமி அய்யர் அவர்கள். இவர், நற்றிணைச் செய்யுட்களுக்குத் தாமே புதிய உரை எழுதியுள்ளார். திருமாவுண்ணியின் வரலாற்றைக் கூறுகிற செய்யுளின் உரையிலே நாராயணசாமி அய்யர், "திருமாவுண்ணி என்பது கண்ணகியைக் குறிக்கிறது போலும்" என்று ஒரு குறிப்பு எழுதினார். மேலும், அந்நூலின் பாடினோர் வரலாறு என்னும் பகுதியில் கீழ்வருமாறு எழுதியுள்ளார்: "மதுரை மருதனிளநாகனார்-ஒரு கொங்கையறுத்த திருமாவுண்ணி என்பாள் கதையைச் சுருக்கிக் கூறுகிறார்; அது கண்ணகி கதைபோலுமென்று கருதற்கிடனாகிறது; செவ்வையாக விளங்கவில்லை." இவ்வாறு, நாராயண சாமி அய்யரவர்கள், திருமாவுண்ணியின் கதை கண்ணகி கதைபோலக் காணப்படுகிறதோ என்று ஐயங்கொண்டார்.

இவருக்குப் பிறகு திரு. மு. இராகவ அய்யங்கார் அவர்கள், "பத்தினி தேவியைப் பற்றிய சில குறிப்புகள்" என்னும் தலைப்புள்ள கட்டுரை ஒன்றைக் கா. நமசிவாய முதலியார் நினைவு மலரில் எழுதினார். பின்னர் அக்கட்டுரையைத் தமது "ஆராய்ச்சித் தொகுதி" என்னும் நூலிலும் வெளியிட்டார். அக்கட்டுரையிலே, நற்றிணைச் செய்யுள் கூறுகிற ஒரு முலையறுத்த திருமாவுண்ணியும், சிலப்பதிகாரம் கூறுகிற ஒரு முலையறுத்த கண்ணகியாரும் ஒருவரே என்று கூறுகிறார். ஷை நற்றிணைச் செய்யுளில் தமது கருத்துக்கு ஒத்தாற்போலச் சில திருத்தங்களையும் செய்துகொள்கிறார். குருகார் கழனி என்பதைக் குருகார் துழனி என்றும், கேட்டோர் அனையார் என்பதைக் கேட்டோர் இனியார் என்றும் தமது மனம்போனபடி திருத்திக் கொள்கிறார். பிறகு, "இங்ஙனம் வேங்கைக்கீழ் நின்ற ஒரு முலையறுத்த திருமாவுண்ணி என்பவள், கோவலன் மனைவியன்றி வேறு யாவர் உளர்?" என்று கேட்கிறார். மேலும், "இந்நற்றிணைப் பாட்டுப் பாடியவர் மதுரை

யாசிரியரான சங்கப் புலவர் ஆகலின், தம் ஊரினும் பிறவிடத்திலும் நிகழ்ந்த கண்ணகி செய்தியையே தாம் கேட்டறிந்தபடி கூறுவாராயினர் என்பதும், ஒரு முலை குறைத்தவளாய் வேங்கை மரத்தையடைந்தவள் அப்பத்தினியே யன்றி வேறிலர் என்பதும் திண்ணமாம்'' என்றும் எழுதினார்.

வேங்கை மரம், ஒருமுலை யறுத்தல் என்னும் இந்த இரண்டு குறிப்புகளைக் கொண்டு, கண்ணகியாரும் திருமாவுண்ணியும் ஒருவரே என்று திரு. மு. இராகவையங்கார் முடிவு கூறுகிறார்.

திரு. எஸ். வையாபுரிப் பிள்ளையவர்களும் இதுபற்றித் தமது கருத்தை எழுதியுள்ளார். திருமாவுண்ணியின் கதை பழைய கதை என்றும் அக்கதை யிலிருந்து கண்ணகியின் கதை தோன்றியது என்றும் இவர் கருதுகிறார். இவர் தமது ''இலக்கிய மணிமாலை'' என்னும் நூலிலே கீழ்வருமாறு எழுதுகிறார்:-

''இக்காவியத்துக்கு (சிலப்பதிகார காவியத்துக்கு) முற்பட்ட பண்டைக்காலத்தே இவ்வகை வரலாறு வழங்கியதுண்டோ என வினவலாம் ஒரு சான்று நற்றிணையில் உளது. திருமாவுண்ணியென்பவள் தன்மீது அன்பற்றுத் துறந்து தனக்கு அயலான்போலாகிவிட்ட தன் காதலனைப் பற்றிக் கவலைகொண்டு வருந்தினாளெனவும், பின் தனது ஒரு முலையைத் திருகி யெறிந்து வேங்கை மரத்தின் கீழ் நின்றாளெனவும் ஒரு வரலாறு இச்சங்க நூலில் வருகின்றது.

எரிமருள் வேங்கைக்
கடவுள் காக்கும்
குருகார் கழனியின்
இதணத் தாங்கண்
ஏதி லாளன்
கவலை கவற்ற
ஒருமுலை யறுத்த
திருமா வுண்ணி

என்ற அடிகளால் இது நன்கு புலப்படுகின்றது. பெயர் வேறுபாடு முதலிய வற்றால் இது கண்ணகியின் சரித்திரமன்று என்பது வெளிப்படை. ஆனால், இதனின்றும் கண்ணகி வரலாறு பிறந்ததாகலாமென எளிதில் ஊகிக்கலாம்'' (பக்கம் 133-134)

''பிறிதொரு செய்தி, கண்ணகி தனது காதலனைப் பிரிந்த துயராற்ற மாட்டாது ஒரு முலையைத் திருகி எறிந்தாள் என்பது. இதுவும் நற்றிணையிற் காணப்படும் ஒரு செய்தியோடு ஒத்துள்ளது:

எரிமருள் வேங்கைக்
கடவுள் காக்கும்

....

....

ஒருமுலை யறுத்த
திருமா வுண்ணி

என அந்நூற் செய்யுளொன்று கூறுகிறது. இங்குக் குறித்த வரலாறு மறைந்துவிட்டது. எனினும், தன்மீது அன்பு அற்றுத் துறந்து தனக்கு அயலான்போலாகிவிட்ட காதலனைப் பற்றிக் கவலைகொண்டு வருந்தித் தனது ஒரு முலையை அறுத்தெறிந்த ஒருத்தியின் சரித்திரமே அது வெளிப் படுப்பது என்பது புலனாகின்றது. நற்றிணை அடிகளை ஞாபகப்படுத்திக கொண்டு,

பொலம்பூ வேங்கை
நலங்கிளர் கொழுநிழல்
ஒருமுலை யிழந்தாளோர்
திருமா பத்தினி

என்ற பதிகத்தின் அடிகள் தோன்றின என்பதும் எளிதில் ஊகிக்கக்கூடியதே வேங்கை நிழற்கீழ்க் கண்ணகி வந்து நின்றாள் என்பது மேலைப் பதிக அடிகளாலும், கட்டுரை காதை (91-92), குன்றக் குரவை (14-23), குன்றக் குரவை இறுதிப்பாட்டுமடை (16-21) அடிகளில் வருவனவற்றாலும் உணர லாகும். நற்றிணை அடியிலும் இவ்வேங்கை பயின்றுவருதல் காணலாம் இங்ஙனம் வரும் ஒற்றுமைகளை மனத்துக்கொண்டு, நற்றிணையுரைகாரர், 'திருமாவுண்ணி யென்பது கண்ணகியைக் குறிக்கின்றதுபோலும்' என்றெழு தினர். இவர் துணிவு எவ்வாறாயினும் மேற்குறித்தன போன்ற செய்திகளே கால அடைவிற் கண்ணகி வரலாறாக வளர்ந்து பரிணமித்தன எனக் கொள்ளுதல் தவறாகாது.'' (இலக்கிய மணிமாலை பக்கம் 147-148)

இதே கருத்தை வையாபுரிப்பிள்ளையவர்கள் தாம் ஆங்கிலத்தில் எழுதிய ''தமிழ்மொழி, இலக்கிய வரலாறு'' என்னும் நூலிலும் எழுதி யுள்ளார். (*History of Tamil Language and Literature. Page 146*)

திரு. கே. ஏ. நீலகண்ட சாஸ்திரியும் தமது 'சிலப்பதிகார மணிமேகலை கால ஆராய்ச்சி' என்னும் ஆங்கிலக் கட்டுரையிலே, வையாபுரிப்பிள்ளை கூறிய கருத்தையே கூறுகிறார்:

"Again Narrinai contains a short poem (216) which mentions a woman Tirumavunni who after pining for husband's coldness to her, tore off and cast away one of her breasts, and stood beneath a vengai tree-incidents with a strong resemblance to the main traits of the Kannaki saga." (Page 25, University of Ceylon Review, Vol. VII-1949)

பின்னத்தூர் நாராயணசாமி அய்யரும், மு. இராகவையங்காரும், திருமாவுண்ணியும் கண்ணகியும் ஒருவரே என்று கருதினர். வையாபுரிப் பிள்ளையும், நீலகண்ட சாஸ்திரியும், திருமாவுண்ணியின் கதை ஒரு பழைய கதை என்றும், அப்பழைய கதையிலிருந்து கண்ணகியின் கதை தோன்றிய தென்றும் கூறினர். இவர்களை இவ்வாறு கருதச் செய்தவை இரண்டு செய்திகள். அவை: திருமாவுண்ணியும் கண்ணகியும் வேங்கை மரத்தின் அடியில் இருந்தனர் என்பது ஒன்று; திருமாவுண்ணியும் கண்ணகியும் ஒருமுலை குறைத்தனர் என்பது மற்றொன்று. இந்த இரண்டு பொருத்தங்களைக் கொண்டு இவ்விரண்டு பெண்மணிகளும் ஒருவரே என்று இவ்வறிஞர்கள் கருதுகின்றனர்.

மேற்போக்காகப் பார்க்கிறவர்களுக்கு இவர்கள் கூறுவது உண்மை போலத் தோன்றும். நுட்பமாக ஆராய்ந்து பார்த்தால் திருமாவுண்ணியின் கதை வேறு; கண்ணகியின் கதை வேறு என்பதும், இருவரும் வெவ்வேறு காலத்தில் இருந்த வெவ்வேறு பெண்மணிகள் என்பதும், இருவருக்கும் எவ்விதப் பொருத்தமும் இல்லை என்பதும் தெளிவாகும்; பிள்ளையவர் களும் சாஸ்திரி அவர்களும் கருதுவதுபோல இவை கற்பனைக் கதைகள் அல்ல என்பதும், உண்மையில் நிகழ்ந்த வரலாற்று நிகழ்ச்சிகள் என்பதும் நன்கு விளங்கும். கண்ணகியின் வரலாறு வேறு, திருமாவுண்ணியின் வரலாறு வேறு. இரண்டு வேறுபட்ட வரலாறுகளை ஒரே வரலாறு என்று இணைத்துக் கூறுவது சற்றும் பொருந்தாது என்பதை இங்கு விளக்கிக் கூறுவோம். இதை, வேங்கை மரம், முலையறுத்தல் என்னும் இரண்டு பகுதிகளாகப் பிரித்துக் கொண்டு தனித்தனியே ஆராய்வோம்.

முலையறுத்தல் என்பதுபற்றி இதுவரையில் ஒருவரும் ஆராய்ச்சி செய்யவில்லை. முலையறுத்தல் என்றால், உண்மையாகவே அறுத்துக் கொள்வது என்று பொருளா? ஒரு பெண் தன் மார்பை அறுத்துக் கொள்ள முடியுமா? இது நிகழக் கூடியதா? கண்ணகியாரும், திருமாவுண்ணியும் ஏனைய பெண் மகளிரும் தமது கொங்கையை அறுத்தனர் என்றால், உண்மை யாகவே கொங்கையை அறுத்தனர் என்பது கருத்து அன்று. அதன் உண்மைக் கருத்து வேறு. இதுபற்றித் தனியே அடுத்த கட்டுரையில் விளக்கமாக எழுதுவோம். முதலில் இந்தக் கட்டுரையில் வேங்கை மரத்தைப்பற்றி ஆராய்வோம். அதாவது, திருமாவுண்ணியும் கண்ணகியும் வேங்கை மரத்தின்கீழ் நின்றனர்; ஆகவே இருவரும் ஒருவரே என்று இவர்கள் கூறுகிறதைப்பற்றி ஆராய்வோம்.

வேங்கை மரம், குறிஞ்சி நிலத்திலே வளர்கிற மரம். குறிஞ்சி நிலம் என்பது மலையும் காடும் சேர்ந்த நிலம். குறிஞ்சி நில மக்களாகிய குறவர் தினை என்னும் தானியத்தைப் பயிரிடுவார்கள். தினைப்பயிர் வளர்ந்து கதிர்விட்டு முற்றும்போது கிளி முதலிய பறவைகள் கூட்டங் கூட்டமாக வந்து தினைக் கதிரைக் கொய்து தின்னும். காட்டில் வாழும் யானை, காட்டுப் பன்றி முதலிய மிருகங்களும் வந்து பயிரைத் தின்று அழிக்கும். ஆகவே, அவற்றை ஓட்டிக் கழனியைக் காவல் காக்க வேண்டும். தினை வயலைக் காவல் காக்கும் வேலையைச் சாதாரணமாகக் குறப் பெண்கள் செய்வார்கள். வயலின் நடுவில் வளர்ந்திருக்கிற வேங்கை மரத்தின் கிளைகளின்மேல் பரண் (இதணம்) கட்டிக்கொண்டு அதில் அமர்ந்து பெண்கள் தினைப்புனத்தைக் காவல் புரிவார்கள். பன்றி யானை முதலிய காட்டு மிருகங்கள் தங்களைத் தாக்காத படி உயரமான இடத்திலே, வேங்கை மரத்தின்மேலே பரண் கட்டிக்கொள் வார்கள். பரணில் இருந்து கொண்டு, தட்டை அல்லது குளிர் என்னும் மூங்கில் கழியை வைத்துக்கொண்டு அவர்கள் கிளிகளையும் குருவிகளையும் ஓட்டுவார்கள். தட்டை என்பது மூங்கில் கழி. மூங்கிலின் ஒரு பக்கத்தைப் பல பிளவுகளாகப் பிளந்திருப்பார்கள். அதைத் தட்டினால் உரத்த ஒலி உண்டாகும். அவ்வொலியைக் கேட்டுப் பறவைகள் அஞ்சி ஓடிப்போகும். இவ்வாறு வேங்கை மரத்தின்மேலே பரணின்மேல் இருந்து கொண்டே தட்டையினால் ஒலி உண்டாக்கி மகளிர் தினைப் புனத்தைக் காவல் காப்பார்கள். இது சங்க காலத்திலே குறிஞ்சி நிலத்திலே அன்றாடம் நிகழ்ந்த சாதாரண நிகழ்ச்சி.

மகளிர் தினைப்புனத்தைக் காவல் காக்கும்போது, காளைப் பருவம் உள்ள வாலிபர்கள் வேட்டைக்கு வந்தவர்போலச் சந்தர்ப்பம் உண்டாக்கிக் கொண்டு, அவர்களிடம் வந்து 'நான் அம்பு எய்து தூரத்திய மான் இவ்விடம் வந்ததா? நான் அம்பு எய்த யானை இந்தப் பக்கமாக வந்ததா' என்று அப்பெண்களைக் கேட்டு, அவர்களோடு வார்த்தையாட வாய்ப்பு ஏற் படுத்திக்கொண்டு தங்கள் காதலில் கருத்துச் செலுத்துவார்கள். வேங்கை மரத்தின்மேல் பரண் கட்டிக்கொண்டு அதிலிருந்து பெண் மகளிர் தினை வயலைக் காவல் புரிந்த செய்தியைச் சங்கச் செய்யுள்களில் காணலாம்.

"காரரும் பவிழ்ந்த
கனிவாய் வேங்கைப்
பாவமை இதணம்
ஏறிப் பாசினம்
வணர்குரர் சிறுதினை
கடியப்
புணர்வது கொல்லோ
நாளையும் நமக்கே"

(நற்றிணை 373)

"களிறு அணந்தெய்தாக்
கன்முகை இதணத்துச்
சிறுதினைப் படுகிளி
யெம்மோ டோப்பி"

(அகம். 308)

"திறத்திறம் பகர்ந்து
சேணோங்கு இதணத்துக்
குறத்தியர் பாடிய
குறிஞ்சிப் பாணியும்"

(சிலம்பு. நீர்ப்படைக் காதை 223-224)

இவ்வாறு குறமகளிர் வேங்கை மரத்துப் பரணில் அமர்ந்து காவல் காக்கும் போது காளைப் பருவம் உள்ள வாலிபர் வந்து அவரிடம் காதல்

நிகழ்த்துவர் என்று கூறினோம். இக்களவியற் காதலில், மனம் ஒத்த காதலர்கள், பலர் அறிய மணம் புரிந்து வாழ்வார்கள். இக்காதல் நிகழ்ச்சி களில் சில சமயங்களில் தவறு உண்டாகித் துன்பமாக முடிவதும் உண்டு.

திருமாவுண்ணி என்னும் மங்கை வேங்கை மரத்தின்மேல் பரண் அமைத்துக்கொண்டு காவல் இருந்தபோது, முன்பின் அறியாத இளைஞன் ஒருவன் அவளிடம் வந்து அவளை மணம் புரிவதாகக் கூறி அவளை நம்பச் செய்தான். பிறகு அவர்கள் காந்தர்வ முறைப்படி மணந்து இன்புற்றனர். பிறகு அந்த இளைஞன் திரும்பி வந்து ஊரார் அறிய அவளை மணம் புரிவதாகச் சொல்லிப் போய்விட்டான். போனவன் திரும்பி வரவே இல்லை; நெடுநாள் ஆகியும் அவன் திரும்பி வரவில்லை. அவன் அவளை அறவே கை விட்டான். அதனால் திருமாவுண்ணி கவலைகொண்டு வருந்தினாள். அவள் கற்புள்ள மங்கையாகையால், வேறு மணம் புரிய முடியாது. இவள் செய்தியையறிந்தவர்கள் இவள்மீது இரக்கங் கொண்டனர். இதுதான் நற்றிணைச் செய்யுளில் கூறப்படுகிற திருமாவுண்ணியின் வரலாறு.

இவ்வரலாற்றில் திருமாவுண்ணி ஒருமுலை குறைத்தவள் என்று கூறப்படுகிறாள். ஏன் இவ்வாறு கூறப்படுகிறாள்? ஒருமுலை குறைத்தல் என்றால் என்ன? இதுபற்றி அடுத்த கட்டுரையில் எழுதப் போகிறபடியால் இப்போது ஆராய வேண்டியதில்லை. ஆனால், ஒன்றுமட்டும் கூற விரும்பு கிறோம். ஒருமுலை இழந்த பெண்கள் அக்காலத்தில் கண்ணகியைத் தவிர வேறு சிலரும் இருந்தார்கள் என்பதே.

இங்கு நாம் ஆராய்வது வேங்கை மரத்தைப்பற்றியும் அதன்மேல் கட்டப்பட்ட பரணைப் பற்றியுமே. தமிழரின் பழங் கடவுளாகிய முருகன், பழந்தமிழர் முறைப்படி வள்ளியைக் காதல் மணம் புரிந்தது, வள்ளி வேங்கை மரத்தின்மேல் பரணில் இருந்து தினைப்பயிரைக் காத்துக்கொண்டிருந்த போதுதான் என்பது இங்கு நினைவுறத்தக்கது. எனவே, வேங்கை மரத் தண்டை இருந்து காவல் காத்த பெண்கள் திருமாவுண்ணியைப் போன்று பல பெண்கள் அக்காலத்தில் இருந்தனர் என்பதைச் சங்க நூல்களிலிருந்து அறிகிறோம்

இனி, திருமாவுண்ணியும் கண்ணகியும் வெவ்வேறு மகளிர் என்பதையும், அவர்கள் வெவ்வேறு காலத்தில் வெவ்வேறு இடத்தில் வெவ் வேறு காரியத்துக்காக வேங்கை மரத்தண்டையிருந்தனர் என்பதையும்

விளக்கிக் கூறுவோம். திருமாவுண்ணி இருந்த வேங்கை மரம் வயலின் மத்தியில் இருந்த வேங்கை மரம்; கண்ணகி இருந்த வேங்கை மரம் காட்டிலே மலையின்மேலே வளர்ந்திருந்த வேங்கை மரம். திருமாவுண்ணி இருந்த வேங்கை மரம் பரண் கட்டப்பட்ட வேங்கை மரம். கண்ணகி இருந்த வேங்கை மரம் பரண் கட்டப்படாமல் மலைமேல் இருந்த வேங்கை மரம்.

''எரிமருள் வேங்கைக்
கடவுள் காக்கும்
குருகார் கழனி
இதணத் தாங்கண்''

என்று திருமாவுண்ணி இருந்த வேங்கை மரத்தை நற்றிணைச் செய்யுள் கூறுகிறது.

கண்ணகி நிழலுக்காக நின்ற வேங்கை மரமோ, காட்டிலே மலைமேலே இருந்தது என்பதைச் சிலப்பதிகாரம் தெளிவாகக் கூறுகிறது.

''நெடுவேள் குன்றம்
அடிவைத் தேறிப்
பூத்த வேங்கைப்
பொங்கர்க் கீழ்''

கண்ணகியார் நின்றார் என்று சிலப்பதிகாரம் (கட்டுரை காதை 190-191) கூறுகிறது. மலை வேங்கையின் கீழ்க் கண்ணகியார் நின்றதைக் குறமகளிர் கண்டு, ''மலைவேங்கை நறுநிழலின், வள்ளி போல்வீர்! மனநடுங்க முலை யிழந்து வந்து நின்றீர். யாவிரோ?'' என்று வினவியதாகச் சிலம்பு (உரைப் பாட்டு மடை) கூறுகிறது. மேலும்,

''கானநறு வேங்கைக்
கீழாளோர் காரிகையே
கானநறு வேங்கைக்
கீழாள் கணவனொடும்
வானக வாழ்க்கை
மறுதரவோ வில்லாளே''

(குன்றக் குரவை)

என்றும்,

> "கான வேங்கைக்
> கீழோர் காரிகை
> தான்முலை யிழந்து
> தனித்துயர் எய்தி"

(காட்சிக் காதை 57-58)

என்றும் சிலம்பு, கண்ணகியார் தங்கிய கானகத்தில் மலைமேல் இருந்த வேங்கை மரத்தைக் கூறுகிறது.

இவற்றிலிருந்து கண்ணகியார் நிழலுக்காக ஒதுங்கி நின்ற வேங்கை மரம் ஊருக்கு அப்பாலே காட்டின் மத்தியிலே மலையின்மேலே வளர்ந்திருந்த வேங்கை மரம் என்பது ஐயமில்லாமல் தெளிவாகத் தெரிகிறது. திருமாவுண்ணியார் இருந்த வேங்கை மரம் ஊருக்கு அருகிலே வயலுக்கு மத்தியிலே பரண் கட்டப்பட்டிருந்த வேங்கை மரம் என்பதும் தெள்ளத் தெளிவாகத் தெரிகிறது. கண்ணகியார் பாண்டி நாட்டு மதுரையிலிருந்து சேர நாட்டுக்குப் போகிறபோது காட்டு வழியிலே மலைமேலே இருந்த ஒரு வேங்கை மரத்தின் நிழலிலே சிறிதுநேரம் தங்கினார். அப்போது, பதினான்கு நாட்களாக உணவும் தண்ணீரும் அருந்தாமல் பட்டினி கிடந்து இளைத்துக் களைத்திருந்த அவர் அம்மரத்தின்கீழ் உயிர் நீத்தார். திருமாவுண்ணியார் வேங்கை மரத்தின் கீழ் உயிர் விடவில்லை.

திருமாவுண்ணியார் ஒரு கொங்கை அறுத்தது வேங்கை மரத்தண்டை. கண்ணகியார் கொங்கையறுத்த இடம் வேங்கை மர நிழல் அன்று; மதுரை மாநகரம்.

கண்ணகியார், நெடுந்தூரம் வழி நடந்த களைப்பினாலும் உணவு கொள்ளாமல் பட்டினி கிடந்த இளைப்பினாலும் வேங்கை மரத்தின் நிழலில் தங்கினார். திருமாவுண்ணியார், தினைப்புனத்தைக் காவல் காப்பதற்காக வேங்கை மரத்தின் பரண்மேல் தங்கினார்.

கண்ணகியார் வேங்கை மரத்தின்கீழே தங்கியிருந்தபோது ஏதிலர் யாராலும் துன்புறுத்தப்படவில்லை. அதற்கு மாறாக, அவருக்குக் குறமகளிர் அன்புள்ள துணைவராக இருந்தனர். கண்ணகியார் வேங்கை மரத்தின்கீழே

உயிர் நீத்தார். திருமாவுண்ணியார், வேங்கை மரத்தில் இருந்தபோது ஏதிலாளன் ஒருவனால் துன்பம் அடைந்தார். ஆனால், அவர் வேங்கை மரத்தண்டை உயிர்விடவில்லை.

கண்ணகியார் வழியிலிருந்த வேங்கை மரத்தடியில் சிறிது நேரந்தான் தங்கினார். திருமாவுண்ணியார் வேங்கை மரத்தின் மேல் பல நாட்கள் தங்கியிருந்தார். எனவே, கண்ணகியார் தங்கிய கான வேங்கை மரம் வேறு; திருமாவுண்ணியார் தங்கிய கழனி வேங்கை மரம் வேறு. அஃது இருந்த இடம் வேறு. இஃது இருந்த இடம் வேறு. இவற்றையறியாமல், வையாபுரிப் பிள்ளை முதலிய அறிஞர்கள், இரண்டு மரமும் ஒரே மரம் என்றும் இரண்டு மகளிரும் ஒருவரே என்றும் கூறுவது சிறிதும் பொருந்தாது.

திருமாவுண்ணி குறிஞ்சி நிலத்தில் குறவர் நிலத்தில் பிறந்து வாழ்ந்த ஏழைப் பெண். கண்ணகியோ காவிரிப்பூம்பட்டினத்தில், சோழ அரசனுக்கு அடுத்த நிலையில் வைத்து எண்ணப்பட்ட செல்வம் படைத்த குடியில் பிறந்து செல்லமாக வளர்ந்து, தன்னைப்போல், செல்வக் குடும்பத்தில் பிறந்த கோவலனை மணஞ்செய்த திருவமர் செல்வி. திருமாவுண்ணி, மண வயதுள்ள, ஆனால் மணம் ஆகாத மங்கை. கண்ணகியோ மணம் ஆன இருபத்தைந்து வயது கடந்த நடுத்தர வயதுள்ள பெண்மணி. இவ்வாறு பல வகையிலும் வேறுபட்டவர்கள் இவ்விரு பெண்மணிகளும். இவர்கள் இருவரையும் ஒருவரே என்று கூறுவது எவ்வளவு தவறானது, பொருத்தம் அற்றது!

சங்ககாலத்தில், அதாவது கி.பி. 300க்கு முற்பட்ட காலத்தில் தமிழ் மக்களிடையே காதல் மணம் நிகழ்ந்தது. வாலிப வயதுள்ள ஆணும் பெண்ணும் காதல் மணம் செய்துவந்த காலம் அது. அக்காதல் மணம் பெரும் பாலும் நன்றாக அமைந்து இன்ப வாழ்க்கையாக அமையும். சிறுபான்மைக் காதல் மணம், திருமாவுண்ணியது போன்று தீதாக அமைந்து துன்பமாக முடிவதும் உண்டு. ஆனால், அது மிக மிகக் குறைவு. சங்க காலத்தில் பெரிதும் காதல் மணம் நிகழ்ந்தாலும், ஓரளவு திருமணங்கள் பெற்றோரால் செய்துவைக்கப்பட்டனவும் உண்டு. முக்கியமாகச் செல்வம் படைத்த பெருங்குடியிற் சேர்ந்தவர் திருமணங்கள், பெற்றோரால் செய்துவைக்கப் பட்டவையே. சங்க காலத்தில் தமிழ்ச் சமுதாயம் பெருங்குடி மக்கள் என்றும் சிறுகுடி மக்கள் என்றும் இரண்டு பெரும் பிரிவாகப் பிரிக்கப்பட்டிருந்தது

என்பதைச் சங்க நூல்களை ஆழ்ந்து படித்தவர்கள் அறிவார்கள். பழங்காலத்து உரோம நாட்டிலும், கிரேக்க நாட்டிலும் பெருங்குடி, சிறுகுடி என்னும் பிரிவு இருந்திருக்கிறது. பெருங்குடி மக்களான பிரபுக்களை Patricians என்றும் சிறுகுடி மக்களை Plebeians என்றும் அந் நாட்டில் பெயர் வழங்கி வந்தனர் இத்தகைய பிரிவு தமிழ் நாட்டிலும் சங்க காலத்தில் இருந்ததைச் சங்க நூல்களில் காண்கிறோம். பெருங்குடி மக்களிடத்தில் பெரும்பாலும் காதல் மணம் நிகழ்வதில்லை; பெற்றோரே மணம் செய்து வைக்கும் வழக்கம் இருந்தது. அந்த முறையில்தான் பெருங் குடி வகுப்பைச் சேர்ந்த கோவலனுக்கும் கண்ணகிக்கும் திருமணம் நிகழ்ந்தது. ஆகவே, திருமாவுண்ணிக்கும் கண்ணகிக்கும் யாதொரு தொடர்பும் இல்லை இருவரும் வெவ்வேறு மகளிர் ஆவர்.

வேங்கை மரத்தின்மேல் பரண் அமைத்துக்கொண்டிருந்த பெண்கள் கணக்கற்ற பேர் உண்டு. அவர்கள் எல்லோரும் திருமாவுண்ணிகள் அல்லர். வேங்கைமர நிழலில் தங்கிய பெண்கள் எல்லோரும் கண்ணகியர் அல்லர். முலைகுறைத்தவர் பல பெண்கள் உள்ளனர். அவர்கள் எல்லோரும் திருமாவுண்ணிகளும் கண்ணகிகளும் அல்லர்.

திருமாவுண்ணியுடன் கண்ணகியை இணைத்துப் பிணைப்பது போலவே, பேகன் என்னும் வள்ளலின் மனைவியாகிய கண்ணகியைக் கோவலன் மனைவியாகிய கண்ணகியுடன் இணைத்துப் பிணைத்து முடி போகிறார் வையாபுரிப்பிள்ளை. கடையெழு வள்ளல்களில் ஒருவனாகிய பேகன் என்னும் வள்ளல் தன் மனைவி கண்ணகியைப் புறக்கணித்து வேறொருத்தியுடன் வாழ்ந்ததாகப் புறநானூற்றிலிருந்து அறிகிறோம். கண்ணகி என்ற பெயரைக் கண்டவுடன் வையாபுரிப்பிள்ளை, அந்தக் கண்ணகியைக் கோவலன் கண்ணகியுடன் முடிபோடுகிறார் (இலக்கிய மணிமாலை பக்கம் 146) கண்ணகி என்னும் பெயர் கோவலன் மனைவிக்கு மட்டுந்தான் வழங்கியதாக இவர் கருதுகிறார் போலும்! வையாபுரி என்னும் பெயர் இவருக்கு மட்டுந்தானா உரியது? கண்ணகி என்னும் பெயர் சங்க காலத்தில் ஒருத்திக்குமட்டுந்தானா வழங்கியிருக்கும்?

கண்ணகி என்னும் பெயர் கண்ணழகி என்பதன் திரிபு. பெண்களின் கண் உறுப்பைச் சிறப்பித்துப் பெயர் இடுவது தொன்றுதொட்டு இன்று வரையும் உள்ள மரபு. கண்ணம்மாள் என்னும் பெயர் இன்றும் எத்தனையோ

பெண்களுக்கு வழங்கப்படுகிறது. காமாட்சி, மீனாட்சி, விசாலாட்சி, அஞ்சனாட்சி முதலிய கண்ணைச் சிறப்பித்துள்ள பெயர்களும் இன்றும் பெண்மணிகளுக்கு வழங்கப்படுகின்றன. அதுபோல, கண்ணகி (கண்ணழகி) என்னும் பெயரையும் அக்காலத்தில் பல பெண்மணிகளுக்கு வழங்கியிருப் பார்கள் அன்றோ? (நக்கண்ணி என்னும் பெயரும் அக்காலத்தில் வழங் கியது.) ஆகவே, இதனையறியாமல், வள்ளல் பேகனுடைய மனைவி கண்ணகியையும், கோவலனுடைய மனைவி கண்ணகியையும் ஒருவராகக் கூறுவது ஆராய்ச்சிக்கும் அறிவுக்கும் அனுபவத்துக்கும் பொருந்தாது. கண்ணகிகள் என்னும் பெயருள்ளவர்கள் பலர் இருந்திருக்கிறார்கள் என் பதில் ஐயமில்லை. அதுபோல ஒரு முலை குறைத்த பெண்மணிகளும் சிலர் இருந்திருக்க வேண்டும் அல்லவா? அவர்களைப்பற்றி அடுத்த கட்டுரையில் ஆராய்வோம்.

இதுகாறும் ஆராய்ந்தவற்றால், திருமாவுண்ணியும் கண்ணகியும் ஒருவர் அல்லர், வெவ்வேறு பெண்மணிகள் என்பதும் வேங்கை மரத்தின்கீழ் இருந்தவர் என்பது காரணமாக இருவரையும் ஒருவராகப் பொருத்துவது ஏற்றுக்கொள்ளத்தக்கதன்று என்பதும் ஆகும். இவை பழங்கதைகள் அல்ல என்பதும், வெவ்வேறு இடத்தில் சங்க காலத்தில் நிக்ழ்ந்த உண்மை நிகழ்ச்சி கள் என்பதும் அறியத்தக்கன.

கலைக்கதிர்-செப்டம்பர் 1959

28. மாநாய்கனும் மாசாத்துவானும்

உலகப் புகழ்பெற்றிருந்த காவிரிப்பூம்பட்டினத்திலே கோவலனும் கண்ணகியும் பிறந்து வாழ்ந்தார்கள். அவர்களுடைய பெற்றோர் புகார்ப் பட்டினத்தில் பெரு வாணிகராகத் திகழ்ந்தார்கள். இவர்களைத் தவிர வேறு பல வாணிகர் புகார்ப்பட்டினத்தில் வாணிகஞ் செய்திருந்தார்கள். அவர்களில் சிலர் எட்டி என்னும் சிறப்புப் பெயர் பெற்றிருந்தார்கள். அக்காலத்தில் (வாணிகத்தினால் பெரும் பொருள் ஈட்டிச் செல்வங்கொழித்தவருக்கு 'எட்டி' என்னும் பட்டங் கொடுத்துத் தமிழ்வேந்தர் அவர்களைச் சிறப்புச் செய் தார்கள். எட்டிப் பட்டம் வழங்கும்போது அரசன் 'எட்டிப்பூ' என்னும் பொற்பூவை அளிப்பது வழக்கம். எட்டிப் பட்டம் பெற்ற ஒரு வாணிகன் காவிரிப்பூம்பட்டினத்தில் இருந்ததை மணிமேகலை கூறுகிறது. எட்டிக்

குமரன் ஆசனத்தில் அமர்ந்து யாழ் வாசித்துக்கொண்டிருந்ததை மணி மேகலை இவ்வாறு கூறுகிறது.

> ''மகர யாழின் வான்கோடு தழீஇ
> வட்டிகைச் செய்தியின் வரைந்த பாவையின்
> எட்டி குமரன் இருந்தோன்.''

(மணி: பளிக்கறைபுக்க காதை. 56-58)

காவிரிப்பூம்பட்டினத்தில் இருந்த இன்னொரு வாணிகன், தருமதத்தன் என்னும் பெயருடையவன், பாண்டி நாட்டு மதுரைக்குச் சென்று வாணிபஞ் செய்து பெரும் பொருள் ஈட்டினான். அப்போது பாண்டிய அரசன் அவனுக்கு 'எட்டி'ப் பட்டமும் எட்டிப்பூவும் வழங்கிச் சிறப்புச் செய்தான் என்பதை மணிமேகலை காவியமே கூறுகிறது.

> ''வாணிக மரபின் வருபொருள் ஈட்டி
> நீணிதிச் செல்வனாய் நீணில வேந்தனின்
> எட்டிப் பூப்பெற்று இருமுப் பதிற்றியாண்டு
> ஒட்டிய செல்வத்து உயர்ந்தோன் ஆயினன்.''

(மணி: சிறைசெய்காதை. 111-114)

காவிரிப்பூம்பட்டினத்தில் கப்பல் வாணிகனாக இருந்த சாதுவன் என்பவன் தன்னுடைய செல்வத்தையெல்லாம் சூதாட்டத்திலும் கணிகை யரிடத்திலும் செலவு செய்து வறுமையடைந்தான். பிறகு அவன் தான் இழந்த செல்வத்தை மீண்டும் பெறுவதற்காகக் கப்பல் வாணிகத்தைத் தொடங்கி கிழக்குக் கடலில் சாவக நாட்டுடன் வாணிகஞ் செய்யக் கப்பல் ஏறிச் சென்றதை மணிமேகலை காவியமே கூறுகிறது. (மணி: ஆதிரை பிச்சையிட்ட காதை) இவ்வாறு (சங்ககாலத்துக் காவிரிப்பூம்பட்டினத்தில் பெரிய பெரிய வாணிகர் இருந்ததையறிகிறோம்.) (காவிரிப்பூம்பட்டினம் அக்காலத்தில் உலகப் புகழ்பெற்றிருந்த துறைமுகப் பட்டினம்.) அங்கிருந்த வாணிகர், வாணிகப் பொருள்களைக் கப்பல்களில் ஏற்றுமதி செய்து கடல் கடந்த நாடு களுக்கு அனுப்பியும், இறக்குமதியான பொருட்களை உள்நாடுகளில் வணிகச் சாத்துகளின் மூலமாக அனுப்பி விற்றும் பெருஞ்செல்வத்தைத் தேடி னார்கள். (அவ்வாறு வாணிகஞ் செய்தவர்களில் கண்ணகியின் தந்தையும் கோவலனின் தந்தையும் குறிப்பிடத்தக்கவர் ஆவார்கள். அவர்களுடைய பெயரே அவர்கள் பெரிய வாணிகர் என்பதைத் தெரிவிக்கின்றன.)

மாநாய்கன்

(கண்ணகியின் தந்தை மாநாய்கன் என்று பெயர் பெற்றிருந்தான். மாநாய்கன் என்பது அவனுடைய சொந்தப் பெயர் அன்று; சிறப்புப் பெயர். மாநாய்கன் என்பது மாநாவிகன் என்னும் சொல்லின் திரிபு. மா-பெரிய. நாவிகன் - கப்பல் வாணிகன். (நாவாய்-கப்பல். நாவிகன்-கப்பற்றலைவன்) மாநாவிகன் என்னும் பெயர் திரிந்து மாநாய்கன் என்று ஆயிற்று. கடல் கடந்த அயல்நாடுகளுடன் கப்பல் வாணிகஞ் செய்தபடியால் இவன் மாநாய்கன் என்று பெயர் பெற்றான். இவனுடைய முன்னோரும் பரம்பரையாக நாவாய் வாணிகராக இருந்தனர் போலத் தெரிகின்றது. பெருஞ்செல்வனாகிய மாநாய் கனுக்கு ஒரே செல்வ மகள் கண்ணகி. சிலப்பதிகார காவியம் மாநாய் கனையும் அவன் மகள் கண்ணகியையும் இவ்வாறு கூறுகிறது.

"நாகநீள் நகரொடு நாகநா டதனொடு
போகநீள் புகழ்மன்னும் புகார்நகர் அதுதன்னில்
மாகவான் நிகர்வண்கை மாநாய்கன் குலக்கொம்பர்
ஈகைவாள் கொடியன்னாள் ஈராறாண் டகவையாள்."

(சிலம்பு: மங்கல வாழ்த்துப் பாடல்)

நாகநீள் நகர்-சுவர்க்கம். நாகநாடு-பவணலோகம். மாகவான் - விசும்பின் மேகம். மாநாய்கன்-மாநாவிகன் (சிறப்புப் பெயர்). ஈகை-பொன்.)

மாசாத்துவான்

(கோவலனுடைய தந்தை மாசாத்துவான் என்று பெயர் பெற்றிருந் தான். மாசாத்துவான் என்பது சொந்தப் பெயர் அன்று; குடிப்பெயர். சாத்து என்றால் வணிகச் சாத்து, தரை வாணிகர். தரை வழியே பல நாடுகளுக்குச் சென்று வாணிகஞ் செய்யும் குழுவுக்குச் சாத்து என்பது பெயர். சாத்து வன்-சாத்தின் தலைவன். மாசாத்துவான்-என்பது பெரிய சாத்தின் தலைவன். மாசாத்துவான் தன்னுடைய செல்வச் சிறப்பினாலே காவிரிப்பூம்பட்டினத்துப் பெருமக்களில் முதல் மகனாக விளங்கினான். சோழ அரசனுக்கு அடுத்த படியாக இவன் முதல்வனாகக் கருதப்பட்டான். இவனுடைய ஒரே மகன் கோவலன். இதனைச் சிலப்பதிகாரம் இவ்வாறு கூறுகிறது.

"பெருநிலம் முழுதாளும் பெருமகன் தலைவைத்த
ஒருதனிக் குடிகளோ டுயர்ந்தோங்கு செல்வத்தான்

வருநிதி பிறர்க்கார்த்து மாசாத்து வானென்பான்
இருநிதிக் கிழவன்மகன் ஈரெட்டாண் டகவையான்."

(சிலம்பு: மங்கல வாழ்த்துப் பாடல்)

பெருநிலம் முழுதாளும் பெருமகன்-சோழ அரசன். பிறர்க்கு ஆர்த்தும் -பொருளில்லார்க்கு நிறைவிக்கும் (கொடுக்கும்) இருநிதிக்கிழவன் - குபேரன். (குபேரன் போன்ற மாசாத்துவான்) மகன்-கோவலன்.)

(கோவலனுடைய மூதாதையர், தரை வாணிகம் மட்டும் அல்லாமல் கடல் வாணிகமும் செய்தனர் என்பது தெரிகின்றது. கோவலனுடைய பாட்டன் ஒருவன் கிழக்குக் கடலில் (வங்காளக் குடாக்கடலில்) நாவாயில் சென்றபோது நாவாய் உடைந்து அல்லற்பட்டுக் கடலில் நீந்திக்கொண்டிருந்த போது, கடல் தெய்வமாகிய மணிமேகலா தெய்வத்தின் அருளால் கரையேறி உயிர் பிழைத்தான் என்றும், அதன் காரணமாகவே, கோவலனுக்கும் மாதவி யிடத்தில் பிறந்த குழந்தைக்கு மணிமேக லை என்று பெயர் இட்டான் என்றும் சிலப்பதிகாரங் கூறுகிறது.

"மாமுது கணிகையர் மாதவி மகட்கு
நாம நல்லுரை நாட்டுதும் என்று
தாமின் புறூஉம் தகைமொழி கேட்டாங்(கு)
இடையிருள் யாமத் தெறிதிரைப் பெருங்கடல்
உடைகலப் பட்ட எங்கோன் முன்னாள்
புண்ணிய தானம் புரிந்தோன் ஆகலின்
நண்ணுவழி யின்றி நாள்சில நீந்த
'இந்திரன் ஏவலின் ஈங்கு வாழ்வேன்
வந்தேன், அஞ்சல் மணிமே கலையான்.
உன்பெருந் தானத் துறுதி ஒழியாது
துன்பம் நீங்கித் துயர்க்கடல் ஒழி'கென
விஞ்சையிற் பெயர்த்து விழுமந் தீர்த்த
எங்குல தெய்வப் பெயரீங் கிடுகென
அணிமே கலையார் ஆயிரங் கணிகையர்
'மணிமேக லை'என வாழ்த்திய ஞான்று."

(சிலம்பு: அடைக்கலக்காதை 25-39)

(வணிகச் செல்வராகிய மாசாத்துவானும் மாநாய்கனும் கோவலனுக்குக் கண்ணகியை மணஞ்செய்வித்துத் திருமண விழாவைச் சிறப்பாக நடத்தினார்கள். திருமணமான சில காலத்துக்குப் பிறகு கோவலனுடைய தாய், தன்னுடைய மகன் இல்வாழ்க்கையை இனிது நடத்திச் சிறப்பாக வாழ வேண்டும் என்னும் கருத்துடன் கண்ணகியையும் கோவலனையும் தனித்து வாழ மனையறம்படுத்தினாள். சுற்றத்தாரைப் பேணுதல், விருந்தினரைப் போற்றுதல், துறந்தோரைக் காத்தல், இரந்தோர்க்கு அளித்தல் முதலிய மனையறத்தை நடத்தி வாழ்வாங்கு வாழ்வதைக் காண விரும்பினாள். தனி மாளிகையும் பொன்னும் பொருளுங் கொடுத்து ஏவலாளர் முதலிய பணியாளர்களையும் அளித்தாள். இதனைச் சிலம்பு,

> **"மறப்பருங் கேண்மையோடு அறப்பரி சாரமும்**
> **விருந்து புறந்தரூஉம் பெருந்தண் வாழ்க்கையும்**
> **வேறுபடு திருவின் வீறபெறக் காண**
> **வுரிமைச் சுற்றமோ டொருதனி புணர்க்க"**

என்று கூறுகிறது.

மறப்பு அரும்-மறக்க முடியாத. கேண்மை-சுற்றம். அறப்பரிசாரம் - துறந்தாரைப் போற்றுதல் முதலிய அறச்செயல். விருந்துபுறந் தருதல்-புதிதாக வந்தவர்களை உபசரித்துப் போற்றுதல். வேறுபடுதிரு-வெவ்வேறான செல்வம். வீறுபட-பெருமைப்பட. உரிமைச் சுற்றம்-பணிவிடையாளர்கள்.)

கோவலனுடைய பெற்றோர் அவனிடம் என்ன எதிர்பார்த்தார்களோ அந்தச் சிறந்த வாழ்க்கை நிறைவேறவில்லை. ஆடல்பாடல் முதலிய வினோதங்களில் மனத்தைச் செலுத்தி மாதவியின் மையலில் சிக்கிப் பொன்னும் பொருளும் இழந்து வறுமையடைந்து கடைசியில் ஒருவரிடமும் சொல்லாமல் மதுரைக்குச் சென்று, அங்குக் கள்ளன் என்று பழியடைந்து இறக்க நேரிட்டது. கண்ணகி, இறந்துபோன தன் கணவனுக்கும் தன் குலத்துக்கும் நேரிட்ட வீண்பழியை நீக்குவதற்காகப் பாண்டியன் சபையில் வழக்காடி வீண் பழியை நீக்கிப் பின்னர் உயிர் நீத்தாள். காவிரிப்பூம்பட்டினத்தில் வாழ்ந்தவனான மாடல மறையோன், கன்னியாகுமரிக்குச் சென்று புனித நீராடித் திரும்பி வருகிற வழியில் மதுரையில் வந்து தங்கினபோது கோவலனின் மரணமும் கண்ணகியின் வழக்கும் நடந்தன. பிறகு மாடலன் தன் ஊருக்கு வந்து கோவலன் கண்ணகியரின் பெற்றோருக்கும் ஊராருக்கும் இந்தச் செய்திகளைச் சொன்னான்.

இந்த அவலச் செய்தியைக் கேட்ட கோவலனுடைய் தாயும் கண்ணகி யினுடைய அன்னையும் மக்களை இழந்த தீராத் துயரத்தினாலும், அவர் களுக்கு நேரிட்ட பெருந்துன்பங்களை எண்ணியும் மனநோயினால் இறந்து போனார்கள். மாசாத்துவான் தன்னுடைய பெருஞ் செல்வங்களைத் தான தருமம் செய்து வாழ்க்கையை வெறுத்துப் பௌத்த சமயத்தைச் சார்ந்து பௌத்த பிக்குவாகி ஊரைவிட்டுப் போய்விட்டான். மாநாய்கனும் தன் னுடைய பெருஞ் செல்வத்தைத் தானதருமம் செய்து வாழ்க்கையை வெறுத்து ஆசீவக மதத்தைச் சார்ந்து துறவியாகித் தேசாந்தரஞ் சென்றான். இவ்வாறு இவ்விரு பெருஞ் செல்வர்களாகிய வாணிகப் பெருமக்களின் வாழ்க்கை முடிவுற்றது.) இவற்றையெல்லாம்,

''செம்பியன் மூதூர்ச் சிறந்தோர்க் குரைக்க
மைந்தற் குற்றதும் மடந்தைக் குற்றதும்
செங்கோல் வேந்தற் குற்றதுங் கேட்டுக்
கோவலன் தாதை கொடுந்துயர் எய்தி
மாபெருந் தானமா வான்பொருள் ஈத்தாங்கு
இந்திர விகாரம் ஏழுடன் புக்காங்கு
அந்தர சாரிகள் ஆறைம் பதின்மர்
பிறந்த யாக்கைப் பிறப்பற முயன்று
துறந்தோர் தம்முன் துறவி யெய்தவும்
துறந்தோன் மனைவி மகன்துயர் பொறாஅள்
இறந்ததுய ரெய்தி இரங்கிமெய் விடவும்
கண்ணகி தாதை கடவுளர் கோலத்து
அண்ணலம் பெருந்தவத் தாசீவகர்முன்
புண்ணிய தானம் புரிந்தறங் கொள்ளவும்
தானம் புரிந்தோன் தன்மனைக் கிழத்தி
நாள்விடூஉ நல்லுயிர் நீத்துமெய் விடவும்''

(சிலம்பு: நீர்ப்படைக் காதை 87-102)

வாழ்த்துக்காதையிலும் இந்தச் செய்தி கூறப்படுகிறது.

''கோவலன் தன்னைக் குறுமகன் கோளிழைப்பக்
காவலன் தன்னுயிர் நீத்ததுதான் கேட்டேங்கிச்
சாவதுதான் வாழ்வென்று தானம் பலசெய்து

மாசாத்து வான்துறவும் கேட்டாயோ அன்னை
மாநாய்கன் தன்துறவும் கேட்டாயோ அன்னை.''

(காவற்பெண்டரற்று.)

- செந்தமிழ்ச்செல்வி - சிலம்பு - 46

29. தேவந்தி
கண்ணகியின் தோழி

தேவந்தி என்பவள் காவிரிப்பூம்பட்டினத்தில் இருந்த ஒரு பார்ப்பனப் பெண்மணி. இவள் கோவலனின் மனைவியாகிய கண்ணகியுடன் நெருங்கிய நட்பு உள்ளவள். கண்ணகியுடன் நட்புக் கொண்டிருந்தபடியால் கண்ணகியின் செவிலித்தாயாகிய காவற் பெண்டுக்கும் அவள் மகளாகிய அடித்தோழிக்கும் (கண்ணகியின் பணிவிடைப் பெண்) அறிமுகமானவள். கண்ணகியைப் போலவே தேவந்தியும் தன் கணவனால் கைவிடப்பட்டவள். ஆகையால் தேவந்தி சாத்தன் கோவிலில் சென்று அங்கு வழிபாடு செய்து கொண்டிருந்தாள்.

தேவந்தியைப் பற்றி ஒரு கதை கூறப்பட்டது. பாசண்டச்சாத்தன் என்னும் தெய்வம் பார்ப்பனன் வடிவமாக வந்து இவளை மணஞ்செய்து கொண்டு சில ஆண்டுகள் இவளுடன் வாழ்ந்து கொண்டிருந்தான். பிறகு இவளுக்குத் தன்னுடைய உண்மையான வடிவத்தைக் காட்டி 'நீ என் கோவிலில் வந்து என்னை வழிபட்டுக் கொண்டிரு' என்று கூறி மறைந்து போனான். அன்று முதலாக அவள் சாத்தன் கோவிலில் போய்ச் சாத்தனை வழிபட்டுக் கொண்டிருந்தாள் என்பது அந்தக் கதை.

ஒருநாள் கண்ணகியின் மாளிகைக்குத் தேவந்தி சென்றிருந்தபோது கண்ணகி தான் கண்ட தீய கனவைத் தேவந்திக்குக் கூறினாள். அதைக் கேட்ட தேவந்தி, சாத்தன் கோவிலுக்குப் போய்ச் சாத்தனை வழிபட்டால் உன்னுடைய துன்பம் நீங்கும் என்று கூறினாள். இதற்குக் கண்ணகி உடன்படவில்லை. காவிரியாறு கடலுடன் கலக்கிற புகார்த் துறைக்கு அருகில் உள்ள சூரிய குண்டம் சோமகுண்டம் என்னும் ஏரிகளில் முழுகிக் குளித்து அங்குள்ள காமன் கோட்டத்தை வழிபட்டால் உன்னுடைய கணவனை நீ பெறுவாய் என்று தேவந்தி கண்ணகிக்குக் கூறினாள். அதற்கும் கண்ணகி உடன்படவில்லை.

பிறகு கோவலனும் கண்ணகியும் பாண்டி நாட்டு மதுரைக்குச் சென்றதும், அங்குக் கோவலன் கள்வன் என்று பொய்க் குற்றஞ்சாற்றப் பெற்றுக் கொலையுண்டு இறந்ததும் கண்ணகி பாண்டியன் சபைக்குச் சென்று வழக்குரைத்துத் தன் கணவன் குற்றமற்றவன் என்பதை நிரூபித்துக் காட்டித் தன் கணவனைக் கொன்றது அநியாயம் என்று தெளிவுபடுத்திய போது நகரமக்கள் பாண்டியன் அரண்மனையைத் தீயிட்டுக் கொளுத்தியதும், பிறகு கண்ணகி உண்ணா நோன்பிருந்து பதினான்கு நாட்களுக்குப் பிறகு இறந்து போனதும் ஆகிய இச்செய்திகளையெல்லாம் தேவந்தி அறிந்தாள். சில காலஞ் சென்றபிறகு, சேர மன்னனான செங்குட்டுவன் கண்ணகிக்குப் பத்தினிக் கோட்டம் அமைத்துச் சிறப்புச் செய்ய இருப்பதை அறிந்து தேவந்தி பத்தினிக் கோட்டஞ் சென்றாள். அவளுடன் கண்ணகியின் செவிலித் தாயாகிய காவற் பெண்டும், கண்ணகியின் பணிப்பெண்ணாகிய அடித் தோழியும் காவிரிப்பூம்பட்டினத்திலிருந்து சென்றார்கள். சென்று பத்தினிக் கோட்ட விழாவில் கலந்து கொண்டார்கள்.

தேவந்தி, வஞ்சிமா நகரத்துக்குச் சென்று பத்தினிக் கோட்டத்துக் கண்ணகி விழாவில் கலந்து கொண்டபோது, இவளுடைய சிரத்தையையும் ஆர்வத்தையும், ஊக்கத்தையும் கண்ட அக்கோயிலில் இருந்தவர், இவளுக்கும் கண்ணகிக்கும் என்ன தொடர்பு என்பதைக் கேட்டார்கள். கண்ணகி காவிரிப்பூம்பட்டினத்தில் வாழ்ந்திருந்தபோது தான் அவளுடைய தோழியாக இருந்ததைத் தேவந்தி அவர்களுக்குத் தெரிவித்தாள். பிறகு கோவிலில் சென்று தெய்வ உருவத்துடன் கல்லாகக் காட்சியளித்த கண்ணகியைக் கண்டு, உயிருள்ள கண்ணகியாகவே கருதிக்கொண்டு, 'நீ கண்ட தீய கனவை அன்று எனக்குச் சொன்னபோது அதை ஏதோ வெறுங் கனவு என்று கருதினேன், தோழி! மதுரையில் நிகழ்ந்த நிகழ்ச்சிகளைக் கேட்டு உன்னுடைய தாய் மனக்கவலையுடன் இறந்து போனதை நீ அறிவாயா? உன் மாமியும் துயரம் அடைந்து இறந்து போனதையும் நீ அறிவாயா என்று வாய்விட்டுக் கூறி வருந்தினாள்.

தேவந்தி கூறியவைகளை இளங்கோவடிகள் தம்முடைய சிலப்பதி காரக் காவியத்தில் அழகான இனிய செய்யுளாக அமைத்திருக்கிறார். அந்தச் செய்யுள்கள் இவை.

"முடிமன்னர் மூவருங் காத்தோம்புந் தெய்வ
வடபேரிமய மலையில் பிறந்து

கடுவாள் கங்கைப் புனலாடிப் போந்த
தொடிவளைத் தோளிக்குத் தோழிநான் கண்டீர்
சோணாட்டம் பாவைக்குத் தோழி நான் கண்டீர்''

''செய்தவம் இல்லாதேன் தீக்கனாக் கேட்டநாள்
எய்த வுணராது இருந்தேன்மற் றென் செய்தேன்
மொய்குழல் மங்கை! முலைப் பூசல் கேட்ட நாள்
அவ்வை உயிர்வீவும் கேட்டாயோ தோழி!
அம்மாமி தன்வீவும் கேட்டாயோ தோழி!''

கண்ணகிக்குப் பத்தினிக் கோட்டத்தில் விழா மிகச்சிறப்பாக நடந்தது. பிறகு பத்தினிக் கோட்டத்தை அமைத்த சேரன் செங்குட்டுவன், அந்தக் கோவிலுக்கு மானியங்கள் வழங்கி நித்திய பூசை செய்யும்படி தேவந்தியை அமைத்தான். தேவந்தி கண்ணகியின் பத்தினிக் கோட்டத்தில் நாள்தோறும் பூசைசெய்து கொண்டே தன் வாழ்நாளைக் கழித்தாள்.

சென்னை இளைஞர் கழக இரவு உயர்நிலைப்பள்ளி,
பொன்விழா மலர் 1968

30. மாதவி: காவிரிப்பூம்பட்டினத்தின் கலைச்செல்வி

இசைக்கலை நாடகக்கலைகளிலே தேர்ந்தவளான மாதவிக்குச் சிலப்பதிகாரக் காவியத்திலே சிறப்பான தனியிடம் உண்டு. மதிப்புள்ள சிறப்பான இடத்தை மாதவி பெற்றது, அவள் செல்வச் சீமானான கோவலனுடைய காமக் கிழத்தி என்பதால் அன்று. இசைக் கலை நாடகக்கலைகளாகிய கவின்கலைகளில் அவள் பெற்றிருந்த முதன்மை இடமே அவளுக்குப் பெருஞ்சிறப்பைத் தந்தது. செல்வமும் நாகரிகமுங் கொழித்து உலகப் புகழ்பெற்றிருந்த அக்காலத்துக் காவிரிப்பூம்பட்டினத்திலே, கணிகையர் குலத்திலே, அதிலும் பெருந்தனம் என்னும் சிறப்புடைய கணிகையர் பிரிவிலே பிறந்த மாதவி, தன்னுடைய குலமுறைப்படி ஐந்து வயது தொடங்கிப் பன்னிரண்டு வயதுவரையில் ஏழு ஆண்டு இசைக்கலை நாடகக் கலைகளை முறைப்படி நன்கு பயின்றாள். கலைகளைப் பயின்று தேர்ந்த பிறகு, சோழ மன்னனுடைய அவைக்களத்திலே கலைஞர்களின் முன்னிலையிலே அரங்கேறித் தான் கற்ற கலைகளைத் திறம்படக் காட்டினாள்.

அக்காலத்திலிருந்த சோழ மன்னன் சரித்திரப் புகழ்பெற்ற கரிகால் வளவன். மாதவி அரங்கேறியபோது அவ்வரசன் முதுமையடைந்திருந்தான். வயது முதிர்ந்த கரிகால் வளவன் அவையிலே, பன்னிரண்டு வயதினளாகிய மாதவி அரங்கேறினாள். தான் கற்ற இசைக்கலை ஆடற்கலைகளையெல்லாம் இசைபாடியும் ஆடல் நிகழ்த்தியும் சபையோருக்குக் காட்டினாள். அவளுடைய கலைத் திறமையைக் கண்டுமெச்சிய சோழ அரசனும் கலைவாணரும் அக்காலத்து வழக்கப்படி தலைக்கோலி என்னும் பட்டத்தையும் அதற்கு அடையாளமாகிய தலைக்கோலையும் அவளுக்கு வழங்கினார்கள். தலைக்கோல் என்பது கெட்டியான மூங்கிற் கழியில் பொன்னால் பூணும் கட்டும் அமைத்து நவரத்தினங்கள் இழைக்கப்பட்ட கோல். தலைக்கோலிப் பட்டம் வழங்கியது மட்டுமல்லாமல் அரசன் ஆயிரத்தெட்டுக் கழஞ்சு நிறையுள்ள பொன் மாலையை அவளுக்குத் தலைவரிசையாகக் கொடுத்தான். கலைச்செல்வியாகிய மாதவி அரங்கேறிப் பட்டமும் பரிசும் பெற்றதைச் சிலப்பதிகாரம் அரங்கேற்றுகாதை மிக நன்றாகக் கூறுகிறது

அக்காலத்திலே காவிரிப்பூம்பட்டினத்திலே செல்வம் படைத்த சீமானாக இருந்தவன் இளைஞனாகிய கோவலன். கோவலன் இசை பயின்றவன்; கலை ரசிகன். கோவலன், மாதவியின் அழகிலும் இசைப் பாடல் களிலும் ஆடற் கலைகளிலும் ஈடுபட்டு அவளைத் தன்னுடைய காமக் கிழத்தி யாக்கிக் கொண்டு அவளுடன் வாழ்ந்து வந்தான்.

சோழ அரசனால் பட்டமும் பரிசும் பெற்றுக் கலைஞர்களின் நன் மதிப்பைப் பெற்ற மாதவி, காவிரிப்பூம்பட்டினத்திலே ஆண்டுதோறும் இருபத்தெட்டு நாட்கள் நடைபெற்ற இந்திர விழாவிலே நாள்தோறும் அரங்கேறி இசைபாடியும் ஆடல் நிகழ்த்தியும் விழாவைச் சிறப்பித்து நகரமக்களை மகிழ்வித்து வந்தாள். விழாக் காலங்களில் மாதவியினுடைய ஆடல் பாடல் நாட்டியம் நடனங்களைக் கண்டும் கேட்டும் மகிழ்ந்த உள்ளூர் வெளியூர் மக்கள் எல்லோரும் அவளுடைய கலைத் திறமையை மெச்சிப் புகழ்ந்தார்கள். அவளுடைய கலைப்புகழ் சோழநாட்டில் மட்டுமல்லாமல் பாண்டி நாட்டிலும் சேரநாட்டிலும் பரவிற்று. தமிழகத்துக்கு அப்பாலும் அவளுடைய புகழ் சென்றது. தமிழகத்துப் பேர்போன கலைச்செல்வியாக அக்காலத்தில் மாதவி விளங்கினாள்.

மாதவி பிறந்த கணிகையர் குலம் தலைமுறை தலைமுறையாக ஆடற் பாடற் கலைகளில் பேரும் புகழும் பெற்றிருந்தது. அவளுடைய

குலத்தைப்பற்றி ஒரு கதையுங்கூட வழங்கி வந்தது. தேவலோகத்திலே இந்திரனுடைய சபையிலே ஆடல்பாடல் முதலிய கலைகளில் தேர்ந்த அரம்பையர் சிலர் இருந்தனராம். அந்த அரம்பையரில் ஒருத்தி மாதவி என்பவளாம். அந்த மாதவி ஒருநாள் இந்திர சபையிலே நடினம் ஆடின போது அச்சபையிலிருந்த சயந்த குமரன் என்பவன் அவளுடைய அழகில் ஈடுபட்டானாம். அவளும் அவன்மேல் மனத்தைச் செலுத்தினாளாம். அதன் காரணமாக அவளுடைய ஆடல் பாடல்கள் முறைப்படி நிகழாமல் வழு வடைந்து சிறப்படையாமற் போயிற்றாம். இந்திர சபையிலிருந்த இசைக் கலையாசிரியராகிய நாரதர் மாதவியின் ஆடல்பாடல் வழுப்பட்டதன் காரணத்தையறிந்து மாதவிக்கும் சயந்த குமரனுக்கும் சாபங்கொடுத்தாராம். மாதவி விண்ணுலகத்தைவிட்டு மண்ணுலகத்திலே மானிட மகளாகப் பிறக்கக் கடவள் என்றும், சயந்த குமரன் மண்ணுலகத்தில் மலையிலே மூங்கிலாகப் பிறந்து பிறகு தலைக்கோலாகக் கடவன் என்றும் சாபங்கொடுத்தாராம். சாபம் பெற்ற மாதவி மண்ணுலகத்திலே காவிரிப்பூம்பட்டினத்திலே மானிட மகளாகப் பிறந்து ஆடல் பாடல் கலைகளைப் பயின்று வாழ்ந்தாளாம். அவளுடைய பரம்பரையிலே எத்தனையோ கூத்தியர்கள் தோன்றிக் கலை களைப் பயின்று புகழ் படைத்திருந்தார்களாம். அந்த மாதவி பரம்பரையில் வந்தவள்தான் கோவலன் காலத்திலிருந்த நமது மாதவி. இந்தச் செய்தியைச் சிலப்பதிகாரம் இவ்வாறு கூறுகின்றது:

'நாரதன் வீணை நயந்தெரி பாடலும்
தோரிய மடந்தை வாரம் பாடலும்
ஆயிரங் கண்ணோன் செவியகம் நிறைய
நாடகம் உருப்பசி நல்காள் ஆகி
மங்கல மிழப்ப வீணை மண்மிசைத்
தங்குக விவளெனச் சாபம் பெற்ற
மங்கை மாதவி வழிமுதல் தோன்றிய
அங்கர வல்குல் ஆடலுங் காண்குதும்'

(சிலம்பு, கடலாடுகாதை: 18-25)

மற்றும் சிலப்பதிகாரம் அரங்கேற்று காதையின் முதல் ஏழு அடிகளும் இச்செய்தியைக் கூறுகிறது மணிமேகலை 24-ஆவது காதை 13, 14-ஆம் அடிகளிலும் இந்த வரலாறு குறிப்பாகக் கூறப்படுகிறது.

பூம்புகார் நகரம் என்னும் காவிரிப்பூம்பட்டினத்திலே ஆண்டுதோறும் நிகழ்ந்த இந்திர விழா நாட்களிலே மாதவியின் கலைநிகழ்ச்சிகள் நடந்தன என்று கூறினோம். அக்கலை நிகழ்ச்சிகள் பரதநாட்டியமும் இசைப்பாட்டும் மட்டுந்தான் என்று கருதவேண்டாம். இவற்றுடன் பதினொரு வகையான ஆடல்களையும் அவள் நிகழ்த்தினாள். கொடு கொட்டியாடல், பாண்டரங்கக் கூத்து, அல்லியம் ஆடல், மல்லாடல், துடிக்கூத்து, குடைக்கூத்து, குடக்கூத்து, பேடியாடல், மரக்காலாடல், பாவையாடல், கடையக்கூத்து என்னும் பதினொரு ஆடல்களையும் அவள் ஆடினாள்.

(சிலம்பு, கடலாடுகாதை: 39 - 45)

இந்தப் பதினொரு ஆடல்களையும் ஆடினபோது அந்தந்த ஆடல் களுக்குரிய பாத்திரங்களாகிய சிவபெருமான், கண்ணன், முருகன், காமன், கொற்றவை, திருமகள், அயிராணி (இந்திராணி) முதலியவர்களின் உருவத்தில் அவர்களின் ஆடையணிகளை அணிந்து கொண்டு ஆடினாள். அவளுடைய அணிகளும் ஆடைகளும் ஆடல்பாடல்களும் காண்பவரின் கண்ணையும் கருத்தையும் கவர்ந்து மகிழ்ச்சியளித்தன.

மாதவியினுடைய ஆடற்பாடற் கலைப்புகழ் தமிழகத்துக்கு அப்பாலும் பரவியிருந்தது என்று சொன்னோம் அல்லவா? வட இந்தியாவி லேயும் மாதவியின் கலைப்புகழ் பரவியிருந்தது என்று இளங்கோவடிகள் கூறுகிறார். காவியப் புலவருக்கேயுரிய கற்பனை நயத்துடன் இளங்கோவடி கள் சிலப்பதிகாரக் காவியத்திலே இதை வெகு அழகாகக் கூறுகிறார். இமயமலைக்கு அப்பால் வடசேடி என்னும் இடத்திலே தன் காதலியுடன் இருந்த விஞ்சையன் ஒருவன், காவிரிப்பூம்பட்டினத்திலே இந்திர விழாவின் போது மாதவி நிகழ்த்துகிற ஆடல் பாடல்களைக் கண்டு மகிழ எண்ணினான். அவன் தன் காதலியுடன் ஆகாய வழியே பறந்துவந்து பூம்புகாரில் இறங்கி மாதவியின் கலைநிகழ்ச்சிகளைக் கண்டு மகிழ்ந்தான் என்று காவியப் புலவர் கற்பனை செய்கிறார்.

விஞ்சையருக்கு வித்தியாதரர் என்றும் பெயர் உண்டு. அவர்கள் இசை நாட்டியம் நடனம் முதலிய அழகுக்கலைகளை அறிந்தவர். அக்கலைகளைக் கண்டுங் கேட்டும் நுகர்ந்து ரசிப்பவர். விஞ்சையர் தேவர்களுக்குத் தாழ்ந்த வராகவும் மனிதருக்கு மேம்பட்டவராகவும் கருதப்படுபவர். ஆகாயவழியே பறந்து போகும் ஆற்றல் உள்ளவர். இத்தகைய விஞ்சையரில் ஒருவன் இமயமலைச் சாரலில் வடசேடியில் இருந்தபோது தன் காதலியாகிய

விஞ்சைமகளுக்குக் கூறினான்: பூம்புகார் நகரத்திலே இந்திரவிழா நடக்கிறது. அந்த விழாவில், இசைக்கலை நடனக்கலைகளில் பேர்போன மாதவி மங்கையின் கலை நிகழ்ச்சிகள் நடைபெறுகின்றன. நாம் போய் அவற்றைப் பார்த்து மகிழலாம். இவ்வாறு கூறிய விஞ்சையன் விஞ்சைமகளுடன் புறப்பட்டு ஆகாயவழியே வேகமாகப் பறந்து காவிரிப்பூம்பட்டினத்துக்கு வந்தான். அவ்விஞ்சையர் வந்த வேகம் வாயுவேகம் மனோவேகமாக இருந்தது. ஆகாய வழியே தெற்கு நோக்கிப் பறந்த அவர்களுக்குக் கீழே பாய்ந்தோடும் கங்கையாறு காணப்பட்டது. பிறகு அவந்தி நாட்டின் தலைநகரமாகிய உஞ்சை (உச்சயினி) நகரம் தென்பட்டது. அடுத்தாற்போல் விந்தியமலையும் காடுகளும் புலப்பட்டன. அதற்கடுத்து வேங்கடமலை காணப்பட்டது. உடனே சோழநாடு தென்பட்டது. இவ்வளவு வேகமாகப் பறந்துவந்து மிகக் குறுகிய காலத்தில் அவர்கள் சோழநாட்டையடைந்தார்கள். பூம்புகார் நகரத்தில் இறங்கியபின் விஞ்சையன் அந்நகரத்திலிருந்த கோயில்களையும் பூஞ்சோலைகளையும் தன் காதலிக்குக் காட்டினான். பிறகு மாதவியாடிய அரங்கத்துக்கு வந்து அவளுடைய ஆடல் பாடல்களைக் கண்டும் கேட்டும் மகிழ்ந்தான்.

'சிமையத் திமையமும் செழுநீர்க் கங்கையும்
உஞ்சையம் பதியும் விஞ்சத் தடவியும்
வேங்கட மலையும் தாங்கா விளையுள்
காவிரி நாடுங் காட்டிப் பின்னர்ப்
பூவிரி படப்பைப் புகார்மருங் கெய்திச்
சொல்லிய முறையில் தொழுதனன் காட்டி
மல்லன் மூதூர் மகிழ்விழாக் காண்போன்

* * *

'அவரவர் அணியுடன் அவரவர் கொள்கையின்
நிலையும் படிதமும் நீங்கா மரபிற்
பதினோ ராடலும் பாட்டின் பகுதியும்
விதிமாண் கொள்கையின் விளங்கக் காணாய்
தாதவிழ் பூம்பொழில் இருந்துயான் கூறிய
மாதவி மரபின் மாதவி இவள்' எனக்
காதலிக் குரைத்துக் கண்டுமகிழ் வெய்திய
மேதகு சிறப்பின் விஞ்சையன்'

என்று இந்தச் செய்தியைச் சிலப்பதிகாரத்தில் (கடலாடுகாதை: 28-71) இளங்கோ அடிகள் கூறுகிறார்.

இமயலையின் வடசேடியில் வாழ்ந்த விஞ்சையன் ஒருவன் தன் காதலியுடன் புறப்பட்டு ஆகாய வழியே பறந்துவந்து காவிரிப்பூம்பட்டினத்தில் இறங்கி மாதவியின் கலை நிகழ்ச்சிகளைக் கண்டு மகிழ்ந்தான் என்பது வெறுங் கற்பனைதான். இந்தக் கற்பனை, மாதவியின் கலைச்சிறப்பை விளக்குவதற்காகவே காவியப் புலவரால் கற்பிக்கப்பட்டது. காவிய நூல்களை அழகுபடுத்துவது கற்பனைகளே. காவிய நூல்களுக்குக் கற்பனைகளே பெரிதும் அணிசெய்கின்றன. விஞ்சையன் என்னும் ஒரு பாத்திரத்தைக் கற்பனையாக அமைத்து அவன் இமயமலையிலிருந்து ஆகாயவழியே பறந்துவந்து மாதவியின் ஆடல் பாடல்களைக் கண்டு மகிழ்ந்தான் என்று கூறுவதன் மூலம் மாதவியின் கலைச்சிறப்பை அறிவிக்கிறார் காவியப் புலவரான இளங்கோவடிகள். இந்தக் கற்பனை சிலப்பதிகாரக் காவியத்தில் மிக அழகாக அமைந்திருக்கிறது. சுற்றுப்புற நாடுகளில் இருந்தெல்லாம் மக்கள் திரள்திரளாக வந்து மாதவியின் ஆடல்பாடல்களைக் கண்டுங் கேட்டும் மகிழ்ந்தனர் என்று சொல்வதைவிட, வடசேடியிலிருந்து இசைக் கலை நாடகக் கலைகளையறிந்த ஒரு விஞ்சையனும் வந்து பார்த்து மகிழ்ந்தான் என்று கூறுவது மாதவியின் கலைச்சிறப்பை பன்மடங்கு உயர்த்துகிறதன்றோ?

இவ்வாறு உலகப் புகழ்பெற்ற கலையரசியாகிய மாதவி காவிரிப்பூம் பட்டினத்தில் பன்னிரண்டு ஆண்டுகளுக்குமேல் ஆடல்பாடல்களை நிகழ்த்திக் கொண்டிருந்தாள். கலைரசிகனாகிய கோவலனும் அவளுடன் பன்னிரண்டு ஆண்டுகளுக்கு அதிகமாக வாழ்ந்துவந்தான். இவர்களுக்குப் பிறந்த மணிமேகலை என்னும் மகளும் இசைக்கலைகளையும் பரதநாட்டியம் முதலிய ஆடற்கலைகளையும் நன்றாகப் பயின்று பன்னிரண்டு வயதையடைந்திருந்தாள்.

மாதவி, பதியிலாராகிய கணிகையர் குலத்தில் பிறந்தவள்தான். ஆனால், சிப்பிக்குள் முத்து பிறப்பது போலவும் சேற்றில் தாமரை மலர்வது போலவும் அவள் நற்குணமும் நல்லொழுக்கமும் உடையவளாக இருந்தாள். கணிகையருக்கு உரிய,

'நறுந்தா துண்டு நயனில் காலை
வறும்பூத் துறக்கும் வண்டு'

போன்ற தன்மை அவளிடம் இல்லை. கோவலனைக் கணவனாகக் கொண்டு அவள் குலமகள் போலவே வாழ்ந்தாள்.

ஆனால், மாதவியிடம் ஒரே ஒரு குற்றம் இருந்தது. அது, எக்காலத்திலும் கணிகையருக்கும் நடிகைகளுக்கும் உள்ள படாடோப வாழ்க்கை பூம்புகார் நகரம் நாகரிகம் படைத்த பட்டினம். மேற்கே ரோமாபுரி (யவனநாடு) முதலிய நாடுகளிலிருந்து கிழக்கே காழகம் (பர்மா), கடாரம், சாவகம் (ஜாவா, சுமத்திரா தீவுகள்) முதலிய நாடுகளிலிருந்தும் கடல் வழியாகக் கப்பல்களில் வந்து இறங்கிய பண்டங்கள் பூம்புகார் பட்டினத்தை செல்வமும் நாகரிகமும் அடையச் செய்தன. நாகரிக நகரங்களில் படாடோப வாழ்க்கை இயற்கைதானே. பொது மக்களிடையே மாதவியிடம் இருந்த நன்மதிப்பும் பாராட்டும் அவளை மேலும்மேலும் படாடோப வாழ்க்கையை மேற்கொள்ளச் செய்தது. அவளுடைய படாடோப வாழ்க்கை கோவலனுடைய பெருஞ் செல்வத்தை விரைவில் அழித்துவிட்டது. செல்வச் சீமானாக இருந்த கோவலன் மாதவியின் ஆடம்பர வாழ்க்கைக்காகத் தன்னுடைய பெருஞ் செல்வத்தை செலவு செய்து விரைவில் ஏழ்மையடைந்து வறியவனானான்.

இந்த நிலையில், கோவலன் மாதவியை விட்டுப்பிரிந்து சென்றான். கோவலன் தன்னை விட்டுப் பிரிவானென்று மாதவி கனவிலும் கருதவில்லை. தற்செயலாகத் திடீரென்று ஏற்பட்ட இந்தப் பிரிவு தற்காலிகமான ஒரு நிகழ்ச்சி என்று அவள் கருதினாள். பிரிந்து சென்ற கோவலனுக்கு மாதவி, தன் காதலையும் அன்பையும் நினைவுறுத்தி உடனே வரும்படி கடிதம் எழுதித் தன் தோழி வயந்தமாலை மூலமாக அனுப்பினாள். கோவலன் அந்தக் கடிதத்தைக் கையில் வாங்காமலே திருப்பியனுப்பிவிட்டபோதுதான், கோவலன் உண்மையாகவே தன்னை விட்டுப் பிரிந்து விட்டான் என்பதை உணர்ந்தாள். அவனுடைய பிரிவு அவளுக்கு அதிர்ச்சியை உண்டாக்கிற்று குலமகள் ஒருத்தி தன் கணவன் தன்னைவிட்டுப் பிரிந்தால் எவ்வளவு துன்பமடைவாளோ, அவ்வளவு துன்பமும் மன வேதனையுமடைந்தாள் மாதவி. கோவலன் மாதவி பிரிவு ஊழ்வினையினால் ஏற்பட்ட பிரிவே. கோவலன் தான் இழந்த செல்வத்தை வாணிகத்தின் மூலம் ஈட்டும் பொருட்டு, உறவினர் ஒருவருக்குஞ் சொல்லாமல் கண்ணகியை மட்டும் அழைத்துக் கொண்டு மதுரைக்குப் போய்விட்டான்.

கோவலன் தன்னை மெய்யாகவே வெறுத்துவிட்டான் என்பதை அறிந்த மாதவி அவனுக்கு உருக்கமான ஒரு கடிதம் எழுதிக் கௌசிகன் என்னும் பார்ப்பனனிடம் கொடுத்துக் கோவலனை எங்காகிலும் கண்டு

கொடுக்கும்படி அனுப்பினாள். கௌசிகன் கோவலனைப் பல இடங்களில் தேடிக்கொண்டுபோய்க் கடைசியாக மதுரைக்கு அருகிலே ஓரிடத்தில் கண்டு கடிதத்தைக் கொடுத்தான். கோவலன் அந்த முடங்கலைப் பிரித்துப் படித்தான். மாதவி எழுதியிருந்த வாசகம் இது:

'அடிகள் முன்னர் யானடி வீழ்ந்தேன்
வடியாக் கிளவி மனக்கொளல் வேண்டும்
குரவர்பணி யன்றியுங் குலப்பிறப் பாட்டியோடு
இரவிடைக் கழிதற் கென்பிழைப் பறியாது
கையறும் நெஞ்சம் கடியல் வேண்டும்
பொய்தீர் காட்சிப் புரையோய் போற்றி!'

(சிலம்பு. 13:87-92)

இந்த வாசகத்தைப் படித்த கோவலனுக்கு மாதவியின் மேலிருந்த வெறுப்பு நீங்கிற்று. ஆனால் அவன் பூம்புகாருக்குத் திரும்பி வரவில்லை. மதுரை மாநகரத்துக்கே போய் விட்டான். போனவன், அரண்மனையில் சிலம்பைக் களவாடினான் என்று பொய்யாகக் குற்றஞ் சாற்றப்பட்டுக் கொலை செய்யப்பட்டான்.

கோவலன் இறந்த செய்தியைக் கேட்டபோது மாதவி தீராத் துயரம் அடைந்தாள். அவள் கைம்மை நோன்பை மேற்கொண்டாள். அரங்கேறி ஆடல் பாடல் நிகழ்த்துவதை அடியோடு நிறுத்தி விட்டாள். அன்று முதல் அவள் அரங்கேறவே இல்லை. மாதவியின் தாயாகிய சித்திராபதி மாதவியின் மனத்தை மாற்ற முயற்சி செய்தாள். மாதவி குலமகள் அல்லள் என்பதையும் கணிகையர் குலத்தில் பிறந்தவள் என்பதையும் நினைவுறுத்தி அவளை மறுபடியும அரங்கேறி ஆடல்பாடல்களை நிகழ்த்தும்படி தூண்டினாள். மீண்டும் கணிகையர் தொழிலை மேற்கொள்ளும்படி வற்புறுத்தினாள். மாதவியோ அதற்குச் சற்றும் இணங்கவே இல்லை. அவள் கணிகைத் தொழிலை மேற்கொள்ளாமலும் அரங்கேறி ஆடல்பாடல் நிகழ்த்தாமலும் குலமகள் போலக் கைம்மை நோன்பை மேற்கொண்டாள்.

மாதவி கணிகைத் தொழிலில் ஈடுபடாதபடியினாலே சித்திராபதி வெறுப்படைந்தாள். ஆனால், தன் குலத்தொழிலை நடத்தும்படி தன் பேர்த்தியும் மாதவியின் மகளுமான மணிமேகலையைத் தூண்டினாள். மணிமேகலையை அரங்கேற்றித் தலைக்கோலிப் பட்டம் பெறச் செய்யவும், பிறகு அவளைச் சோழ அரசன் மகனான உதயகுமரனின் காமக்கிழத்தியாக்கவும் முயற்சி செய்தாள். ஆனால் மாதவியோ தன் மகள் மணி

மேகலையைக் கணிகையர் வாழ்க்கையில் புகுத்த விரும்பவில்லை. அவளை ஒரு நல்ல குடும்பமகள் வாழ்க்கையில் புகுத்த எண்ணினாள். இதனால் சித்திராபதிக்கும் மாதவிக்கும் கருத்து வேற்றுமை ஏற்பட்டது. தன் தாயாகிய சித்திராபதி தன் மகளான பன்னிரண்டு வயதுள்ள மணிமேகலையை எப்படியும் கணிகை வாழ்க்கையில் புகுத்திவிடுவாள் என்று அஞ்சினாள் மாதவி. அவ்வாறு நிகழாமல் தடுக்க வேண்டுமென்று விரும்பினாள். ஆகவே சித்திராபதியிடமிருந்து விலகி வாழ மாதவி கருதினாள்.

அக்காலத்துச் சமுதாய சூழ்நிலை மாதவியின் கருத்துக்கு ஆதரவு காட்டவில்லை. கணிகையர் குலத்தில் பிறந்தவர் கணிகையராகவே இருக்கவேண்டும், அவர்கள் குலமகளிராக வாழக்கூடாது என்னும் தவறான கருத்து அக்காலத்து மக்கட் சமுதாயத்தில் வேரூன்றியிருந்தது. சைவம், வைணவம், சமணம் (ஜைனம்) என்னும் சமயங்களைச் சேர்ந்த அக்காலத்து மனித சமூகம் மாதவியின் சீர்திருத்த வாழ்க்கைக்கு ஆதரவு காட்டுவதாக, உதவி செய்வதாக இல்லை. அக்காலத்தில் அவளுக்கு ஒரே ஒரு புகலிடந் தான் இருந்தது. அதுதான் பௌத்தமதம்.

புத்தர் பெருமான் தமது வாழ்க்கைக் காலத்திலேயே கணிகையர், கள்வர் போன்ற தீய வாழ்க்கையாளரையும் திருத்தி அவர்களையும் நல்வழிப்படுத்தியிருக்கிறார். அவரைப் பின்பற்றி வந்த பௌத்த மதம், தீய வழியில் வாழ்பவர்களையும் நல்வழிப்படுத்தி உதவிசெய்து வந்தது. மாதவி இதனை நன்கறிந்தாள். தானும் தன் மகளான மணிமேகலையும் நல்வாழ்க்கை வாழ்வதற்குக் கைகொடுத்து உதவக்கூடியது பௌத்த மதம் ஒன்றுதான் என்பதை மாதவி நன்கறிந்தாள். தனக்கும் தன் மகளுக்கும் பௌத்த மதந்தான் ஒப்பற்ற புகலிடம் என்பதை அறிந்தாள்.

அக்காலத்தில் தமிழ்நாட்டில், சிறப்பாகக் காவிரிப்பூம்பட்டினத்தில் பௌத்தமதம் சிறப்பும் செல்வாக்கும் பெற்றிருந்தது. அந்தப் பட்டினத்திலே பேர்பெற்றிருந்த பௌத்த விகாரையின் தலைவராக இருந்தவர் எல்லோ ராலும் நன்கு மதிக்கப்பட்ட அறவண அடிகள் என்னும் பெரியார். மாதவி, தன் தாயாகிய சித்திராபதியை விட்டுப் பிரிந்து மணிமேகலையுடன் பௌத்த விகாரைக்குச் சென்று அறவண அடிகளிடம் அடைக்கலம் புகுந்து திரி சரணத்தைப் புகலடைந்து பஞ்சசீலம் பெற்று பௌத்த மதத்தை மேற் கொண்டாள். பௌத்த மதத்தைப் புகலடைந்து அந்த மதத்தை மேற்கொண்ட மாதவி தன் மகள் மணிமேகலையுடன் சுதமதி என்னும் தோழியுடனும் பௌத்த சமூகத்தில் இடம் பெற்று வாழ்ந்தாள்

வழக்கம்போல அந்த ஆண்டிலும் காவிரிப்பூம்பட்டினத்தில் இந்திரவிழாக் கொண்டாடப்பட்டது. வழக்கப்படி விழாவுக்கு வேண்டிய ஆயத்தங்கள் எல்லாம் நகரத்தில் நடைபெற்றன. இந்திர விழாவில் மக்களின் உள்ளத்தைக் கவர்ந்த முக்கிய நிகழ்ச்சி அரங்கமேடையல்லவா? மக்களின் உள்ளங்களைக் கவர்ந்தவள் கலையரசி மாதவி! அவளுடைய ஆடல் பாடல்கள் நகர மக்களுக்கு மகிழ்ச்சியையும் மன நிறைவையும் அளித்தன. கோவலன் இறந்துபோன காரணமாக அவள் இப்போது மேடை ஏற மாட்டாள். மேலும் பௌத்த மதத்தில் புகலடைந்து விட்டாள். கணிகைத் தொழிலை அடியோடு விட்டுவிட்டாள். நல்ல அழகி, தேர்ந்த பாடகி, சிறந்த நர்த்தகி! அவளுடைய இனிய ஆடல் பாடல்களை இனி எப்போது கேட்கப் போகிறோம்! என்று கலை ரசிகர்கள் நகரத்தில் பேசிக் கொண்டார்கள்.

நகரத்தில் இந்திரவிழா தொடங்கினபோது சித்திராபதிக்கு மனம் துடித்தது. தன் மகள் மாதவி அரங்க மேடைக்கு வரமாட்டாள் என்று அறிந்தபோது அவளுக்கு உயிரே போய்விட்டது போல இருந்தது. தன்னுடைய மகளின் இடத்தை (அரங்க மேடையை) இன்னொரு வீட்டுக் கணிகை கைப்பற்றி விடுவாளே என்று பொறாமை எண்ணம் அவளுடைய மனத்தை அலட்டியது. அவள் வயந்தமாலை என்னும் தோழியை அழைத்து, அவளை மாதவியிடம் அனுப்பிக் கலையரங்கத்துக்கு வந்து கலை நிகழ்ச்சிகளைச் செய்யும்படி மீண்டும் வேண்டினாள். மாதவி கண்டிப்பாக மறுத்துவிட்டாள். புத்த தன்ம சங்கம் என்னும் மும்மணிகளை அடைக்கலம் புகுந்து பஞ்சசீலம் பெற்று பௌத்தராக வாழ்கிறோம். இனி, மீண்டும் முன்னைய தொழிலுக்கு வரமாட்டோம். இச்செய்தியை நீ போய் என் தாய்க்குச் சொல் என்று வயந்தமாலையிடம் மாதவி கூறினாள்.

மாதவியைக் கணிகை வாழ்க்கையில் மீண்டும் புகுத்தச் சித்திராபதி செய்த முயற்சிகள் எல்லாம் வீணாகப் போயின. மாதவி குலமகள் போலக் கைம்மை நோன்பு நோற்றுக்கொண்டு புத்தர் பெருமானை வணங்கிக் கொண்டிருந்தாள். மாதவி கடைசி வரையில் பௌத்த மதத்தில் நின்று வாழ்நாளைக் கழித்தாள். காவிரிப்பூம்பட்டினம் வெள்ளப் பெருக்கினால் மூழ்கியபோது மாதவி, அறவண அடிகளுடன் காஞ்சிபுரஞ் சென்று அந்த நகரத்தில் தங்கியிருந்தாள். (அறவண அடிகள் காஞ்சீபுரத்தில் தங்கியிருந்த தெரு அறவணஞ்சேரி என்று பெயர் பெற்றது. அந்தப் பெயர் இப்போது அறப்பணஞ்சேரி என்று மருவி வழங்கப்படுகிறது.) (சேரி என்றால் தெரு என்பது பொருள்.) மாதவி, காஞ்சீபுரத்தில் நெடுங்காலம் தங்கியிருந்து கடைசியில் அந்த நகரத்திலே காலமானாள்.

கோவலனோடு வாழ்ந்த வரையில் மாதவியின் வாழ்க்கை இன்ப வாழ்க்கையாக இருந்தது. அவள் இறந்த பிறகு அவள் வாழ்க்கை உயிரற்ற வாழ்க்கையாக மாறிவிட்டது. அவள் நல்ல குலத்தில் பிறந்திருக்க வேண்டியவள். தவறிக் கணிகையர் குலத்தில் பிறந்துவிட்டாள். ஆனால், குலமகள் போலவே வாழ்ந்தாள். மாதவி சிப்பியில் பிறந்த முத்து. சேற்றில் மலர்ந்த செந்தாமரை. சிலப்பதிகாரக் காவியம் இருக்கும் வரையில் அவள் புகழ் நிலைத்திருக்கும்.

பெங்களூர் தமிழ்ச் சங்கம் சிறப்பு மலர் (1968)

31. உண்மைப் பொருள்

சிலப்பதிகாரக் காவியத்திலே, அக்காவியத் தலைவியாகிய கண்ணகி யார், 'ஒரு முலை குறைத்த திருமா பத்தினி' என்று கூறப்படுகிறார். நற்றிணை என்னும் சங்கத்தொகை நூலிலே 216-ஆம் செய்யுளிலே, திருமாவுண்ணி என்னும் பெண்மணி, தன்னுடைய ஒரு கொங்கையை அறுத்துக்கொண்ட தாகக் கூறப்படுகிறார். அப்பெண்மணியை, 'ஒரு முலை அறுத்த திருமா வுண்ணி' என்று கூறுகிறார் அச்செய்யுளாசிரியர். இவ்வாறு கொங்கை குறைத்ததாகக் கூறப்படுவது கி.பி.300-க்கு முற்பட்ட சங்க காலத்து நூல்களில் ஆகும். கி.பி.8-ஆம் நூற்றாண்டிலே இருந்தவரும், வைணவ ஆழ்வார்கள் பன்னிருவரில் ஒருவரும், பெரியாழ்வாரின் மகளாரும் ஆகிய ஆண்டாள் (நாச்சியார்) என்னும் பெண்மணியாரும் முலையறுப்பது பற்றித் தம் பாசுரங்களில் கூறுகிறார்.

உலகத்திலே பெண்மகள் ஒருத்தி தாங்க முடியாத மனவருத்தம் அடைந்தால்-வாழ்க்கையில் வெறுப்புக் கொண்டால், அவள் என்ன செய்கிறாள்? தன்னுடைய உயிரை மாய்த்துக்கொள்கிறாள். தற்கொலை செய்துகொண்டு உயிர் துறக்கிறாள். நீரில் மூழ்கியோ, எண்ணெய் ஊற்றித் தீயிட்டுக்கொண்டோ, தூக்கிட்டுக்கொண்டோ தன் உயிரை மாய்த்துக் கொள்கிறாள். இதுதான் உலகம் முழுவதும் எக்காலத்திலும் எந்நாட்டிலும் நிகழ்கிற நிகழ்ச்சி. ஆனால், எந்தப் பெண்ணும் தன் கொங்கையை அறுத்துக் கொண்டதாக இதுவரையில் நாம் கண்டதும் இல்லை; கேட்டதும் இல்லை.

ஆனால், தமிழ்நாட்டின் தலைசிறந்த காவியமாகிய சிலப்பதிகாரம்,

> "ஒரு முலை இழந்தாளோர்
> திருமா பத்தினி" (பதிகம்:5)

"முத்தார மார்பில் முலைமுகந் திருகி
நிலைகிளர் கூடல் நீளெரி யூட்டிய
பலர் புகழ் பத்தினி."

"முலை குறைத்தாள் முன்னரே வந்தாள்
மதுராபதி என்னும் மாது." (அழற்படுகாதை)

"ஒருமுலை குறைத்த திருமாபத்தினி"

(நீர்ப்படை 129)

"கலிகெழு கூடல் கதழெரிமண்ட
முலைமுகந் திருகிய மூவா மேனிப்
பத்தினி." (வரந்தரு காதை)

என்று, கண்ணகியார் தமது நகிலை அறுத்துக் கொண்டதாகத் தெளிவாகக் கூறுகிறது.

மதுரை மருதன் இளநாகனார் என்னும் புலவர் திருமாவுண்ணி என்னும் பெண்மணி தனது ஒரு நகிலை அறுத்துக்கொண்டதாக ஒரு செய்யுளில் கூறுகிறார். நற்றிணையில் இடம் பெற்றுள்ள அப்பாடலில்

"எரிமருள் வேங்கைக் கடவுள் காக்கும்
குருகார் கழனி இதணத் தாங்கண்
ஏதிலாளன் கவலை கவற்ற
ஒருமுலை அறுத்த திருமா வுண்ணி"

(நற்றிணை 216)

என்று அவர் கூறுகிறார்.

அப்படியானால், இளங்கோவடிகளும், மதுரை மருதன் இள நாகனாரும் "முலை குறைத்தல்" என்று கூறியது பொய்யா, வெறும் கற்பனையா, கட்டுக் கதையா- என்னும் கேள்வி எழுகிறது. இப்புலவர்கள் கூறியது பொய்யும் அன்று, கற்பனையும் அன்று, கட்டுக்கதையும் அன்று. முலை குறைத்தல் என்னும் சொல்லுக்கு, உண்மையாகவே கொங்கையை அறுத்துக்கொள்வது என்பது பொருள் அல்ல. இச்சொல் வேறு மறை பொருளையுடைய குறிப்புச் சொல். முற்காலத்தில் வழங்கப்பட்டு பிற் காலத்தில் வழக்கு இழந்து போன சொற்களில் இதுவும் ஒன்று. அந்த மறை பொருள் என்ன? இக்கேள்விக்கு விடை காண்போம். ஆண்டாள் பாசுரத்தில் இக்கேள்விக்கு விடை காணலாம்.

பெரியாழ்வார் என்னும் வைணவ பக்தரின் மகளார் ஆண்டாள் எனப்படும் நாச்சியார். ஆண்டாள், சிறுவயதுமுதல் கண்ணனையே மணம் செய்ய வேண்டும் என்று விரும்பினார். மங்கையாக வளர்ந்து மணப்பருவம் அடைந்த போதும் இவருக்குக் கண்ணனையே (திருமாலை) மணம் செய்ய வேண்டும் என்னும் ஆசை அதிகப்பட்டது. கண்ணனையே மணம் செய்வ தாக உறுதிகொண்டார். காதல் உணர்ச்சி பெருகிற்று. நாச்சியார் தமது காதல் செய்தியைத் தாமே தம் பாசுரங்களில் கூறுகிறார். தமது காதலைத் தமது நகிலின்மேல் வைத்துக் கூறுகிறார்.

"அவரைப் பிராயம் தொடங்கி என்றும்
ஆதரித்து எழுந்தஎன் தடமுலைகள்
துவரைப் பிரானுக்கே சங்கற்பித்துத்
தொழுதுவைத்தேன், ஒல்லை விதிக்கிற்றியே"

(நாச்சியார் திருமொழி *I. 4.*)

என்று காமதேவனை இவர் வேண்டுகிறார்.

தமது தணியாத காதலைத் தமது கொங்கைமேல் ஏற்றி இன்னும் பல இடங்களில் கூறுகிறார்.* மானிடராகப் பிறந்த நாச்சியார் தெய்வமாகிய கண்ணனைக் காதலித்து நெடுங்காலம் அவர் வரவை எதிர்பார்த்திருக்கிறார். கண்ணன் வரவே இல்லை. கடைசியில் நாச்சியார் தமது வாழ்க்கையை வெறுக்கிறார். தாம் காதலித்த காதலன் தம்மைப் புறக்கணித்துவிட்டபடியால், இனித் தமக்கு இன்ப வாழ்வு இல்லை. மண வாழ்க்கை இல்லை, தமது வாழ்வு அழிந்துவிட்டது என்று துன்புறுகிறார். தமது கொங்கையைப் பிய்த்து எறிவ தாகக் கூறுகிறார். இங்குத்தான், நமது ஆராய்ச்சிக்கு உண்மைப் பொருள் விளங்குகிறது. அச்செய்யுள் இது:

"உள்ளே உருகி நைவேனை
உளளோ இலளோ என்னாத
கொள்ளை கொள்ளிக் குறும்பனைக்
கோவர்த் தன்னைக் கண்டக்கால்,
கொள்ளும் பயன்ஒன்று இல்லாத
கொங்கை தன்னைக் கிழங்கோடும்
அள்ளிப் பறித்திட்டு அவன் மார்பில்
எறிந்துஎன் அழலைத் தீர்வேனே"

(நா.திருமொழி 13.(8))

---

* நாச்சியார் திருமொழி *I 5, V 7, VIII 7.*

என்று, தமது கொங்கையை அடியோடு பறித்து எறிந்துவிடுவதாகக் கூறு கிறார். இதிலிருந்து கொங்கை அறுத்தல் என்பதற்கு உண்மைப் பொருள் தெரிகிறதல்லவா? ஆண்டாள், 'தமது இன்ப வாழ்வு அழிந்துவிட்டது, மண வாழ்க்கை இழக்கப்பட்டது' என்று கூறுவதைத்தான் இவ்வாறு தமது கொங்கையைக் கிழங்கோடு பறித்து எறிவதாகக் கூறுகிறார்.

எனவே, கொங்கை அறுத்தல், முலை குறைத்தல் என்பது மெய் யாகவே அதே பொருளுடையது அல்ல என்பதும், கற்புள்ள இள மங்கையரின் சிற்றின்ப வாழ்வு அவர்தம் காதலரால் புறக்கணிக்கப்பட்டது காரணமாக அறுபட்டது, அழிந்து விட்டது என்பதுதான் இச்சொல்லின் உண்மைப் பொருள் என்பதும் அறிகிறோம். நற்றிணைச் செய்யுளும் இக்கருத்தைத்தான் வெளிப்படுத்துகிறது.*

இனி, கண்ணகியாரைப் பார்ப்போம். கண்ணகிக்கும் கோவலனுக்கும் காதல் மணம் நிகழவில்லை. அக்காலத்துச் செல்வப் பிரபுக்களின் வழக்கப்படி இவர்களின் பெற்றோர் இவர்களுக்குத் திருமணம்செய்து வைத்தார்கள். அப்போது கோவலனுக்கு வயது பதினாறு. கண்ணகிக்கு வயது பன்னிரண்டு. கோவலன், மாதவி என்னும் ஆடல் மங்கையின் வலையில் சிக்கி அவளிடத் திலேயே தங்கிவிட்டான். இவ்வாறு பன்னிரண்டு ஆண்டு கழிகிறது. கற்புடைய கண்ணகி மணவாழ்க்கை இழந்து பன்னிரண்டு ஆண்டு காத்திருக் கிறாள். கடைசியில் கோவலன், மாதவிமேல் வெறுப்படைந்து கண்ணகி யிடம் வருகிறான். நெடு நாட்களாகக் கணவன் அன்பை இழந்திருந்த கண்ணகி பெருமகிழ்ச்சியடைகிறாள். கோவலன் மதுரைக்குப் புறப்படு கிறான். கண்ணகியும், வீடு வாசல், தாய் தந்தையர், மாமன் மாமியார், ஏவ லாளர் எல்லோரையும் விட்டு ஒருவருக்கும் சொல்லாமல் கோவலனுடன் புறப்பட்டுச் செல்கிறாள். மதுரையை அடைந்து மாதவியின் இல்லத்தில் தங்கியபோது, கோவலன் கண்ணகிக்குத்தான் செய்த கொடுமையைக் கூறி வருந்துகிறான். கண்ணகியை வாயாறப் புகழ்கிறான். புதிய நல்வாழ்வு பெற்ற தாகக் கண்ணகி மகிழ்கிறாள்.

பகல் உணவு அருந்திக் கோவலன் சிலம்பை விற்பதற்கு நகரத்திற்குள் செல்கிறான். கோவலன் வருகையை மகிழ்ச்சியோடு எதிர்பார்த்துக் கொண்டி ருந்த கண்ணகிக்குக் கோவலன் கொலையுண்ட செய்தி எட்டுகிறது. இச் செய்தி அவள் மேல் இடி விழுந்ததுபோல் இருந்தது. அவள் கண்டு

* திருமாவுண்ணியின் கதையினைச் சென்ற இதழில் காண்க

கொண்டிருந்த இன்பக் கனவும் மகிழ்ச்சியும் மறைந்தன. புதிதாக இன்ப வாழ்வு அடையப்போகிற தறுவாயில், எதிர்பாராவண்ணம் கணவனை இழந்தாள். அவள் வாழ்வு அறுந்துவிட்டது. முலை குறைத்தல் அல்லது குறை முலை என்னும் சொல்லுக்கு நேர் மாறான கருத்துள்ள நிறை முலை என்னும் சொல்லும் முற்காலத்தில் வழங்கி வந்ததாகத் தெரிகிறது.

பொன் நிறத்தாள் கதை என்னும் ஒரு செய்யுள் நூல் உண்டு. தமிழ்ச் செய்யுளாக இயற்றப்பட்ட இந்தக் கதை, இப்போது தமிழ் நாட்டில் மறைந்துவிட்டது. ஆனால், மலையாள நாட்டில் வழங்கிவருகிறது. இத்தமிழ் நூலை மலையாள எழுத்தில் அச்சிட்டிருக்கிறார்கள். ஆகவே, இதில் பல தமிழ்ச் சொற்கள் மலையாளச் சொற்களாகக் காணப்படுகின்றன. இந்நூல் திரு வாங்கூரில் அச்சிடப்பட்டிருக்கிறது. (பொன் நிறத்தாள் கத, தெக்கன் பாட்டு, பாஷாகிரந்தாவலி, அங்கம் 88).

இந்தக் கதையில் பொன் நிறத்தாள் என்னும் அழகுள்ள பெண்மணி மணஞ் செய்துகொண்டு கணவனுடன் இன்பவாழ்வு வாழ்ந்துகொண்டிருப்பதும், பிறகு அவள் வயிறு வாய்த்துச் சூல்கொள்வதும் கூறப்படுகிறது. சூல்கொண்ட பொன் நிறத்தாள், அருவியாட ஆசை கொண்டு மலைக்குப் போகிறாள். போகிற வழியில் மழை பெய்ய, அவள் ஓர் ஆலமரத்தின் அடியில் தங்குகிறாள். அந்த இடத்துக்குச் சற்றுத் தூரத்தில் ஒரு காளிகோயில் இருக்கிறது. அந்தக் கோயிலில் இருக்கிற புதையலைக் கைப்பற்றக் கள்ளர் சிலர் கருதுகிறார்கள். நிறைசூலி ஒருத்தியைக் காளிக்குப் பலியிட்டால் புதையலை எடுக்கலாம் என்று நம்புகிறார்கள். அவ்வமயம் காளிக்குப் பூசை செய்யும் பூசாரி அங்கு வருகிறான். அவனிடம் கள்ளர்கள் தங்கள் கருத்தைச் சொல்லுகிறார்கள். 'கொங்கை நிறைந்த நிறை சூலி ஒருத்தி வேண்டும்' என்று கேட்கிறார்கள். அவன், ''கொங்கை நிறைந்த நிறை சூலி'' ஒருத்தியைத் தான் ஆலமரத்தின்கீழ்க் கண்டதாகக் கூறுகிறான். இங்கு, நிறை சூலி என்று மட்டும் சொல்லாமல், ''கொங்கை நிறைந்த நிறை சூலி'' என்று கூறப்படுவதை வாசகர்கள் கவனிக்க வேண்டும். கொங்கை குறைந்தவள் (அறுத்தவள்) என்றும், கொங்கை நிறைந்தவள் என்றும் சொல் வழக்கு அக்காலத்தில் வழங்கியிருந்ததை இது தெரிவிக்கிறதல்லவா? இதிலிருந்து கணவனோடு வாழ்ந்து சூல் கொண்டு பிள்ளைப்பேறு அடைந்தவள் நிறை கொங்கையாள் என்றும், கணவனுடன் வாழும் வாழ்க்கையை இழந்தவள் குறை கொங்கையாள் என்றும் கூறப்படும் வழக்குச் சொல் இருந்தது என்பது தெரிகிறது. எனவே,

கொங்கை குறைத்தல் என்பது கணவனுடன் வாழும் வாழ்க்கையை இழந்ததைக் குறிப்பதே என்பது நன்கு விளங்குகிறது.

வாசகர்களுக்கு இவ்விடத்தில் ஐயம் ஏற்படக்கூடும். கொங்கை குறைத்தல் என்பது இள மங்கையர் கணவனுடன் வாழும் வாழ்க்கை இழத்தல் என்று பொருள்படுமானால், இளங்கோவடிகள் ஏன் அச்சொல்லை அப்பொருளில் வழங்காமல், வேறு விதமாகப் பயன்படுத்துகிறார்?

"முத்தார மார்பில் முலைமுகந் திருகி
நிலைகிளர் கூடல் நீளெரி யூட்டிய
பலர் புகழ் பத்தினி"

என்றும்,

"முதிரா முலைமுகத் தெழுந்த தீயின்
மதுரை மூதூர் மாநகர் சுட்டது"

என்றும்,

"இடமுலை கையாற் றிருகி மதுரை
வலமுறை முன்முறை வாரா வலம்வந்து
மட்டார் மறுகின் மணிமுலையை வட்டித்து
விட்டாள் எறிந்தாள்"

என்றும்,

"கலிகெழு கூடல் கதழெரி மண்ட
முலைமுகந் திருகிட பூவாமேனிப் பத்தினி"

என்றும் சிலப்பதிகாரத்தில் இளங்கோவடிகள் கூறுகிறார். மணிமேகலைக் காவியத்திலும், சாத்தனார்,

"கண்ணீ ராடிய கதிரிள வனமுலை
திண்ணிதிற் றிருகித் தீயழற் பொத்திக்
காவலன் பேரூர் கனையெரி மூட்டிய
மாபெரும் பத்தினி"

என்று கூறுகிறார். ஆகவே கண்ணகியார் கொங்கையைப் பிய்த்தது உண்மையாகத்தானே இருக்கவேண்டும்-என்னும் கேள்வி எழுகிறது. இது சரியான கேள்வியே.

இளங்கோ அடிகளும் சாத்தனாரும் கோவலன் கண்ணகியருடைய வரலாறு (*Biography*) எழுதவில்லை. அவர்கள் இந்த நிகழ்ச்சியை

ஆதாரமாகக்கொண்டு காவியம் எழுதினார்கள். இதை நாம் மறத்தல் ஆகாது. காவியம் எழுதுவது தான் இவர்களின் முக்கியமான கருத்து. காவிய நூலில் கற்பனை இடம்பெறும். கற்பனையமையாத 'காவியம்' காவியமாகக் கருதப்படவில்லை. கற்பனையே காவியப் புலவனின் இயல்பு. கற்பனை இல்லாத காவியம் சுவைக்காது. ஆகவே, காவியப் புலவரான இளங்கோவடிகள், கண்ணகி வாழ்க்கை இழந்ததை, உண்மையிலேயே கொங்கையைக் குறைத்ததாகக் கற்பனை செய்து மதுரை நகரம் எரிந்ததற்கு அதைக் காரணமாகக் கூறுகிறார். இவ்வாறு கற்பனை செய்தபடியினாலே, இது இக்காவியத்துக்கும் புதுமையைத் தந்து வாசிப்பதற்கு உணர்ச்சியூட்டுகிறது.

இதுகாறும், கொங்கை குறைத்தல் என்பது இள வயதுள்ள மகளிர் பிள்ளைப் பேறடைவதற்கு முன்பே கணவனால் கைவிடப்பட்டவர் என்னும் பொருளுடையது எனக் கண்டோம். இதன் மெய்ப்பொருளை அறியாதவர், கண்ணகியார் மெய்யாகவே அவ்வுறுப்பை அறுத்துக் கொண்டார் என்று கருதிக்கொண்டனர். இவ்வாறு செய்தவர் கண்ணகி ஒருவர் தாம் என்றும், ஒரு முலையறுத்த திருமாவுண்ணியுங்கூடக் கண்ணகிதான் என்றும் முடிவு கொண்டனர். அதுமட்டுமா? கொங்கை அறுத்தது ஒரு பழைய கதை என்றும், அது திருமாவுண்ணியின் கதை என்றும், அந்தக் கதையிலிருந்து கண்ணகியின் கதை கற்பிக்கப்பட்டது என்றும் எழுதிவிட்டார்கள். உண்மைப் பொருளை அறிந்திருந்தால் இவ்வாறு எழுதியிருக்கமாட்டார்கள். கண்ணகியின் கதை வெறும் கட்டுக் கதையன்று காவியப் புலவரின் கற்பனைகளைக் களைந்துவிட்டால் அதில் அசம்பாவிதமான நிகழ்ச்சி ஒன்றும் கிடையாது. நிற்க.

வையாபுரிப்பிள்ளையவர்கள், இன்னொரு செய்தியைப் பொருத்தம் இல்லாமல் கூறுகிறார். வின்ட்டர்னிட்ஸ் என்னும் ஜெர்மானியர், தாம் எழுதிய இந்திய இலக்கிய வரலாறு என்னும் நூலிலே பௌத்த நூலிலிருந்து, தன் மார்பை அறுத்த ஒரு பெண்ணின் கதையைக் குறிப்பிடுகிறார். இதைப் பிள்ளையவர்கள் சுட்டிக்காட்டி, 'திவ்விய வதானம், ஜாதக மாலை என்னும் பௌத்த நூல்களில் முலைகளைப் பிய்த்தெறிந்த கதை கூறப்பட்டுகின்றது. ஆகவே, இந்தக் கதை (கண்ணகியின் கதை) ஆதியில் பௌத்தரிடமிருந்து வந்ததென்பதை எளிதில் தெரிந்துகொள்ளலாம்' என்று எழுதுகிறார்:

"We hear in Buddhist Divyavadana and Jatakamala stories in which tearing off of breasts occur. And we might easily infer that the story was originally of buddhist origin"(Page 147, History of Tamil Language and Literature).

திவ்வியவதானம், ஜாதமாலை என்னும் பௌத்த நூல்களில் கூறப் படுகிற இந்தக் கதையைப் பிள்ளையவர்கள் நேரில் படித்து அறிந்ததாகத் தெரியவில்லை. படித்திருந்தால் இந்தக் கதையைக் கண்ணகியின் கதையுடன் பொருத்திக் கூறமாட்டார். ரூபாவதி என்னும் பௌத்தப் பெண்ணின் கதை தான் இந்த நூல்களில் கூறப்படுகிறது. அக்கதை இது: பசியினால் வருந்திய ஒரு பெண் உணவு கிடைக்காமல் அலைந்து கடைசியில் தன்னுடைய குழந்தையைக் கொன்று தின்பதற்குத் துணிகிறாள். இதையறிந்த ரூபாவதி என்னும் பௌத்த பெண்மணி தன்னுடைய கொங்கையை அறுத்து அவளுக்கு ஆகாரமாகக் கொடுத்தாள். இதுதான் ரூபாவதியின் கதை. இந்த ரூபாவதியே பிற்பிறப்பில், ஒரு முனிவராகப் பிறக்கிறாள். அப்போது காட்டிலே புலி ஒன்று குட்டிகளை ஈன்று, பசி பொறுக்கமாட்டாமல், உணவு கிடைக்காத நிலையில், தன்குட்டியைக் கொன்று தின்ன முற்படுகிறது. இதையறிந்த முனிவர் (முன்பிறப்பில் ரூபாவதியாயிருந்தவர்) அந்தப் புலிக்குத் தம்மையே உணவாகக் கொடுக்கிறார். பிற்காலத்தில், புத்தராகப் பிறக்கப்போகிற போதிசத்துவர்கள், பாரமிதைகளைச் செய்ததாகப் பௌத்த நூல்கள் கூறுகின்றன. போதிசத்துவர் பாரமிதைகளைச் செய்யும்போது தம்முடைய கண்களைப் பிடுங்கித் தானமாகக் கொடுத்ததையும், தம் உடம்பி லுள்ள இரத்தத்தைத் தானமாகக் கொடுத்ததையும, தம் உடம்பையே தான மாகக் கொடுத்ததையும் பௌத்த ஜாதகக் கதைகள் கூறுகின்றன. இந்த முறையில், போதிசத்துவர் நிலையில் இருந்த ரூபாவதி, தன் கொங்கைகளை அறுத்துப் பசியோடிருந்த பெண்ணுக்கு உணவாகக் கொடுத்தாள் என்று பௌத்த நூல் கூறுகிறது.

ரூபாவதி கதைக்கும் கண்ணகி கதைக்கும் என்ன பொருத்தம் இருக்கிறது? கண்ணகியும் திருமாவுண்ணியும் உண்மையாகவே கொங்கையை அறுத்தார்கள் என்று வைத்துக்கொண்டாலும், ரூபாவதியைப் போல உணவுக்காக, மாமிச தானம் செய்யவா அப்படிச் செய்தார்கள்? கருத்தை நன்றாக அறியாமல் ''குதிரைக்குக் குர்ரம், ஆனைக்கு அர்ரம்'' என்று கூறுவதுபோல, வையாபுரியார் இரண்டையும் ஒன்றாக இணைத்துக் கூறுகிறார். வாசகர்களின் மனத்தைக் குழப்பி மருளச்செய்வதற்கு இது பயன்படுமே தவிர, உண்மையாராய்ச்சிக்கு வழிகாட்டப்பயன்படாது. நிகழ்ச்சி ஒன்றே ஆயினும் காரணமும் சூழ்நிலையும் வெவ்வேறானவை. இது சாதாரண அறிவினருக்கும் நன்கு விளங்கும். ரூபாவதி கதையைக் கண்ணகி கதையுடன் பொருத்துவது ஒரு சிறிதும் பொருந்தாது.

வையாபுரிப் பிள்ளையும் நீலகண்ட சாஸ்திரியும் சிலப்பதிகாரம் கட்டுக்கதை என்னும் ஒரு கருத்தை யூகித்துக்கொண்டு அக்கருத்துக்கு ஆதாரங்களைத் தேடுகிறார்கள். இவர்களுக்கு மாறுபட்ட ஆதாரங் களையெல்லாம் காட்டாமல் மறைத்து விடுகிறார்கள். தங்கள் கருத்துக்குச் சாதகமாக இருப்பதாகக் கருதிக்கொண்டு இவர்கள் கூறும் சான்றுகளெல்லாம், இவர்கள் கருத்துக்கு முரண்படுகின்றன இவர்களின் ஆராய்ச்சி, உண்மை காணும் நோக்கமுடையதாக இல்லை.

கலைக்கதிர்-அக்டோபர் 1959

32. நகில் குறைத்தல்

'நகில் குறைத்தல்' என்பது 'மகளிர்முலை அறுத்தல்' என்று பொருள் படும். பெண்மகள் ஒருத்தி ஒரு காரணம் பற்றித்தானே தனது மார்பில் உள்ள கொங்கையை அறுத்தெறிதல் என்பது இதன் கருத்தாகும். ஆனால், இஃது இயலுமா? இயற்கையில் நடைபெறக்கூடிய செயலா? இத்தகைய செயலை நாம் கண்டதில்லையே! இது நம்பத்தகுந்த செய்தியல்லவே!

ஆம். இயற்கைக்கு மாறுபட்ட, உலகில் நடைபெறாத, ஒருவரும் கண்டிராத செய்திதான் இது. ஆனால், இச்செய்தி, பண்டைக்காலத்துத் தமிழிலக்கியங்களிலே காணப்படுகிறது. சிலப்பதிகாரத்திலும், நற்றிணைச் செய்யுளிலும், ஆண்டாள் திருவாய்மொழியிலும் இச்செய்தி கூறப்படுகிறது. இயற்கைக்கு மாறுபட்டதும் நம்பத் தகாததுமான இச்செய்தி, தமிழர் போற்றும் உயர்ந்த இலக்கியநூல்களிலே சிறந்த புலவர்களால் கூறப்பட்டுள்ளது. ஆகவே, இதன் உண்மைப்பொருளை ஆராய வேண்டுவது நமது கடமை யாகும். இதன் கருத்தை ஈண்டு ஆராய்வோம்

சிலப்பதிகாரக் காவியத் தலைவியாராகிய கண்ணகியார் தாமே தமது கொங்கையைக் குறைத்துக்கொண்ட (அறுத்தெறிந்த) செய்தி அக்காவிய நூலில் பல இடங்களில் கூறப்படுகிறது.

''பொலம்பூ வேங்கை நலங்கிளர் கொழுநிழல்
ஒருமுலை இழந்தாளோர் திருமா பத்தினி''

(பதிகம் 4-5)

''முத்தார மார்பில் முலைமுகந் திருகி
நிலைகிளர் கூடல் நீளெரி யூட்டிய
பலர் புகழ் பத்தினி.....''
''முலை குறைத்தாள் முன்னரே வந்தாள்
மதுராபதி என்னும் மாது'' (அழற்படுகாதை).

''கான வேங்கைக் கீழோர் காரிகை
தான்முலை இழந்து தனித்துயர் எய்தி
வானவர் போற்ற மன்னொடுங் கூடி
வானவர் போற்ற வானகம் பெற்றனள்''

(காட்சிக்காதை 57-60)

''ஒருமுலை குறைத்த திருமா பத்தினிக்கு''

(நீர்ப்படை 129)

''கலிகெழு கூடல் கதழெரி மண்ட
முலைமுகந் திருகிய மூவா மேனிப்
பத்தினி.'' (வரந்தருகாதை 149-151)

இவை, கண்ணகியார் முலைகுறைத்த செய்திகளைக் கூறும் சில பகுதிகளாகும். நற்றிணை என்னும் தொகை நூலிலேயும், பெண்மகள் ஒருத்தி தனது ஒரு முலையை அறுத்துக்கொண்ட செய்தி கூறப்படுகிறது. அந்நூலில், 216-ஆம் செய்யுளைப் பாடிய மதுரை மருதன் இளநாகனார் என்னும் புலவர், திருமாவுண்ணி என்னும் பெண்மணி தனது நகிலைக் குறைத்துக் கொண்ட செய்தியைக் கூறுகிறார். அச்செய்யுள் பகுதி இது:

''எரிமருள் வேங்கைக் கடவுள் காக்கும்
குருகார் கழனி இதணத் தாங்கண்
எதி லாளன் கவலை கவற்ற
ஒருமுலை அறுத்த திருமா வுண்ணி''

நாலாயிரப் பிரபந்தத்திலேயும் ஸ்ரீ ஆண்டாள் என்னும் நாச்சியார் தாம் அருளிச்செய்த திருவாய் மொழியில், மங்கையர் நகில் குறைக்கும் செய்தியைக் கூறுகிறார். 13-ஆம் திருவாய் மொழி, 8-ஆம் செய்யுளில், கண்ணன்மீது காதல்கொண்ட தலைவி ஒருத்தி, கண்ணன் வந்து தனது காமத்தைத் தணிக்காவிட்டால், தன்னுடைய கொங்கைகளை வேரோடு பறித்தெறிவேன் என்று கூறுவதாக இச்செய்யுளை நாச்சியார் பாடி யிருக்கிறார். அச்செய்யுள் இது:

''உள்ளே உருகி நைவேனை உளளோ இலளோ என்னாத
கொள்ளை கொள்ளிக் குறும்பனைக் கோவர்த் தன்னைக் கண்டக்கால்
கொள்ளும் பயனொன்றில்லாத கொங்கை தன்னைக் கிழங்கோடும்
அள்ளிப் பறித்திட்டு அவன்மார்பில் எறிந்துஎன் அழலைத் தீர்வேனே''

இவ்வாறு சிலப்பதிகாரம், நற்றிணை, நாச்சியார் திருமொழி என்னும் மூன்று நூல்களிலும் நங்கையர் நகில் குறைக்கும் செய்தி கூறப்படுகிறது. சிலப்பதிகாரமும் நற்றிணைச் செய்யுளும், கண்ணகியாரும் திருமாவுண்ணி யாரும் தமது ஒரு கொங்கையை அறுத்துக்கொண்டார்கள் என்னும் இறந்தகால நிகழ்ச்சியைக் கூறுகின்றன. நாச்சியார் திருமொழியோ, தலை மகள் தான் விரும்பிய தலைவனைப் பெறாவிட்டால், அல்லது அவன் தன்னைப் புறக்கணித்தால், தனது கொங்கையைப்பறித்து எறிவேன் என்று சொல்லுவதாக எதிர்கால நிகழ்ச்சியில் கூறுகிறது. ஆண்பால் புலவரும் பெண் பால் புலவரும் கூறுகிற, கொங்கை பறித்தவாகிய இச்செய்தி உயர்ந்த இலக்கிய நூல்களிலே இடம் பெறுகிற வழக்காற்றில் இருந்து வந்திருக்கிறது என்பது வெள்ளிடைமலை போல் விளங்குகிறது. ஆகவே, இதன் உண்மைப் பொருள் என்ன என்பதை ஆராய்ந்து காண்போம். கொங்கை குறைத்தல் என்பது இயற்கைக்கு மாறுபட்ட, நடைமுறையில் நிகழாத செய்தி என்று முதலிலேயே கூறினோம். அங்ஙனமானால், கொங்கைகுறைத்தல் என்பது, மறைபொருளை உள்ளடக்கிய ஓர் குறிப்புச் சொல்லாக இருக்கவேண்டும் என்று தோன்றுகிறது. மறைபொருளை யுணர்த்தும் ஓர் குறிப்புச் சொல்லாக இருந்தால், அந்த மறைபொருள் யாது? அதன் உண்மைப் பொருள் என்ன?

இதன் உண்மைப் பொருளை விளக்குகின்ற சான்றுகள் எமக்குக் கிடைக்கவில்லை. ஆகவே, நாமே முயன்று இயன்ற வரையில் உண்மை காண்போம். முதலில் நாச்சியார் திருமொழியை எடுத்துக்கொள்வோம்.

தலைமகள் ஒருத்தி கண்ணன்மாட்டுப் பெருங்காதல் கொண்டிருக் கிறாள். கண்ணன் வந்து தன்னைமணந்து தன்வேட்கையைத் தீர்ப்பான் என்று நெடுங்காலம் எதிர்பார்த்திருக்கிறாள். கண்ணன் பராமுகமாக இருந்து இவளது வேட்கையைத் தீர்க்க வரவில்லை. ஆகவே, தலைவி தன் வாழ்க்கையை வெறுக்கிறாள். கற்புடைய மங்கையாகலின், வேறுதலைவன் மாட்டுக் காதல் செலுத்த இவள் துணியவில்லை. ஆகவே, தன்வாழ்வு கெட்டுவிட்டது; அழிந்துவிட்டது; இறந்து விட்டது என்று கருதுகிறாள். நெடுநாள் காத்திருந்தும், பல ஆண்டுகள் பொறுத்திருந்தும், தலைவன் தன்னைப் புறக்கணித்து விட்டபடியால், இனித் தனக்கு இன்பவாழ்வு இல்லை; மணவாழ்க்கை இல்லை; தன்வாழ்வு அழிந்தது என்று கூறுகிறவள், அக்கருத்தைத் தன் கொங்கைமேல் ஏற்றிக் கூறுகிறாள்.

"கொள்ளும் பயன்ஒன் றில்லாத கொங்கை தன்னைக்
கிழங்கோடும்

அள்ளிப் பறித்திட்டு அவன்மார்பில் எறிந்துஎன் அழலைத் தீர்வேனே.''

என்று தலைமகள் தன் கருத்தைக் குறிப்பாகக் கூறுகிறாள். இவ்வாறு மங்கையர் தமது காதல் வாழ்க்கையைத் தமது கொங்கைமேல் பொருத்திக் கூறுவது அக்காலத்து வழக்கம் எனத் தோன்றுகிறது. பெண்மணியாராகிய நாச்சியாரே இன்னொரு இடத்திலும் இச்செய்தியைக் கூறுகிறார். திருவரங்கப் பெருமானிடத்தில் அளவற்ற காதல்கொண்டு அவனையே மணந்து இன்புறக் கருதியிருந்த நாச்சியார், தன்னைத் தன் கருத்துக்கு மாறாக வேறு ஒருவருக்கு மணஞ்செய்துகொடுத்தால், தமது உயிரை மாய்த்துக்கொள்வதாகக் கூறு கிறார். அவ்வாறு கூறுகிறவர் தமது காதல் இன்பத்தைத் தமது கொங்கைமேல் ஏற்றிக்கூறுகிறார். அப்பகுதி இது:

''ஊனுடை ஆழி உத்தமர்க்கென்று
உன்னித் தெழுந்த என்தடமுலைகள்
மானிடவர்க்கென்று பேச்சுப்படில்
வாழகில் லேன்கண்டாய் மன்மதனே''

இதனால், கற்புடைய மங்கையர்தம் காதல் வாழ்வு, இன்ப வாழ்க்கை அவர்தம் கொங்கைமேல் வைத்துக் கூறப்படுவது காண்க. திருவள்ளுவரும்,

''கல்லாதான் சொல்கா முறுதல், முலையிரண்டும்
இல்லாதாள் பெண்காமுற் றற்று.''

என்னும் திருக்குறளில், மகளிர்தம் காதல் வாழ்க்கையை அவர்தம் கொங்கை மேல் வைத்துக் கூறியதும் ஈண்டுக் கருதத் தக்கது

எனவே, தாம் விரும்பிய காதலன் தனக்குக் கிடைக்காவிட்டாலும் அல்லது, தம்கணவர் தம்மைப் புறக்கணித்து விட்டாலும் கற்புடைய மங்கையர் கொங்கை (இன்பவாழ்க்கை) பயனற்றது, இறந்துவிட்டது என்பதைக் குறிப்பதே ''கொங்கை குறைத்தல், முலையறுத்தல்'' என்னும் சொல்லின் கருத்து எனத் தோன்றுகிறது. இக்கருத்தையுட் கொண்டு, நாச்சியார் திருமொழியை மீண்டும் ஊன்றிப்படித்தால் இதன் உண்மைப் பொருள் நன்கு விளங்கும்.

''உள்ளே உருகி நைவேனை உளளோ இலளோ என்னாத
கொள்ளை கொள்ளிக் குறும்பனைக் கோவர்த் தன்னைக் கண்டக்கால்

கொள்ளும் பயனொன் றில்லாத கொங்கை தன்னைக்
கிழங்கோடும்
அள்ளிப் பறித்திட்டு அவன்மார்பில் எறிந்துஎன் அழலைத்
தீர்வேனே.''

கொங்கையறுத்தல் அல்லது முலைகுறைத்தல் என்பதன் மறை பொருள், கற்புடை மங்கையரின் சிற்றின்ப வாழ்க்கை (தமது காதலர் தம்மைப் புறக்கணித்ததனாலே) அறுபட்டது என்பது எனக் கண்டோம். நற்றிணைச் செய்யுளும் இக்கருத்தையே வெளிப்படுத்துகிறது. திருமாவுண்ணி என்னும் பெயருள்ள கன்னிப்பெண், பண்டைக் காலத்து வழக்கப்படி வயல்களின் நடுவில் இருந்த ஒரு வேங்கை மரத்தின்மேல் அமைக்கப்பட்ட பரணில் தங்கி, தனது தந்தையின் நிலபுலங்களைக் காவல் காத்திருந்தாள். அவ்வமயம், முன்பின் அறியாத காளைப் பருவமுடைய ஒருவன் அங்கு வந்தான். இருவருக்கும் காதல் ஏற்பட்டது. திருமாவுண்ணியும் அவ்வேதிலாளனும் காதல் மணம்புரிந்து இன்புற்றார்கள். பிறகு, அவ்வேதிலாளன் தான் ஊருக்குப்போய்த் திரும்பிவந்து உலகோர் அறிய அவளை மணம்செய்து கொள்ளுவதாகச் சொல்லிப் போய்விட்டான். ஆனால், அந்தோ! அவன் திரும்பி வரவேஇல்லை. திருமாவுண்ணி, அவன் வருவான் வருவான் என்று நெடுநாள் காத்திருந்தும் அவன் வரவே இல்லை. கற்புடைய மங்கையாகலின் வேறு மணம்செய்து கொள்ளவும் அவள் விரும்பவில்லை. அவனையே எண்ணி எண்ணி மனம் உருகினாள். அவ்வேதிலாளனோ வரவே இல்லை. அவளது இன்ப வாழ்க்கை, காதல் வாழ்வு அழிந்துவிட்டது. ஆகவே, இவள் சிற்றின்பத்தை இழந்தவள் என்னும் கருத்தைக் குறிக்க ஒரு முலை இழந்த திருமாவுண்ணி என்று கூறப்பட்டாள்.

ஈண்டு வாசகர் சற்று ஊன்றிப் பார்க்கவேண்டும். இருமுலை அறுத்த திருமாவுண்ணி என்று கூறாமல், ஒருமுலை அறுத்த திருமாவுண்ணி என்று கூறப்படுகிறாள். ஏன்? இவள் தான் விரும்பிய கணவனை வாய்க்கப் பெற்றாள். வாய்ந்த கணவனுடன் கூடி இன்புற்றாள். வாழ்க்கையின் இன்பத்தைச் சிறிது அனுபவித்தாள். ஆனால், விரைவிலேயே அவனால் புறக்கணிக்கப்பட்டாள். ஆகவே, இவள் ஒருமுலை அறுத்த திருமாவுண்ணி என்று கூறப்பட்டாள். உண்மையிலே இவளுடைய ஒரு கொங்கையாகிய உறுப்பு அறுபடவில்லை. ஆனால் இவளது சிற்றின்ப வாழ்வு, மண வாழ்க்கை அறுப்புண்டது. இக்கருத்தில் இவள் ஒருமுலை இழந்தவள் என்று கூறப்படுகிறாள்.

இனி, கண்ணகியாரைக் காண்போம். கண்ணகி கோவலனை மணந்து சிறிதுகாலம் இன்பவாழ்க்கை வாழ்கிறார். ஆனால், கோவலன், ஆடல் பாடல் வல்ல மாதவியின் மையலில் சிக்கிக் கண்ணகியைப் புறக்கணித்துப் பல ஆண்டுகள் (பன்னிரண்டு ஆண்டுகள்) மாதவியுடன் வாழ்கிறான். கற்புடைய கண்ணகி மணவாழ்க்கை இழந்து, பொறுமையுடன் இருக்கிறார். பன்னிரண்டு ஆண்டுகளுக்குப் பின்னர் கோவலன் மாதவியை வெறுத்துக் கண்ணகியிடம் வருகிறான். கண் இழந்த ஒருத்தி மீண்டும் கண் பெற்றதுபோல, கண்ணகி பெருமகிழ்ச்சியடைகிறார். கோவலன் மதுரைக்குப் புறப்பட அவனை விடாமல் பின் தொடர்ந்து மதுரைக்குச் செல்கிறார். இருவரும் மதுரையில் மாதரி என்னும் மூதாட்டியின் வீட்டில் தங்குகிறார்கள். தங்கியபோது, கோவலன் தான் கண்ணகிக்கு இழைத்த சிறுமையையும் கொடுமையையும் வெளிப்படையாகக் கண்ணகிக்குக் கூறி மனம் நொந்து,

"வறுமொழி யாளரொடு வம்பப் பரத்தரொடு
குறுமொழிக் கோட்டி நெடுநகை புக்குப்
பொச்சாப் புண்டு பொருளுரை யாளர்
நச்சுக்கொன் றேற்கு நன்னெறி யுண்டோ?
இருமுது குரவர் ஏவலும் பிழைத்தேன்
சிறுமுதுக் குறைவிக்குச் சிறுமையும் செய்தேன்."

என்று கூறி மனம் வருந்துகிறான். மேலும் கண்ணகியாரின் அரும்பெருங் குணங்களை வாய்விட்டுக் கூறிப் புகழ்கிறான்.

"குடிமுதல் சுற்றமும் குற்றிளை யோரும்
அடியோர் பாங்கும் ஆயமும் நீங்கி
நாணும் மடனும் நல்லோர் ஏத்தும்
பேணிய கற்பும் பெருந் துணையாக
என்னொடு போந்திங் கென்துயர் களைந்த
பொன்னே! கொடியே! புனைபூங் கோதாய்!
நாணின் பாவாய்! நீணில விளக்கே!
கற்பின் கொழுந்தே! பொற்பின் செல்வி!"

என்று வாயாறப் புகழ்ந்து மனமாறக் கூறி மெய்யாறத் தழுவிக் கொள்கிறான். அப்போது இருபத்துநான்கு வயதுள்ள இளமங்கையாகிய கண்ணகியின் மனோநிலை எவ்வாறிருந்திருக்கும் என்பதை வாசகர் சிந்தித்து உணர வேண்டும் பன்னிரண்டு ஆண்டு மழையில்லாமல் வற்கடத்தால் வறண்டி

ருந்த நிலத்தில் திடீரென்று பெருமழை பெய்து பெருவெள்ளம் புரண்டோடி யது போலவும், பெருஞ் செல்வத்தைப் பெற்றிருந்த ஒருவன் விதிவசத்தால் அதனை இழந்து, வறுமையால் வாடித் தவித்துத் துன்புற்றிருக்கும் நிலையில், மீண்டும் பெருஞ் செல்வம் கிடைக்கப்பெற்றது போலவும், கண்ணகியார் கோவலனுடைய காதலை மீண்டும் பெற்றதனால், இன்ப வாழ்க்கையை மீண்டும் கைவரப்பெற்றது கண்டு பெருமகிழ்ச்சியடைகிறார்.

கோவலன் சிலம்பை விற்று வருவதாகச் சொல்லிக் கண்ணகியாரிடம் விடைபெற்றுச் செல்கிறான். கண்ணகியார் இன்பக் கனவு கண்டு கொண்டி ருக்கிறார். நேரம் கழிகிறது. மாலைப் பொழுதும் வந்தது; கோவலன் வர வில்லை. சூரியன் மறைந்து இருள் சூழ்ந்தது. கோவலன் இன்னும் திரும்பி வரவில்லை. கண்ணகியாருக்குக் கவலை தோன்றுகிறது. ஏதேதோ நினைக் கிறார்.இரவு நேரம் தன் காதில் படும்படியாகச் சிலமகளிர் ஏதோ பேசிக் கொள்வதைக் கண்ணகியார் கவனிக்கிறார். சஞ்சலத்தோடு அவர்களை அழைத்து விசாரிக்கிறார். அந்தோ! கோவலன் கொல்லப்பட்டான் என்னும் செய்தியைக் கேட்டு இடி விழுந்த மரம் போலானார் கண்ணகியார். அவர் கண்டிருந்த இன்பக் கனவுகளும் மகிழ்ச்சியும் மறைந்தன. மற்றக் கதைகள் எல்லாம் வாசகர் அறிந்ததுதானே.

பன்னிரண்டு ஆண்டுகளாகக் கோவலனை இழந்திருந்த கண்ணகியார், கோவலனை மீண்டும் பெற்றபோது, தமது இருள் சூழ்ந்த வாழ்க்கையில் ஒரு பேரொளி உதயமாவதைக் கண்டு பேருவகையும் நம்பிக்கையும் கொண்டார். ஆனால், அந்தோ! அப்பேரொளி உதயம் ஆவதற்கு முன்பே அவ் வொளியைக் கார்மேகம் கவிந்துகொண்டது. பெரும் பசியினால் வருந்தி யலைந்த ஒருவனுக்கு, கிடைத்தற்கரிய தேவாமிர்தம் போன்ற நல்லுணவு கிடைக்கப்பெற்று, அவன் அதனை ஆவலோடு உண்பதற்கு வாயில் இடும்போது அதனைத் தட்டிப் பறித்துவிட்டது போல, பன்னிரண்டுயாண்டு பிரிந்திருந்த கணவனை மறுபடியும் பெற்று, அந்தோ! மீண்டும் இழந்தார். மீண்டும் என்றென்றைக்கும் கிடைக்காதபடி இழந்தார். இந்நிலையில் அவர் மனம் என்ன பாடுபட்டிருக்கும். அவர் வாழ்க்கை அதோடு முடிந்தது.

இத்தீராத் துயர் யாரால் உண்டாயிற்று? பாண்டிய மன்னனால்! பாண்டியன் ஆராயாமல் செய்த தவறு கண்ணகியாரின் வாழ்வில் இடிவிழச் செய்தது. கண்ணகியார் மனம் வெடித்துப் புலம்பிய சோகக்குரல் கேட்டவர் மனத்தில் அவலச் சுவையை உண்டாக்கிற்று.

"மன்பதை அலர்தூற்ற மன்னவன் தவறிழைப்ப
அன்பனை இழந்தேன்யான் அவலங்கொண் டழிவலோ"

"மறனொடு திரியுங்கோல் மன்னவன் தவறிழைப்ப
அறனுடை மடவோய்! யான் அவலங்கொண்டழிவலோ"

"செம்மையின் இகந்தகோல் தென்னவன் தவறிழைப்ப
இம்மையும் இசையொரீஇ இனைத்தேங்கி அழிவலோ."

இனி, கண்ணகியார் உயிர் வாழ்வதினால் பயன் இல்லை. ஆனால், அவர் செய்யவேண்டிய கடமையொன்று அவர்முன் நிற்கின்றது. அஃது யாது? கள்ளன் என்னும் பழி, அநியாயமாகச் சுமத்தப்பட்ட பொய்ப்பழி, கோவலன் பெயரைக்கறைப்படுத்துகிறது. இந்தக் கறையை, அடாத பெரும் பழியை, நீக்காவிட்டால், உண்மையில் கோவலன் கள்ளன் என்றும், அவனைப் பாண்டியன் கொன்றது நீதி என்றும் மக்கள் கருதுவார்கள். கோவலனுக்கு ஏற்பட்டுள்ள பழியை நீக்கி, அவன் புகழை நிலை நிறுத்த வேண்டியவர் கண்ணகியார் ஒருவரே. பொற்சிலம்பைக் களவாடிய கள்வன் என்று ஊரார் பேசிக்கொள்வது, கண்ணகியாரை வாள்கொண்டறுப்பதுபோல் இருக்கிறது. தன் கணவன் குற்றம் அற்றவர் என்பதை நிலைநிறுத்துவதற்காக, தனியே வீட்டைவிட்டு வெளிவந்தறியாத கண்ணகியார் தன் பொற் சிலம்புடன் வெளிவருகிறார் வந்து, தன் கணவன், கோவலன் குற்றவாளி யல்லன் என்பதை ஊராருக்குக் கூறுகிறார். அநியாயமாக அரசன் கோவலன் மேல் குற்றம் சாட்டிக் கொலைசெய்தான் என்று முறையிடுகிறார். மதுரை நகரத்திலே, கற்புடைப் பெண்டிரும், பெரியோர்களும் தெய்வமும் இல்லையோ என்று சொல்லி அழுகிறார்.

"பெண்டிரும் உண்டுகொல் பெண்டிரும் உண்டுகொல்?
கொண்ட கொழுநன் உறுகுறை தாங்குறூஉம்
பெண்டிரும் உண்டுகொல், பெண்டிரும் உண்டுகொல்?"

"சான்றோரும் உண்டுகொல் சான்றோரும் உண்டுகொல்?
ஈன்ற குழவி எடுத்து வளர்க்குறூஉம்
சான்றோரும் உண்டுகொல், சான்றோரும் உண்டுகொல்?"

"தெய்வமும் உண்டுகொல், தெய்வமும் உண்டுகொல்?
வைவாளில் தப்பிய மன்னவன் கூடலில்
தெய்வமும் உண்டுகொல், தெய்வமும் உண்டுகொல்?"

இம்முறையீட்டைக் கேட்ட ஊரிலுள்ள ஆடவரும் பெண்டிரும் வந்து சூழ்கின்றனர். கொலையுண்டவன் காவிரிப்பூம்பட்டினத்துச் செல்வந்த னாகிய கோவலன் என்பதையும், முறையிடுகின்றவள் அவனது மனைவி கண்ணகி என்பதையும், இவர்கள் பேர்போன மாநாய்கன், மாசாத்துவன் என்னும் பெருஞ் செல்வர்களின் மக்கள் என்பதையும் அறிகின்றனர். ஆகவே, மதுரைமாநகரிலுள்ள ஆண் பெண் அனைவருக்கும் இவ்விஷயத் தில் உணர்ச்சியும், அக்கறையும் தோன்றுகின்றன. ஆத்திரம் உணடாவதும் இயற்கையே. ஆனால், உண்மை என்ன என்பதை அறிய மக்கள் பொறுமை யாக இருந்து, உணர்ச்சியை அடக்கிக்கொண்டிருக்கிறார்கள். கண்ணகியார் காற்சிலம்புடன் அரண்மனையடைந்து, அரசன் அவைக்களத்திலே பலரும் அறிய கோவலன் கள்ளன் அல்லன்; பழியற்றவன் என்பதை நிலை நிறுத்துகிறார். மன்னன் தன் தவற்றினையுணர்ந்து, அப்போது உண்டான இருதயத்துடிப்பினால் இறந்துவிடுகிறான். கோவலனை அநியாயமாகக் கொன்றார்கள் என்னும் செய்தியும், ஓர் இளம்பெண் கணவனை இழந்து பரிதபிக்கும் காட்சியும் மக்களுக்கு ஆத்திரத்தையுண்டாக்குகிறது. அவர்கள் அரண்மனைக்குத் (நகர்=அரண்மனை) தீயிடுகிறார்கள். அரண்மனை தீப்பிடித்து எரிகிறது. இதுவே கண்ணகியாரின் வரலாறு.

கண்ணகியார் காதலனை இழந்து, அதனால் இன்ப வாழ்க்கையையும் இழந்தபடியினாலே, அவர் ஒரு முலையிழந்தவர், ஒற்றைமுலைச்சி என்று கூறப்படுகிறார். நிற்க,

கண்ணகியார் தமது கொங்கையைத் திருகி எறிந்து மதுரையை அழித்தார் என்று சிலப்பதிகாரத்தில் கூறப்படுவது உண்மை நிகழ்ச்சியன்று. சிலப்பதிகாரம் காவிய நூலாகலின், இவ்வாறு கற்பனையாக இச்செய்தியை உருவகப்படுத்திக் கூறுகிறது.

> **''முலைமுகந் திருகிய மூவாமேனிப் பத்தினி'' என்றும்,**
>
> **''முத்தார மார்பில் முலைமுகந் திருகி**
> **நிலைகிளர் கூடல் நீளெரி யூட்டிய**
> **பலர்புகழ் பத்தினி'' என்றும்,**
>
> **''முதிரா முலைமுகத் தெழுந்த தீயின்**
> **மதுரை மூதூர் மாநகர்சுட்டது'' என்றும்**
>
> **''இடமுலை கையாற் றிருகி மதுரை**
> **வலமுறை மும்முறை வாரா வலம்வந்து**

மட்டார் மறுகின் மணிமுலையை வட்டித்து
விட்டாள் எறிந்தாள்'' என்றும்,

''கலிகெழு கூடல் கதழெரி மண்ட
முலைமுகந் திருகிய மூவாமேனிப் பத்தினி''

என்றும் சிலப்பதிகாரத்தில் கூறப்படுவன எல்லாம், அஃதாவது தனது முலையைப் பிய்த்து எறிந்தாள் என்பது எல்லாம், வெறும் கற்பனையேயன்றிப் பிறிதன்று. ஒரு பெண்மகள் எத்தகைய பெருந் துயத்திற்குள்ளாயிருந்தாலும், தன் கொங்கையைப் பிய்த்தெறிவது உண்மையில் நடைபெறுவ தொன்றன்று.

எனவே, கொங்கையறுத்தல் அல்லது முலைகுறைத்தல் என்பது இன்பவாழ்க்கையை இழந்தவள் என்னும் குறிப்புப் பொருளைத் தருகிற வழக்கு என்று தோன்றுகிறது.

பிள்ளைப்பேறு அற்ற இளமங்கையர் கணவனை இழந்தால், அல்லது கணவனால் துறக்கப்பட்டால் மாத்திரம் இவ்வாறு ஒரு முலையறுத்தவள், கொங்கைகுறைத்தவள் என்று கூறப்பட்டனரேயன்றி பிள்ளைப்பேறுபெற்ற பெண்மகளிர் இவ்வாறு கூறப்பட்டிலர் என்று ஊகித்தறிய வேண்டியிருக்கிறது. என்னை? திருமாவுண்ணியாரும் கண்ணகியாரும் பிள்ளைப் பேறற்ற இளமகளிர் ஆவர் என்பதை நோக்குங்கள். அன்றியும், கண்ணகியாரை கூறும்போது, முதிராமுலை குறைத்தாள் என்றும், முதிராமுலைமுகத்தெழுந்த தீ என்றும், மொய்குழல் மங்கை முலைப்பூசல் என்றும் இளமை வயதைக் குறிக்கும் அடைமொழிகளால் ஆசிரியர் கூறுகிறார். அதற்கேற்ப இருபத்தினான்கு வயதுள்ள-பிள்ளைப்பேறற்ற, கணவனால் துறக்கப்பட்ட இளமங்கை கண்ணகியார் என்பதும் நினைவுகூரத்தக்கது.

இதுகாறும் நாம் ஆராய்ந்தவற்றால், கொங்கைகுறைத்தல் என்பது உண்மையில் கொங்கையைப் பிய்ப்பது அன்று என்றும், பிள்ளைப்பேறு பெறுவதற்கு முன்பே கணவனால் துறக்கப்பட்ட இளமங்கையர் என்பது இதன் கருத்து என்றும் கண்டோம். இதுவே முடிந்த முடிபு என்பது எமது கருத்து. இப்பொருள் பொருந்தாது என்று கருதுவோர் காரணங்காட்டி வேறு செம்பொருள் கூறுவராயின், அக்கருத்தை ஏற்றுக்கொள்ளக்கூடியதாக இருந்தால், தலைவணங்கி ஏற்றுக்கொள்ளத் தடையில்லை. உண்மை காண வேண்டும் என்னும் ஒரே கருத்துடன் இவ்வாராய்ச்சிக் கட்டுரை எழுதப்பட்டதாகலின், உண்மையாராயும் நோக்கமுடையோர் இதனைப்பற்றித் தமது கருத்துக்களை வெளியிட்டு முடிவு காணவேண்டும் என்பது எமது ஆசை.

குறிப்பு:- நற்றிணைச் செய்யுளில் கூறப்படும் திருமாவுண்ணியாரும், சிலப்பதிகாரத்தில் கூறப்படும் கண்ணகியாரும் ஒருவரே என்று திரு.மு.இராகவையங்கார் அவர்கள், தாம் எழுதிய "பத்தினி தேவியைப் பற்றிய சில குறிப்புகள்" என்னும் கட்டுரையில் கூறுகிறார்கள் அதில், அவர்கள் கண்ணகியாருக்குத் திருமாவுண்ணியார் என்னும் பெயர் உண்டென்று வலிந்து பொருள் கொண்டு கூறுவது பொருந்தவில்லை. அன்றியும், கண்ணகியார் வேங்கைமரத்தின் அடியில் நின்றார் என்று சிலப் பதிகாரம் கூறுகிறது. வேங்கைமரத்தின்மேல் அமைக்கப்பட்ட இதணத்தில் (பரணில்) இருந்ததாகச் சிலப்பதிகாரம் கூறவில்லை. மேலும், கண்ணகியாரை ஏதிலாளன் ஒருவன் வேங்கைமரத்தண்டை துன்புறுத்தியதாகச் சிலப்பதி காரம் கூறவில்லை. வேங்கைமரத்தின்மேல் பரணில் இருந்தவளும், அங்கு ஏதிலாளனால் துன்பத்திற்குள்ளானவளும் திருமாவுண்ணி என்னும் வேறொரு மகளாவள். ஒரு முலையறுத்தவள் என்பதற்கு உண்மையிலேயே ஒருமுலையையறுத்தெறிந்தவள் என்று பொருள்கொண்டு, அவ்வாறு செய்தவர் கண்ணகியார் ஒருவரே எனவும் கொண்டு, அவர்கள் இவ்வாறு எழுதியுள்ளார்கள். ஆனால், திருமாவுண்ணியாரும் கண்ணகியாரும் வெவ் வேறு மகளிர் என்று ஆராய்ச்சியினால் விளங்குகிறது. வாசகர்கள் இதனை யும் ஆராய்ந்து உண்மை காண்பாராக.

"நெஞ்சத்தார் காத லவராக வெய்துண்டல்
அஞ்சுதும் வேபாக்கு அறிந்து."

இத்தெய்வத் தமிழ் மறைக்கு உலகியற்பொருளின்படி காதலர் காதலியின் உள்ளத்தின்கண் நீங்காது உறைகின்றனர். அதனால், காதலி வெப்பமான -சூடான பொருள்களை உண்ணுதற்கு அஞ்சுகின்றனள். ஏன்? தான் உண்ணுங்கால் அச்சூடு, உள்ளுறை காதலரைத் தெறுமென்னும் செம்மை நினைப்பால். வீட்டியற்பொருள் நோக்கின்படி பல்லுயிர்க்கும் நீங்காக் காதலனாய் உயிர்க்குயிராய் அவ்வுயிர் மறப்பினும் தான் மறவாத் தண்ணளியடையனாய்த் தன் தனி முதல் அன்பு அறிவு ஆற்றலால் உயிர் களின் அன்பு அறிவு ஆற்றல்களை உடனாய்த் தொழிற்படுத்தும் முழு முதல்வன் 'உள்ளங் கவர்கள்வனாய்' உறைகின்றனன். அதனால், அவன் அருள் அறத்திற்கு மாறானவை சூடாம். அச்சூடாம் தீங்கினை நினைக்கவும் அஞ்சுகின்றேன். அந்நினைப்பு அவனுக்குச் சூடு பயக்கும் தன்மையாம். அன்பு-இச்சை. அறிவு-ஞானம். ஆற்றல்-செயல். - இனியன்

செந்தமிழ்ச்செல்வி-சிலம்பு.24

33. மலர்மிசை ஏகினான்

மலர்மிசை ஏகினான் மாணடி சேர்ந்தார்
நிலமிசை நீடுவாழ் வார்

என்னும் திருக்குறளில் மலர்மிசை ஏகினான் என்பது எந்தக் கடவுளைக் குறிக்கும் என ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கம். இந்தக் குறளுக்கு உரை எழுதிய பரிமேலழகர், இன்ன மதக் கடவுளைத்தான் இச்சொற்றொடர் குறிக்கும் என்பதைக் கூறாமல், பொதுவாக, 'மலரின் கண்ணே சென்றவன்' என்று பொருள் கூறினார். கூறிய பின்னும், 'இதனைப் பூமேனடந்தான் என்பதோர் பெயர் பற்றிப் பிறிதோர் கடவுட் கேற்றுவாரு முளர்' என்று விளக்குகின்றார். எனவே, அவர் காலத்திலேயே, மலர்மிசை ஏகினான் என்னும் சொறறொடர், குறிப்பிட்ட ஒரு மதக் கடவுளைக் குறிக்கிறதென்னும் வழக்கு இருந்து வந்ததென்பது விளங்குகின்றது. பரிமேலழகர் குறிப்பிடுகிற அந்தப் 'பிறிதொரு கடவுள்' யார்? அவர்தாம் சமணரின் அருகக் கடவுள். இது எவ்வாறு பொருந்தும்? மலர்மிசை ஏகினான் என்பது அருகக் கடவுளை யன்றி ஏனைய மதக் கடவுளர்க்கும் பொருந்தாதோ? எனின், பொருந்தாது; அருகக் கடவுளையே இச்சொற்றொடர் குறிக்கும். இதனை விளக்குவோம்

பல்வேறு மதத்தவரும் தத்தம் கடவுளை வாழ்த்திப் போற்றும் பாக்களில் தத்தம் கடவுளது திருவடிகளைத் தாமரைப் பூவிற்கு உவமை கூறியிருக்கின்றனர். மலர் போன்ற திருவடி என்னும் பொருள்பட அவர்கள் யாவரும் கூறிச் சென்றனர். ஆனால், ஆருகத மதத்தவராகிய சமணர் மட்டும் தமது அருகக் கடவுளின் திருவடியைக் கூறும் போதெல்லாம் மலர் போன்ற திருவடி என்று கூறுவது மட்டுமின்றி மலர்மேல் நடந்த திருவடி என்றும் யாண்டும் கூறியிருக்கின்றர். இக்கருத்தினைச் சமண சமய நூல்கள் எல்லா வற்றிலும் காணலாம். சமணராகிய மணக்குடவர் இக்கருத்தைத் தழுவியே மேற்கண்ட திருக்குறளுக்குத் தாம் எழுதிய உரையில், 'மலரின் மேல் நடந் தானது மாட்சிமைப்பட்ட திருவடி' என்று எழுதியிருக்கின்றார். இனி, சமண சமய நூல்களில், அருகக் கடவுள், மலர்மேல் நடந்த திருவடிகளை யுடையவன் என்று கூறியிருப்பதை எடுத்துக்காட்டுவோம்.

முதலில் நிகண்டுகளைப் பார்ப்போம். சூடாமணி நிகண்டு, அருகக் கடவுளைப் 'பூமிசை நடந்தோன்' என்றும், 'கமலவூர்தி' என்றும் கூறுகின்றது. சேந்தன் திவாகரமும் அருகனைப் 'பூமிசை நடந்தோன்' என்றே செப்பு கின்றது. பிங்கல நிகண்டும், அவ்வாறே 'பூமிசை நடந்தோன்' எனக் கூறு

வதோடு 'அருகன் ஊர்தி அம்புயம்' என்று அறைகின்றது. இதனால் சமணரின் அருகக் கடவுள் மலர்மிசை ஏகினவன் என்பது நன்கு விளங்குகிறது.

கோவலனையும் கண்ணகியையும் உடன் கொண்டு மதுரைக்குச் சென்ற கௌந்தியடிகள் என்னும் ஜைன சமய மூதாட்டியார் அருகக் கடவுளைப் போற்றித் துதித்த போது,

மலர்மிசை நடந்த மலரடி யல்லதுஎன்
தலைமிசை யுச்சி தானணிப் பொறாஅது

என்று வாழ்த்தியதாக ஜைனராகிய இளங்கோ அடிகள் தாம் அருளிய சிலப்பதிகாரத்தில் (நாடுகாண் காதை) கூறுகின்றார். இதில் அருகக் கடவுள் மலர்மேல் நடந்த மலர் போன்ற திருவடிகளையுடையவன் என்று கூறப் பட்டுள்ளது காண்க.

மற்றொரு ஜைன நூலாகிய சீவக சிந்தாமணியைப் பார்ப்போம்.

எங்குமுலக இருள் நீங்க இருந்த எந்தை பெருமானார்
தங்கு செந்தா மரையடி என்தலையவே என்தலையவே

இதற்கு உரை எழுதிய நச்சினார்க்கினியர் சைவராக இருந்தும், ஆருகத மதக் கொள்கையை நன்குணர்ந்தவராகலின், அந்த மரபைப் பின்பற்றி, 'எந்தை யாகிய பெருமானாருடைய தாமரை மேற்றங்கினவடி' என்று ஐயமற விளக்கி இருப்பது நோக்குக.

மன்ற லாறு மணிமுடிமேல் மலிந்த சூளா மணிபோலும்
வென்றோர் பெருமா னறவாழி வேந்தன் விரிபூந்
தாமரைமேற்
சென்ற திருவா ரடியேத்தித் தெளியும் பொருள்க
ளோரைந்தும்
அன்றி யாறு மொன்பானு மாகு மென்பா ரறவோரே

(முத்தியிலம்பகம், 216)

செந்தாமரைமேல் நடந்தானுக்கு (அருக கடவுளுக்கு), நந்தா விளக்குக் கென்றும் பூசனைக்கென்றும் நான்கு கோடி பொன்னையும் நூறு ஊர்களையும் தேர்களையும் யானைகளையும் சீவகன் வழங்கினான் என்று சிந்தாமணி கூறுகின்றது.

நந்தா விளக்குப் புறமாகென நான்கு கோடி
நொந்தார் கடந்தான் கொடுத்தான் பின்னை நூறு மூதூர்

கந்தார் கடாத்த களிறுங் கொடித் தேர்க ளூறும்
செந்தா மரைமே னடந்தானடி சேர்த்தினானே

(இலக்கணையாரிலம்பகம், 187)

மற்றொரு செய்யுளிலும் சிந்தாமணி, அருகக் கடவுள் பூமேனடத்தவன் என்பதைக் கூறுகின்றது:

குண்டமும் பொற்றோடும் பைந்தாரும் குளிர்முத்தும்
வண்டலம்பு மாலையு மணித்தொத்து நிலந்திவள
விண்டலர்பூந் தாமரையின் விரைததும்ப மேனடந்த
வண்டலர்பூந் திருவடியை மணிமுடியின் வணங்கினான்

(முத்திஇலம்பகம், 424)

இதற்கு உரை எழுதிய நச்சினார்க்கினியர் என்னும் சைவர், 'விரைத தும்ப விரிந்த மலர்ந்த தாமரையின்மே னடந்தவடி' என்று உரை எழுதி யிருப்பதைக் காண்க.

இன்சுவையும் கவிநயமும் ததும்பும் சூளாமணி என்னும் ஜைன காவியத்திலும் பல இடங்களில், அருகக் கடவுள் பூ மேல் நடந்த திருவடி களை உடையவன் என்று கூறப்படுகின்றார். அச்செய்யுள்களில் சிலவற்றைக் காட்டுவோம்:

'விரைமணந்த தாமரைமேல் விண்வணங்கச் சென்றாய்
உரைமணந் தியாம்பரவ வுண்மகிழ்வா யல்லை'

'முருகணங்கு தாமரையின் மொய்ம்மலர் மேற்சென்றாய்
அருகணங்கி யேத்த வதுமகிழ்வா அல்லை'

'மணமயங்கு தாமரைமேல் வான்வணங்கச் சென்றாய்
குணமயங்கி யாம்பரவ கொண்டுவப்பா யல்லை'

'மணங்கமழுந் தாமரையின் மதுத்திவலை
கொப்பளித்து மதுர்த்து வாமன்

'அணங்கிவர்சே வடியினழ கெழிலோரோர்
ஒளிபருகி யலரும் போலும்'

'அரும்பிவரு மரவிந்தம் அறிவான
தடிநிழல தடைந்தோ மென்று

சுரும்பிவரி இசைபாடச் செம்மாந்து
சுடருமிழ்ந்து துளும்பும் போலும்'

'மூவடி னாலிரண்டு சூழ்சுடரும் நாண
முழுதுலக மூடியெழின் முளைவயிரம் நாற்றித்
தூவடிவி னாலிலங்கு வெண்குடையி னிழற்
சுடரோயும் அடிபோற்றிச் சொல்லுவ
தொன்றுண்டால்
சேவடிகள் தாமரையின் சேயிதழ்கள் தீண்டச்
சிவந்தனவோ? சேவடியின் செங்கதிர்கள் பாயப்
பூவடிவு கொண்டனவோ பொங்கொளிகள் சூழ்ந்து
புலங்கொளா வாறெமெக்கெம்
புண்ணியர்தங்கோவே?

ஆருகதிரின் அருகக்கடவுளே மலர்மிசை ஏகினவன் என்பதற்கு இன்னும் ஐயம் உண்டோ? தாமரை, அருகக்கடவுளின் ஊர்தி என்பதைச் சமண நூலாகிய திருநூற்றந்தாதிகவி நயத்துடன் கூறுவது காண்க:

தாமரையே எத்தவங்கள் செய்தாய்! சகம்மூன் றினுக்கும்
தாமரைசே என்றுசாற்று போலுமுச் சத்திரத்துத்
தாமரைசேர் திருவைத் திருமார்பிற் றரித்தவர்செந்
தாமரையேய் சரணந்தலை மேற்கொண்டு தாங்குதற்கே!

ஜைன நூலாகிய நீலகேசியின் அவையடக்கச் செய்யுளாலும் அருகன் மலர்மிசை ஏகினவன் என்பதை அறியலாம். அச்செய்யுள் இது:

பண்டா கமத்துட் பயிலாவுரை என்று மிக்கார்
விண்டீங் கிதனை வெகுளார் விடல்வேண்டு வன்யான்
தண்டா மரைமேல் நடந்தான் தடந்தாள் வணங்கிக்
கண்டேன் கிடந்தேன் கனவின்னிது கண்டவாறே

அறநெறிச்சாரச் செய்யுள் ஒன்றும் இச்செய்தியையே கூறுகின்றது:

தாவின்றி எப்பொருளும் கண்டுணர்ந்து தாமரைப்
பூவின்மேற் சென்றான் புகழடியை-நாவின்
துதித்தீண் டறநெறிச் சாரத்தைத் தோன்ற
விரிப்பன் சுருக்காய் விரைந்து

சமண சமயத்தவரால் இயற்றப்பட்ட யாப்பருங்கல விருத்தியில் கீழ்க்கண்ட செய்யுள்கள் மேற்கோளாகக் காட்டப்பட்டுள்ளன. இச்செய்யுள் களிலும் அருகக் கடவுள் பூவின்மேல் நடந்தவன் என்று கூறப்பட்டுள்ளது காண்க:

'காமரு கதிர்மத முகத்தினை
சாமரை இடையிடை மகிழ்ந்தனை
தாமரை மலர்புரை அடியினை
தாமரை மலர்மிசை ஒதுங்கினை'

'மாதவா தாதையை, மலர்மிசை மகிழ்ந்தனை'

'ஏடலர் தாமரை ஏந்தும் நின்னடி
வீடொடு கட்டினை விளக்கும் நின்மொழி'

இதுகாறும் ஜைன சமய நூல்களின்று எடுத்துக் காட்டிய மேற்கோள் களினால் மலர்மிசை ஏகினான் என்று திருவள்ளுவர் கூறியது அருகக் கடவுளையே என்பது அங்கை நெல்லிக்கனி என விளங்குகின்றது. ஜைன மதத்தில் அன்றி ஏனைய சமயங்களில் கடவுளைப் பூமேல் நடந்தவன் என்று கூறப்பட்டிருப்பதாக நான் அறிந்தவரையில் காணப்படவில்லை. அவ்வாறு கூறப்பட்டிருப்பின் அன்புகூர்ந்து காட்டினால் வணக்கத்தோடு ஏற்றுக் கொள்ளப்படும்.

தேவாரத்தில் எங்கேனும் சிவனுடைய பாதம், பூமேல் நடந்தபாதம் எனக் கூறப்பட்டுள்ளதா என்பதையறிய அதனைத் துருவித்துருவி ஆராய்ந் தேன். ஒரே இடத்தில் அன்றி மற்றெல்லா இடங்களிலும் அவ்வாறு கூறப் படாததைக் கண்டேன். சிவனது திருவடி தாமரைமேல் நடந்த திருவடி என்று கூறப்பட்ட அந்த ஒரே ஒரு இடமும் அப்பர் சுவாமிகள் கூறியது. அப்பர் சுவாமிகள் ஜைன மதத்தில் நெடுநாள் பழகி அந்த மதக் கொள்கைகளை நன்கு பயின்று தருமசேனர் என்னும் பெயருடன் ஜைன மத் தலைவராக இருந்தவர் என்பது அனைவரும் அறிந்ததொன்றே. இதனை அறிந்து கூறினாரோ அல்லது பக்திப் பெருக்கினால் மறந்து கூறினாரோ தெரியவில்லை. அத்தேவாரச் செய்யுள் இது:

தாளிடைச் செங்கமலத் தடங்கோள் சேவடியார் போலும்
நாளுடைக் காலன்விடி வுதைசெய்த நம்பர் போலும்
கோளுடைப் பிறவிதீர்ப்பார் குளிர்பொழிற் படினை மேய
ஆளுடை அண்ணல் போலும் ஆலம்காட்டடி களாரே!

அப்பர் சுவாமிகள் ஜைன மதக்கொள்கைகள் சிலவற்றை எக்காரணத்தாலோ, சில இடங்களில், சைவ சமயத்தில் ஏற்றித் தமது தேவாரத்தில் கூறியிருக்கின்றார். ஜைன மதக் கொள்கைகளை நன்குணர்ந்தவர்கள் அப்பர் தேவாரத்தை ஊன்றிப் படிப்பார்களானால் இதனை நன்குணரக்கூடும். சிவபெருமான் தாமரை மேல் தங்கிய திருவடியுடையவன் என்று அப்பர் ஒரே ஒரு இடத்தில் மட்டும் கூறியிருக்கின்றார். வேறு இடங்களில் கூறினாரில்லை. சுந்தரரும் சம்பந்தரும் ஓரிடத்திலேனும் இதனைக் கூறாமலே விட்டனர். ஜைன மதக் கொள்கையாகையால் அவர்கள் இதனைக் கூறாமல் விட்டனர் போலும். சிவபெருமான் 'தாளுடைச் செங்கமலத் தடங்கொள் சேவடியார்' என்று அப்பர் ஒரே ஒரு இடத்தில் கூறினார். அப்பர் சுவாமிகளே, 'திருவடித் தாண்டகம்' அருளியிருக்கிறார். அதில் சிவபெருமானது திருவடிகளின் அருமை பெருமைகளைப் புகழ்ந்து போற்றியுள்ளார். ஆனால், அந்தத் திருவடித் தாண்டகத்தில், சிவன் மலர்மிசை ஏகின திருவடியுடையவன் என்பதைக் கூறாமலே விட்டு விட்டார். சிவன் மலர்மேல் நடந்த திருவடியுடையவன் என்பது சைவ சமயத்தவரின் கொள்கையாக இருந்திருந்தால், சிவனது திருவடிகளைப் புகழ்வதற்கென்றே முற்பட்ட அப்பர் சுவாமிகள் அக்கொள்கைக்கு முதன்மை கொடுத்து வற்புறுத்திக் கூறியிருப்பாரன்றோ? அவ்வாறு அவர் கூறாது விட்ட காரணம், இக்கொள்கை சைவ சமயக் கொள்கையன்றென்பதே. சிவன் பூமேல் நடந்த திருவடியுடையவன் என்பது சைவ சமயக் கொள்கையாக இருந்திருந்தால் மூவர் தேவாரங்களிலும் ஏனைய சைவ நூல்களிலும் கூறப்பட்டிருக்குமன்றோ? மாறாக, ஜைன சமய நூல்களில் இக்கொள்கை பெரிதும் அழுத்தம் திருத்தமாகக் கூறப்பட்டுள்ளது. எனவே, மலர்மிசை ஏகினான் என்பது ஜைனக் கடவுளைக் குறிக்கிறது என்பதில் யாதேனும் ஐயம் உளதோ?

திருக்குறள் மூலமும் கட்டுரையும்-ஜைன இளைஞர் மன்றம்

34. அறவாழி அந்தணன்

அறவாழி அந்தணன் தாள்சேர்ந்தார்க் கல்லால்
பிறவாழி நீத்தல் அரிது.

இத்திருக்குறளில் கூறப்பட்ட அறவாழி அந்தணன் என்பவர் யாவர்? அவர் எந்தக் கடவுள் என்பதை ஆராய்வோம். உரையாசிரியர் பரிமேலழகர், அறவாழி என்பதற்கு அறக்கடவுள் என்று பொருள் கூறினார். பிறகு

மற்றொரு பொருளையும் குறிக்கிறார். அது: அறவாழி என்பதனைத் தரும ''சக்கரமாக்கி அதனுடைய அந்தணன் என்று உரைப்பாருமுளர்'' என்பது. அறக்கடலாகிய அந்தணன் என்று பொருள் கொள்வதை விட, தருமச் சக்கரத்தை உடைய அந்தணன் என்று பொருள் கொள்வது சிறப்புடையதாகத் தோன்றுகிறது. நூல்களிலே ஜைனருடைய அருகக் கடவுள் (பௌத்தருடைய புத்தப் பெருமானும் கூட) அறவாழியை உடையவர் என்று கூறப்படுகிறார். ஆகவே, அறவாழி அந்தணன் என்று குறிக்கப்பட்டவர் ஜைனருடைய அருகக் கடவுள் எனக்கொள்ளத்தகும்.

ஆழிப்படையையுடைய திருமால் அறவாழி அந்தணன் அல்லரோ எனின், அல்லர். அவர் மறவாழியையுடையவராகலின் அறவாழி அந்தணன் ஆகார். என்னை? திருமாலின் திருத்தொண்டர்களான ஆழ்வார்கள் எல்லோரும், அவரை அறவாழி அந்தணன் என்று கூறாமல் மறவாழிப் படையான் என்றே கூறியுள்ளனர். ''அடலாழி ஏந்தி அசுரர் வன்குலம் வேர் மருங்கறுத்தாய்'' என்றும், ''அமர்கொள் ஆழி'' என்றும் ''காய்சின ஆழி'' என்றும், ''கொலை ஆழி'' என்றும், ''கூர் ஆழி'' என்றும், ''கனலாழிப் படை யுடையவன்'' என்றும், ''பேராழி கொண்ட பிரான்'' என்றும், ''ஊன் திகழ் நேமி'' என்றும், ''ஈர்க்கின்ற சக்கரத் தெம்மான்'' என்றும் திருமாலின் ஆழி (சக்கரம்) மறவாழி என்றே ஆழ்வார்கள் கூறியிருப்பதை அவர்கள் பாடல்களிலே நெடுகக் காணலாம். ஆகவே, அறவாழி அந்தணன் என்னும் பெயர் திருமாலுக்குப் பொருந்தாது.

சிவன், முருகன், பிரமன் முதலிய கடவுளரும் அறவாழி அந்தணர் - அதாவது தருமச் சக்கரத்தையுடையவர் என்று நூல்களில்யாண்டும் கூறப் பட்டனர் இலர். ஆகவே, அவர்களும் தருமச் சக்கரத்தை உடையவர் ஆகார். ஆனால், ஜைனரின் அருகக் கடவுள், அறவாழியை (தரும சக்கரத்தை) உடையவர் என்று நூல்கள் கூறுகின்றன. அவற்றில் சிலவற்றை ஈண்டுக் காட்டுவாம்.

ஆதியங் கடவுள் அறவாழி அந்தணன்
அரியணைச் செல்வன் அருளாழி வேந்தன்

என்பது திவாகரம்.

''அருகன் எண்குணன் நிச்சிந்தன் அறவாழி வேந்தன்
வாமன்''

என்று சூடாமணி நிகண்டு கூறுகிறது.

"அறவாழி வேந்தன் அரியணைச் செல்வன்"

என்று பிங்கல நிகண்டு பேசுகிறது.

மறங்கொள் நேமி விட்டெறிந்து மன்னர் சென்னி சோறியில்
பிறங்க வென்ற வென்றியோர் அனேகபேர்; உலகெல்லாம்
இறைஞ்ச எங்கள் வல்வினைத் தெவ்வர் சிந்த வெந்துபோர்
அறங்கள் நேமி கொண்டு வென்ற சோதி எங்கள் ஆதியே

(திருக்கலம்பகம், 25)

மகரவா ருதிவயத் துலக மேழும்
வந்திறைஞ்ச அருளாழி வலங்கொண்டு ஏந்துஞ்
சிகரமா மணிநீல வண்ண வெற்பைத்
தேராதார் தாந்தம்மைத் தேராதாரே

(திருக்கலம்பகம், 31)

ஆரருள் பயந்தனை ஆழ்துயர் அவித்தனை
ஓரருள் அழியை உலகுடை ஒருவனை
ஓரருள் ஆழியை உலகுடை ஒருவனை
சீரருள் மொழிய நின்திருவடி தொழுதனம்

(சூளாமணி, 98)

அறவாழியையுடைய அருகக்கடவுளைச் சீவகச்சாமி தலையுற வணங்கின செய்தியைச் சீவக சிந்தாமணி கூறும் செய்யுள் இது:

நிலவிலகி உயிரோம்பி நிமிர்ந்தொளிர்ந்து பசிபகைநோய்
உலகமிருள் கெடவிழிக்கும் ஒண்மணி அறவாழி
அலகையிலாக் குணக்கடலை அகன்ஞான வரம்பனை
விலையிலா முடியான் விண்வியப்ப இறைஞ்சினான்

(முத்தியிலம்பகம், 425)

மற்றும், "தண்மதி போல் நேமி." "மலமறுதிகிரி", "அறவாழி வேந்தன்" என்று சீவக சிந்தாமணியில் அருகக் கடவுளின் அறவாழி கூறப்படுகிறது. மேலும், "அருட்சக்கரம் ஏந்திய சங்கரன்" என்றும், "பொருளாக என்னை ஆண்டு கொண்டாய் அறவாழி கொண்டே வென்ற அந்தணனே" என்றும் திருநூற்றந்தாதி முழங்குகின்றது

'அந்தரத் துருளும் நின் அலர்கதிர் அறவாழி
இந்திரனும் பணிந்தேத்த இருவிசும்பில் திகழ்ந்தன்றே'

என்பதும்,

'மறவாழி இறையவரும் மாதவரும் புடைசூழ
அறவாழி வலனுயரி அருள்நெறியே அருளியோய்'

என்பதும் யாப்பருங்கல விருத்தி மேற்கோள் செய்யுள்கள்

இதுகாறும், ஜைன சமய நூல்களிலிருந்து காட்டிய மேற்கோள்களைக் கொண்டு, அருகக் கடவுள் அறவாழியுடையவர் என்பதை அறிந்தோம் அறவாழி, இன்றும் ஜைனக் கோயில்களில் வழிபடப்பட்டு வருகின்றது.

பேரரசராக விளங்கும் சக்கரவர்த்திகளின் படைக்கலச் சாலையில் ஆழிப்படை (சக்கர ரத்தினம்) தோன்றும் என்பதும், அச்சக்கரத்தைப் பின் தொடர்ந்து சக்கரவர்த்தி சேனையுடன் சென்றால் அது, பணியாத மன்னர்களை எல்லாம் பணியச் செய்து திரும்பும் என்பது. அடங்காத மன்னர் யாரேனும் இருந்தால் அவர்களைப் பணியச் செய்த பிறகே அச்சக்கரம் ஆயுத சாலைக்குத் திரும்பும் என்பதும் சக்கரப் படையைப் பெற்ற சக்கரவர்த்திகள் சக்கரச் செல்வர் எனப்படுவர் என்பதும் ஜைன சமயக் கொள்கை. இது போன்றே, அருகக் கடவுளுக்கு அறவாழி உண்டென்பதும், அவருக்கு முன்புறத்தில் அறவாழி எப்போதும் இருக்கும் என்பதும் அவர் செல்லும் இடங்களுக்கெல்லாம் அவ்வறவாழி அவரை முன்னிட்டுச் செல்லும் என்பதும் ஜைன சமயக் கொள்கையாகும் இம்மரபை மனத்துட் கொண்டு அருகப் பெருமானை விளித்து ஓர் ஐயவினா நிகழ்த்தும் நகைச்சுவையுடைய செய்யுள், சூளாமணி என்னும் காவியத்துள் காணப்படுகிறது. அச்செய்யுள் இது இதனைப் படித்துப் பொருள் உணர்ந்து சுவையை நுகர்க

'தெருளாமையால் வினவற்பால தொன்னுண்டு
திருவடிகள் ரெம்பொனார் அரவிந்தம் ஏந்த,
இருளாழி ஏழுலகும் சூமொழிளியின் மூழ்க,
இமையாத ரெங்கண்ணின் இமையோர் வந்தேத்த
உருளாழியானும் ஒளிமணி முடிமேற் கைவைத்(து)
ஒருபாலில் வர, உலகம் நின்னுழைபதாக,

அருளாழி முன்செல்லப் பின் செல்வகென்னோ?
அடிப்படாதாய் நின்ற அகன் ஞாலம் உண்டோ?

திருக்குறள் மூலமும் கட்டுரையும்
ஜைன இளைஞர் மன்றம்

35. யாரால் மழை பெய்கிறது?

மழையின் பெருமையையும் இன்றியமையாமையையும் உலகத்திலே எல்லா மக்களும் அறிந்திருக்கிறார்கள். மழையின் சிறப்பை ஏனையோர் அறிந்ததைவிட மிக நன்றாக அறிந்தவர் தமிழரே. ஏனென்றால், தமிழ் வேதம் எழுதியருளிய திருவள்ளுவ நாயனார் வான் சிறப்பு என்னும் ஒரு அதிகாரம் வகுத்து அதில் மழையின் சிறப்பை எடுத்தோதினார். சிலப்பதிகாரம் என்னும் ஆதித்தமிழ்க் காவியத்தை எழுதிய இளங்கோ அடிகள்,

"மாமழை போற்றுதும் மாமழை போற்றுதும்
நாமநீர் வேலி யுலகிற் கவனளிபோல்
மேனின்று தான்சுரத்த லான்."

என்று மழையைப் போற்றினார். இவ்வாறு மழையைப் போற்றிச் சிறப்பித்தவர் தமிழரைத் தவிர வேறு எம்மொழியாளர் உளர்? யாமறிந்த வரையில் ஒருவரும் இலர்.

பறவை விலங்கு மக்கள் முதலிய எல்லா உயிர்களும் உலகத்திலே உயிர்வாழ வேண்டுமானால், புல் பூண்டு செடி கொடி மரம் ஆகிய தாவரங்கள் உலகத்தில் செழித்து வளர வேண்டும். ஓரறிவுயிராகிய மரம் செடி புல் பூண்டுகள் இல்லையானால், ஈரறிவுயிர் முதல் ஆறறிவுயிர் வரையில் எந்த உயிரும் உலகத்திலே உயிர்வாழ முடியாது. உலகம் முழுவதிலும் உள்ள தாவரங்களாகிய மரம் செடி கொடி புல் பூண்டுகளை ஓரேநாளில் முழுவதும் அழித்து விடுவோமானால், அப்பொழுதே உலகத்தில் வாழும் ஏனைய உயிர்கள் எல்லாம் மாய்ந்து உலகத்தில் உயிர்களே இல்லாமற் போகும் எனவே ஓரறிவுயிராகிய தாவரங்களை அடிப்படையாகக் கொண்டிருக்கிறது ஏனைய உயிர்களின் வாழ்க்கை. எல்லா உயிர்களுக்கும் ஆதரவாக உள்ள தாவரங்களை உண்டாக்கி அவற்றை நிலை பெறச் செய்வது மழை. இதனால் அன்றே,

---

* இவ்விரண்டு கட்டுரைகளும் மும்மணி (15-8-48, 15-6-48) இதழில் வெளியிடப்பட்டவை. ஆசிரியர் வாய்மொழி இசைவுடன் வெளியிடப்படுகின்றன

"விசும்பின் துளிவீழி னல்லால் மற்றாங்கே
பசும்புல் தலைகாண் பரிது." (திருக்குறள்:கசு)

என்றும்,

"விண்ணின்று பொய்ப்பின் விரிநீர் வியனுலகத்
துண்ணின் றுடற்றும் பசி." (திருக்குறள்:ந)

என்றும் திருவள்ளுவர் கூறினார். அன்றியும், தாவரங்களை உண்டாக்கி அவற்றின்மூலம் உயிர்களுக்கு உணவைக் கொடுப்பது மட்டுமல்லாமல், உயிர்களுக்குத் தானே உணவாகவும் இருப்பது மழை (நீர்). இதனைத் திருவள்ளுவர்,

"துப்பார்க்குத் துப்பாய துப்பாக்கித் துப்பார்க்குத்
துப்பாய தூஉ மழை." (திருக்குறள்: கஉ)

என்று அழகாகக் கூறினார்.

தொன்றுதொட்டு நமது நாட்டின் முக்கியத் தொழிலாக உள்ளது - முதுகெலும்பு போன்றது-உழவுத் தொழில். ஆகவே, நம்மவர் மழையின் இன்றியமையாமையை நன்கறிவர் ஆனால், மழை எப்படிப் பெய்கிறது என் பதைப் பண்டைப் பெரியோர் அறியார். நமது நாட்டில்மட்டுமல்ல, ஏனைய நாட்டிலும் பண்டைக்காலத்தில் இருந்தவர் மழை பெய்வதன் காரணத்தை அறிந்திலர். இந்திரன் என்னும் தெய்வம் மழையைப் பெய்யச் செய்கிறது என்றும், வருணன் என்னும் கடற்றெய்வம் மழையை அனுப்புகிறது என்றும் அவர்கள் கருதிவந்தனர். வெண்மேகங்கள் சென்று கடலில் படிந்து வயிறு நிறைய நீரைக் குடித்துக் கருமேகமாகி வானத்திலே வந்து மழையாகப் பெய் கிறது என்று காவியப் புலவர்கள் பாடிய பாட்டுக்களிலே, சூரியன் கதிரின் சூட்டினாலே நீர்நிலைகளில் உள்ள நீர் ஆவியாகச் சென்று ஆகாயத்திலே மேகமாகி மழையாப் பெய்கிறது என்கிற 'சயன்ஸ்' என்னும் விஞ்ஞானத்தின் சாயல் காணப்பட்டாலும், அதை நம் முன்னோர் காவியப் புலவரின் கற்பனை என்று கருதினார்களேயல்லாமல் உண்மை என்று கொள்ளவில்லை.

நமது நாட்டுப் பண்டைப் பெரியயோர் மழை எப்படிப் பெய்கிறது என்று கருதினார்கள் என்பதைப் பார்ப்போம். அரசரும் மகளிரும் முனிவரும் மழை பெய்வதற்கும் பெய்யாமல் இருப்பதற்கும் காரணம் ஆவர் என்று அவர்கள் கருதினார்கள். மகளிர் கற்புடன் இருந்தால் மழை பெய்யும்; கற்புத் தவறினால் மழை பெய்யாது என்றும், அரசர் செங்கோல் செலுத்தினால் மழை

பெய்யும்; கொடுங்கோல் செலுத்தினால் மழை பெய்யாது என்றும், துறவி களாகிய முனிவர் பிழையின்றித் தவம் செய்தால் மழை பெய்யும்; பிழைபடத் தவம் செய்தால் மழை பெய்யாது என்றும் அவர்கள் கருதி வந்தார்கள்.

கி.பி.இரண்டாம் நூற்றாண்டில் காஞ்சிபுரத்தை அரசாண்ட இளங் கிள்ளி என்னும் அரசன் காலத்தில் மழை பெய்யாமல் வற்கடம் உண்டா யிற்று. அப்போது மணிமேகலையார் அந்நகரத்திற்கு வந்தார். வந்தவரை அரசன் வரவேற்றான். வரவேற்று, மழையில்லாமல் நாடு அல்லல் படுவதன் காரணத்தைக் கூறுகிறான்:

''செங்கோல் கோடியோ செய்தவம் பிழைத்தோ
கொங்கவிழ் குழலார் கற்புக் குறைபட்டோ
நலத்தகை நல்லாய்! நன்னா டெல்லாம்
அலத்தற் காலை யாகிய தறியேன்.'' (மணி: 28:188-91.)

அரசன் செங்கோல் செலுத்தினால் மழைபெய்யும், கொடுங்கோல் செலுத்தினால் மழை பெய்யாது என்பதைத் திருவள்ளுவரும் கூறுகிறார்.

''இயல்புளிக் கோலோச்சும் மன்னவன் நாட்ட
பெயலும் விளையுளுந் தொக்கு.'' (திருக்குறள்: 545)

என்றும்,

''முறைகோடி மன்னவன் செய்யின் உறைகோடி
ஒல்லாது வானம் பெயல்.'' (559)

என்றும் அவர் கூறியது காண்க.

கற்புடைய மங்கையரால் நாட்டில் மழை பெய்கிறது என்பதையுந் திருவள்ளுவர் கூறுகிறார்:

''தெய்வந் தொழாஅள் கொழுநன் தொழுதெழுவாள்
பெய்யெனப் பெய்யும் மழை.'' (திருக்குறள்: 55)

''வறனோடின் வையகத்து வான்தருங் கற்பினாள்''

என்பது கலித்தொகை. .

''புண்ணிய முட்டாள், பொழிமழை தரூஉம்
அரும்பெறன் மரபிற்பத்தினிப் பெண்டிர்''

என்பது மணிமேகலை.

"நாடு மூரும் நனிபுகழ்ந் தேத்தலும்
பீடுறும் மழை பெய்கெனப் பெய்தலும்
கூட லாற்றவர் நல்லது கூறுங்காற்
பாடு சான்மிகு பத்தினிக் காவதே"

என்பது வளையாபதிச் செய்யுள்.

கற்புடைப் பெண்கள் இருக்கும் நாட்டில் மழை தவறாமல் பெய்து நாடு வளம்படும் என்றும் அரசனுடைய ஆட்சியும் செங்கோலாக நடைபெறும் என்றும் சிலப்பதிகாரம் கூறுகிறது.

"வானம் பொய்யாது வளம்பிழைப் பறியாது
நீணில வேந்தர் கொற்றஞ் சிதையாது
பத்தினிப் பெண்டிர் இருந்தநாடு" (சிலப்பதி,15:145-8)

இதுபோன்றே அரசனுடைய செங்கோலினாலேதான் மகளிர் கற்பு நிலைபெறுகிறது என்று சிலப்பதிகாரம் கூறுகிறது.

"அருந்திறல் அரசர் முறைசெயின் அல்லது
பெரும்பெயர்ப் பெண்டிர்க்குக் கற்புச்சிறவாதெனப்
பண்டையோர் உரைத்த தண்டமிழ் நல்லுரை"

(சிலப்பதி, 28:207-9)

தவசிகள் தவம் செய்யாவிட்டால் மழை பெய்யாது என்று நான் மணிக் கடிகை என்னும் நூல் கூறுகிறது.

"மழையின்றி மாநிலத்தார்க் கில்லை, மழையும்
தவமிலார் இல்வழி இல்லைத், தவமும்
அரசிலார் இல்வழி யில்லை, யரசனும்
இல்வாழ்வான் இல்வழி இல்." (நான்மணிக் கடிகை: சஅ)

இவையன்றிப், பார்ப்பனர் அழல் ஓம்புதலினாலேயும் மழை பெய்கிறது என்னும் கருத்தும் பண்டைக்காலத்தில் இருந்தது. இதனை, "மழை வளந் தரூஉம் அழலோம் பாளன்" என்னும் மணிமேகலையினால் அறியலாம்.

இவர்களாலேதான் பண்டைக் காலத்தில் மாதம் மும்மாரி பெய்தது என்று பிற்காலத்து நூலாகிய விவேக சிந்தாமணி கூறுகிறது.

"வேதமோதிய வேதியர்க் கோர்மழை
நீதிமன்னர் நெறியினுக் கோர்மழை

காதல் மங்கையர் கற்பினுக் கோர்மழை
மாதமூன்று மழையெனப் பெய்யுமே.''

என்பது அது. மாதம் மும்மாரி பெய்தது எந்தக் காலத்தில் என்பது தெரிய வில்லை. ஆனால், வேதியரும் மன்னரும் மங்கையரும் தத்தம அறநெறியில் இருந்து தவறியபடியால் ஆண்டில் மூன்று மழை பெய்தது என்று அந்நூலே கூறுகின்றது.

''அரிசி விற்றிடும் அந்தணர்க் கோர்மழை
வரிசை தப்பிய மன்னருக் கோர்மழை
புருடனைக் கொன்ற பூவையர்க் கோர்மழை
வருடம் மூன்று மழையெனப் பெய்யுமே.''

என்பது அது. ''என்ன ஐயா! இந்த விஞ்ஞான காலத்தில், அணுகுண்டு யுகத்தில் பழைய புராணங்களைப் புரட்டுகிறீர்'' என்று வாசகர் கருதுவர் என்ற தோன்றுகிறது. இப்படியெல்லாம் மழையைப்பற்றிப் பண்டைக் காலத்தவர் கருதிவந்தனர் என்பதை நாம் தெரிந்துகொள்ளவேண்டும் அல்லவா? அதற்காகத்தான் இதனை எழுதினேன்.

- செந்தமிழ்ச் செல்வி - சிலம்பு 28

36. ஒரு குறளுக்குப் பௌத்தவிரிவுரை

''கண்டு, கேட்டு, உண்டு, உயிர்த்து உற்றறியும் ஐம்புலனும்
ஒண்டொடி கண்ணேயுள''

என்ற குறளின் கருத்து,

அதற்குமுன் இயற்றப்பட்ட பௌத்த வேதமான திரிபிடகத்தின் ஒரு பகுதியான சூத்திரபிடகத்தில், அங்குத்தரநிகாயம் என்ற அத்தியாயத்தில் புத்தரால் விளக்கப்படுகிறது என்று காட்டி, கருத்தொற்றுமையைக் காட்டு கிறார். இக்கட்டுரை ஆசிரியர். (அழகு)

மனித வாழ்க்கையில் இல்லறத்தை மேற்கொண்ட கணவனும் மனைவியும் ஒத்த மனத்தினராய்க் கூடி அடைகிற இன்பம் சிறந்தது. ஐம்பொறிகளின் வாயிலாக ஐம்புலனாலும் அடையப்படுவது இந்த இன்பம். இந்த இன்பத்தைச் சிற்றின்பம் என்று கூறுவார்கள். அன்புடைய மனைவியும் கணவனும் ஒத்த மனத்தினராய் கூடித் துய்க்கும் இன்பம், ஐம்பொறி இன்பங் களில் மிகச் சிறந்ததாகக் கருதப்படுகிறது. திருவள்ளுவர் தம்முடைய திருக் குறளில் இந்த இன்பத்தை நன்கு கூறுகிறார், கணவன் ஒருவன் தான் அடைந்த

இன்பத்தை தன்னுடைய மனைவியின் மேல் சார்த்திக் கூறுவதாகத் திருவள்ளுவர் ஒரு குறட்பாவைக் கூறியுள்ளார். அந்தக் குறட்பா இது.

"கண்டு கேட்டு உண்டு உயிர்த்து உற்றறியும் ஐம்புலனும்
ஒண்டொடி கண்ணே உள."

கண்ணால் கண்டும் காதால் கேட்டும் வாயினால் சுவைத்தும் மூக்கினால் முகர்ந்தும் உடம்பினால் உணர்ந்தும் அடையப்பெறுகின்ற ஐம்புல இன்பம் ஒள்ளிய தொடியணிந்த இந்த மங்கையிடத்தில் உள்ளன என்பது இந்தக் குறளின் பொருள்.

திருவள்ளுவர் கூறிய இதே கருத்தை இவருக்குப் பின்னர் சில நூற்றாண்டு கழித்து இருந்தவரான நம்மாழ்வார் தம்முடைய திருவாய் மொழியில் கூறுகிறார்.

"கண்டு கேட்டு உற்று மோந்து உண்டுழலும் ஐங்கருவி
கண்ட இன்பம் தெ ரிவரிய அளவிலாச் சிற்றின்பம்"

என்று நம்மாழ்வார் கூறுகிறார். (திருவாய் மொழி.4-ஆம் பத்து. 9-ஆம் திருமொழி.10-ஆம் செய்யுள்) இதை இவர் அளவிலாச் சிற்றின்பம் என்று கூறுவது காண்க.

இந்த 'அளவிலாச் சிற்றின்பம்' ஆண்மகனுக்கு மட்டுமா கிடைக்கிறது? அவன் அனுபவித்த அளவிலாச் சிற்றின்பம் அவளுக்கும் உண்டன்றோ? ஆண்மகன் அடைகிற அளவிலா ஐம்புல இன்பத்துக்கு பெண் மகள் நிலைக்களமாக இருப்பது போலவே, பெண் மகள் அடைகிற அளவிலா ஐம்புல இன்பத்துக்கு ஆண்மகன் நிலைக்களமாக இருக்கிறான் என்பது சொல்லாமலே அமையும். இது பௌத்த மத நூலில் தெளிவாகவும் விரிவாகவும் கூறப்படுகிறது. திருவள்ளுவர் வாழ்ந்திருந்த காலத்துக்கு சில நூற்றாண்டுக்கு முன்பு இருந்தவர் பகவான் புத்தர். அவர், சிற்றின்பம் பொருளாகக் கூறியுள்ள அறிவுரை இந்தக் குறட்பாவுக்கு நல்லதோர் விரிவுரை போலக் காணப்படுகிறது.

பௌத்த மத வேதமாகிய திரிபிடகத்தில் சூத்திரபிடகம் என்பதும் ஒன்று. சூத்திரபிடகத்தில் அங்குத்தரநிகாயம் என்னும் பகுதியில் ஏகநிபாதம் என்னும் பிரிவில், ஐம்புலன்களின் வாயிலாக ஆணும் பெண்ணும் அடைகிற சிற்றின்பம் விளக்கப்படுகின்றது. சாவத்தி (சிராவத்தி) நகரத்திலே அநாத பிண்டிகனுடைய தோட்டத்திலே ஜேதவன ஆராமத்திலே பகவன் புத்தர்

தங்கியிருந்தபோது ஒரு நாள் அவர் தம்முடைய பிக்குச் சங்கத்துக்கு இது பற்றிக் கூறினார். அவர் கூறியது இது

துறவிகளே! ஆணின் மனத்தை மயக்கிக் கவர்ந்து கொள்கிற பெண்ணின் உருவம் போன்ற வேறு உருவத்தைக் காண்பது இல்லை பெண்ணின் உருவம் ஆண் மகனுடைய மனத்தைக் கவர்ந்து ஈர்க்கிறது.

துறவிகளே! ஆண் மகனின் மனத்தை மயக்கிக் கவர்ந்து கொள்கிற பெண்ணின் குரல் போன்ற வேறு எந்தக் குரலையும் காணவில்லை. பெண்ணின் குரல் ஆண் மகனுடைய மனத்தைக் கவர்ந்து கொள்கிறது.

துறவிகளே! ஆணின் மனத்தைக் கவர்ந்து கொள்கிற பெண்ணினுடைய மணம் போன்று வேறே எந்த மணத்தையும் கண்டது இல்லை. பெண்ணினுடைய மணமானது ஆணின் மனத்தைக் கவர்ந்து கொள்கிறது.

துறவிகளே! ஆண் மகனின் மனத்தைக் கவர்ந்து கொள்கிற பெண் சுவை போன்று வேறு இனிமையான சுவையைக் கண்டது இல்லை பெண் சுவை ஆணின் மனத்தைக் கவர்ந்து கொள்கிறது.

துறவிகளே! ஆண் மகனின் மனத்தைக் கவர்ந்து கொள்கிற பெண்ணின் ஊறுணர்ச்சியைப்போல (உடலுணர்ச்சியைப்போல) வேறு சிறந்த உடலுணர்ச்சியைக் கண்டது இல்லை. பெண்ணின் ஊறுணர்ச்சி ஆண் மகனின் மனத்தைக் கவர்ந்து கொள்கிறது.

துறவிகளே! பெண்ணின் மனதைக் கவர்ந்து கொள்கிற ஆண் மகனின் உருவம் போன்று வேறு எந்த உருவத்தையும் காணவில்லை. ஆண் உருவம் பெண்ணின் மனதைக் கவர்ந்து கொள்கிறது.

துறவிகளே! பெண்ணின் நெஞ்சைக் கவர்ந்து கொள்கிற ஆணின் குரல் போன்று வேறு குரலையும் காணவில்லை. ஆணின் குரல் பெண்ணின் மனத்தைக் கவர்ந்துவிடுகிறது.

துறவிகளே! பெண்ணின் நெஞ்சைக் கவர்ந்து கொள்கிற ஆணின் மணம் போன்ற வேறு மணத்தைக் காணவில்லை. ஆணின் மணம் பெண்ணின் மனத்தைக் கவர்ந்து கொள்கிறது.

துறவிகளே! பெண்ணின் நெஞ்சைக் கவர்ந்து கொள்கிற ஆணின் சுவை போன்று வேறு சுவையைக் காணவில்லை. ஆணின் சுவை பெண்ணின் உள்ளத்தைக் கவர்ந்துகொள்கிறது.

துறவிகளே! பெண்ணின் மனத்தைக் கவர்ந்து கொள்கிற ஆணின் ஊறு உணர்ச்சியைப் போன்று வேறு உடலுணர்ச்சியைக் காணவில்லை. ஆணின் ஊறுணர்ச்சி பெண்ணின் நெஞ்சைக் கவர்ந்து கொள்கிறது. இவ்வாறு ஆண் பெண்களின் ஐம்புலக் கவர்ச்சிகளைப்பற்றி விளக்கிய பகவன் புத்தர் ஐம்புலன்களை அடக்க வேண்டும் என்று பிக்குகளுக்குக் கூறினார்.

இவ்வாறு ஆண் பெண்களுடைய ஐம்புல உணர்ச்சி ஒன்றையொன்று ஈர்த்துக் கொள்வதை அங்குத்தரநிகாயத்தின் ஏகபாதம் முதல்அதிகாரத்தில் கூறுகிறது.

சங்க காலத்திலிருந்த திருவள்ளுவர் ஐம்புல இன்பத்தைப் பற்றிக் கூறியதை அவருக்கு முன்பு சில நூற்றாண்டுக்கு முன்னர் வாழ்ந்திருந்த பகவன் புத்தர் விரிவாகக் கூறியுள்ளார். பகவன் புத்தர் கூறிய இந்தத் தெளிவுரை,

> **''கண்டு கேட்டு உண்டு உயிர்த்து உற்றறியும் ஐம்புலனும்**
> **ஒண்டொடி கண்ணே உள''**

என்னும் குறட்பாவுக்குச் சிறந்த உரையாக அமைந்திருக்கிறது. மேலும், காதலன் ஒருவன் தான் பெற்ற சிற்றின்பம் தன் காதலியிடம் அமைந்து இருந்தது போலத் திருவள்ளுவர் கூறியதை உடன்பட்டுக் கூறுகிற பகவன் புத்தர், காதலி ஒருத்தி தான் பெற்ற சிற்றின்பம் தன் காதலனிடம் அமைந்து கிடப்பது போலவும் கூறியிருப்பது மிகப்பொருத்தமாகத் தோன்றுகிறது.

தமிழ் ஆராய்ச்சியின் புதிய எல்லைகள்
- நா.வானமாமலை மணிவிழா மலர் 1978

37. ஜைனமதமும் திருக்குறளும்

(சென்ற ஆண்டிலே, திருச்சிராப்பள்ளி வானொலி நிலையத்தில் உலக மறை என்பது பற்றி ஆறு நிகழ்ச்சிகள் நிகழ்ந்தன. அவை, கிறிஸ்துவமும் குறளும், இஸ்லாமும் குறளும், சைவமும் குறளும், வைணவமும் குறளும், பௌத்தமும் குறளும், ஜைனமும் குறளும் என்பன. இந்த வரிசையில், மயிலை.சீனி.வேங்கடசாமி அவர்கள் 'உலக மறை; ஜைன மதமும் திருக் குறளும்' என்னும் பொருள் பற்றி 1958-ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 31-ஆம் தேதி பேசியது கீழே தரப்படுகிறது.)

திருக்குறளிலே ஜைன மதத்தைப் பற்றிய கருத்துக்களும் இருக்கின்றன. மற்றச் சமயத்தாருக்குத் திருக்குறளில் காணப்படும் கொள்

கையைவிட அதிக உறுதியான சில ஜைனக் கொள்கைகள் திருக்குறளிலே இடம்பெற்றிருக்கின்றன. திருக்குறள் கடவுள் வாழ்த்திலேயே ஜைன சமயத்தின் தெய்வக் கொள்கைகள் விளக்கமாகக் காணப்படுகின்றன. அவைகளிலே முக்கியமாக நான்கு விஷயங்களை மட்டும் இங்குக் கூறவேண்டும். திருக்குறளில், கடவுள் வாழ்த்து முதற் குறளிலேயே திருவள்ளுவர் ஆதி பகவனைக் கூறுகிறார். ஆதிபகவன் என்பவர், ஜைன சமயத்தவரின் முதல் தீர்த்தங்கரர் ஆவார். ரிஷபநாதர் என்பது அவர் இயற்பெயர். முதல் முதலாக ஜைன மதத்தை உண்டாக்கியவரும் அவரே. ஆகையால் ஜைனர்கள் அவரை ஆதிநாதர் என்றும், பகவன் என்றும், ஆதிபகவர் என்றும் கூறுகிறார்கள். திருக்குறள் கடவுள் வாழ்த்திலே முதல் முதலாக ஆதிபகவன் வணக்கம் கூறப்படுகிறது. அக்குறள் இது:

அகர முதல எழுத்தெல்லாம் ஆதி
பகவன் முதற்றே உலகு.

என்பது. இந்தக் குறளில் ரிஷபதேவரின் பெயராகிய ஆதிபகவன் என்றும் பெயர் கூறப்படுவது காண்க.

பொறிவாயில் ஐந்த வித்தான் என்று திருக்குறளில் கூறப்படுகிறவரும் ஜைன சமயத் தெய்வம் ஆவர். அனாதியான பரம்பொருள், உலகத்தையும் உயிர்களையும் படைத்த கடவுள் ஒருவர் உண்டு என்பது ஜைன சமயக் கொள்கை அல்ல. ஐம்பொறி ஐம்புலன்களுடன் மனிதனாகப் பிறந்து மனிதனாக வளர்ந்து நல் ஞானம் அடைந்து, ஐம்பொறிகளையும் ஐம்புலன்களையும் அடக்கத் தவம்செய்து வினைகளை அறுத்துக் கடவுள் நிலையை அடைந்தவர் தாம் ஜைன சமயத்தின் தெய்வம். அவர்கள் தாம் அருகப் பெருமான் என்றும் தீர்த்தங்கரர் என்றும் கூறப்படுகிறார்கள். மற்ற மதங்களில் கூறப்படுகிற, அனாதியாகவே பொறி வாயில்கள் அற்றவரான பரம்பொருள் ஜைன சமயத்துக்கு உடன்பாடு அல்ல. ஐம்புலன்களையும் ஐம்புல வாயில்களையும் பெற்றிருந்து, பிறகு தவத்தினால் அப்பொறிவாயில்களை அவித்துப் பிறவித் துன்பங்களை நீக்கி வீடுபேறு பெற்ற தீர்த்தங்கரர்கள், அருகக் கடவுள் எனப்படுகிறார்கள். இவர்கள் தாம் பொறிவாயில் ஐந்த வித்தவர்கள். ஐந்து பொறிவாயில்களையும் அவித்துக் கடவுள் நிலையை அடைந்தவர்களைத்தான்,

பொறிவாயில் ஐந்தவித்தான் பொய்தீர் ஒழுக்க
நெறிநின்றார் நீடு வாழ்வார்

என்று திருக்குறள் கூறுகிறது. மேலும், ஜைன சமயக் கடவுளைப் பற்றிய வேறு இரண்டு செய்திகளும் திருக்குறளில் காணப்படுகின்றன. அவை, மலர்மிசை ஏகினான் என்பதும் அறவாழி அந்தணன் என்பதும் ஆகும்.

மலர்மிசை ஏகினான் என்பது ஜைன சமயத்துக்கு உரிய முக்கியமான கொள்கையாகும். சமண சமயக் கடவுளாகிய அருகப் பெருமான் நடக்கும் போது அவருடைய திருவடிகளைத் தாமரை மலர்கள் தாங்குகின்றன என்னும் கொள்கை ஜைன சமயத்தில் உண்டு. சம்ஸ்கிருதம், ஹிந்தி, பிராகிருதம், தமிழ் முதலிய பாஷைகளில் உள்ள ஜைனக் கடவுள் வணக்கத்திலே, அருகப் பெருமான் திருவடிகளைத் தாமரைப் பூக்கள் தாங்குகின்றன என்று கூறப்படுவதைக் காண்கிறோம். இந்த ஜைன சமயக் கருத்தை,

''மலர்மிசை ஏகினான் மாணடி சேர்ந்தார்
நிலம்மிசை நீடு வாழ்வார்''

என்று திருக்குறளிலும் காண்கிறோம்.

அறவாழி என்னும் தர்ம சக்கரமும் ஜைன சமயத்துக்கு உரியது. அருகக் கடவுள் உபதேசிக்கிற ஜைன தர்மம், தர்ம சக்கரம் என்றும் அறவாழி என்றும் கூறப்படுகிறது. ஜைன தர்மத்தைப் போதிக்கிற தீர்த்தங்கரர், அறவாழி அந்தணன் என்று கூறப்படுகிறார். இதைத்தான் திருக்குறளும்,

''அறவாழி அந்தணன்தாள் சேர்ந்தார்க் கல்லால்
பிறவாழி நீந்தல் அரிது''

என்று கூறுகிறது. இதில் ஜைனக் கடவுள் அறவாழி அந்தணன் என்று கூறப்படுதல் காண்க.

திருக்குறளில் ஜைன சமயக் கடவுள் கூறப்படுவதைக் கண்டோம். இனி, ஜைன சமயத்தின் முக்கிய கொள்கை திருக்குறளில் கூறப்படுவதைக் காண்போம். ஜைன சமயத்தின் முக்கியமான கொள்கை, அந்த மதத்தின் உயிர் போன்ற தத்துவம் அஹிம்சை என்பது. அஹிம்சாபரமோ தர்ம: என்பதும் தயாமூல தர்மம் என்பதும் ஜைன சமயத்தின் முதன்மையான முக்கியமான தர்மம். அஹிம்சை என்னும் சொல் பல கருத்துக்களை உள்ளடக்கிய வார்த்தை. அதற்கு ஒரே வார்த்தையில் அர்த்தம் சொல்ல முடியாது. திருக்குறளில் கூறப்படுகிற இன்னா செய்யாமை, அருளுடைமை, கொல்லாமை, புலான் மறுத்தல் முதலிய அதிகாரக்கருத்துக்கள் சேர்ந்ததுதான் அஹிம்சை என்பதன் உண்மைப்பொருள். அஹிம்சை என்னும் கொல்லாமைக்கு அடுத்த படியாக இருக்கிற ஜைன தர்மம் பொய்யாமை என்பது. இதை,

''ஒன்றாக நல்லது கொல்லாமை மற்றதன்
பின்சாரப் பொய்யாமை நன்று.''

என்று திருக்குறள் கூறுகிறது கொல்லாமை, பொய்யாமை என்னும் இரண்டையும் இரண்டு கண்களாகக் கொண்டது ஜைன சமயம். ஆனால், கொலையைத் தடுக்கக் கூடுமானால், ஒரு உயிரைக் காப்பாற்றக் கூடுமானால், அப்போது பொய் சொல்லியாகிலும் கொலையைத் தடுத்து உயிரைக் காப்பாற்றலாம் என்பது ஜைன மதக் கருத்து இந்த ஜைன சமயக் கொள் கையைத் திருக்குறள் வற்புறுத்திக் கூறுகிறது.

''பொய்மையும் வாய்மை யிடத்த புரைதீர்ந்த
நன்மை பயக்கும் எனின்''

என்னும் திருக்குறளைக் காண்க. இதனால், திருக்குறள் ஜைன சமயத்தின் கொல்லா விரதமாகிய அஹிம்சையை மிகவும் வற்புறுத்திக் கூறுகிறதைக் காண்கிறோம்.

விதி, வினை, ஊழ் என்னும் நம்பிக்கை, மற்றச் சமயத்தாரைவிட ஜைன சமயத்தாருக்கு அதிகமாக உண்டு. ஊழ்வினையில் ஆழ்ந்த நம்பிக்கை உள்ளது ஜைன சமயம் அதுபோலவே, ஆள்வினையுடைமை என்னும் முயற்சியிலும் அதிக நம்பிக்கையுடையது அச்சமயம். யாருடைய ஊழையும் மாற்றி நன்மையையோ தீமையையோ கொடுக்க ஜைன மதக் கடவுளாலும் இயலாது. அவரவர் முயற்சியினாலே அவரவர்கள் நல்ல கதியையும் தீய கதியையும் அடையவேண்டும் என்பது சமணசமயத்தின் உறுதியான நம்பிக்கை. இதைத்தான் திருக்குறளும் ஊழ் என்னும் அதிகாரத்தினாலும், ஆள் வினையுடைமை என்னும் அதிகாரத்தினாலும் விளக்கிக் கூறுகிறது

''ஊழிற் பெருவலி யாவுள மற்றொன்று
சூழினும் தான் முந்துறும்''

என்று ஊழைப் பற்றிக் கூறிய திருக்குறள்,

''ஊழையும் உப்பக்கம் காண்பர் உலைவின்றித்
தாழா துஞற்று பவர்''

என்று ஆள்வினையுடைமையைப் பற்றிக் கூறுகிறது காண்க.

கடைசியாக இதைக் கூறுகிறேன் எல்லா மதத்தாரும் திருக்குறளைத் தத்தம் நூலென்று கூறுகிறார்கள்; போற்றுகிறார்கள் என்பது உண்மைதான். ஆனால், ஜைனர்களைத் தவிர மற்ற மதத்தினர் ஒருவரும் திருக்குறள் எங்கள்

வேதம் எங்கள் ஓத்து என்று கூறவில்லை. நீலகேசி என்னும் ஜைன சமய நூலிலே, மொக்கல வாதச் சருக்கத்திலே, 60-ஆம் செய்யுள் உரையிலே சமய திவாகரவாமன முனிவர் என்னும் ஜைனர்,

> "பொய்மையும் வாய்மை யிடத்த புரைதீர்ந்த
> நன்மை பயக்கும் எனின்"

என்பது எம் ஓத்து (எங்கள் வேதம்) என்று திருக்குறளைப்பற்றி எழுதுகிறார். இது போன்று, திருக்குறள் எங்கள் வேதம், எங்கள் ஓத்து என்று எழுதிய வேறு மதத்தினர் யாரேனும் உண்டா? சொல்லுங்கள்.

நல்லறம்

38. தேவாரத்தில் திருக்குறள்

"சமயக் கணக்கர் மதிவழி கூறாது உலகியல் கூறிப்பொருளிதுவென்ற வள்ளுவர்" அருளிச் செய்த "திருக்குறள்" தமிழருக்கு மட்டுமன்றி உலக மக்கள் அனைவருக்கும் ஒழுக்கத்தைப் போதிக்கும் ஒப்பற்ற உயர்ந்த நூலாகும். இலத்தீன், கிரீக்கு, இத்தாலி, ஜெர்மனி, பிரெஞ்சு, இங்கிலீஷ் முதலான மேல்நாட்டு மொழிகளிலும், மலையாளம், தெலுங்கு, ஹிந்தி, கன்னடம், சமஸ்கிருதம் முதலான இந்திய மொழிகளிலும் இதனை மொழி பெயர்த்திருப்பதிலிருந்தே திருக்குறளின் அருமை பெருமைகளை நன் குணரக்கூடும். திருக்குறளில் கூறப்படாத உயர்ந்த உண்மைகளும், கருத்துக்களும், நீதிகளும், ஒழுக்கங்களும் இல்லையென்றே நிச்சயமாகச் சொல்லலாம். திருக்குறள் செய்யுளையோ அன்றி அதன் கருத்தையோ அன்றி அதன் சொற்றொடரையோ தத்தம் நூல்களில் எடுத்தாளாத தமிழாசிரியர் இலர். இளங்கோவடிகள், சீத்தலைச் சாத்தனார், திருத்தக்கதேவர், கம்பர் முதலான கவியரசர்கள் திருக்குறள் பாக்களையும், சொற்றொடர்களையும், கருத்துக்களையும் எடுத்தாண்டிருப்பதை அவர்கள் இயற்றிய நூல்களில் காணலாம். சைவ சமய குரவர்களில் ஒருவராகிய சுந்தரமூர்த்தி சுவாமிகள் தாம் அருளிச்செய்த தேவாரத்தில் திருக்குறள் கருத்துக்களையும் சொற் றொடர்களையும் எடுத்தாண்டிருப்பதை இங்கு விளக்கிக் காட்டுவோம்.

> "கறிமாமிளகும் மிகுவன்மரமும்
> மிகவுந்திவருந் நிவவின்கரைமேல்

நெறிவார்குழலா ரவர்காணநடஞ்செய்
நெல்வாயிலரத் துறைநின்மலனே
வறிதேநிலையா தவிம்மண்ணுலகின்
னரனாகவகுத் தனைநானிலையேன்
பொறிவாயி லிவ்வைந்தினை யும்மவியப்
பொருதுன்னடி யேபுகுஞ் சூழல்சொல்லே."

இத்தேவாரத்தில்,

"பொறிவாயிலைந் தவித்தான் பொய்தீ ரொழுக்க
நெறிநின்றார் நீடுவாழ் வார்."

என்னும் திருக்குறளின் சொற்றொடரும் கருத்தும் அமைந்திருப்பது காண்க.

II

"புற்றாடரவம் மரையார்த்துகந்தாய்
புனிதாபொரு வெள்விடையூர் தியினாய்
எற்றேயொருகண் ணிலனின்னை யல்லா
னெல்வாயிலரத் துறைநின்மலனே
மற்றேலொருபற் றிலனெம்பெருமான்
வண்டார்குழலாண் மங்கைபங்கினனே
அற்றார்பிறவிக் கடனீந்தியேறி
யடியேனுய்யப்போ வதொர்சூழல்சொல்லே."

இத்தேவாரப் பதிகத்தில்,

"பிறவிப் பெருங்கடல் நீந்துவர் நீந்தார்
இறைவ னடிசேரா தார்"

என்னும் திருக்குறளின் கருத்தும் சொற்றொடருங் காணப்படுதல் அறிக.

III

"கோடுயர்கோங் கலர்வேங்கையலர்
மிகவுந்திவருந் நிவவின்கரைமேல்
நீடுயர்சோலை நெல்வாயிலரத்
துறைநின்மலனே! நினைவார்மனத்தாய்!
ஓடுபுனற்கரை யாமிளமை யுறங்
கிவிழித்தாலொக் குமிப்பிறவி

வாடியிருந்து வருந்தல்செய்யா
தடியேனுய்யப்போ வதொர்சூழல்செல்லே''

என்னும் இத்தேவாரத் திருப்பதிகத்தில்,

''உறங்குவது போலுஞ் சாக்காடு உறங்கி
விழிப்பது போலும் பிறப்பு''

என்னும் தமிழ் வேதத்தின் கருத்துஞ் சொற்றொடரும் விளங்குதல் காண்க.

''சிகரம்முகத்திற் றிரளாரகிலும்
மிகவுந்திவருந் நிவவின்கரைமேல்
நிகரின்மயிலா ரவர்தாம்பயிலுந்
நெல்வாயிலரத் துறைநின்மலனே
மகரக்குழையாய்! மணக்கோலமதே
பிணக்கோலமதாம் பிறவியிதுதான்
அகரம்முதலி னெழுத்தாகிநின்றா
யடியேனுயப்போ வதோர்சூழல்சொல்லே.''

இதில், ''அகர முதல வெழுத்தெல்லா மாதிபகவன் முதற்றே யுலகு'' என்னுற் திருக்குறள் காணக் கிடக்கிறது.

V

சுந்தரமூர்த்தி சுவாமிகளின் உற்ற நண்பராய் விளங்கிய சேரமான் பெருமாள் நாயனாரும், தாம் அருளிச் செய்த ஆதியுலா என்னும் கைலாய ஞான உலாவில், பேரிளம் பெண்ணைக் கூறுமிடத்து,

''பெண்ணரசாய்த் தோன்றிய பேரிளம் பெண்மையாள்
பண்ணமரு மின்சொற் பணிமொழியாள்-மண்ணின் மேற்
கண்டுகேட் டுண்டுயிர்த் துற்றறியு மைம்புலனும்
மொண்டொடி கண்ணே யுளவென்று-பண்டையோர்
கட்டுரையை மேம்படுத்தாள்...''

என்று அருளிச் செய்திருப்பதில் வள்ளுவர் திருக்குறள் நடுநாயகமாய் விளங்குவது காண்க.

செந்தமிழ்ச்செல்வி-சிலம்பு-13

***

மயிலை சீனி. வேங்கடசாமி

தமிழுக்கு வழங்கிய கொடை

1